# முகவுரை

இந்நூலாசிரியர் ஸ்டீபன் க்ரேன் 1871-ஆம் ஆண்டில், நியூ ஜெர்ஸி மாகாணத்தைச் சேர்ந்த, நேவார்க் என்னுமிடத்தில், ஒரு மெதாடிஸ்ட் கிறிஸ்தவ மத போதகரது குடும்பத்தில் பிறந்தார்; நியூ ஜெர்ஸி நகரில் வளர்ந்தார்; லாஃபயேட், ஸைரக்யூஸ் கல்லூரிகளில் இரண்டு வருடம் படித்தார்; பின்னர் எழுத்தாளராக விரும்பி நியூ யார்க்குக்கு வந்தார்; சில காலம் நிருபராகவும், அப்பால் பராரி எழுத்தாளராகவும் கஷ்ட தசையில் வாழ்ந்தார். அக்காலத்தில் அவரைக் கண்டவர்கள் 'ஒரு சிறிய, மெலிந்த, மென்மையான, குழந்தைகளிடமும், குதிரைகளிடமும், ஏழை எளியவர்களிடமும் தயை மிகுந்த நல்ல மனிதர்' என வர்ணிக்கின்றனர். அப்போது ஒரு ஏழையைக் காப்பாற்ற அந் நகரப் போலீசாரின் நிரந்தரமான பகைமையைப் பெற்றதாகக் கூறுவர்.

பௌவரிப் பெண்மணியான மாகி (Maggie) யைப் பற்றிய அவரது முதல் நூல் இருபதாவது வயதில் எழுதப்பட்டது. வாழ்க்கையை உள்ளது உள்ளவாறு எடுத்துக் காட்டியதால் அதைப் பிரசுரிக்க யாரும் முன்வரவில்லை; எனவே தன் சொந்தச் செலவில், மாறு பெயரில் அதை வெளியிட்டார் (1892). ஆனால் மூன்று வருஷங்களுக்கப்பால் 'தைரியத்தின் செஞ்சின்னம்' (The Red Badge of Courage) என்ற அவரது இரண்டாவது நாவல் பிரபலமடைந்தது. இங்கிலாந்திற்கூடப் பிரசுரிக்கப்பட்டு மிகமிகப் பாராட்டப் பெற்றது. அமெரிக்கர்களும் தங்களிடையே ஒரு மகாமேதை பிறந்திருப்பதை உணர்ந்தனர். எனினும், வெகு நாள் வரையிலும் இதை எழுதியவர் 'போர்க்களத்தையே கண்டறியாத ஒரு புது இளைஞர் என்பதை மக்கள் நம்பவில்லை.

இந்த மேதை எழுதியவை மேற்சொன்ன இரு நாவல்களும், 12 சிறு கதைகளுமே. அச்சிறு கதைகளில் மிகச் சிறந்தவையே இந்நூலில் வெளிவருபவை. இவரது எழுத்துக்கள் இன்றைய நோபல் பரிசு பெற்ற நாவலாசிரியர் ஹெமிங்வேக்கு வழிகாட்டியாக இருந்தது என்பர். இவரை ஹென்ரி ஜேம்ஸ், ஜோஸஃப் கொன்ராட், எச். ஜி. வெல்ஸ் முதலியோர் போற்றியுள்ளனர்.

இவரது பிற்காலம் பல அதிசயமான வீர நிகழ்ச்சிகளுடன் கூடியது. ஆனால், 1900-ஆம் ஆண்டு, தமது 28-வது வயதில், ஜெர்மனியில் காசநோய் வாய்ப்பட்டுத் திடீரென அகால மரணமுற்றார்.

இக் கதைகள் அற்புதமானவை; கற்பனையும் வாழ்வும் கலந்த கவினுடைய சித்திரங்கள். அனைவரும் படிக்கவேண்டிய நூல்.

—பதிப்பாசிரியர்

## அட்டவணை


| | | |
|---|---|---|
| முகவுரை | ... | 3 |
| மணமகள் வருகிறாள் | ... | 5 |
| திறந்த படகு ! | ... | 22 |
| நீல நிற ஹோட்டல் | ... | 55 |
| சிறிய படையணி | ... | 93 |
| அவமானம் | ... | 118 |
| பயங்கர மனிதன் | ... | 131 |
| சாம்பல் நிறக் கை | ... | 209 |
| போர் முனையும் குழந்தையும் | ... | 229 |
| தீரம் | ... | 260 |


# மணமகள் வருகிறாள்

நெடுந்தூரம் சுகமாகப் பிரயாணம் செய்வதற்கென்றே பிரத்தியேக வசதிகளுடன் கூடிய அந்த "கிரேட் புல்மன்" என்னும் ரெயில் வண்டி மிக்க பெருமிதத்தோடு வேகமாகச் சுழன்று ஓடிக் கொண்டிருந்தது. அந்த ரெயில் சென்ற கம்பீரமான தோற்றமும், வேகமும் தனியழகு பெற்று விளங்கின. ஜன்னல் வழியாகப் பார்க்கும்பொழுது இரு புறங்களிலுமிருந்த டெக்ஸாஸ் புல்வெளிகள் இடம் பெயர்ந்து கிழக்குப் பக்கமாகப் பாய்ந்தோடுவது போலத் தோற்றமளித்தன. பச்சைப் பசேலென விளங்கும் நீண்ட புல்வெளிகள் "மெஸ்குயிட்," சப்பாத்திக்கள்ளி முதலியவற்றால் ஆங்காங்கு நிரம்பி உயிரற்றுக் காணப்பட்டப் பரந்த சமவெளிகள், சிறுசிறு திட்டுகளாகக் காணப்பட்ட வீடுகள், இலேசானதும் மிருதுவானதுமான மரங்கள் நிறைந்த சின்னஞ்சிறு காடுகள் யாவும், கீழ்த்திசையில் செங்குத்தான மலையுச்சியிலிருந்து கீழே விழுவதுபோல் அடிவானத்தை நோக்கி வெகு வேகமாகச் சென்று கொண்டிருந்தன.

சான் அன்டோனியோ என்னுமிடத்தில் 'புது மணத் தம்பதிகள் இருவர் இந்த ரெயில் பெட்டி ஒன்றில் ஏறியிருந்தார்கள். பல நாட்களாகக் காற்றிலும், வெப்பத்திலும் அலைந்து திரிந்ததால் மாப்பிள்ளையின் முகம் சிவந்திருந்தது. கறுப்பு நிறமுள்ள புதிய உடைகளை அவன் அணிந்திருந்தான். அதனால், செங்கல் நிறமான அவன் கைகள் அவ்வாடையை நலுங்காமல் பார்த்துக்கொள்ளுவதிலேயே ஈடுபட்டிருந்தன. அவன் மனமும் அதிலேயே ஒன்றியிருந்தது. அடிக்கடி தன் உடையைப் பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போனான்.

க்ஷவரக் கடையில் காத்திருப்பவனைப்போல முட்டின் மேல் தன் இரு கைகளையும் வைத்தபடியேதான் அவன் உட்கார்ந்திருந்தான். மற்றப் பிரயாணிகளை நேராக உற்று நோக்கக் கூச்சப்பட்டவனாக அவர்களை ஓரக்கண்ணாலேயே நாணத்துடன் கவனித்தான்.

பக்கத்திலமர்ந்திருந்த மணப்பெண்ணை அழகி என்று சொல்ல முடியாது. இளமையும் அவளிடம் அதிகமாகக் கொழிக்கவில்லை. இங்குமங்கும் வெல்வெட் தைத்த காஷ்மீர் நாட்டுக் கம்பளத் துணியாலான நீல நிற உடையணிந்திருந்தாள் அவள். அதில் எஃகுப் பித்தான்கள் அளவுக்கு அதிகமாக இருந்தன. நீளமாகவும், தடிப்பாகவும், விறைப்பாகவும் இருந்த உடையின் உப்பிய கைப்பகுதிகளைப் பார்ப்பதற்காக அவள் அடிக்கடித் தன் தலையைத் திருப்பிக்கொண்டிருந்தாள். "பஃப்" வைத்துத் தைக்கப் பட்டிருந்த அந்தக் கைகள் அவளுக்கு வேதனையூட்டின.

அவள் கிராமாந்தரப் பகுதியைச் சேர்ந்தவள். குடும்பப் பொறுப்பை ஏற்கக்கூடியவள்தான். சந்தேகமில்லை. அவளைப் பார்த்தால் அவள் சமையல் செய்து பழக்கப்பட்டிருந்தவள் என்பதும், இனிமேலும் தன் கடமைப்படிச் சமையல் செய்வாள் என்பதும் வெளிப்படையாகத் தெரிந்தன. அவள் அந்த வண்டியில் ஏறியபொழுது சில பிரயாணிகள் அவளை அலட்சியமாகப் பார்த்த பார்வையால் உணர்ச்சியற்ற, அமைதியான அவளுடைய முகத்தில் தோன்றிய நாணம் பார்க்க விநோதமாயிருந்தது.

அவர்கள் மகிழ்ச்சியுடன் இருந்தனர் என்பது நன்றாகத் தெரிந்தது. அவன் உற்சாக மிகுதியால் புன்முறுவலுடன் "இதற்கு முன் இத்தகைய வண்டியில் பிரயாணம் செய்திருக்கிறாயா?" எஃறு அவளைக் கேட்டான்.

"இல்லை, இதற்கு முன் பிரயாணம் செய்ததில்லை, இது மிகவும் நன்றாகவே இருக்கிறது. இல்லையா?" என்றாள் அவள்.

"ஆமாம், மிகவும் நன்றாகயிருக்கிறது. கொஞ்ச நேரம் கழித்து நாம் சாப்பிடச் செல்வோம். அங்கே எப்படிப்பட்ட ஆடம்பரமான சாப்பாடு வகைகளைத் தருவிக்கிறேன் பார்! நாம் உண்ணப் போகும் உணவு உலகத்திலேயே மிகச் சிறந்தது என்பது நினைவில் இக்கட்டும். 'ஒரு டாலர்' அதற்காக வசூலித்து விடுவார்கள்," என்று மிகப் பெருமையாகச் சொன்னான்.

"அடேயப்பா! ஒரு டாலரா வாங்குகிறார்கள்?" ஏன், அது .........நம்மைப் பொறுத்தவரையில்.........சற்று அதிகமில்லையா, ஜாக்?" என்று அவள் தன் கணவனைக் கேட்டாள்.

"இந்தப் பிரயாணத்தில் மட்டும் அவ்வாறு கணக்குப் பார்க்க முடியாது. ஆகையால் நாம் ஆடம்பரமான உணவே உண்ணப் போகிறோம்," என்று அவன் டம்பமாகவே பதிலளித்தான்.

பிறகு அவன் ரெயிலைப்பற்றிய விவரங்களை அவளுக்கு எடுத்துக் கூறினான். "டெக்ஸாஸின் ஒரு கோடியிலிருந்து மறுகோடி ஆயிரம் மைல்களுக்கப்பாலிருக்கிறது. இந்த ரெயில் வண்டி இப் பிரதேசத்தின் நேர் குறுக்காகச் செல்லுகிறது. நான்கு இடங்களில் மட்டுந்தான் நிற்கும்" என்றும் கூறினான். அவன் இதைக் கூறிய போது அந்த ரெயிலுக்கே தான்தான் சொந்தக்காரன் என்பது போல பெருமிதத்தோடு இருந்தான். அவன் அவ்வண்டியில் கண்ணைக் கூசவைக்கும் பளப்பளப்பான பொருள்களனைத்தையும் அவளுக்குக் காட்டினான். கடற் பச்சை நிறத்திலுள்ள வெல்வெட்டும், ஒளிமிக்க பித்தளை, வெள்ளி, மற்றும் கண்ணாடிப் பொருள்களும், எஸ்ணெய்க் கிடங்கின் அடித்தளம் போன்ற கருமையுடன் பிரகாசிக்கும் மரப்பொருட்களையெல்லாம் கண்ட அவளது கண்கள் உண்மையாகவே ஆச்சரியத்தினால் விரிந்தன. ஒரு பக்கம் ஒரு வெண்கலச் சிலை அடுத்த அறையின் வாயில் படி போன்று நின்றுகொண்டிருந்தது. வசதியான இடங்களில் ஆலிவ் வெள்ளி முதலிய வண்ணங்களில் ஓவியங்கள் வரைந்திருந்தன.



அந்த ஜோடிக்கு அந்தச் சூழ்நிலை அன்று காலை சான் அன்டோனியாவில் நிகழ்ந்த அவர்கள் திருமணத்தின் பெருமையையே பிரதிபலிப்பது போலவே தோன்றியது. இதுவே அவர்களது மணமான புதிய நிலையின் சூழ்நிலை.' மாப்பிள்ளையினுடைய முகம் உவகையினால் மலர்ந்து விளங்கியது. ஆனால் அவனுடைய தோற்றம் அங்கிருந்த நீக்ரோ போர்ட்டருக்குச் சற்று வேடிக்கையாகவே காணப்பட்டது போலும். ஏனெனில் அவன் மரியாதையாக அவர்களை விட்டுச் சற்று விலகி தூரத்தில் நின்றுகொண்டே அவர்களை மேலும் கீழுமாக அடிக்கடி பார்த்துக்கொண்டிருந்தான். தான் அவர்களைவிட உயர்ந்தவன் என்று கூட அவன் நினைத்திருந்தான். அவர்களைப் பார்த்து அவன் தனக்குள் சிரித்துக் கொண்டது அப்படித்தானிருந்தது., சில சமயங்களில் அவர்களறியாதபடியே அவர்களை பயமுறுத்திக்கொண்டிருந்தான். ஹோட்டல் வேலைக்காரர்கள் நாகரிகப் பண்பு குறைந்த கிராமாந்தர மக்களைக் கண்டுவிட்டால் அவர்களை அலட்சிய பாவத்துடன் நடத்துவதில் மிகச் சமர்த்தர்கள். இந்த நீக்ரோ போர்ட்டரும் அப்படித்தான் செய்தான். பலவகையில் அவர்களைக் கேலி செய்து சந்தோஷப்பட்டான். அவர்களுக்குத் தெரியாத சாப்பாட்டுச் சம்பிரதாயங்களைக் கடைப்பிடித்து அவர்களுக்குக் கலவரம் உண்டாகும்படி நடந்துகொண்டான். ஆனால் அவர்களோ, தங்களைச் சில சகபிரயாணிகள்கூட ஒரு கேலிப் பொருளாகக் கருதி முறைத்ததை ஒரு இழிவாகவோ, குறைபாடாகவோ எண்ணவேயில்லை. அதையெல்லாம் விரைவில் மறந்துவிட்டார்கள். உண்மையிலேயே அவர்களுடைய கிராமாந்தர மக்களுக்குரிய பண்புக்கும், நாகரிகம் மிகுந்த அந்த ரெயில் வண்டியின் சூழ்நிலைக்குமுள்ள தாரதம்மியம் பார்ப்பவர் மனத்தில் எல்லையற்ற ஒருவித ஹாஸ்ய உணர்ச்சியைத்தான் அளித்தது.

அவன் அவளுடைய கண்களைக் கனிவோடு நோக்கி, "நாம் 'எல்லோ ஸ்கை' ஸ்டேஷனை 3-42-க்கு அடையவேண்டும்" என்று கூறினான்.

"அப்படியா!" என்று அதைப்பற்றி இதுவரையில் தெரிந்துகொள்ளாதவள் போல் சொன்னாள். தன் கணவனுடைய பேச்சில் தனக்குள்ள வியப்பைக் காண்பித்துக்கொள்ளுதல் ஒரு மனைவிக்குரிய லட்சணங்களில் ஒன்றல்லவா? ஒரு பையிலிருந்து ஒரு சிறிய வெள்ளிக் கடிகாரத்தை எடுத்தாள். மணி பார்ப்பது போல கடிகாரத்தைத் தனக்கு முன்பாக உயர்த்திப் பிடித்துக் கொண்டு, மற்றவர்களும் கவனிக்கும்படி அதை உற்றுப் பார்த்தாள். அதைக்கண்ட கணவனின் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது.

"சான் அன்டோனியாவிலுள்ள ஒரு நண்பனிடமிருந்து இதை வாங்கினேன்," என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினான்.

"இப்பொழுது மணி 12 அடித்து ஏழு நிமிஷம்" என்று ஒரு

அருகில் அவனுடைய சிறந்த நண்பனின் வீட்டு ஜன்னல் அவன் கண்களில் பட்டது. அதைப் பார்த்து ரவைமாறி பொழிந்தான். இவ்வாறு அவன் அந்த நகரத்தையே ஒரு விளையாட்டுப் பொருளாக மதித்து எவ்விதத் தடங்கலுமின்றி வளைய வந்தான்.

இவ்வளவுக்கும் அவன் சவாலை ஏற்று அவனுடன் சண்டையிட யாரும் முன்வரவில்லை. அப்போதுதான் அவனுடைய பழைய விரோதியான ஜாக் பாட்டருடைய நினைவு வந்தது. அங்கு சென்று அவன் வீட்டை நோக்கிச் சுட்டால் அவனை வெளியே கிளப்பி தன்னுடன் சண்டைக்கு இழுத்தாலென்ன என்ற எண்ணம் எழுந்தது. அந்த எண்ணமே அவனுக்கு மகிழ்ச்சி தந்தது. உடனே பாட்டரின் வீட்டை நோக்கி அந்தப் பிராந்திய நாடோடிப் பாட்டு ஒன்றைப் பாடிக்கொண்டே சென்றான்

மற்றவர்களுடைய வீட்டைப் போலவே பாட்டருடைய வீடும் அமைதியாயிருந்ததைக் கண்டான். அமைதியைக் கலைத்துப் பக்கத்தில் பாதுகாப்பான இடத்தில் நின்று கொண்டு உரத்துச் சவால் விட்டான். பலனில்லை. ஒரு கற்சிலையிடம் கத்தினால் என்ன பயன் ஏற்படுமோ அந்தப் பயன்தான் ஏற்பட்டது. அசைந்து கொடுக்கவேயில்லை. கொஞ்ச நேரம் காத்திருந்தபின் அவன் மறுபடியும் பல சவால்கள் விட்டான். அவற்றுடன் ஆத்திரமூட்டும் வசைமொழிகளையும், சேர்த்துச் சேர்த்துப் பொழிந்தான்.

இப்போதும் பலனில்லை. வீட்டின் அமைதியைக் கண்டு இவனுக்கு மேன்மேலும் கோபம்தான் வந்தது. தன்னைத்தானே வெறுத்துக்கொண்டு சற்று நேரம் நின்றான். வடக்குப் பிராந்தியங்களில் மாரிக்காலக் கடுங்காற்று குடிசைகள் மேல் மோதுவது போல் அவனும் தனது கோபக் கனலை அவ்வீட்டின் மீது வீசினான். தூரத்திலிருந்து இவன் எழுப்பிய கூக்குரலையும், எக்காளத்தையும் யாராவது கேட்டால், இங்கே குறைந்தது இருநூறு மெக்ஸிகோ வாசிகளாவது சண்டை செய்கிறார்கள் என்றே எண்ணியிருப்பர். அவ்வப்போது மூச்சு விடுவதற்கோ, அன்றி ரிவால்வரில் தோட்டாக்களை நிரப்புவதற்கோ மட்டும் அவகாசம் எடுத்துக் கொண்டான்.

## IV

பாட்டரும், அவன் மனைவியும் ஸ்டேஷனிலிருந்து விரைந்து வந்துகொண்டிருந்தனர். பயந்தாங்கொள்ளிகளைப் போலத் தலை குனிந்த வண்ணந்தான் அவர்கள் சென்றுகொண்டிருந்தனர். தன் மனைவிக்கு உற்சாகமூட்டும் வண்ணம், "அன்பே, வீட்டையடைந்து விட்டோம். அடுத்த திருப்பம்தான்," என்று சொல்லிக்கொண்டே வந்தான்.

பலமாக வீசிய எதிர் காற்றைச் சமாளிக்கக் குனிந்த வண்ணம் நடந்தனர். அடுத்த சந்தில் திரும்பியதும், மணமகள் புக வேண்டிய புது வீட்டின் முதல் தோற்றத்தைத் தூரத்திலிருந்தே சுட்டிக் காண்பிப்பதற்காகப் பாட்டர் தன் ஒரு விரலை உயர்த்தினான். ஆனால், தெருவின் முதல் திருப்பத்திலேயே பெரிய ரிவால்வருக்குள் அவசர அவசரமாகத் தோட்டாக்களைச் செலுத்திக்கொண்டிருந்த சிவப்பு நிறச் சட்டையணிந்த ஒரு மனிதனை நேருக்கு நேர் சந்தித்தனர். இவர்களைக் கண்ட அந்தக் கணத்தில் அவன் தோட்டாக்களை நிரப்பிக் கொண்டிருந்த ரிவால்வரை அப்படியே தரையில் போட்டுவிட்டு, மின்னல் வேகத்தில் உறையிலிருந்த மற்றொன்றை உருவிக்கொண்டான். துப்பாக்கியால் மணமகனின் மார்புக்கு நேராகக் குறி பார்த்தான்.



அங்கு ஒரு அமைதி; மயான அமைதி. பாட்டருடைய வாயிலிருந்து வார்த்தையே கிளம்பவில்லை, அவன் நாக்கு செயலிழந்து வாயினுள் சமாதியடைந்து விட்டதுபோல் தோன்றியது. அவனையுமறியாமல் தன் மனைவியின் அணைப்பிலிருந்து தன் கையை மட்டும் சட்டென்று விடுவித்துக்கொண்டான். அவன் கையிலிருந்த சிறு பெட்டி தரையில் விழுந்தது. ஒரு பழந்துணி போன்று மணமகளின் முகம் வெளிறியது. அந்தக் கொலை பாதகனின் முன்னிலையிலேயே தனக்கு ஈமச்சடங்குகள் நடப்பது போன்றே அவள் எண்ணினாள்.

அவ்விருவருக்கிடையில் மூன்று அடிதூரம் தானிருந்தது. ரிவால்வர் வைத்திருந்தவன் ஒரு பயங்கரச் சிரிப்பு சிரித்தான். அமைதியான புன்முறுவல் போலிருந்தாலும், கடுமையும், குரோதமும் நிறைந்த ஒரு குரூரமான புன்முறுவல் பூத்தான்.

"நான் அஜாக்கிரதையாக இருந்தபோது என்னை ஏமாற்றி அடித்தாய் அல்லவா? என்னை ஒரு அற்பனாகத்தானே கருதினாய்?" என்று அவன் ஆரம்பித்தான். அவன் கண்கள் இரத்தம் கக்கின. பாட்டர் சிறிதே நகர முயற்சித்தான். அதே நொடியில் தூக்கிப் பிடித்த ரிவால்வர் மேலும் முன்னுக்கு நீட்டப்பட்டது. "வேண்டாம், அசையாதே. ஜாக் பாட்டர்; உன் துப்பாக்கியை எடுக்க ஒரு விரல் கூட அசைக்காதே. ஒரு இமையளவும் முன்னால் நகராதே. உன் மீது எனக்குள்ள வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ளும் காலம் வந்துவிட்டது. என் பழியை, என்னிஷ்டப்படியே, என் முறைப்படித் தீர்த்துக்கொள்ளப்போகிறேன். அதில் எவ்விதக் குறுக்கீட்டையும் சகிக்க மாட்டேன். என் துப்பாக்கி ரவைகள் உன்னைத் துளைப்பதை நீ விரும்பவில்லையானால் நான் கூறுவதைச் சற்றுக் கேள்," என்று அவன் ஆத்திரமும் குரோதமும் பொங்கக் கூறினான்.

பாட்டர் தன் முன் நின்ற பகைவனை உற்று நோக்கினான். "ஸ்க்ராட்சி, என்னிடம் துப்பாக்கி ஒன்றுமில்லை; இல்லவே இல்லை; இது முற்றிலும் உண்மை" என்று அமைதியாகவே கூறினான். தன்னைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சமாளித்துக் கொண்டான். மனத்தையும் உறுதிப்படுத்திக் கொண்டிருந்தான்

## II

'தென் பகுதி ரெயில்வேயைச் சேர்ந்த கலிபோர்னியா எக்ஸ்பிரஸ் இன்னும் இருபத்தோரு நிமிடங்களில் '' எல்லோ ஸ்கை'' ஸ்டேஷனை அடையும். '' வேரி ஜெண்டில்மன் சலூன் '' என்று மதுபானம் வழங்கும் அந்த இடத்தில் அறுவர் இருந்தனர். அதில் ஒருவன் பாண்டு கோஷ்டியைச் சேர்ந்தவன். டமாரம் வாசிப்பவன் வளவளவென்று பேசினுன், வேகமாகப் பேசினுன். பேச விரும்பாத டெக்ஸாஸ் பிரதேச வாசிகள் மூவர். மற்ற இருவரும் மெக்ஸிகோவைச் சேர்ந்த ஆட்டுப்பண்ணைக்காரர்கள்.

இவர்கள் 'வேரி ஜெண்டில்மன் சலூ'னில் பொதுவாகவே அதிகமாய்ப் பேசுவதில்லை.

விடுதிக்காரனுடைய நாய் கதவின் முன்பக்கத்தில் படுத்திருந்தது. அதன் தலை முன்னங்கால்கள் மீது பதிந்திருந்தது. தூங்கி வழிந்தாலும் திடீரென்று உதை கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது போல் ஜாக்கிரதையோடு இருந்தது அது. மணல் நிறைந்த தெருவுக்கப்பால் பசேலெனும் புல்வெளித்திட்டுக்கள் இருந்தன. அவை மிகக் கவர்ச்சிகரமாகக் காட்சியளித்தன. சூரிய வெப்பத்தால் சூடேறிய மணல்வெளிக்கு மிக அருகில் இருந்ததால் அவை உண்மையானவைகள்தானு என்ற ஒருவித ஐயத்தைக்கூடத் தோற்றுவித்தன. நாடகமேடைகளில் புல்வெளிபோல் தோன்றுவதற்குப் பயன்படுத்தும் புற்பாய்களைப்போலவே இருந்தன அவை. ரெயில்வே ஸ்டேஷனில் குளிர்ச்சியாக இருந்த ஒருபுறத்தில் கோட் இல்லாத ஒருவன் சாய்வு நாற்காலியில் அமர்ந்த வண்ணம் புகை பிடித்துக்கொண்டிருந்தான். ரியோ கிராண்டின் பிரதேசத்தின் எல்லைகள் நகரைச் சுற்றி ஓடியது. அதற்குப் பக்கத்தில் '' மெஸ்குயிட் '' மரங்கள் நிறைந்த ஒரு சமவெளி!

அந்த மதுபானக் கடையிலிருந்த வாயாடி டமாரக்காரனையும், அவனுடைய தோழர்களையும் தவிர, அந்தச் சமயம் 'எல்லோ ஸ்கை' ஊரே தூங்கி வழிந்தது. அவ்வளவு நிசப்தம் குடிகொண்டிருந்தது. டமாரக்காரன் ஊருக்குப் புதியவன். மது வழங்கும் பலகையில் சாய்ந்துகொண்டு ஒரு நாடோடிப் பாடகனைப்போல் உற்சாகத்துடன் கதை சொல்லிக்கொண்டிருந்தான்.

'' பிறகு பீரோவைப் பற்றிக்கொண்டிருந்த அந்தக் கிழவன் கீழே விழுந்த அதே சமயம், கிழவி இரண்டு நிலக்கரிக் குழாய்களுடன் மேலே வந்து கொண்டிருந்தாள். வந்து உண்மையில்—'' என்று அவன் கதை சொல்லிக்கொண்டிருந்தான்.

திறந்த கதவின் வழியாகத் திடீரென ஒரு இளைஞன் உள்வரவே அவனுடைய கதை தடைப்பட்டது. '' ஸ்க்ராட்சி வில்ஸன் குடித்துவிட்டு இரண்டு கைகளையும் ஆட்டிக்கொண்டு வந்து கொண்டிருக்கிருன் '' என்று அந்த இளைஞன் கத்தினுன். இரண்டு மெக்ஸிகோக்காரர்களும் தங்கள் கையிலிருந்த கண்ணுடி



டம்ளரை பரபரப்புடன் கீழே வைத்துவிட்டு பின்வாசல் வழியே மறைந்தார்கள்.

டமாரக்காரன் ஒரு அப்பாவி மனிதன். ஹாஸ்யப் பேர்வழி. '' இருக்கட்டும் வந்தால் வரட்டுமே. குடித்திருந்தால் என்ன? உள்ளேவந்து நீயும் கொஞ்சம் குடி'' என்று வந்தவனை அழைத்தான்.

ஆனுல் இளைஞன் விடுத்த அந்த அறிவிப்பு அந்த அறையிலுள்ள ஒவ்வொருவரிடையேயும், ஒரு அதிர்ச்சியை உண்டுபண்ணியிருந்தது. இதை டமாரக்காரன் சீக்கிரமே எல்லாவற்றிற்கும் மேலாக உணர்ந்தான். எல்லோரும் உடனே அமைதியாயினர் ஒன்றும் புரியாமல். '' ஏன் இந்த மௌனம்? இதெல்லாம் என்ன?'' என்று டமாரக்காரன் கேட்டான். அவனுடைய மூன்று தோழர்களும் ஒரு சிறந்த சொற்பொழிவுக்கு தங்களைத் தயார் செய்துகொள்வதுபோல் ஏதோ பேச வாயெடுத்தனர். ஆனுல் கதவருகிலிருந்த அந்த இளைஞன் அவர்களை முந்திக்கொண்டான்.

'' என்னவா? அதாவது, நண்பனே—அடுத்த இரண்டு மணி நேரத்திற்கு இந்த நகரத்தில் ஒருவரும் தலைகாட்டமுடியாது. உல்லாசமாக இப்போது இருப்பதுபோல இருக்குமென்று எண்ண வேண்டாம்'' என்று மதுபானக் கடைக்குள்ளே வந்து கொண்டே அந்த இளைஞன் சொன்னுன். கடைக்காரன், கதவை இழுத்துக் குறுக்குக் கட்டைகளையும் உடனே போட்டான். ஜன்னல்களின் பலமான மரக்கதவுகளையும் கீழே இருந்து மூடினுன். அந்த இடத்தில் ஒரு வியக்கத்தக்க அமைதி—மாதா கோவிலமைதி நிலவியது. டமாரக்காரனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒவ்வொருவரையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்தான்.

'' சரி, இதெல்லாம் என்ன?'' '' ஒரு துப்பாக்கிச் சண்டை நடக்கப்போகிறதா?'' '' இல்லையே!'' என்று அவன் கத்தினுன்.

'' சண்டையிருக்குமோ, இருக்காதோ—தெரியாது. ஆனுல் எப்படியும் துப்பாக்கி வேட்டு நிச்சயம் நடக்கும். ஆமாம், துப்பாக்கி வேட்டு'' என்று அவர்களில் ஒருவன் அழுத்தத்துடன் பதிலளித்தான். அவர்களை எச்சரித்த இளைஞன் கையை அசைத்தவாறே '' சண்டை செய்ய யாருக்காவது இச்சையிருந்தால் குரூரமான சண்டை காத்திருக்கிறது. யார் வேண்டுமானுலும் வீதிக்குச் சென்று அவனுடன் சண்டையிடலாம். ஏன், இந்த நிமிஷத்தில் ஒரு சண்டை நிகழத்தான் போகிறது'' என்ருன்.

டமாரக்காரனுக்கு விஷயத்தைத் தெரிந்து கொள்ளவும் ஆவல். ஆபத்தில் அகப்பட்டுக்கொண்டு விடக்கூடாதே என்றும் பயம். என்ன செய்வது என்றறியாது தத்தளித்தான்.

'' அவன் பேரென்னவென்று சொன்னுய்?''—அவன் கேட்டான்.

'' ஸ்க்ராட்சி வில்ஸன் '' என்று அவர்கள் ஒரே குரலில் பதிலளித்தனர்.

லாமா என்று அடிக்கடி எண்ணினான். ஆனால் ஒருவித கோழைத்தனம் அவனைச் சூழ்ந்து கொண்டது. அவன் அவ்வாறு செய்யப் பட்டான். ஆனால் இப்போதோவெனில் அந்த ரெயில் வண்டி அவன் ஊருக்கு அழைத்துச் சென்றது. ஊரை அடைந்ததும் தன்னை ஆச்சரியத்தோடும், ஆனந்தத்தோடும், மனத்தாங்கலுடனும் நோக்கும் சமூகத்தை அல்லவா அவன் எதிர்நோக்கவேண்டும். தன்னை நோக்கி ஓடிவரும் இடங்களை ஜன்னல் வழியாகக் கவனித்தான், அவை மங்கலாகத் தெரிந்தன.

“எல்லோ ஸ்கை”யில் ஒருவித பாண்டு கோஷ்டி இருந்தது. அவர்கள் அதைக் கர்ணகடூரமாக வாசிக்குந்தோறும் அங்குள்ள மக்கள் ஆனந்தத்தில் மூழ்குவர். அதை நினைத்து அவன் ஒரு வறட்டுச் சிரிப்பு சிரித்தான். அந்த ஊர் மக்கள் இவன் தன் மனைவியுடன் வருவதை முன்னாடியே அறிந்திருந்தால் ரெயில் நிலையத்துக்கு வந்து, வாத்தியங்கள் முழங்க மகிழ்ச்சியுடன் வாழ்த்துக்கூறி அவனுடைய செங்கல் வீட்டிற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்வார்களே! ஆனால் இப்போது!

ரெயில் நிலையத்திலிருந்து வீடுவரையுள்ள பிரயாணத்தை எப்படியாவது மிகத்துரிதமாக ஒரு சாதாரண மனிதன் போல் ஒருவர் கண்ணிலும் படாமல் முடித்துவிட வேண்டும் எனத் தீர்மானித்துக் கொண்டான். அவனது வீட்டை எப்படியாவது அடைந்துவிட்டால் கோட்டையின் பாதுகாப்பிற்குள் வந்துவிட்டது போன்று அவன் நிம்மதியடைவான். அங்கிருந்து கொண்டு ஊரில் எந்தவிதமாகவாவது விஷயத்தைத் தெரியப்படுத்திக் கொள்ளலாம்! அவசியமானால் மக்களது பரபரப்பு சற்றுக் குறையும்வரை அவர்களிடமிருந்து சற்று விலகிக்கூட இருக்கலாம்!

அவன் மனத்தில் உள்ள சிந்தனைகளை அவள் எப்படி அறிவாள்! அவனை ஆவலுடன் உற்று நோக்கி, “எதை நினைத்துக் கவலைப்படுகிறாய் ஜாக்?” என்று அவள் கேட்டாள். அவன் மறுபடியும் சிரித்தான். “நான் எதை நினைத்தும் மனத்தை அலட்டிக் கொள்ளவில்லை பெண்ணே. நான், என் ஊர் “எல்லோ ஸ்கை”யை நினைத்துக்கொண்டேன். வேறொன்றுமில்லை,” என்று மழுப்பினான். அவள் அதைப் புரிந்துகொண்டு நாணங்கொண்டாள்.

ஏதோ தவறு செய்துவிட்ட உணர்வு இருவர் மனத்திலும் பரவி இனிய மென்மையுணர்வை வளர்த்தது. ஒருவரையொருவர் கனிவுடன் பார்த்துக்கொண்டனர். ஆனால் பாட்டர் மட்டும் அந்த வறட்டுச் சிரிப்பைச் சிரித்தான். பெண்ணின் முகத்தில் நாணம் நிரந்தரமாகக் குடிகொண்டது.

“எல்லோ ஸ்கை”யின் உணர்ச்சிகளை புறக்கணித்தவன் ரெயில் வேகமாகச் செல்லும் நிலத்தோற்றத்தைக் கவனித்தான். “நமது ஊருக்குப் பக்கமாக வந்துவிட்டோம்” என்று அவன் கூறினான்.

அதே சமயம் அந்த நீக்ரோ பணியாள் பாட்டரின் ஊர் நெருங்கிவிட்டது என அறிவித்தான். அப்போது மட்டும் என்னவோ தான் உயர்ந்தவன் என்ற நினைப்பு ஒழிந்துபோய் கையில் பிரஷ் ஒன்றை வைத்துக்கொண்டு அவன் ஜாக் பாட்டர் முன் நின்றான். பாட்டர் அப்படியும், இப்படியுமாகச் சற்றுத் திரும்ப அவன் அப்பிரஷ்ஷினால் பாட்டரின் புது உடையைத் துடைத்துவிட்டான். மற்றவர்கள் செய்வதைப் பார்த்துப் பாட்டரும் ஒரு நாணயத்தை எடுத்து அவனுக்கு இனாம் வழங்கினான். குதிரைக்கு முதன் முதலாக லாடம் அடிப்பதைப்போல் பாட்டரின் சட்டையை ‘பிரஷ்’ஷால் துடைப்பது அவ்வளவு வேலை வாங்கிற்று.

ரெயில் வேகம் குறையத் தலைப்பட்டு பிளாட்பாரத்துக்குச் செல்லுகையில் அவர்களுடைய பையை போர்ட்டர் எடுத்துக் கொண்டான். அப்பொழுது அந்த இரண்டு ‘என்ஜின்களும், அதைத் தொடர்ந்து ரெயில் பெட்டிகளும் “எல்லோ ஸ்கை”யின் ரெயில் நிலையத்துக்குள் நுழைந்தன.

“ரெயில் என்ஜின்கள் இங்கு தண்ணீர் பிடித்துக் கொள்ள வேண்டும்” என, மரணச் செய்தியை அறிவிப்பவன்போல் தொண்டை அடைக்க, துக்கம் கலந்த குரலில் பாட்டர் சொன்னான். ரெயில் நிற்குமுன்பே, அவனது கண்கள் பிளாட்பாரம் முழுவதும் தன் பார்வையைச் செலுத்தின. சற்று ஆத்திரத்தோடும், ஆவலோடும் தண்ணீர்த் தாங்கியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த “ஸ்டேஷன் ஏஜெண்டைத்”த் தவிர வேறு ஒருவரும் இல்லாததைக் கண்டு ஆச்சரியப்பட்டாலும் அதிகமாக மனமகிழ்ந்தான். ரெயில் நின்றவுடன் போர்ட்டர் முதலில் இறங்கி நடக்க ஆரம்பித்தான். பிறகு மணமகனும், மணப்பெண்ணும் இறங்குவதற்கு வசதியாக ஒரு மரப்பலகையை கதவுக்கு நேராக நகர்த்திவைத்தான்.

“இறங்கி வா, பெண்ணே” என்று பாட்டர் சிறிது கம்மிய குரலில் அழைத்தான். அவள் இறங்குவதற்கு அவன் உதவி செய்தபொழுது இருவரும் அர்த்தமில்லாமல் சிரித்துக்கொண்டனர். அவன் நீக்ரோவிடமிருந்து பையைப் பெற்றுக்கொண்டு அவளைத் தன் கையைப் பிடித்துக் கொண்டு தன்னையொட்டியே வருமாறு அழைத்தான். திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு அவர்கள் வேகமாகப் போகும்போது, “ஸ்டேஷன் ஏஜெண்ட்” தூரத்திலுள்ள சாமான்கள் வண்டியிலிருந்து இரண்டு டிரங்குப் பெட்டிகளை இறக்கிவிட்டு, ஏதோ சைகை செய்து கொண்டே தன்னை நோக்கி வருவதைப் பாட்டர் உணர்ந்தான். அவன் சிரித்தான். அவனது மகிழ்ச்சிக்குரிய திருமணம் “எல்லோ ஸ்கை”யில் உண்டாக்கிய முதல் விளைவைப் பார்த்து ஒரு வறட்டுச் சிரிப்பு மட்டும் சிரித்தான். ஒன்றும் பேசவில்லை. தனது மனைவியின் கையை இறுக்கித் தன்னுடன் சேர்த்துக்கொண்டு மேலே நடந்தான். அவர்கள் நடையில் ஒரு வேகம். அவர்களுக்குப் பின்புறம் போர்ட்டர் சும்மா சூள்கொட்டிக்கொண்டு நின்றான்.

னேயே இருந்த அவர்கள் மீது கடற் காற்று வீசிப் பரட்டைத்தலையாகவே அடித்து விட்டது. காற்றின் கொடுமை போதாதென்று, படகு சென்ற வேகத்தில் கடல் நுரைகள் சிதறிக் காற்றுடன் கலந்து அடித்தன. ஒவ்வொரு அலையின் உச்சியும் ஒரு மலையின் சிகரம் போலிருந்தது. அதன் மேல் படகு எழும்பி நின்றபோது ஒருகணம் கொந்தளிக்கும் கடல் பரப்பையும், காற்றடித்து அந்நீர் நிலையை அலைக்கழிக்கும் காட்சியையும் அவர்களால் காணமுடிந்தது. அக்காட்சி மிக மனோகரமான காட்சிதான்! உன்னதமான காட்சிதான்! கட்டுக்கடங்காத கடலும், அதன் ஆவேச விளையாட்டும் மரகதத்தை நிகர்த்த பச்சை நிறமும், வெண்மையும் மஞ்சளும் கலந்த ஒளிக்கதிர்களும், மனத்தைக்கவரும் காட்சிதான்!

"பில்லி, நல்லவேளையாக இக்கடுங்காற்று கரை நோக்கி வீசிக்கொண்டிருக்கிறதோ, நாம் பிழைத்தோம். எதிர்ப்புறமாக வீசினால் நம்முடைய கதி என்ன? நமக்கு எந்தவிதமான காட்சி காத்திருக்கும்?" என்று சமையற்காரன் சொன்னான்.

"நீ சொல்லுவது உண்மைதான்," என்று நிருபர் அவன் சொன்னதை ஆமோதித்தார்.

துடுப்புப் போடுவதிலேயே முனைந்திருந்த வேலைக்காரன் தன் தலையை அசைத்துத் தன் ஆமோதிப்பைத் தெரிவித்தான்.

சாய்ந்தவண்ணமிருந்த காப்டன் ஒரு வறட்டுச் சிரிப்புச் சிரித்தான். அதில் வெறுப்பு, அலட்சியம், சோகம், ஹாஸ்யம் எல்லாம் கலந்திருந்தன. "ஏன், இப்போது நாம் கண்டு களித்துக்கொண்டிருக்கும் காட்சி உங்களுக்குப் போதவில்லையா?" என்று அவர்களைப் பார்த்துக் கேட்டார் காப்டன்.

இதைக் கேட்ட மற்ற மூவரும் தட்சணமே வாயடைத்துப் போயினர். அவர்கள் செய்து கொண்டிருந்த வேலையினால் ஏற்பட்ட சிறு ஓசையைத் தவிர, நிசப்தமே நிலவியது. இந்தச் சமயத்தில் நம்பிக்கையூட்டுவதற்காக எதையாவது சொன்னால் அது முட்டாள்தனமாகவும் சிறுபிள்ளைத்தனமாகவும் தான் தோன்றும் என்பதை அவர்கள் உணர்ந்தனர். வாய்விட்டுச் சொல்லாவிட்டாலும் இந்த உணர்ச்சிதான் அவர்களிடம் அப்போதைக்கு மேலோங்கி நின்றது. இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில் இளைஞனின் தீவிரமாகச் சிந்தனை செய்து கொண்டிருப்பான். இந்த சமயத்திலும் நம்பிக்கையை முற்றிலும் இழந்து விட்ட மாதிரி அவர்கள் எண்ணத் தயாராக இல்லை. அவர்களிருந்த நிலைமையும் அவர்கள் அவ்வாறு எண்ண இடங்கொடுக்கவில்லை. காப்டனுக்கு எதிராக வாய்விட்டுப் பேசவும் துணியவில்லை. எனவே மூவரும் மௌனம் சாதித்தனர்.

இவர்களின் மனோ நிலையை ஊகித்தறிந்த காப்டன் அவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் "பயப்படவேண்டாம், நாமெல்லோரும் நிச்சயமாகக் கரை சேருவோம்," என்றார்.



ஆனால் அவர் இதைச் சொன்னவிதம் அவர்களை என்னவோ செய்தது. வேலைக்காரன்தான் பதிலளிக்க முந்திக்கொண்டான்.

"ஆமாம் சேர்ந்து விடலாம், இந்தக் காற்று இப்படியே வீசிக்கொண்டிருந்தால்," என்றான்.

சமையற்காரன் தண்ணீர் இறைத்துக் கொண்டே, "ஆமாம், ஆமாம்! கரையோரம் கடல் நுரையில் அகப்பட்டு முழுகிப் போகாமலிருந்தால்," என்றான்.

கடற் காகங்கள் படகின் அருகிலும் தூரத்திலும் பறந்த வண்ணமிருந்தன. சிற்சில சமயங்களில் காற்றின் வேகத்தில் கடலில் பாய்போன்று மிதந்து வந்த கடற்பாசிப்பரப்பின் மீது இக் காகங்கள் சிறுசிறு கூட்டமாக உட்கார்ந்தன. அனாயாசமாகக் கொந்தளிக்கும் கடலில் அவை அலைமீதும் அமர்ந்து மிதந்து சென்றதைப் பார்த்துப் படகிலுள்ளவர்களுக்குப் பொறாமையாகக் கூட இருந்தது. கடலின் கோபாவேசம் கடலுக்கப்பால் ஆயிரம் மைலில் கரையில் திரியும் கோழிக் குஞ்சுகளுக்கு எப்படி ஒரு பொருட்டில்லையோ, அதுபோலத்தான் இக்கடல் காகங்களுக்கும் லட்சியமின்றி தோன்றியது. அடிக்கடி அவை படகின் சமீபம் வந்து தங்கள் கண்ணுடிக்கண் பார்வையால் இந்நால்வரையும் முறைத்துப் பார்த்தன. இமை கொட்டாது அவை பார்த்த பார்வையில் ஏதோ அவக்குறி இருப்பதாகக் கூட படகிலுள்ளவர்களுக்குப்பட்டது. அவர்கள் அக்காகங்களைக் கத்திக்கத்தி விரட்டினர். ஒரு காகம் காப்டனுக்கு பக்கத்திலேயே வந்து அவர் தலைமேலேயே உட்கார்ந்து விடும்போல் தோன்றியது. ஏனெனில் படகுக்கு மேலே வட்டமிட்டுப் பறக்காமல், அதன் பக்கத்திலேயே பறந்து வந்து, அவ்வப்போது படகைப் பார்த்துத் தாவித்தாவிப் பாய்ந்தது அதனுடைய கூரிய பார்வை காப்டனுடைய தலையையே இலக்காகக் குறிவைத்த மாதிரி இருந்தது. "ஏ, சனியனே, அவலட்சணமே! நீயும் உன் அரிவாள் மூஞ்சியும்!" என்று வேலைக்காரன் அப்பறவையைத் திட்டினான். இதைத் தொடர்ந்து சமையற்காரனும் நிருபரும் கூட அப்பறவையைச் சபித்தனர். காப்டன் அதை ஒரு கயிற்றாலடித்து வீழ்த்திவிடத்தான் எண்ணினார். ஆனால் அப்படி ஏதாவது தீவிர முயற்சி செய்தால் ஏற்கனவே அதிக பாரத்தைத் தாங்கிக்கொண்டிருந்த இந்தப் படகு கவிழ்ந்து விடுமென்றஞ்சி சும்மா இருந்து விட்டார். தன்னுடைய கையை மட்டும் வீசி அதைத் துரத்த முயன்றார். கடைசியாக அப்பறவை இவர்களைவிட்டு அப்பால் சென்றதும் காப்டன் சற்று நிம்மதியடைந்து பெருமூச்சு விட்டார். தனது தலை தப்பியதே என்று அவருக்குச் சந்தோஷம். மற்றவர்களுக்கு அபசகுனம்போல் அந்த சமயத்தில் பீதியுண்டாக்கிய இது தொலைந்து போயிற்றே என்று நிம்மதி.

வேலைக்காரனும் நிருபரும் துடுப்புப் போட்டது போட்ட வண்ணமிருந்தனர். இருவரும் ஒரே ஆசனத்தில் உட்கார்ந்து

தண்ணீர் வேலியைத் தாண்டிச் சமாளித்ததோ, அது ஒரு புதிர் போலத்தான் தோன்றியது. ஏனென்றால், ஒரு அலையின் நுனியிலிருந்து மடிந்து கவிழ்ந்து வந்த நுரைகளைச் சமாளிக்க மறுபடியும் ஒரு தாண்டுத் தாண்ட வேண்டும். அப்போதெல்லாம் காற்றில் குதித்துத் தாவுவது போலவே தோன்றும். ஒரு அலையின் முகட்டைச் சமாளித்தபின் அதன் சரிவிலேயே வேகமாகப் பாய்ந்து சென்று பெருமிதத்துடன் தலையை ஆட்டிக்கொண்டு நிற்கும் குதிரையைப் போல அந்தப் படகு நிற்கும். உடனே அடுத்து வரும் மற்றொரு பயங்கர அலையை முன்போலவே சமாளிப்பதற்குத் தயாராக வேண்டும்.

கடலில் படகில் செல்லுவதிலுள்ள ஆபத்து என்னவென்றால் ஒரு அலையை எப்படியோ சமாளித்து விட்டோம் என்று பெருமைப் பட்டுக்கொண்டிருக்கும்போதே, தன்னை நோக்கி வந்து கொண்டிருக்கும் மற்றொரு அலையும் முன்னதைப்போலவே பயங்கரமானது என்று உணர்வதுதான். அதைத் தாண்டிச் சமாளிக்கக் கவனத்தை எல்லாம் ஒருமுகப்படுத்தித் திறமையெல்லாம் திரட்டி எச்சரிக்கையுடனிருக்கவேண்டும். அலைகளின் வரிசைகளை எல்லையற்று வழங்குவதில் கடலுக்குள்ள சாமர்த்தியந்தான் என்னே! பத்து அடி நீளமுள்ள ஒரு டிங்கியில் நடுக்கடலில் பிரயாணம் செய்த ஒருவனால்தான் இந்த உண்மையை உணரமுடியும். மற்றவர்களால் இதைப் பூரணமாகத் தெரிந்து கொள்ள முடியாது. கருஞ்சுவர் போன்று ஒரு நீர்த்திரை தன்னை அணுகியபோதே அதற்குப் பின்னாலிருப்பதையெல்லாம் அப்படகினின்று மறைத்து விடுகிறது. எதிரில் வந்த அலைதான் சமுத்திரமே ஒன்றாகத் திரண்டு குவிந்து வந்த கடைசி அலையோ என்று எண்ணத்தோன்றும். நீர்ப்பரப்பின் கடைசி எழுச்சி அதுதான் எனத்தோன்றும். அந்த அலைகள் பாய்ந்துவரும் அழகுதான் என்ன! தவழ்ந்துவரும்போது என்ன பயங்கர அழகு! சந்தடியின்றி அல்லவோ கம்பீரமாக வருகின்றன! உச்சியில் நுரை வழியும்போது உண்டாகும் உறுமுதலைத் தவிர மற்றபோதெல்லாம் நிசப்தமாகவன்றோ அவை வருகின்றன.

அந்த இருட்டின் ஒளியில்—அப்படி ஒன்றிருக்குமேயானால்—அந்நால்வரின் முகங்களும் கபில நிறமாகத்தான் இருந்திருக்கும். படகின் நுனியைப் பார்த்தபடியே இருந்த அவர்களது பார்வைகள் கூட விநோதமாகத்தான் தோன்றியிருக்கும். கரையில் ஒரு மாளிகையில் மேல் மண்டபத்திலிருந்து அக்கடல் பரப்பை ஒருவன் பார்த்தானேயானால் ஓவியத்திற்குப் பொருத்தமான ஒரு காட்சியாகத் தோன்றியிருக்கும். அதைக் கண்டு ரசிக்கவும் கூடும். ஆனால் படகில் உட்கார்ந்திருந்தவர்களுக்கு இக்காட்சியைக் கண்டு அநுபவிக்க அவகாசமில்லை. அவர்கள் மனத்திலும் இதர விஷயங்கள் நிரம்பியிருந்தன.

உதயமாகி, சூரியன் படிப்படியாக மேலே கிளம்பிக் கொண்டிருந்தான். அதிலிருந்துதான் பகல் வந்து விட்டதென்பதை அவர்கள் உணர்ந்தார்கள்.



கடலும் கரும்பலகை நிறத்திலிருந்து மரகதப் பச்சையாக மாறிக்கொண்டு வந்தது. இடையிடையே சூரிய கிரணத்தினால் பொன்னிறச் சாயையும் கலந்திருந்தது. நுரைகளெல்லாம் சிதறிவிழும் பனித்தூள்கள்போல் பிரகாசித்தன. பொழுது அப்படி, எப்போது புலர்ந்தது என்பதை அவர்கள் ஒருவரும் உணரவில்லை. தங்களை நோக்கி வீசிக்கொண்டிருந்த அலைகளில் ஏற்பட்ட மாறுதல்களைத்தான் அவர்கள் கண்டனர்.

சமையற்காரனும் நிருபரும் அரைகுறை வாக்கியங்களில், ஒரு உயிர் மீட்பு நிலையத்திற்கும் சாதாரண பாதுகாப்பு நிலையத்திற்குமுள்ள வித்தியாசம் என்ன என்பதைப்பற்றி விவாதித்துக்கொண்டிருந்தனர்.

'' மஸ்கிடோ குடாவுக்கு வடபுறமாகக் கரையில் ஒரு பாதுகாப்பு நிலையம் இருக்கிறது. அதிலுள்ளவர்கள் நம்முடைய நிலையைக் கவனித்து விட்டால், உடனே தங்கள் படகுகளில் விரைவாக வந்து நம்மெல்லோரையும் காப்பாற்றி அழைத்துச் செல்லுவர்,'' என்று சமையற்காரன் சொன்னான்.

'' நம்முடைய நிலையை யார் கவனித்தால்?'' என்று நிருபர் அவனைக் கேட்டார்.

'' மாலுமிகள் கவனித்தால்'' என்றான் சமையற்காரன்.

'' பாதுகாப்பு நிலையங்களில் மாலுமிகள் ஏது? எனக்குத் தெரிந்தவரையில் அந்த இடங்களில் முழுகிப்போன கப்பலிலிருந்து தப்பி வந்தவர்களுக்காக உணவும் உடையுமட்டுமே வைத்திருப்பார்கள் என்றுதான் கேள்விப்பட்டிருக்கிறேன். மாலுமிகள் இருக்கமாட்டார்கள்.'' என்று நிருபர் சொன்னார்.

இல்லை, இல்லை. மாலுமிகள்கூட அங்கே இருக்கிறார்கள், என்றான் சமையற்காரன் பிடிவாதமாக.

'' இல்லை. அங்கே மாலுமிகளை வைத்துக்கொள்ளுவதில்லை'' என்றார் நிருபரும் பிடிவாதமாக.

'' எப்படியும் நாம் இன்னும் அந்த இடத்தை நெருங்கவில்லையே,'' என்றான் மறுமுனையில் துடுப்புப் போட்டுக்கொண்டிருந்த வேலைக்காரன்.

'' என்னமோ மஸ்கிட்டோ குடாவுக்கு அருகாமையிலிருக்கிறது என்று நான் நினைத்துக் கொண்டிருந்தது பாதுகாப்பு நிலையமாக இருக்காது. அது ஒரு உயிர் மீட்சி நிலையம் என்று எண்ணுகிறேன்'' என்றான் சமையற்காரன்.

'' அப்படியிருந்தாலும் நாம் இன்னமும் அந்த இடத்தின் சமீபம்கூட வரவில்லையே '' என்றான் வேலைக்காரன் மறுபடியும்.

## 2

ஒவ்வொரு அலையின் உச்சியிலிருந்து தாவித்தாவிப் படகு சென்று கொண்டிருந்தபோது தொப்பியின்றி வெறுந்தலையுட

# திறந்த படகு

*[கடலில் அமிழ்ந்து போன "கம்மோடோர்" என்னும் கப்பலிலிருந்து தப்பிய நால்வர்களின் அநுபவத்தைச் சித்தரிக்கும் உண்மைச் சம்பவத்தைத் தழுவி எழுதப்பட்டது.]*

வானத்தின் நிறம் எப்படியிருந்ததென்று அவர்கள் எவருக்கும் தெரியவில்லை. அவர்கள் கண்களெல்லாம் அவர்களை நோக்கிப் பாய்ந்துவந்த அலைகள் மீதே லயித்திருந்தன. கரும்பலகையை நிகர்த்த வர்ணத்துடனும் நுனிகளில் மட்டும் நுரைகளின் வெண்மையுடனும் எழும்பி எழும்பி விழுந்து கொண்டிருந்த கடல் அலைகளினூடே பார்த்தபோது அடிவானமே உயர்ந்தும், தாழ்ந்தும், விரிந்தும், குறுகியும் அசைவது போலத் தோன்றியது. அலைகள் கடற்பரப்பில் குத்திட்டு வான்முகட்டையே பிளக்கும் கற்பாறைகளெனத் தோன்றின.

அவர்கள் சென்றுகொண்டிருந்த அந்தப் படகு உண்மையில் மேல்நாட்டு மாளிகைகளில் உபயோகிக்கும் ஸ்நானத் தொட்டியைக் காட்டிலும் சிறியது. ஒரு மனிதனுடைய உபயோகத்திற்கான தொட்டி இப்படகைவிடப் பெரியதாகத்தான் இருக்க வேண்டும். திடீர் திடீரென்று கிளம்பிய உயர்ந்த அலைகளும் அவற்றின் பயங்கரமான தோற்றமும், அவற்றின் நுரைப்படலமும், அச்சிறு படகிற்கு பெரும் பிரச்னையாக அமைந்தன.

படகின் அடியில் சப்பணமாக உட்கார்ந்திருந்தான் சமையற்காரன். படகின் ஆறு அங்குலக் கனமுள்ள மரவிளிம்பின் மீதே அவன் பார்வை ஒன்றியிருந்தது கடலுக்கும் அவனுக்குமிடையே இருந்தது அந்த ஆறு அங்குலப் பலகைதான். சட்டையின் கைகள் புஜங்கள் வரை சுருட்டி விடப்பட்டிருந்தன. அவ்வப்போது குனிந்து குனிந்து தண்ணீரை ஒரு தகரக் குவளையால் மொண்டு இறைத்துக் கொண்டிருந்தபோது பித்தான் போடாத அவன் சட்டையின் கழுத்துப் பட்டைகள் காற்றில் படபடவென்று அடித்துக்கொண்டன. "கடவுளே. இந்தச் சமயத்திற்குப் பிழைத்தோம்," என்று அவனுடைய வாய் அடிக்கடி முணுமுணுத்தது. இவ்வாறு அவன் உச்சரித்தபோதெல்லாம் கடல் பரப்பையும் மீறிக்கொண்டு அவன் பார்வை கிழக்குப் பக்கம் அடிவானத்தை நோக்கிச் சென்றது.

படகிலிருந்த மற்றொருவன் கப்பலில் என்ஜின் அறையில் வேலை செய்தவன். எண்ணெய் விட்டு, என்ஜினைப் பழுது பார்த்து வந்ததால் அவனை இங்கே வேலைக்காரன் என்றே குறிப்பிடுவோம். படகிலிருந்த இரண்டு துடுப்புகளில் ஒன்றை அவன்தான் இயக்கிக்



கொண்டிருந்தான். வேகமாக பாய்ந்துவந்த அலையின் நீர் படகில் புகாவண்ணம் அவ்வப்போது நிமிர்ந்து நிமிர்ந்து உட்கார்ந்தான். அவன் உபயோகித்துக் கொண்டிருந்த துடுப்பு மிகவும் மெல்லியது. எந்த நிமிஷத்திலும் அது ஒடிந்துபோகும் நிலைமையிலிருந்தது.

பத்திரிகை நிருபர் மற்றொரு துடுப்பை வலித்தவாறே தன் விதியை நொந்து கொண்டார்.

காயமடைந்திருந்த காப்டன் படகின் முன்புறம் சாய்ந்து கொண்டிருந்தார். செழிப்பாக வியாபாரம் நடந்துகொண்டிருந்த ஒரு கம்பெனி முழுகிப் போய்விட்டாலோ, சேனை தோல்வியுற்றாலோ, அல்லது ஒரு கப்பல் கடலில் முழுகிவிட்டாலோ, தைரியங் குன்றாத அநுபவமிகுந்த தீரனுக்கும் கூட, தற்காலிகமாகவாவது, ஒருவித மனச் சோர்வும், நிராசையும் உண்டாவது சகஜம். அத்தகைய நிராசை கொண்ட மன நிலையிலிருந்தார் காப்டன். கப்பல் தலைவனுடைய கவனம் பூராவும், அவன் ஒரு நாளைக்குத் தலைவனாக இருந்தாலும் சரி, பத்து வருஷமாகத் தலைவனாக இருந்தாலும் சரி, அவனுடைய கப்பலிலேயேதான் சதாகாலமும் லயித்திருக்கும். இந்தக் காப்டனும் இதற்கு விலக்கன்று. அன்று அதிகாலையில்தான் அவன் தலைமை வகித்த அந்தக் கப்பல் மூழ்கியது. ஏழு பேர்கள் கடலில் குதித்துப் பிணமாக மிதந்து கிடந்த பரிதாபகரமான காட்சியும், கப்பலின் பாய்மரக் கம்பமும் அதன் நுனியில் தொங்கிக்கொண்டிருந்த வெள்ளை உருண்டை மட்டுமே தெரிந்ததும், அவற்றின் மீது அலைகள் மோதி மோதி அவ்வுருண்டை அசைந்தது. பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அந்தக் கம்பத்தின் நுனியும் மறைந்து, முற்றிலும் முழுகிவிட்டதும், ஒவ்வொன்றாக அவன் மனத்தில் நிலையாகப் பதிந்திருந்தன. இவற்றின் நினைவினால்தானோ என்னமோ அவன் குரலே புதுமாதிரி ஒலித்தது. கம்பீரமாகப் பேசினாலும் ஒருவிதச் சோகம் கலந்திருந்தது நன்றாகவே தெரிந்தது. வார்த்தைகளால் சொல்லி ஆறாத சோகம். கண்ணீர்ப் பெருக்கினாலும் குறையாத சோகம்.

அவ்வாறு சோகம் நிறைந்த குரலில் "பில்லி, படகைச் சற்று தெற்குப் புறமாகவே செலுத்து," என்று அவர் உத்தரவிட்டார்.

"இன்னம் கொஞ்சம் தெற்குப் புறமாகவா, என்றான் மறுபுறமிருந்த வேலைக்காரன்.

ஒரு சிறு படகில் உட்கார்ந்திருப்பது கலிபோர்னியா நாட்டு முரட்டுக் குதிரையின் முதுகில் உட்கார்ந்திருப்பதற்குச் சமமானது. இந்தப் படகைக் காட்டிலும் குதிரை எல்விதத்திலும் குறைந்ததன்று. குதிரையைப் போலவேதான் படகும் முன்னால் சென்றது. பிறகு திடீரென்று பின்னுக்குச் சென்றது. தண்ணீரில் முழுகுவதுபோல் ஒரு சமயம் பாய்ந்தது. ஒவ்வொரு அலை அதை நோக்கி வந்தபோதும் அதன் உச்சிக்குப் படகு சென்றபோதும் உயரமான ஒரு வேலியைத் தாண்டுவதற்குத் தயாராக நிற்கும் குதிரையைப் போலத் தானிருந்தது. அது எப்படி இந்தத்

மனத்தின் ஒரு புறத்தில் புல்மேனின் ரெயில் தொடர் வேகமாக ஓடிக்கொண்டிருந்த தோற்றமும், பச்சை நிறத்திலுள்ள வெல்வெட்டும், ஒளிமிக்க பித்தளை, வெள்ளி, மற்றும் கண்ணாடிப் பொருட்களும், எண்ணெய்க் கிடங்கின் அடித்தளம் போன்ற கருமையுடன் பிரகாசிக்கும் மரப்பொருட்கள்,—திருமணத்தின் மங்கலத்தன்மை, புதிய எஸ்டேட்டின் சூழல், அனைத்தும் அவன் கண் முன் ஓடின. '' சண்டை வந்தால் நான் சண்டைக்குப் பின் வாங்க மாட்டேன், வில்ஸன், இது உனக்கும் தெரியும். ஆனால், இப்பொழுது என்னிடம் துப்பாக்கியே இல்லை. சுட வேண்டுமென்றால் நீயேதான் சுட்டுக்கொண்டிருக்க வேண்டும்'' என்றான். முகம் வெளிறி நீலம் பாய்ந்தது. அவன் ஒரு அடி முன்னால் வந்தான். பாட்டரின் மார்பின் மீது இங்குமங்கும் ரிவால்வரினால் தட்டிக் கொண்டேயிருந்தான். ''என்னிடம் பொய் சொல்லாதே. டெக்ஸாஸ் பிரதேசத்தில் எவரும் துப்பாக்கியின்றி உன்னைப் பார்த்ததில்லை. நீ சொல்வதை நம்ப என்னைப் பச்சைக் குழந்தையென்று எண்ணிவிட்டாயோ ?'' என்று இரைந்தான். அவன் கண்கள் ஒளிபெற்று ஜொலித்தன. அவன் தொண்டை ஒரு குழாய் போன்று மேலும், கீழும் அசைந்து கொடுத்தது.

'' உன்னைப் பச்சைக் குழந்தையென்று நான் எண்ணவேயில்லை ஸ்க்ராட்சி,'' என்று அமைதியாகவே பாட்டர் பதிலளித்தான். அவன் குதிகால்கள் இம்மிகூடப் பின்னேக்கி நகரவில்லை. '' பின் எப்படி நினைக்கிறேன் தெரியுமா ? ஒரு முட்டாளாகக் கருதுகிறேன். ஆமாம், முட்டாள். என்னிடம் துப்பாக்கியில்லை என்று சொன்னால், இல்லையென்றுதான் அர்த்தம். என்னைச் சுட விரும்பினால் அதை உடனே செய். இதைப் போன்றதொரு வாய்ப்பு உனக்கு மறுபடியும் கிடைக்காது '' என்றான் பாட்டர்.

இவ்வாறு வலியுறுத்தப்பட்ட உண்மை வில்ஸனுடைய கோபத்தைச் சற்றுத் தணித்தது. சற்று அமைதியடைந்தான். '' உன்னிடம் துப்பாக்கியில்லையென்றால் ஏன் வைத்துக் கொள்ளவில்லை. மாதா கோவிலில் ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக்கு மத போதனைக்குச் சென்றிருந்தாயோ,'' என்று அவன் ஏளனத்துடன் கேட்டான்.

'' நான் துப்பாக்கி வைத்துக் கொள்ளவில்லை. ஏனெனில், இப்பொழுதுதான் சான் அண்டோனியாவிலிருந்து என் மனைவியுடன் வருகிறேன். நான் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறேன். என் மனைவியை அழைத்துக் கொண்டு வீட்டுக்குச் செல்லும் வழியில் உன்னைப்போன்ற பாதகர்கள் நடமாடிக் கொண்டிருப்பார்கள் என்று எண்ணியிருந்தால் நான் கட்டாயம் துப்பாக்கி வைத்துக் கொண்டிருப்பேன். இதை நீ நிச்சயம் நினைவில் வைத்துக்கொள்'' என்று பாட்டர் சொன்னான்.

'' கல்யாணமா ?'' புரியாதவனாகக் கேட்டான் ஸ்க்ராட்சி.

'' ஆமாம், கல்யாணம் செய்துகொண்டிருக்கிறேன். நான்



தான் மணம் புரிந்து கொண்டிருக்கிறேன்,'' என்று பாட்டர் ஒருதரத்திற்கு இரண்டு தடவையாகச் சொல்லி விஷயத்தைப் புரிய வைத்தான்.

'' நீ மணம் செய்துகொண்டிருக்கிறாயா ?'' என்று ஆச்சரியப்பட்டவன் போல் ஸ்க்ராட்சி மீண்டும் அவ்வார்த்தையை உச்சரித்தான். பாட்டரின் பக்கத்தில் பெண்ணொருத்தி கவிந்த தலையுடன் பெருந்துயரத்தில் மூழ்கியிருந்ததை அவன் அப்போதுதான் முதல் தடவையாகப் பார்த்தான். '' நிச்சயமாகவா ? இருக்காது ! '' என்று அவன் நம்பாமலே சொன்னான். இன்னொரு உலகத்தைக் கண்டவனைப் போல வாயைப் பிளந்தான். ஒரு அடி பின்னால் நகர்ந்து அவர்களை உற்று நோக்கினான். உயரத் தூக்கியிருந்த ரிவால்வர் வைத்துக்கொண்டிருந்த அவன் கை தொங்கிப் போயிற்று. ரிவால்வரைக் கீழே போட்டான். '' இவள்தான் அந்த அம்மாளா ?'' என்று மணமகளைப் பார்த்துக் கேட்டான்.

'' ஆமாம், இவள்தான் அந்த அம்மாள், என் மணமகள்,'' என்று பாட்டர் பதிலளித்தான்.

மறுபடியும் அங்கே அமைதி நிலவியது. சிறிது நேரம் பொறுத்து, '' சரி, அப்படியானால், என் விவகாரம் தீர்ந்துவிட்டதாகவே கருதுகிறேன் '' என்று வில்ஸன் மெதுவாகப் பேசினான்.

'' ஸ்க்ராட்சி, நீ அவ்வாறு சொன்னால், எல்லாம் தீர்ந்துவிட்டது போலத்தான்; உனக்கேற்பட்ட தொந்தரவுகளெல்லாம் என்னால் ஆரம்பிக்கப்பட்டவையல்ல என்பதுதான் உனக்குத் தெரியும் '' என்று சொல்லிவிட்டு கீழே விழுந்திருந்த கைப்பெட்டியைப் பாட்டர் எடுத்துக் கொண்டான்.

'' நல்லது, எல்லாம் முடிந்து விட்டது என்று நான் ஒத்துக் கொள்கிறேன் ஜாக்,'' என்றான் வில்ஸன். அவன் தரையையே பார்த்துக் கொண்டிருந்தான்.

" மணமாய் விட்டது '' என்ற வார்த்தையை மட்டும் அவன் வாய் முணுமுணுத்தது. பெண்கள் முன்னிலையில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்னும் சம்பிரதாயமெல்லாம் அவனுக்குத் தெரியாது. அதில் அவன் தேறியவன் அல்ல. எனினும் தன் முன் நின்ற ஜாக் பாட்டரின் புது வாழ்க்கைச் சூழ்நிலையில் ஸ்க்ராட்சி வில்ஸன் ஒரு குழந்தை மாதிரி ஆகிவிட்டான். கீழே விழுந்திருந்த ரிவால்வரை எடுத்துக்கொண்டான். இரண்டையும் அவற்றின் உறைகளில் வைத்துக்கொண்டு அவன் புறப்பட்டான். அவன் கால்கள் மணற்பாங்கான தரையில் புனல் மாதிரித் தடங்களை அமைத்துக்கொண்டே சென்றன.

★

அவனை நன்றாகக் கட்டிப்போட்டு அவன் கொட்டத்தை அடக்கி விடுவான்.''

அப்பொழுது தூரத்திலிருந்து வந்த ஒரு துப்பாக்கி வேட்டு சப்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து மூன்று பயங்கரக் கூக்குரல்கள் எழுந்தன. அங்கே இருட்டறையிலிருந்த அம்மனிதர்களிடையே கொஞ்சம் பரபரப்பு; காலடியோசை கேட்டுக்கொண்டிருந்தது. அவர்கள் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டனர். '' அவன் இதோ வந்துவிட்டான் '' என்றான் ஒருவன்.

## III

'எல்லோ ஸ்கை'யின் பிரதான வீதியின் நடுவில் ஒரு மூலையிலிருந்து திரும்பி ஒருவன் வந்துகொண்டிருப்பது தெரிந்தது. கருஞ் சிவப்பு நிறத்தில் ஒரு கம்பளிச் சட்டை அணிந்திருந்தான்; திருவிழாக்களின்போது அணிந்துகொள்ளுவதற்காக வாங்கப்பட்டது அது. நியூ யார்க்கின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்த சில யூதப் பெண்களால் அவை பெரும்பாலும் தயாரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு கையிலும் நீளமான கருநீல ரிவால்வர் ஒன்றை அவன் வைத்திருந்தான். அடிக்கடி அவன் எழுப்பிய எக்களிப்பு மனித சஞ்சாரமற்ற ஒரு கிராமத்தில் கேட்பதுபோல தனித்து ஒலித்தது. அவன் கூக்குரலுக்கும், சாதாரண மனிதன் எழுப்பும் குரலுக்கும் எவ்வித ஒற்றுமையும் காணமுடியாது. அவனைச் சுற்றிலும் காணப்பட்ட அமைதியே ஒரு மண்டபத்தின் சுவர்கள்போல் அமைந்து அவன் குரல் அவற்றில் தாக்கி எதிரொலித்தது. நியூ இங்கிலாந்தின் மலைப்பகுதிகளில் வாழும் சிறுவர் மழைக்காலத்தில் அணிவதுபோன்ற சிவப்பு பூட்ஸுகளை அவன் அணிந்து கொண்டிருந்தான்.

அவனுடைய முகம் விஸ்கி மதுவினால் வெறியுடன் பிரகாசித்தது. கண்களில் கோபக் கனல் வீசிற்று. சண்டைக்கு யாரேனும் எதிர்ப்பட்டால் தான் பாதுகாப்பாகப் பதுங்கத் தக்க இடத்தைத் தேடிக்கொள்ள கதவுகளையும், ஜன்னல்களையும், கவனித்தபடியே இரவுப் பூனை போன்று பதுங்கிப் பதுங்கி நடந்தான். வாயில் வந்தபடி தனக்குத்தானே பேசிக்கொண்டான். இடையிடையே யாருக்கோ சவால் விட்டான். உறுமினான். அவன் இரும்புப் பிடியில் இருந்த நீண்ட ரிவால்வர்கள் இரண்டும் அவனுக்கு ஒரு துரும்பு போல் தோன்றின. அவ்வளவு அலட்சியமாய் மின்சாரத்தால் இயங்குவது போல அவ்வளவு வேகமுடன் அவன் அவற்றைக் கையாண்டான். இசைக்கருவி மீது ஒரு வித்வானின் விரல்கள் ஓடுவது போல் இவன் விரல்கள் துப்பாக்கி மீது விளையாடின; உடம்போடு ஒட்டி அவன் அணிந்திருந்த சட்டைக் காலரின் கீழ்ப் பாகத்திலிருந்து கழுத்துப் பட்டைகள் அவன் மூச்சு விடும்போதெல்லாம் குறுகி விரிந்து, அவன் உள்ளத்தில் பொங்கியெழுந்த



ஆத்திரத்தை வெளிப்படுத்தின. அவன் விடுத்த சவால்களை ஏற்க அங்கே ஒருவனுமில்லை. அவன் கூக்குரலையும், எக்காளத்தையும் தவிர வேறு எவ்வித ஓசையும் கேட்கப்படவில்லை. வீதியின் இரு மருங்கிலுமிருந்த வீடுகளில் இவனைப்பற்றி எவ்வித நினைப்புமில்லாமல் அமைதியே நிலவியது.

ஒருவனும் இவன் சவால்களை ஏற்கவில்லை. சண்டைக்கு முன் வரவில்லை, முன் வரவேயில்லை. அவன் வானத்தையும் நோக்கி சவால் விட்டுப் பார்த்தான். அவ்விடத்திலிருந்தும் ஒன்றும் பதில் கிடைக்கவில்லை. கையில் பிடித்திருந்த ரிவால்வர்களை நாலாபக்கத்திலும் சுழற்றி, சுழற்றி இரைந்தான்; கூச்சலிட்டான்; கர்ஜித்தான்.

'வேரி ஜெண்டில்மன் சலூ'னின் சொந்தக்காரனுடைய நாய் இதையெல்லாம் ரசிக்கவில்லை. அதுகூட இவன் செயலைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. அது தன் யஜமானனுடைய கட்டிட வாசற் கதவருகில் இன்னமும் அரைத் தூக்கத்தில் இருந்தது. நாயைக் கண்டதும் நின்று வேடிக்கையாக ரிவால்வரை அதன்முன் தூக்கிப் பிடித்தான். இதைக் கண்ட அந்த நாய் தன் தொங்கிய தலையுடன் குரைத்துக் கொண்டே அப்பால் நடந்தது. கூக்குரலிட்டு அதை விரட்டினான். அது ஓடத் தொடங்கிற்று. ஒரு குறுக்குச் சந்தினுள் நுழைந்து சென்ற போது ஒரு பலமான வேட்டுச் சப்தம் கேட்டு, ஏதோவொன்று நேராக அதன் முன்னால் விழுந்தது. நாய் ஓலமிட்டது. பீதியடைந்து அங்கிருந்து திரும்பி ஓலமிட்டுக்கொண்டே வேறு திசையில் தலைதெறிக்க ஓட்டமெடுத்தது. மறுபடியும் இன்னொரு வேட்டு! நாயின் காதில் 'விர்'ரென்ற ஓசை! அதன் முன்னால் ஏதோ விழுந்து ஒரு பிடி மண்கூட சிதறிப் பறந்தது. பயந்து நடுங்கிய நாய் திரும்பிப் பெட்டியிலடைபட்ட மிருகம் போன்று எத்திசையிலும் போக முடியாமல் தத்தளித்தது. அது படும் அவஸ்தையைக் கண்டு இடுப்பின் மீது தன் ரிவால்வர்களை வைத்தபடியே அவன் சிரித்து மகிழ்ந்து கொண்டிருந்தான். அவனுடைய ஆத்திரத்தை தீர்த்துக்கொள்ள ஒரு நாயாவது அகப்பட்டதே என்ற திருப்தி போலும்.

அவ்விடம் விட்டகன்ற போது வேரி ஜெண்டில்மன் சலூனின் சாத்தப்பட்டிருந்த கதவு அவன் கவனத்தைக் கவர்ந்தது. அங்கு சென்று ரிவால்வரால் கதவைத் தட்டி குடிக்க ஏதாவது கேட்டான்.

கதவு திறக்கப்படவில்லை. உட்புறத்திலிருந்தும் எவ்விதச் சலனமுமில்லை. தெருவில் கிடந்த ஒரு துண்டுக் காகிதத்தை எடுத்துக் கதவின் சட்டத்தில் கத்தியால் செதுக்கிப் பொருத்தினான். அலட்சிய பாவத்துடன் திரும்பித் தெருவின் எதிர்ப்பக்கத்திற்குப் போய் நின்று அங்கிருந்து சாத்தியிருந்த கதவை நோக்கி துண்டுக் காகிதத்தின் மேல் சுட்டான். அரையங்குலம் குறி தவறிவிட்டது. தன்னையே சபித்துக்கொண்டு அங்கிருந்து வெளியேறினான்.

அருகில் அவனுடைய சிறந்த நண்பனின் வீட்டு ஜன்னல் அவன்
கண்களில் பட்டது. அதைப் பார்த்து ரவைமாறி பொழிந்தான்.
இவ்வாறு அவன் அந்த நகரத்தையே ஒரு விளையாட்டுப் பொரு
ளாக மதித்து எவ்விதத் தடங்கலுமின்றி வளைய வந்தான்.
இவ்வளவுக்கும் அவன் சவாலை ஏற்று அவனுடன் சண்டையிட
யாரும் முன்வரவில்லை. அப்போதுதான் அவனுடைய பழைய
விரோதியான ஜாக் பாட்டருடைய நினைவு வந்தது. அங்கு
சென்று அவன் வீட்டை நோக்கிச் சுட்டால் அவனை வெளியே
கிளப்பி தன்னுடன் சண்டைக்கு இழுத்தாலென்ன என்ற எண்ணம்
எழுந்தது. அந்த எண்ணமே அவனுக்கு மகிழ்ச்சி தந்தது. உடனே
பாட்டரின் வீட்டை நோக்கி அந்தப் பிராந்திய நாடோடிப்
பாட்டு ஒன்றைப் பாடிக்கொண்டே சென்றான்
மற்றவர்களுடைய வீட்டைப் போலவே பாட்டருடைய வீடும்
அமைதியாயிருந்ததைக் கண்டான். அமைதியைக் கலைத்துப்
பக்கத்தில் பாதுகாப்பான இடத்தில் நின்று கொண்டு உரத்துச்
சவால் விட்டான். பலனில்லை. ஒரு கற்சிலையிடம் கத்தினால் என்ன
பயன் ஏற்படுமோ அந்தப் பயன்தான் ஏற்பட்டது. அசைந்து
கொடுக்கவேயில்லை. கொஞ்ச நேரம் காத்திருந்தபின் அவன்
மறுபடியும் பல சவால்கள் விட்டான். அவற்றுடன் ஆத்திரமூட்டும்
வசைமொழிகளையும், சேர்த்துச் சேர்த்துப் பொழிந்தான்.
இப்போதும் பலனில்லை. வீட்டின் அமைதியைக் கண்டு இவ
னுக்கு மேன்மேலும் கோபம்தான் வந்தது. தன்னைத்தானே
வெறுத்துக்கொண்டு சற்று நேரம் நின்றான். வடக்குப் பிராந்தி
யங்களில் மாரிக்காலக் கடுங்காற்று குடிசைகள் மேல் மோதுவது
போல் அவனும் தனது கோபக் கனலை அவ்வீட்டின் மீது வீசினான்.
தூரத்திலிருந்து இவன் எழுப்பிய கூக்குரலையும், எக்காளத்தையும்
யாராவது கேட்டால், இங்கே குறைந்தது இருநூறு மெக்ஸிகோ
வாசிகளாவது சண்டை செய்கிறார்கள் என்றே எண்ணியிருப்பர்.
அவ்வப்போது மூச்சு விடுவதற்கோ, அன்றி ரிவால்வரில் தோட்
டாக்களை நிரப்புவதற்கோ மட்டும் அவகாசம் எடுத்துக்
கொண்டான்.

## IV

பாட்டரும், அவன் மனைவியும் ஸ்டேஷனிலிருந்து விரைந்து
வந்துகொண்டிருந்தனர். பயந்தாங்கொள்ளிகளைப் போலத் தலை
குனிந்த வண்ணந்தான் அவர்கள் சென்றுகொண்டிருந்தனர்.
தன் மனைவிக்கு உற்சாகமூட்டும் வண்ணம், "அன்பே, வீட்டை
யடைந்து விட்டோம். அடுத்த திருப்பம்தான்," என்று சொல்
லிக்கொண்டே வந்தான்.
பலமாக வீசிய எதிர் காற்றைச் சமாளிக்கக் குனிந்த வண்ணம்
நடந்தனர். அடுத்த சந்தில் திரும்பியதும், மணமகள் புக வேண்



டிய புது வீட்டின் முதல் தோற்றத்தைத் தூரத்திலிருந்தே
சுட்டிக் காண்பிப்பதற்காகப் பாட்டர் தன் ஒரு விரலை உயர்த்
தினான். ஆனால், தெருவின் முதல் திருப்பத்திலேயே பெரிய
ரிவால்வருக்குள் அவசர அவசரமாகத் தோட்டாக்களைச் செலுத்
திக்கொண்டிருந்த சிவப்பு நிறச் சட்டையணிந்த ஒரு மனிதனை
நேருக்கு நேர் சந்தித்தனர். இவர்களைக் கண்ட அந்தக் கணத்தில்
அவன் தோட்டாக்களை நிரப்பிக் கொண்டிருந்த ரிவால்வரை
அப்படியே தரையில் போட்டுவிட்டு, மின்னல் வேகத்தில் உறையி
லிருந்த மற்றொன்றை உருவிக்கொண்டான். துப்பாக்கியால்
மணமகளின் மார்புக்கு நேராகக் குறி பார்த்தான்.
அங்கு ஒரு அமைதி; மயான அமைதி. பாட்டருடைய
வாயிலிருந்து வார்த்தையே கிளம்பவில்லை, அவன் நாக்கு செய
லிழந்து வாயினுள் சமாதியடைந்து விட்டதுபோல் தோன்றியது.
அவனையுமறியாமல் தன் மனைவியின் அணைப்பிலிருந்து தன் கையை
மட்டும் சட்டென்று விடுவித்துக்கொண்டான். அவன் கையி
லிருந்த சிறு பெட்டி தரையில் விழுந்தது. ஒரு பழந்துணி
போன்று மணமகளின் முகம் வெளிறியது. அந்தக் கொலை
பாதகனின் முன்னிலையிலேயே தனக்கு ஈமச்சடங்குகள் நடப்பது
போன்றே அவள் எண்ணினாள்.
அவ்விருவருக்கிடையில் மூன்று அடிதூரம் தானிருந்தது.
ரிவால்வர் வைத்திருந்தவன் ஒரு பயங்கரச் சிரிப்பு சிரித்தான்.
அமைதியான புன்முறுவல் போலிருந்தாலும், கடுமையும், குரோத
மும் நிறைந்த ஒரு குரூரமான புன்முறுவல் பூத்தான்.
"நான் அஜாக்கிரதையாக இருந்தபோது என்னை ஏமாற்றி
அடித்தாய் அல்லவா? என்னை ஒரு அற்பனாகத்தானே கருதினாய்?"
என்று அவன் ஆரம்பித்தான். அவன் கண்கள் இரத்தம் கக்கின.
பாட்டர் சிறிதே நகர முயற்சித்தான். அதே நொடியில் தூக்கிப்
பிடித்த ரிவால்வர் மேலும் முன்னுக்கு நீட்டப்பட்டது. "வேண்
டாம், அசையாதே. ஜாக் பாட்டர்; உன் துப்பாக்கியை எடுக்க
ஒரு விரல் கூட அசைக்காதே. ஒரு இமையளவும் முன்னால்
நகராதே. உன் மீது எனக்குள்ள வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்
ளும் காலம் வந்துவிட்டது. என் பழியை, என்னிஷ்டப்படியே,
என் முறைப்படித் தீர்த்துக்கொள்ளப்போகிறேன். அதில்
எவ்விதக் குறுக்கீட்டையும் சகிக்க மாட்டேன். என் துப்பாக்கி ரவை
கள் உன்னைத் துளைப்பதை நீ விரும்பவில்லையானால் நான் கூறு
வதைச் சற்றுக் கேள்," என்று அவன் ஆத்திரமும் குரோதமும்
பொங்கக் கூறினான்.
பாட்டர் தன் முன் நின்ற பகைவனை உற்று நோக்கினான்.
"ஸ்க்ராட்சி, என்னிடம் துப்பாக்கி ஒன்றுமில்லை; இல்லவே
இல்லை; இது முற்றிலும் உண்மை" என்று அமைதியாகவே
கூறினான். தன்னைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சமாளித்துக்
கொண்டான். மனத்தையும் உறுதிப்படுத்திக் கொண்டிருந்தான்

"அவன் எதிர்ப்படுபவன் எவனாயிருந்தாலும் அவனைக் கொன்று விடுவானோ? நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? வாரம் ஒரு முறையோ, அன்றியோ, அவன் அடிக்கடி இவ்வாறு சுற்றுவானோ? அந்தக் கதவையும் உடைத்து விடுவானோ?"

"இல்லை. அந்தக் கதவை அவனால் உடைக்கமுடியாது" என்று கடைக்காரன் உறுதியளித்தான். மூன்று முறை இதற்கு முன் அவன் முயன்றிருக்கிறான். நீ புது ஆள்; எதற்கும் அவன் இங்கே வரும்போது நீ குப்புற கீழே படுத்துக்கொள்ளுவது நல்லது. நிச்சயம் அவன் கதவை நோக்கிச் சுடுவான். ஒருவேளை ஒரு குண்டு அதன் வழியாக வரலாம்" என்று மேலும் அவன் அநுபவ பூர்வமான எச்சரிக்கையை முக்கியமாக டமாரக்காரனுக்கு விடுத்தான். அதற்குப் பின் டமாரக்காரன் கதவின் மேலேயே நினைவாக இருந்தான். அவன் கீழே படுக்க வேண்டிய நேரம் இன்னும் வரவில்லை. ஆனாலும் முன்னெச்சரிக்கையாக சுவரோரமாக நகர்ந்து கொண்டான். "எவனையாவது கொன்றுவிடுவானோ?" என்று மறுபடியும் கேட்டான். அதைக் கேட்டதும் அவர்களனைவரும் ஒரு அலட்சியச் சிரிப்பு சிரித்துக்கொண்டனர்.

"அவன் நிச்சயமாகச் சுடுவான். அவன் ஒரு காலிப்பயல். வம்புக்காரன். யாரையும் வலுச்சண்டைக்கிழுப்பான். அவனுடன் எவ்வித விவகாரமும் வைத்துக்கொள்ளுவது நல்லதல்ல," என்று ஒருவன் நிலைமையை விளக்கினான்.

"இத்தகைய சந்தர்ப்பத்தில் நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? என்ன செய்வீர்கள்?" என்று ஆவலாகக் கேட்டான் டமாரக்காரன்.

ஒருவன், "ஏன்? அவனும் ஜாக் பாட்டரும்" என்று ஏதோ ஒரு பழைய சம்பவத்தைப்பற்றி ஆரம்பித்தான்.

"ஆனால் ஜாக் பாட்டர்தான் சான் ஆன்டனில் இருக்கிறானே!" அனைவரும் ஒரே குரலில் கூறினர். "சரி, அவன் யார்? அவன் இதற்கென்ன செய்வான்?" "ஓ, அவன்தான் நகரத் தலைவன். இத்தகைய சமயங்களில் அவன் சென்று ஸ்க்ராட்சியுடன் சண்டையிடுவான்."

"ஓ, அப்படியா, அவனுக்கு நல்ல உத்தியோகந்தான்." புருவத்தை உயர்த்தியவண்ணம் டமாரக்காரன் வியப்புடன் சொன்னான்.

அவர்களுக்கிடையே பேச்சு குறைந்து வெறும் முணுமுணுப்பாக மாறியது. டமாரக்காரனுக்கு இன்னும் பயத்தினால் பல விஷயங்களைப்பற்றிக் கேட்க ஆவல். எதையாவது கேட்க முற்படுகையில் மற்றவர்கள் அவனை வெறுப்புடன் நோக்கி, பேசாதிருக்கும்படி சைகை செய்தனர். அவர்கள் ஏதோ ஒரு பயங்கர நிகழ்ச்சிக்காகக் காத்திருப்பது போன்ற அமைதி அங்கே நிலவியது. அறையின் இருளில், அவர்கள் கவனமெல்லாம் தெருவிலிருந்து தங்களை நோக்கி வந்த காலடியோசையிலேயே லயித்திருந்தது.



அவர்கள் கண்கள் ஒளிர்ந்தன. ஒருவன் கடைக்காரனை நோக்கி மூன்று தடவை ஏதோ சைகை செய்தான். பிசாசைப் போல நகர்ந்து வந்து, அவனிடம் ஒரு குப்பி மதுவையும், ஒரு "கிளாஸ்" டம்ளரையும் கடைக்காரன் தந்தான். அந்த மனிதன் டம்ளர் நிறைய விஸ்கியை ஊற்றிக்கொண்டு பாட்டிலை சப்தமின்றி கீழே வைத்தான். ஒரே மடக்கில் அவ்வளவு விஸ்கியைக் குடித்துவிட்டு, கதவை நோக்கி அமைதியான பார்வையைச் செலுத்தினான். கடைக்காரன் ஓசைப்படாது எழுந்து ஒரு வின்செஸ்டர் துப்பாக்கியை எடுத்து வைத்துக்கொண்டதை டமாரக்காரன் கவனித்தான். அவன் தனக்கு ஏதோ சைகை காட்டுவதை உணர்ந்து கட்டை விரல்களாலேயே நகர்ந்து அவனருகில் சென்றான்.

"நீ என்னுடன் கடைக்குப் பின்புறத்திற்கு வந்து விடுவது நலம்."

"வேண்டாம், நன்றி. பின் பக்கத்திற்கு சட்டென்று ஓடும்படி ஒரு இடத்திலிருந்தால் போதும்" என்றான் டமாரக்காரன். அவனுக்கு பயத்தால் வியர்த்துவிட்டது.

அதன்பின் கடைக்காரன் சைகை மூலமே ஏதோ தற்காப்புக்கான வகைகளைச் சொன்னான். டமாரக்காரனும், அவன் சொல்லியபடியே ஒரு பெட்டியின் மேல் உட்கார்ந்து கொண்டான். அவன் தலை, மது வழங்கும் பலகை மட்டத்திற்குக் கீழேயே இருந்தது. துத்தநாகத் தகடினாலும், செம்புத் தகடாலும் பந்தோபஸ்தாக்கப்பட்ட அந்த இடம் அவனுக்குக் கவசம் போன்று தோன்றியது. கடைக்காரனும் பக்கத்திலிருந்த மற்றொரு பெட்டியின் மீது சுகமாக உட்காரந்துகொண்டான்.

"ஸ்க்ராட்சி வில்ஸன் கையில் துப்பாக்கி இருந்துவிட்டால், அவனை ஒரு அற்புதம் என்றே கூறவேண்டும்; ஆமாம், அற்புதம்—அவன் சண்டையிட ஆரம்பித்தாலும் பாதுகாப்பான இடங்களை நாம் தேடி ஒளிகிறோம். அது இயல்பு. இந்த நதியோரம், திரிந்தலைந்து கொண்டிருந்த ஒரு கலகக்கார கூட்டம் ஒன்றிருந்தது. அக்கூட்டத்தினருள் இவன்தான் இப்போது கடைசி ஆள். அவன் குடித்து போதையிலிருந்தால் எல்லோருக்கும் நடுக்கம்தான். சாதாரணமாக இருக்கும்போது அவன் நல்லவன்தான். ஒரு பூச்சியைக்கூட துன்புறுத்தமாட்டான். நகரத்திலேயே மிகவும் நல்லவனென்றே சொல்லிவிடலாம். ஆனால் அவன் குடித்துவிட்டு ஊர் திரிய ஆரம்பித்து விட்டால்—அவ்வளவுதான்" என்று கடைக்காரன் ஸ்க்ராட்சி வில்ஸனைப் பற்றி விளக்கமாகப் பேசினான். மெதுவாகக் கிசுகிசுத்தான்.

பிறகு அவர்களுக்கிடையே மௌனம். "ஜாக் பாட்டர் சான் ஆன்டனிலிருந்து திரும்பியிருந்து இந்தச் சமயத்தில் இங்கே இருக்க வேண்டும் என்பது என் ஆசை" என்றான் கடைக்காரன். "அவன் ஒரு முறை வில்ஸனின் காலில் சுட்டான். இந்தத் தடவை

லாமா என்று அடிக்கடி எண்ணினான். ஆனால் ஒருவித கோழைத் தனம் அவனைச் சூழ்ந்து கொண்டது. அவன் அவ்வாறு செய்யப் பட்டான். ஆனால் இப்போதோவெனில் அந்த ரெயில் வண்டி அவன் ஊருக்கு அழைத்துச் சென்றது. ஊரை அடைந்ததும் தன்னை ஆச்சரியத்தோடும், ஆனந்தத்தோடும், மனத்தாங்கலுடனும் நோக்கும் சமூகத்தை அல்லவா அவன் எதிர்நோக்கவேண்டும். தன்னை நோக்கி ஓடிவரும் இடங்களை ஜன்னல் வழியாகக் கவனித்தான், அவை மங்கலாகத் தெரிந்தன.

"எல்லோ ஸ்கை"யில் ஒருவித பாண்டு கோஷ்டி இருந்தது. அவர்கள் அதைக் கர்ணகடூரமாக வாசிக்குந்தோறும் அங்குள்ள மக்கள் ஆனந்தத்தில் மூழ்குவர். அதை நினைத்து அவன் ஒரு வறட்டுச் சிரிப்பு சிரித்தான். அந்த ஊர் மக்கள் இவன் தன் மனைவியுடன் வருவதை முன்னாடியே அறிந்திருந்தால் ரெயில் நிலையத்துக்கு வந்து, வாத்தியங்கள் முழங்க மகிழ்ச்சியுடன் வாழ்த்துக்கூறி அவனுடைய செங்கல் வீட்டிற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்வார்களே! ஆனால் இப்போது!

ரெயில் நிலையத்திலிருந்து வீடுவரையுள்ள பிரயாணத்தை எப்படியாவது மிகத்துரிதமாக ஒரு சாதாரண மனிதன் போல் ஒருவர் கண்ணிலும் படாமல் முடித்துவிட வேண்டும் எனத் தீர்மானித்துக் கொண்டான். அவனது வீட்டை எப்படியாவது அடைந்துவிட்டால் கோட்டையின் பாதுகாப்பிற்குள் வந்துவிட்டது போன்று அவன் நிம்மதியடைவான். அங்கிருந்து கொண்டு ஊரில் எந்தவிதமாகவாவது விஷயத்தைத் தெரியப்படுத்திக் கொள்ளலாம்! அவசியமானால் மக்களது பரபரப்பு சற்றுக் குறையும்வரை அவர்களிடமிருந்து சற்று விலகிக்கூட இருக்கலாம்!

அவன் மனத்தில் உள்ள சிந்தனைகளை அவள் எப்படி அறிவாள்! அவனை ஆவலுடன் உற்று நோக்கி, "எதை நினைத்துக் கவலைப்படுகிறாய் ஜாக்?" என்று அவள் கேட்டாள். அவன் மறுபடியும் சிரித்தான். "நான் எதை நினைத்தும் மனத்தை அலட்டிக் கொள்ளவில்லை பெண்ணே. நான், என் ஊர் "எல்லோ ஸ்கை"யை நினைத்துக்கொண்டேன். வேறொன்றுமில்லை," என்று மழுப்பினான். அவள் அதைப் புரிந்துகொண்டு நாணங்கொண்டாள்.

ஏதோ தவறு செய்துவிட்ட உணர்வு இருவர் மனத்திலும் பரவி இனிய மென்மையுணர்வை வளர்த்தது. ஒருவரையொருவர் கனிவுடன் பார்த்துக்கொண்டனர். ஆனால் பாட்டர் மட்டும் அந்த வறட்டுச் சிரிப்பைச் சிரித்தான். பெண்ணின் முகத்தில் நாணம் நிரந்தரமாகக் குடிகொண்டது.

"எல்லோ ஸ்கை"யின் உணர்ச்சிகளை புறக்கணித்தவன் ரெயில் வேகமாகச் செல்லும் நிலத்தோற்றத்தைக் கவனித்தான். "நமது ஊருக்குப் பக்கமாக வந்துவிட்டோம்" என்று அவன் கூறினான்.

அதே சமயம் அந்த நீக்ரோ பணியாள் பாட்டரின் ஊர்



நெருங்கிவிட்டது என அறிவித்தான். அப்போது மட்டும் என்னவோ தான் உயர்ந்தவன் என்ற நினைப்பு ஒழிந்துபோய் கையில் பிரஷ் ஒன்றை வைத்துக்கொண்டு அவன் ஜாக் பாட்டர் முன் நின்றான். பாட்டர் அப்படியும், இப்படியுமாகச் சற்றுத் திரும்ப அவன் அப்பிரஷ்ஷினால் பாட்டரின் புது உடையைத் துடைத்துவிட்டான். மற்றவர்கள் செய்வதைப் பார்த்துப் பாட்டரும் ஒரு நாணயத்தை எடுத்து அவனுக்கு இனாம் வழங்கினான். குதிரைக்கு முதன் முதலாக லாடம் அடிப்பதைப்போல் பாட்டரின் சட்டையை 'பிரஷ்'ஷால் துடைப்பது அவ்வளவு வேலை வாங்கிற்று.

ரெயில் வேகம் குறையத் தலைப்பட்டு பிளாட்பாரத்துக்குச் செல்லுகையில் அவர்களுடைய பையை போர்ட்டர் எடுத்துக் கொண்டான். அப்பொழுது அந்த இரண்டு "என்ஜின்களும், அதைத் தொடர்ந்து ரெயில் பெட்டிகளும் "எல்லோ ஸ்கை"யின் ரெயில் நிலையத்துக்குள் நுழைந்தன.

"ரெயில் என்ஜின்கள் இங்கு தண்ணீர் பிடித்துக் கொள்ள வேண்டும்" என, மரணச் செய்தியை அறிவிப்பவன்போல் தொண்டை அடைக்க, துக்கம் கலந்த குரலில் பாட்டர் சொன்னான். ரெயில் நிற்குமுன்பே, அவனது கண்கள் பிளாட்பாரம் முழுவதும் தன் பார்வையைச் செலுத்தின. சற்று ஆத்திரத்தோடும், ஆவலோடும் தண்ணீர்த் தாங்கியை நோக்கிச் சென்று கொண்டிருந்த "ஸ்டேஷன் ஏஜெண்டைத்"த் தவிர வேறு ஒருவரும் இல்லாததைக் கண்டு ஆச்சரியப்பட்டாலும் அதிகமாக மனமகிழ்ந்தான். ரெயில் நின்றவுடன் போர்ட்டர் முதலில் இறங்கி நடக்க ஆரம்பித்தான். பிறகு மணமகனும், மணப்பெண்ணும் இறங்குவதற்கு வசதியாக ஒரு மரப்பலகையை கதவுக்கு நேராக நகர்த்திவைத்தான்.

"இறங்கி வா, பெண்ணே" என்று பாட்டர் சிறிது கம்மிய குரலில் அழைத்தான். அவள் இறங்குவதற்கு அவன் உதவி செய்த பொழுது இருவரும் அர்த்தமில்லாமல் சிரித்துக்கொண்டனர். அவன் நீக்ரோவிடமிருந்து பையைப் பெற்றுக்கொண்டு அவளைத் தன் கையைப் பிடித்துக் கொண்டு தன்னையொட்டியே வருமாறு அழைத்தான். திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு அவர்கள் வேகமாகப் போகும்போது, "ஸ்டேஷன் ஏஜென்ட்" தூரத்திலுள்ள சாமான்கள் வண்டியிலிருந்து இரண்டு டிரங்குப் பெட்டிகளை இறக்கிவிட்டு, ஏதோ சைகை செய்து கொண்டே தன்னை நோக்கி வருவதைப் பாட்டர் உணர்ந்தான். அவன் சிரித்தான். அவனது மகிழ்ச்சிக்குரிய திருமணம் "எல்லோ ஸ்கை"யில் உண்டாக்கிய முதல் விளைவைப் பார்த்து ஒரு வறட்டுச் சிரிப்பு மட்டும் சிரித்தான். ஒன்றும் பேசவில்லை. தனது மனைவியின் கையை இறுக்கித் தன்னுடன் சேர்த்துக்கொண்டு மேலே நடந்தான். அவர்கள் நடையில் ஒரு வேகம். அவர்களுக்குப் பின்புறம் போர்ட்டர் சும்மா சூள்கொட்டிக்கொண்டு நின்றான்.

## II

'தென் பகுதி ரெயில்வேயைச் சேர்ந்த கலிபோர்னியா எக்ஸ்பிரஸ் இன்னும் இருபத்தோரு நிமிடங்களில் "எல்லோ ஸ்கை" ஸ்டேஷனை அடையும். "வேரி ஜென்டில்மன் சலூன்" என்று மதுபானம் வழங்கும் அந்த இடத்தில் அறுவர் இருந்தனர். அதில் ஒருவன் பாண்டு கோஷ்டியைச் சேர்ந்தவன். டமாரம் வாசிப்பவன் வளவளவென்று பேசினான், வேகமாகப் பேசினான். பேச விரும்பாத டெக்ஸாஸ் பிரதேச வாசிகள் மூவர். மற்ற இருவரும் மெக்ஸிகோவைச் சேர்ந்த ஆட்டுப்பண்ணைக்காரர்கள்.

இவர்கள் 'வேரி ஜென்டில்மன் சலூ'னில் பொதுவாகவே அதிகமாய்ப் பேசுவதில்லை.

விடுதிக்காரனுடைய நாய் கதவின் முன்பக்கத்தில் படுத்திருந்தது. அதன் தலை முன்னங்கால்கள் மீது பதிந்திருந்தது. தூங்கி வழிந்தாலும் திடீரென்று உதை கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது போல் ஜாக்கிரதையோடு இருந்தது அது. மணல் நிறைந்த தெருவுக்கப்பால் பசேலெனும் புல்வெளித்திட்டுக்கள் இருந்தன. அவை மிகக் கவர்ச்சிகரமாகக் காட்சியளித்தன. சூரிய வெப்பத்தால் சூடேறிய மணல்வெளிக்கு மிக அருகில் இருந்ததால் அவை உண்மையானவைகள்தானா என்ற ஒருவித ஐயத்தைக்கூடத் தோற்றுவித்தன. நாடகமேடைகளில் புல்வெளிபோல் தோன்றுவதற்குப் பயன்படுத்தும் புற்பாய்களைப்போலவே இருந்தன அவை. ரெயில்வே ஸ்டேஷனில் குளிர்ச்சியாக இருந்த ஒருபுறத்தில் கோட் இல்லாத ஒருவன் சாய்வு நாற்காலியில் அமர்ந்த வண்ணம் புகை பிடித்துக்கொண்டிருந்தான். ரியோ கிராண்டின் பிரதேசத்தின் எல்லைகள் நகரைச் சுற்றி ஓடியது. அதற்குப் பக்கத்தில் "மெஸ்குயிட்" மரங்கள் நிறைந்த ஒரு சமவெளி!

அந்த மதுபானக் கடையிலிருந்த வாயாடி டமாரக்காரனையும், அவனுடைய தோழர்களையும் தவிர, அந்தச் சமயம் 'எல்லோ ஸ்கை' ஊரே தூங்கி வழிந்தது. அவ்வளவு நிசப்தம் குடிகொண்டிருந்தது. டமாரக்காரன் ஊருக்குப் புதியவன். மது வழங்கும் பலகையில் சாய்ந்துகொண்டு ஒரு நாடோடிப் பாடகனைப்போல் உற்சாகத்துடன் கதை சொல்லிக்கொண்டிருந்தான்.

"பிறகு பீரோவைப் பற்றிக்கொண்டிருந்த அந்தக் கிழவன் கீழே விழுந்த அதே சமயம், கிழவி இரண்டு நிலக்கரிக் குழாய்களுடன் மேலே வந்து கொண்டிருந்தாள். வந்து உண்மையில்—" என்று அவன் கதை சொல்லிக்கொண்டிருந்தான்.

திறந்த கதவின் வழியாகத் திடீரென ஒரு இளைஞன் உள் வரவே அவனுடைய கதை தடைப்பட்டது. "ஸ்க்ராட்சி வில்ஸன் குடித்துவிட்டு இரண்டு கைகளையும் ஆட்டிக்கொண்டு வந்து கொண்டிருக்கிறான்" என்று அந்த இளைஞன் கத்தினான். இரண்டு மெக்ஸிகோக்காரர்களும் தங்கள் கையிலிருந்த கண்ணாடி



டம்ளரை பரபரப்புடன் கீழே வைத்துவிட்டு பின்வாசல் வழியே மறைந்தார்கள்.

டமாரக்காரன் ஒரு அப்பாவி மனிதன். ஹாஸ்யப் பேர்வழி. "இருக்கட்டும் வந்தால் வரட்டுமே. குடித்திருந்தால் என்ன? உள்ளேவந்து நீயும் கொஞ்சம் குடி" என்று வந்தவனை அழைத்தான்.

ஆனால் இளைஞன் விடுத்த அந்த அறிவிப்பு அந்த அறையிலுள்ள ஒவ்வொருவரிடையேயும், ஒரு அதிர்ச்சியை உண்டுபண்ணியிருந்தது. இதை டமாரக்காரன் சீக்கிரமே எல்லாவற்றிற்கும் மேலாக உணர்ந்தான். எல்லோரும் உடனே அமைதியாயினர் ஒன்றும் புரியாமல். "ஏன் இந்த மௌனம்? இதெல்லாம் என்ன?" என்று டமாரக்காரன் கேட்டான். அவனுடைய மூன்று தோழர்களும் ஒரு சிறந்த சொற்பொழிவுக்கு தங்களைத் தயார் செய்துகொள்வதுபோல் ஏதோ பேச வாயெடுத்தனர். ஆனால் கதவருகிலிருந்த அந்த இளைஞன் அவர்களை முந்திக்கொண்டான்.

"என்னவா? அதாவது, நண்பனே—அடுத்த இரண்டு மணி நேரத்திற்கு இந்த நகரத்தில் ஒருவரும் தலைகாட்டமுடியாது. உல்லாஸமாக இப்போது இருப்பதுபோல இருக்குமென்று எண்ண வேண்டாம்" என்று மதுபானக் கடைக்குள்ளே வந்து கொண்டே அந்த இளைஞன் சொன்னான். கடைக்காரன், கதவை இழுத்துக் குறுக்குக் கட்டைகளையும் உடனே போட்டான். ஜன்னல்களின் பலமான மரக்கதவுகளையும் கீழே இருந்து மூடினான். அந்த இடத்தில் ஒரு வியக்கத்தக்க அமைதி—மாதா கோவிலமைதி நிலவியது. டமாரக்காரனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒவ்வொருவரையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்தான்.

"சரி, இதெல்லாம் என்ன?" "ஒரு துப்பாக்கிச் சண்டை நடக்கப்போகிறதா?" "இல்லையே!" என்று அவன் கத்தினான்.

"சண்டையிருக்குமோ, இருக்காதோ—தெரியாது. ஆனால் எப்படியும் துப்பாக்கி வேட்டு நிச்சயம் நடக்கும். ஆமாம், துப்பாக்கி வேட்டு" என்று அவர்களில் ஒருவன் அழுத்தத்துடன் பதிலளித்தான். அவர்களை எச்சரித்த இளைஞன் கையை அசைத்தவாறே "சண்டை செய்ய யாருக்காவது இச்சையிருந்தால் குரூரமான சண்டை காத்திருக்கிறது. யார் வேண்டுமானாலும் வீதிக்குச் சென்று அவனுடன் சண்டையிடலாம். ஏன், இந்த நிமிஷத்தில் ஒரு சண்டை நிகழத்தான் போகிறது" என்றான்.

டமாரக்காரனுக்கு விஷயத்தைத் தெரிந்து கொள்ளவும் ஆவல். ஆபத்தில் அகப்பட்டுக்கொண்டு விடக்கூடாதே என்றும் பயம். என்ன செய்வது என்றறியாது தத்தளித்தான்.

"அவன் பேரென்னவென்று சொன்னாய்?"—அவன் கேட்டான்.

"ஸ்க்ராட்சி வில்ஸன்" என்று அவர்கள் ஒரே குரலில் பதிலளித்தனர்.

"அவன் எதிர்ப்படுபவன் எவனாயிருந்தாலும் அவனைக் கொன்று விடுவானோ? நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? வாரம் ஒரு முறையோ, அன்றியோ, அவன் அடிக்கடி இவ்வாறு சுற்றுவானோ? அந்தக் கதவையும் உடைத்து விடுவானோ?"

"இல்லை. அந்தக் கதவை அவனால் உடைக்கமுடியாது" என்று கடைக்காரன் உறுதியளித்தான். மூன்று முறை இதற்கு முன் அவன் முயன்றிருக்கிறான். நீ புது ஆள்; எதற்கும் அவன் இங்கே வரும்போது நீ குப்புற கீழே படுத்துக்கொள்ளுவது நல்லது. நிச்சயம் அவன் கதவை நோக்கிச் சுடுவான். ஒருவேளை ஒரு குண்டு அதன் வழியாக வரலாம்" என்று மேலும் அவன் அநுபவ பூர்வமான எச்சரிக்கையை முக்கியமாக டமாரக்காரனுக்கு விடுத்தான். அதற்குப் பின் டமாரக்காரன் கதவின் மேலேயே நினைவாக இருந்தான். அவன் கீழே படுக்க வேண்டிய நேரம் இன்னும் வரவில்லை. ஆனாலும் முன்னெச்சரிக்கையாக சுவரோரமாக நகர்ந்து கொண்டான். "எவனையாவது கொன்றுவிடுவானோ?" என்று மறுபடியும் கேட்டான். அதைக் கேட்டதும் அவர்களனைவரும் ஒரு அலட்சியச் சிரிப்பு சிரித்துக்கொண்டனர்.

"அவன் நிச்சயமாகச் சுடுவான். அவன் ஒரு காலிப்பயல். வம்புக்காரன். யாரையும் வலுச்சண்டைக்கிழுப்பான். அவனுடன் எவ்வித விவகாரமும் வைத்துக்கொள்ளுவது நல்லதல்ல," என்று ஒருவன் நிலைமையை விளக்கினான்.

"இத்தகைய சந்தர்ப்பத்தில் நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? என்ன செய்வீர்கள்?" என்று ஆவலாகக் கேட்டான் டமாரக்காரன்.

ஒருவன், "ஏன்? அவனும் ஜாக் பாட்டரும்" என்று ஏதோ ஒரு பழைய சம்பவத்தைப்பற்றி ஆரம்பித்தான்.

"ஆனால் ஜாக் பாட்டர்தான் சான் ஆன்டனில் இருக்கிறானே!" அனைவரும் ஒரே குரலில் கூறினர். "சரி, அவன் யார்? அவன் இதற்கென்ன செய்வான்?" "ஓ, அவன்தான் நகரத் தலைவன். இத்தகைய சமயங்களில் அவன் சென்று ஸ்க்ராட்சியுடன் சண்டையிடுவான்."

"ஓ, அப்படியா, அவனுக்கு நல்ல உத்தியோகந்தான்." புருவத்தை உயர்த்தியவண்ணம் டமாரக்காரன் வியப்புடன் சொன்னான்.

அவர்களுக்கிடையே பேச்சு குறைந்து வெறும் முணுமுணுப்பாக மாறியது. டமாரக்காரனுக்கு இன்னும் பயத்தினால் பல விஷயங்களைப்பற்றிக் கேட்க ஆவல். எதையாவது கேட்க முற்படுகையில் மற்றவர்கள் அவனை வெறுப்புடன் நோக்கி, பேசாதிருக்கும்படி சைகை செய்தனர். அவர்கள் ஏதோ ஒரு பயங்கர நிகழ்ச்சிக்காகக் காத்திருப்பது போன்ற அமைதி அங்கே நிலவியது. அறையின் இருளில், அவர்கள் கவனமெல்லாம் தெருவிலிருந்து தங்களை நோக்கி வந்த காலடியோசையிலேயே லயித்திருந்தது.



அவர்கள் கண்கள் ஒளிர்ந்தன. ஒருவன் கடைக்காரனை நோக்கி மூன்று தடவை ஏதோ சைகை செய்தான். பிசாசைப் போல நகர்ந்து வந்து, அவனிடம் ஒரு குப்பி மதுவையும், ஒரு "கிளாஸ்" டம்ளரையும் கடைக்காரன் தந்தான். அந்த மனிதன் டம்ளர் நிறைய விஸ்கியை ஊற்றிக்கொண்டு பாட்டிலை சப்தமின்றி கீழே வைத்தான். ஒரே மடக்கில் அவ்வளவு விஸ்கியைக் குடித்துவிட்டு, கதவை நோக்கி அமைதியான பார்வையைச் செலுத்தினான். கடைக்காரன் ஓசைப்படாது எழுந்து ஒரு வின்செஸ்டர் துப்பாக்கியை எடுத்து வைத்துக்கொண்டதை டமாரக்காரன் கவனித்தான். அவன் தனக்கு ஏதோ சைகை காட்டுவதை உணர்ந்து கட்டை விரல்களாலேயே நகர்ந்து அவனருகில் சென்றான்.

"நீ என்னுடன் கடைக்குப் பின்புறத்திற்கு வந்து விடுவது நலம்."

"வேண்டாம், நன்றி. பின் பக்கத்திற்கு சட்டென்று ஓடும்படி ஒரு இடத்திலிருந்தால் போதும்" என்றான் டமாரக்காரன். அவனுக்கு பயத்தால் வியர்த்துவிட்டது.

அதன்பின் கடைக்காரன் சைகை மூலமே ஏதோ தற்காப்புக்கான வகைகளைச் சொன்னான். டமாரக்காரனும், அவன் சொல்லியபடியே ஒரு பெட்டியின் மேல் உட்கார்ந்து கொண்டான். அவன் தலை, மது வழங்கும் பலகை மட்டத்திற்குக் கீழேயே இருந்தது. துத்தநாகத் தகடினாலும், செம்புத் தகடாலும் பந்தோபஸ்தாக்கப்பட்ட அந்த இடம் அவனுக்குக் கவசம் போன்று தோன்றியது. கடைக்காரனும் பக்கத்திலிருந்த மற்றொரு பெட்டியின் மீது சுகமாக உட்கார்ந்துகொண்டான்.

"ஸ்க்ராட்சி வில்ஸன் கையில் துப்பாக்கி இருந்துவிட்டால், அவனை ஒரு அற்புதம் என்றே கூறவேண்டும்; ஆமாம், அற்புதம்—அவன் சண்டையிட ஆரம்பித்ததும் பாதுகாப்பான இடங்களை நாம் தேடி ஒளிகிறோம். அது இயல்பு. இந்த நதியோரம், திரிந்தலைந்து கொண்டிருந்த ஒரு கலகக்கார கூட்டம் ஒன்றிருந்தது. அக்கூட்டத்தினருள் இவன்தான் இப்போது கடைசி ஆள். அவன் குடித்து போதையிலிருந்தால் எல்லோருக்கும் நடுக்கம்தான். சாதாரணமாக இருக்கும்போது அவன் நல்லவன்தான். 'ஒரு பூச்சியைக்கூட துன்புறுத்தமாட்டான். நகரத்திலேயே மிகவும் நல்லவனென்றே சொல்லிவிடலாம். ஆனால் அவன் குடித்துவிட்டு ஊர் திரிய ஆரம்பித்து விட்டால்—அவ்வளவுதான்" என்று கடைக்காரன் ஸ்க்ராட்சி வில்ஸனைப் பற்றி விளக்கமாகப் பேசினான். மெதுவாகக் கிசுகிசுத்தான்.

பிறகு அவர்களுக்கிடையே மௌனம். "ஜாக் பாட்டர் சான் ஆன்டனிலிருந்து திரும்பியிருந்து இந்தச் சமயத்தில் இங்கே இருக்க வேண்டும் என்பது என் ஆசை" என்றான் கடைக்காரன். "அவன் ஒரு முறை வில்ஸனின் காலில் சுட்டான். இந்தத் தடவை

அவனை நன்றாகக் கட்டிப்போட்டு அவன் கொட்டத்தை அடக்கி விடுவான்.''

அப்பொழுது தூரத்திலிருந்து வந்த ஒரு துப்பாக்கி வேட்டு சப்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து மூன்று பயங்கரக் கூக்குரல்கள் எழுந்தன. அங்கே இருட்டறையிலிருந்த அம்மனிதர்களிடையே கொஞ்சம் பரபரப்பு; காலடியோசை கேட்டுக்கொண்டிருந்தது. அவர்கள் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டனர். '' அவன் இதோ வந்துவிட்டான் '' என்றான் ஒருவன்.

## III

' எல்லோ ஸ்கை 'யின் பிரதான வீதியின் நடுவில் ஒரு மூலையிலிருந்து திரும்பி ஒருவன் வந்துகொண்டிருப்பது தெரிந்தது. கருஞ் சிவப்பு நிறத்தில் ஒரு கம்பளிச் சட்டை அணிந்திருந்தான்; திருவிழாக்களின்போது அணிந்துகொள்ளுவதற்காக வாங்கப்பட்டது அது. நியூ யார்க்கின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்த சில யூதப் பெண்களால் அவை பெரும்பாலும் தயாரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு கையிலும் நீளமான கருநீல ரிவால்வர் ஒன்றை அவன் வைத்திருந்தான். அடிக்கடி அவன் எழுப்பிய எக்களிப்பு மனித சஞ்சாரமற்ற ஒரு கிராமத்தில் கேட்பதுபோல தனித்து ஒலித்தது. அவன் கூக்குரலுக்கும், சாதாரண மனிதன் எழுப்பும் குரலுக்கும் எவ்வித ஒற்றுமையும் காணமுடியாது. அவனைச் சுற்றிலும் காணப்பட்ட அமைதியே ஒரு மண்டபத்தின் சுவர்கள்போல் அமைந்து அவன் குரல் அவற்றில் தாக்கி எதிரொலித்தது. நியூ இங்கிலாந்தின் மலைப்பகுதிகளில் வாழும் சிறுவர் மழைக்காலத்தில் அணிவதுபோன்ற சிவப்பு பூட்ஸுகளை அவன் அணிந்துகொண்டிருந்தான்.

அவனுடைய முகம் விஸ்கி மதுவினால் வெறியுடன் பிரகாசித்தது. கண்களில் கோபக் கனல் வீசிற்று. சண்டைக்கு யாரேனும் எதிர்ப்பட்டால் தான் பாதுகாப்பாகப் பதுங்கத் தக்க இடத்தைத் தேடிக்கொள்ள கதவுகளையும், ஜன்னல்களையும், கவனித்தபடியே இரவுப் பூனை போன்று பதுங்கிப் பதுங்கி நடந்தான். வாயில் வந்தபடி தனக்குத்தானே பேசிக்கொண்டான். இடையிடையே யாருக்கோ சவால் விட்டான். உறுமினான். அவன் இரும்புப் பிடியில் இருந்த நீண்ட ரிவால்வர்கள் இரண்டும் அவனுக்கு ஒரு துரும்பு போல் தோன்றின. அவ்வளவு அலட்சியமாய் மின்சாரத்தால் இயங்குவது போல அவ்வளவு வேகமுடன் அவன் அவற்றைக் கையாண்டான். இசைக்கருவி மீது ஒரு வித்வானின் விரல்கள் ஓடுவது போல் இவன் விரல்கள் துப்பாக்கி மீது விளையாடின. உடம்போடு ஒட்டி அவன் அணிந்திருந்த சட்டைக் காலரின் கீழ்ப் பாகத்திலிருந்து கழுத்துப் பட்டைகள் அவன் மூச்சு விடும்போதெல்லாம் குறுகி விரிந்து, அவன் உள்ளத்தில் பொங்கியெழுந்த



ஆத்திரத்தை வெளிப்படுத்தின. அவன் விடுத்த சவால்களை ஏற்க அங்கே ஒருவனுமில்லை. அவன் கூக்குரலையும், எக்காளத்தையும் தவிர வேறு எவ்வித ஓசையும் கேட்கப்படவில்லை. வீதியின் இரு மருங்கிலுமிருந்த வீடுகளில் இவனைப்பற்றி எவ்வித நினைப்புமில்லாமல் அமைதியே நிலவியது.

ஒருவனும் இவன் சவால்களை ஏற்கவில்லை. சண்டைக்கு முன் வரவில்லை, முன் வரவேயில்லை. அவன் வானத்தையும் நோக்கி சவால் விட்டுப் பார்த்தான். அவ்விடத்திலிருந்தும் ஒன்றும் பதில் கிடைக்கவில்லை. கையில் பிடித்திருந்த ரிவால்வர்களை நாலாபக்கத்திலும் சுழற்றி, சுழற்றி இரைந்தான்; கூச்சலிட்டான்; கர்ஜித்தான்.

' வேரி ஜெண்டில்மன் சலூ 'னின் சொந்தக்காரனுடைய நாய் இதையெல்லாம் ரசிக்கவில்லை. அதுகூட இவன் செயலைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. அது தன் யஜமானனுடைய கட்டட வாசற் கதவருகில் இன்னமும் அரைத் தூக்கத்தில் இருந்தது. நாயைக் கண்டதும் நின்று வேடிக்கையாக ரிவால்வரை அதன்முன் தூக்கிப் பிடித்தான். இதைக் கண்ட அந்த நாய் தன் தொங்கிய தலையுடன் குரைத்துக் கொண்டே அப்பால் நடந்தது. கூக்குரலிட்டு அதை விரட்டினான். அது ஓடத் தொடங்கிற்று. ஒரு குறுக்குச் சந்தினுள் நுழைந்து சென்ற போது ஒரு பலமான வேட்டுச் சப்தம் கேட்டு, ஏதோ வொன்று நேராக அதன் முன்னால் விழுந்தது. நாய் ஓலமிட்டது. பீதியடைந்து அங்கிருந்து திரும்பி ஓலமிட்டுக்கொண்டே வேறு திசையில் தலைதெறிக்க ஓட்டமெடுத்தது. மறுபடியும் இன்னொரு வேட்டு! நாயின் காதில் 'விர்' ரென்ற ஓசை! அதன் முன்னால் ஏதோ விழுந்து ஒரு பிடி மண்கூட சிதறிப் பறந்தது. பயந்து நடுங்கிய நாய் திரும்பிப் பெட்டியிலடைபட்ட மிருகம் போன்று எத்திசையிலும் போக முடியாமல் தத்தளித்தது. அது படும் அவஸ்தையைக் கண்டு இடுப்பின் மீது தன் ரிவால்வர்களை வைத்தபடியே அவன் சிரித்து மகிழ்ந்து கொண்டிருந்தான். அவனுடைய ஆத்திரத்தை தீர்த்துக்கொள்ள ஒரு நாயாவது அகப்பட்டதே என்ற திருப்தி போலும்.

அவ்விடம் விட்டகன்ற போது வேரி ஜென்டில்மன் சலூனின் சாத்தப்பட்டிருந்த கதவு அவன் கவனத்தைக் கவர்ந்தது. அங்கு சென்று ரிவால்வரால் கதவைத் தட்டி குடிக்க ஏதாவது கேட்டான்.

கதவு திறக்கப்படவில்லை. உட்புறத்திலிருந்தும் எவ்விதச் சலனமுமில்லை. தெருவில் கிடந்த ஒரு துண்டுக் காகிதத்தை எடுத்துக் கதவின் சட்டத்தில் கத்தியால் செதுக்கிப் பொருத்தினான். அலட்சிய பாவத்துடன் திரும்பித் தெருவின் எதிர்ப்பக்கத்திற்குப் போய் நின்று அங்கிருந்து சாத்தியிருந்த கதவை நோக்கி துண்டுக் காகிதத்தின் மேல் சுட்டான். அரையங்குலம் குறி தவறிவிட்டது. தன்னையே சபித்துக்கொண்டு அங்கிருந்து வெளியேறினான்.

ங்கை நாணத்துடன் கண்களில் ஆசை பொங்கக் கொஞ்சலாகக் கூறினாள். இக் காட்சியைக் கண்ட ஒரு பிரயாணி தன் சிரிப்பை அடக்கிக்கொள்ள அங்குள்ள ஒரு கண்ணாடியின் பக்கமாகத் திரும்பிக்கொள்ள வேண்டியிருந்தது.

கடைசியில் அவர்கள் அந்த ரெயிலிலேயே இருந்த உணவுப் பெட்டிக்கு பகல் உணவுக்காகச் சென்றனர். தூய வெள்ளுடையிலிருந்த நீக்ரோ வேலையாட்கள் இரு வரிசைகளில் நின்று இவர்கள் உள்ளே நுழைந்தபொழுது ஆடம்பரமாக வரவேற்றனர். அவர்கள் பார்வையில் இத் தம்பதியின் வருகையை முன்கூட்டியே எதிர்பார்த்திருந்தனர் என்ற பாவம் தொனித்தது. இவர்களை அழைத்துச் சென்று உணவு வழங்கும் வாய்ப்பு அவர்களில் ஒருவனுக்குக் கிடைத்தது. அதில் அவனுக்கு ஒரு மகிழ்ச்சி! ஒரு தந்தையைப் போன்ற பரிவுடன் அவர்களை உபசரித்தான். அவனது முகத்தில் பெருந்தன்மையின் ஒளிவீசியது. சாதாரணமாகக் காட்டவேண்டிய மரியாதையோடு அவனாக உரிமை பாராட்டிக்கொண்டு அவர்களை விசேஷமாக கவனித்தது அவர்களுக்கு ஏதோ ஒரு மாதிரி இருந்தது. ஆகவே கணவனும், மனைவியும் உணவு அறையை விட்டு தங்கள் இடத்திற்குத் திரும்பியதும் ஒரு இக்கட்டான நிலையிலிருந்து எப்படியோ தப்பித்து வந்துவிட்டோமென்ற உணர்ச்சியுடனேதான் அமர்ந்தனர்.

இடது புறமிருந்த பழுப்பு நிறமான பெரிய மலைச் சரிவுகளில் வெண்பனி இலேசாகப் படர்ந்திருந்தது. ரெயில் வண்டி வேகமாக ஓடத்தொடங்கியது. இப்போது அவர்கள் ''ரையோகிராண்டி'' என்னும் பிரதேசத்தைத் தாண்டிச் சென்றுகொண்டிருந்தனர். இந்தப் பிராந்தியத்தின் கோடியில்தான் எல்லோ ஸ்கை என்னும் ஊர் இருக்கிறது. அதுதான் அவர்கள் சேரவேண்டிய இடம்.

எல்லோ ஸ்கை கிட்டே நெருங்க நெருங்க கணவன் பரபரப்படைவது நன்றாகத் தெரிந்தது. ஊர் நெருங்குவதற்கும், அவன் பரபரப்பு அதிகரிப்பதற்கும் ஒருவிதத்தொடர்பு இருப்பதுபோலக் கூடத் தோன்றியது. அவனது செங்கல் நிறச் சிவப்பான கைகளை ஜேபியில் திணித்துக்கொண்டான். பிறகு வெளியிலெடுத்தான். இப்படிப் பலதடவை செய்தான். சிலவேளை மணப்பெண் முன்னால் குனிந்து அவளிடம் பேசியபொழுது அவன் அதைக்கூட கவனியாமல் கவனத்தை எங்கோ விட்டிருந்தான்.

உண்மையைச் சொல்ல வேண்டுமானால் தான் செய்த ஒரு காரியத்தின் சாயல், ஒரு குற்றவாளியின் குற்றத்தைப் போல, தன்மீது படருவதை ஜாக் பாட்டர் அப்பொது உணர்ந்தான். ஒரு ஈயக்குண்டு தன்மீது விழுந்து தன்னை அழுத்தினால் எவ்வாறு இருக்குமோ அவ்வித உணர்ச்சியை அது அவன்பால் ஏற்படுத்தியது. ''எல்லோ ஸ்கை'' என்னும் ஊரின் ''டவுன் மார்ஷல்'' என்னும் பிரதான அதிகாரி அவன். அந்த ஊரில் எல்லோருக்கும் தெரிந்தவன் அவன். எல்லோராலும் நேசிக்கப்படுபவன்.



எல்லோருக்கும் அவனிடம் ஒருவித பயம்கூட. இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இம்மனிதன், தான் காதலித்ததாக எண்ணிய ஒரு பெண்ணைச் சந்திக்க சான் அன்டோனியோவுக்குச் சென்றான். மாதா கோவிலில் வழக்கமான தொழுகைக்குப் பின்னர், தன்னை மணந்துகொள்ளுமாறு அவளைத் தூண்டினான். அவளும் இணங்கினாள். மணம் முடித்துக் கொண்டனர். இவ்விஷயத்தில் அவன் ''எல்லோ ஸ்கை''யில் உள்ள ஒருவரிடம் கூட யோசனை கேட்கவில்லை. தன் திருமணத்தைப் பற்றி ஏதும் அறியாத—என்றுமே தன்னைப்பற்றி எவ்விதத்திலும் சந்தேகிக்காத ஒரு சமூகத்தின்முன் தன் மனைவியை முன்னறிவிப்பின்றி இப்போது அழைத்துக் கொண்டு வருகிறான். இந்தச் செய்கையில் உள்ள பண்புக் குறைவை அவன் இப்போது உணரத் தொடங்கினான்.

எல்லோ ஸ்கையின் மக்கள் தாங்கள் விரும்பியபொழுது தமது சமூக வழக்கப்படி மணம் செய்துகொண்டனர். மற்றவர்களுக்குத் தெரியப்படுத்தி ஆடம்பரமாகவும் செய்துகொண்டனர். விளம்பரமின்றியும் சில சமயம் செய்து கொண்டனர். ஆனால் பாட்டருக்கு மட்டும், தன்னுடைய நண்பர்களுக்குத் தான் செய்யவேண்டிய கடமையைச் செய்யத் தவறிவிட்டது போலவும், சமூகத்தினர்கள் கூட தன்னிடம் எதிர்பார்த்தபடி தான் நடந்துகொள்ளாதது போலவும், வெளிப்படையாகச் சொல்லாமல் போனாலும்-ஒருவித சமூகப் பண்பாட்டுக்குட்பட்டுத் தான் நடந்துகொள்ளாதது போலவும் உணர்ச்சி ஏற்பட்டு வதைக்கத் தொடங்கியது. தான் ஒரு மகத்தான குற்றம் புரிந்து விட்டது போன்றே எண்ணத் தொடங்கிவிட்டான். இந்தப் பெண்ணை நேருக்கு நேர் சான் அன்டோனியோவில்தான் முதல் தடவையாகப் பார்த்தான். உணர்ச்சியின் வேகத்தால் தூண்டப்பட்டு சமூகக் கட்டுப்பாடுகளைத்தையும் ஒரு மூச்சில் புறக்கணித்து விட்டான். சான் அன்டோனியோவில் அவனை ஒருவனுக்கும் தெரியாது. இருளில் நடமாடும் மனிதனுக்கொப்பாக இருந்தான். அந்தத் தூரமான நகரத்தில், நண்பனுக்குரிய எவ்விதக் கடமையையும், அவன் எளிதில் உதறித் தள்ளிவிட முடிந்தது. எவ்வித ஆடம்பரத்தையோ, வெளி வேஷத்தையோ மேற்கொள்ளத் தேவைப்படவில்லை. ஆனால் இங்கே ''எல்லோ ஸ்கை''யில் நிலைமை வேறு. இப்போது இருளை விட்டுப் பட்டப் பகலிலல்லவா இவன் நடமாட வேண்டியிருக்கிறது. ஊரும் மிக அண்மையில் வந்துகொண்டிருந்தது.

தன்னுடைய திருமணம் அவ்வூரில் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகக் கருதப்படும் என்று அவனுக்கு நன்றாகத் தெரியும். இதைவிட ரஸமாக ஏதாவது சொல்லவேண்டுமானால் நேற்று புதிதாய்த் திறந்த ஹோட்டல் இன்று எரிந்துபோயிற்று என்று வேண்டுமானால் சொல்லலாம். எனவே ரகசியமாக அவன் செய்துகொண்ட திருமணத்திற்காக அவனது நண்பர்கள் அவனை மன்னிக்க முடியாது. இந்நிகழ்ச்சியைத் தந்தி மூலம் அவர்களுக்குத் தெரிவித்து விட

வ்கை நாணத்துடன் கண்களில் ஆசை பொங்கக் கொஞ்சலாகக் கூறினாள். இக் காட்சியைக் கண்ட ஒரு பிரயாணி தன் சிரிப்பை அடக்கிக்கொள்ள அங்குள்ள ஒரு கண்ணாடியின் பக்கமாகத் திரும்பிக்கொள்ள வேண்டியிருந்தது.

கடைசியில் அவர்கள் அந்த ரெயிலிலேயே இருந்த உணவுப் பெட்டிக்கு பகல் உணவுக்காகச் சென்றனர். தூய வெள்ளுடையிலிருந்த நீக்ரோ வேலையாட்கள் இரு வரிசைகளில் நின்று இவர்கள் உள்ளே நுழைந்தபொழுது ஆடம்பரமாக வரவேற்றனர். அவர்கள் பார்வையில் இத் தம்பதியின் வருகையை முன்கூட்டியே எதிர்பார்த்திருந்தனர் என்ற பாவம் தொனித்தது. இவர்களை அழைத்துச் சென்று உணவு வழங்கும் வாய்ப்பு அவர்களில் ஒருவனுக்குக் கிடைத்தது. .அதில் அவனுக்கு ஒரு மகிழ்ச்சி! ஒரு தந்தையைப் போன்ற பரிவுடன் அவர்களை உபசரித்தான். அவனது முகத்தில் பெருந்தன்மையின் ஒளிவீசியது. சாதாரணமாகக் காட்டவேண்டிய மரியாதையோடு அவனாக உரிமை பாராட்டிக்கொண்டு அவர்களை விசேஷமாக கவனித்தது அவர்களுக்கு ஏதோ ஒரு மாதிரி இருந்தது. ஆகவே கணவனும், மனைவியும் உணவு அறையை விட்டு தங்கள் இடத்திற்குத் திரும்பியதும் ஒரு இக்கட்டான நிலையிலிருந்து எப்படியோ தப்பித்து வந்துவிட்டோமென்ற உணர்ச்சியுடனேதான் அமர்ந்தனர்.

இடது புறமிருந்த பழுப்பு நிறமான பெரிய மலைச் சரிவுகளில் வெண்பனி இலேசாகப் படர்ந்திருந்தது· ரெயில் வண்டி வேகமாக ஓடத்தொடங்கியது. இப்போது அவர்கள் ''ரையோகிராண்டி'' என்னும் பிரதேசத்தைத் தாண்டிச் சென்றுகொண்டிருந்தனர். இந்தப் பிராந்தியத்தின் கோடியில்தான் எல்லோ ஸ்கை என்னும் ஊர் இருக்கிறது. அதுதான் அவர்கள் சேரவேண்டிய இடம்.

எல்லோ ஸ்கை கிட்டே நெருங்க நெருங்க கணவன் பரபரப்படைவது நன்றாகத் தெரிந்தது. ஊர் நெருங்குவதற்கும், அவன் பரபரப்பு அதிகரிப்பதற்கும் ஒருவிதத்தொடர்பு இருப்பதுபோலக் கூடத் தோன்றியது. அவனது செங்கல் நிறச் சிவப்பான கைகளை ஜேபியில் திணித்துக்கொண்டான். பிறகு வெளியிலெடுத்தான். இப்படிப் பலதடவை செய்தான். சிலவேளை மணப்பெண் முன்னால் குனிந்து அவளிடம் பேசியபொழுது அவன் அதைக்கூட கவனியாமல் கவனத்தை எங்கோ விட்டிருந்தான்.

உண்மையைச் சொல்ல வேண்டுமானால் தான் செய்த ஒரு காரியத்தின் சாயல், ஒரு குற்றவாளியின் குற்றத்தைப் போல, தன்மீது படருவதை ஜாக் பாட்டர் அப்பொழுது உணர்ந்தான். ஒரு ஈயக்குண்டு தன்மீது விழுந்து தன்னை அழுத்தினால் எவ்வாறு இருக்குமோ அவ்வித உணர்ச்சியை அது அவன்பால் ஏற்படுத்தியது. '' எல்லோ ஸ்கை '' என்னும் ஊரின் '' டவுன் மார்ஷல் '' என்னும் பிரதான அதிகாரி அவன். அந்த ஊரில் எல்லோருக்கும் தெரிந்தவன் அவன். எல்லோராலும் நேசிக்கப்படுபவன்.



எல்லோருக்கும் அவனிடம் ஒருவித பயம்கூட. இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இம்மனிதன், தான் காதலித்ததாக எண்ணிய ஒரு பெண்ணைச் சந்திக்க சான் அன்டோனியோவுக்குச் சென்றான். மாதா கோவிலில் வழக்கமான தொழுகைக்குப் பின்னர், தன்னை மணந்துகொள்ளுமாறு அவளைத் தூண்டினான். அவளும் இணங்கினாள். மணம் முடித்துக் கொண்டனர். இவ்விஷயத்தில் அவன் '' எல்லோ ஸ்கை ''யில் உள்ள ஒருவரிடம் கூட யோசனை கேட்கவில்லை. தன் திருமணத்தைப் பற்றி ஏதும் அறியாத—என்றுமே தன்னைப்பற்றி எவ்விதத்திலும் சந்தேகிக்காத ஒரு சமூகத்தின்முன் தன் மனைவியை முன்னறிவிப்பின்றி இப்போது அழைத்துக் கொண்டு வருகிறான். இந்தச் செய்கையில் உள்ள பண்புக் குறைவை அவன் இப்போது உணரத் தொடங்கினான்.

எல்லோ ஸ்கையின் மக்கள் தாங்கள் விரும்பியபொழுது தமது சமூக வழக்கப்படி மணம் செய்துகொண்டனர். மற்றவர்களுக்குத் தெரியப்படுத்தி ஆடம்பரமாகவும் செய்துகொண்டனர். விளம்பரமின்றியும் சில சமயம் செய்து கொண்டனர். ஆனால் பாட்டருக்கு மட்டும், தன்னுடைய நண்பர்களுக்குத் தான் செய்யவேண்டிய கடமையைச் செய்யத் தவறிவிட்டது போலவும், சமூகத்தினர்கள் கூட தன்னிடம் எதிர்பார்த்தபடி தான் நடந்துகொள்ளாதது போலவும், வெளிப்படையாகச் சொல்லாமல் போனாலும்-ஒருவித சமூகப் பண்பாட்டுக்குட்பட்டுத் தான் நடந்துகொள்ளாதது போலவும் உணர்ச்சி ஏற்பட்டு வதைக்கத் தொடங்கியது. தான் ஒரு மகத்தான குற்றம் புரிந்து விட்டது போன்றே எண்ணத் தொடங்கிவிட்டான். இந்தப் பெண்ணை நேருக்கு நேர் சான் அன்டோனியோவில்தான் முதல் தடவையாகப் பார்த்தான். உணர்ச்சியின் வேகத்தால் தூண்டப்பட்டு சமூகக் கட்டுப்பாடுகளனைத்தையும் ஒரு மூச்சில் புறக்கணித்து விட்டான். சான் அன்டோனியோவில் அவனை ஒருவனுக்கும் தெரியாது. இருளில் நடமாடும் மனிதனுக்கொப்பாக இருந்தான். அந்தத் தூரமான நகரத்தில், நண்பனுக்குரிய எவ்விதக் கடமையையும், அவன் எளிதில் உதறித் தள்ளிவிட முடிந்தது. எவ்வித ஆடம்பரத்தையோ, வெளி வேஷத்தையோ மேற்கொள்ளத் தேவைப்படவில்லை. ஆனால் இங்கே '' எல்லோ ஸ்கை ''யில் நிலைமை வேறு. இப்போது இருளை விட்டுப் பட்டப் பகலிலல்லவா இவன் நடமாட வேண்டியிருக்கிறது. ஊரும் மிக அண்மையில் வந்துகொண்டிருந்தது.

தன்னுடைய திருமணம் அவ்வூரில் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகக் கருதப்படும் என்று அவனுக்கு நன்றாகத் தெரியும். இதைவிட ரஸமாக ஏதாவது சொல்லவேண்டுமானால் நேற்று புதிதாய்த் திறந்த ஹோட்டல் இன்று எரிந்துபோயிற்று என்று வேண்டுமானால் சொல்லலாம். எனவே ரகசியமாக அவன் செய்துகொண்ட திருமணத்திற்காக அவனது நண்பர்கள் அவனை மன்னிக்க முடியாது. இந்நிகழ்ச்சியைத் தந்தி மூலம் அவர்களுக்குத் தெரிவித்து விட

லாமா என்று அடிக்கடி எண்ணினான். ஆனால் ஒருவித கோழைத் தனம் அவனைச் சூழ்ந்து கொண்டது. அவன் அவ்வாறு செய்யப் பட்டான். ஆனால் இப்போதோவெனில் அந்த ரெயில் வண்டி அவன் ஊருக்கு அழைத்துச் சென்றது. ஊரை அடைந்ததும் தன்னை ஆச்சரியத்தோடும், ஆனந்தத்தோடும், மனத்தாங்கலுட னும் நோக்கும் சமூகத்தை அல்லவா அவன் எதிர்நோக்கவேண்டும். தன்னை நோக்கி ஓடிவரும் இடங்களை ஜன்னல் வழியாகக் கவனித் தான், அவை மங்கலாகத் தெரிந்தன.

"எல்லோ ஸ்கை"யில் ஒருவித பாண்டு கோஷ்டி இருந்தது. அவர்கள் அதைக் கர்ணகடூரமாக வாசிக்குந்தோறும் அங்குள்ள மக்கள் ஆனந்தத்தில் மூழ்குவர். அதை நினைத்து அவன் ஒரு வறட்டுச் சிரிப்பு சிரித்தான். அந்த ஊர் மக்கள் இவன் தன் மனைவியுடன் வருவதை முன்னாடியே அறிந்திருந்தால் ரெயில் நிலையத்துக்கு வந்து, வாத்தியங்கள் முழங்க மகிழ்ச்சியுடன் வாழ்த்துக்கூறி அவனுடைய செங்கல் வீட்டிற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்வார்களே! ஆனால் இப்போது!

ரெயில் நிலையத்திலிருந்து வீடுவரையுள்ள பிரயாணத்தை எப்படியாவது மிகத்துரிதமாக ஒரு சாதாரண மனிதன் போல் ஒருவர் கண்ணிலும் படாமல் முடித்துவிட வேண்டும் எனத் தீர் மானித்துக் கொண்டான். அவனது வீட்டை எப்படியாவது அடைந்துவிட்டால் கோட்டையின் பாதுகாப்பிற்குள் வந்துவிட் டது போன்று அவன் நிம்மதியடைவான். அங்கிருந்து கொண்டு ஊரில் எந்தவிதமாகவாவது விஷயத்தைத் தெரியப்படுத்திக் கொள்ளலாம்! அவசியமானால் மக்களது பரபரப்பு சற்றுக் குறை யும்வரை அவர்களிடமிருந்து சற்று விலகிக்கூட இருக்கலாம்!

அவன் மனத்தில் உள்ள சிந்தனைகளை அவள் எப்படி அறிவாள்! அவனை ஆவலுடன் உற்று நோக்கி, "எதை நினைத்துக் கவலைப்படு கிறாய் ஜாக்?" என்று அவள் கேட்டாள். அவன் மறுபடியும் சிரித்தான். "நான் எதை நினைத்தும் மனத்தை அலட்டிக் கொள்ளவில்லை பெண்ணே. நான், என் ஊர் "எல்லோ ஸ்கை"யை நினைத்துக்கொண்டேன். வேறொன்றுமில்லை," என்று மழுப்பினான். அவள் அதைப் புரிந்துகொண்டு நாணங்கொண்டாள்.

ஏதோ தவறு செய்துவிட்ட உணர்வு இருவர் மனத்திலும் பரவி இனிய மென்மையுணர்வை வளர்த்தது. ஒருவரையொரு வர் கனிவுடன் பார்த்துக்கொண்டனர். ஆனால் பாட்டர் மட்டும் அந்த வறட்டுச் சிரிப்பைச் சிரித்தான். பெண்ணின் முகத்தில் நாணம் நிரந்தரமாகக் குடிகொண்டது.

"எல்லோ ஸ்கை"யின் உணர்ச்சிகளை புறக்கணித்தவன் ரெயில் வேகமாகச் செல்லும் நிலத்தோற்றத்தைக் கவனித்தான். "நமது ஊருக்குப் பக்கமாக வந்துவிட்டோம்" என்று அவன் கூறினான்.

அதே சமயம் அந்த நீக்ரோ பணியாள் பாட்டரின் ஊர்



நெருங்கிவிட்டது என அறிவித்தான். அப்போது மட்டும் என் னவோ தான் உயர்ந்தவன் என்ற நினைப்பு ஒழிந்துபோய் கையில் பிரஷ் ஒன்றை வைத்துக்கொண்டு அவன் ஜாக் பாட்டர் முன் நின் றான். பாட்டர் அப்படியும், இப்படியுமாகச் சற்றுத் திரும்ப அவன் அப்பிரஷ்ஷினால் பாட்டரின் புது உடையைத் துடைத்து விட்டான். மற்றவர்கள் செய்வதைப் பார்த்துப் பாட்டரும் ஒரு நாணயத்தை எடுத்து அவனுக்கு இனாம் வழங்கினான். குதிரைக்கு முதன் முதலாக லாடம் அடிப்பதைப்போல் பாட்டரின் சட்டையை 'பிரஷ்'ஷால் துடைப்பது அவ்வளவு வேலை வாங்கிற்று.

ரெயில் வேகம் குறையத் தலைப்பட்டு பிளாட்பாரத்துக்குச் செல்லுகையில் அவர்களுடைய பையை போர்ட்டர் எடுத்துக் கொண்டான். அப்பொழுது அந்த இரண்டு 'என்ஜின்களும், அதைத் தொடர்ந்து ரெயில் பெட்டிகளும் "எல்லோ ஸ்கை"யின் ரெயில் நிலையத்துக்குள் நுழைந்தன.

"ரெயில் என்ஜின்கள் இங்கு தண்ணீர் பிடித்துக் கொள்ள வேண்டும்" என, மரணச் செய்தியை அறிவிப்பவன்போல் தொண்டை அடைக்க, துக்கம் கலந்த குரலில் பாட்டர் சொன் னான். ரெயில் நிற்குமுன்பே, அவனது கண்கள் பிளாட்பாரம் முழுவதும் தன் பார்வையைச் செலுத்தின. சற்று ஆத்திரத் தோடும், ஆவலோடும் தண்ணீர்த் தாங்கியை நோக்கிச் சென்று கொண்டிருந்த "ஸ்டேஷன் ஏஜெண்டைத்"த் தவிர வேறு ஒரு வரும் இல்லாததைக் கண்டு ஆச்சரியப்பட்டாலும் அதிகமாக மன மகிழ்ந்தான். ரெயில் நின்றவுடன் போர்ட்டர் முதலில் இறங்கி நடக்க ஆரம்பித்தான். பிறகு மணமகனும், மணப்பெண்ணும் இறங்குவதற்கு வசதியாக ஒரு மரப்பலகையை கதவுக்கு நேராக நகர்த்திவைத்தான்.

"இறங்கி வா, பெண்ணே" என்று பாட்டர் சிறிது கம்மிய குரலில் அழைத்தான். அவள் இறங்குவதற்கு அவன் உதவி செய்த பொழுது இருவரும் அர்த்தமில்லாமல் சிரித்துக்கொண்ட னர். அவன் நீக்ரோவிடமிருந்து பையைப் பெற்றுக்கொண்டு அவளைத் தன் கையைப் பிடித்துக் கொண்டு தன்னையொட்டியே வருமாறு அழைத்தான். திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு அவர்கள் வேகமாகப் போகும்போது, "ஸ்டேஷன் ஏஜெண்ட்" தூரத்திலுள்ள சாமான்கள் வண்டியிலிருந்து இரண்டு டிரங்குப் பெட்டிகளை இறக்கிவிட்டு, ஏதோ சைகை செய்து கொண்டே தன்னை நோக்கி வருவதைப் பாட்டர் உணர்ந்தான். அவன் சிரித் தான். அவனது மகிழ்ச்சிக்குரிய திருமணம் "எல்லோ ஸ்கை"யில் உண்டாக்கிய முதல் விளைவைப் பார்த்து ஒரு வறட்டுச் சிரிப்பு மட்டும் சிரித்தான். ஒன்றும் பேசவில்லை. தனது மனைவியின் கையை இறுக்கித் தன்னுடன் சேர்த்துக்கொண்டு மேலே நடந் தான். அவர்கள் நடையில் ஒரு வேகம். அவர்களுக்குப் பின் புறம் போர்ட்டர் சும்மா சூள்கொட்டிக்கொண்டு நின்றான்.

## II

' தென் பகுதி ரெயில்வேயைச் சேர்ந்த கலிபோர்னியா எக்ஸ்பிரஸ் இன்னும் இருபத்தோரு நிமிடங்களில் "எல்லோ ஸ்கை" ஸ்டேஷனை அடையும். "வேரி ஜென்டில்மன் சலூன்" என்று மதுபானம் வழங்கும் அந்த இடத்தில் அறுவர் இருந்தனர். அதில் ஒருவன் பாண்டு கோஷ்டியைச் சேர்ந்தவன். டமாரம் வாசிப்பவன் வளவளவென்று பேசினான், வேகமாகப் பேசினான். பேச விரும்பாத டெக்ஸாஸ் பிரதேச வாசிகள் மூவர். மற்ற இருவரும் மெக்ஸிகோவைச் சேர்ந்த ஆட்டுப்பண்ணைக்காரர்கள்.

இவர்கள் 'வேரி ஜென்டில்மன் சலூ'னில் பொதுவாகவே அதிகமாய்ப் பேசுவதில்லை.

விடுதிக்காரனுடைய நாய் கதவின் முன்பக்கத்தில் படுத்திருந்தது. அதன் தலை முன்னங்கால்கள் மீது பதிந்திருந்தது. தூங்கி வழிந்தாலும் திடீரென்று உதை கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது போல் ஜாக்கிரதையோடு இருந்தது அது. மணல் நிறைந்த தெருவுக்கப்பால் பசேலெனும் புல்வெளித்திட்டுக்கள் இருந்தன. அவை மிகக் கவர்ச்சிகரமாகக் காட்சியளித்தன. சூரிய வெப்பத்தால் சூடேறிய மணல்வெளிக்கு மிக அருகில் இருந்ததால் அவை உண்மையானவைகள்தானா என்ற ஒருவித ஐயத்தைக்கூடத் தோற்றுவித்தன. நாடகமேடைகளில் புல்வெளிபோல் தோன்றுவதற்குப் பயன்படுத்தும் புற்பாய்களைப்போலவே இருந்தன அவை. ரெயில்வே ஸ்டேஷனில் குளிர்ச்சியாக இருந்த ஒருபுறத்தில் கோட் இல்லாத ஒருவன் சாய்வு நாற்காலியில் அமர்ந்த வண்ணம் புகை பிடித்துக்கொண்டிருந்தான். ரியோ கிராண்டின் பிரதேசத்தின் எல்லைகள் நகரைச் சுற்றி ஓடியது. அதற்குப் பக்கத்தில் "மெஸ்குயிட்" மரங்கள் நிறைந்த ஒரு சமவெளி!

அந்த மதுபானக் கடையிலிருந்த வாயாடி டமாரக்காரனையும், அவனுடைய தோழர்களையும் தவிர, அந்தச் சமயம் 'எல்லோ ஸ்கை' ஊரே தூங்கி வழிந்தது. அவ்வளவு நிசப்தம் குடிகொண்டிருந்தது. டமாரக்காரன் ஊருக்குப் புதியவன். மது வழங்கும் பலகையில் சாய்ந்துகொண்டு ஒரு நாடோடிப் பாடகனைப்போல் உற்சாகத்துடன் கதை சொல்லிக்கொண்டிருந்தான்.

"பிறகு பீரோவைப் பற்றிக்கொண்டிருந்த அந்தக் கிழவன் கீழே விழுந்த அதே சமயம், கிழவி இரண்டு நிலக்கரிக் குழாய்களுடன் மேலே வந்து கொண்டிருந்தாள். வந்து உண்மையில்—" என்று அவன் கதை சொல்லிக்கொண்டிருந்தான்.

திறந்த கதவின் வழியாகத் திடீரென ஒரு இளைஞன் உள் வரவே அவனுடைய கதை தடைப்பட்டது. "ஸ்க்ராட்சி வில்ஸன் குடித்துவிட்டு இரண்டு கைகளையும் ஆட்டிக்கொண்டு வந்து கொண்டிருக்கிறான்" என்று அந்த இளைஞன் கத்தினான். இரண்டு மெக்ஸிகோக்காரர்களும் தங்கள் கையிலிருந்த கண்ணாடி



டம்ளரை பரபரப்புடன் கீழே வைத்துவிட்டு பின்வாசல் வழியே மறைந்தார்கள்.

டமாரக்காரன் ஒரு அப்பாவி மனிதன். ஹாஸ்யப் பேர்வழி. "இருக்கட்டும் வந்தால் வரட்டுமே. குடித்திருந்தால் என்ன? உள்ளேவந்து நீயும் கொஞ்சம் குடி" என்று வந்தவனை அழைத்தான்.

ஆனால் இளைஞன் விடுத்த அந்த அறிவிப்பு அந்த அறையிலுள்ள ஒவ்வொருவரிடையேயும், ஒரு அதிர்ச்சியை உண்டுபண்ணியிருந்தது. இதை டமாரக்காரன் சீக்கிரமே எல்லாவற்றிற்கும் மேலாக உணர்ந்தான். எல்லோரும் உடனே அமைதியாயினர் ஒன்றும் புரியாமல். "ஏன் இந்த மௌனம்? இதெல்லாம் என்ன?" என்று டமாரக்காரன் கேட்டான். அவனுடைய மூன்று தோழர்களும் ஒரு சிறந்த சொற்பொழிவுக்கு தங்களைத் தயார் செய்துகொள்வதுபோல் ஏதோ பேச வாயெடுத்தனர். ஆனால் கதவருகிலிருந்த அந்த இளைஞன் அவர்களை முந்திக்கொண்டான்.

"என்னவா? அதாவது, நண்பனே—அடுத்த இரண்டு மணி நேரத்திற்கு இந்த நகரத்தில் ஒருவரும் தலைகாட்டமுடியாது. உல்லாஸமாக இப்போது இருப்பதுபோல இருக்குமென்று எண்ண வேண்டாம்" என்று மதுபானக் கடைக்குள்ளே வந்து கொண்டே அந்த இளைஞன் சொன்னான். கடைக்காரன், கதவை இழுத்துக் குறுக்குக் கட்டைகளையும் உடனே போட்டான். ஜன்னல்களின் பலமான மரக்கதவுகளையும் கீழே இருந்து மூடினான். அந்த இடத்தில் ஒரு வியக்கத்தக்க அமைதி—மாதா கோவிலமைதி நிலவியது. டமாரக்காரனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒவ்வொருவரையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்தான்.

"சரி, இதெல்லாம் என்ன?" "ஒரு துப்பாக்கிச் சண்டை நடக்கப்போகிறதா?" "இல்லையே!" என்று அவன் கத்தினான்.

"சண்டையிருக்குமோ, இருக்காதோ—தெரியாது. ஆனால் எப்படியும் துப்பாக்கி வேட்டு நிச்சயம் நடக்கும். ஆமாம், துப்பாக்கி வேட்டு" என்று அவர்களில் ஒருவன் அழுத்தத்துடன் பதிலளித்தான். அவர்களை எச்சரித்த இளைஞன் கையை அசைத்தவாறே "சண்டை செய்ய யாருக்காவது இச்சையிருந்தால் குரூரமான சண்டை காத்திருக்கிறது. யார் வேண்டுமானாலும் வீதிக்குச் சென்று அவனுடன் சண்டையிடலாம். ஏன், இந்த நிமிஷத்தில் ஒரு சண்டை நிகழத்தான் போகிறது" என்றான்.

டமாரக்காரனுக்கு விஷயத்தைத் தெரிந்து கொள்ளவும் ஆவல். ஆபத்தில் அகப்பட்டுக்கொண்டு விடக்கூடாதே என்றும் பயம். என்ன செய்வது என்றறியாது தத்தளித்தான்.

"அவன் பேரென்னவென்று சொன்னாய்?"—அவன் கேட்டான்.

"ஸ்க்ராட்சி வில்ஸன்" என்று அவர்கள் ஒரே குரலில் பதிலளித்தனர்.

"அவன் எதிர்ப்படுபவன் எவனாயிருந்தாலும் அவனைக் கொன்று விடுவானோ? நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? வாரம் ஒரு முறையோ, அன்றியோ, அவன் அடிக்கடி இவ்வாறு சுற்றுவானோ? அந்தக் கதவையும் உடைத்து விடுவானோ?"

"இல்லை. அந்தக் கதவை அவனால் உடைக்கமுடியாது" என்று கடைக்காரன் உறுதியளித்தான். மூன்று முறை இதற்கு முன் அவன் முயன்றிருக்கிறான். நீ புது ஆள்; எதற்கும் அவன் இங்கே வரும்போது நீ குப்புற கீழே படுத்துக்கொள்ளுவது நல்லது. நிச்சயம் அவன் கதவை நோக்கிச் சுடுவான். ஒருவேளை ஒரு குண்டு அதன் வழியாக வரலாம்" என்று மேலும் அவன் அநுபவ பூர்வமான எச்சரிக்கையை முக்கியமாக டமாரக்காரனுக்கு விடுத்தான். அதற்குப் பின் டமாரக்காரன் கதவின் மேலேயே நினைவாக இருந்தான். அவன் கீழே படுக்க வேண்டிய நேரம் இன்னும் வரவில்லை. ஆனாலும் முன்னெச்சரிக்கையாக சுவரோரமாக நகர்ந்து கொண்டான். "எவனையாவது கொன்றுவிடுவானோ?" என்று மறுபடியும் கேட்டான். அதைக் கேட்டதும் அவர்களனைவரும் ஒரு அலட்சியச் சிரிப்பு சிரித்துக்கொண்டனர்.

"அவன் நிச்சயமாகச் சுடுவான். அவன் ஒரு காலிப்பயல். வம்புக்காரன். யாரையும் வலுச்சண்டைக்கிழுப்பான். அவனுடன் எவ்வித விவகாரமும் வைத்துக்கொள்ளுவது நல்லதல்ல," என்று ஒருவன் நிலைமையை விளக்கினான்.

"இத்தகைய சந்தர்ப்பத்தில் நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? என்ன செய்வீர்கள்?" என்று ஆவலாகக் கேட்டான் டமாரக்காரன்.

ஒருவன், "ஏன்? அவனும் ஜாக் பாட்டரும்" என்று ஏதோ ஒரு பழைய சம்பவத்தைப்பற்றி ஆரம்பித்தான்.

"ஆனால் ஜாக் பாட்டர்தான் சான் ஆன்டனில் இருக்கிறானே!" அனைவரும் ஒரே குரலில் கூறினர். "சரி, அவன் யார்? அவன் இதற்கென்ன செய்வான்?" "ஓ, அவன்தான் நகரத் தலைவன். இத்தகைய சமயங்களில் அவன் சென்று ஸ்க்ராட்சியுடன் சண்டையிடுவான்."

"ஓ, அப்படியா, அவனுக்கு நல்ல உத்தியோகந்தான்." புருவத்தை உயர்த்தியவண்ணம் டமாரக்காரன் வியப்புடன் சொன்னான்.

அவர்களுக்கிடையே பேச்சு குறைந்து வெறும் முணுமுணுப்பாக மாறியது. டமாரக்காரனுக்கு இன்னும் பயத்தினால் பல விஷயங்களைப்பற்றிக் கேட்க ஆவல். எதையாவது கேட்க முற்படுகையில் மற்றவர்கள் அவனை வெறுப்புடன் நோக்கி, பேசாதிருக்கும்படி சைகை செய்தனர். அவர்கள் ஏதோ ஒரு பயங்கர நிகழ்ச்சிக்காகக் காத்திருப்பது போன்ற அமைதி அங்கே நிலவியது. அறையின் இருளில், அவர்கள் கவனமெல்லாம் தெருவிலிருந்து தங்களை நோக்கி வந்த காலடியோசையிலேயே லயித்திருந்தது.



அவர்கள் கண்கள் ஒளிர்ந்தன. ஒருவன் கடைக்காரனை நோக்கி மூன்று தடவை ஏதோ சைகை செய்தான். பிசாசைப் போல நகர்ந்து வந்து, அவனிடம் ஒரு குப்பி மதுவையும், ஒரு "கிளாஸ்" டம்ளரையும் கடைக்காரன் தந்தான். அந்த மனிதன் டம்ளர் நிறைய விஸ்கியை ஊற்றிக்கொண்டு பாட்டிலை சப்தமின்றி கீழே வைத்தான். ஒரே மடக்கில் அவ்வளவு விஸ்கியைக் குடித்துவிட்டு, கதவை நோக்கி அமைதியான பார்வையைச் செலுத்தினான். கடைக்காரன் ஓசைப்படாது எழுந்து ஒரு வின்செஸ்டர் துப்பாக்கியை எடுத்து வைத்துக்கொண்டதை டமாரக்காரன் கவனித்தான். அவன் தனக்கு ஏதோ சைகை காட்டுவதை உணர்ந்து கட்டை விரல்களாலேயே நகர்ந்து அவனருகில் சென்றான்.

"நீ என்னுடன் கடைக்குப் பின்புறத்திற்கு வந்து விடுவது நலம்."

"வேண்டாம், நன்றி. பின் பக்கத்திற்கு சட்டென்று ஓடும்படி ஒரு இடத்திலிருந்தால் போதும்" என்றான் டமாரக்காரன். அவனுக்கு பயத்தால் வியர்த்துவிட்டது.

அதன்பின் கடைக்காரன் சைகை மூலமே ஏதோ தற்காப்புக்கான வகைகளைச் சொன்னான். டமாரக்காரனும், அவன் சொல்லியபடியே ஒரு பெட்டியின் மேல் உட்கார்ந்து கொண்டான். அவன் தலை, மது வழங்கும் பலகை மட்டத்திற்குக் கீழேயே இருந்தது. துத்தநாகத் தகடினாலும், செம்புத் தகடாலும் பந்தோபஸ்தாக்கப்பட்ட அந்த இடம் அவனுக்குக் கவசம் போன்று தோன்றியது. கடைக்காரனும் பக்கத்திலிருந்த மற்றொரு பெட்டியின் மீது சுகமாக உட்கார்ந்துகொண்டான்.

"ஸ்க்ராட்சி வில்ஸன் கையில் துப்பாக்கி இருந்துவிட்டால், அவனை ஒரு அற்புதம் என்றே கூறவேண்டும்; ஆமாம், அற்புதம்— அவன் சண்டையிட ஆரம்பித்தாலும் பாதுகாப்பான இடங்களை நாம் தேடி ஒளிகிறோம். அது இயல்பு. இந்த நதியோரம், திரிந்தலைந்து கொண்டிருந்த ஒரு கலகக்கார கூட்டம் ஒன்றிருந்தது. அக்கூட்டத்தினருள் இவன்தான் இப்போது கடைசி ஆள். அவன் குடித்து போதையிலிருந்தால் எல்லோருக்கும் நடுக்கம்தான். சாதாரணமாக இருக்கும்போது அவன் நல்லவன்தான். ஒரு பூச்சியைக்கூட துன்புறுத்தமாட்டான். நகரத்திலேயே மிகவும் நல்லவனென்றே சொல்லிவிடலாம். ஆனால் அவன் குடித்துவிட்டு ஊர் திரிய ஆரம்பித்து விட்டால்—அவ்வளவுதான்" என்று கடைக்காரன் ஸ்க்ராட்சி வில்ஸனைப் பற்றி விளக்கமாகப் பேசினான். மெதுவாகக் கிசுகிசுத்தான்.

பிறகு அவர்களுக்கிடையே மௌனம். "ஜாக் பாட்டர் சான் ஆன்டனிலிருந்து திரும்பியிருந்து இந்தச் சமயத்தில் இங்கே இருக்க வேண்டும் என்பது என் ஆசை" என்றான் கடைக்காரன். "அவன் ஒரு முறை வில்ஸனின் காலில் சுட்டான். இந்தத் தடவை

அவனை நன்றாகக் கட்டிப்போட்டு அவன் கொட்டத்தை அடக்கி விடுவான்.''

அப்பொழுது தூரத்திலிருந்து வந்த ஒரு துப்பாக்கி வேட்டு சப்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து மூன்று பயங்கரக் கூக்குரல்கள் எழுந்தன. அங்கே இருட்டறையிலிருந்த அம்மனிதர்களிடையே கொஞ்சம் பரபரப்பு; காலடியோசை கேட்டுக்கொண்டிருந்தது. அவர்கள் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டனர். '' அவன் இதோ வந்துவிட்டான் '' என்றான் ஒருவன்.

## III

' எல்லோ ஸ்கை 'யின் பிரதான வீதியின் நடுவில் ஒரு மூலையிலிருந்து திரும்பி ஒருவன் வந்துகொண்டிருப்பது தெரிந்தது. கருஞ் சிவப்பு நிறத்தில் ஒரு கம்பளிச் சட்டை அணிந்திருந்தான்; திருவிழாக்களின்போது அணிந்துகொள்ளுவதற்காக வாங்கப்பட்டது அது. நியூ யார்க்கின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்த சில யூதப் பெண்களால் அவை பெரும்பாலும் தயாரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு கையிலும் நீளமான கருநீல ரிவால்வர் ஒன்றை அவன் வைத்திருந்தான். அடிக்கடி அவன் எழுப்பிய எக்களிப்பு மனித சஞ்சாரமற்ற ஒரு கிராமத்தில் கேட்பதுபோல தனித்து ஒலித்தது. அவன் கூக்குரலுக்கும், சாதாரண மனிதன் எழுப்பும் குரலுக்கும் எவ்வித ஒற்றுமையும் காணமுடியாது. அவனைச் சுற்றிலும் காணப்பட்ட அமைதியே ஒரு மண்டபத்தின் சுவர்கள்போல் அமைந்து அவன் குரல் அவற்றில் தாக்கி எதிரொலித்தது. நியூ இங்கிலாந்தின் மலைப்பகுதிகளில் வாழும் சிறுவர் மழைக்காலத்தில் அணிவதுபோன்ற சிவப்பு பூட்ஸுகளை அவன் அணிந்து கொண்டிருந்தான்.

அவனுடைய முகம் விஸ்கி மதுவினால் வெறியுடன் பிரகாசித்தது. கண்களில் கோபக் கனல் வீசிற்று. சண்டைக்கு யாரேனும் எதிர்ப்பட்டால் தான் பாதுகாப்பாகப் பதுங்கத் தக்க இடத்தைத் தேடிக்கொள்ள கதவுகளையும், ஜன்னல்களையும், கவனித்தபடியே இரவுப் பூனை போன்று பதுங்கிப் பதுங்கி நடந்தான். வாயில் வந்தபடி தனக்குத்தானே பேசிக்கொண்டான். இடையிடையே யாருக்கோ சவால் விட்டான். உறுமினான். அவன் இரும்புப் பிடியில் இருந்த நீண்ட ரிவால்வர்கள் இரண்டும் அவனுக்கு ஒரு துரும்பு போல் தோன்றின. அவ்வளவு அலட்சியமாய் மின்சாரத்தால் இயங்குவது போல அவ்வளவு வேகமுடன் அவன் அவற்றைக் கையாண்டான். இசைக்கருவி மீது ஒரு வித்வானின் விரல்கள் ஓடுவது போல் இவன் விரல்கள் துப்பாக்கி மீது விளையாடின; உடம்போடு ஒட்டி அவன் அணிந்திருந்த சட்டைக் காலரின் கீழ்ப் பாகத்திலிருந்து கழுத்துப் பட்டைகள் அவன் மூச்சு விடும்போதெல்லாம் குறுகி விரிந்து, அவன் உள்ளத்தில் பொங்கியெழுந்த



ஆத்திரத்தை வெளிப்படுத்தின. அவன் விடுத்த சவால்களை ஏற்க அங்கே ஒருவனுமில்லை. அவன் கூக்குரலையும், எக்காளத்தையும் தவிர வேறு எவ்வித ஓசையும் கேட்கப்படவில்லை. வீதியின் இரு மருங்கிலுமிருந்த வீடுகளில் இவனைப்பற்றி எவ்வித நினைப்புமில்லாமல் அமைதியே நிலவியது.

ஒருவனும் இவன் சவால்களை ஏற்கவில்லை. சண்டைக்கு முன் வரவில்லை, முன் வரவேயில்லை. அவன் வானத்தையும் நோக்கி சவால் விட்டுப் பார்த்தான். அவ்விடத்திலிருந்தும் ஒன்றும் பதில் கிடைக்கவில்லை. கையில் பிடித்திருந்த ரிவால்வர்களை நாலாபக்கத்திலும் சுழற்றி, சுழற்றி இரைந்தான்; கூச்சலிட்டான்; கர்ஜித்தான்.

' வேரி ஜெண்டில்மன் சலூ 'னின் சொந்தக்காரனுடைய நாய் இதையெல்லாம் ரசிக்கவில்லை. அதுகூட இவன் செயலைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. அது தன் யஜமானனுடைய கட்டிட வாசற் கதவருகில் இன்னமும் அரைத் தூக்கத்தில் இருந்தது. நாயைக் கண்டதும் நின்று வேடிக்கையாக ரிவால்வரை அதன்முன் தூக்கிப் பிடித்தான். இதைக் கண்ட அந்த நாய் தன் தொங்கிய தலையுடன் குரைத்துக் கொண்டே அப்பால் நடந்தது. கூக்குரலிட்டு அதை விரட்டினான். அது ஓடத் தொடங்கிற்று. ஒரு குறுக்குச் சந்தினுள் நுழைந்து சென்ற போது ஒரு பலமான வேட்டுச் சப்தம் கேட்டு, ஏதோவொன்று நேராக அதன் முன்னால் விழுந்தது. நாய் ஓலமிட்டது. பீதியடைந்து அங்கிருந்து திரும்பி ஓலமிட்டுக்கொண்டே வேறு திசையில் தலைதெறிக்க ஓட்டமெடுத்தது. மறுபடியும் இன்னொரு வேட்டு! நாயின் காதில் 'விர்'ரென்ற ஓசை! அதன் முன்னால் ஏதோ விழுந்து ஒரு பிடி மண்கூட சிதறிப் பறந்தது. பயந்து நடுங்கிய நாய் திரும்பிப் பெட்டியிலடைபட்ட மிருகம் போன்று எத்திசையிலும் போக முடியாமல் தத்தளித்தது. அது படும் அவஸ்தையைக் கண்டு இடுப்பின் மீது தன் ரிவால்வர்களை வைத்தபடியே அவன் சிரித்து மகிழ்ந்து கொண்டிருந்தான். அவனுடைய ஆத்திரத்தை தீர்த்துக்கொள்ள ஒரு நாயாவது அகப்பட்டதே என்ற திருப்தி போலும்.

அவ்விடம் விட்டகன்ற போது வேரி ஜெண்டில்மன் சலூனின் சாத்தப்பட்டிருந்த கதவு அவன் கவனத்தைக் கவர்ந்தது. அங்கு சென்று ரிவால்வரால் கதவைத் தட்டி குடிக்க ஏதாவது கேட்டான்.

கதவு திறக்கப்படவில்லை. உட்புறத்திலிருந்தும் எவ்விதச் சலனமுமில்லை. தெருவில் கிடந்த ஒரு துண்டுக் காகிதத்தை எடுத்துக் கதவின் சட்டத்தில் கத்தியால் செதுக்கிப் பொருத்தினான். அலட்சிய பாவத்துடன் திரும்பித் தெருவின் எதிர்ப்பக்கத்திற்குப் போய் நின்று அங்கிருந்து சாத்தியிருந்த கதவை நோக்கி துண்டுக் காகிதத்தின் மேல் சுட்டான். அரையங்குலம் குறி தவறிவிட்டது. தன்னையே சபித்துக்கொண்டு அங்கிருந்து வெளியேறினான்.

அருகில் அவனுடைய சிறந்த நண்பனின் வீட்டு ஜன்னல் அவன் கண்களில் பட்டது. அதைப் பார்த்து ரவைமாரி பொழிந்தான். இவ்வாறு அவன் அந்த நகரத்தையே ஒரு விளையாட்டுப் பொருளாக மதித்து எவ்விதத் தடங்கலுமின்றி வளைய வந்தான்.

இவ்வளவுக்கும் அவன் சவாலை ஏற்று அவனுடன் சண்டையிட யாரும் முன்வரவில்லை. அப்போதுதான் அவனுடைய பழைய விரோதியான ஜாக் பாட்டருடைய நினைவு வந்தது. அங்கு சென்று அவன் வீட்டை நோக்கிச் சுட்டால் அவனை வெளியே கிளப்பி தன்னுடன் சண்டைக்கு இழுத்தாலென்ன என்ற எண்ணம் எழுந்தது. அந்த எண்ணமே அவனுக்கு மகிழ்ச்சி தந்தது. உடனே பாட்டரின் வீட்டை நோக்கி அந்தப் பிராந்திய நாடோடிப் பாட்டு ஒன்றைப் பாடிக்கொண்டே சென்றான்

மற்றவர்களுடைய வீட்டைப் போலவே பாட்டருடைய வீடும் அமைதியாயிருந்ததைக் கண்டான். அமைதியைக் கலைத்துப் பக்கத்தில் பாதுகாப்பான இடத்தில் நின்று கொண்டு உரத்துச் சவால் விட்டான். பலனில்லை. ஒரு கற்சிலையிடம் கத்தினால் என்ன பயன் ஏற்படுமோ அந்தப் பயன்தான் ஏற்பட்டது. அசைந்து கொடுக்கவேயில்லை. கொஞ்ச நேரம் காத்திருந்தபின் அவன் மறுபடியும் பல சவால்கள் விட்டான். அவற்றுடன் ஆத்திரமூட்டும் வசைமொழிகளையும், சேர்த்துச் சேர்த்துப் பொழிந்தான்.

இப்போதும் பலனில்லை. வீட்டின் அமைதியைக் கண்டு இவனுக்கு மேன்மேலும் கோபம்தான் வந்தது. தன்னைத்தானே வெறுத்துக்கொண்டு சற்று நேரம் நின்றான். வடக்குப் பிராந்தியங்களில் மாரிக்காலக் கடுங்காற்று குடிசைகள் மேல் மோதுவது போல் அவனும் தனது கோபக் கனலை அவ்வீட்டின் மீது வீசினான். தூரத்திலிருந்து இவன் எழுப்பிய கூக்குரலையும், எக்காளத்தையும் யாராவது கேட்டால், இங்கே குறைந்தது இருநூறு மெக்ஸிகோ வாசிகளாவது சண்டை செய்கிறார்கள் என்றே எண்ணியிருப்பர். அவ்வப்போது மூச்சு விடுவதற்கோ, அன்றி ரிவால்வரில் தோட்டாக்களை நிரப்புவதற்கோ மட்டும் அவகாசம் எடுத்துக் கொண்டான்.

## IV

பாட்டரும், அவன் மனைவியும் ஸ்டேஷனிலிருந்து விரைந்து வந்துகொண்டிருந்தனர். பயந்தாங்கொள்ளிகளைப் போலத் தலை குனிந்த வண்ணந்தான் அவர்கள் சென்றுகொண்டிருந்தனர். தன் மனைவிக்கு உற்சாகமூட்டும் வண்ணம், "அன்பே, வீட்டையடைந்து விட்டோம். அடுத்த திருப்பம்தான்," என்று சொல்லிக்கொண்டே வந்தான்.

பலமாக வீசிய எதிர் காற்றைச் சமாளிக்கக் குனிந்த வண்ணம் நடந்தனர். அடுத்த சந்தில் திரும்பியதும், மணமகள் புக வேண்



டிய புது வீட்டின் முதல் தோற்றத்தைத் தூரத்திலிருந்தே சுட்டிக் காண்பிப்பதற்காகப் பாட்டர் தன் ஒரு விரலை உயர்த்தினான். ஆனால், தெருவின் முதல் திருப்பத்திலேயே பெரிய ரிவால்வருக்குள் அவசர அவசரமாகத் தோட்டாக்களைச் செலுத்திக்கொண்டிருந்த சிவப்பு நிறச் சட்டையணிந்த ஒரு மனிதனை நேருக்கு நேர் சந்தித்தனர். இவர்களைக் கண்ட அந்தக் கணத்தில் அவன் தோட்டாக்களை நிரப்பிக் கொண்டிருந்த ரிவால்வரை அப்படியே தரையில் போட்டுவிட்டு, மின்னல் வேகத்தில் உறையிலிருந்த மற்றொன்றை உருவிக்கொண்டான். துப்பாக்கியால் மணமகனின் மார்புக்கு நேராகக் குறி பார்த்தான்.

அங்கு ஒரு அமைதி; மயான அமைதி. பாட்டருடைய வாயிலிருந்து வார்த்தையே கிளம்பவில்லை, அவன் நாக்கு செயலிழந்து வாயினுள் சமாதியடைந்து விட்டதுபோல் தோன்றியது. அவனையுமறியாமல் தன் மனைவியின் அணைப்பிலிருந்து தன் கையை மட்டும் சட்டென்று விடுவித்துக்கொண்டான். அவன் கையிலிருந்த சிறு பெட்டி தரையில் விழுந்தது. ஒரு பழந்துணி போன்று மணமகளின் முகம் வெளிறியது. அந்தக் கொலை பாதகனின் முன்னிலையிலேயே தனக்கு ஈமச்சடங்குகள் நடப்பது போன்றே அவள் எண்ணினாள்.

அவ்விருவருக்கிடையில் மூன்று அடிதூரம் தானிருந்தது. ரிவால்வர் வைத்திருந்தவன் ஒரு பயங்கரச் சிரிப்பு சிரித்தான். அமைதியான புன்முறுவல் போலிருந்தாலும், கடுமையும், குரோதமும் நிறைந்த ஒரு குரூரமான புன்முறுவல் பூத்தான்.

"நான் அஜாக்கிரதையாக இருந்தபோது என்னை ஏமாற்றி அடித்தாய் அல்லவா? என்னை ஒரு அற்பனாகத்தானே கருதினாய்?" என்று அவன் ஆரம்பித்தான். அவன் கண்கள் இரத்தம் கக்கின. பாட்டர் சிறிதே நகர முயற்சித்தான். அதே நொடியில் தூக்கிப் பிடித்த ரிவால்வர் மேலும் முன்னுக்கு நீட்டப்பட்டது. "வேண்டாம், அசையாதே. ஜாக் பாட்டர்; உன் துப்பாக்கியை எடுக்க ஒரு விரல் கூட அசைக்காதே. ஒரு இமையளவும் முன்னால் நகராதே. உன் மீது எனக்குள்ள வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ளும் காலம் வந்துவிட்டது. என் பழியை, என்னிஷ்டப்படியே, என் முறைப்படித் தீர்த்துக்கொள்ளப்போகிறேன். அதில் எவ்விதக் குறுக்கீடையும் சகிக்க மாட்டேன். என் துப்பாக்கி ரவைகள் உன்னைத் துளைப்பதை நீ விரும்பவில்லையானால் நான் கூறுவதைச் சற்றுக் கேள்," என்று அவன் ஆத்திரமும் குரோதமும் பொங்கக் கூறினான்.

பாட்டர் தன் முன் நின்ற பகைவனை உற்று நோக்கினான். "ஸ்க்ராட்சி, என்னிடம் துப்பாக்கி ஒன்றுமில்லை; இல்லவே இல்லை; இது முற்றிலும் உண்மை" என்று அமைதியாகவே கூறினான். தன்னைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சமாளித்துக் கொண்டான். மனத்தையும் உறுதிப்படுத்திக் கொண்டிருந்தான்

மனத்தின் ஒரு புறத்தில் புல்மேனின் ரெயில் தொடர் வேகமாக ஓடிக்கொண்டிருந்த தோற்றமும், பச்சை நிறத்திலுள்ள வெல்வெட்டும், ஒளிமிக்க பித்தளை, வெள்ளி, மற்றும் கண்ணாடிப் பொருட்களும், எண்ணெய்க் கிடங்கின் அடித்தளம் போன்ற கருமையுடன் பிரகாசிக்கும் மரப்பொருட்கள்,—திருமணத்தின் மங்கலத்தன்மை, புதிய எஸ்டேட்டின் சூழல், அனைத்தும் அவன் கண் முன் ஓடின. "சண்டை வந்தால் நான் சண்டைக்குப் பின் வாங்க மாட்டேன், வில்ஸன், இது உனக்கும் தெரியும். ஆனால், இப்பொழுது என்னிடம் துப்பாக்கியே இல்லை. சுட வேண்டுமென்றால் நீயேதான் சுட்டுக்கொண்டிருக்க வேண்டும்" என்றான். முகம் வெளிறி நீலம் பாய்ந்தது. அவன் ஒரு அடி முன்னால் வந்தான். பாட்டரின் மார்பின் மீது இங்குமங்கும் ரிவால்வரினால் தட்டிக் கொண்டேயிருந்தான். "என்னிடம் பொய் சொல்லாதே. டெக்ஸாஸ் பிரதேசத்தில் எவரும் துப்பாக்கியின்றி உன்னைப் பார்த்ததில்லை. நீ சொல்வதை நம்ப என்னைப் பச்சைக் குழந்தையென்று எண்ணிவிட்டாயோ?" என்று இரைந்தான். அவன் கண்கள் ஒளிபெற்று ஜொலித்தன. அவன் தொண்டை ஒரு குழாய் போன்று மேலும், கீழும் அசைந்து கொடுத்தது.

"உன்னைப் பச்சைக் குழந்தையென்று நான் எண்ணவேயில்லை ஸ்க்ராட்சி," என்று அமைதியாகவே பாட்டர் பதிலளித்தான். அவன் குதிகால்கள் இம்மிகூடப் பின்னோக்கி நகரவில்லை. "பின் எப்படி நினைக்கிறேன் தெரியுமா? ஒரு முட்டாளாகக் கருதுகிறேன். ஆமாம், முட்டாள். என்னிடம் துப்பாக்கியில்லை என்று சொன்னால், இல்லையென்றுதான் அர்த்தம். என்னைச் சுட விரும்பினால் அதை உடனே செய். இதைப் போன்றதொரு வாய்ப்பு உனக்கு மறுபடியும் கிடைக்காது" என்றான் பாட்டர்.

இவ்வாறு வலியுறுத்தப்பட்ட உண்மை வில்ஸனுடைய கோபத்தைச் சற்றுத் தணித்தது. சற்று அமைதியடைந்தான். "உன்னிடம் துப்பாக்கியில்லையென்றால் ஏன் வைத்துக் கொள்ளவில்லை. மாதா கோவிலில் ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக்கு மதபோதனைக்குச் சென்றிருந்தாயோ," என்று அவன் ஏளனத்துடன் கேட்டான்.

"நான் துப்பாக்கி வைத்துக் கொள்ளவில்லை. ஏனெனில், இப்பொழுதுதான் சான் அண்டோனியாவிலிருந்து என் மனைவியுடன் வருகிறேன். நான் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறேன். என் மனைவியை அழைத்துக் கொண்டு வீட்டுக்குச் செல்லும் வழியில் உன்னைப்போன்ற பாதகர்கள் நடமாடிக் கொண்டிருப்பார்கள் என்று எண்ணியிருந்தால் நான் கட்டாயம் துப்பாக்கி வைத்துக் கொண்டிருப்பேன். இதை நீ நிச்சயம் நினைவில் வைத்துக்கொள்" என்று பாட்டர் சொன்னான்.

"கல்யாணமா?" புரியாதவனாகக் கேட்டான் ஸ்க்ராட்சி.

"ஆமாம், கல்யாணம் செய்துகொண்டிருக்கிறேன். நான்



தான் மணம் புரிந்து கொண்டிருக்கிறேன்," என்று பாட்டர் ஒருதரத்திற்கு இரண்டு தடவையாகச் சொல்லி விஷயத்தைப் புரிய வைத்தான்.

"நீ மணம் செய்துகொண்டிருக்கிறாயா?" என்று ஆச்சரியப்பட்டவன் போல் ஸ்க்ராட்சி மீண்டும் அவ்வார்த்தையை உச்சரித்தான். பாட்டரின் பக்கத்தில் பெண்ணொருத்தி கவிந்த தலையுடன் பெருந்துயரத்தில் மூழ்கியிருந்ததை அவன் அப்போதுதான் முதல் தடவையாகப் பார்த்தான். "நிச்சயமாகவா? இருக்காது!" என்று அவன் நம்பாமலே சொன்னான். இன்னொரு உலகத்தைக் கண்டவனைப் போல வாயைப் பிளந்தான். ஒரு அடி பின்னால் நகர்ந்து அவர்களை உற்று நோக்கினான். உயரத் தூக்கியிருந்த ரிவால்வர் வைத்துக்கொண்டிருந்த அவன் கை தொங்கிப் போயிற்று. ரிவால்வரைக் கீழே போட்டான். "இவள்தான் அந்த அம்மாளா?" என்று மணமகளைப் பார்த்துக் கேட்டான்.

"ஆமாம், இவள்தான் அந்த அம்மாள், என் மணமகள்," என்று பாட்டர் பதிலளித்தான்.

மறுபடியும் அங்கே அமைதி நிலவியது. சிறிது நேரம் பொறுத்து, "சரி, அப்படியானால், என் விவகாரம் தீர்ந்துவிட்டதாகவே கருதுகிறேன்" என்று வில்ஸன் மெதுவாகப் பேசினான்.

"ஸ்க்ராட்சி, நீ அவ்வாறு சொன்னால், எல்லாம் தீர்ந்துவிட்டது போலத்தான்; உனக்கேற்பட்ட தொந்தரவுகளெல்லாம் என்னால் ஆரம்பிக்கப்பட்டவையல்ல என்பதுதான் உனக்குத் தெரியும்" என்று சொல்லிவிட்டு கீழே விழுந்திருந்த கைப்பெட்டியைப் பாட்டர் எடுத்துக் கொண்டான்.

"நல்லது, எல்லாம் முடிந்து விட்டது என்று நான் ஒத்துக் கொள்கிறேன் ஜாக்," என்றான் வில்ஸன். அவன் தரையையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"மணமாய் விட்டது" என்ற வார்த்தையை மட்டும் அவன் வாய் முணுமுணுத்தது. பெண்கள் முன்னிலையில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்னும் சம்பிரதாயமெல்லாம் அவனுக்குத் தெரியாது. அதில் அவன் தேறியவன் அல்ல. எனினும் தன் முன் நின்ற ஜாக் பாட்டரின் புது வாழ்க்கைச் சூழ்நிலையில் ஸ்க்ராட்சி வில்ஸன் ஒரு குழந்தை மாதிரி ஆகிவிட்டான். கீழே விழுந்திருந்த ரிவால்வரை எடுத்துக்கொண்டான். இரண்டையும் அவற்றின் உறைகளில் வைத்துக்கொண்டு அவன் புறப்பட்டான்: அவன் கால்கள் மணற்பாங்கான தரையில் புனல் மாதிரித் தடங்களை அமைத்துக்கொண்டே சென்றன.

★

# திறந்த படகு

*[கடலில் அமிழ்ந்து போன "கம்மோடோர்" என்னும் கப்பலிலிருந்து தப்பிய நால்வர்களின் அநுபவத்தைச் சித்தரிக்கும் உண்மைச் சம்பவத்தைத் தழுவி எழுதப்பட்டது.]*

வானத்தின் நிறம் எப்படியிருந்ததென்று அவர்கள் எவருக்கும் தெரியவில்லை. அவர்கள் கண்களெல்லாம் அவர்களை நோக்கிப் பாய்ந்துவந்த அலைகள் மீதே லயித்திருந்தன. கரும்பலகையை நிகர்த்த வர்ணத்துடனும் நுனிகளில் மட்டும் நுரைகளின் வெண்மையுடனும் எழும்பி எழும்பி விழுந்து கொண்டிருந்த கடல் அலைகளினூடே பார்த்தபோது அடிவானமே உயர்ந்தும், தாழ்ந்தும், விரிந்தும், குறுகியும் அசைவது போலத் தோன்றியது. அலைகள் கடற்பரப்பில் குத்திட்டு வான்முகட்டையே பிளக்கும் கற்பாறைகளெனத் தோன்றின.

அவர்கள் சென்றுகொண்டிருந்த அந்தப் படகு உண்மையில் மேல்நாட்டு மாளிகைகளில் உபயோகிக்கும் ஸ்நானத் தொட்டியைக் காட்டிலும் சிறியது. ஒரு மனிதனுடைய உபயோகத்திற்கான தொட்டி இப்படகைவிடப் பெரியதாகத்தான் இருக்க வேண்டும். திடீர் திடீரென்று கிளம்பிய உயர்ந்த அலைகளும் அவற்றின் பயங்கரமான தோற்றமும், அவற்றின் நுரைப்படலமும், அச்சிறு படகிற்கு பெரும் பிரச்னையாக அமைந்தன.

படகின் அடியில் சப்பணமாக உட்கார்ந்திருந்தான் சமையற்காரன். படகின் ஆறு அங்குலக் கனமுள்ள மர விளிம்பின் மீதே அவன் பார்வை ஒன்றியிருந்தது. கடலுக்கும் அவனுக்குமிடையே இருந்தது அந்த ஆறு அங்குலப் பலகைதான். சட்டையின் கைகள் புஜங்கள் வரை சுருட்டி விடப்பட்டிருந்தன. அவ்வப்போது குனிந்து குனிந்து தண்ணீரை ஒரு தகரக் குவளையால் மொண்டு இறைத்துக் கொண்டிருந்தபோது பித்தான் போடாத அவன் சட்டையின் கழுத்துப் பட்டைகள் காற்றில் படபடவென்று அடித்துக்கொண்டன. "கடவுளே. இந்தச் சமயத்திற்குப் பிழைத்தோம்," என்று அவனுடைய வாய் அடிக்கடி முணுமுணுத்தது. இவ்வாறு அவன் உச்சரித்தபோதெல்லாம் கடல் பரப்பையும் மீறிக்கொண்டு அவன் பார்வை கிழக்குப் பக்கம் அடிவானத்தை நோக்கிச் சென்றது.

படகிலிருந்த மற்றொருவன் கப்பலில் என்ஜின் அறையில் வேலை செய்தவன். எண்ணெய் விட்டு, என்ஜினைப் பழுது பார்த்து வந்ததால் அவனை இங்கே வேலைக்காரன் என்றே குறிப்பிடுவோம். படகிலிருந்த இரண்டு துடுப்புகளில் ஒன்றை அவன்தான் இயக்கிக்



கொண்டிருந்தான். வேகமாக பாய்ந்துவந்த அலையின் நீர் படகில் புகாவண்ணம் அவ்வப்போது நிமிர்ந்து நிமிர்ந்து உட்கார்ந்தான். அவன் உபயோகித்துக் கொண்டிருந்த துடுப்பு மிகவும் மெல்லியது. எந்த நிமிஷத்திலும் அது ஒடிந்துபோகும் நிலைமையிலிருந்தது.

பத்திரிகை நிருபர் மற்றொரு துடுப்பை வலித்தவாறே தன் விதியை நொந்து கொண்டார்.

காயமடைந்திருந்த காப்டன் படகின் முன்புறம் சாய்ந்து கொண்டிருந்தார். செழிப்பாக வியாபாரம் நடந்துகொண்டிருந்த ஒரு கம்பெனி முழுகிப் போய்விட்டாலோ, சேனை தோல்வியுற்றாலோ, அல்லது ஒரு கப்பல் கடலில் முழுகிவிட்டாலோ, தைரியங் குன்றாத அநுபவமிகுந்த தீரனுக்கும் கூட, தற்காலிகமாகவாவது, ஒருவித மனச் சோர்வும், நிராசையும் உண்டாவது சகஜம். அத்தகைய நிராசை கொண்ட மன நிலையிலிருந்தார் காப்டன். கப்பல் தலைவனுடைய கவனம் பூராவும், அவன் ஒரு நாளைக்குத் தலைவனாக இருந்தாலும் சரி, பத்து வருஷமாகத் தலைவனாக இருந்தாலும் சரி, அவனுடைய கப்பலிலேயேதான் சதாகாலமும் லயித்திருக்கும். இந்தக் காப்டனும் இதற்கு விலக்கன்று. அன்று அதிகாலையில்தான் அவன் தலைமை வகித்த அந்தக் கப்பல் மூழ்கியது. ஏழு பேர்கள் கடலில் குதித்துப் பிணமாக மிதந்து கிடந்த பரிதாபகரமான காட்சியும், கப்பலின் பாய்மரக் கம்பமும் அதன் நுனியில் தொங்கிக்கொண்டிருந்த வெள்ளை உருண்டை மட்டுமே தெரிந்ததும், அவற்றின் மீது அலைகள் மோதி மோதி அவ்வுருண்டை அசைந்தது. பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அந்தக் கம்பத்தின் நுனியும் மறைந்து, முற்றிலும் முழுகிவிட்டதும், ஒவ்வொன்றாக அவன் மனத்தில் நிலையாகப் பதிந்திருந்தன. இவற்றின் நினைவினால்தானோ என்னமோ அவன் குரலே புதுமாதிரி ஒலித்தது. கம்பீரமாகப் பேசினாலும் ஒருவிதச் சோகம் கலந்திருந்தது நன்றாகவே தெரிந்தது. வார்த்தைகளால் சொல்லி ஆறாத சோகம். கண்ணீர்ப் பெருக்கினாலும் குறையாத சோகம்.

அவ்வாறு சோகம் நிறைந்த குரலில் "பில்லி, படகைச் சற்று தெற்குப் புறமாகவே செலுத்து," என்று அவர் உத்தரவிட்டார்.

"இன்னம் கொஞ்சம் தெற்குப் புறமாகவா, என்றான் மறுபுறமிருந்த வேலைக்காரன்.

ஒரு சிறு படகில் உட்கார்ந்திருப்பது கலிபோர்னியா நாட்டு முரட்டுக் குதிரையின் முதுகில் உட்கார்ந்திருப்பதற்குச் சமமானது. இந்தப் படகைக் காட்டிலும் குதிரை எவ்விதத்திலும் குறைந்ததன்று. குதிரையைப் போலவேதான் படகும் முன்னால் சென்றது. பிறகு திடீரென்று பின்னுக்குச் சென்றது. தண்ணீரில் முழுகுவதுபோல் ஒரு சமயம் பாய்ந்தது. ஒவ்வொரு அலை அதை நோக்கி வந்தபோதும் அதன் உச்சிக்குப் படகு சென்றபோதும் உயரமான ஒரு வேலியைத் தாண்டுவதற்குத் தயாராக நிற்கும் குதிரையைப் போலத் தானிருந்தது. அது எப்படி இந்தத்

தண்ணீர் வேலியைத் தாண்டிச் சமாளித்ததோ, அது ஒரு புதிர் போலத்தான் தோன்றியது. ஏனென்றால், ஒரு அலையின் நுனியிலிருந்து மடிந்து கவிழ்ந்து வந்த நுரைகளைச் சமாளிக்க மறுபடியும் ஒரு தாண்டுத் தாண்ட வேண்டும். அப்போதெல்லாம் காற்றில் குதித்துத் தாவுவது போலவே தோன்றும். ஒரு அலையின் முகட்டைச் சமாளித்தபின் அதன் சரிவிலேயே வேகமாகப் பாய்ந்து சென்று பெருமிதத்துடன் தலையை ஆட்டிக்கொண்டு நிற்கும் குதிரையைப் போல அந்தப் படகு நிற்கும். உடனே அடுத்து வரும் மற்றொரு பயங்கர அலையை முன்போலவே சமாளிப்பதற்குத் தயாராக வேண்டும்.

கடலில் படகில் செல்லுவதிலுள்ள ஆபத்து என்னவென்றால் ஒரு அலையை எப்படியோ சமாளித்து விட்டோம் என்று பெருமைப் பட்டுக்கொண்டிருக்கும்போதே, தன்னை நோக்கி வந்து கொண்டிருக்கும் மற்றொரு அலையும் முன்னதைப்போலவே பயங்கரமானது என்று உணர்வதுதான். அதைத் தாண்டிச் சமாளிக்கக் கவனத்தை எல்லாம் ஒருமுகப்படுத்தித் திறமையெல்லாம் திரட்டி எச்சரிக்கையுடனிருக்கவேண்டும். அலைகளின் வரிசைகளை எல்லையற்று வழங்குவதில் கடலுக்குள்ள சாமர்த்தியந்தான் என்னே! பத்து அடி நீளமுள்ள ஒரு டிங்கியில் நடுக்கடலில் பிரயாணம் செய்த ஒருவனால்தான் இந்த உண்மையை உணரமுடியும். மற்றவர்களால் இதைப் பூரணமாகத் தெரிந்து கொள்ள முடியாது. கருஞ்சுவர் போன்று ஒரு நீர்த்திரை தன்னை அணுகியபோதே அதற்குப் பின்னாலிருப்பதையெல்லாம் அப்படகினின்று மறைத்து விடுகிறது. எதிரில் வந்த அலைதான் சமுத்திரமே ஒன்றாகத் திரண்டு குவிந்து வந்த கடைசி அலையோ என்று எண்ணத்தோன்றும். நீர்ப்பரப்பின் கடைசி எழுச்சி அதுதான் எனத்தோன்றும். அந்த அலைகள் பாய்ந்துவரும் அழகுதான் என்ன! தவழ்ந்துவரும்போது என்ன பயங்கர அழகு! சந்தடியின்றி அல்லவோ கம்பீரமாக வருகின்றன! உச்சியில் நுரை வழியும்போது உண்டாகும் உறுமுதலைத் தவிர மற்றபோதெல்லாம் நிசப்தமாகவன்றோ அவை வருகின்றன.

அந்த இருட்டின் ஒளியில்—அப்படி ஒன்றிருக்குமேயானால்—அந்நால்வரின் முகங்களும் கபில நிறமாகத்தான் இருந்திருக்கும். படகின் நுனியைப் பார்த்தபடியே இருந்த அவர்களது பார்வைகள் கூட விநோதமாகத்தான் தோன்றியிருக்கும். கரையில் ஒரு மாளிகையில் மேல் மண்டபத்திலிருந்து அக்கடல் பரப்பை ஒருவன் பார்த்தானேயானால் ஓவியத்திற்குப் பொருத்தமான ஒரு காட்சியாகத் தோன்றியிருக்கும். அதைக் கண்டு ரசிக்கவும் கூடும். ஆனால் படகில் உட்கார்ந்திருந்தவர்களுக்கு இக்காட்சியைக் கண்டு அநுபவிக்க அவகாசமில்லை. அவர்கள் மனத்திலும் இதர விஷயங்கள் நிரம்பியிருந்தன.

உதயமாகி, சூரியன் படிப்படியாக மேலே கிளம்பிக் கொண்டிருந்தான். அதிலிருந்துதான் பகல் வந்து விட்டதென்பதை அவர்



கள் உணர்ந்தார்கள். கடலும் கரும்பலகை நிறத்திலிருந்து மரகதப் பச்சையாக மாறிக்கொண்டு வந்தது. இடையிடையே சூரிய கிரணத்தினால் பொன்னிறச் சாயையும் கலந்திருந்தது. நுரைகளெல்லாம் சிதறிவிழும் பனித்தூள்கள்போல் பிரகாசித்தன. பொழுது அப்படி, எப்போது புலர்ந்தது என்பதை அவர்கள் ஒருவரும் உணரவில்லை. தங்களை நோக்கி வீசிக்கொண்டிருந்த அலைகளில் ஏற்பட்ட மாறுதல்களைத்தான் அவர்கள் கண்டனர்.

சமையற்காரனும் நிருபரும் அரைகுறை வாக்கியங்களில், ஒரு உயிர் மீட்பு நிலையத்திற்கும் சாதாரண பாதுகாப்பு நிலையத்திற்குமுள்ள வித்தியாசம் என்ன என்பதைப்பற்றி விவாதித்துக்கொண்டிருந்தனர்.

"மஸ்கிடோ குடாவுக்கு வடபுறமாகக் கரையில் ஒரு பாதுகாப்பு நிலையம் இருக்கிறது. அதிலுள்ளவர்கள் நம்முடைய நிலையைக் கவனித்து விட்டால், உடனே தங்கள் படகுகளில் விரைவாக வந்து நம்மெல்லோரையும் காப்பாற்றி அழைத்துச் செல்லுவர்," என்று சமையற்காரன் சொன்னான்.

"நம்முடைய நிலையை யார் கவனித்தால்?" என்று நிருபர் அவனைக் கேட்டார்.

"மாலுமிகள் கவனித்தால்" என்றான் சமையற்காரன்.

"பாதுகாப்பு நிலையங்களில் மாலுமிகள் ஏது? எனக்குத் தெரிந்தவரையில் அந்த இடங்களில் முழுகிப்போன கப்பலிலிருந்து தப்பி வந்தவர்களுக்காக உணவும் உடையுமட்டுமே வைத்திருப்பார்கள் என்றுதான் கேள்விப்பட்டிருக்கிறேன். மாலுமிகள் இருக்கமாட்டார்கள்." என்று நிருபர் சொன்னார்.

இல்லை, இல்லை. மாலுமிகள்கூட அங்கே இருக்கிறார்கள், என்றான் சமையற்காரன் பிடிவாதமாக.

"இல்லை. அங்கே மாலுமிகளை வைத்துக்கொள்ளுவதில்லை" என்றார் நிருபரும் பிடிவாதமாக.

"எப்படியும் நாம் இன்னும் அந்த இடத்தை நெருங்கவில்லையே," என்றான் மறுமுனையில் துடுப்புப் போட்டுக்கொண்டிருந்த வேலைக்காரன்.

"என்னமோ மஸ்கிடோ குடாவுக்கு அருகாமையிலிருக்கிறது என்று நான் நினைத்துக் கொண்டிருந்தது பாதுகாப்பு நிலையமாக இருக்காது. அது ஒரு உயிர் மீட்சி நிலையம் என்று எண்ணுகிறேன்" என்றான் சமையற்காரன்.

"அப்படியிருந்தாலும் நாம் இன்னமும் அந்த இடத்தின் சமீபம்கூட வரவில்லையே" என்றான் வேலைக்காரன் மறுபடியும்.

## 2

ஒவ்வொரு அலையின் உச்சியிலிருந்து தாவித்தாவிப் படகு சென்று கொண்டிருந்தபோது தொப்பியின்றி வெறுந்தலையுட

னேயே இருந்த அவர்கள் மீது கடற் காற்று வீசிப் பரட்டைத்தலையாகவே அடித்து விட்டது. காற்றின் கொடுமை போதாதென்று, படகு சென்ற வேகத்தில் கடல் நுரைகள் சிதறிக் காற்றுடன் கலந்து அடித்தன. ஒவ்வொரு அலையின் உச்சியும் ஒரு மலையின் சிகரம் போலிருந்தது. அதன் மேல் படகு எழும்பி நின்றபோது ஒருகணம் கொந்தளிக்கும் கடல் பரப்பையும், காற்றடித்து அந்நீர் நிலையை அலைக்கழிக்கும் காட்சியையும் அவர்களால் காணமுடிந்தது. அக்காட்சி மிக மனோகரமான காட்சிதான்! உன்னதமான காட்சிதான்! கட்டுக்கடங்காத கடலும், அதன் ஆவேச விளையாட்டும் மரகதத்தை நிகர்த்த பச்சை நிறமும், வெண்மையும் மஞ்சளும் கலந்த ஒளிக்கதிர்களும், மனத்தைக்கவரும் காட்சிதான்!

''பில்லி, நல்லவேளையாக இக்கடுங்காற்று கரை நோக்கி வீசிக்கொண்டிருக்கிறதோ, நாம் பிழைத்தோம். எதிர்ப்புறமாக வீசினால் நம்முடைய கதி என்ன? நமக்கு எந்தவிதமான காட்சி காத்திருக்கும்?'' என்று சமையற்காரன் சொன்னான்.

''நீ சொல்லுவது உண்மைதான்,'' என்று நிருபர் அவன் சொன்னதை ஆமோதித்தார்.

துடுப்புப் போடுவதிலேயே முனைந்திருந்த வேலைக்காரன் தன் தலையை அசைத்துத் தன் ஆமோதிப்பைத் தெரிவித்தான்.

சாய்ந்தவண்ணமிருந்த காப்டன் ஒரு வறட்டுச் சிரிப்புச் சிரித்தான். அதில் வெறுப்பு, அலட்சியம், சோகம், ஹாஸ்யம் எல்லாம் கலந்திருந்தன. ''ஏன், இப்போது நாம் கண்டு களித்துக்கொண்டிருக்கும் காட்சி உங்களுக்குப் போதவில்லையா?'' என்று அவர்களைப் பார்த்துக் கேட்டார் காப்டன்.

இதைக் கேட்ட மற்ற மூவரும் தட்சணமே வாயடைத்துப் போயினர். அவர்கள் செய்து கொண்டிருந்த வேலையினால் ஏற்பட்ட சிறு ஓசையைத் தவிர, நிசப்தமே நிலவியது. இந்தச் சமயத்தில் நம்பிக்கையூட்டுவதற்காக எதையாவது சொன்னால் அது முட்டாள்தனமாகவும் சிறுபிள்ளைத்தனமாகவும் தான் தோன்றும் என்பதை அவர்கள் உணர்ந்தனர். வாய்விட்டுச் சொல்லாவிட்டாலும் இந்த உணர்ச்சிதான் அவர்களிடம் அப்போதைக்கு மேலோங்கி நின்றது. இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில் இளைஞனையின் தீவிரமாகச் சிந்தனை செய்து கொண்டிருப்பான். இந்த சமயத்திலும் நம்பிக்கையை முற்றிலும் இழந்து விட்ட மாதிரி அவர்கள் எண்ணத் தயாராக இல்லை. அவர்களிருந்த நிலைமையும் அவர்கள் அவ்வாறு எண்ண இடங்கொடுக்கவில்லை. காப்டனுக்கு எதிராக வாய்விட்டுப் பேசவும் துணியவில்லை. எனவே மூவரும் மௌனம் சாதித்தனர்.

இவர்களின் மனோ நிலையை யூகித்தறிந்த காப்டன் அவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் ''பயப்படவேண்டாம், நாமெல்லோரும் நிச்சயமாகக் கரை சேருவோம்,'' என்றார்.



ஆனால் அவர் இதைச் சொன்னவிதம் அவர்களை என்னவோ செய்தது. வேலைக்காரன்தான் பதிலளிக்க முந்திக்கொண்டான்.

''ஆமாம் சேர்ந்து விடலாம், இந்தக் காற்று இப்படியே வீசிக்கொண்டிருந்தால்,'' என்றான்.

சமையற்காரன் தண்ணீர் இறைத்துக் கொண்டே, ''ஆமாம், ஆமாம்! கரையோரம் கடல் நுரையில் அகப்பட்டு முழுகிப் போகாமலிருந்தால்,'' என்றான்.

கடற் காகங்கள் படகின் அருகிலும் தூரத்திலும் பறந்த வண்ணமிருந்தன. சிற்சில சமயங்களில் காற்றின் வேகத்தில் கடலில் பாய்போன்று மிதந்து வந்த கடற்பாசிப்பரப்பின் மீது இக் காகங்கள் சிறுசிறு கூட்டமாக உட்கார்ந்தன. அனாயாசமாகக் கொந்தளிக்கும் கடலில் அவை அலைமீதும் அமர்ந்து மிதந்து சென்றதைப் பார்த்துப் படகிலுள்ளவர்களுக்குப் பொறாமையாகக் கூட இருந்தது. கடலின் கோபாவேசம் கடலுக்கப்பால் ஆயிரம் மைலில் கரையில் திரியும் கோழிக் குஞ்சுகளுக்கு எப்படி ஒரு பொருட்டில்லையோ, அதுபோலத்தான் இக்கடல் காகங்களுக்கும் லட்சியமின்றி தோன்றியது. அடிக்கடி அவை படகின் சமீபம் வந்து தங்கள் கண்ணாடிக்கண் பார்வையால் இந்நால்வரையும் முறைத்துப் பார்த்தன. இமை கொட்டாது அவை பார்த்த பார்வையில் ஏதோ அவக்குறி இருப்பதாகக் கூட படகிலுள்ளவர்களுக்குப்பட்டது. அவர்கள் அக்காகங்களைக் கத்திக்கத்தி விரட்டினர். ஒரு காகம் காப்டனுக்கு பக்கத்திலேயே வந்து அவர் தலைமேலேயே உட்கார்ந்து விடும்போல் தோன்றியது. ஏனெனில் படகுக்கு மேலே வட்டமிட்டுப் பறக்காமல், அதன் பக்கத்திலேயே பறந்து வந்து, அவ்வப்போது படகைப் பார்த்துத் தாவித்தாவிப் பாய்ந்தது அதனுடைய கூரிய பார்வை காப்டனுடைய தலையையே இலக்காகக் குறிவைத்த மாதிரி இருந்தது. ''ஏ, சனியனே, அவலட்சணமே! நீயும் உன் அரிவாள் மூஞ்சியும்!'' என்று வேலைக்காரன் அப்பறவையைத் திட்டினான். இதைத் தொடர்ந்து சமையற்காரனும் நிருபரும் கூட அப்பறவையைச் சபித்தனர். காப்டன் அதை ஒரு கயிற்றாலடித்து வீழ்த்திவிடத்தான் எண்ணினார். ஆனால் அப்படி ஏதாவது தீவிர முயற்சி செய்தால் ஏற்கனவே அதிக பாரத்தைத் தாங்கிக்கொண்டிருந்த இந்தப் படகு கவிழ்ந்து விடுமென்றஞ்சி சும்மா இருந்து விட்டார். தன்னுடைய கையை மட்டும் வீசி அதைத் துரத்த முயன்றார். கடைசியாக அப்பறவை இவர்களைவிட்டு அப்பால் சென்றதும் காப்டன் சற்று நிம்மதியடைந்து பெருமூச்சு விட்டார். தனது தலை தப்பியதே என்று அவருக்குச் சந்தோஷம். மற்றவர்களுக்கு அபசகுனம்போல் அந்த சமயத்தில் பீதியுண்டாக்கிய இது தொலைந்து போயிற்றே என்று நிம்மதி.

வேலைக்காரனும் நிருபரும் துடுப்புப் போட்டது போட்ட வண்ணமிருந்தனர். இருவரும் ஒரே ஆசனத்தில் உட்கார்ந்து

ஆளுக்கொரு துடுப்பாகப் போட்டனர். பிறகு வேலைக்காரன் இரண்டு துடுப்புகளையும் தானே போட்டான். பிறகு நிருபர் இரண்டையும் வாங்கிக்கொண்டு தானே போட்டார். பிறகு சிறிது நேரம் வேலைக்காரன்; சிறிது நேரம் நிருபர். இவ்வாறாக அவர்கள் துடுப்புப் போட்டார்களோ, போட்டார்களோ, அப்படிப் போட்டார்கள். ஓய்வெடுத்துக்கொண்டவன் துடுப்புப் போட மாற்றிக்கொள்ள வேண்டியபோதுதான் நிலைமை மிகவும் இக்கட்டாக இருந்தது. உண்மையைச் சொல்ல வேண்டுமானால் அடைகாத்துக்கொண்டிருக்கும் பெட்டைக் கோழியினடியிலிருந்து கூட ஒரு முட்டையைச் சுலபமாக எடுத்து விடலாம். இந்த டிங்கியில் ஒருவருக்கொருவர் இடம் மாறிக்கொள்ளுவது அதைவிடக் கடினம். முதலில் படகின் பின்புறத்திலிருந்தவன் கைகளை முன்னால் நீட்டி மெதுவாக நகர முயற்சிக்க வேண்டும். தன்னை ஒரு பீங்கான் கிண்ணம்போல பாவித்து அவ்வளவு ஜாக்கிரதையுடன் செயல்பட வேண்டும். துடுப்பு போடும் ஆஸனத்திலிருப்பவன் படகின் மறுபுறம் கையை முன்னுக்கு நீட்டி, இருவரும் மெல்ல மெல்ல மாறிக்கொள்ள வேண்டும். இருவர் உடலும் எதிரும் புதிருமாக உராயும் போது மற்றவர்கள் அவர்களையே இமை கொட்டாது பார்த்துக் கொண்டிருப்பதுடன் படகை நோக்கி அலை வருகிறதா என்றும் கவனமாக இருப்பர். அலை வருவது தெரிந்தால், “ஜாக்கிரதை, அதோ அலை வருகிறது” என்று காப்டன் எச்சரிப்பார்.

கடலில் பாய் விரித்தாற்போல் அவ்வப்போது காணப்பட்ட கடற்பாசி சிறு தீவுகளைப் போல் திட்டுத் திட்டாகத் தெரிந்தன. நீர் பரப்பிலும் நிலப் பரப்புகள்! பார்வைக்கு அவைகள் நகராமல் நிலைத்திருப்பது போலவே தோன்றின. ஆனாலும் அவற்றின் நிலையிலிருந்து படகு கரையை நோக்கி மிக மெதுவாகவே சென்று கொண்டிருந்ததென்பது தெரிந்தது.

படகின் முன்புறத்திலிருந்த காப்டன் மிக ஜாக்கிரதையாகச் சற்று அசைந்து கொடுத்துக்கொண்டார். கொஞ்சம் பின்னுக்கு நகர்ந்தார். படகு ஒரு அலையின் உச்சியிலிருந்து இறங்கிய போது, தான் மஸ்கிடோ குடாவிலிருக்கும் கலங்கரை விளக்கைப் பார்த்ததாக அவர் சொன்னார். உடனே தானும் அதைப் பார்த்ததாகச் சமையற்காரனும் சொன்னான். நிருபர் துடுப்பு போட்டுக் கொண்டிருந்ததால் அவர் அதைக் காணவில்லை. அவரும் அதைப் பார்க்க ஆசைப்பட்டார். ஆனால் கரை அவருக்கு முதுகுப்புறமே இருந்ததால் திரும்பிப் பார்க்க முடியவில்லை. முன்னால் வரும் அலைகள் மீதல்லவா அவருடைய கவனம் பூராவும் இருந்தது. சிறிது நேரத்தில் ஒரு அலை மற்றவைகளைக் காட்டிலும் வேகம் குறைந்து தணிந்து வந்துகொண்டிருந்ததைப் பார்த்தார். அதன் உச்சியில் படகு சென்றபோது மேற்குப் புறம் வான்முகட்டை ஒரு கணம் ஆராய்ந்தார்.

“தெரிகிறதா?” என்று கேட்டான். காப்டன்.



“இல்லை. எனக்கு ஒன்றும் தென்படவில்லை” என்று நிருபர் சற்றுத் தயங்கியபடியே சொன்னார்.

“மறுபடியும் பார், அது நேராக அந்தத் திசையில்தானிருக்கிறது.” என்று கப்படன் சொல்லிவிட்டு பார்க்கவேண்டிய திசையையும் சுட்டிக் காட்டினார்.

அடுத்த அலையின் உச்சிக்குப் படகு வந்தபோது நிருபர் அவ்வாறே பார்த்தார். அவர் கண்களுக்கு அசைந்து ஆடிக்கொண்டிருந்த வான வளையத்தில் ஏதோ சிறிய வஸ்து நிலையாக நிற்பது போலத் தோன்றியது. அது ஒரு குண்டூசியின் முனைபோல் அவ்வளவு சிறியதாகத் தெரிந்தது. கலங்கரை விளக்கு அவ்வளவு சிறியதாக இருக்குமா என்று வேறொரு சமயமாக இருந்தால் சந்தேகமே பட்டிருப்பார். அவர்களிருந்த அந்நிலையில் அது நம்பிக்கை யளித்த ஒரு சின்னமல்லவா?

“நாம் அதை அடைந்து விடலாம் என்று தோன்றுகிறதா, காப்டன்?” என்று நிருபர் கேட்டார்.

“காற்று இப்படியே வீசிக்கொண்டிருந்து. படகும் முழுகிப் போகாமலிருந்தல் நாம் கரையை அடைந்துதான் ஆகவேண்டும்,” என்றார் பதிலுக்கு.

சிறிய படகு ஒவ்வொரு அலையாகச் சமாளித்துக் கொண்டே சென்று கொண்டிருந்தது. பக்கத்தில் எங்கும் கடற்பாசி தென்படவில்லை யாகையால் படகு நகர்ந்து கொண்டு தானிருக்கிறதென்பதை அதிலிருந்தவர்களால் அறிந்து கொள்ள முடியவில்லை. பரந்த அந்தக் கடலில் இந்த ஒரு சின்னஞ் சிறு சாமான் உலக சமுத்திரங்கள் ஐந்தின் தயவுக்குட்பட்டு எப்படியோ மிதந்து கொண்டிருந்தது போலவே தோன்றிற்று. எப்போதாவது தண்ணீர் வெண்மைத் தீப்படலம் பரவுவது போல் படகின் மீது வேகமாக வீசும்.

“தண்ணீரை இறைத்து விடு,” என்று காப்டன் நிதானமாகச் சமையற்காரனுக்கு உத்தரவு கொடுப்பார்.

இனிமை முகத்துடனே “அப்படியே செய்கிறேன் காப்டன்” என்று அவனும் தன் வேலையைக் கவனிப்பான்.

## 3

கடலில் மிதந்து சென்ற இந்த நால்வரிடையே நிலவிய சகோதர உணர்ச்சியை விளக்கப் புகுவது சற்றுக் கடினம்தான். அவர்களுக்குள்ளிருந்த இந்தப் பாசத்தைப் பற்றி எவரும் வாய்விட்டுச் சொல்லவில்லை. ஆனாலும் படகில் அது நிச்சயமாக நிலவியது. அதன் அரவணைப்பில் ஒவ்வொருவனும் நிம்மதியை உணர முடிந்தது. ஒரு காப்டன், ஒரு வேலைக்காரன், ஒரு சமையற்காரன், ஒரு நிருபர்-இந்நால்வரும் சிநேகிதர்கள். சாதாரணமாக உணரப்படுவதைக் காட்டிலும் ஒரு இரும்புத் தளையால் கட்டுண்ட

வர்கள் போன்ற அளவுக்குச் சிநேகிதர்கள். காயமடைந்திருந்து படகின் நுனிப் புறத்தில் தண்ணீர் பிப்பாய்மீது சாய்ந்திருந்த காப்டன் அப்போதும் தணிந்த குரலில் நிதானமாகவே பேசினார். ஆனால் அவர் உத்தரவுகளை நிறைவேற்றப் பணிவுடனும் உற்சாகத்துடனும் காத்திருந்த இந்த மூன்று பேரைப்போல் அவருக்குக் கிடைத்திருக்கவே மாட்டார்கள். எல்லோருக்கும் நல்லது என்பதற்காக மட்டும் அவர்கள் இவ்விதம் பணிந்து காணப்பட்டனர் என்பதன்று. ஒவ்வொருவர் மனமும் உணர்ச்சி வசப்பட்டு ஒருவிதப் பாசத்தால் பிணைக்கப்பட்டிருந்ததை எல்லோரும் அநுபவித்தனர். காப்டனுக்குப் பணிந்து நடக்க வேண்டுமென்ற உணர்ச்சியுடனே சகோதர பாவமும் அங்கு நிலவியது குறிப்பிடத்தக்கது. முக்கியமாக, அம் மனிதனைப் பற்றி சந்தேகத்துடனும் அலட்சியத்துடனும் பேசியே பழக்கப்பட்ட நிருபருக்குக்கூட அப்போதைய அநுபவம் அவர் வாழ்க்கையிலேயே உயர்ந்ததாகப் பட்டது. ஆனால் அவனும் அதைப் பற்றி வாய்விட்டுச் சொல்லவில்லை. மற்றெவருமே பேசவில்லை.

“நமக்கு இப்போது ஒரு பாய் இருந்தால் நன்றாக இருக்கும். என்னுடைய மேலங்கியைத் துடுப்பின் நுனியில் கட்டி, துடுப்புப் போட்டுக் கொண்டிருந்த இருவருக்கும் கொஞ்சம் ஓய்வு கொடுக்கலாம்” என்றார் காப்டன். அப்படியே சமையற்காரனும் நிருபரும் துடுப்பைப் பாய்மரக் கம்பம் போல் நிறுத்தி அவற்றின் இடையே மேலங்கியை விரித்துப் பிடித்தனர். வேலைக்காரன் படகைத் திசை மாறாமல் இயக்கிக்கொண்டிருந்தான். படகு இதனால் வேகமாகவே சென்று கொண்டிருந்தது. வேலைக்காரன் கூட தண்ணீர் படகுக்குள் வராமலிருக்கச் சில சமயம் படகை வேகமாகத் திருப்ப வேண்டியிருந்தது. அதைத் தவிர, படகு திருப்திகரமாகவே ஓடிக்கொண்டிருந்தது.

தூரத்தில் தெரிந்த கலங்கரை விளக்கு இப்போது நன்றாகவே தெரிய ஆரம்பித்தது. அது வானத்தின் பின்னணியில் ஒரு நிழல் போல் கபில நிறமாகத் தோற்றமளித்தது. துடுப்பைத் தள்ளிக் கொண்டிருந்தவன் இந்த நிழல் விஷயத்தைப் பார்க்க அடிக்கடி திரும்பினான். அவனால் அப்படிச் செய்யாமல் இருக்க முடியவில்லை.

இறுதியாக, ஒவ்வொரு அலையின் உச்சிக்குப் படகு சென்றபோதெல்லாம் படகிலிருந்தவர்களுக்குக் கரையே நன்றாகத் தென்பட்டது. கலங்கரை விளக்கு செங்குத்தான சுழல் போல் தோன்றியது. ஆனால் கடற்கரைப் பகுதியோ நீண்ட கறுப்பு நிழல் போல நீர் பரப்பை யொட்டிக் காணப்பட்டது. ஒரு காகிதத்தை விரித்தாற்போல் அவ்வளவு மெல்லிய நிழல். “நாம் நியூஸ் மிர்னாவுக்கு நேராக இருக்கிறோம் என்று தோன்றுகிறது” என்றான் சமையற்காரன். அவன் இந்தக் கடற்கரைப் பகுதியில் அடிக்கடி சிறு கப்பல்களில் சென்று பழக்கப்பட்டவன். “அதிருக்கட்டும், காப்டன். அங்கு ஒரு உயிர்-மீட்சி நிலையம் இருந்ததே.



அதை ஒரு வருஷத்திற்கு முன்பு எடுத்து விட்டார்கள் என்று நினைக்கிறேன்” என்றான்.

“எடுத்து விட்டார்களா?” என்று காப்டன் கேட்டார்.

காற்றின் வேகம் கொஞ்சம் கொஞ்சமாகத் தணிந்தது. சமையற்காரனுக்கும் நிருபருக்கும் மேலும் துடுப்பை நிமிர்த்திப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இப்போது இல்லை. ஆனால் அலைகள் மட்டும் முன் போலவே அடங்காமல் படகின்மீது மோதிக் கொண்டே இருந்தன. வேகம் தடைப்பட்ட அந்த டிங்கி அடிபட்ட மரக்கலம் போல் மெல்ல மெல்ல ஊர்ந்து சென்றது. வேலைக்காரனும் நிருபரும் மறுபடியும் துடுப்புப் போடும் வேலையை மேற்கொண்டனர்.

கடலில் கப்பல் முழுவதும் தப்பியவர்கள் கடலில் மிதந்து கரை சேருவதும் அவ்வளவு பயப்படக்கூடியவை அல்ல. யாருக்கு? நன்கு பயிற்சி பெற்றிருந்தவர்களாக இருந்து, கப்பல் மூழ்கியபோது அவர்களும் உடல் நலம் பூரண ஆரோக்கிய நிலையிலுமிருந்தால், கடலில் மூழ்கிச் சாக வேண்டியதில்லைதான். இங்கே நிலைமை வேறு. டிங்கியிலிருந்த நால்வரில் வெறுமே படகில் புறப்படுவதற்கு முன் இரண்டு பகல் இரண்டு இரவாக துளியும் தூங்கவில்லை. மூழுகிக் கொண்டிருந்த கப்பல் தளத்தில் கண்ட ஆரவாரத்திலும் அதை விட்டு வெளியேற வேண்டுமென்ற பரபரப்பிலும் அவர்கள் வயிறார உண்ணவும் மறந்து விட்டனர்.

இதனாலும், இதர காரணங்களாலும், வேலைக்காரனோ நிருபரோ துடுப்புப் போடுவதில் அதிக ஊக்கம் காட்டவில்லை. படகு தள்ளுவது ஒரு மனோரம்யமான செயல் என்று எந்த புத்திசாலி சொன்னானோ என்றுதான் நிருபரால் அந்த சமயத்திற்கு எண்ணத்தோன்றியது. இது ஒன்றும் வேடிக்கையன்று, சித்திரவதைக்கு சமமானது. கிறுக்குப் பிடித்த ஒரு மேதாவிகூட படகு தள்ளுவதிலுள்ள பயங்கரத்தையும், தசைகளை அது சித்திரவதை செய்வதையும் முதுகெலும்பை அது முறிப்பதையும் ஒப்புக் கொள்ளுவான். படகிலுள்ளவர்களுக்குப் பொதுவாகப் படகு தள்ளுவதைப் பற்றிய தன் கருத்துக்களை இவ்வாறு நிருபர் சொன்னார். சோர்வுற்றிருந்த அந்த வேலைக்காரன் இதைக் கேட்டு அநுதாபத்துடன் புன்னகை செய்தான். கப்பல் முழுகுவதற்கு முன்னால் அவன் தொடர்ந்து என்ஜின் அறையில் இரட்டிப்பு வேலை செய்து அலுத்துப் போயிருந்தான்.

அவர்கள் உணர்ச்சிகளையெல்லாம் புரிந்துகொண்ட காப்டன், “குழந்தைகளே, அதிகம் சிரமப்படுத்திக்கொள்ள வேண்டாம். மெதுவாகவே படகு செல்லட்டும். உங்கள் வலிமை முழுதையும் செலவிட்டு விடாதீர்கள். கரையோரம் நுரைப் படலத்தில் நாம் நீந்திச் செல்ல வேண்டுமென்றால் உடலில் பலம் வேண்டும். சாவதானமாகவே வேலை செய்யுங்கள்” என்றார்.

கடல் பரப்பிலிருந்து இப்போது நிலப் பகுதி சிறிது சிறிதாக

வெளிக் கிளம்பியது. முதலில் கருங்கோடு போல் தோன்றியது. இப்போது கரும் கோடும் வெண்மைக் கோடும் கலந்து காணப் பட்டன. அதாவது மரங்களும் மணற் பரப்பும்தான். அதில் ஒரு வீட்டைக்கூடத் தான் காணுவதாகக் காப்டன் சொன்னார். உடனே சமையற்காரன், ''அதுதான் நிச்சயமாக அந்தப் பாது காப்பு நிலையமாக இருக்கவேண்டும். அவர்கள் சீக்கிரத்திலேயே நம்மைப் பார்த்து விடுவார்கள். நம்மைக் காப்பாற்ற விரை விலேயே அவர்கள் வரலாம்'' என்றான்.

தூரத்தில் தெரிந்த கலங்கரை விளக்கு உயர்ந்து நன்றாகவே தெரிந்தது. ''அதன் அதிகாரி தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலம் பார்த்தால், நம்முடைய நிலையை அறியலாம். அறிந்து உயிர் மீட்சியாளர்களுக்கு செய்தி சொல்லி யனுப்பவும் கூடும்,'' என்று காப்டன் சொன்னார்.

''கப்பலை விட்டுச் சென்ற மற்ற படகுகளில் ஒன்றுகூட இன்னமும் கரை சேர்ந்திருக்காதென்றே தோன்றுகிறது. சேர்ந் திருந்தால் உயிர் மீட்சிப் படகுகள் இதுகாறும் நம்மைத் தேடிக் கொண்டு வந்திருக்குமே,'' என்றான் தணிந்த குரலில் வேலைக்காரன்.

நிலப் பரப்பு மேலும் பெரிதாகிக் கொண்டு வந்தது. மறு படியும் காற்று வீச ஆரம்பித்தது. வடகிழக்குத் திக்கிலிருந்து இபபோது தென் கிழக்காக வீசிற்று, சிறிது நேரத்திற்கெல்லாம் புது ஓசை படகிலிருந்தவர்களுக்குக் கேட்டது. கரையோரத் திலிருந்து அலைமோதும் ஒலிதான் அது. இடி இடிப்பது போன்று முழங்கியது.

''இனி நாம் கலங்கரை விளக்கை ஒருபோதும் சேரமுடியாது. படகை மேலும் வடக்குப் புறமாகவே திருப்பிச் செலுத்து பில்லி,'' என்று காப்டன் உத்தரவிட்டார்.

''மேலும் வடக்காகவா, ஐயா, அப்படியே,'' என்றான் வேலைக்காரன்.

எனவே படகின் முன்புறம் இப்போது மறுபடியும் காற்று வாட்டத்திலேயே திரும்பிச் சென்றது. துடுப்புப் போட்டுக் கொண்டிருந்தவனைத் தவிர மற்றவர்களெல்லாம் கரை பெரி தாகிக்கொண்டே வந்ததைப் பார்த்தனர். இதைப் பார்த்துக் கொண்டிருந்ததில் அவர்கள் மனத்திலிருந்த சந்தேகங்களும் பயங் களும் அவர்களைவிட்டு அகல ஆரம்பித்தன. படகைச் செலுத்திக் கொண்டு போகும் வேலை இன்னமும் அவர்கள் கவனத்தைக் கவர்ந்தது. இதற்கிடையில் கரையை அடையப் போகிறோம் என்ற சந்தோஷமும் நிலவியது. அநேகமாக இன்னும் ஒரு மணி நேரத்தில் அவர்களெல்லோரும் கரையை அடைந்துவிடக்கூடும்.

இடைவிடாது துடுப்புப் போட்டதாலும் அடைபட்டுக் கிடந்ததாலும் அவர்களுடைய முதுகெலும்பெல்லாம் அச்சிறு படகில் லாவகமாக சம நிலையிலிருக்கப் பழகிப் போய்விட்டன.



குதிரைக் குட்டி மீது சர்க்கஸ்காரர்கள் சவாரி செய்வதுபோல் இவர்கள் இப்படகில் பிரயாணம் செய்தனர். தான் தொப்ப மாக நனைந்து விட்டதாகவே நிருபர் எண்ணினார். ஆனாலும் சட்டையின் மேல் ஜேபியைத் தடவியபோது எட்டுச் சுருட்டுகள் அதிலிருந்தது தெரிந்தன. அவற்றில் நான்கு கடல் நீரில் நன்றாக ஊறிக் கிடந்தன. மற்ற நான்கும் நன்றாகவே இருந்தன. படகில் எங்கேயோ தேடி யாரோ ஒருவன் உலர்ந்த தீக்குச்சிகள் மூன்று எடுத்தான். சுருட்டை ஆளுக்கொன்றாகப் பற்ற வைத்துக் கொண்டு மிகுந்த நம்பிக்கையுடனும், எந்த நிமிஷத்திலும் தங்களுக்கு உதவி கிடைக்கலாம் என்ற எண்ணத்துடனும் அலட்சியமாகப் படகில் அவர்கள் அமர்ந்திருந்தனர். எல்லோரும் கொஞ்சம் தண்ணீர்கூட குடித்தனர்.

## 4

''என்ன சமையற்காரரே. உங்களுடைய பாதுகாப்பு நிலையத் தில் மனித சஞ்சாரமே இருப்பதாகத் தெரியவில்லையே,'' என்றார் காப்டன்.

''இல்லையா! விசித்திரமாக இருக்கிறதே. அவர்கள் இன்ன மும் நம்மைப் பார்க்காதது விந்தையே!'' என்றான் சமையற் காரன்.

கரையோரம் நிலப்பரப்பு பரந்து விரிவாகச் சமவெளிபோல் அவர்களுக்கு முன்னால் தெரிந்தது. பயிர் செய்யப்பட்ட வயல்கள் கறுப்பாகத் திட்டுத் திட்டாகத் தெரிந்தன. கரையோரம் அலை யோசை நன்றாகவே கேட்டது. கரைமீது மோதிய அலை நுரையாக மாறித் தவழ்ந்து சென்றதைக்கூட அவர்களால் காண முடிந்தது. ஒரு சிறிய வீடு கறுப்பாகத் தெரிந்தது. தெற்கே கலங்கரை விளக்கு மெலிந்து உயர்ந்து நின்றதும் தெரிந்தது.

அலையும், காற்றும் சேர்ந்து படகை வடக்கு நோக்கித் தள்ளிக் கொண்டு சென்றன. ''அவர்கள் இன்னமும் நம்மைப் பார்க்கா தது ஆச்சரியமாக இருக்கிறது,'' என்று படகிலிருந்தவர்கள் சொல்லிக் கொண்டனர்.

கரைமீது மோதிய அலைகளின் ஓசை இப்போது தூரத்தில் தணிந்து கேட்டது. ஆனாலும் இடி முழக்கம் போல் பயங்கரமாகக் கேட்டுக் கொண்டுதானிருந்தது. சுருண்டு சுருண்டு அடித்த பெரும் அலைகள் மீது படகு தத்தித் தத்தித் சென்றபோது அவர்கள் அதையே பார்த்துக் கொண்டிருந்தனர். ''நாம் முழுகிப் போவது நிச்சயம்'' என்று எல்லோரும் ஒருமுகமாகச் சொன்னார்கள்.

அங்கே கரையில் இருபது மைல் தூரத்திற்கு இரு திசையிலும் உயிர்-மீட்சி நிலையம் ஏதுமில்லை என்பதை இங்கே குறிப்பிடுவது நல்லது. இது படகிலிருந்தவர்களுக்குத் தெரியாது. அதனால் அந் நிலையத்திலிருக்கும் உயிர் மீட்சிக்காரர்களின் பார்வைத்

திறனைப்பற்றிக் கேலியாகப் பேசிக்கொள்ள இவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது. அவர்களைச் சபிப்பதில் டிங்கியிலிருந்த நால்வரும் ஒருவரையொருவர் மிஞ்சிக் கொண்டிருந்தனர்.

“ஆச்சரியமல்லவா, அவர்கள் இன்னமும் நம்மைப் பார்க்கவில்லையே?”

சற்று முன் அவர்களிடமிருந்த நம்பிக்கையும் அலட்சிய பாவமும் இப்போது நன்றாகவே மறைந்து விட்டது. கூர்மையான அவர்கள் புத்திக்குக் கரையிலிருந்தவர் குருடர் போலவும், கோழைகளாகவும், கையாலாகாதவர்கள் போலவும் தான் காணப்பட்டனர். அவர்களுக்கு முன்னால் ஜன நடமாட்டம் மிகுதியாயுள்ள நிலப்பரப்பு தெரிகிறது. ஆனால் அதிலிருந்து எவ்வித எச்சரிக்கையோ அழைப்போ வராதது எரிச்சலைத்தான் ஏற்படுத்தியது.

காப்டன்தான் முடிவாகப் பேசினார். “நாம் ஒவ்வொருவரும் தனித்தனியே முயற்சி செய்து கரை சேருவதுதான் உசிதம் என்று தோன்றுகிறது. ஏனென்றால் இப்படியே நெடுநேரம் நாம் இங்கே இருந்து விட்டால் படகு கவிழ்ந்ததும் நீந்திச் செல்லப் போதிய வலிமையிராது” என்றார் அவர்.

எனவே துடுப்புப் போட்டுக் கொண்டிருந்த வேலைக்காரன் படகை நேராகக் கரையைப் பார்த்துத் திருப்பினான். புது உற்சாகத்தில் எல்லோரிடத்திலும் பரபரப்பு காணப்பட்டது. அவரவர்கள் சிந்தனை செய்யவும் தொடங்கி விட்டனர்.

“நாம் எல்லோரும் கரை சேராவிட்டால், ஆமாம், நாம் எல்லோரும் கரை சேரவில்லையானால், என்னுடைய முடிவைப் பற்றி யாருக்குச் செய்தி சொல்ல வேண்டுமென்று உங்களுக்குத் தெரியுமோ இல்லையோ?” என்று காப்டன் சொன்னார்.

உடனே அவர்கள் ஒருவருக்கொருவர் சில விலாசங்களும் கடைசி வார்த்தைகளும் பரிமாறிக் கொண்டனர். அவர்களின் சிந்தனையில் கோபமும் குரூரமும்தான் மேலோங்கி நின்றது. அவர்களுடைய மனவெழுச்சிகளை வார்த்தைகளாகச் சொல்ல வேண்டுமானால் அவை இப்படித்தான் இருக்கும்.

“நான் கடலில் முழுகிப் போகவேண்டியிருந்தால், நான் முழுகிச் சாகவேண்டும் என்றிருந்தால், பாழாய்ப்போன கடவுள் என்னை ஏன் இவ்வளவு தூரம் அழைத்துக்கொண்டு வந்து எதிரில் நிலப்பரப்பையும், மரங்களையும் மணற் பரப்பையும் எனக்குக் காட்ட வேண்டும். பிழைத்து விட்டேன் என்று உற்சாகத்துடன் இருக்கும்போது கைக்கெட்டியது வாய்க்கு எட்டாமற் போனாற் போல் மென்னியைப் பிடித்துக் கடலுக்கே இழுத்துச் செல்வதற்காகவா இப்படி என்னை அலைக்கழித்தாய்? இது நினைக்கக் கூடாதது. விதி என்ற அந்தப் பயித்தியக்காரிக்கு இதைக் காட்டிலும் திறமையாகத் தன் சாமர்த்தியத்தைப் பிரயோகம் செய்யத் தெரியவில்லையானால் மனிதர்களின் நன்மை தீமைகளை நிர்வாகம் செய்யும் பொறுப்பையே அவளிடமிருந்து எடுத்து விடத்தான்



வேண்டும். புத்தியே இல்லாத ஒரு பெட்டைக் கோழி என்றே அவளை நினைக்கவேண்டும். எங்களைக் கடலில் மூழ்கடிக்க வேண்டும் என்று அவள் முன்கூட்டியே நிர்மானித்திருந்தால், ஆரம்பத்திலேயே இதை ஏன் செய்யவில்லை? இவ்வளவு கஷ்டங்களும் எங்களுக்கு மிஞ்சியிருக்குமே! இதெல்லாம் அர்த்தமற்றதாகவே காண்கிறது.—ஒருவேளை அப்படி இருக்காது. நாங்கள் மூழ்கிச் சாக வேண்டுமென்பது அவள் எண்ணமாக இருக்காது. என்னை அவள் முழுகும்படி விடமாட்டாள், நிச்சயமாக விட மாட்டாள். இவ்வளவு தூரம் கடும் முயற்சிக்குப் பிறகா? இருக்காது.”

இவ்வாறுதான் அவர்கள் சிந்தனை ஓடிற்று. இறுதியில் முஷ்டியை உயர்த்தி வானத்தைப் பார்த்து, “எங்களை மட்டும் முழுகிச் சாக அடி. உன்னை என்னவெல்லாம் சபிக்கிறேன் பார்,” என்று கூட அவர்கள் சொல்லியிருப்பார்கள்.

இந்தச் சமயம் அடித்த அலைகள் மிகவும் கடுமையாக இருந்தன. ஒவ்வொரு அலையும் இந்தப் படகின் பக்கத்திலே சரிந்து விழுந்து நீரும் நுரையும் படகை நிறைத்து விடும்போல் காணப்பட்டது. ஏதோ ஒரு தாக்குதலுக்கு ஏற்பாட்டுடன் முற்படுவது போல் ஒவ்வொரு அலையும் எழும்பி வந்தது. கொந்தளிக்கும் கடலின் தன்மையை உணர்ந்த எவனும் இந்த டிங்கி எப்படி இவ்வலை மதில்களைச் சமாளிக்கப் போகிறதென்று ஐயமே கொள்வான். கரை இன்னும் வெகு தூரத்தில் தானிருந்தது. வேலைக்காரன் கரையோரம் நீந்திச் செல்வதில் சமர்த்தன். “நண்பர்களே, படகு இன்னும் மூன்று நிமிஷத்திற்கு மேல் தாங்காது. நாம் நீந்திச் செல்ல முடியாது. ஏனெனில் கரை இன்னமும் வெகு தூரத்தில் தானிருக்கிறது. படகை மறுபடியும் கடலுக்கே செலுத்தட்டுமா, காப்டன்?” என்று அவன் கேட்டான்.

“நல்லது. அப்படியே செய்” என்றார் காப்டன்.

அந்த வேலைக்காரன் ஏதோ அற்புதம் நிகழ்த்துவதுபோல் வெகு சாமர்த்தியமாக அந்தப் படகை கரையோரம் அலைகளில் சிக்காமல் ஒரு நொடியில் திருப்பி ஜாக்கிரதையாகக் கடலுக்கே கொண்டு சேர்த்துவிட்டான். தந்நித்தத்திப் படகு ஆழ்கடலை அடைந்தபோது படகில் மௌனம்தான் நிலவியது. சோகத்தின் நடுவே எவனோ ஒருவன், “இப்போதாவது நம்மைக் கரையில் அவர்கள் நிச்சயமாகப் பார்த்திருக்க வேண்டும்” என்றான்.

கடற் பறவைகள் காற்றை எதிர்த்து கிழக்கு நோக்கிப் பறந்து சென்றன. தென் கிழக்குக் கோடியிலிருந்து கறுப்புப் புகைப்படலமும் செங்கல் நிற சிவப்பு ஒளியும் கலந்து எரிந்து கொண்டிருந்த கூட்டத்திலிருந்து வானை நோக்கிப் பரவிச் சென்றது தெரிந்தது.

“அந்த உயிர்ப் பாதுகாப்பு நிலையத்திலுள்ளவர்களைப் பற்றி நீ என்ன நினைக்கின்றாய்? அவர்கள் மிகவும் கெட்டிக்காரர்களல்லவா?” என்றான் ஒருவன்.

"அவர்கள் நம்மைப் பார்க்காதது ஆச்சரியமாகவே இருக்கிறது," என்றான் மற்றொருவன்.

"ஒருக்கால் நாம் உல்லாசமாகப் பொழுது போக்க இப்படிப் படகில் செல்லுகிறோம் என்று அவர்கள் நினைத்தார்களோ? அல்லது மீன் பிடிக்கப் போய்க்கொண்டிருக்கிறோம் என்று எண்ணினார்களோ? அல்லது நாம் எல்லோரும் முழு முட்டாள்கள் என்று எண்ணிவிட்டு, எக்கேடாவது கெட்டுத் தொலையட்டும் என்று விட்டு விட்டார்களோ?" என்றான் இன்னொருவன்.

அன்று பிற்பகல் நீண்டு கொண்டே சென்றது. திசை மாறி அடித்த அலை ஒன்று அவர்களைத் தெற்காகச் செல்ல வைத்தது. ஆனால் சிற்றலையும் காற்றும் வடக்கேயே உந்தியது. வெகு தூரம் முன்னால் கடற்கரையும், கடலும் வானமும் ஒன்றாகக் கூடிய மூலையில் சிறு சிறு புள்ளிகள் போல் ஏதோ தென்பட்டது. அங்கே ஒரு நகரம் இருந்ததுபோல் தோன்றியது.

"அது ஸெயின்ட் அகஸ்டினாக இருக்குமோ?" என்றான் ஒருவன்.

"ஆமாம்" என்று காப்டன் தலையை அசைத்தார். "மஸ்கிடோ இன்லெட்டுக்கு அருகிலிருக்கிறது." என்றார்.

வேலைக்காரன் துடுப்புப் போட்டான். பிறகு நிருபர் போட்டார்; பிறகு வேலைக்காரன் மாற்றிக் கொண்டான். அது சோர்வையுண்டாக்கிய வேலை. உடற்கூற்று சாஸ்திரப் புத்தகங்களில் விவரிந்திருப்பதைவிட அதிகமான வலிகளுக்கும் நோய்களுக்கும் மனிதனுடைய முதுகு ஆகக்கூடும் என்பதை அவர்கள் அப்போது நன்றாகவே உணர்ந்தனர். முதுகுப்புறம் என்னமோ சிறு பிரதேசம்தான். ஆனால் அந்த இடத்தில்தான் எத்தனைவித தசை நோய்கள், குத்தல்கள், பிடிப்புகள், சுளுக்குகள், முடிச்சுகள் இன்னும் விவரிக்க முடியாத எண்ணிறந்த உபாதிகள் இருந்தன!

"நீ எப்போதாவது துடுப்புப் போடுவதை விரும்பியதுண்டா, பில்லி?" என்று நிருபர் கேட்டார்.

"இல்லையப்பா! இதைப் போய் யார் விரும்புவார்," என்றான் வேலைக்காரன்.

துடுப்புப் போடும் ஆசனத்திலிருந்து படகின் அடிப்புறத்திற்கு இடம் மாற்றிக்கொள்ளும்போது ஏற்படும் அசதியில் எவனுக்கும் ஒன்றுமே தோன்றாது. ஒத்தை விரலை மட்டுமே அசைக்கப் போதுமான சக்தியிருக்கும். சில்லென்று கடல் நீர் இப்படியும் அப்படியும் படகில் வாரியடித்த வண்ணமிருந்தது. அதன்மீதுதான் அடியில் அவன் உட்கார வேண்டும். அவன் தலை பக்கவாட்டில் பலகைமீது சாய்ந்திருக்கும். அலை அடித்தால் ஒரு அங்குலத்தில் தான் தப்பிக்கும்படி அவ்வளவு நெருங்கியே இருக்கவேண்டும். சில சமயங்களில் கட்டுக்கடங்காத கடல் பொங்கி அவன்மீது நீரை வாரியடித்து விடும். அங்கிருப்பவன் இதையெல்லாம் பொருட்படுத்த மாட்டான். அதனால் சலிப்படைவதுமில்லை, ஒருக்கால் படகு கவிழ்ந்தால், தண்ணீரில் தூக்கி வீசப்பட்டுக் கடலே ஒரு மிருதுவான மெத்தை போலல்லவா இருக்கும் அவனுக்கு.



"அதோ பார்! கரையில் ஒரு மனிதன் தென்படுகிறான் கவனி!"

"எங்கே?"

"அதோ அங்கே! பார்க்கிறாயா? தெரிகிறதா?"

"ஆமாம், தெரிகிறது. அவன் நடந்துகொண்டிருக்கிறான்."

"இப்போது அவன் நின்று விட்டான், பார்! அவன் நம்மைப் பார்த்து நிற்கிறான்!"

"நம்மைப் பார்த்து ஏதோ கையை ஆட்டுகிறானே!"

"ஆமாம், கையை ஆட்டுகிறான். கடவுளே!"

"பேஷ். இப்போது நமக்கு எல்லாம் சரியாக ஆகிவிடும். எல்லாம் சரியாக முடிந்துவிடும். இனிமை. அரை மணியில் ஒரு படகு நம்மை நோக்கி வரக்கூடும்."

"அவன் மேலே நடந்து செல்லுகிறான். இப்போது அவன் ஓடுகிறான். அதோ அந்த வீட்டை நோக்கி ஓடுகிறான்."

தொலைதூரத்தில் தெரிந்த கடற்கரை கடலைவிடத் தாழ்ந்த மட்டத்திலிருப்பது போலக் காணப்பட்டது. அங்கே ஓடிய அந்தச் சிறிய வடிவத்தைத் துருவித்துருவித்தான் காணவேண்டியிருந்தது. ஒரு கழி மிதந்து வருவது காப்டனுக்குத் தெரிந்தது. அதை நோக்கிப் படகைச் செலுத்தினர். படகில் அதிர்ஷ்டவசமாகக் கிடந்த ஒரு துவாலையை அதில் கட்டி, காப்டன் தூக்கிப் பிடித்து அதை ஆட்டினார். துடுப்புப் போட்டவன் திரும்பிப் பார்த்தால் குட்டிச் சுவராகிவிடும். எனவே, என்ன ஆயிற்று என்று கேள்வி கேட்டே தெரிந்துகொள்ள வேண்டியிருந்தது.

"அவன் இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறான்?"

"அவன் அப்படியே நின்றுகொண்டிருக்கிறான். இப்போது எதையோ பார்க்கிறான் என்று நினைக்கிறேன்—திரும்பவும் போகிறான்—வீட்டை நோக்கி—மறுபடியும் நின்றுவிட்டான்."

"நம்மைப் பார்த்து கையை ஆட்டுகிறானா?"

"இல்லை, இப்போது இல்லை. சற்று முன்னால் ஆட்டிக் கொண்டிருந்தான்."

"அதோ, இன்னொரு மனிதன் வருகிறான்!"

"அவன் ஓடுகிறான்."

"அவனையே பார்த்துக் கொண்டிரு; என்ன செய்கிறான் என்று கவனி."

"அட, அவன் ஒரு சைக்கிளில் சவாரி செய்கிறான். அவன் அந்த முதல் மனிதனைச் சந்தித்துவிட்டான். அவர்களிருவரும் நம்மைப் பார்த்துக் கையை ஆட்டுகின்றனர், பார்!"

"பீச்சுப் பக்கத்திலிருந்து ஏதோ வருகிறதே."

"ஆமாம். அது என்ன?"

" ஏன், அது ஒரு படகுபோலவேதான் தோன்றுகிறது."

" ஆமாம், அது ஒரு படகுதான், சந்தேகமில்லை."

" இல்லை. அது ஒரு சக்கரத்தின் மீதல்லவா நகருகிறது."

" ஆமாம், ஆமாம். அது ஒரு உயிர்-மீட்புப் படகாக இருக்கலாம். பீச்சின் மேல் அதை வண்டிபோல் தள்ளிக்கொண்டு தானே வரவேண்டும். அப்படித்தான் வருகிறார்கள்."

" நிச்சயமாக அது உயிர்-மீட்சிப் படகுதான்."

" கடவுளே, இல்லையப்பா—அது ஒரு மோட்டார் பஸ்."

" நான் சொல்லுகிறேன். அது ஒரு உயிர்-மீட்சிப் படகு."

" இல்லவே இல்லை. அது ஒரு பஸ். எனக்கு நன்றாகவே தெரிகிறது. நீயே பார். தெரிகிறதா ? அது ஹோட்டலைச் சேர்ந்த பெரிய பஸ்."

" ஆமாம், நீங்கள் சொல்லுவது சரிதான். அட ஆண்டவனே! அது பஸ்தான். அங்கே ஒரு பஸ்ஸை வைத்துக்கொண்டு என்ன செய்கிறார்கள் என்று நினைக்கிறீர்கள்? ஒருக்கால் படகுக்காரர்களை அழைத்து வருவதற்காக இருக்கலாமோ ? உங்களுக்கு என்ன தோன்றுகிறது ?"

" இருக்கலாம்—அதோ பார். ஒரு சிறுவன் ஒரு கறுப்புக் கொடியை ஆட்டிக்கொண்டிருக்கிறான். பஸ்ஸின் படிகளில் அவன் நின்றுகொண்டிருக்கிறான். முதலில் சொன்ன அந்த இருவரும் அங்கே வந்துவிட்டனர். எல்லோரும் கூடி ஏதோ பேசிக்கொண்டிருக்கிறார்கள். கொடி வைத்துக்கொண்டிருக்கும் பையனைப் பார். அவன் நம்மைப் பார்த்து அதை அசைக்கவில்லையோ ?"

" அது கொடியே அல்ல. அது அவனுடைய கோட்டு. ஆமாம், நன்றாகத் தெரிகிறதே. அது அவனுடைய கோட்டுத்தான்."

" ஆமாம். அது அவன் கோட்டு. அதைச் சுழற்றி தலைக்கு மேல் சுழற்றிக் கொண்டிருக்கிறான். அவன் அதைச் சுழற்றுவதைப் பார்."

" இதோ பார், இங்கே உயிர்-மீட்சி நிலையம் ஒன்றும் இல்லை. அது மாரிக்காலப் பிரயாணிகளுக்காக உள்ள ஒரு ஹோட்டல். அந்த பஸ் சில பிரயாணிகளை ஹோட்டலுக்கு அழைத்து வந்திருக்கிறது, அவ்வளவுதான்."

" அப்படியானால் அந்த முட்டாள் ஏன் கோட்டைச் சுழற்றிக் கொண்டேயிருக்கிறான். அவன் என்னதான் நமக்குச் சொல்ல விரும்புகிறான் ?"

" நம்மை வடக்காகச் செல்லும்படி சொல்லுவதாகத் தோன்றுகிறது. அங்கே உயிர்-மீட்சி நிலையம் ஏதேனும் இருக்க வேண்டும் என்று எண்ணுகிறேன்."

" இல்லை, நாம் இங்கே மீன் பிடித்துக்கொண்டிருக்கிறோம் என்று எண்ணுகிறான் போலும். நமக்கு அங்கிருந்தபடியே அவன் வாழ்த்துக் கூறுகிறான். என்ன, வில்லி, நீயே பார் !"

" அவன் காட்டும் அசைவுகளிலிருந்து ஏதாவது புரிந்தால்



தேவலை. அவன் என்ன சொல்லக்கூடும் என்று உனக்குத் தோன்றுகிறது."

" அவன் ஒன்றும் நமக்குச் சொல்லவில்லை. அவன் விளையாடிக் கொண்டிருக்கிறான்."

" அவன் நம்மைப் பார்த்து மறுபடியும் கரைக்கு வா என்றோ, அல்லது கடலுக்கே போய்க் காத்திரு என்றோ, அல்லது வடக்கே செல், தெற்கே செல் என்றோ, அல்லது நரகத்துக்குத் தான் தொலைந்து போ என்றோ சொன்னால் அதில் அர்த்தமுண்டு. ஆனால் அந்த மண்டுவைப் பார்! நின்ற இடத்திலேயே நின்று கொண்டு சக்கரம் போல் கோட்டைச் சுழற்றுகின்றானே, கழுதைப் பயல் !" என்றான் ஆத்திரம் பொங்க அவன்.

" மேலும் பல பேர்கள் வருகிறார்கள்."

" இப்போது ஒரு கூட்டமே கூடிவிட்டது. அதோ பார் ! அது ஒரு படகுதானே. இல்லையா ?"

" அந்தப் பயல் இன்னமும் கோட்டைச் சுழற்றிக்கொண்டேயிருக்கிறான் !"

" அவன் அவ்வாறு செய்வதை நாம் எல்லோரும் பார்த்துக் களிக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறானோ, என்னமோ ? அதை ஏன் நிறுத்தித் தொலைக்கவில்லை. அதற்கு ஒரு பொருளும் இல்லையோ ?"

" அதற்கென்ன அர்த்தமோ ? அவன் நம்மை வடக்கே செல்லுமாறு எச்சரிக்கிறான் என்று எண்ணுகிறேன். அங்கேதான் ஏதாவது மீட்சி-நிலையம் இருக்கிறதோ என்னமோ ? அப்படித்தான் இருக்கவேண்டும் !"

" அவனுக்கு இன்னமும் சோர்வு ஏற்படவில்லையே. அதோ பார். திரும்பவும் கோட்டைச் சுழற்றுகிறானே !"

" இப்படி எவ்வளவு நேரம்தான் செய்கிறானோ பார்ப்போம். நம்மைப் பார்த்தது முதல் இப்படித்தான் அவன் செய்துகொண்டிருக்கிறான். அவன் ஒரு முட்டாள். ஒரு படகைப் பிடித்து நமக்கு உதவிக்கு ஏன் இன்னமும் அனுப்பவில்லை ? ஒரு மீன் பிடிக்கும் படகு—அல்லது வேறு ஏதாவது—இவ்வளவு நேரம் இங்கு வந்து சேர்ந்திருக்குமே ? அவன் ஏதாவது செய்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்."

" இப்போது எல்லாம் சரியாகிவிட்டது."

" அப்படியென்றால் எந்த நிமிஷத்திலும் அவர்கள் ஒரு படகுடன் நம்மை நோக்கி வரலாம். அவர்கள்தான் நம்மைப் பார்த்துவிட்டார்களே."

இப்போது நிலப்பகுதியின் மீது, வானத்தில் லேசாக மஞ்சள் நிறம் பரவ ஆரம்பித்தது. கடல்மீது சூழ்ந்திருந்த நிழல்களும் நிலைபெற்று நின்றன. காற்று 'சில்'லென்று வீசியது. படகிலிருந்தவர்கள் குளிரால் நடுக்குற்றனர்.

" ஆண்டவனால் அனுப்பப்பட்ட புகைப்படலம் போலும் !

இம்மாதிரி இங்கே இரவு பூராவும் தத்தளித்துக்கொண்டிருந்தால், மூழ்கிச் சாகட்டும் என்று கடவுள் துணை புரிகிறார்,'' என்று சொன்னான் ஒருவன்.

'' நாம் இரவு முழுதும் இங்கேயா இருக்கப் போகிறோம், நிச்சயமாக இல்லை. நீங்கள் கவலைப்பட வேண்டாம். அவர்கள் நம்மைக் கண்டுவிட்டார்கள். எந்த நிமிஷத்திலும் உதவிக்குப் படகு வரலாம்,'' என்றான் இன்னொருவன்.

கரை சாம்பல் நிறமடைந்தது. சோகம் படர்ந்ததுபோல் காணப்பட்டது. கோட்டைச் சுழற்றிக் கொண்டிருந்தவன் இந்த மங்கிய வெளிச்சத்தில் மறைந்து போனான். பஸ்ஸும், மனிதர் கூட்டமும் எல்லாம் மறைந்தன. படகின்மீது அலை மோதிச் சிதறிய வெண் திவலைகள் படகிலிருந்தவர்களை மெய்சிலிர்க்க வைத்தது; உடம்பில் சூடு போடுவது போலிருந்தது.

'' அந்தக் கோட்டை சுழற்றிய பயலைப் பிடித்து நன்றாக உதைத்தால் தேவலை. அப்படியாவது நமக்கு அதிர்ஷ்டம் திரும்புகிறதா, பார்க்கலாம்.''

'' ஏன், அவன் என்ன செய்தான்? '' என்றான் ஒருவன்.

'' அவன் ஒன்றும் செய்யவில்லைதான். அவன் சந்தோஷமாகக் காணப்படுகிறானே. அவனுக்கென்ன அவ்வளவு உற்சாகம்.''

வேலைக்கான் துடுப்புப் போட்ட வண்ணமிருந்தான். நிருபர் சற்றுநேரம் மாற்றிக்கொண்டார். மறுபடியும் வேலைக்காரன் வாங்கிக்கொண்டான். இவ்வாறாக மாறிமாறி ஒரு யந்திரம் போல் படகைச் செலுத்தினர். தெற்கு அடிவானத்திலிருந்து கலங்கரை விளக்கு மறைந்து விட்டது. மங்கிய ஒளிமட்டும் நட்சத்திரம்போல் தெரிந்தது. மாலைப்பொழுதின் மஞ்சள் வெளிச்சமும் இருட்டில் மறைய ஆரம்பித்தது. கிழக்கே கடல் கருமையாக மாறியது. கரை கண்ணை விட்டகன்றது. கரைமீது மோதும் அலையோசை தூரத்தில் படிப்படியாகக் குறைந்து கொண்டே கேட்டது.

மறுபடியும் படகில் கவலை சூழ்ந்தது. '' நான் கடலில் மூழ்கி இறந்துதான் போகவேண்டுமென்றால், எதற்காக இவ்வளவு தூரம் என்னை இழுத்து வந்து, நிலத்தையும், மணற்பரப்பையும் மரங்களையும் கண்குளிரக் காணச் செய்தாய்? பாலாடைக் கட்டியை உண்ணப்போகும் சமயத்தில் என்னைப் பிடித்திழுத்துச் செல்லுவது போலல்லவா இருக்கிறது இது,'' என்று பழைய பாட்டையே மறுபடியும் படகிலுள்ளோர் முணுமுணுத்தனர்.

நிதானத்தை இழக்காத காப்டன் தண்ணீர் பீப்பாயின்மீது சாய்ந்தபடியே ''படகின் நுனி மேலே இருக்கும்படியே செலுத்து. எப்படியும் படகு மிதக்கவேண்டும்,'' என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

அன்று மாலைப்பொழுது எவ்விதத்திலும் அமைதியாகத்தான் இருந்தது. எல்லோரும் சோர்வுற்றிருந்தனர். அவர்கள் குரலும்



தணிந்து ஒலித்தது. துடுப்புப் போட்டவனைத் தவிர மற்றவர்கள் படகின் அடிப்புறத்தில் கவலையுடன் முடங்கிக் கிடந்தனர். துடுப்புப் போட்டவனோ சப்தமின்றி பாய்ந்து வரும் அலைகளை மட்டும் அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது.

சமையற்காரனின் தலை பக்கவாட்டில் சாய்ந்திருந்தது. தண்ணீர்ப் பரப்பை உணர்ச்சியின்றி பார்த்தவண்ணம் படுத்திருந்தான். அவன் சிந்தனை வேறு எங்கோ வட்டமிட்டுக்கொண்டிருந்தது. கடைசியாக, '' பில்லி, எந்த மாமிசத்தில் ஆசை அதிகம் சொல்லு,'' என்று கனவில் பேசுவது போல் வேலைக்காரனைப் பார்த்துக் கேட்டான் சமையற்காரன்.

## 5

'' மாமிசமா? '' என்று நிருபரும், வேலைக்காரனும் ஏக காலத்தில் பரபரப்புற்றவர்கள் போலக் கேட்டனர்.

'' இம்மாதிரி விஷயங்களைப் பற்றி இப்போது பேசாதே. நீ நாசமாய்ப் போக! ''

'' நல்லது, நான் பன்றி இறைச்சி ஸாண்டுவிச்சுகளைப் பற்றி யோசனை செய்துகொண்டிருந்தேன். மேலும்......... ''

நடுக்கடலில் ஒரு திறந்த படகில் மிதந்து செல்லும்போது இரவு காலம் நீண்டுகொண்டே போகும். இரவு நன்றாக படர்ந்த போது தெற்கிலிருந்து கடலில் தெரிந்த வெண்மை ஒளி முழு மஞ்சளாக மாறியது. வடக்கு அடிவானத்தில் நீலம் படர்ந்த புது நிறம் தோன்றத் தொடங்கியது. கடல் நீரின் பரப்பின் மேலே படர்ந்த நீலம்தான் அது. இவ்விரு நிறங்கள்தான் அப்போதைக்கு வெளிச்சம் எனக் கூறத் தகுந்தவை. மற்றப்படி எல்லாம் அலைகள், அலைகள். அலைகளைத் தவிர வேறொன்றும் இல்லை.

படகின் பின்புறத்தில் இருவர் முடங்கிக் கிடந்தனர். படகில் இடைவெளியின் நெருக்கத்தைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை. துடுப்புப் போட்டுக் கொண்டிருந்தவன் தன் பாதங்களை இவ்விருவர் நடுவிலும் திணித்து அவர்கள் உடலுஷ்ணத்தால் தன் கால்களுக்கும் சூடுண்டாக்கிக் கொண்டான். முடங்கிக் கிடந்தவர்கள் கால்கள் நன்றாக நீட்டப்பட்டு படகு தள்ளிக்கொண்டிருந்தவன் ஆஸனத்தின் அடியில் சென்று எதிர்க்கோடியிலிருந்த காப்டனைக்கூடத் தொட்டன. சிலசமயம் துடுப்புப் போடுபவனின் சாமர்த்தியத்தையும் மிஞ்சி அலை அடித்துப் படகில் தண்ணீர் புகுந்துவிடும். ஐஸ் கட்டி போன்ற அலையும் சில்லிட்ட கடல் நீரும் படகிலிருந்தவர்களைப் புதிதாக நனைக்கும். அப்போதெல்லாம் அவர்கள் உடல்களைச் சிறிது புரட்டப் பார்ப்பார்கள்; சற்று முனகுவார்கள். மறுபடியும் பழையபடியே உறங்குவார்கள்; அடித்துப் போட்டது போல் தூங்குவார்கள். அவர்களைச் சுற்றி

தேங்கியிருக்கும் தண்ணீர் படகு அசையும்போது மேலும் கீழும் ஓடும்.

ஒருவன் நன்றாகக் களைத்துப் போகும் மட்டும் துடுப்புப் போடுவது, பிறகு கடல் நீர்ப் படுக்கையிலிருந்து மற்றவனை எழுப்புவது என்று நிருபரும் வேலைக்காரனும் தங்களுக்குள் திட்டம் போட்டு இருந்தனர்.

அதன்படி வேலைக்காரன் தன் தலை தொங்கிச் சாயும் வரையில் எதிரே வரும் அலையைக் கூட கவனிக்க முடியாதபடி தூக்கம் கண்ணைச் சுழட்டும் வரைத் துடுப்புப் போட்டான். அதற்கு மேலும் கூடப் போட்டான். பிறகு படகின் உள்ளே படுத்திருந்த ஒருவனைத் தட்டி எழுப்பி, "நீ கொஞ்சம் படகு தள்ளுகிறாயா?" என்று சங்கோசத்துடனே கேட்டான்.

"நிச்சயமாக, பில்லி," என்று பதிலளித்த நிருபர், தன்னை மெதுவாக உட்காரும் நிலைக்குக் கொண்டுவந்தார். அவரும் வேலைக்காரனும் மிகவும் ஜாக்கிரதையாக இடம் மாற்றிக் கொண்டனர். கீழே தேங்கியிருந்த கடல் நீரில் பொத்தென்று விழுந்த வேலைக்காரன் அடுத்த கணம் தூங்கிப் போய்விட்டான்.

கடலின் கொந்தளிப்பு இப்போது கொஞ்சம் அடங்கியிருந்தது. அலைகள் உறுமுதலின்றி வீசின. துடுப்பு போடுபவனின் முக்கிய வேலை என்னவென்றால் வேகமாக அடித்த பெரும் அலையில் படகு நத்தளித்து முழுகாமல், அதன் முன்புறத்தை உயர்த்தியே செலுத்தவேண்டும். அலை அடித்து ஓய்ந்ததும் தண்ணீர் உள்ளே புகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். கருமை நிறம் கொண்ட அலைகளை இருட்டில் சரிவரக் காண்பதே கடினம். பல தடவை அலை படகின்மீது மோதியபிறகே அலை அடித்தது தெரியும்.

தணிந்த குரலில் நிருபர் காப்டனை அழைத்தார். காப்டன் விழித்துக்கொண்டிருக்கிறாரோ இல்லையோ என்று அவருக்குச் சந்தேகம். அந்த இரும்பு மனிதன் மட்டும் எப்போதும் விழிப்புடன்தானிருந்தான். "படகை வடக்கே தெரியும் அந்த வெளிச்சத்தை நோக்கிச் செலுத்தட்டுமா, ஐயா?" என்றார்.

உறுதியான அதே குரலில் காப்டன் பதிலளித்தார். "செலுத்து. இன்னும் இரண்டு விரலத்தனை அப்பால் தள்ளி செலுத்து. நேர் வடக்காக வேண்டாம்."

சமையற்காரன் மிதக்கும் பெல்டை அணிந்து அதனால் கிடைக்கக்கூடிய சிறிது உஷ்ணத்தைப் பெற்று நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தான். சாதாரணமாகவே படகு தள்ளியவன் பற்கள் குளிரில் தந்தியடிக்கும்போது இவன் மட்டும் கணப்பின் முன்னிருப்பது போல் கதகதப்பாகவே இருந்தான்.

படகைச் செலுத்திக் கொண்டிருந்த நிருபர் தன் காலுக்கடியில் தூங்கிக்கொண்டிருந்த இருவரையும் பார்த்தார். சமையற்காரனின் கைகள் வேலைக்காரன் தோள்களை அணைத்துக்கொண்டிருந்தது. சோர்வுற்ற முகத்துடனும் குறைந்த உடையுடனும்



அவ்விருவரும் சமுத்திரத்தின் குழந்தைகளெனவே காட்சியளித்தனர். வனத்தின் குழந்தைகள் என்று கதை சொல்லுவதுண்டு. இங்கே இவர்கள் கடலின் குழந்தைகளெனவே விளங்கினர்.

அவர் தன் வேலையில் சிறிது கவனம் குறைந்திருக்கவேண்டும். ஏனெனில் ஒரு அலை திடீரென்று படகைத் தாக்கி நுரையும் நீருமாய்ப் படகிற்குள் புகுந்து 'விர்'ரென்ற ஓசையுடன் அப்பால் சென்றது. மிதக்கும் பெல்டை அணிந்திருந்த சமையற்காரனை அது மிதக்காமல் விட்டது ஆச்சரியந்தான். அவன் தூக்கத்திலிருந்து விழித்துக்கொள்ளவே இல்லை. ஆனால் வேலைக்காரன் மட்டும் நடுங்கியபடி மிரளமிரள விழித்தான்.

"பில்லி, நான் மிகவும் வருந்துகிறேன்," என்று நிருபர் பச்சாத்தாபத்துடன் சொன்னார்.

"பரவாயில்லை, நண்பனே," என்று சொல்லிவிட்டு மறுபடியும் தண்ணீர் மீதே படுத்துக்கொண்டான். உடனே தூக்கம்.

சிறிது நேரத்திற்கெல்லாம் காப்டன் கூடத் தூங்கிவிட்டது போலத் தோன்றியது. அந்த சமயத்திற்குத் தான் ஒருவன் மட்டும் கடலில் மிதந்து கொண்டிருப்பதாகவே நிருபர் எண்ணினார். அலையுடன் கலந்தடித்த காற்று ஏதோ செய்தி கொண்டு வருவது போலத் தோன்றியது. என்ன செய்தி? சோகச் செய்தியாகத்தான் இருக்கும்.

படகுக்குப் பின்னால் கடலில் ஏதோ சளசளவென்ற சப்தம் இடைவிடாது கேட்டுக்கொண்டிருந்தது. அந்த ஓசையுடன் நீலவர்ணத் தீக்கொழுந்துபோல், கந்தகத்தின் ஒளிபோல் கரிய அலைகளைப் பிளந்துகொண்டு ஒரு ஒளி தெரிந்தது. அது பிரம்மாண்டமான ஒரு கத்தியால் கடலைக் கீறியதுபோல் காணப்பட்டது.

சிறிது நேரத்திற்கெல்லாம் அமைதியடைந்து விட்டது. நிம்மதியடைந்த நிருபர் திறந்த வாயை மூடாமலே கடலை உற்று நோக்கினார்.

திடீரென்று மறுபடியும் முன்போலவே சளசளவென்ற சப்தம், அதே நீலவர்ணத் தீக்கொழுந்தின் பிரகாசம். ஆனால் இப்போது அது படகின் பக்கத்திலேயே சென்றது. படகை எட்டிப்போட்டிருந்தால் அதைத் தொட்டுக்கூட இருக்கலாம். பூதாகாரமான ஒரு மீன் கடலையே கிழித்துக்கொண்டு வேகமாகச் சென்றது தெரிந்தது. அது போன பாதை பளபளவென்று ஒளி வீசியது. ஆம், அது ஒரு சுறா மீன்!

நிருபர் தன் தோள் பக்கம் திரும்பிக் காப்டனைப் பார்த்தார். அவர் முகம் மறைந்திருந்தது. தூங்குவது போலவே காணப்பட்டார். கடல் குழந்தைகளைப் பார்த்தார். அவர்கள் நிச்சயமாகத் தூங்கிக்கொண்டிருந்தனர். தனக்கு ஆறுதல் சொல்லக்கூட ஒருவருமில்லாமல் தனித்து விடப்பட்ட நிருபர் ஒரு புறமாகத் திரும்பி கடலைப் பார்த்து மெதுவாகச் சபித்தார்.

ஆனால் அந்தப் பொல்லாத மீன், படகை விட்டு அப்பால்

சென்றதாகத் தெரியவில்லை. முன்னாலோ, பின்னாலோ, இந்தப் பக்கத்திலோ, அந்தப் பக்கத்திலோ, விட்டுவிட்டு, குறுக்கும் நெடுக்குமாக அது அங்கேயே வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அதே பிரகாசமான கோடு, 'அதே 'விர்'ரென்ற ஓசை, அதே வேகம், அதே வலிமையுடன் அது கடலை ஒரு பாணம் துளைப்பது போல் கிழித்துச் சென்றது. அதன் வேகத்தையும் வலிமையையும் வியக்கத்தான் வேண்டும்.

இது படகோட்டியவனை எவ்விதத்திலும் கலங்கடிக்கவில்லை. ஒரு உல்லாசப் பிரயாணியாகவிருந்தால் அவன் திகிலடைந்து போயிருப்பான். ஆனால் நிருபர் கடலைப் பார்த்தபடியே அடித் தொண்டையிலேயே சபித்துக்கொண்டிருந்தார்.

எனினும் இந்தச் சமயத்தில் அவர் தனித்திருப்பதை விரும்பவில்லை. தன்னுடைய சகாக்களில் ஒருவனாவது யதேச்சையாக விழிப்படைந்தால் கூடத் துணையாக இருக்குமே என்று எண்ணினார். ஆனால் காப்டனோ தண்ணீர்ப் பீப்பாய் மீது சாய்ந்தபடியே இருந்தார். மற்ற இருவரும் படகடியில் தூக்கத்திலாழ்ந்திருந்தனர்.

## 6

" ஏ, கடல் காக்கும் தெய்வங்களே. நான் கடலில் முழுகிச் செத்துப்போக வேண்டுமென்று என் விதி இருந்தால், இவ்வளவு தூரம் எதற்காக என்னை இழுத்து வந்து கரையையும், மணற் பரப்பையும் மரங்களையும் காணும்படி செய்தீர்கள்?"

இந்த எண்ணம் மறுபடியும் எழுந்தது நிருபருக்கு. இந்தக் காரிருள் சூழ்ந்த இரவில், கடல் காக்கும் தெய்வங்களின் சித்தம் தன்னை நிச்சயமாக முழுகடிக்க வேண்டும் என்பதே என்றுதான் எவனுக்கும் அந்தச் சூழ்நிலையில் எண்ணத்தோன்றும். அது அநீதியாக இருக்கலாம். இவ்வளவு கடும் உழைப்பிற்குப் பின், கஷ்டங்களனுபவித்த பிறகு ஒருவனை முழுகடித்துக் கொல்லுவது அக்கிரமம்தான். இயற்கை நியதிக்கு முற்றிலும் மாறுபட்ட அநீதி. கடலில் எத்தனை எத்தனையோ பேர்கள் மூழ்கிச் செத்துப்போயிருக்கிறார்கள். ஆனால்,.........

இயற்கை அன்னை தன்னை ஒரு முக்கியமான பொருளாகவே மதிக்கவில்லை என்றும், சாகடிக்கக்கூடத் தான் அருகதையற்றவன் என்றும் அறிந்தால் அப்படிப்பட்ட இயற்கைத் தேவதை மீது ஏன் கல்லை விட்டெறியக் கூடாதென்றுதான் எவனுக்கும் தோன்றும். ஆனால் இயற்கையன்னைக்கு ஒரு கோவிலும் இல்லை. அதன்மீது வீசி எறியக் கல்லும் இல்லை என்று உணர்ந்தபோது வெறுப்புணர்ச்சி தான் மேலோங்கி நிற்கும். இயற்கை மட்டும் ஒரு உருக்கொண்டு தோற்றமளிக்கட்டும்! அதைக் கட்டாயம் கேலி செய்து பழிக்கவே தோன்றும்.

அவ்வாறு பழிக்க உருவம் எதுவும் தோன்றவில்லையானால், ஒரு



உருவத்தைக் கற்பனை செய்துகொண்டு அதன் முன்னால் மண்டியிட்டு, கையை நீட்டி ஒரு பக்தன் பிரார்த்திப்பதுபோல், " நான் உன்னை வெறுத்தது உண்மைதான். ஆனால் அதற்குக் காரணம் உயிர் மீது எனக்குள்ள பற்றுதலே," என்று துதிக்கத்தோன்றும்.

ஆனால் இயற்கை உருவத்தின் தோற்றம்போல் இவனுக்குத் தோன்றியதெல்லாம் அந்த மாரிக்கால இரவில் வானத்தில் தோன்றிய ஒரு நட்சத்திரம் தான். இதுதான் இயற்கை இவனுக்குக் காட்டிய உருவம். இதைக் கண்டு இவன் என்ன செய்யமுடியும்! அவன் சோகம் முன்னைவிடப் பன்மடங்கதிகரித்தது.

இவ்வாறெல்லாம் அந்தப் படகிலிருந்தவர்கள் வாய்விட்டுப் பேசித் தங்கள் உணர்ச்சிகளை வெளிப்படுத்தவில்லை. அவனவன் மனோசக்திக்கேற்ப இவ்வாறுதான் ஒவ்வொருவனும் எண்ணினான். முகத்திலே களைப்பைத்தவிர வேறு எந்தக் குறியும் காணப்படவில்லை. வாயைத் திறக்கவே இல்லை. சாமர்த்தியத்தையெல்லாம் படகைச் செலுத்துவதிலே காட்டினார்கள்.

உள்ளத்து உணர்ச்சிகளுக்கு இயைந்தொலிப்பதுபோல் நிருபருக்குத் தன்னையறியாமல் ஒரு பாட்டு தோன்றிற்று. அந்தக் கவிதையை மறந்திருந்தார், ஆனால் எப்படியோ அவர் மனத்தில் அது அப்போது தோன்றியது.

படையணியில் வீரனொருவன்
அல்ஜியர்ஸ் நாடதனில்,
படுத்திருந்தான் மரணத்தை எதிர்நோக்கி
மருந்து கொடுத்து பணி புரிய
மென் கரங்கள் அங்கில்லை,
மாண்டிடிலோ கண்ணீர் சிந்த
மங்கையர்களெவருமில்லை ;
எல்லாம் நானே என்று ஆறுதல்
கூறி அருகில் நின்றான் தோழன் ஒருவன்,
அன்புடன் அவன் கரம் பற்றினான்
சாவுக்குக் காத்திருந்த அவ்வீரன்
" அந்தோ, என் நாட்டை, நான்
பிறந்த தாயகத்தை இனி நான் காண்பேனோ,
என்று நான் காண்பேன்," என
ஏங்கியே புகன்றனன் ; அவன்
ஆவியும் அகன்றதே !

அவனுடைய சிறு வயதில் இந்தக் கதையை நிருபர் கேட்டிருந்தார். அல்ஜியர்ஸில் எவனோ ஒரு வீரன் மரணப்படுக்கையில் இருந்தானாம். ஆனால் இது ஒரு முக்கிய விஷயமாக அவனுக்கு அந்தக் காலத்தில் தோன்றவில்லை. அவனுடைய மனோநிலையையும், சோகத்தையும் அவன் பள்ளித் தோழர்களெல்லாம் அவனுக்குப் பன்முறை எடுத்துக் காட்டினர். ஆனால் அவனுக்கு அதெல்லாம் ஒன்றும் புரியவில்லை. எங்கோ அல்ஜியர்ஸில் ஒரு சிப்பாய் மரணப்

படுக்கையில் இருந்தால் இவனுக்கு என்ன வந்தது? துக்கப்பட வேண்டியதற்கு என்ன இருக்கிறது. ஒரு பென்ஸில் கூர் ஒடிந்து போனால் எவ்வளவு அசட்டையுடனிருப்பானோ அப்படித்தான் இருந்தான் அவன்.

ஆனால் இப்போது, இந்தச் சூழ்நிலையில் அந்தச் சம்பவம் உயிர் பெற்று, உணர்ச்சி பெற்று விளங்கியது உல்லாசமாக தேநீர் அருந்திக்கொண்டு கணப்பின் முன் கதகதப்பாக உட்கார்ந்த கவிஞன் உள்ளத்திலெழுந்த ஒரு சொற் சித்திரம் அன்று இந்தக் காட்சி. இது முற்றிலும் உண்மை—பயங்கரமான, சோகமயமான, உன்னதமான உண்மையே.

அந்த சிப்பாய் நிருபரின் கண் முன் நின்றான். அவன் கால்கள் மணற் பரப்பில் நீட்டிக் கிடந்தன. அசைவற்று உணர்வற்றுக் கிடந்தன. வெளிறிப்போன இடது கரத்தால் மார்பை அழுத்தி, பிரிந்து செல்லும் ஆவியைத் தடுத்து நிறுத்துவதுபோல் பதிந்திருந்தது. விரல்களுக்கிடையே ரத்தம் பாய்ந்திருந்தது. வான வெளியைப் பின்னணியாகக் கொண்டு அல்ஜியர்ஸ் நகரம் தோற்றமளித்தது. மாலை சூரியன் மங்கி மறைந்து கொண்டிருந்தான். அந்தச் சிப்பாயின் உதடுகள் முணுமுணுத்தன. மேலே சொன்ன வார்த்தைகள் அவன் வாயிலிருந்து வந்தன. இந்தக் காட்சியே உயிர் பெற்று விளங்கிற்று. அவ்வீரனுக்காக தாபப்பட்டது நிருபரின் உள்ளம்.

படகு தள்ளிக்கொண்டேயிருந்த நிருபரின் சிந்தனை இப்படி ஓடியது. படகைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்ட அந்த சுறா மீனுக்குக் கூட இந்தப் படகின் போக்கு ஆயாசத்தை உண்டுபண்ணியிருக்க வேண்டும். அதன் நீலநிற ஒளியும், மின்னல் வேகமும் இப்போது காணவில்லை. வடக்கே மட்டும் ஒளி இன்னமும் பளிச் பளிச்சென்று தெரிந்தது. ஆனால் அது படகுக்கு அருகில் எங்குமில்லை. சில சமயம் கரைமீது மோதிய அலையோசை நிருபருக்கு நன்றாகவே கேட்டது. அப்போதெல்லாம் படகைக் கடல் பக்கமே திருப்பி பலமாகத் துடுப்புப்போட்டார். தெற்கே கடற்கரையில் யாரோ காவலுக்காக தீ மூட்டியிருந்தார்கள். வெகுதூரத்தில் தாழ்வான பிரதேசத்திலிருந்தமையால் அதன் ஜுவாலையைக் காண முடியவில்லை. ஒளியையும் அருகிலிருந்த குடிசைகள் மீது படர்ந்த நிழலையும் படகிலிருந்தே காணமுடிந்தது. காற்று பலமாக வீசியது. சிலசமயம் அலை, காட்டுப் பூனைபோல் சப்தத்துடன் அடித்தது. அலை தெறித்துச் சிதறுவது அவ்வப்போது தெரிந்தது.

படகின் முன்புறமிருந்த காப்டன் தண்ணீர் பீப்பாய் மீது சிறிது அசைந்து கொடுத்தார். பிறகு நிமிர்ந்து உட்கார்ந்து "இரவு என்ன இப்படி நீண்டுகொண்டே போகிறதே," என்றார் நிருபரைப் பார்த்து. அவர் கரையைப் பார்த்தார். "அந்த உயிர் மீட்சி நிலையத்தார் மிக சாவதானமாகத்தான் வேலை செய்வார்கள் போலிருக்கிறது," என்று அங்கலாய்த்தார் காப்டன்.



"அந்த சுறா மீன் படகைச் சுற்றி விளையாடிற்றே, நீங்கள் கவனித்தீர்களா?"

"ஆமாம், கவனித்தேன். அது மிகவும் பெரிய சுறா மீன் தான். சந்தேகமில்லை."

"நீங்கள் விழித்துக் கொண்டுதானிருந்தீர்கள் என்று எனக்குத் தெரியாமல் போயிற்றே!"

பிறகு படகில் தூங்கிக் கொண்டிருந்தவர்களைப் பார்த்துப் பேசினார். "பில்லி!" என்றார். கீழே ஏதோ சலனம் தெரிந்தது. ஒருவன் மெதுவாக தன்னை அந்நிலையிலிருந்து விடுவித்துக் கொண்டான். "பில்லி, நீ கொஞ்சம் துடுப்புப் போடுகிறாயா?" என்றார் நிருபர்.

"நிச்சயமாக," என்றான் வேலைக்காரன்.

இடம் மாற்றிக்கொண்டு, நிருபர் படகினடியில் சென்றதும், அங்கே தேங்கிக் கிடந்த கடல் நீர் ஆனந்தமான படுக்கையென அவரை வரவேற்றது. சமையற்காரருடைய மிதக்கும் பெல்டின் பக்கத்திலேயே தலையை சாய்த்ததும் அடுத்த நிமிஷம் தூக்கத்திலாழ்ந்தார். பற்கள் மட்டும் தந்தியடித்துக் கொண்டே இருந்தன. ஒரு நிமிஷம்தான் தூங்கியதுபோல் காணப்பட்டது அவருக்கு. அதற்குள், வேலைக்காரன் துடுப்புப் போட்டு களைத்துக் கடைசி கட்டத்தில் கீழே சாய்ந்துவிடும் நிலையில், "நீ கொஞ்சம் துடுப்புப் போட வருகிறாயா?" என்ற குரல் கேட்டு விழித்துக் கொண்டார்.

"அப்படியே போடுகிறேன், பில்லி," என்று நிருபர் தன்னிடத்தை விட்டகன்றார்.

வடக்கே தெரிந்த ஒளி மாயமாய் எங்கோ மறைந்து விட்டது. ஆனால், நன்றாகவே விழித்துக் கொண்டிருந்த காப்டனிடமிருந்து திசை கேட்டு நிருபர் படகைச் செலுத்தினார்.

பிறகு அந்த இரவில் அவர்கள் படகை மேலும் கடலுக்கே செலுத்தினர். சமையற்காரனை பின்புறம் ஒரு துடுப்பு போடும் படிக்கும், படகைக் கடல் நோக்கியே இருக்கச் செய்யவும் கட்டளையிட்டார். கரையோரம் அலை ஓசை கேட்டால் குரல் கொடுத்து தன்னை எச்சரிக்க வேண்டுமென்றும் சொன்னார். இந்தத் திட்டத்தின்படி, வேலைக்காரனுக்கும் நிருபருக்கும் சேர்ந்தாற்போல் ஓய்வு கிடைத்தது. "அவர்களிருவரும் மறுபடியும் பழைய நிலையை அடைய கொஞ்சம் அவகாசம் கொடுக்க வேண்டும்." என்று அநுதாபத்துடன் சொன்னார் காப்டன். இருவரும் படகில் பழையபடி முடங்கினர். சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு இருவரும் அடித்துப் போட்டதுபோல் தூங்கிப்போயினர். சமையற்காரனுக்குத் துணையாக மற்றொரு சுறா மீனை அவர்கள் விட்டுச் சென்றார்களென்பதை அவர்களிருவருமே அப்போதைக்கு உணரவில்லை.

அலைகள்மீது தவழ்ந்து சென்றபோது, நீர்த்திவலைகள்

படகில் புகுந்து உறங்கிக் கொண்டிருந்தவர்களை மறுபடியும் நினைத்தது. அதனால் அவர்கள் தூக்கம் என்னவோ கலையவில்லை. காற்றடித்தாலும், அலை வீசினாலும் சிலைகளைப்போல் அவர்கள் நிலை குலையவே இல்லை.

"நண்பர்களே, படகு கரைக்கு மிகச் சமீபமாக வந்து விட்டது போல் தோன்றுகிறது. உங்களில் 'யாராவது ஒருவன் வந்து உதவினால் திரும்ப இதைக் கடலுக்குச் செலுத்த முடியும்," என்று சமையற்காரன் தயக்கத்துடனே சொன்னான். விழித்துக் கொண்ட நிருபருக்கு கரை மீது மோதிய அலை ஓசை நன்றாகவே கேட்டது.

துடுப்புப் போட்டதால் கொஞ்சம் விஸ்கியும், சோடாவும் கலந்து காப்டன் அளித்தார். அது குளிரைப்போக்க உதவிற்று. "நான் கரை சேர்ந்ததும் எவனாவது ஒரு துடுப்பின் படத்தைக் காண்பித்தால் கூட அவனை........" என்று தன் வெறுப்பை நிருபர் தெரிவித்தார். சிறிது சம்பாஷணை நடந்தது அவர்களுக்குள்ளே.

"பில்லி, பில்லி, நீ கொஞ்சம் துடுப்புப் போடுகிறாயா."

"நிச்சயமாக," என்று பதில் கொடுத்தான் வேலைக்காரன்.

## 7

நிருபர் மறுபடியும் கண் விழித்தபோது கடலும் வானமும் ஒரே மாதிரி கபில நிற வர்ணம் பெற்று விடியற்கால வேளை என்பதை உணர்த்திற்று. சிறிது நேரத்திற்கெல்லாம் சிவப்பும் மஞ்சளும் நீர்ப்பரப்பில் வர்ணமடித்தது போல ஒளிவீசின. காலைப் பொழுது வந்துவிட்டது. நீல வானுடனும் இளஞ் சூரியனின் ஒளிக்கதிர்கள் அலை உச்சிகளைத் தங்க நிறமாக்கின.

வெகு தூரத்தில் தெரிந்த கரையில் கறுப்பாகக் குடிசைகள் பல தென்பட்டன. அவற்றின் நடுவே ஒரு காற்றாடி ஓங்கி உயர்ந்து நின்றுகொண்டிருந்தது. மனிதனோ, சைக்கிளோ, ஏன், ஒரு நாய்க்குட்டிகூட பீச்சில் காணவில்லை. மனித சஞ்சாரமற்ற குடிசைகளோ அவை என்று எண்ணத் தோன்றியது.

படகிலிருந்தவர்கள் கரையைத் துருவித் துருவிப் பார்த்தனர். நால்வருக்குள் சிறு ஆலோசனை நடந்தது. "நமக்கு எவ்வித உதவியும் வரவில்லையானால் நாம் கரைப் பக்கம் உடனே திரும்பி அலைகளைச் சமாளித்து போவதுதான் நல்லது. இப்படியே நாம் இருந்தால் உடல் வலிமையை இழந்து நமக்கு ஒன்றுமே செய்து கொள்ள முடியாத நிலைமைக்கு வந்து விடுவோம்," என்றார் காப்டன். மற்றவர்கள் பேசவில்லையானாலும் இதில் பொதிந்துள்ள உண்மையை அங்கீகரித்தனர். படகு கரையை நோக்கித் திருப்பப்பட்டது. நிருபருக்கு இவ்வளவு உயரமாக ஒரு காற்றாடி இருந்தும் அதன்மீது ஒருவனாவது ஏறி கடற்பக்கம் தன் பார்வையைத் திருப்பாதது விந்தையாகவே பட்டது.



எறும்புகள் போலிருந்த அவர்களின் நிலைமைக்கு முன் இந்தக் காற்றாடி ஒரு பிரமமாண்டமான உருவம் போல் கம்பீரமாக இருந்தது. பல்வேறு இன்னல்களைச் சமாளித்துக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் மனிதனுக்கு முன் அசைவற்று இயற்கையின் அமைதி பெற்று இந்தக் காற்றாடி காட்சியளித்தது. காற்றிலும் மனித உள்ளத்திலும் ஊடுருவி நிற்கும் இயற்கையின் கற்பனா வடிவம் இதுதானோ என்று நிருபருக்கு எண்ணத் தோன்றியது. அது ஒன்றும் இவர்களுக்குக் கெடுதி செய்யவில்லை. ஆனால், நல்லதும் செய்யவில்லை. அதன் போக்கில் அது சும்மா அலட்சியமாகத்தான் பார்த்துக் கொண்டு நின்றது. அதன் அலட்சியம் தான் நிருபருக்குக் கோபத்தை உண்டாக்கியது. உலகமே தன்னை ஒரு பொருட்டாக மதியாது அலட்சிய பாவத்துடனிருக்கும்போது, நிருபரின் நிலையிலிருந்த எந்த மனிதனுக்குமே தன்னுடைய வாழ்க்கையில் அதுவரையில் குற்றங்களெனக் கருதப்பட்ட சம்பவங்களெல்லாம் உண்மையில் குற்றங்களே அல்ல என்றுதான் எண்ணத் தோன்றும். அம்மாதிரிச் சம்பவங்களை மறுபடியும் மனத்தில் எண்ணி மகிழவும் தோன்றும். நன்மை தீமை, நல்லது கெட்டது என்பதன் பாகுபாட்டை அப்போது மிகத் தெளிவுடன் உணர முடிகிறது. ஆனால் உண்மையில் ஆபத்தான நிலையில் அகப்பட்டுத் தத்தளிக்கும்போது, எவனுமே தன் வாழ்க்கையில் தான் செய்த குற்றங்களுக்கு வருந்தி, தான் மறுபடியும் புனர் வாழ்வு வாழ வகை ஏற்பட்டால், தான் முற்றிலும் திருந்தி ஒரு புது மனிதனாகவே வாழவேண்டும் என்று உறுதிகொள்ளுவது சகஜமே. இம்மாதிரி மனோ நிலையில் ஊசலாடிக் கொண்டிருந்தார் நிருபர். காப்டனின் எச்சரிக்கை அவர் சிந்தனையைக் கலைத்தது:

"கவனியுங்கள் நண்பர்களே. படகு நிச்சயமாக இப்போது கவிழ்ந்து விடும். நாம் இப்போது செய்யக்கூடியது அதை முடிந்த வரையில் கரையோரம் செலுத்திப் போவதுதான். மூழ்கிப் போகும்போது, எல்லோரும் கடலில் குதித்துக் கரையை நோக்கி நீந்திச் செல்லுங்கள். இப்போது சாவதானமாகவே இருங்கள். படகு மூழ்கும்போது குதித்தால் போதும்," என்று காப்டன் விரிவாகத் திட்டத்தை விளக்கினார்.

வேலைக்காரன் துடுப்பை வாங்கிக் கொண்டான். தோளுக்கு மேல் கரையையும், அதில் மோதிக்கொண்டிருக்கும் அலைகளின் வேகத்தையும் ஆராய்ந்தான். "படகைத் திருப்பி, முன்புறம் கடலை நோக்கியிருக்கும்படிச் செய்து, பின்புறமாகவே கரையை அணுகலாமென்று தோன்றுகிறது, காப்டன்," என்று வேலைக்காரன் சொன்னான்.

"அப்படியே செய், பில்லி, பின்புறமாக படகைத் தள்ளிக் கொண்டு போ," என்று காப்டன் ஆமோதித்தார். வேலைக்காரன் படகைத் திருப்பினான். கடலை நோக்கி உட்கார்ந்திருந்த சமையற்காரனும், நிருபரும் படகின் பின்புறத்தில் அமர்ந்திருந்த

தால் கரையைப் பார்க்க அடிக்கடித் தலையைத் திருப்பித் திருப்பித் தான் பார்க்க வேண்டியிருந்தது.

கரையை நோக்கி மோதிக்கொண்டிருந்த பயங்கரமான சுருள் அலைகள் படகை அடிக்கடி உச்சிக்கு உயர்த்தியது. அப்போதெல்லாம் சரிவான கடற்கரையும், அதில் அடித்த அலையின் வேகத்தையும் அவர்களால் நன்றாகவே காணமுடிந்தது. "கரைக்கு வெகு சமீபமாக நம்மால் போகமுடியாது," என்று காப்டன் சொன்னார். அலையிலிருந்து கவனம் திரும்பியதும், கரையின்மீது தான் ஒவ்வொருவனுடைய பார்வையும் லயித்திருந்தது. அந்தக் கூரிய பார்வையில் என்ன பாவம் தோன்றியது என்று விவரிக்க முடியாது. ஆனால் உறுதி இருந்தது. நிருபருக்கென்னமோ மற்றவர்களெல்லாம் சிறிதும் கலங்காமல் தைரியமாய் இருந்ததாகவே காணப்பட்டது.

தன்னைப் பொறுத்தமட்டில், அந்த நிலையில் முக்கிய அம்சம் என்ன என்பதை நிருபரின் மனம் இன்னமும் பூரணமாகக் கிரகித்துக்கொள்ளவில்லை. அதைப்பற்றிச் சிந்திக்க மனத்தைத் தூண்டிப் பார்த்தார். ஆனால் அது சிந்தனை செய்ய மறுத்தது. தசைகளின் ஆதிக்கம்தான் அப்போதைக்கு மேலோங்கி நின்றதுடன் எது வந்தாலும் வரட்டுமென்று அசட்டையாகத்தான் இருந்தது. இந்த இறுதிக் கட்டத்தில் அவர் முழுகி இறக்க நேர்ந்தால் அது அவமானப்படக்கூடிய விஷயமே என்பதில் மட்டும் சந்தேகமில்லை.

படகில் எவ்விதப் பரபரப்புமில்லை. எவனும் அவசர அவசரமாக மற்றவனிடம் விடைபெற்றுக்கொள்ளவில்லை. மனத்தில் பீதியும் இல்லை. இருதயம் துடிக்கவில்லை. அவர்கள் அமைதியுடனே கரையை நோக்கிய வண்ணமிருந்தனர். "ஞாபகமிருக்கட்டும், கடலில் குதிக்கும்போது, படகை விட்டுத் தாண்டிக் குதிக்கவேண்டும்," என்று காப்டன் வலியுறுத்தினார்.

ஒரு பயங்கர அலை கரையை மோதித் திரும்பி கடலில் சுருண்டு சுருண்டு இடியோசை போன்று விழுந்தது. அதன் வெண்மை நுரைப் படலம் 'விர்'ரென்று படகின்மீது பரவியது.

"ஜாக்கிரதை," என்று காப்டன் எச்சரித்தார். அவர்கள் மௌனமாகவே இருந்தனர். அவர்கள் கவனம் கரையிலிருந்து படகை நோக்கி வந்து கொண்டிருந்த ஒரு அலையின் மீது திரும்பியது. அதையே பார்த்து அதற்காகக் காத்திருந்தனர். அதன் சரிவில் படகு மேலே ஏறியது; பிறகு உச்சிக்குத் தாவியது; அதை ஒரே எட்டில் தாண்டி அலையின் முதுகில் நழுவி அப்பால் போயிற்று. தண்ணீர் கொஞ்சம் படகினுள் புகுந்து விட்டது. சமையற்காரன் அதை இறைத்துக் கொட்டினான்.

அதற்கடுத்த அலையும் அதேபோல் படகை அலைக்கழித்தது. கொந்தளித்து ஆவேசங்கொண்டது போன்ற அலை படகை செங்குத்தாகவே தூக்கிவிட்டது. நாலாபக்கத்திலிருந்தும் படகை நோக்கித் தண்ணீர் பாய்ந்தது. நிருபர் படகின் விளிம்பின் மீது



கையை வைத்துக்கொண்டிருந்தார். கடல் நீரை அதன்மீது வீசியபோது கைகள் நனைந்து போவதை விரும்பாதவர்போல் சட்டென்று உள்ளே இழுத்துக் கொண்டார்.

தண்ணீர் மிகுதியாக உட்புகுந்து விட்டதால் படகு தத்தளித்து கடலில் அமிழத் தொடங்கியது.

"தண்ணீரை இறைத்துக் கொட்டு, சீக்கிரம் கொட்டு, உடனே வாரிக் கொட்டு," என்று இரைந்தார் காப்டன்.

"அப்படியே, காப்டன்," என்றான் சமையற்காரன்.

"நண்பர்களே, அடுத்த அலை நம்மை நிச்சயமாக அமிழ்த்தி விடும். குதிக்கும்போது படகிலிருந்து கொஞ்ச தூரம் அப்பால் குதிக்கவும், கவனமிருக்கட்டும்," என்றார் காப்டன்.

மூன்றாவது அலை மிகவும் பெரியது. பயங்கர ஓசையுடன் எதிர்ப்பேயின்றி வந்தது. படகை அநேகமாக அது கபளீகரம் செய்துவிட்டதுபோல் தோன்றியது. படகைத் தாக்கிய அதே கணத்தில் அதிலிருந்த நான்குபேர்களும் கடலில் சிதறிவிழுந்தனர். ஒரு மிதக்கும் பெல்ட் படகின் அடிப்பாகத்தில் கிடந்ததல்லவா? கடலில் குதித்தபோது நிருபர் இதை தன் இடது கையால் மார்பில் அழுத்திக் கொண்டிருந்தார்.

ஜனவரி மாதத்தில் கடல் நீர் ஐஸ் போலிருக்கும். உண்மையில் ப்ளாரிடாவில் இருப்பதைவிட இங்கே அதிகம் சில்லிட்டிருந்ததைக் கடலில் குதித்ததுமே நிருபர் உணர்ந்தார். இது அப்போதைக்குக் கவனிக்கப்பட வேண்டிய ஒரு முக்கிய விஷயமாய் அவருக்குப்பட்டது. தண்ணீரின் குளிர்ச்சியே அவருக்குச் சோகமூட்டியது. இதை ப்ளாரிடா கடலின் குளிர்ச்சியுடன் ஒப்பிட்டுப் பார்த்தபோது அவருக்கு அழுகையே வந்துவிடும் போலிருந்தது. அவ்வளவு குளிர்ச்சியாக இருந்தது.

மிதந்து மேலே எழும்பியபோது அலை ஓசையைத் தவிர வேறு எவ்வித நினைவுமில்லை நிருபருக்கு. பிறகுதான் தன் நண்பர்களுடன் மிதந்து கொண்டிருப்பதைக் கவனித்தார். வேலைக்காரன்தான் எல்லோருக்கும் முன்னால் வலிமையுடன் வசமாகவே நீந்திக் கொண்டிருந்தான். நிருபருக்கு இடது பக்கத்தில் சிறிது தூரத்தில் சமையற்காரனின் அகன்ற முதுகு வெண்மையாகத் தண்ணீரில் மிதந்தது தெரிந்தது. அவர்களுக்குப் பின்னால் காப்டன் கவிழ்ந்த படகின் அடிப்புறத்தை ஒரு கையால் கெட்டியாகப் பிடித்தவாறு நீந்திக்கொண்டிருந்தார்.

கடற்கரைக்குத்தான் என்ன அசைவற்ற நிலையான தன்மை! கொந்தளிக்கும் கடலில் நிலையற்ற தன்மைக்கும், சஞ்சலத்திற்கும் எதிர்மறையாகவன்றோ இந்தக் கரை உறுதியுடன் நிற்கிறது. நிருபர் இதைப்பற்றி நினைத்து ஆச்சரியப்பட்டார்.

கரை தன்னை 'வா'வென்றழைத்தது. ஆனால் தான் வெகு தூரம் பிரயாணம் செய்த பின்னரே கரை சேர முடியும். எனவே சாவதானமாகவே நீந்தினார். மிதக்கும் பெல்ட் அவர் மார்பில்

ஒட்டிக் கொண்டிருந்தது. அதன் உதவியால் அலை முதுகில் பனிக் கட்டியில் சருக்குவதுபோல் அவரால் லாகவமாகச்செல்ல முடிந்தது.

ஆனால் ஒரு கட்டத்தில் மேலும் லாகவமாக முன் செல்லாதபடி தடங்கல்கள் ஏற்பட்டன. நீர்ப்போக்கின் வேகத்தாலும், அலையின் போக்காலும் ஏற்பட்டவை இந்த இன்னல்கள். இதைப் பற்றியெல்லாம் ஆராய்ச்சி செய்ய அவர் நீந்துவதை நிறுத்தவில்லை. எனினும் முன்னேற்றம் தடைப்பட்டது. அவருக்குமுன்னால் கடற்கரை நாடக மேடையில் தோன்றும் காட்சிபோல் நின்றது. ஒவ்வொரு விவரத்தையும் அவருடைய கண்கள் பருகின.

இடதுபுறம் தூரத்தில் சமையற்காரன் தன்னைக் கடந்து சென்றுகொண்டிருந்தான். அவனைப் பார்த்து உரத்த குரலிலே, "சமையற்காரரே, மல்லாந்து படுத்து மிதந்து செல்லு. மல்லாந்து படுத்துக்கொள், திரும்பி மல்லாந்து படு, துடுப்பை உபயோகப் படுத்திச் செல்," என்று காப்டன் கத்தினார்.

"அப்படியே" என்று பதில் கொடுத்த சமையற்காரன் மல்லாக்கத் திரும்பி, துடுப்பைத் தள்ளி படகு போவது போல, வேகமாக முன்னே போனான்.

கவிழ்ந்த படகைத் தள்ளிக்கொண்டே நிருபருக்கு இடது பக்கத்தில் காப்டனும் வந்து கொண்டிருந்தார். ஒரு வேலியின் மீது ஏறி அப்பால் என்ன நடக்கிறதென்பதைப் பார்ப்பவரைப் போலத் தோன்றினார் காப்டன். கவிழ்ந்த படகை விடாமல் தள்ளிக்கொண்டே அந்த அலைகடலில் சென்ற காப்டனின் சாமர்த்தியத்தை நிருபர் வியந்தார்.

எல்லோரும் கரையை அணுகிக் கொண்டிருந்தனர். வேலைக்காரன், சமையற்காரன், காப்டன், அவர்களுக்குப் பின்னால் அலை மீது ஆனந்தமாக மிதந்து வந்த அந்தத் தண்ணீர்ப் பிப்பா.

நிருபர் இப்போது 'கடல் நீரோட்டம்' என்னும் புது எதிரியின் வலையில் சிக்குண்டுத் தத்தளித்தார். எதிரில் கடற்கரை, வெண்மையான மணற்பரப்புடனும், பசுமையான சிறு குடிசைகளுடனும் ஒரு சித்திரம்போல் விரிந்து காட்சியளித்தது. எட்டிப் பிடிக்கும் தூரத்திலிருப்பது போலவே தோன்றியது. ஆனாலும் கலைக்கூடத்தில் பிரட்டானி அல்லது அல்ஜியர்ஸ் பற்றிய ஒரு வியத்தைப் பார்ப்பது போல இருந்தது.

அவர் சிந்தனை சுழன்றது. "நான் முழுகி இறந்து விடுவேனோ? அவ்வாறு நிகழக் கூடுமா? அப்படி நிகழுமா? அப்படியா முடிவு பெறும்?" என்றெல்லாம் அலை பாய்ந்தது. சிற்சில சமயங்களில் தன் முடிவுடன் பிரபஞ்சமே முடிவுற்றுவிட்டதென எண்ணத் தோன்றும். நிருபரின் நிலை அப்போதைக்கு அப்படித்தானிருந்தது.

ஆனால் சிறிது நேரத்தில் அவ்விடத்தில் அடித்த மற்றொரு அலை அந்தச் சிறு நீரோட்டச் சுழலிலிருந்து அப்பால் தள்ளியது. அவரால் கரையை நோக்கி நீந்த முடிந்ததை உணர்ந்தார். தடைப்பட்ட பிரயாணம் இப்போது தொடர்ந்தது. காப்டனும் கவிழ்ந்த



படகை இன்னமும் விடாமலே பக்கத்தில் வந்துகொண்டிருந்ததையும் அவர் கண்டார். நிருபரைப் பார்த்து, "படகுக்கு வந்துவிடு, படகுக்கு வா," என்று அழைத்துக் கொண்டிருந்தார்.

ஆனால் காப்டனையும் படகையும் அடைவது அவ்வளவு சுலபமாக இல்லை. தன் சக்தியெல்லாம் செலவழிந்து சோர்வுற்ற நிலைமையில் முழுகி இறந்து போவதுதான் சரியான ஏற்பாடு. தன் முயற்சிகளெல்லாம் ஓய்வுற்று, நிம்மதியடையும் நிலை. இவ்வாறு நிருபர் மனம் நினைத்தது. ஏனெனில் அந்த சிறிது நேரத்திற்கு ஏற்படும் கஷ்டத்தைக்கூட அவர் மனம் அநுபவிக்கத் தயாராக இல்லை. எங்காவது காயம் பட்டுத் தவிக்க வேண்டி வருமோ என்றும் ஏங்கியது அவர் நெஞ்சம்.

அதே நிமிஷம் கரையில் ஒருவன் ஓடிவந்ததைக் கண்டார். வெகு அவசரமாகத் தன் உடைகளைக் களைந்தான். கோட்டு, ஷர்ட்டு, நிஜார் எல்லாம் ஒரு நொடியில் வீசி அப்பால் எறியப் பட்டன.

"படகுக்கு வா," என்று காப்டன் திரும்பவும் நிருபரை அழைத்தார்.

"அப்படியே," என்று சொல்லி, அவர் பக்கம் சென்றார் நிருபர். கிட்டே நெருங்கியதும், காப்டன் சட்டென்று கடலில் முழுகி தன் பிடியிலிருந்து படகை விடுவித்தார். அப்போதுதான் நிருபர் அவர் செய்த அந்தப் பிரயாணத்தில் ஒரு அற்புதத்தை நிகழ்த்தினார். ஒரு பெரிய அலை அவரை அலக்காகத் தூக்கி கணப்பொழுதில் அந்தப் படகுக்கு அப்பால் எறிந்தது. கடல் நிகழ்த்தும் அற்புதங்களில் இது ஒன்று என்று அவருக்கு நிச்சயமாகப்பட்டது. சர்க்கஸ் வித்தைகளில் இதுவும் ஒன்றுதான். கடலில் நீந்திக் கொண்டிருக்கும் ஒருவனுக்கு கவிழ்ந்த படகு அப்படி ஒன்றும் விளையாட்டுச் சாமான் அன்று. படகில் அவர் அகப்பட்டுக் கொள்ளாதது நன்மையே.

ஏனெனில் அந்தச் சமயம் அவர் நின்றுகொண்டிருந்த இடத்தில் இடுப்பளவு ஆழம்தானிருந்தது. ஆனால் அந்த இடத்தில் ஒரு நிமிஷத்திற்கு மேல் நிற்க முடியவில்லை. ஒவ்வொரு அலையும் மேலே அடித்துத் தள்ளிற்று. கரையிலிருந்து திரும்பும் அலை பின்னுக்குத் தள்ளிற்று.

பிறகு முன்னம் அவசர அவசரமாகச் சட்டையைக் கழற்றி எறிந்து ஓடிக்கொண்டிருந்த அதே மனிதன் தண்ணீரில் குதித்துத் தன்னை நோக்கி வருவதைக் கண்டார். முதலில் அவன் கைக்கு அகப்பட்டவன் சமையற்காரன். அவனை இழுத்துக் கரை சேர்த்த பின் காப்டன் பக்கம் சென்றான். ஆனால் காப்டன் தனக்கு உதவிதேவையில்லை என்று நிருபர் பக்கம் போகும்படி சைகை காட்டினார். உதவிக்கு வந்தவன் நிர்வாணமாகவே இருந்தான். மாரிக் காலத்து பட்டுப்போன மொட்டை மரம்போல் நின்றான். ஆனால் அவன் தலையைச் சுற்றிலும் ஒருவித புனித சோபை

பொலிந்தது. ஒரு மகான் போலவே காட்சியளித்தான். நிருபரின் கையைப் பற்றி வலுவுடன் இழுத்ததுமன்றி, கரையோரம் வரை இழுத்துக்கொண்டே சென்றான். தன் நன்றியைத் தெரிவிக்க மறக்கவில்லை நிருபர். ''நன்றி, நண்பனே,'' என்று அவன் சொன்ன அதேகணம் ''என்ன அங்கே?'' என்று வேறு திசையை அவன் விரலால் சுட்டிக்காட்டிக் கேட்டான். நிருபர் தயங்காமல், ''உடனே சென்று, கவனியுங்கள்,'' என்று அவனை கேட்டுக் கொண்டார்.

ஆழமில்லாத கரையோரத்தில் வேலைக்காரன் குப்புற விழுந்து கிடந்தான். அவன் நெற்றி மணலில் புதைந்திருந்தது. ஒவ்வொரு அலையும் அவனை மேன்மேலும் கரைக்கு அடித்து மேலே தள்ளியது.

அதன் பிறகு நிருபருக்குத் தெரியாது. தரையை அடைந்ததும் அப்படியே விழுந்துவிட்டார். மணலில் உடலின் எல்லா பாகமும் பதிந்திருந்தது. அவன் விழுந்தது கூரை மேலிருந்து மணலில் குதித்தது போலிருந்தது. அந்த தரைகூட சோர்வுற்ற உடலுக்கு இதமாகவே இருந்தது.

ஒரு நொடியில் அந்த கடற்கரையோரத்தில் மக்கள் கூட்டம் கூடிவிட்டது. கம்பளங்கள் கொண்டு வந்தவர் சிலர், போர்வைகள் கொண்டு வந்தவர் சிலர். 'ப்ளாஸ்க்' கொண்டு வந்தவர் சிலர். காப்பி ஏந்தி வந்த பெண்கள் பலர். அவர்களுக்கு உயர்ந்தது என்று தோன்றிய சிகிச்சை முறைகளையெல்லாம் சொல்லினர். கடலிலிருந்து பிழைத்து வந்தவர்களுக்கு கரையிலிருந்தவர்களளித்த வரவேற்பும் அன்பும் ஆதரவும் மிகுந்திருந்தது. ஆனால் ஒருவனுக்கு மட்டும் வரவேற்பு வேறு விதமாக இருந்தது. சொட்டச் சொட்ட அந்த வேலைக்காரனின் சலனமற்ற சடலத்தை மெதுவாகக் கடற்கரைக்குக் கொண்டு சேர்த்தனர். அவனுக்குப் பாவம், ஒரு கல்லறைதான் வரவேற்பளித்தது.

அன்றிரவு சந்திர ஒளியில் வெண்மை நிற அலைகள் அடித்து காற்றும் மிதந்து வந்தபோது இந்த மூவரும் அந்தக் கடற் காற்று என்ன சேதி கொண்டு வருகிறது என்பதை உணர்ந்து கூறும் ஆற்றல் தங்களுக்கிருக்கிறது என்று பெருமையடித்துக்கொண்டனர்.

# நீல நிற ஹோட்டல்

ராம்பர் கோட்டை என்னும் அந்தச் சிற்றூரிலுள்ள ''பாலஸ் ஹோட்டல்'' கட்டிடம் பூராவும் இள நீல வர்ணப் பூச்சு அடிக்கப்பட்டிருந்தது. அது நாரையின் நீலம் பாய்ந்த கால்களை ஒத்திருந்தது. அந்தப் பறவையின் நீல நிறம் அதற்கு ஒரு தனி அழகைத் தந்தது. எந்தச் சூழ்நிலையிலும் அதன் இருப்பைக் குறிப்பாக எடுத்துக் காட்டும் தன்மையுடையது, அந்த ஹோட்டலும் அதே போன்று தனித்து விளங்கிற்று. வருவோரும் போவோருமாக எப்போதும் கலகலப்பாகவே இருந்தது. அந்த நெப்ராஸ்கா பிராந்தியத்தின் குளிர் காலத்தில் எல்லாமே அமைதியுடனும் நிசப்தத்துடனும் இருந்ததால் இவ்விடுதியின் கலகலப்பு இதைத் தனிப்பட எடுத்துக் காட்டியது.

பரந்த புல்வெளியில் தனித்து நின்றது அக் கட்டிடம். பனி பெய்யும் காலங்களில் இருநூறு கெஜ தூரத்திலுள்ள நகரங்கள் கூடக் கண்ணுக்குச் சரிவரப் புலப்படாது. பிரயாணிகள் ரெயில் நிலையத்தில் இறங்கினால் மரவீடுகளால் ஆன ராம்பர் கோட்டைக்குப் போக ''பாலஸ் ஹோட்டலை'க் கடந்துதான் செல்ல வேண்டும். எனவே எந்தப் பிரயாணியும் அந்த விடுதியைப் பார்க்காமல் செல்ல முடியாது. அதன் சொந்தக்காரன் பாட்ஸ்கல்லி. தனது ஹோட்டலுக்கு நீல வர்ணத்தைத் தேர்ந்தெடுத்ததிலிருந்தே அவன் தம் தொழிலில் திறமைசாலி என்பதை எடுத்துக் காட்டியது. மப்பு மந்தாரமற்ற நாட்களில் அந்தப் பரந்த அமெரிக்காக் கண்டத்தைக் கடந்து சென்ற 'எக்ஸ்பிரஸ்' ரெயில் தொடர் இந்நிலையத்தைத் தாண்டிச் செல்லும்போது, அப்பிரயாணிகள் அந்த ஹோட்டலின் தோற்றத்தைக்கண்டு அவ்வளவாக ரசிக்க மாட்டார்கள். பச்சைப் பசேலென்று காட்சியளித்த சூழ்நிலையிலும் சிவப்புக் கட்டிடங்களே மிகுதியாக இருந்த அந்தச் சுற்றுப் புறத்தில் இந்த நீலவர்ணக் கட்டிடம் அவர்களிடம் கேலிச் சிரிப்பைத் தான் உண்டு பண்ணியது. பலர் சிரிக்கக்கூடச் சிரித்தனர். ஆனால் அவர்களெல்லாம் ஓடும் ரெயிலில் உட்கார்ந்தபடியே இதைப் பார்த்துச் சென்றவர்கள். இப் புல்வெளியில் வாழ்ந்த மக்களுக்கும் மற்றும் இயல்பாக அங்குத் தங்கிச் செல்பவர்களுக்கும் பாட்ஸ்கல்லி ஒரு பெருத்த சாதனையே நிகழ்த்தியிருக்கிறான் என்றஎண்ணம் தான் மேலோங்கி நின்றது. ராம்பர் வழியே சென்ற பொழுது, இவ்வாறு அதன் செழுமையையும் சிறப்பையும் பற்றிய பல்வேறு கருத்து நிலைநிறைந்தவர்களாய்ப் பல்வேறு வகுப்பினர்களும் அவரவர்கள் மனப்பான்மைக்குத் தக்கவாறு எந்த வர்ணப்பூச்சு வீடுகளுக்கு

அழகு தருவது என்பதில் பலவிதமாக அபிப்பிராயப்பட்டனர். ஆனால் எல்லோரும் இந்த ஹோட்டல் முதலாளி ஒரு அசாதாரணத் திறமை படைத்தவன் என்பதில் ஐயம் கொண்டிருக்கவில்லை.

அந்த நீல நிற விடுதியின் பளிச்சென்று பிரகாசித்த விளக்கொளியும் பகட்டான இதர அம்சங்களுமே பிரயாணிகளை 'வா' வென்று அழைத்தன. இவற்றால் மட்டும் திருப்தியடையாத ஸ்கல்லி, ஒவ்வொரு காலையும் மாலையும் ஸ்டேஷனுக்குச் சென்று, ராம்பரில் நிற்கும் ரெயில்களையெல்லாம் சந்தித்துப் பிரயாணப் பையுடன் இறங்கி எங்கு செல்வதென்று தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கும் பிரயாணிகளை அணுகித் தன்னுடைய தொழில் திறமையை எல்லாம் உபயோகித்து அவர்களைத் தன் ஹோட்டலுக்கு அழைத்துச் செல்லுவான்.

ஒரு நாள் காலை, கடும் பனிக்காலம். பனி படிந்து ஒரு என்ஜின் தன்னுடைய நீண்ட 'கூட்ஸ்' பெட்டிகளை இழுத்துக் கொண்டு ஸ்டேஷனை வந்தடைந்தது. அந்தச் சாமான் வண்டியின் கடைசியில் ஒரு பிரயாணப் பெட்டியும் இணைக்கப்பட்டிருந்தது. அந்தப் பெட்டியில் இருந்து மூன்று பிரயாணிகள் இறங்கினர். ஸ்கல்லி வெகு சாமர்த்தியமாக அவர்களை அழைத்துச் செல்லத் திட்டமிட்டான். அவர்களில் ஒருவன் ஸ்வீடன் நாட்டினன். கையில் வைத்திருந்த பளபளத்த பிரயாணப் பையுடன் ஒரு முடிவுக்கு வராதவன் போல் இப்படியும் அப்படியுமாகப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான். இன்னொருவன் கால்நடைப் பண்ணையைச் சேர்ந்தவன்; டகோடா வரிசைக்குப் பக்கத்திலுள்ள தன்னுடைய பண்ணைக்குப் போக வேண்டியவன்: உயரமான வெண்கல நிறத்தினன். குதிரைமேல் ஏறிக்கொண்டு கால்நடைகளை மேய்ப்பவன்-(இடையன்). மற்றொருவன் கிழ்நாட்டிலிருந்து வந்தவன்; சற்று அமைதியானவன். ஆனாலும் பார்வைக்கு அவ்விதம் தோன்றவில்லை. அதைப்பற்றி அவன் சொல்லவும் இல்லை. ஸ்கல்லி அநேகமாக அவர்களைச் சிறைப்பிடித்து விட்டான் என்றே சொல்ல வேண்டும். மிகவும் அன்போடும் குழைவோடும் சிரித்த முகத்துடனும் நடந்துகொண்ட விதத்தில் அவனிடமிருந்து நழுவிச் செல்வது பொருத்த அகௌரவமென்றே ஒவ்வொருவருக்கும் மனத்தில் பட்டது. அவர்கள் அந்த ஐரிஷ்காரனின் முன்னே செல்ல நடைபாதை வழியே அவன் பின்னால் வந்து கொண்டிருந்தார்கள். அவன் தலையில் பிடிப்பான ஒரு மெல்லிய தோல் தொப்பி அணிந்துகொண்டிருந்தான். அதனால் அவனுடைய சிவந்த இரு காதுகளும் வெளியே துருத்திக்கொண்டு தகரத்தினால் செய்யப்பட்டவை போன்று விறைப்பாக நின்றன.

கடைசியில், மிக்க உபசாரத்தோடும் பெருமிதத்தோடும் அவர்களை அந்த நீல நிற விடுதியின் வாசல் வழியே ஸ்கல்லி உள்ளே அழைத்துச் சென்றான். அவர்கள் நுழைந்த அந்த முதல் அறை மிகவும் சிறியது. ஒரு பெரிய அடுப்புக்கு மட்டுமே போதுமான



தாகக் காணப்பட்டது. அந்த அடுப்பும் பெரும் இரைச்சலோடு தேவதையின் சினத்தைப்போன்று எரிந்துகொண்டிருந்தது. அந்த அடுப்பின் பல பாகங்கள் சூடேறி மஞ்சள் நிறமாகப் பளபளத்துக் காணப்பட்டன. அடுப்பின் பக்கத்தில் நரைத்த தலையுடனும் செம்பட்டைத் தாடியுடனும் ஓர் வயதான குடியானவன் உட்கார்ந்திருந்தான். ஸ்கல்லியின் மகன் ஜானி அவனுடன் (ஹைபைவ்) சீட்டு விளையாடிக் கொண்டிருந்தான். அவர்கள் அடிக்கடி சச்சரவு செய்து கொண்டிருந்தார்கள். அப்போதெல்லாம் அந்த வயதான குடியானவன் புகையிலையின் சாற்றால் பழுப்பேறி மரத்தூள் அடங்கிய ஒரு பெட்டியை நோக்கித் திரும்பி, எரிச்சலுடன் காறித் துப்பிக்கொண்டிருந்தான். இரைந்துகொண்டே உள்ளே நுழைந்த ஸ்கல்லி அவர்களுடைய ஆட்டத்தைத் தாட்சண்யமின்றிக் கலைத்து விட்டு, புதிதாக வந்த விருந்தாளிகளின் மூட்டை முடிச்சுகளில் சிலவற்றை மாடிக்கு எடுத்துச் செல்லுமாறு, தனது மகனைத் தூண்டினான். பிறகு மூன்று தண்ணீர் 'பேஸின்'கள் வைத்திருந்த இடத்திற்கு அவர்களைத் தானே அழைத்துச் சென்றான். அவற்றிலிருந்த தண்ணீரைக் காட்டிலும் குளிர்ச்சி மிக்க ஜலத்தை உலகத்திலேயே எங்கும் காணமுடியாது. இடையனும் கிழக்கத்தியானும் இந்தத் தண்ணீரினால் உடம்பை நன்றாகத் தேய்த்துச் சுத்தம் செய்து கொண்டனர். உடம்பெல்லாம் தேய்த்த வேகத்தில், ஏதோ பாலிஷ் செய்யப்பட்ட உலோகம் போல் பிரகாசித்தது. ஆனால் ஸ்வீடன்காரனோ மெதுவாகவும் ஜாக்கிரதையாகவும் தனது விரல்களை மட்டும் பயந்து பயந்து தண்ணீரில் நனைத்தான். இவ்வாறு தானே நேரில் விருந்தாளிகளின் சௌகரியங்களைக் கவனித்துக்கொண்டதில் ஸ்கல்லி மிகவும் பெருந்தன்மையானவன் என்ற எண்ணமே அவர்கள் மூவருக்கும் உண்டாயிற்று. இது அவசியம் இங்கே குறிப்பிடத்தக்கது. அவன் ஏதோ அவர்களுக்குப் பிரத்தியேகமாய் சலுகைகளைத் தாராளமாய் வழங்குவது போன்ற பிரமையை உண்டுபண்ணிவிட்டான். ஒருவன் துடைத்துக் கொண்ட பிறகே அந்தத் துவாலையை வாங்கித் தானம் வழங்குவதுபோல் மிகப் பெருந்தன்மையோடு அடுத்தவனுக்குக் கொடுத்தான்.

இதெல்லாம் முடிந்ததும் அவர்கள் முன் அறைக்குச் சென்றார்கள். அங்கு அடுப்பைச் சுற்றி உட்கார்ந்துகொண்டு பகலுணவு தயார் செய்துகொண்டிருந்த தன் பெண்களைப் பார்த்து ஸ்கல்லி ஆலோசனைகள் கூறி உத்தரவுகள் விடுத்துக்கொண்டிருந்ததையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தனர். புதிய மனிதர்களுடன் பழகுவதில் ஜாக்கிரதையுடனிருப்பது நல்லது என்று கருதும் அநுபவஸ்தர்களைப்போல் அவர்கள் அங்கே நிலவிய சூழ்நிலையைக் கவனித்தபடியே மௌனமாக இருந்தனர். எனினும் அடுப்பின் உஷ்ணம் அதிகமாக இருந்த பக்கத்தில் உட்கார்ந்திருந்த அந்தக் குடியானவன் அடிக்கடி மரத்தூள் பெட்டியினின்றும் முகத்தைத்

திருப்பி அப்புதியவர்களிடமும் சரளமாகப் பேசி ஒன்றிரண்டு விகடத் துணுக்குகளையும் கலந்துகொண்டான். இடையனும் கிழக்கத்தியானும் அவனுக்குச் சுருக்கமாகவும் தெளிவாகவும் பதில் கூறினார்கள். ஆனால் ஸ்வீடிஷ்காரன் மட்டும் ஒன்றும் பேசவில்லை. அவ்வறையிலுள்ள ஒவ்வொருவனுடைய தராதரத்தையும் குண பாவங்களையும் எடை போட்டுக்கொண்டு இருப்பதுபோல் காணப் பட்டான். அவன் நடந்து கொண்ட மாதிரியிலிருந்து காரண மின்றி மற்றவர்மீது சந்தேகம் கொள்ளும் சுபாவமுள்ளவன் என்று அவனைப் பற்றி எவருக்கும் நினைக்கத் தோன்றும். அவன் ஏதோ ஒருவிதப் பயத்தால் விரட்டப்பட்டவனைப்போல் தோன்றினான்.

சாப்பாட்டின்போது அவன் கொஞ்சமே பேசினான். பேசிய சிறிதளவும் ஸ்கல்லியுடன் தான். அவன் தன்னைப்பற்றிச் சொல் லிக்கொண்ட விவரங்களிலிருந்து, அவன் நியூயார்க்கிலிருந்து வருவ தாகவும், அங்கு பத்து ஆண்டுகளாகத் தையல் வேலை செய்து வந்த தாயும் தெரிய வந்தது. அச்செய்திகள் ஸ்கல்லியை மிகவும் கவர்ந் தனபோலும்! பின்பு மரியாதைக்காக ராம்பரிலும் பதினான்கு ஆண்டுகள் வசித்து வருவதாகத் தன்னைப்பற்றி ஸ்கல்லி அவனுக் குச் கூறினான். ஸ்வீடன்காரன் அந்தப் பிராந்தியத்தின் விவசாய நிலைபற்றியும், பண்ணையாட்கள் கூலி விகிதம் பற்றியும் கேட்டான். பேச்சுக் கொடுத்துக்கொண்டிருந்தாலும் அவன் கண்கள் மட்டும் அங்கிருந்த ஒவ்வொருவரையும் சுற்றி வட்டமிட்ட வண்ணமி ருந்தன.

கடைசியில் ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு கண் களில் விஷமப்பார்வையுடன் சில மேற்கத்திய சமூகங்கள் மிகவும் அபாயகரமானவர்கள் என்று தன்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்தான். சொல்லி முடித்ததும் தனது கால்களை மேஜைக்கு அடியில் நீட்டிக்கொண்டு தலையைச் சற்றுச் சாய்த்து மறுபடியும் முன்போலவே அர்த்தமற்றுச் சிரித்தான். அவனது செய்கையின் நோக்கம் மற்றவர்களுக்கு அர்த்தமற்றவையாகத்தான் தோன்றின என்பது நன்றாகவே தெரிந்தது. அவர்கள் ஒன்றும் பேசாமல், அவனையே பார்த்துக்கொண்டிருந்தனர்.

## II

முன் அறையில் மறுபடியும் அவர்கள் கூடியிருந்தபோது, அங்குள்ள இரண்டு ஜன்னல்களின் மூலம் வெளியே பனியும் சூறா வளியுமாய்க் கலந்தடித்துக் கொண்டிருந்தது தெரிந்தது. புயல் போல் வீசிய காற்றில் பனித்துகள்கள் சிதறி ஓடிக்கொண்டிருந்தன. இந்தச் சூறாவளியில் வெளி வாயிலில் கம்பம் மட்டும் உணர்ச்சி யற்று அசையாது நின்ற யந்திர மனிதனைப்போல் நிலைபெற்றி ருந்தது. ஸ்கல்லி உற்சாகத்துடன் பனிப்புயல் வீசிக்கொண்டிருக் கிறதென்பதை அறிவித்தான். நீலநிற விடுதியின் விருந்தாளிகள்



தங்கள் புகைக் குழாயைப் பற்ற வைத்துக்கொண்டு சோம்பல் முறித்துச் சாவதானமாக நிம்மதியுற்றிருந்தனர். அடுப்பு எரிந்து கொண்டிருந்த அந்தச் சிறிய அறையை ஓர் கடலின் தீவுபோல ஒரே ஓசை சூழ்ந்துகொண்டிருந்தது. ஸ்கல்லியின் மகன் ஜானி, தான் சீட்டாடுவதில் கைதேர்ந்தவன் என்பதை வெளிக்காட்ட உரத்த குரலில் அவ்வயதான, நரைத்த குடியானவனைத் தன்னு டன் சீட்டு விளையாடும்படி சவால் விட்டான். அந்தக் குடியானவன் வேண்டா வெறுப்புடன் சம்மதித்தான். அடுப்புக்குப் பக்கத்தில் ஒரு சதுரப் பலகையை இழுத்து அதன் கீழ்க் காலைப் புதைத்துக் கொண்டார்கள். இடையனும் கிழக்கத்தியனும் அவர்கள் விளை யாடுவதை அக்கறையுடன் கவனித்தார்கள். ஆனால் ஸ்வீடன்காரன் ஜன்னலின் பக்கத்தில் தனித்து உட்கார்ந்து கொண்டான். ஆனாலும் அவன்மட்டும் விவரிக்க முடியாத உணர்ச்சி வசப்பட்டு பரபரப்படைந்திருந்தான் என்பதை அவன் முகம் காட்டிற்று.

ஜானியும் அந்தத் தாடிக்காரனும் ஆடிய விளையாட்டு மற்றொரு சண்டையில் முடிந்தது. தனக்கு எதிராக ஆடிய சிறுவனை ஒரு வெறுப்புப் பார்வை பார்த்துவிட்டு அந்த வயதான மனிதன் இடத்தை விட்டு எழுந்தான். சாவகாசமாகக் கோட்டுப் பித்தான் களைப் போட்டுக்கொண்டு விறைப்பாக அறையை விட்டு அவன் வெளியேறினான். மற்ற எல்லோரும் மௌனமாக இதைப் பார்த் துக்கொண்டிருந்தனர். ஆனால் ஸ்வீடன்காரன் ஒரு குழந்தை சிரிப்பது போலச் சிரித்தான். அந்தச் சிரிப்பு மற்றவர்களின் கவனத்தை அவன் பக்கமாகத் திருப்பியது. அவனுக்கு உடம்பு சரியில்லையோ என விசாரிப்பவர் போலப் பார்த்தனர்.

சீட்டாட்டப் புதுக் கோஷ்டி மறுபடியும் உற்சாகத்துடன் தொடங்கியது. இடையனும் ஜானியும் சேர்ந்தனர். கிழக்கத்தி யானுக்கு ஜோடி இல்லாததால் மற்றெல்லோரும் ஸ்வீடன்காரனைச் சேருமாறு கூறினர். அவன் விளையாட்டைப் பற்றிச் சில கேள்விகள் கேட்டான். வெவ்வேறு பெயரில் ஆடப்பட்ட அந்த ஆட்டத் தைத் தானே வேறு பெயரில் விளையாடியிருப்பதையும் அறிந்து அவர்களது அழைப்பை ஏற்றுக்கொண்டான். சிறிது பயத்துடனே தயங்கிய வண்ணம் சீட்டு மேஜையை அடைந்தான். ஏதோ ஒரு சண்டையிலே பங்கு கொள்ளப் போகிறவன் போலத்தான் போனான். அவனுடைய இடத்தில் உட்கார்ந்ததும் ஒவ்வொரு வருடைய முகத்தையும் உற்றுப் பார்த்துவிட்டுக் கலீரென்று சிரித் தான். இந்தத் திடீர்ச் சிரிப்பின் விசித்திரம் கிழக்கத்தியானைத் தலை தூக்கிப் பார்க்கச் செய்தது. இடையன் வாயைப் பிளந்தபடியே அசைவற்று உட்கார்ந்தான். சீட்டுக்களைப் பிடித்திருந்த ஜானியின் கைவிரல்கள் உணர்விழந்து பொம்மை போலிருந்தன.

அதன் பின் சிறிது நேரம் மௌனம் நிலவியது.' பின்பு ஜானி, "சரி ஆரம்பிக்கலாம் எல்லோரும் வாருங்கள்" என்று கூறினான். உடனே எல்லோரும் முழங்கால்களைப் பலகையில் முட்டும்படி

நெருங்கி நாற்காலியை இழுத்துப்போட்டுக் கொண்டனர். பின்பு விளையாட்டு ஆரம்பமாயிற்று. விளையாட்டின் மேலுள்ள ஆர்வத்தால் மற்றவர்கள் ஸ்வீடன்காரனுடைய போக்கில் கவனம் செலுத்தவில்லை.

இடையன் சீட்டைப் பலகையில் ஓங்கி அடிக்கும் பழக்கமுள்ளவன். அவன் கையில் நல்ல சீட்டு வந்தபோதெல்லாம், மேஜை மீது சீட்டுகளை ஒவ்வொன்ருகச் சப்தம் உண்டாகும்படி ஓங்கி அடிப்பான். பெருமையோடும் செருக்கோடும் ஒவ்வொரு பிடியாக எடுத்துவைக்கும் விதம் அவனது எதிர்க் கட்சிக்காரர்களுக்கு ஒரு விதக் கோபத்தை உண்டாக்கியது. இவ்வாறு பலகையில் ஓங்கியடிக்கும் ஒருவர் இருந்து விட்டால் சாதாரணமாக விளையாட்டு மும்முரமாகவே இருக்கும். இடையன் அவனது ஏஸ்களையும், ராஜாக்களையும் ஓங்கி ஓங்கி அடிக்கும்போது கிழக்கத்தியானுக்கும் ஸ்வீடன்காரனுக்கும் முகம் ஒரு மாதிரியாய்ப் போயிற்று. ஜானி மட்டும் கண்களில் மகிழ்ச்சி பொங்க ஒவ்வொரு பிடியாக மடக்கி வைத்தான்.

எல்லோரும் விளையாட்டில் மும்முரமாக இருந்ததால் ஸ்வீடன்காரனின் விநோதமான நடத்தையை ஒருவரும் கவனிக்கவில்லை. எல்லோரும் விளையாட்டின் மேலேயே கண்ணுயிருந்தார்கள். ஒரு ஆட்டத்திற்கும் மறு ஆட்டத்திற்கும் இடையில் சீட்டுக் கலைத்துப் போடும்போது ஏற்பட்ட அமைதியில், ஸ்வீடன்காரன் ஜானியைப் பார்த்து, '' இந்த அறையில் அநேகம் பேர் கொலை செய்யப்பட்டிருக்கவேண்டும் என்று நினைக்கிறேன்,'' என்று திடுதிப்பென்று சொல்லி வைத்தான். எல்லோரும் ஒரே நொடியில் உற்சாகம் குன்றி அவனை நோக்கிஞர்கள். '' என்ன உளறிக்கொண்டிருக்கிருய்? '' என்று கேட்டான் ஜானி.

ஸ்வீடன்காரன் அசட்டுத் தைரியத்தோடு கூடிய ஒரு பலத்த சிரிப்பு சிரித்தான். '' ஓ! அதாவது நான் சொல்லியதன் கருத்து என்னவென்றுதான் உனக்குத் தெரியுமே,'' என்று பதிலளித்தான்.

' அப்படித் தெரிந்திருந்து கேட்க எனக்கு என்ன பைத்தியமா?' என்று ஜானி எதிர்த்தான். சீட்டுப் போடுவது நிறுத்தப்பட்டது. எல்லோரும் ஸ்வீடன்காரனை முறைத்துப் பார்த்தார்கள். விடுதிக்காரனின் மகன் என்ற முறையில் இந்தக் கூற்றின் உண்மையை விசாரிக்க முற்றிலும் உரிமையுள்ளவன் என ஜானி நினைத்தான். எனவே '' இப்போது நீங்கள் சொல்லுவதன் அர்த்தம் விளங்கவில்லை. உங்கள் கருத்தென்ன? '' என்று கேட்டான்.

ஸ்வீடன்காரன் அவனைப் பார்த்து விஷமமாகக் கண் சிமிட்டிஞன். பார்வையில் கபடம் நிறைந்திருந்தது. பலகையின் விளிம்பைப் பிடித்துக்கொண்டிருந்த அவனது விரல்கள் நடுங்கின. '' ஓ! நான் கூறுவதில் அர்த்தமே இல்லை என்று நீ நினைக்கலாம். நான் ஒரு பச்சைக் குழந்தை என்று எண்ணுகிருய் போலும்? '' என்று சுற்றி வளைத்தே அவன் பதிலளித்தான்.



அதற்கு ஜானி, '' உன்னைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. நீ எப்படி இருந்தாய் என்பதைப்பற்றியும் அக்கறைப்படவில்லை. நான் சொல்லுவது என்னவென்ருல் நீ சொல்லும் விஷயம்எனக்குப் புரியவில்லை என்பதுதான். இந்த அறையில் இவ்வளவு காலமாய் எவரும் கொல்லப்படவில்லை,'' என்று பதிலளித்தான்.

இவ்வளவு நேரமாய் ஸ்வீடன்காரனை உற்றுப் பார்த்திருந்த இடையனும் '' இப்போது உனக்கென்ன கேடு? '' என்று அவனைக் கேட்டான்.

ஸ்வீடன்காரனுக்கு என்னவோ எல்லோரும் ஒன்ருகக் கூடிக்கொண்டு தன்னைத் தாக்கப் போகிருர்கள் என்ற பீதி தோன்றியது. அவன் நடுங்கிஞன். உதடுகள் பயத்தால் வெளிறிப்போயின. தனக்கு உதவி செய்யும்படி வேண்டுவது போல் கிழக்கத்தியானைப் பார்த்தான். இந்தச் சமயத்திலும் தான் மிகுந்த தைரியசாலி என்ற வெளித்தோற்றத்தை வரவழைக்கத் தவறவில்லை. கிழக்கத்தியானிடம், '' நான் சொல்லுவது அவர்களுக்குப் புரியவில்லை என்று கூறுகிருர்கள்! புரியவில்லையாம்! '' என்ருன் கேலியாக.

அதற்கு அவன் நீண்ட ஆலோசனைக்குப்பின் பதிலளித்தான். '' என்ஞல் கூட உன்னைப் புரிந்துகொள்ள முடியவில்லை,'' என்று அமைதியாகப் பதிலளித்தான். உதவியில்லாவிட்டாலும் அநுதாபத்தையாவது எதிர்பார்த்த அவனிடமிருந்தும் துரோகம் தான் கிடைத்தது என்று எண்ணிக்கொண்ட ஸ்வீடன்காரன் அந்த இடத்தை விட்டு நகர ஆரம்பித்தான். '' அப்படியா! நீங்கள் எல்லோருமே என்னை எதிர்க்கிறீர்கள் போலிருக்கிறது. இப்போது எனக்கு நன்ருகவே தெரிகிறது,'' என்ருன்.

இடையனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. பலகையை வேகமாகத் தட்டியவாறு, '' ஏய், இப்போது என்னதான் சொல்லுகிருய்? விளக்கமாகச் சொல்லு,'' என்று கத்திஞன்.

தரையில் நெளிந்துவரும் பாம்பினிடமிருந்து தப்பி ஓடுபவன் போல் ஸ்வீடன்காரன் குதித்தெழுந்தான். '' நான் சண்டைக்காக வரவில்லை! சண்டை போட விரும்பவில்லை! '' என்று சப்தமிட்டான்.

இடையன் தன் கால்களை பலகைக்குக் கீழே சோம்பல் முறிப்பது போன்று வேண்டுமென்றே நன்ருக நீட்டிக்கொண்டான். கைகளை நிஜார்ப் பைகளில் போட்டுக் கொண்டான். மரத்தூள் பெட்டியினுள் துப்பிஞன். பிறகு நிதானமாய் '' நீ சண்டை செய்ய விரும்புவதாய் யார் சொன்ஞர்கள்? '' என்ருன்.

ஸ்வீடன்காரன் வெகு விரைவாக அறையின் ஓர் மூலைக்குப் பின்வாங்கிஞன். அவனது கைகள் தற்காப்புக்காக மார்புக்கு முன் வந்தன. பயம் நன்ருக அவனை ஆட்கொண்டிருந்தது. எனினும் அதை வெளிக்குக் காட்டாமல் அடக்கிக்கொள்ள பலத்த முயற்சி செய்துகொண்டிருந்தான். அவன் நடுங்கிக்கொண்டே கூறிஞன். '' கனவான்களே! எனக்கென்னவோ இவ்விடத்தை விட்டு வெளியேறுமுன்பே நான் கொல்லப்பட்டு விடுவேன் என்று தோன்று

கிறது. நான் இவ்விடத்தைவிட்டுப் போகுமுன்பே கொல்லப்படுவேன் என்று நினைக்கிறேன்,'' என்று அவன் திருப்பித் திருப்பிச் சொன்னான். சாகுந்தறுவாயில் உள்ள அன்னப் பறவையின் பார்வை அவன் முகத்தில் தெரிந்தது. அந்திப்பொழுதில் வெளியே வீசிய பனிப்புயல் நீல நிறம் பெற்று ஜன்னல் வழியே தெரிந்தது. வீட்டின்மீது காற்று பலமாக வீசி உள்ளேயிருந்த சாமான்களையெல்லாம் சிதறடித்தன. கதவுகளும் ஜன்னல்களும் அடித்துக் கொண்டன. ஏதோ பிசாசு கதவைத் தட்டுவது போல் இருந்தது.

ஒரு கதவு திறந்தது. ஹோட்டல் முதலாளி ஸ்கல்லி நுழைந்தான். ஸ்வீடன்காரனின் பரிதாப நிலையை ஒரு நொடியில் கண்ட அவன் ஆச்சரியத்தால் சற்று அப்படியே நின்றான். பின்பு, '' இங்கு ஏதாவது நேர்ந்து விட்டதா ? '' என்று கேட்டான்.

ஸ்வீடன்காரன் ஆத்திரத்தோடும், பரபரப்பாகவும் ''இவர்கள் என்னைக் கொல்லப்பார்க்கிறார்கள்,'' என்று முறையிட்டான்.

'' உன்னைக் கொல்லவா ? உன்னைக் கொல்லவா ? என்ன சொல்லுகிறாய் நீ ? '' என்று ஸ்கல்லி ஆச்சரியத்தால் சீறினான்.

ஸ்வீடன்காரன் கொலை செய்யப்படவிருக்கும் ஒரு மகானின் பாவத்தை முகத்தில் வரவழைத்துக் கொண்டான். ஸ்கல்லி தன் மகனை கடூரமாக நோக்கி, '' இதெல்லாம் என்ன ஜானி ? '' என்றான்.

அந்தச் சிறுவன் ஆத்திரமடைந்திருந்தான். ''தெரிந்தால்தான் தேவலையே, எனக்கு ஒன்றும் தெரியாது. அவனுடைய பேச்சில் எனக்கு ஒன்றும் புரியவில்லை,'' என்றான். கோபத்துடன் அவன் சீட்டுகளைக் கலைக்க ஆரம்பித்தான். '' இந்த அறையில் அநேகம் பேர் ஏற்கனவே கொலை செய்யப்பட்டிருக்கிறார்களாம். அல்லது அதுமாதிரி ஏதோ இங்கே நடந்திருக்கிறதாம். தானும் அவ்வாறே கொலை செய்யப்படுவான் என்றும் சொல்லுகிறான். அவனை என்ன பண்ணுகிறது என்று எனக்குத் தெரியவில்லை. அவன் ஏதோ பைத்தியம் போலிருக்கிறது. உண்மையிலேயே அப்படி இருந்தால் ஒன்றும் ஆச்சரியமில்லை,'' என்று கூறினான்.

அவன் சொல்லுவது சரிதானா என்று உறுதி செய்துகொள்ளுபவன் போல் ஸ்கல்லி இடையனை நோக்கினான். அவன் வாக்குமூலத்தை எதிர்பார்த்தான். ஆனால் அவனோ அவனது தோள்களை மட்டும் ஆட்டினான், பேசவில்லை.

'' உன்னைக் கொல்லவா ? '' ஸ்வீடன்காரனை நோக்கி ஸ்கல்லி மறுபடியும் கேட்டான், '' உன்னைக் கொல்லவா ? ஏனப்பா, புத்தி உன் ஸ்வாதீனத்தில் தானே இருக்கிறது ? ''

உடனே ஸ்வீடன்காரன் பதட்டத்தோடு பேசினான். '' ஆம் எனக்குத் தெரியும். என்ன நடக்கும் என்று எனக்குத் தெரியும். ஆம், நன்றாகத் தெரியும்—நான் பைத்தியம் தான். உண்மையாகவே நான் ஒரு பைத்தியம். ஆனால் ஒன்று மட்டும் எனக்குத் தெரியும். இவ்விடத்தை விட்டு நான் உயிருடன் வெளியே செல்ல



முடியாது என்று எனக்குத் தெரியும் '' என்றான். அவனது முகம் கவலையுடனும், பயத்துடனும் காணப்பட்டது.

அப்போது இடையன் தனது மனது உடைந்து போனதுபோல் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். '' என்னடா எழவு ஒரே குழப்பமாயிருக்கு '' என்று தனக்குள் முணுமுணுத்தான்.

ஸ்கல்லி உடனே தனது மகன் பக்கம் திரும்பினான். '' நீ இம் மனிதனைத் தொந்தரவு செய்தாயாக்கும் ? '' என்றான்.

காரணமின்றிக் குற்றஞ் சாட்டப்பட்ட ஜானி வருத்தந் தோய்ந்த குரலுடன் '' அட கடவுளே ! நான் அவனை ஒன்றுஞ் சொல்லவில்லையே. அவனை ஒன்றும் செய்யவில்லையே '' என்று உரக்கவே சொன்னான்.

அப்போது ஸ்வீடன்காரன் இடைமறித்து '' தனவான்களே ! வீணாக மனதை அலட்டிக்கொள்ள வேண்டாம். நான் இவ்விடத்தை விட்டுப் போய் விடுகிறேன். ஏனென்றால் நான் கொல்லப்படுவதை விரும்பவில்லை''என்றான். கடைசி வார்த்தைகளைச் சொல்லும் போது எல்லோரையும் ஒரு முறை சுற்றிப் பார்த்துவிட்டு தனது பார்வையால் அவர்களைக் குற்றம் சாட்டுவது போல் சொன்னான்.

ஸ்கல்லி மிகவும் கோபமாய் அவனது மகனைப் பார்த்து, '' குட்டிப் பிசாசே ! என்ன நடந்தது என்று எனக்குச் சொல்ல மாட்டாயா ? எப்படியானாலும் என்ன நடந்தது என்று வாயைத் திறந்து சொல் '' என்று சீறினான்.

ஜானி பரிதாபமாகச் சொன்னான் : '' அது நாசமாய்ப் போக, அப்போதே சொன்னேனே எனக்கு ஒன்றும் தெரியாது என்று ! நான் சொல்லவில்லையா? அவனைக் கொல்ல நினைக்கிறோம் என்றும் அவன் சொல்லுகிறான். எனக்குத் தெரிந்தது அவ்வளவுதான். அவனை எது வாட்டி எடுக்கிறது என்று எனக்குத் தெரியாது.''

ஆனால் அந்த ஸ்வீடன்காரன் மறுபடியும் சொல்ல ஆரம்பித்தான் : '' பரவாயில்லை, மிஸ்டர் ஸ்கல்லி. பரவாயில்லை. நீங்கள் கவலைப்படவேண்டாம். நான் இவ்வீட்டை விட்டுப் போய்விடுகிறேன். நான் போகிறேன். ஏனென்றால் நான் சாவதை விரும்பவில்லை. உண்மையாகவே நான் ஒரு மாதிரிப் பைத்தியம்தான். ஆனால் ஒன்று மட்டும் எனக்குத் தெரியும். நான் போகிறேன். இவ்விடத்தை விட்டே போய்விடுகிறேன். பரவாயில்லை மிஸ்டர் ஸ்கல்லி. பரவாயில்லை. நான் போகிறேன்.''

ஸ்கல்லி கூறினான், '' நீ போகக்கூடாது. இதன் காரணத்தை அறியும் வரை நீ போகக்கூடாது. உன்னை யாராவது தொந்தரவு செய்திருந்தால் அவனை நான் கவனிக்கிறேன். இது என் வீடு. நீ என்னுடைய பாதுகாப்பில் இருக்கிறாய். அமைதியை விரும்பும் எவனுக்கும் எவ்விதத் தொந்தரவும் ஏற்பட அநுமதிக்க மாட்டேன்,'' என்று சொல்லிவிட்டு, ஜானி, இடையன், கிழக்கத்தியான் ஆகியவர்களைக் கொடூரமாகப் பார்த்தான்.

'' பரவாயில்லை, மிஸ்டர் ஸ்கல்லி. நீங்கள் கவலை கொள்ள

வேண்டாம். நான் போகிறேன். நான் கொல்லப்படுவதை விரும்பவில்லை,'' என்று ஸ்வீடன்காரன் மாடிப்படிக்குச் செல்லும் பக்கம் நகர்ந்தான். அவனுடைய மூட்டை முடிச்சுகளை எடுக்க நினைப்பவன் போல் தென்பட்டான்.

'' கூடாது, கூடாது '' என்று மிகவும் கண்டிப்பாக ஸ்கல்லி சப்தமிட்டான். ஆனால் முகம் வெளிறிப்போன அந்த மனிதன் மெல்ல அங்கிருந்து நழுவி மறைந்தான். அப்போது ஸ்கல்லி, '' இதற்கு என்ன அர்த்தம் ? '' என்று கொடூரமாகக் கேட்டான்.

'' நாங்கள் அவனை ஒன்றும் பண்ணவில்லை,'' என்று ஜானியும், இடையனும் சேர்ந்து உரக்கக் கூறினார்கள்.

அவர்களை நம்பாதவன் போல் ஸ்கல்லி கடுமையாக '' இல்லையா ? அப்படி ஒன்றும் இல்லையா ? '' என்றான்.

ஜானிக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. '' ஆணையிட்டுச் சொல்லுகிறேன். இவன் மாதிரி அயோக்கியனை இதுவரை பார்த்ததே இல்லை. நாங்கள் ஒன்றும் செய்யவில்லை. உட்கார்ந்து சீட்டு ஆடிக் கொண்டிருந்தோம். அவன்—'' என்று இரைந்தான்.

அவன் தந்தை உடனே கிழக்கத்தியானை நோக்கி, '' மிஸ்டர் ப்ளாங்க். இப்பையன்கள் என்ன செய்துகொண்டிருந்தார்கள் ?'' எனக் கேட்டான்.

கிழக்கத்தியான் மறுபடியும் சிந்தனை செய்தான். மெதுவாக, '' எனக்கு ஒன்றும் தப்பிதமாகவே தெரியவில்லை,'' என்றான்.

ஸ்கல்லி கூச்சலிட்டான். மகனைக் கோபத்துடன் பார்த்தான். '' அப்படியானால் இது என்ன ? உன்னைச் சவுக்காலடிக்க வேண்டுமென்று தோன்றுகிறது '' என்று இரைந்தான்.

ஜானி கோபத்தின் எல்லையை அடைந்தான். '' நான் என்ன செய்து விட்டேன் '' என்று தந்தையைவிட உரக்கக் கத்தினான்.

## III

'' நீங்கள் எல்லோரும் ஊமையாகி விட்டீர்கள் '' என்று கடைசியில் ஸ்கல்லி தன் மகன், இடையன், கிழக்கத்தியான் ஆகியவர்களை நோக்கிக் கோபமாகச் சொன்னான். இதைச் சொல்லி விட்டு அறையிலிருந்து வெளியேறினான்.

மாடிக்குச் சென்ற ஸ்வீடன்காரன் அவனது பெரிய பையை அவசரமாகக் கட்டிக் கொண்டிருந்தான். ஒரு சமயம் அவனது முதுகுப்புறம் கதவுப் பக்கம் திரும்பி இருந்தது. அப்போது எழுந்த ஒரு சப்தம் கேட்டு, சடாலென்று ஒரு திரும்பு திரும்பி, துள்ளி எழுந்தான். பீதியினால் கத்தினான். ஸ்கல்லியின் சுருங்கிய முகம் அவன் எடுத்துச் சென்ற சிறிய விளக்கின் ஒளியில் ' உம் ' என்றிருந்தது தெரிந்தது. விளக்கின் மஞ்சள் நிறச் சுடர் ஒளியானது அவனது முகத்தோற்றத்தை எடுத்துக் காட்டிற்று. ஆனால் அவன் கண்களின் மீது ஒளி வீசாததால் சரியாகத் தெரிய



வில்லை. அவன் ஒரு கொலைகாரனைப் போல் தோன்றினான், அந்த ஸ்வீடன்காரனுக்கு.

'' நீ என்ன ஒரு மாதிரியாய் இருக்கிறாய் ? '' என்று ஸ்கல்லி கேட்டான். அதற்கு அவன் '' அப்படி ஒன்றுமில்லை. உன்னைப் போல விஷயம் தெரிந்தவர்கள் உலகத்தில் பலர் உண்டு. இதை நீ நன்றாகவே தெரிந்துகொள்,'' என்று பதிலளித்தானே தவிர விஷயத்தை விளக்கவில்லை.

கொஞ்ச நேரம் இருவரும் ஒருவரை ஒருவர் உற்று நோக்கினர். ஸ்வீடன்காரனின் சாவுக் களை நிரம்பிய முகத்தில் ஒடுங்கிய கன்னத்தில், கருஞ் சிவப்பு நிறத்தில் இரு புள்ளிகள் வர்ணம் பூசப் பட்டது போல் விளங்கின. ஸ்கல்லி விளக்கை மேஜையின் மேல் வைத்துவிட்டு, படுக்கையின் விளிம்பில் உட்கார்ந்துகொண்டான். யோசனை செய்துவிட்டுப் பின்வருமாறு கூறினான் : '' என்னுடைய வாழ்க்கையில் இப்படிப்பட்ட ஒன்றைக் கேள்விப்பட்டதில்லை. இது ஒரே குழப்பமாய் இருக்கிறது. இந்த எண்ணம் உன் மனத்தில் எப்படித் தோன்றியது என்பதே எனக்குத் தெரியவில்லை.'' பின்பு அவனைப் பார்த்து, '' அவர்கள் உன்னைக் கொல்லப் போகிறார்கள் என்று நீ உறுதியாக நம்புகிறாயா ? '' என்றான்.

ஸ்வீடன்காரன் அவனது மனத்தை அறிய விரும்பினவன் போல் உற்றுப் பார்த்தான். கடைசியில் ' ஆம் ' என்று மட்டுமே பதில் கூறினான். தன்னுடைய பதில் ஒரு கலகத்தை உண்டாக்கும் என அவன் நினைத்தான். பையின் வாரை இழுத்தபோது அவன் கை நடுங்கியது. அவனது முழங்கை ஒரு காகிதத்தைப் போல் உறுதியற்று இருந்தது.

ஸ்கல்லி தனது கையால் படுக்கையை ஓரத்தில் அழுத்தி அதை அவன் சுற்றிக் கட்ட விடாமல் தடுத்துக்கொண்டு சொன்னான், '' நாங்கள் எங்களூரில் அடுத்த வசந்த காலத்தில் மின்சார ரெயில் விடப் போகிறோம்.''

'' என்ன ! மின்சார வண்டியா ? '' என்று ஸ்வீடன்காரன் திரும்பக் கேட்டான்.

'' அது மட்டுமா ! புரோக்கன் ஆர்ம்மிலிருந்து இவ்விடத்திற்கு ஒரு புதிய ரெயில் பாதைகூடப் போடப் போகிறார்கள். இதைத் தவிர நான்கு தேவாலயங்களும், பிரம்மாண்டமான செங்கல் கட்டிட பள்ளிக்கூடமும், ஒரு பெரிய தொழிற்சாலையும் இருக்கிறது. ஏன் ? இன்னும் இரண்டு ஆண்டுகளில் ராம்போர்ட் ஒரு பெரிய நகரமாகிவிடும் '' என்றான்.

தனது படுக்கையைக் கட்டி முடிந்தவுடன் ஸ்வீடன்காரன் நிமிர்ந்து நின்றான். '' மிஸ்டர் ஸ்கல்லி, நான் உங்களுக்கு எவ்வளவு கொடுக்க வேண்டும் ? '' என்று கண்டிப்பாகக் கேட்டான்.

ஹோட்டல் சொந்தக்காரன் '' நீ எனக்கு ஒன்றும் கொடுக்க வேண்டியதில்லை '' என்று கோபத்துடன் கூறினான்.

'' இல்லை, கொடுக்க வேண்டும் '' என்று ஸ்வீடன்காரன்

சொல்லிக் கொண்டே தனது பையிலிருந்து எழுபத்தைந்து சதம் எடுத்து ஸ்கல்லியிடம் நீட்டினான். ஆனால் அவனோ கையை ஆட்டிக்கொண்டே அதைத் துச்சமாகக் கருதி ஏற்க மறுத்தான். ஸ்வீடன்காரன் உள்ளங்கையில் இருந்த அம்மூன்று வெள்ளி நாணயங்கள் பளபளத்தன. இருவருடைய கண்களும் அவற்றின் மீதே லயித்திருந்தன.

கடைசியில் ஸ்கல்லி "இங்கு இவ்வளவெல்லாம் நடந்த பின் உன் பணத்தைப் பெற்றுக் கொள்ளமாட்டேன்" என்றான் முடிவாக. பிறகு அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. கையில் விளக்கை எடுத்துக் கொண்டு கதவின் பக்கமாய் நகர்ந்து கொண்டே "ஒரு நிமிஷம் என்னோடு வா" என்றழைத்தான்.

ஏற்கனவே பயந்துபோயிருந்த அந்த ஸ்வீடன்காரன் இப்போது மிகுந்த பீதியடைந்து, "முடியாது" என்று பதிலளித்தான்.

"வரத்தான் வேண்டும். ஹாலைக் கடந்ததும் என் அறையில் போடப்பட்டுள்ள ஓர் ஓவியத்தை வந்து பார். என்னுடன் வா, உம்" என்று வற்புறுத்தினான்.

ஸ்வீடன்காரன் தன்னுடைய முடிவு காலம் வந்து விட்டதென்றே நினைத்து விட்டான். முகம் தொங்கி விட்டது. பற்கள் இறந்தவனுடையவை போன்று வெளியே தெரிய ஆரம்பித்துவிட்டன. ஸ்கல்லியைப் பின்தொடர்ந்து வராந்தாவைக் கடந்தான். ஆனால் சங்கிலியால் கட்டுண்டவனைப் போல் நடந்து போனான்.

ஸ்கல்லி தனது விளக்கொளி அறையின் சுவற்றில் வீசும்படி உயரமாகத் தூக்கிப் பிடித்தான். அங்கே ஒரு பெண்ணின் விசித்திரமான புகைப்படம் தொங்கிக் கொண்டிருந்தது. அவள் அழகாக ஜோடிக்கப்பட்ட கைப்பிடியின் மீது சாய்ந்துகொண்டிருந்தாள். அவளுடைய தலையலங்காரம் மிகவும் எடுப்பாகத் தோற்றமளித்தது. தோற்றத்தில் எழில் நிறைந்திருந்தது. ஆனால் மேனியின் நிறம் ஈயம் போல் காணப்பட்டது. அதைச் சுட்டிக் காட்டி "அது இறந்துபோன என்னுடைய சின்னப் பெண்ணின் படம். அவள் பெயர் கேர்ரி. நீ எங்கும் பார்த்திராத அளவுக்கு அழகிய தலை மயிர் உடையவள். எனக்கு அவள் மீது மிகவும் அன்பு. அவள்—" என்று கூறினான்.

இவ்வாறு கூறிக் கொண்டே அந்த ஸ்வீடன்காரனைத் திரும்பிப் பார்த்தான். ஆனால் அந்தப் படத்தை அவன் கவனிக்கக்கூட இல்லை. அதற்குப் பதில் அவனுக்குப் பின்புறத்தில் சற்று இருட்டாக இருந்த ஒரு மூலையைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

ஸ்கல்லி மகிழ்ச்சி கலந்த முகத்துடன் உரத்த குரலில், "நண்பனே, இறந்துபோன என் சின்னப் பெண்ணின் படம் இது. அவள் பெயர் கேர்ரி. இங்கே இருப்பது என்னுடைய மூத்த பையன் மைக்கேலின் படம். அவன் லிங்கனில் வக்கீலாக நல்ல வாழ்க்கை நடத்துகிறான். அவனை நன்றாய்ப் படிக்க வைத்தேன். அதற்காக



நான் இப்போது ஆனந்தப்படுகிறேன். அவன் மிகவும் நல்லவன். இப்பொழுது அவனை அந்தப் படத்தில் பார். அவன் லிங்கனில் மதிப்புக்குரிய நல்ல மனிதனாய் விளங்குகிறான். ஆமாம், கவுரவமும் கண்ணியமுமுள்ள பெரிய மனிதன்" என்று ஸ்கல்லி கூறினான். இவ்வாறு சொல்லிக் கொண்டே அவன் ஸ்வீடன்காரன் முதுகில் விளையாட்டாகத் தட்டினான். ஸ்வீடன்காரன் முகத்தில் லேசாகப் புன்முறுவல் தோன்றியது.

அவன் மேலும் சொன்னான்: "இன்னம் ஒரே ஒரு விஷயம் தான் பாக்கி" என்று சொல்லி உடனே கீழே குனிந்து, மெத்தைக்கு அடியில் உற்றுப் பார்த்தான். ஸ்வீடன்காரனுக்கு இப்போது அவனுடைய குரல் மெத்தையின் கீழிருந்து கேட்டது. "நான் அந்தப் பையன் ஜானி இல்லாவிட்டால் இந்தப் படத்தை என் தலையணைக்கடியிலேயேதான் வைத்திருப்பேன். இதோ இன்னொன்று. அது என் மனைவியின் படம். அது இப்போது எங்கே இருக்கிறது? அதை எப்போதும் ஒரே இடத்தில் நான் வைக்கிறது இல்லை. ஆ! இதோ கிடைத்து விட்டது" என்றான்.

படுக்கையினடியிலிருந்து பந்து போல் சுருட்டி வைக்கப்பட்டுள்ள ஒரு கோட்டுடன் அவன் வெளியே வந்தான். "இதோ எடுத்து வந்து விட்டேன்" என்றான். தரையில் முழங்காலிட்டு உட்கார்ந்தபடியே கோட்டைப் பிரித்தான். அதிலிருந்து ஒரு பெரிய மஞ்சள் புட்டி—கருஞ் சிவப்பு நிறத்தில் விஸ்கி இருந்த புட்டியை வெளிக் கொணர்ந்தான். முதல் காரியமாக அந்த விஸ்கி புட்டியை வெளிச்சத்தில் தூக்கி அவனுக்கும் தெரியும்படி திருப்பித் திருப்பிப் பார்த்தான். ஒருவரும் அதைத் தொடக்கூட இல்லை என நிச்சயப்படுத்திக்கொண்டு, ஸ்வீடன்காரன் பக்கமாக அதை பவ்யமாக நீட்டினான்.

கோழையான அந்த ஸ்வீடன்காரன் ஊக்கத்தையும் பலத்தையும் அளிக்கும் இப்பொருளை ஆர்வத்துடன் வாங்கப் போனான். ஆனால் திடீரென்று நீட்டிய கையை இழுத்துக் கொண்டு ஸ்கல்லியைப் பயங்கரமாகப் பார்த்தான்.

"குடிப்பதற்கு" என்று ஹோட்டல் சொந்தக்காரன் கூறினான். தரையில் உட்கார்ந்திருந்தவன் எழுந்து ஸ்வீடன்காரனைப் பார்த்தபடியே நின்றான்.

சிறிது நேரம் மௌனம். "குடி" என்று மறுபடியும் ஸ்கல்லி கூறி அவனுடைய கவனத்தைத் தன்பக்கம் திருப்பினான்.

ஸ்வீடன்காரன் பயங்கரமாகச் சிரித்தான். பாட்டிலைப் பிடுங்கிக்கொள்வது போல் வாங்கி, வாயில் வைத்து உதடுகளைக் குவித்து 'மடக் மடக்' கென்று குடித்தான். அவன் தொண்டை மேலும் கீழும் ஏறி இறங்கிக் கொண்டிருந்தது. அப்போதும் அவன் ஸ்கல்லியின் முகத்தையே வைத்தவிழி வாங்காமல் பார்த்துக்கொண்டேதான் இருந்தான்.

## IV

ஸ்கல்லி மாடிக்குச் சென்றதும் கீழே இருந்த மற்ற மூவரும் சீட்டாடும் பலகையைக் கால்மேல் வைத்தவாறு பிரமை பிடித்தவர்கள்போல் மௌனமாகவே உட்கார்ந்திருந்தார்கள். பின்பு ஜானி, "இப்படிப்பட்ட விநோத ஸ்வீடன்காரனை நான் இதுவரை பார்த்ததில்லை" என்று கூறினான்.

இடையன், "அவன் ஒரு ஸ்வீடன்காரனே அல்ல" என்று துச்சமாகச் சொன்னான். "அப்படியானால் அவன் யார்?" என்று ஜானி உரத்த குரலில் கேட்டான்.

"அவனை ஒருவிதத்தில் டச்சுக்காரன் என்று நினைக்கிறேன். அப்படித்தான் எனக்குத் தோன்றுகிறது" என்று இடையன் சொன்னான். வெளிறிய தலைமயிருடன் அழுத்தமாக அடித்தொண்டையிலிருந்து பேசுபவர்களை எல்லாம் ஸ்வீடன்காரர்கள் என்று மரியாதைக்காகச் சொல்லுவது அக்காலத்திய சம்பிரதாயம். எனவே இடையன் அவ்வாறு சொன்னதில் தவறு ஒன்றுமில்லை. அவனுடைய தைரியத்தைத்தான் அது காட்டிற்று. "அப்படியா, எப்படியும் தான் ஒரு ஸ்வீடன்காரன் என்கிறான் அவன்". ஜானி கோபத்துடன் முணுமுணுத்தான். கிழக்கத்தியானைத் திரும்பிப் பார்த்தான். "நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் மிஸ்டர் பிளாங்க்?"

"ஓ! எனக்கொன்றும் தெரியாதே" என்றான் கிழக்கத்தியான்.

"போகட்டும், அவனை அவ்விதம் நடக்கச் செய்தது எது என்று நினைக்கிறீர்கள்?" என்று கேட்டான் இடையன்.

"அவன் நன்றாகப் பயந்து போயிருக்கிறான்" என்றான் கிழக்கத்தியான். தன் குழாயை அடுப்பின் ஓரத்தில் தட்டினான். "அவனுடைய பயம் அளவுக்கு மீறிப்போயிருக்கிறது. தலையிலிருந்து கால் வரையல்லவோ நடுங்கிக் கிடக்கிறான்."

"எதைக்கண்டு இவ்வளவு பயம். நடுக்கம்?" என்று ஜானியும் இடையனும் சேர்ந்து கூக்குரலிட்டனர்.

என்ன பதில் சொல்வதென்று சிறிது நேரம் கிழக்கத்தியான் யோசித்தான்.

"எதைக்கண்டு?" அவர்கள் மறுபடியும் கேட்டனர்.

"ஓ! எனக்குத் தெரியாது. ஆனால் எனக்குத் தோன்றுகிறது, இந்த மனிதன் ஏதோ பயங்கர நவீனங்களைப் படித்திருக்கிறான் போலும். இப்போது ஏதோ கதைகளில் வருவதுபோல, துப்பாக்கி வெடி, குத்து, கொலை இதுபோன்ற நிகழ்ச்சிகள் ஏற்படும் கட்டத்தில் இருப்பதாக நினைத்துக்கொண்டிருக்கிறான் என்று தோன்றுகிறது."

இந்தப் பதில் தன்னை அவமதிப்பதாகக் கருதிய இடையன் "இது என்ன அப்படிப்பட்ட இடமா. இது ஒன்றும் 'வயமிங்' அல்லவே; இது நெப்ராஸ்கா என்பது ஞாபகமிருக்கட்டும்."



"ஆமாம், அவ்வாறு காட்சிகள் மத்தியில் இருப்பதாக நினைத்துக்கொள்ள வேண்டுமென்றால் இன்னும் மேற்குப் பிராந்தியத்துக்குப் போகும்வரை ஏன் காத்திருக்கக்கூடாது?" என்று ஜானி மேலும் அடுக்கினான்.

பிரயாணம் செய்து அநுபவமுள்ள கிழக்கத்தியான் சிரித்தான். "அங்கு கூட இப்போதெல்லாம் இம்மாதிரி நடப்பதில்லை. எனினும் அவன் என்னமோ, தான் நரகத்தின் மத்தியில் இருப்பதாகவே நினைக்கிறான்."

ஜானியும் இடையனும் இந்த விசித்திரத்தைப்பற்றி நெடு நேரம் யோசித்தனர்.

இறுதியில் ஜானி பேசினான்: "ரொம்ப வேடிக்கையாகத்தானிருக்கிறது."

"ஆமாம். இது விசித்திரமான நிகழ்ச்சிதான். வெளியே பனி ரொம்ப நாழி அடிக்காதென்றே நினைக்கிறேன். இல்லாவிட்டால் உள்ளேயே அடைந்து கிடந்து இவனுடனல்லவா நேரத்தைப் போக்கிக்கொண்டிருக்கவேண்டும்? அது எனக்குப் பிடிக்கவில்லை."

"அப்பா அவனை வெளியேற்றி விடுவார் என்றே எதிர்பார்க்கிறேன்" என்றான் ஜானி.

அப்போது படிக்கட்டுகளில் காலடி ஓசை பலமாகவே கேட்டது. அத்துடன் ஸ்கல்லியின் வேடிக்கைப் பேச்சுகளும் ஸ்வீடன்காரனுடைய சிரிப்பொலியும் சேர்ந்தே வந்தது. அடுப்பைச் சுற்றி உட்கார்ந்திருந்தவர்கள் அர்த்தம் புரியாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். "நாசமாய்ப் போச்சு!" என்றான் ஆச்சரியமடைந்த இடையன். கதவு திறந்தது. சந்தோஷத்தினால் பூரித்த முகத்துடனும் பழைய கதைகளையெல்லாம் பேசிக்கொண்டும் ஸ்கல்லி அறைக்குள் வந்தான். தைரியமாகச் சிரித்துக்கொண்டே பின்தொடர்ந்து வந்த ஸ்வீடன்காரனைப் பார்த்து அவன் ஏதேதோ பிதற்றிக்கொண்டிருந்தான். விருந்து சாப்பாட்டிலிருந்து வெளிவந்த உற்சாகம் அவர்களிடையே காணப்பட்டது.

உட்கார்ந்திருந்த மூவரையும் பார்த்து, "கொஞ்சம் நகர்ந்து கொண்டு எங்களுக்கும் அடுப்பையொட்டிக் கொஞ்சம் இடந்தாருங்கள்" என்று தைரியமாகப் பேசினான் ஸ்கல்லி. இடையனும் கிழக்கத்தியானும் புதியவர்களுக்கு இடம் தரத் தங்கள் நாற்காலிகளை ஒரு பக்கமாக நகர்த்திக்கொண்டனர். ஆனால் ஜானி மட்டும் அலட்சியத்துடன் இருந்த இடத்திலேயே அசைவற்று உட்கார்ந்திருந்தான்.

"போ, அந்தப் பக்கம் தள்ளிப்போ" என்றான் ஸ்கல்லி.

"அடுப்பின் அந்தப் பக்கத்தில் தான் நிறைய இடம் இருக்கிறதே" என்றான் ஜானி.

"பனிக்காற்று வரும் வழியில் உட்கார விரும்புகிறோம் என்று நினைக்கிறாயோ", என்று தகப்பன் கர்ஜித்தான்.

ஆனால் மிகுந்த தன்னம்பிக்கையுடன் கௌரவமாகவே ஸ்வீ

டன்காரன் குறுக்கிட்டு "வேண்டாம், வேண்டாம். பையன் இஷ்டப்பட்ட இடத்திலேயே உட்காரட்டும்" என்று தகப்பனிடம் வற்புறுத்தும் குரலில் சொன்னான்.

"சரி சரி" என்று அவன் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டவன் போல் சும்மாயிருந்தான்.

இடையனுக்கும் கிழக்கத்தியானுக்கும் இந்தத் திடீர் மாறுதலின் மர்மம் விளங்கவில்லை. ஒருவரையொருவர் வியப்புடன் பார்த்துக் கொண்டனர்.

அடுப்பின் பக்கத்தில் ஐந்து நாற்காலிகளும் ஒரு பிறை போன்று தோற்றமளித்தன. ஸ்விடன்காரன் பேசத்தொடங்கினான். அவன் கோபத்துடனும் கர்வத்துடனும் பேசினான். ஸ்கல்லி ஆர்வத்துடன் கேட்டுக்கொண்டிருப்பது போல அடிக்கடி அவனை ஊக்குவித்தான். ஜானி, கிழக்கத்தியான், இடையன் இம்மூவரும் 'உம்' என்று மௌனத்தில் ஆழ்ந்தனர்.

கடைசியாகத் தனக்குத் தாகமாயிருப்பதாக ஸ்விடன்காரன் சொன்னான். தான் கொஞ்சம் தண்ணீர் குடிக்கச் சென்று வருவதாகக் கூறி எழுந்தான்.

"நீங்கள் இங்கேயே இருங்கள். நான் கொண்டுவருகிறேன்" என்று ஸ்கல்லி உடனே கூறினான்.

"இல்லை; எனக்குத் தேவைப்பட்டதை நானே எடுத்துக் கொள்வேன்," என்று ஸ்விடன்காரன் அலட்சியத்துடன் கூறினான். தானே சொந்தக்காரன் என்று எண்ணிக்கொண்டவன் போல் விடுதியின் உள்பகுதி நோக்கிக் கம்பீரமாய் நடந்தான்.

ஸ்வீடன்காரன் தலை மறைந்ததும் ஸ்கல்லி நகர்ந்து அவன் காதில் படாதவாறு மற்றவர்களிடம் "மாடியில் நான் அவனுக்கு விஷம் வைத்துக் கொல்ல முயற்சிப்பதாக அவன் நினைத்தான்" என்று தெரிவித்தான்.

"இது எனக்கு மிகவும் வருத்தம் தருகிறது. அவனை ஏன் நீங்கள் பனியில் வெளியில் விரட்டக்கூடாது?" என்று கேட்டான் வெறுப்படைந்திருந்த ஜானி.

"ஏன், அவன் இப்பொழுது சரியாகி விட்டான்" என்று ஸ்கல்லி உறுதி கூறினான். "அவன் கிழக்குப் பிராந்தியத்திலிருந்து வந்ததால் தான் இவ்வளவும். இது மிகவும் மோசமான இடம் என்று நினைத்துவிட்டான். இவ்வளவுதான், இப்போது சரியாய் விட்டான்."

கிழக்கத்தியானை வியப்புடன் பார்த்த இடையன், "நீங்கள் கூறியது சரியாய் விட்டது. அவனை டச்சுக்காரன் என்றீர்களே, சரியாகத்தான் இருக்கிறது" என்றான்.

"நல்லது, இப்பொழுது அவன் சரியாய் இருக்கலாம். ஆனாலும் அதற்கான அறிகுறிகளை என்னால் காணமுடியவில்லை. முன்பு அவன் மிகவும் பயந்து கிடந்தான். ஆனால் இப்பொழுது மிகவும்



மகிழ்ச்சியோடிருக்கிறான். அளவுக்கு மீறிய மகிழ்ச்சி!" என்று ஜானி தன் தகப்பனிடம் கூறினான்.

ஸ்கல்லியின் பேச்சில், எப்போதும், ஐரிஷ் உச்சரிப்பும், வார்த்தைகளும், கதைப் புத்தகங்களிலிருந்தும் செய்தி இதழ்களிலிருந்தும் திரட்டி விநோதமாக உருவாக்கப்பட்ட சாதாரண நடையிலமைந்த துணுக்குகளும் உருத்தெரியாமல் கலந்திருக்கும். தன் மகனைப் பார்த்து இப்படிப்பட்ட ஒரு கலப்பு மொழியில் அவன் இரைந்தான். "நான் என்ன வைத்திருக்கிறேன்? என் தொழில் என்ன? நான் செய்யும் காரியம் என்ன?" என்று இடியோசை போல் அவன் முழங்கினான். அந்தக் கேள்விகளுக்கெல்லாம் தானே பதில் அளிக்கப்போவதாகவும், எல்லோரும் அதைக் கவனமாய்க் கேட்கவேண்டுமென்பது போலவும் அவன் அழுத்தமாக முழங்காலைத் தட்டிக்கொண்டு ஆயத்தமானான். "நான் ஒரு ஹோட்டல் நடத்துகிறேன். ஒரு ஹோட்டல் விடுதியும், ஹோட்டலும் கலந்தது. உனக்குப் புரிகிறதா?" என்று இரைந்தான். "என் வீட்டிற்குள் வரும் எந்த விருந்தினனுக்கும் புனிதமான உரிமைகள் உண்டு. அவனுக்கு ஒருவராலும் எவ்விதப் பயமும் ஏற்படக்கூடாது. இங்கிருந்து வெளியேறிப்போக வேண்டுமென்று அவன் எண்ணும்படி ஒரு வார்த்தை கூட இங்கே பேசக்கூடாது. இங்கு தங்கப் பயப்படுகிறான் என்பதற்காக என் விருந்தினன் ஒருவனை அழைத்துச் செல்ல இந்த நகரில் எந்த இடமும் இல்லை." இவ்வாறு சொல்லிவிட்டு அவன் திடீரென்று கிழக்கத்தியானையும் இடையனையும் நோக்கி "நான் சொல்வது சரிதானா?" என்று கேட்டான்.

"ஆமாம் மிஸ்டர் ஸ்கல்லி, நீங்கள் கூறுவது முற்றிலும் சரி என்றே நினைக்கிறேன்," என்றான் இடையன். "ஆமாம் மிஸ்டர் ஸ்கல்லி. நீங்கள் கூறுவது சரி என்றே நினைக்கிறேன்" என்று ஆமோதித்தான் கிழக்கத்தியான்.

## V

ஆறு மணிக்கு, இரவு சாப்பாட்டின் போது ஸ்வீடன்காரன், கொளுத்தி விட்ட சக்கர வாணம் போல் வெகு உற்சாகமாயிருந்தான். ஒவ்வொரு சமயமும் குஷியில் பாட ஆரம்பித்து விட்டான். அவனுடைய பைத்தியக்காரத் தனத்திலெல்லாம் அவனுக்கு ஹோட்டல் சொந்தக்காரன் ஸ்கல்லி மிகவும் ஊக்கமளித்து வந்தான். கிழக்கத்தியான் ஒதுங்கி மௌனம் சாதித்தான். இடையன் வியப்பால் பிளந்த வாயை மூடவில்லை. சாப்பாட்டைக் கூட மறந்தான். ஜானி மட்டும் சாப்பாட்டைத் தட்டுத் தட்டாகக் காலி செய்து கொண்டிருந்தான். அந்த வீட்டுப் பெண்கள் இந்தியரைப் போல் மிகவும் தயங்கித் தயங்கி வந்து காலியான தட்டுகளில் பிஸ்கட்டுகளை நிறைத்து விட்டு, பயத்தால் நடுங்கிக் கொண்டே ஓடி மறைந்தனர். விருந்திற்கே ஸ்வீடன்காரன் தான்

திலகம்போல் விளங்கினான். சாப்பாட்டையே ஒரு குடிகாரனுடைய விருந்து போல ஆக்கி விட்டான். தன்னுடைய நிலை திடீரென்று உயர்ந்து விட்டதுபோல் ஒவ்வொருவரையும் அலட்சியமாக வெறுப்புடன் பார்த்தான். அவன் குரல் அறையெல்லாம் வியாபித்திருந்தது. ஒரு முறை அவன் ஈட்டியை நுழைப்பது போன்று ஒரு பிஸ்கட்டை முள்ளால் குத்தி எடுக்க முயன்றான். அப்பொழுதுதான் அதே பிஸ்கட்டை எடுக்க நீட்டிக் கொண்டிருந்த கிழக்கத்தியானின் கையில் முட்கரண்டி பட்டு சிறு காயம்கூடப் பட்டது.

சாப்பாட்டுக்குப் பின் அவர்கள் அடுத்த அறைக்கு வரிசையாகச் சென்ற பொழுது ஸ்வீடன்காரன் ஸ்கல்லியின் தோளில் அன்பாகத் தட்டிக் கொடுத்தான். அவன் தட்டியது ஓங்கியடித்ததற்கும் அதிகமாயிருந்தது. ''சந்தோஷம், நண்பா, மிகவும் நல்ல சாப்பாடு'' என்று பாராட்டினான். ஜானி தன் தகப்பனைக் கூர்ந்து கவனித்தான். தட்டிக் கொண்டிருந்த அந்த தோள்தான் ஒரு சமயம் ஸ்கல்லி கீழே விழுந்து அடிபட்டு பலவீனமடைந்திருந்தது. உண்மையில் அதுபற்றி ஸ்கல்லி சீறி எழுவான் என்றுகூடத் தோன்றியது. ஆனால் அவனோ நோயுற்றவனைப் போன்று சிரித்து மழுப்பிப் பேசாதிருந்து விட்டான். அவனுடைய போக்கிலிருந்து மற்றவர்கள் ஸ்வீடன்காரனின் புதிய மாறுதலுக்கு அவன்தான் காரணம் என்பதை உணர்ந்திருந்தான் என்பது தெரிந்தது.

ஜானி இறுதியில் தன் தகப்பனை ஒரு பக்கமாக அழைத்து ''உன்னை உதைத்துத் தள்ளுவதற்கு என் பிரத்தியேகமாக ஒருவனை அமர்த்திக் கொள்ளக் கூடாது,'' என்று ஏளனமாகக் கேட்டான். அதைக் கேட்ட ஸ்கல்லி பதிலுக்கு உறுமினான்.

அடுப்படியில் அவர்கள் மறுபடியும் ஒன்று கூடியபோது ஸ்வீடன்காரன் இன்னொரு முறை சீட்டு ஆடவேண்டும் என வற்புறுத்தினான். முதலில் அதை மரியாதையாக ஸ்கல்லி மறுத்துரைத்தான். ஆனால் ஸ்வீடன்காரன் அவனை ஓநாய் போன்று கடுரமாய்ப் பார்க்கவே அவன் கீழ்ப்படிந்தான். ஸ்வீடன்காரன் எப்படியோ மற்றவர்களையும் சம்மதிக்கச் செய்துவிட்டான். அவனுடைய குரல் எப்பொழுதும் அதிகாரத்துடனே ஒலித்துக்கொண்டிருந்தது. பயமுறுத்தலுமிருந்தது. இடையனும் கிழக்கத்தியானும் தாங்கள் விளையாடச் சம்மதிப்பதாய் வேண்டா வெறுப்புடன் கூறினர். ஸ்கல்லி, தான் உடனே 6-58 வண்டியைச் சந்திக்கச் செல்லவேண்டி யிருப்பதாகக் கூறித் தந்திரமாக விலகிக்கொண்டான். ஜானியை ஸ்வீடன்காரன் முறைத்துப் பார்த்தான். ஒரு கணம் அவர்களுடைய பார்வைகள் கத்திகளைப் போல் வெட்டிக் கொண்டன. பின் ஜானி புன்முறுவலுடன் ''ஆகட்டும், நான் விளையாடுகிறேன்'' என்று ஒப்புக்கொண்டான்.

அவர்கள் சதுரமாக உட்கார்ந்து கொண்டனர். முழங்கால்களுக்கு மேலே சீட்டாடும் பலகை இருந்தது. கிழக்கத்தியானும் ஸ்வீடன்காரனும் மறுபடியும் ஜோடி சேர்ந்து கொண்டனர்.



ஆட்டத்தின்பொழுது இடையன் வழக்கம்போல சீட்டுகளை ஓங்கி அடிக்கவில்லை. ஸ்கல்லி விளக்கருகில் தன் மூக்குக் கண்ணாடியை அணிந்துகொண்டு பாதிரி போன்ற தோற்றத்துடன் ஒரு தினசரி இதழைப் படித்துக் கொண்டிருந்தான். குறித்த நேரத்தில் அவன் 6-58 வண்டியைச் சந்திக்க வெளியே சென்றான். வெகு ஜாக்கிரதையுடன்தான் வாயிற் கதவைத் திறந்தான். எனினும் அந்த ஒரு விநாடியில் பனிக்காற்று வேகமாக உள்ளே வீசி சீட்டுகளைக் கண்டபடி பறக்க விட்டதன்றி அவர்களையும் சில்லிடச் செய்து விட்டது. ஸ்வீடன்காரன் கடுமையாகச் சபித்தான். ஸ்கல்லி ஸ்டேஷனிலிருந்து திரும்பியபோது உள்ளே அந்நால்வரும் மிகுந்த நல்லுறவுடன் சந்தோஷமாகவே காணப்பட்டனர். ஸ்கல்லி உள்ளே நுழைந்தபோது ஸ்வீடன்காரன் சிறிது சிரித்தானாலும் அவர்கள் ஆட்டத்திலேயே மறுபடியும் லயித்து விட்டனர். அவர்கள் தலைகள் முன்னால் வளைந்து வளைந்து கைகள் விரைந்து ஓடின. இப்போது ஸ்வீடன்காரன்தான் சீட்டை ஓங்கி அடிக்க ஆரம்பித்தான்.

ஸ்கல்லி பத்திரிகையை எடுத்துக் கொண்டு அவனுக்கு சம்பந்தமில்லாத விஷயங்களைப் பற்றியெல்லாம் நெடுநேரம் படித்துக் கொண்டிருந்து விட்டான். விளக்கு மோசமாக எரிந்தது. படிப்பதை நிறுத்தி ஒருமுறை அவன் திரியைச் சரி செய்தான். பக்கங்களைத் திருப்பும்போது எழுந்த 'சல, சல' வெனும் ஒலி காதுக்கு இனிமையாக இருந்தது. அப்போதுதான் அவர்களிடையே அந்த மூன்று பயங்கரச் சொற்களைக் கேட்டான். ''என்னை ஏமாற்றவாடா செய்கிறாய்!''

இம்மாதிரிக் கட்டங்களில் சூழ்நிலை எவ்வாறு இருப்பினும் அதைப்பற்றி ஒருவரும் கவலைப்படுவதில்லை. சூழ்நிலையே அவசியமில்லை என்றுகூடத் தோன்றும். எந்த அறையிலும் எந்த விதமான சோக சம்பவமும் நிகழலாம் அல்லது எதிர்பார்க்கலாம். இந்தச் சிறு அறை இப்பொழுது ஒரு சித்திரவதைக் கூடமாக இருந்தது. அந்த மனிதர்களின் அப்போதைய தோற்றங்களே அந்த அறையை அவ்வாறு மாற்றி விட்டிருந்தன. ஸ்வீடன்காரன் ஜானியின் முகத்துக்கு முன் தன் முஷ்டியை வைத்துக் கொண்டிருந்தான். ஜானி, குற்றம் சாட்டியவனை எரித்து விடுவதுபோல் பார்த்துக் கொண்டிருந்தான். கிழக்கத்தியான் பயத்தால் வெளிறிப் போனான். இடையனுடைய தாடை சோர்ந்து தொங்கிப் போயிற்று. மாடுகள் வியப்படைந்தால் இப்படித்தான் செய்யும். அவற்றின் சேஷ்டையாகிய இப்பழக்கத்தை இடையனும் கைக் கொண்டிருந்தான். அந்த மூன்று சொற்கள் கேட்ட பிறகு அறையில் எழுந்த முதற் சப்தம், ஸ்கல்லி கையிலிருந்து நழுவிய பத்திரிகை தரையில் பறந்ததால் ஏற்பட்டது. அவனுடைய மூக்கிலிருந்து கண்ணாடிகளும் விழுந்து விட்டன. ஆனால் கீழே விழுமுன்பே அதைக் கெட்டியாகப் பிடித்து உடையாமல் பாதுகாத்தான். கண்ணாடிகளைக்

கையில் ஏந்தியபடியே சீட்டு விளையாடியவர்களை அவன் உற்றுப் பார்த்தான். ஒரு விநாடிதான் அங்கே மௌனம். அவர்கள் நின்று கொண்டிருந்த தரை திடீரென்று அசைந்திருந்தால்கூட அவர்களால் அவ்வளவு விரைவாக நகர்ந்திருக்க முடியாது. ஐவரும் ஒரே நோக்காக ஜானியைத்தான் பார்த்தனர். ஸ்வீடன்காரனைப் பலமாகத் தாக்க ஜானி எழுந்த அவசரத்திலும், சீட்டுகளையும் பலகையையும் பாதுகாப்பதில் அவனுக்கிருந்த அக்கறையில் அவன் தடுக்கி விழுந்தான். அந்தக் கணநேர இடைவெளியில் ஸ்கல்லி அங்கே வந்து விட்டான். அதே சமயம் இடையன் ஸ்வீடன்காரனை ஒரு தள்ளு தள்ளினான். அவன் தள்ளாடிப் பின்னடைந்தான். அவர்கள் எல்லோரும் ஒரே காலத்தில் கூக்குரலிட்டனர். கோபம், தாபம், பயம் முதலிய எல்லாம் அவர்கள் குரலில் கலந்திருந்தன. இடையன் ஸ்வீடன்காரன் மேல் விழுந்து இடித்துத் தள்ளினான். கிழக்கத்தியானும் ஸ்கல்லியும் ஜானியைப் பலமாகப் பிடித்துக் கொண்டனர். புகை சூழ்ந்த அந்த அறையில் அமைதியை நிலைநாட்டிய இரு தரப்பினர்களையும் தள்ளிக்கொண்டு இரண்டு வீரர்களின் கண்கள் வெப்பும் எஃகு கலந்த கடும் பார்வைகளை வீசிய வண்ணமிருந்தனர். ஆட்டப் பலகை கீழது மேலதாக விழுந்து கிடந்தது. சீட்டுகளனைத்தும் சிதறித் தரையில் பறந்து கொண்டிருந்தன, தங்கள் முன்னால் நிகழ்ந்து கொண்டிருந்த கடும் போரில் அந்த ராஜாச் சீட்டும், ராணிச் சீட்டும் மனிதர்களின் காலடியில் மிதிபட்டுக் கொண்டிருந்தன.

ஸ்கல்லியின் குரல் மற்றெல்லோருடையதைக் காட்டிலும் உரக்க ஒலித்தது. "நிறுத்து இப்போ, நிறுத்து இப்போ, நான் சொல்கிறேன்! நிறுத்து; இப்பொழுது—"

கிழக்கத்தியானும் ஸ்கல்லியும் தன்னைத் தடுத்துக்கொண்டிருப்பதையும், பிளந்து கொண்டு செல்ல முயற்சித்தபடியே "நான் ஏமாற்றியதாக அவன் என்மீது பழி சொல்கிறான்! நான் ஏமாற்றியதாக அவன் சொல்கிறான்! இம்மாதிரி ஒரு அபாண்டத்தை என்மீது சொல்ல நான் அதைப் பார்த்துக் கொண்டிருப்பதா? என்மீது பழி சொன்னால் அவன் ஒரு— — —!"

இடையன் ஸ்வீடன்காரனைப் பார்த்து "இப்போது இங்கிருந்து போய்விடு—இங்கிருந்து போய்விடு. நான் சொல்லுவது கேட்கிறதா—" என்று கத்தினான்.

ஸ்வீடன்காரன் கிரீச்சென்று "அவன் ஏமாற்றத்தான் செய்தான், நான் பார்த்தேன்! நான் பார்த்தேன்—" என்று கத்திக் கொண்டிருந்தான்.

கிழக்கத்தியானோ சமாதானப்படுத்த ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தான். அவனை யாரும் சட்டை செய்யவில்லை. "ஒரு கணம் சும்மாயிருங்கள். உங்களால் இது முடியாதா? ஓ, கொஞ்சம் பொறுமையாக இருங்கள். சீட்டாட்டத்திலிருந்து சண்டை நிகழ்வது மிகக் கேவலம். ஒரு கணம் பொறுங்கள்..." என்று அவன் இறைஞ்சினான்.



இந்தக் குழப்பத்தில் வாக்கியங்களெல்லாம் அரைகுறை வார்த்தைகளாகத்தான் வெளி வந்தன. "மோசடி" — "வெளியே போ"—"அவன் சொல்கிறான்"—இந்த வார்த்தைகள்தான் பெருங்குரலில் அடிக்கடி கேட்டன. ஸ்கல்லி தான் அதிக சப்தம் போட்டாலும், அந்த வெறிபிடித்த கூட்டத்தில் அவன் குரல் கேட்கவே இல்லை என்பது அதிசயமாகவே இருந்தது.

எதிர்பாராத விதமாகச் சிறிது அமைதி நிலவியது. ஒவ்வொருவரும் கொஞ்சம் மூச்சு வாங்க அவகாசம் எடுத்துக் கொண்டனர் போன்றிருந்தது. அவர்களுடைய கோபக்கனல் சிறிதேனும் குறையவில்லை. உடனடியான சண்டை என்றாலும் ஏதும் நேர்ந்து விடும் என்று எண்ணத் தோன்றியது. அதே சமயம் ஜானி அவர்களை விலக்கிக் கொண்டு முன்னேறி, ஸ்வீடன்காரன் முன் நின்று கொண்டான்.

"நான் ஏமாற்றினேன் என்று சொன்னாயே, என்ன ஏமாற்றினேன்? எதற்காக ஏமாற்றினேன்? நான் மோசடிக்காரன் அல்ல. மோசடிக்காரன் என்று சொல்ல எவனையும் அநுமதியேன்."

ஸ்வீடன்காரன் சொன்னான். "நான் கண்ணாரக் கண்டேன். நேரில் பார்த்தேன்." "அப்படியா, அப்படியானால் என்னுடன் சண்டைக்குத் தயாராகு. என்னை மோசக்காரன் என்று சொன்ன எவனையும் சண்டையிடாமல் விடுவதில்லை" என்று இரைந்தான் ஜானி. ஆனால் இடையன் குறுக்கிட்டு "இங்கே சண்டை போடக் கூடாது. இது அதற்கு உகந்த இடமல்ல" என்றான்.

"நீங்கள் அமைதியாய் இருக்க மாட்டீர்களா" என்று அவர்களுக்கிடையில் வந்த ஸ்கல்லி பேச முயன்றான்.

அந்தச் சிறிய நேர அமைதி கிழக்கத்தியான் பேசுவதற்கு அவகாசமளித்தது போல் இருந்தது. அவன் திருப்பித் திருப்பிச் சொன்னான். "ஒரு கணம் சும்மாயிருங்கள். உங்களால் முடியாதா? சீட்டு ஆட்டத்திலா இப்படிச் சண்டை போடுவது? இதில் என்ன லாபம்? ஒரு கணம் தாமதியுங்கள்."

முகம் சிவக்க தகப்பனின் தோளுக்கும் மேல் எழும்பி ஜானி மறுபடியும் ஸ்வீடன்காரனைப் பார்த்து "மறுபடியும் கேட்கிறேன், நானா ஏமாற்றினேன்? சொல்லு."

ஸ்வீடன்காரன் பற்களைக் காட்டினான். "ஆமாம்" என்று உறுதியுடன் பதிலளித்தான்.

"அப்படியானால் நாம் சண்டை போட்டே ஆகவேண்டும்" என்றான் ஜானி.

"ஆமாம் சண்டையிடுவோம்" என்று ஸ்வீடன்காரன் சளைக்காமல் இரைந்தான். அப்போதைக்கு அவன் ஒரு அரக்கன் போலவே தோற்றம் அளித்தான். "சரி, சண்டையிடு. நான் எப்படிப்பட்டவன் என்பதை உனக்குணர்த்துவேன்! நீ யாருடன் சண்டையிடுகிறாய் என்பதைக் காட்டுவேன், என்னால் சண்டையிட முடியாது என்று நீ நினைத்திருக்கலாம்!"

"என்றால் முடியாது என்று நீ நினைத்திருக்கலாம்! காட்டுகிறேன் என் சாமர்த்தியத்தை. எத்தனே! மோசக்காரா! சீட்டில் மோசடி! ஏமாற்றினாய்! நிச்சயமாய் ஏமாற்றினாய்!" என்று அவன் கர்ஜித்தான்.

"சரி நாம் வெளியே போகலாம். வா, சண்டைக்கு" என்று ஜானி சாந்தமாகக் கூறினான்.

சண்டை நடக்காமல் தடுத்த முயற்சியால் இடையனுடைய நெற்றியெல்லாம் வியர்வையால் நனைந்து விட்டது. கவலையுடன் ஸ்கல்லியின் பக்கம் திரும்பி "இப்போது நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டான்.

அவனுடைய ஐரிஷ்கார முகத்தில் ஒரு மாற்றம் தெரிந்தது. இதன் முடிவை அவன் அறிய விரும்புவது போன்ற ஒரு உற்சாகம் தென்பட்டது. அவன் கண்கள் ஒளிர்ந்தன.

"அவர்கள் சண்டைபோட விட்டு விடுவோம்" என்று அவன் தைரியமாக மொழிந்தான். "இதை மேலும் சகித்துக் கொண்டிருக்க முடியாது. இந்த முட்டாள் ஸ்வீடன்காரனை இதுவரையில் சகித்துக் கொண்டு இருந்ததே எனக்குப் போதுமென்றாகி விட்டது. அவர்கள் சண்டை போடட்டும்" என்று முடிவாகச் சொல்லி விட்டான்.

## VI

அவர்கள் வீட்டிற்கு வெளியே செல்லத் தயாராயினர். தன்னுடைய புதிய கோட்டில் கைகளைச் சரியாக நுழைக்கக்கூட முடியாதபடி கிழக்கத்தியான் பயந்திருந்தான். இடையனோ தன் தொப்பியைக் காதுகள் வரை இழுத்து விட்டுக்கொண்ட பொழுது அவன் கைகள் நடுங்கின. ஜானியும் ஸ்கல்லியும்தான் எவ்விதப் பரபரப்புமின்றி நிதானமாகவே இருந்தனர். இவை எல்லாம் மௌனமாகவே நடந்து கொண்டிருந்தன. ஒருவன் கூடப் பேசவில்லை.

ஸ்கல்லி கதவைத் திறந்து "வெளியே வாருங்கள்" என்று எல்லோரையும் அழைத்தான். அப்பொழுது உள்ளே வீசிய ஒரு கடும் காற்று, விளக்கை ஏறக்குறைய அணைத்துவிடும் போலிருந்தது. புகைப் போக்கியின் மேலிருந்து கரும்புகை மேலே சென்றது. காற்றின் வேகம் அடுப்பின் மீது நன்றாக மோதியது. அதனுடைய சப்தம் புயலின் இரைச்சலுக்குச் சமமாக எழுந்தது. சிதறிப் பரந்த சில சீட்டுகள் தரையிலிருந்து கிளம்பி, அடுத்த சுவரின் மீது மோதின. கடலுள் முழுகிச் செல்வது போன்று தலைகளைத் தாழ்த்திக் குனிந்து கொண்டே அவர்கள் எல்லோரும் அப்பனிப் புயலில் நுழைந்தனர்.

பனியொன்றும் கொட்டவில்லை. ஆனால் துகள்களின் புகையும் தூசும் உன்மத்தமான காற்று வீசியதால் நிலத்திலிருந்து



பறந்து கொண்டிருந்தன. அவை குண்டுகள் பொழியும் வேகத்தில் தெற்கு நோக்கிப் பறந்தன. பூமியெல்லாம் ஒரு நீலப் பட்டு விரிப்புப் போட்டது போல் மூடியிருந்தது. நீல நிறத்தைத் தவிர வேறெவ்வித வர்ணமும் தென்படவில்லை. வெகு தூரத்தில் சரிவிலே தெரிந்த ரெயில்வே ஸ்டேஷனில் மட்டும் விளக்கு ஒன்று மினுக் மினுக் என்று வைரக் கல்லைப் போல வீசிக் கொண்டிருந்தது. இடுப்பளவில் பனித் துளிகள் வீசிய வெளிப்புறத்திற்கு அவர்கள் வந்ததும் ஸ்வீடன்காரன் ஏதோ மும்முரமாகச் சொல்லிக் கொண்டிருந்ததைப் பார்த்தான். இன்னதென்று கேட்கவில்லை. ஸ்கல்லி அவனிடம் சென்று தோள்மேல் ஒரு கையை வைத்து ஒரு காதை அவன் பக்கம் திருப்பி "என்ன சொல்லுகிறாய்?" என்று கத்தினான்.

"சொல்லுவதா? இந்த மாதிரி ஒரே கூட்டமாக என் மீது பாய்ந்தால் என்னால் ஒன்றும் செய்ய முடியாது. நீங்களனைவரும் என்னை முறியடித்து விடுவீர்கள். என் மீது உங்களுக்கெல்லாம் 'ஒரு கண்' என்று எனக்குத் தெரியும்" என்றான்.

ஸ்கல்லி வெறுப்புடனே அவனைத் தோளில் தட்டி "அடசட்" என்று அலட்சியமாக இரைந்தான். அந்தப் பேய்க் காற்று ஸ்கல்லியின் உதட்டிலிருந்து பாதிச் சொற்களைப் பறித்துச் சிதறச் செய்தது.

"நீங்கள் எல்லோரும் ஒரு...கும்பல்" என்று ஸ்வீடன்காரன் மறுபடியும் கூச்சலிட்டான். அவனுடைய பாதி வார்த்தைகளைப் புயல் கொண்டு சென்று விட்டது.

காற்று வீசிய பக்கமாகவே திரும்பிக் கொண்டு ஹோட்டலில் மறைவானதொரு மூலைக்கு அவர்கள் விரைந்தனர். பனியினால் மறைவானதொரு மூலைக்கு அவர்கள் விரைந்தனர். பனியினால் விளையும் இவ்வளவு சேதத்துக்கு இடையிலும் இந்த மூலையில் ஏகதேசமாக 'வி' உருவத்தில் அடர்த்தியான கட்டிடம் வளைந்து புல் வளர்ந்திருந்தது. அதன் மேல் அவர்கள் நடந்தபோது 'சட சட' என்ற ஓசைகூடக் கேட்டது. காற்றடித்த பக்கத்திற் கெதிராக நின்ற பெரும் தடைகளைக்கூட அங்கே பார்க்க முடிந்தது. இந்த இடத்தின் ஒரு பக்கத்தை யடைந்த அவர்களுக்கு இன்னும் ஸ்வீடன்காரன் ஏதோ இரைந்து கொண்டிருப்பது கேட்டது.

"ஓ. இது என்ன சண்டை என்பது எனக்குத் தெரியும்! நீங்களனைவரும் ஒன்று சேர்ந்து என் மீது பாய்ந்து என்னை அடித்து விடுவீர்கள் என்பது எனக்குத் தெரியும். உங்களனைவரையும் நான் ஒருவனாக எப்படி அடித்துவிட முடியும்?"

ஸ்கல்லி ஒரு சிறுத்தையைப் போன்று அவனைப் பார்த்தான். "எங்கள் எல்லோரையும் நீ அடிக்க வேண்டியதில்லை—என் மகன் ஜானியை மட்டும் நீ வெற்றி கொண்டால் போதும். அந்தச் சமயத்தில் வேறு எவனாவது உன்னைத் தொந்தரவு செய்தால் அவனை நான் கவனித்துக் கொள்கிறேன்" என்றான்.

ஏற்பாடுகள் எல்லாம் துரிதமாகச் செய்யப்பட்டன. கடூரமிக்க ஸ்கல்லியின் உத்தரவுக்குக் கட்டுப்பட்டு இருவரும் ஒருவரையொருவர் பார்த்து நின்றனர். ஸ்கல்லியின் முகம் பெரும் சோர்வுற்றிருந்தது. ரோமானியப பெரு வீரர்களின் முகங்களில் காணப்படும் உயர்ந்த தன்னலமற்ற பாவம் அதில் காணப்பட்டது. கிழக்கத்தியானின் பற்கள் பனியில் கிட்டிக் கொண்டன. அவன் ஒரு பொம்மையைப் போன்று மேலும் கீழும் தத்தித்தத்தி நடந்து கொண்டிருந்தான். இடையன் பாறை போன்று நிலைத்து நின்றுவிட்டான்.

சண்டையிடப் போகிறவர் ஆடைகளைக் களையவில்லை. ஒவ்வொருவரும் அவரவர் சாதாரண உடையிலேயே இருந்தனர். கைமுஷ்டிகள் உயர்ந்தன. இரண்டு புலிகள் ஒன்றையொன்று கொடூரமாகப் பார்த்துக் கொள்வதுபோல் அவர்கள் குரோதத்துடன் பார்த்துக் கொண்டனர்.

இந்த இடைவெளியில், கிழக்கத்தியானின் மனம் மற்ற மூவர்களின் தோற்றத்தையும் பாவங்களையும் ஒரு பிலிம் போன்று பதிந்து கொண்டது. அந்நிகழ்ச்சியை மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்த நிலை குலையாத, அசையாத ஹோட்டல் முதலாளி; வெளிறிப்போன பயங்கரமான ஸ்வீடஷ்காரன்; அமைதியான—ஆனால் வெறி பிடித்த, மிருகத்தனமான—ஆனால் வீரமிக்க ஜானி. காரியம் நிகழ்ந்த பின் உண்டாகும் துன்பியலைக் காட்டிலும் இவ்வித முன்னேற்பாடுகளில் காணப்பட்ட துன்பியல் அதிகமாயிருந்தது. கண்ணை மறைக்கும் பனிப்புயல் இந்த சோக நாடகத்தை மிகைப்படுத்திக் காட்டிற்று.

"ஆரம்பிக்கலாம்" என்று ஸ்கல்லி உத்தரவிட்டான்.

சண்டை செய்யும் இருவரும் முன்னால் தாவி இரண்டு எருதுகள் போல் மோதினர். அவர்களின் சப்தம் 'மொத் மொத்' என்று கேட்டது. பல்லைக் கடித்துக்கொண்டே ஒருவரையொருவர் சபித்துக் கொண்ட ஓசையும் இதனிடையில் கேட்டது.

இதை வேடிக்கை பார்த்தவர்களில் கிழக்கத்தியான் பெருமூச்சு விட்டுக் கொண்டே சற்று நிம்மதி யடைந்ததாகக் காணப்பட்டது. காத்துக் கொண்டிருந்தே சோர்வடைவதைவிட நிகழ்ச்சி ஆரம்பித்து விட்டதில் அவனுக்கு நிம்மதி. இடையன் அவ்வப்போது பெருங் கூச்சலிட்டுத் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தான்.

தானே அநுமதித்து ஏற்பாடு செய்த ஒரு சண்டையின் மும்முரத்தைக் கண்ட ஸ்கல்லி பயத்தாலும் ஆச்சரியத்தாலும் சிலையென நின்றுகொண்டிருந்தான்.

கொஞ்ச நேரம் இருளில் இருவருடைய கரங்கள் மட்டுமே மாறி மாறித் தெரிந்தன. விரைந்து சுழற்றிய சக்கரத்தில் சரிவர எதுவும் காணப்படாதது போல் சண்டையின் போக்கு ஏதும் தெரியவில்லை. அவ்வப்போது ஒரு முகம் ஒளிக்கீற்றால் பிரகாசிப்



பதுபோல் தெரியும். செவேலென்று சிறு சிறு புள்ளிகளும் தெரியும். மற்றப்படி அவர்கள் வெறும் நிழலுருவங்கள் என்றே கூற வேண்டும். ஒருவர்க்கொருவர் சபித்துக் கொண்டபோதுதான், அவர்கள் மனிதர்கள் என்று தெரிய வந்தது.

திடீரென்று போர்வெறி இடையனைத் தீவிரமாகப் பற்றிக் கொண்டது. கட்டுக்கடங்காத கலிபோர்னியக் குதிரையைப் போன்று முன்னால் தாவினான். "விடாதே ஜானி, விடாதே, கொல்லு அவனைக் கொல்லு!" என்று உற்சாக மூட்டினான்.

ஸ்கல்லி அவனைப் பார்த்து, "பின்னால் போ!" என்று அதட்டினான். பார்த்த பார்வையிலிருந்தே அவன் ஜானியின் தகப்பனார்தான் என்பது தெரிந்தது. பார்வையில் அவ்வளவு நேர்மையுணர்ச்சி இருந்தது. இந்தச் சண்டை சட்டென்று முடிவுக்கு வராததால் தானோ, என்னமோ, சப்பென்று இருந்தது. ஒருவருக்கொருவர் முடிவில்லாமல் அடித்துக்கொள்ளுவது அவனுக்குச் சலிப்பை உண்டாக்கியது. ஒரு முறை சண்டையிடுபவர்கள் அவனுக்கு வெகு சமீபமாய் வந்தனர். அப்பொழுது சித்திரவதை செய்யும் கருவிக்குள் அகப்பட்டுத் தவிப்பவர்கள்போல் அவர்கள் தத்தளித்தனர் என்பது அவர்கள் விட்ட மேல் மூச்சிலிருந்து தெரிந்தது.

"அவனைக் கொன்று போடு ஜானி! கொல்லு! கொல்லு!" என்றான் இடையன். அவன் முகம் கோணிப்போயிருந்தது.

"அமைதியாயிரு" என்று ஸ்கல்லி சாவதானமாகக் கூறினான்.

திடீரென்று உரத்த குரலில் உறுமல்—அரைகுறையாக—துண்டிக்கப்பட்டது கேட்டது, ஸ்வீடன்காரனிடமிருந்து. ஜானியின் உடல் சுமை போல் புல்மேல் விழுந்தது. குப்புறவிழுந்த எதிரியின் மேல் வெறிபிடித்த ஸ்வீடன்காரன் பாய்வதைச் சரியான சமயத்தில் இடையன் தடுத்தான். "இல்லை, கூடாது" ஒரு கையில் தடுத்த வண்ணம் இடையன் கூறினான். "ஒரு விநாடி சும்மாயிருடா."

ஸ்கல்லி அவனுடைய மகன் விழுந்திருந்த பக்கம் சென்றான். "ஜானி! ஜானி! என் மகனே!" என்று அழைத்தான். அவனுடைய குரலில் வருத்தம் தோய்ந்த குழைவு இருந்தது. "ஜானி! இதைத் தொடர்ந்து நடத்த உன்னால் முடியுமா?" இரத்தம் தோய்ந்து பிண்டமாக ஆகியிருந்த தன் மகனுடைய முகத்தை அவன் ஆர்வத்துடன் கவனித்தான்.

அங்கு ஒரு கண நேர அமைதி நிலவியது. பிறகு ஜானி சாதாரணமான குரலில் பதிலளித்தான். "முடியும், முடியும், நான்—அது—முடியும்."

தந்தை கொஞ்சம் உதவி செய்ய அவன் தள்ளாடித் தள்ளாடி எழுந்திருந்தான். "கொஞ்சம் மூச்சு வாங்கிக்கொள். சிறிது நேரம் களைப்பாற்றிக்கொள்," என்றான் ஸ்கல்லி.

சில அடி தூரம் தள்ளி ஸ்வீடன்காரனிடம் இடையன் சொல்லிக் கொண்டிருந்தான். "அவசரப்படாதே, நீ போகக்கூடாது ஒரு விநாடி காத்திரு!"

கிழக்கத்தியான் ஸ்கல்லியின் சட்டையை இழுத்து அவன் கவனத்தைத் தன்பக்கம் திருப்பி "ஓ, இது போதும், இது போதும், நடந்தவரை போதும். இது போதும்! நிறுத்திவிடு," என்று இறைஞ்சினான்.

"பில், இங்கிருந்து வெளியேறு" என்றான் ஸ்கல்லி.

இடையன் ஒரு பக்கம் நகர்ந்தான். "ஆரம்பிக்கலாம்," என்று உத்தரவு பிறந்தது. சண்டைக்காரர்கள் மறுபடியும் மோதலுக்குத் தயாரான பொழுது அவர்கள் எச்சரிக்கையுடன்தானிருந்தனர். ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். மின்னல் வேகத்தில் முழு பலத்தோடும் கூடிய அடி தர ஸ்வீடன்காரன் குறி வைத்தான். பலவீனமடைந்து விட்டதால் பாதி உணர்ச்சி மரத்துப்போன ஜானி எப்படியோ அதை மாயமாய்ச் சமாளித்துக் கொண்டான். ஒரு பக்கம் அதிகமாய்ச் சாய்ந்திருந்த ஸ்வீடன்காரனை ஒரு குத்து விட்டு கீழே உருண்டு விழும்படி செய்தான்.

இடையன், ஸ்கல்லி, கிழக்கத்தியான்—மூவரும் வெற்றி பெற்ற வீரனுக்கு உற்சாக மூட்டுவதுபோல் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். ஆனால் அது முடிவதற்குள் ஸ்வீடன்காரன் சமாளித்து எழுந்து கட்டுக்கடங்காத கோபத்துடனும், சுறுசுறுப்புடனும் தன் பகைவன் மீது பாய்ந்தான். மறுபடியும் இருவர் கைகளும் பின்னிக் கொண்டன. மறுபடியும் ஒரு குழப்பம். ஜானியின் உடல் கூரையிலிருந்து விழும் பொட்டலத்தைப் போன்று இரண்டாவது தடவையாக புல் தரையின் மீது விழுந்தது.

ஸ்வீடன்காரனும் தள்ளாடித் தள்ளாடி அருகிலிருந்த ஒரு மரத்திற்குச் சென்று, அதன் மேல் சாய்ந்து கொண்டு, ஒரு யந்திரத்தைப் போன்று மூச்சுவிட்டுக் கொண்டிருந்தான். காட்டு மிருகத்தின் பார்வையை ஒத்த அவனது கண்கள் ஜானியிடம் குவிந்து கொண்டிருந்த மூவரையும் ஒவ்வொருவராகப் பார்த்தன. தரையில் கிடந்த ஜானியிடமிருந்து கண்களை உயர்த்திய கிழக்கத்தியான், தூரத்தில் தனித்து நின்ற அந்த உருவம், காத்திருப்பதைக் கண்டான். அப்பொழுது ஸ்வீடன்காரனின் நிலையில் ஒரு தனிமையின் ஒளி நிலவுவதை அவன் உணர்ந்தான்.

"எப்படியப்பா இருக்கிறாய் ஜானி? மேலும் சண்டையிட" என்று ஸ்கல்லி தழுதழுத்த குரலில் கேட்டான்.

மகன் பெருமூச்சுடன் மெதுவாகக் கண்களைத் திறந்தான். ஒருகணம் கழித்து அவன் பதிலளித்தான். "முடியாது—இனிமேல் என்னால் முடியாது—" என்று சோர்வுற்று சொன்னான். வெட்கத்தாலும், உடல் வலியாலும் அழத் தொடங்கினான். ரத்தக் கறை படிந்த முகத்தின்மேல் கண்ணீர்த்துளிகள் வழிந்தோடின.



"எனக்கு அவன் ஈடில்லை. அவன்—மிகவும்—மிகவும்—பெரியவன். வலுவுள்ளவன்."

ஸ்கல்லி தூரத்தில் நின்று கொண்டிருந்த ஸ்வீடன்காரனைப் பார்த்தான். அவனிடம் பேசினான். "எங்கள் கோஷ்டியைப் பொறுத்தவரையில் எல்லாம் முடிந்துவிட்டது," என்று சொல்லிவிட்டுப் பிறகு துடிக்கும் குரலில்—எளிய, உயிரற்ற ஆனால் மகத்தான தீர்ப்பை அவன் அறிவித்தான் "ஜானி தண்டிக்கப்பட்டு விட்டான்."

பதிலேதுமின்றி, வெற்றி பெற்றவன் விடுதியின் முன்கதவுப் பக்கமாகச் சென்ற பாதையில் நடந்தான். எழுத முடியாத புதிய புதிய வசைமொழிகளை இடையன் கூறிக் கொண்டிருந்தான். வட துருவத்துக்குரிய பனிக்காற்று வீசுவதை இதுவரையில் கவனியாதிருந்த கிழக்கத்தியான் இப்போது அதைக் கண்டு திடுக்கிட்டான். தெற்கு நோக்கி அது வீசியபொழுது அதன் கடுங்குளிரை அவன் உணர்ந்தான். இவ்வளவு நேரமாக அந்தக் குளிர் அவனை நன்றாக வாட்டியதையும் உணர்ந்தான். இதுவரையில் பிழைத்திருந்ததையே அவன் பெரிதாகக் கருதினான். தோல்வியுற்றவனுடைய உடல் நிலையைப் பற்றி அவன் பொருட்படுத்தவில்லை.

"ஜானி, உன்னால் எழுந்து நடக்க முடியுமா?" என்று ஸ்கல்லி கேட்டான்.

"நான் அவனைக் காயப்படுத்தினேனா? அவனுக்கொன்றும் காயமில்லையா?" என்று மகன் கேட்டான்.

"நீ நடக்க முடியுமா தம்பி? உன்னால் நடக்க முடியுமா?"

ஜானியின் குரல் திடீரென வலுப்பெற்றது. அதில் அசாத்திய பரபரப்பிருந்தது. "அவனைக் காயப்படுத்தி விட்டேனா? என்று உங்களைக் கேட்டேன்," என்று அழுத்தமாகச் சொன்னான்.

"ஆமாம் ஜானி, ஆமாம்".—இடையன் ஆதரவாகப் பேசினான். "அவனுக்கு நல்ல காயம் பட்டிருக்கிறது."

தரையிலிருந்து அவனைத் தூக்கி நிறுத்தினர். உதவி செய்ய முயற்சித்தவர்களை விலக்கிக் கொண்டே அவன் தடுமாற்றத்துடன் நடந்தான். அவர்கள் மூலையைக் கடந்து திரும்பியபோது, பனியின் தாக்குதலால் அவர்களுக்குக் கண்களே தெரியவில்லை. தீயைப் போன்று அவர்கள் முகங்களை அது சுட்டது. இடையன் அவனைத் தூக்கிக்கொண்டு ஹோட்டல் வாசலுக்குச் சென்றான். அவர்கள் உள்ளே நுழைந்தபோது மறுபடியும் பனிக்காற்று வீசிச் சீட்டுகள் பறந்து சுவரில் மோதின.

கிழக்கத்தியான் அடுப்புக்கு விரைந்தான். அவன் எரியும் ஜ்வாலையைக் கூடத் தழுவிக்கொள்ளுவான் போலிருந்தது. அவன் அவ்வளவு ஜில்லிட்டிருந்தான். ஸ்வீடன்காரன் அறையில் இல்லை. ஜானி ஒரு நாற்காலியில் விழுந்தான். முழங்கால்களைக் கட்டிக் கொண்டு அவற்றில் முகத்தைப் பதித்துக்கொண்டான்.

ஸ்கல்லி, அடுப்பின் ஓரத்தில் ஒவ்வொரு காலாகச் சூடாக்கிக்,

கொண்டிருந்தான். ஆழ்ந்த வருத்தத்துடன் ஏதோ முணுமுணுத்தான். இடையன் தன் தோல் குல்லாயை எடுத்து விட்டுக் கலைந்துவிட்ட தலை மயிரை ஒரு கையால் கோதிவிட்டான். மேலிருந்து பலகைகளின் ' கிரீச் ' எனும் ஒலி கேட்டது. ஸ்வீடன்காரன் பொறுமையிழந்து இங்குமங்கும் அறையில் நடந்தான்.

சமையலறையை நோக்கியிருந்த கதவு திடீரெனத் திறக்கப்பட்டதால் அந்த ஆழ்ந்த அமைதி கலைந்தது. அதைத் தொடர்ந்து பெண்கள் வந்தனர். பேரழுகைப் புலம்பலுடன் ஜானியின் மீது விழுந்தனர். பெண்களின் இயல்புக்கேற்றவாறு இரக்கமும் வசவும் கலந்து பலத்த குரலில் கத்தினர். ஜானியின் தாயார் ஸ்கல்லியைக் கடுமையாகப் பார்த்தாள். " உங்களுக்கு வெட்கமாக இல்லை? உங்களைத்தான், உங்கள் மகனுக்கும் உங்களுக்கும் கொஞ்சமும் வெட்கமில்லை ! "

" சரி போதும். நீங்கள் கொஞ்சம் அமைதியாக இருங்கள் " என்று கிழவன் மிகப் பரிதாபமாகப் பேசினான்.

" நீ ஒரு மானங்கெட்டவன், பேட்ரிக் ஸ்கல்லி ! " என்று தாயார் சொன்னதைப் பெண்கள் பல்லவி பாடினர். அதே கோபத்தோடு நடுங்கிக்கொண்டிருந்த இடையனையும், கிழக்கத்தியானையும் வெறுப்புடன் பார்த்தனர். உடனே ஜானியைத் தூக்கிக்கொண்டு உள்ளே சென்றுவிட்டனர். அவர்கள் மூவரும் துக்கத்தில் ஆழ்ந்தனர். நடந்ததைப் பற்றி அப்போதுதான் சிந்திக்கத் தொடங்கினர்.

## VII

" இந்த டச்சுக்காரனுடன் இங்கே சண்டை செய்யவே எனக்குத் தோன்றுகிறது" என்று நீண்ட அமைதியைக் கலைத்துக் கொண்டு இடையன் பேசினான்.

வருத்தத்துடன் ஸ்கல்லி தலையை ஆட்டினான். " கூடாது. அதனால் பயனில்லை. அது சரியான செயலுமாகாது."

" ஏன் சரியான செயலாகாது? அதிலொன்றும் கெடுதலாக எனக்குப் படவில்லை " என்று இடையன் விவாதித்தான்.

" இல்லை." ஸ்கல்லி நேர்மை உணர்ச்சி உந்த பதிலளித்தான்.

" அது சரியானதல்ல. அது ஜானியினுடைய சண்டை. ஜானியை அடித்துவிட்டான் என்பதற்காக அவனை நாம் அடிக்கக் கூடாது."

" ஆம். உண்மைதான். ஆனால்—அவன் என்னுடன் மோதிக் கொள்ளக் கூடாது. ஏனெனில் என்னால் அதைப் பொறுக்க முடியாது," என்றான் இடையன்.

" நீ அவனிடம் ஒரு வார்த்தையும் பேசக் கூடாது " என்று ஸ்கல்லி உத்தரவிட்டான். அப்பொழுதுதான் ஸ்வீடன்காரனுடைய காலடியோசை படிக்கட்டுகளில் கேட்டது.



அறைக்குள் அவன் நுழைந்தது நாடகப் பாணியிலிருந்தது. கதவைத் தடாலென்று தனக்குப் பின்னால் சாத்திவிட்டு அறை நடுவில் வந்தான். ஒருவரும் அவனைப் பார்க்கவில்லை. " இப்போது நான் எவ்வளவு காசு கொடுக்கவேண்டும் என்பதைக் கூறுவாய் என்று நான் எண்ணுகிறேன்," என்று பெருங்குரலில் ஸ்கல்லியைக் கேட்டான்.

கிழவன் அசையாதிருந்தான். " நீ எனக்கொன்றும் தர வேண்டியதில்லை."

" ஹூம் ஹூம். ஒன்றும் தரவேண்டியதில்லையா? " ஸ்வீடன்காரன் கேட்டான்.

ஸ்வீடன்காரனைப் பார்த்து இடையன் பேசினான். " இவ்வளவு மகிழ்ச்சியுடன் உன்னால் இங்கு எப்படி வர முடிந்தது என்று எனக்குத் தெரியவில்லை? "

அப்பொழுது கிழட்டு ஸ்கல்லி நிலைமையைப் புரிந்து கொண்டவனாக உடனே நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். " நிறுத்து " என்று கத்தினான். விரல்கள் மேல் நோக்கியிருக்க கையை முன்னால் நீட்டினான். " பில், நீ சும்மாயிரு."

இடையன் மரத்தூள் பெட்டியில் அலட்சியமாகத் துப்பிக் கொண்டு " நான் ஒன்றும் சொல்லவில்லையே. சொன்னேனா? " என்று சொன்னான்.

" மிஸ்டர் ஸ்கல்லி, உங்களுக்கு நான் எவ்வளவு தரவேண்டும்? கணக்குச் சொல்லுங்கள் " என்று ஸ்வீடன்காரன் மறுபடியும் கேட்டான். புறப்படுவதற்குத் தயாராக அவன் உடுத்தியிருந்ததையும், கையில் பணப்பை வைத்திருந்ததையும் அவர்கள் பார்த்தனர்.

" நீ எனக்கொன்றும் கொடுக்கவேண்டியதில்லை " என்று சலனமின்றித் திரும்பவும் ஸ்கல்லி கூறினான்.

" ஹூம், நீ கூறுவதும் சரிதான்; அப்படி யாராவது தர வேண்டியிருந்தால் நீதான் எனக்குக் கொஞ்சம் தரவேண்டும் போலிருக்கிறது," என்றான் ஸ்வீடன்காரன். பின்னர் இடையனைப் பார்த்தான். " அவனைக்,, கொல்லு ! கொல்லு ! கொல்லு ! " இடையன் கத்தியதைப் போலவே கத்திக் கிண்டல் செய்தான். வெற்றியின் மமதை தொனித்தது. " அவனைக் கொல்லு " என்று திருப்பித் திருப்பிச் சொன்னதில் ஏளனத்தோடு கூடிய நகைச்சுவையிருந்தது.

அவன் வார்த்தைகளை ஒருவரும் பொருட்படுத்தவே இல்லை. செத்தவர்களைப் பார்த்துப் பேசினால் எப்படியோ அப்படித்தான் அவர்கள் மூவரும் அசையாது அடுப்பையே வெறித்துப் பார்த்துக் கொண்டு மௌனமாயிருந்தனர்.

ஸ்வீடன்காரன் கதவைத் திறந்துகொண்டு வெளியே சென்றான். கதவருகில் நின்று அசையாதிருந்த அவர்களை அலட்சியத்துடன் பார்த்து விட்டுத்தான் சென்றான்.

கதவு மூடிக்கொண்டதும், ஸ்கல்லியும் இடையனும் துள்ளி எழுந்து அவனைச் சபிக்கத் தொடங்கினர். பூமியை அடிக்கடி உதைத்தனர். இங்குமங்கும் நடந்துகொண்டு வெறி பிடித்தவர் போல் அலைந்தனர். முஷ்டியால் குத்துவதுபோல் பாவனை செய்தனர். "ஆ, ஆனால் அந்த ஒரு நிமிஷம்! நிலைமையைத் தலைகீழாகக் கவிழ்க்கக்கூடிய அந்த நிமிஷம்! அங்கே அவன் மரத்தின் மீது சாய்ந்துகொண்டிருந்தானே, தனிமையாக அந்த நிமிஷத்தில் மூக்கில் ஒரு குத்து விட்டிருந்தால் எப்படி இருந்திருக்கும். அந்த ஒரு குத்து எனக்கு நாற்பது டாலர்கள் பெறுமே. நீ பார்த்துக் கொண்டு எப்படிச் சும்மாயிருந்தாய் பில்?" என்று ஸ்கல்லி அழ மாட்டாத துக்கத்துடன் சொன்னான்.

"நான் எப்படிப் பொறுத்தேன்? ஓ! எனக்கே விளங்கவில்லை." இடையன் நடுங்கும் குரலில் பேசினான்.

கிழவன் திடீரென்று வெறி பிடித்தவன்போல் கூச்சலிட்டான். "அந்த ஸ்வீடன்காரனைப் பிடித்து, கீழே பாறாங்கல் பதித்த தரையில் தள்ளி மண்டையைத் தடியால் அடித்துப் பிளக்க வேண்டும் போலிருக்கிறது எனக்கு." ஸ்கல்லி உளறிக் கொண்டிருந்தான்.

அநுதாபத்தோடு இடையன் உறுமினான். "கழுத்தைப் பிடித்து அவனைக் கொண்டு வந்து அடிஅடியென்று அடிக்கவேண்டுமென்றுதான் ஆத்திரம் பொங்குகிறது" என்று கையால் நாற்காலியில் ஓங்கி அறைந்தான். துப்பாக்கி வெடிப்பது போல ஒலி எழுந்தது. "குள்ள நரிக்கும் அவனுக்கும் வித்தியாசம் தெரியாதபடி அவனை அடித்துப் பிண்டமாக்கிவிடவே என் விருப்பம்."

"அவன் சாகும் வரை நான் அடிப்பேன்"—"நானும் எப்படிப்பட்டவன் என்பதைக் காண்பிப்பேன்—"

எல்லோரும் சேர்ந்து வெறியும் பேராவலும் நிறைந்த ஒரு குரல் எழுப்பினர். "ஓ...உ...ஓ!...நம்மால் மட்டும் முடியுமானால்—"

"ஆம்! முடியும்."

"ஆமாம்? முடியும்."

"அப்படியானால் நான் செய்வேன்—"

"ஓ...உ...ஓ!"

## VIII

ஸ்வீடன்காரன் தன் பையைக் கெட்டியாகப் பிடித்தவாறு முகத்தை மறைத்துக்கொண்டு புயலில் முன்னேறிச் சென்றான். தன்னுடைய பையை அவன் பாய்மரம் என்று நினைத்து விட்டான் போலும்! ஒற்றை மரங்கள் வரிசையாக நின்ற அடையாளத்தைக்கொண்டு அதுதான் பாதை என்று அந்தத் திக்கிலேயே போய்க் கொண்டிருந்தான். ஜானியிடமிருந்து குத்துப்பட்டிருந்த அவன் முகத்தின் மீது வீசிய பனிக் காற்றும் அறைந்த பனித்துகள்களும் நோவுக்கு இதமாகவே இருந்தன. அவனுக்கு முன்னால் சிறிது தூரத்தில் சதுரம் சதுரமாகப் பல கட்டிடங்கள் தெரிந்தன. அவை நகரத்தின் பிரதான பகுதியிலிருந்த வீடுகள் என்று உடனே அவன் கண்டு கொண்டான். எதிரே ஒரு வீதி குறுக்கிடவே அதன் வழியாகச் சென்றான். காற்றின் வேகம் அதிகரித்த போதெல்லாம் ஒரு மூலையில் ஒதுங்கி, காத்திருந்து மேலே சென்றான்.



அந்த ஊரே மனித சஞ்சாரமற்றதுபோல் காணப்பட்டது. உலகம் என்பது வெற்றியும் செருக்கும் கொண்ட மனிதர்கள் நிறைந்த இடம் என்று சொல்லுவார்கள். ஆனால் பேரிரைச்சலுடன் புயல் வீசுகின்ற இந்த இடத்தைப் பார்த்தால் மனிதர்கள் வசிக்கக் கூடிய உலகம் என்ற ஒன்று இருக்கிறது என்று கற்பனை செய்யக் கூடத் தோன்றாது. அப்பொழுது ஒருவன் தென்பட்டாலும், அது வியப்புக்குரிய காட்சியாகத்தானிருக்கும். சுழன்று சுழன்று அலையும் மரக்கிளைகளிலும் கருகிப்போய்ப் பனியுறைந்த சொத்தை மரங்களிலும் மொட்டுகளிலும் ஒட்டிக்கொண்டிருக்கும் பூச்சிகளைப் போன்று தான் எவனாவது மனிதன் அப்போது தென்பட்டால் தோன்றியிருப்பான். இவ்வளவு பயங்கரப் புயலிலும் தீரத்துடன் செல்லும் மனிதனின் தற்பெருமைதான் என்னே! இக் கடும் புயலில் அகப்பட்டுச் சாகாதவன் ஒரு முட்டாள்தான். எப்படியோ ஸ்வீடன்காரன் கண்ணுக்கு இந்தச் சமயத்திலும் திறந்திருந்த ஒரு மதுபானக்கடை தென்பட்டது.

அதன் முன்பக்கம் ஒரு சிவப்பு விளக்கு எரிந்து கொண்டி ருந்தது. விளக்கின் ஒளி வட்டத்தின் ஊடே சொரிந்த பனித் துகள்கள் கூட ரத்தச் சிவப்பாக மாறிவிட்டிருந்தன. அந்தக் கடையின் கதவைத் திறந்து கொண்டு ஸ்வீடன்காரன் நுழைந் தான். மணல் பரப்பிய தரை அவன் முன்னால் தென்பட்டது. அதன் கோடியில் நால்வர் உட்கார்ந்து மது அருந்திக் கொண்டிருந் தனர். அறையில் ஒரு பகுதியில் மது வழங்கும் இடமிருந்தது. மேஜையிலிருந்த மனிதர்களின் பேச்சைக் கேட்டபடியே கடையின் சொந்தக்காரன் தன் முழங்கைகளை ஊன்றிக் கொண்டு பலகையின் மீது சாய்ந்து கொண்டிருந்தான். ஸ்வீடன்காரன் தன் பையைத் தரையில் போட்டுவிட்டுக் கடைக்காரனிடம் நெடுநாள் பழகிய நண்பன்போல் புன்முறுவலுடன் பேசினான். "எனக்குக் கொஞ்சம் விஸ்கி கொடு. தருவாயா?" அவன் ஒரு விஸ்கி புட்டியையும், ஊற்றிக்கொள்ள கோப்பையையும், பனிக்கட்டிபோல் இறுகியிருந்த ஒரு கோப்பைத் தண்ணீரையும், பலகையின் மீது வைத்தான். ஸ்வீடன்காரன் கணிசமான அளவு மதுவை ஊற்றிக்கொண்டு அதை மூன்றே மடக்குகளில் குடித்துவிட்டான். "மோசமான

இரவு'' என்று கடைக்காரன் எங்கோ பார்த்துக்கொண்டு கூறி
னான். கடைக்கு வருபவர்களின் போக்கைக் கவனிக்காதவன்
போல் நடிப்பது மதுபானக் கடைச் சொந்தக்காரர்களுக்கே உரித்
தான சுபாவம். ஆனாலும் பாதி துடைக்கப்பட்ட ரத்தக்கறையுட
னிருந்த ஸ்விடன்காரனுடைய முகத்தை அவன் ஆழ்ந்து ஆராய்ந்து
கொண்டிருந்தான் என்பது தெளிவாகத் தெரிந்தது. ''மோச
மான இரவு'' என்று அவன் மறுபடியும் கூறினான்.

இன்னும் கொஞ்சம் மதுவை ஊற்றிக்கொண்டே ''என் வரை
யில் அவ்வளவு மோசமில்லை'' என்று ஸ்விடன்காரன் ஒரு மாதிரி
யாகப் பதிலளித்தான். கடைக்காரன் அவனளித்த நாணயத்தை
எடுத்து வெள்ளியத்தில் செய்யப்பட்டிருந்த ஒரு யந்திரத்திற்குள்
நுழைத்தான். ஒரு மணியடித்தது. ''20 சதங்கள்'' என்று
அச்சிட்ட ஒரு சீட்டு வெளியே வந்தது.

''இல்லை, இது ஒன்றும் மோசமான புயல் காற்றே அல்ல.
எனக்கு இது மிகவும் நன்மையாகவே இருக்கிறது'' என்று
தொடர்ந்து ஸ்விடன்காரன் கூறினான்.

''அப்படியா!'' என்று கடைக்காரன் அவன் சொன்னது
விளங்காததுபோலப் பேசினான்.

அளவுக்கு அதிகமாகவே சாப்பிட்ட மது ஸ்விடன்காரனின்
கண்களைச் சுழலச் செய்தன. அவன் மூச்சுகூடக் கனமாக வந்தது.
''ஆம், இந்தப் பனிப் புயல் எனக்குப் பிடித்திருக்கிறது. இது
எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது.'' இந்தச் சொற்களுக்கு அதிக
முக்கியத்துவம் தந்தான் என்று அவன் அதை அழுத்திச் சொன்னதி
லிருந்தே தெளிவாகத் தெரிந்தது.

''அப்படியா?'' கடைக்காரன் மறுபடியும் முணுமுணுத்தான்.
காகிதச் சுருள்களைப்போன்று பறவைகளும், பறவைகளைப் போன்று
காகிதச் சுருள்களும் சோப்பினால் வரைந்திருந்த ஒரு கண்ணாடி
யையே அவன் அர்த்தமின்றிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''நல்லது. இன்னொரு கிண்ணம் குடிக்கலாம் என்று நினைக்கி
றேன். நீயும் ஏதாவது குடிக்கிறாயா?'' என்றான் ஸ்விடன்காரன்.

''வேண்டாம் நன்றி. எனக்கு இப்போது தேவையில்லை''
என்று கடைக்காரன் பதில் அளித்தான். பிறகுதான் அவன்
கேட்டான். ''உன் முகத்தில் எப்படிக் காயம் உண்டாயிற்று?''

ஸ்விடன்காரன் உடனே தன்னுடைய பிரதாபத்தைப் பற்றி
உரக்கப் பேசத் தொடங்கிவிட்டான். ''அதுவா, அது ஒரு
சண்டையில் ஏற்பட்ட காயங்கள். ஒருவனுடைய உயிரை வாங்கி
விட்டேன். ஸ்கல்லியின் விடுதியில் நிகழ்ந்தது.''

இந்தப் பேச்சைக் கேட்டதும் கோடியில் மேஜையிலிருந்த
நால்வரின் கவனமும் இவன்பால் திரும்பியது.

''யாரது?'' என்று அவர்களில் ஒருவன் கேட்டான்.

''ஜானி ஸ்கல்லி'' என்று ஸ்விடன்காரன் பெருமையுடன்
சொல்லிக்கொண்டான். ''அந்த ஹோட்டல் சொந்தக்காரன்



மகன்... கொஞ்ச நாட்களுக்கு அவன் படுக்கையில் உயிருக்கும்
சாவுக்குமாக ஊசலாடிக் கொண்டிருப்பான். நான்தான் சொல்லு
கிறேனே, அவனை செம்மையாக உதைத்து விட்டேன். அவனால்
எழுந்திருக்கவே முடியவில்லை. அவனை உள்ளே தூக்கிச் சென்
றார்கள். கொஞ்சம் மது அருந்துகிறீர்களா?''

இதைக் கேட்ட அவர்கள் உடனே ஒருமாதிரியாக அமைதி
யடைந்து மௌனமாக இருந்து விட்டனர். ''வேண்டாம், நன்றி''
என்று ஒருவன் மறுத்துக் கூறினான். அவர்கள் கூட்டமே விநோத
மானது. இருவர் அந்த ஊர் முக்கிய வியாபாரிகள். ஒருவன்
அந்த மாவட்டத்தின் சட்டப் பிரதிநிதி. இன்னொருவன் சூதாட்
டத்தையே தொழிலாகக் கொண்டவன். ''நியாயமானவன்''
என்றே அவனைப் போன்றவர்களுக்குப் பெயர். ஆனால் அக்
கூட்டத்தைத் துருவி ஆராய்ந்தால் கூட நால்வரில் எவன் சூதாட்
டக்காரன் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. உயர்ந்த
பண்புகளுடையவன். ஸ்திரீகள் சமூகத்தில் அவனுடைய பண்பும்
மரியாதையும் அப்பழுக்கின்றியிருக்கும். பெரிய மனிதர்கள் சமூ
கத்தில் ஏமாற்றுவதற்காக நபர்களை இவன் தேர்ந்தெடுக்கும்
விதமே இவனுடைய சிறப்பு. இவனிடம் ஏமாந்தவன் கூட 'அவன்
நியாயமாய் நடந்து கொண்டான்' என்றே இவனை மெச்சுவான்.
பொதுவாக அந்த ஊரிலேயே அவன் வியக்கத்தக்கவனாகவும்,
நம்பிக்கைக்குப் பாத்திரமானவனாகவும் கருதப்பட்டான். அவனை
உயர்ந்த வகுப்பைச் சேர்ந்தவன் என்றுதான் மக்கள் கருதினர்.
அவனுடைய தொழிலைச் சாதாரணமாக எல்லோருமே வெறுப்பு
டன் அலட்சியமாகக் கருதினர். அல்லது அதைக் கண்டு பயந்து
ஒதுங்கி நின்றனர். இதனால் தானோ என்னமோ இவனுக்கு ஒரு
தனி மதிப்பு இருந்து வந்தது. தொப்பி செய்பவர்கள், 'பிலி
யர்ட்ஸ்' மேஜை ஆட்கள், பலசரக்குக் கடைக் கணக்கர் போன்ற
வர்களின் கௌரவத்தைவிட அவனுடைய மதிப்பு உயர்வாக
உன்னதமாகச் சோபையுடன் விளங்கிற்று.

ரெயில் மூலம் ஊருக்கு வரும் புதிதான பிரயாணிகளிடம் எப்
போதாவது ஒரு சமயம்தான் தன்னுடைய சாமர்த்தியத்தைக்
காட்டுவான். மற்றப்படி அசட்டுத் துணிவும், முதிர்ந்த வயது
முள்ள பண்ணைச் சொந்தக்காரர்கள் தான் இவனுக்கு இலக்காவது
வழக்கம். பயிர் செழித்து நல்ல அறுவடை செய்து பணம்
கொழித்தபோது மகிழ்ச்சியுடன் அவர்கள் நகரத்திற்கு வண்டியில்
வருவார்கள். அவர்களுடைய மூடத்தனத்தையும், மூடத்தனத்
தில் அவர்களுக்கிருந்த நம்பிக்கையையும் எவனாலும் தகர்க்கவே
முடியாது. அத்தகையதொரு குடியானவன் மோசடிக்குள்ளானான்
எனும் செய்தி காற்றுவாக்கில் கேட்கப்பட்டால், ராம்பரில் இருந்த
பிரமுகர்களெல்லாம் வழக்கமாகச் சிரிப்பார்களே தவிர அதற்கதிக
மாக ஒன்றும் நிகழாது. மோசத்திற்குள்ளானவனுடைய அசட்டுத்
தனத்தை எண்ணிப் பரிதாபப்படுவர். மோசடி செய்த இந்த

ஓநாயைப்பற்றி எப்போதாவது நினைத்தார்களானால், தங்கள் அறிவையும், தைரியத்தையும் அவன் தாக்கத் துணிய மாட்டான் என்னும் தற்பெருமையுடன்தான் அவர்கள் எண்ணுவர்.

மேலும் இந்தச் சூதாடிக்கு உண்மையிலேயே ஒரு மனைவியும் உண்மையாகவே இரு குழந்தைகளும் பக்கத்துக் கிராமத்தில் ஒரு நல்ல வீட்டில் இருந்தனர் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அங்கு அவன் கண்ணியமாக வாழ்க்கை நடத்தி வந்தான் என்பதும் தெரிந்ததே. அவனுடைய பண்பில் எவனாவது மாசு கற்பிக்க முயன்றால், அவனுடைய சிறந்த குடும்ப வாழ்க்கையைப்பற்றி விரிவாகக் கூக்குரலிட்டுப் பரிந்து பேசுவர். அப்பொழுது உயர்வான குடும்ப வாழ்க்கை நடத்திய அந்த மனிதர்களும், சிறந்த குடும்ப வாழ்க்கை நடத்தாதவர்களும் ஒன்றாகவே கூடி, மேலும் விவாதிப்பதற்கு ஒன்றுமில்லை என்று கூறி முடிவு சொல்லிவிடுவர்.

இவ்வளவு உயர்வாக அவனைப் பற்றிய அபிப்பிராயம் இருந்த போதிலும் ஒரு சமயம் அவன் மீது ஒரு தடை விதிக்கப்பட்டது.— புதிய போலிவோக் கிளப் உறுப்பினர்களில் சக்தி வாய்ந்த ஒரு உட்குழு வேடிக்கை பார்ப்பதற்குக் கூட சங்கத்தின் சீட்டாட்ட அறைகளில் இவன் நுழையக்கூடாது என்று கண்டிப்பான உத்தரவு பிறப்பித்திருந்தது. அத் தடை உத்தரவை இவன் மறு வார்த்தையின்றி வெகு கண்ணியத்தோடும் அமைதியுடனும் ஏற்றுக்கொண்ட விதம், அவன் பகைவர்களைக் கூடத் திகைக்க வைத்தது. அத்தோடில்லாமல் நண்பர்களை எல்லாம் உற்ற நண்பர்களாக்கி விட்டது. தனக்கும், ஒரு மதிப்புக்குரிய ராம்பர் குடி மகனுக்கும் இடையே உள்ள வேற்றுமையை அவன் ஒரே நொடியில் ஏற்று அதை வெளிக்காட்டவும் செய்தான். ரேடியோ அறிவிப்பாளர்களின் பண்பைப் போல் மரியாதைச் சொற்கள் அவன் வாயிலிருந்து வந்த வண்ணமாகவே இருக்கும்.

ராம்பரில் அவனுடைய அந்தஸ்தின் உண்மையை இங்கே தெளிவுபடுத்துவது அவசியம். அவனுடைய தொழிலுக்குப் புறம்பாக உள்ள எல்லா விஷயங்களிலும், மனிதர்களுக்கிடையில் தினசரி ஏற்படும் விவகாரங்களிலும், இந்தச் சூதாட்டக்காரன் மிகவும் பரந்த உள்ளப் பாங்குடனும், நேர்மையுடனும் நெறி பிறழாது நடந்து கொண்டான் என்பது மறுக்க முடியாதது. நேர்மையான விவகாரத்திற்கு ஒரு போட்டி ஏற்படுத்தினால் ராம்பரில் உள்ள மக்களில் பத்துக்கு ஒன்பது பேர்களையாவது இவனால் தோற்கடிக்க முடியும்.

ஆக, அவன், அந்த நகரத்தின் முக்கிய வியாபாரிகளுடனும், மாவட்டச் சட்டப் பிரதிநிதியுடனும் அந்த மதுபானக் கடையில் அப்போது அமர்ந்திருந்தான்.

ஸ்விடன்காரன் தொடர்ந்து விஸ்கியை குடித்துக் கொண்டே, கடைக்காரவிடம் ஏதேதோ உளறிக் கொண்டிருந்தான். அவனையும்



குடிக்கத் தூண்டிக் கொண்டிருந்தான். "வாருங்கள், கொஞ்சம் குடியுங்கள், சும்மா குடியுங்கள். என்ன—இல்லை? பரவாயில்லை. கொஞ்சம் குடியுங்கள். கடவுளே, நான் ஒருவனை இன்றிரவு நன்றாக உதைத்து விட்டேன். அந்த வெற்றியை நான் கொண்டாட விரும்புகிறேன். அவனை நன்றாகத் தாக்கிவிட்டேன். கனவான்களே, நீங்கள் என்னுடன் கொஞ்சம் மது அருந்துகிறீர்களா?" என்று மேஜையிலிருந்தவர்களை அழைத்தான் ஸ்வீடன்காரன். "உஷ்" என்று கடைக்காரன் சைகை காட்டினான்.

மேஜையிலிருந்த கூட்டம் இதையெல்லாம் கீழ்க்கண் பார்வையாகக் கவனித்த போதிலும், பேச்சில் ஆழ்ந்திருப்பது போல நடித்தது. ஆனால் இப்பொழுது ஒருவன் தன் கண்களை உயர்த்தி ஸ்வீடன்காரனைப் பார்த்துச் சுருக்கமாகப் பேசினான். "நன்றி, எங்களுக்கு இனிமேல் ஒன்றும் வேண்டாம்."

"வேண்டாம்" என்ற இந்தப் பதிலைக் கேட்டதும் ஸ்வீடன்காரன் ஒரு சேவலைப் போன்று கழுத்தையாட்டிக் கொண்டு, "நல்லது. இந்த நகரத்தில் என்னுடன் குடிக்க ஒருவன்கூட வரமாட்டான் போலிருக்கிறது. அப்படித்தான் தெரிகிறது. இல்லையா? என்ன?" என்று கடைக்காரனைப் பார்த்துக் கேட்டான்.

"உஷ்! சும்மாயிரு" என்று கடைக்காரன் எச்சரித்தான்.

"என்னைச் சும்மாயிரு என்று சொல்லுகிறாய்? நான் சும்மாயிருக்க மாட்டேன். நான் ஒரு கனவான். என்னுடன் இப்போது மது அருந்த நண்பர்கள் வேண்டும்....இப்பொழுது அவர்கள் என்னுடன் குடிக்க வேண்டுமென விரும்புகிறேன். இப்பொழுது—புரிகிறதா?" என்று ஸ்வீடன்காரன் பிடிவாதமாக உறுமினான். முஷ்டியால் மது வழங்கும் பலகையைத் தட்டித்தட்டி அதிரச் செய்தான்.

பல்லாண்டுகளாக அநுபவம் பெற்ற கடைக்காரன் இதற்கெல்லாம் மசியவில்லை. அவன் எரிச்சலுற்று "நீ சொல்லுவது காதில் விழுகிறது" என்று மட்டுமே சொன்னான்.

"நல்லது, அப்படியானால் நன்றாகவே கேள். சொல்லுகிறேன். அதோ கோடியிலிருப்பவர்களைப் பார்த்தாயா? அவர்கள் என்னுடன் சேர்ந்து குடிக்கப் போகிறார்கள். அதை மறக்காதே. இப்பொழுது நீ கவனி" என்று ஸ்வீடன்காரன் கூச்சலிட்டான்.

"ஹி, இதெல்லாம் இங்கே நடக்காது" என்று கடைக்காரன் கத்தினான்.

"ஏன் நடக்காது" என்று ஸ்வீடன்காரன் வற்புறுத்திக் கேட்டான். மேஜையருகில் வந்து முதலில் உட்கார்ந்திருந்தவன் தோளில் கையை வைத்தான். அவன்தான் அந்தச் சூதாட்டக்காரன். "நீ என்ன சொல்லுகிறாய்? என்னுடன் மது அருந்துமாறு உங்களை அழைக்கிறேன்," என்று சீற்றத்துடன் கேட்டான்.

சூதாடி பதட்டமின்றித் தலையை ஆட்டி, குனிந்தபடியே

திரும்பிப் பேசினான். "நண்பா, உங்களை எனக்கு அறிமுக மில்லையே."

"அட அறிமுகம் கிடக்கட்டும், வந்து என்னுடன் கொஞ்சம் மது அருந்து" என்றான் ஸ்வீடன்காரன்.

"இதோ பார், தம்பி, முதலில் என் தோளிலிருந்து உன் கையை எடுத்துவிடு. உன் வழியே சென்று உன் வேலையைக் கவனி" என்று சூதாடி இனிமை ததும்பச் சொன்னான். அவன் ஒரு சிறிய ஒல்லியான மனிதன். தடித்துப் பருத்திருந்த ஸ்வீடன்காரனிடம் அவன் இவ்வளவு வீரத்துடன் பேசியது சிறிது வியப்பாகவே இருந்தது. மேஜையிலிருந்த மற்றவர்கள் ஒன்றும் பேசவில்லை.

"என்ன, என்னுடன் நீ குடிக்க வரமாட்டாய்! ஏ, ஆங்கில நாகரிகப் பெருச்சாளி! அப்படியானால் நான் உன்னைக் குடிக்க வைக்கிறேன்!" என்று சொல்லி சூதாடியின் கழுத்தைப் பற்றி ஆவேசத்துடன் நாற்காலியிலிருந்து இழுத்தான் ஸ்வீடன்காரன். மற்றவர்கள் துள்ளி எழுந்தனர். கடைக்காரன் கடையின் ஒரு மூலைக்கு ஓடினான். அங்கு ஒரு பெருங் குழப்பம். அப்பொழுது தான் சூதாடியின் கையில் ஒரு நீண்ட கத்தி இருந்தது தெரிந்தது. அது முன்னால் வந்து மின்னியது. அடுத்த கணம் ஒரு மனித உடம்பு—நற்பண்புகள், அறிவு, ஆற்றல் இவற்றின் இருப்பிடமாக அமைந்த மனித உடல்—முலாம்பழம் அறுக்கப்படுவது போல் குத்தப்பட்டு கீழே சாய்ந்தது. ஆச்சரியத்தால் கூக்குரலிட்டுக் கொண்டே ஸ்வீடன்காரன் கீழே விழுந்தான்.

இரண்டு வியாபாரிகளும், மாவட்டச் சட்டப் பிரதிநிதியும் உடனே பின்வழியாக ஒரு நொடியில் மறைந்திருக்க வேண்டும். அவர்கள் அங்கே இல்லை. கடைக்காரன் ஒரு நாற்காலியின் கையைப் பிடித்துக் கொண்டு கொலை செய்த சூதாட்டக்காரனின் கண்களை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

சூதாட்டக்காரன் சாவதானமாகக் கடைக்காரனிடம் வந்தான். "ஹென்றி, நான் எவ்விடத்தில் இருப்பேன் என்று அவர்களுக்குக் கூறிவிடு. நான் வீட்டிலிருப்பேன். அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருப்பேன்" என்று சொல்லிக் கொண்டே, தொங்கிக் கொண்டிருந்த துவாலைகள் ஒன்றில் ரத்தம் தோய்ந்த கத்தியைத் துடைத்தான். பிறகு அவன் அங்கிருந்து மறைந்து விட்டான். ஒரு கணம் கழித்து, கடைக்காரன் உதவிக்காகவும், அதைக் காட்டிலும் முக்கியமாகத் தனக்குத் துணையிருக்கவும் ஆளைத் தேடினான். ஒருவரும் காணவில்லை. புயலையும் பாராமல் தெருவில் ஓடினான்.

ஸ்வீடன்காரனின் பிரேதம், மதுபானக் கடையில் தனியாகக் கிடந்தது. அதனுடைய கண்கள் அந்தக் கணக்கு யந்திரத்தை வெறித்துப் பார்த்தபடியே நிலைத்து விட்டன. "நீங்கள் வாங்கி இருப்பவைகளுக்குரிய விலையை இது கணக்கிடுகிறது" என்று அந்த யந்திரத்தின் மீது பெரிய எழுத்துக்களில் எழுதியிருந்தது.

## IX

பல மாதங்களுக்குப் பிறகு, டகோடா வரிசைக்குப் பக்கத்திலுள்ள ஒரு மாட்டுப் பண்ணையில் இடையன் பன்றி இறைச்சியை வறுத்துக்கொண்டிருந்தான். குளம்படி ஓசைகேட்டு வெளியே கவனித்தான். கிழக்கத்தியான் கடிதங்களுடனும் செய்தித் தாள்களுடனும் உள்ளே நுழைந்தான்.

"ஸ்வீடன்காரனைக் கொன்றவனுக்கு மூன்றாண்டுகள் தண்டனை கிடைத்திருக்கிறது. அதிகமில்லையா! அல்லது அதிகம்தானா?" என்று கிழக்கத்தியான் உள்ளே நுழைந்ததும் நுழையாததுமாகக் கேட்டான்.

"அப்படியா? மூன்றாண்டுகளா?" செய்தியைப்பற்றி இறைச்சித் தட்டு கீழே விழாமல் யோசித்துக்கொண்டே பேசினான். "மூன்றாண்டுகள், அது ஒன்றும் அதிகமில்லை."

"இல்லை. அது லேசான தண்டனைதான். தார்க்குச்சியைச் சுழற்றிக் கொண்டே கிழக்கத்தியான் பேசினான். "ராம்பரில் அவனுக்குக் கணிசமான அளவு அநுதாபமிருக்கிறது போல் தோன்றுகிறது."

"கடைக்காரன் மட்டும் கொஞ்சம் முன்யோசனை உடையவனாயிருந்தால் அவன் உள்ளே நுழைந்ததும் ஆரம்பத்திலேயே இந்த டச்சுக்காரனை ஒரு பாட்டிலால் மண்டையில் தட்டி, இக்கொலையை எல்லாம் தவிர்த்திருக்கலாம்" என்று இடையன் ஆழ்ந்த யோசனையுடன் பேசினான்.

"ஆமாம், அப்படிச் செய்திருந்தால் இதர விஷயங்கள் ஆயிரம் கூட நடந்திருக்கலாம்" என்று கிழக்கத்தியான் புத்திசாலித்தனமாகப் பேசினான்.

இடையன் மறுபடியும் இறைச்சியை அடுப்பில் வைத்தான். ஆனால், அவனுடைய தத்துவ ஆராய்ச்சி தொடர்ந்தது. "அது ரொம்ப வேடிக்கை இல்லையா? ஜானி ஏமாற்றினான் என்று அவன் மட்டும் சொல்லாதிருந்தால் இந்த நிமிஷம் உயிரோடிருப்பானே. அவனை ஒரு முட்டாள் என்றுதான் சொல்லவேண்டும். விளையாட்டு பொழுது போக்குக்குத்தானே நடந்தது. பணத்துக்காக இல்லையே. அப்படி இருக்க அவன் ஏன் அப்படிச் சொல்ல வேண்டும். அவன் பைத்தியக்காரனோ?"

"அந்தச் சூதாடிக்காக நான் மிகவும் வருந்துகிறேன்" என்றான் கிழக்கத்தியான்.

"ஆமாம், நானுந்தான்" என்று இடையன் பேசினான்.

"அவன் செய்ய நேர்ந்த இந்த ஸ்வீடன்காரனுடைய கொலைக்கு கிடைத்த தண்டனை அதிகமே.

"எல்லாமே நேர்மையாக இருந்திருந்தால் ஸ்வீடன்காரன் கொலை செய்யப்பட்டிருக்க மாட்டான்" என்றான் கிழக்கத்தியான்.

"கொலை செய்யப்பட்டிருக்க மாட்டானா?" என்று இடையன் வியப்புத் தொனிக்கக் கேட்டான். "ஒவ்வொன்றும் நேர்மையாக இருந்திருந்தால்? ஏன், ஜானியை மோசடிக்காரன் என்று குற்றம் சாட்டியது மடத்தனமில்லையா? ஒரு கழுதை போல நடந்து கொண்டானே? அதுதான் போகட்டும். பிறகு கடையிலும் அவன்தானே சண்டையை 'வா'வென்றழைத்துத் தன்னைக் காயப்படுத்திக் கொண்டான்." இத்தகைய வினாக்களுடன் இடையன் கிழக்கத்தியானை மடக்கி அவன் கோபத்தைக் கிளறினான்.

"நீ ஒரு முட்டாள்," என்று கிழக்கத்தியான் விஷமப் பார்வையுடன் கூறினான். "நீ அந்த ஸ்வீடன்காரனை விட ஆயிரம் மடங்கு பெரிய முட்டாள். இப்பொழுது ஒரு உண்மையைச் சொல்கிறேன் கேள்! ஜானி ஏமாற்றத்தான் செய்தான்!"

"ஜானியா?" என்று இடையன் பிரமிப்புடன் சொன்னான். ஒரு நிமிடம் மௌனமாகக் கழிந்தது. அப்புறம் அவன் நியாயம் பேசினான். "ஏன் அதனால் என்ன, பொழுதுபோக்காகத்தானே ஆட்டம் ஆடினோம்?"

"பொழுதுபோக்கோ, இல்லையோ, ஜானி ஏமாற்றத்தான் செய்தான். நான் அதைக் கவனித்தேன். எனக்குத் தெரியும், நான் எழுந்து அதைத் தடுத்து ஒரு மனிதனைப் போன்று நடந்து கொள்ள விரும்பவில்லை. ஸ்வீடன்காரனே சண்டையிட்டு ஒரு முடிவுக்கு வரட்டும் என்று விட்டுவிட்டேன். ஆனால் நீயோ—நீ சும்மா அந்த இடத்தில் வளைய வந்த வண்ணம் சண்டையைத்தான் விரும்பினாய். அப்புறம் அந்த கிழட்டு ஸ்கல்லியும் உன்னுடன் சேர்ந்துகொண்டான். அவனும் சண்டையைத்தான் விரும்பினான். எனவே, நாம் அனைவரும் அதில் சம்பந்தப்பட்டவர்கள்தான். பாவம், இந்தச் சூதாடிக்கு உண்மையில் எவ்விதப் பங்கும் இல்லை. பெயரளவில் கூட இல்லை. அவன் ஒருமாதிரி உரிச்சொல்தான். ஒவ்வொரு பாவகாரியமும் ஒரு கூட்டுமுயற்சியின் விளைவு. இங்கே நாம்—நாம் ஐவரும் இந்த ஸ்வீடன்காரனுடைய கொலையில் சம்பந்தப்பட்டிருக்கிறோம். சாதாரணமாக ஒவ்வொரு கொலையிலும் பன்னிரண்டிலிருந்து நாற்பது பெண்கள் வரை சம்பந்தப்பட்டிருப்பர் என்பது ஒரு உண்மை. ஆனால் இந்தக் கொலையில் ஐந்து மனிதர் மட்டும்தான் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அதாவது—நீ, நான், ஜானி, கிழட்டு ஸ்கல்லி, துரதிருஷ்டசாலியான அந்த முட்டாள் சூதாடி—ஐந்தாம் நபராகக் கடையில் காரியத்தை முடிக்கத்தான் வந்தான். இவன்தான் மனித இயக்கத்தின் முற்றுப் புள்ளி. எல்லாத் தண்டனையையும் அவனே அடைகிறான்."

இடையனின் மனம் புண்பட்டது. அது நிலை கொள்ளாது தவித்தது. இந்தக் கொள்கை விளக்கம் அவனுக்குப் புரியவில்லை. "நல்லது. நான் ஒன்றும் செய்யவில்லை. அல்லது நான்கூட ஏதாவது செய்தேனோ?" என்றுதான் அவன் கேட்டான்.

# சிறிய படையணி

சாலையோரத்தில் அணியிலிருந்த காலாட்படைச் சிப்பாய்களின் உடைகள் பனி படிந்து ஒரு புதிய சோபையை உண்டாக்கியது. அவர்களுடைய கனத்த மேலங்கிகளுக்கு அது ஒரு புது நிறத்தை அளித்தது. மங்கிய நீல நிற ஒளியில் தெளிவற்றுத் தெரிந்த அந்தக் காலாட்படை மூடுபனி வெளியில் நீண்டதொரு நிழல்போல் காணப்பட்டது. ஆனால் அது வெறும் நிழல் அல்ல என்பதைக் காட்டுவதுபோல அங்கு ஒரு முணுமுணுப்புச் சப்தம் கேட்டுக்கொண்டிருந்தது. மெல்லிய குரலில் பேசிய ஒலி கால் பாகமும், கேலிப் பேச்சுகள் முக்கால் பாகமுமாக அங்கே எழும்பிய விவரமற்ற தாழ்ந்த சப்தம்தான், அந்தப் படையின் சப்தம். அவர்களுக்கு மேலே காற்றில் மிதந்து அச்சப்தம் வெளியெங்கும் நிறைந்தது. அணியின் பக்கத்தில் ஒரு சிற்றாறு ஓடிக்கொண்டிருந்தது. அதன் தென் கரையிலிருந்த நகரம் பேய் போன்று தோற்றமளித்தது. சாம்பல் நிற மேகத்திரள்கள் குழைந்து மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தன. வடகரையில் வரிசையாகப் பொருத்தப்பட்டிருந்த பீரங்கிகளின் நீண்ட அணி இரக்கமின்றி நெருப்பைக் கக்கிக்கொண்டிருந்தது. இதற்கிடையிலும் வானத்தை நோக்கி உறுதியுடன் கம்பீரமாக நிமிர்ந்து நின்ற ஒரு மாதா கோவிலின் மணிக்கூண்டு தூரத்தில் தெரிந்தது.

போர் முனையின் பல மூலைகளிலிருந்தும் பலவிதப் போர்க்கருவிகளிலிருந்தும் எழுந்த ஒலிகள் வானத்தைச் சூழ்ந்திருந்தன. காலாட்படையின் பூட்ஸ் சப்தங்களும், பீரங்கிப் படையின் 'கடகட' வென்ற ஒலியும் ஏதோ ஒரு பெரிய தாக்குதலுக்கு முன்னேற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன என்பதைத் தெளிவுபடுத்தின. தூரத்திலிருந்து அவ்வப்போது முழங்கிய பீரங்கிகளின் சப்தம் திடீர் திடீர் என்று எழும் இடி போன்று ஒலித்தது. விரோதிகளின் படைகள் தங்களுக்கு முன்னால் அணி வகுத்து நிற்பதைக் கண்டு சகிக்க முடியாது பொறுமையிழந்தது போலக் காணப்பட்டது இந்த பீரங்கியின் முழக்கம். அண்மையிலும் தூரத்திலும் எழுந்த இச்சப்தங்கள் அந்தப் போர்க்களம் எவ்வளவு விரிவானது என்பதை அளவிட்டுக் காட்டின. போர் என்னும் பிரம்மாண்ட நாடகம் நடைபெறவிருக்கும் அரங்கத்தின் விஸ்தீரணமே ஒருவாறு காட்டப்பட்டதாகவே சொல்லலாம். பீரங்கிகளின் சப்தம், மிகச் சாதாரணமாகவே காணப்பட்ட போதிலும் பரபரப்பில்லாமலும் எச்சரிக்கையில்லாமலும் யுத்தகால முறைகளென்பதைக் காட்டவே ஒலித்துக் கொண்டிருந்த போதிலும், இதற்கும்

மேலாகவே காற்றில் மிதந்து வந்தது அப்படையினர்களுக்குள் பேசிக்கொண்ட அந்த முக்கியமான ஒரு வார்த்தை—ஏதோ பிரமாதமான நிகழ்ச்சி சீக்கிரத்திலேயே நடக்கப் போகிறது என்பது தான் அந்த ஒரு வார்த்தை, பேசாத வார்த்தை. அந்த நினைப்பே ஒவ்வொருவரையும் வாய் பேசவிடாமல் தடுத்து விட்டது.

சாலையிலிருந்த அணி கணுக்காலளவு சேறில் உழன்று கொண்டிருந்தது. போதாக் குறைக்கு அவர்கள் மேல் பெய்து கொண்டிருந்த மழைத்துளிகள் வேறு. மேலணியின் கழுத்துப் பட்டை வழியாக மழைத்துளிகள் உள்ளே சென்று உடம்பை நனைக்குமே என்ற பயத்தில், அவர்கள் எல்லோரும் நிமிர்ந்து நிற்க வேண்டியிருந்தது. மூடு பனியோ நனைந்த உடைகளைவிடக் குளிர் மிகுந்திருந்தது. குளிரிலிருந்து காப்பாற்றிக் கொள்ள சட்டைப் பைகளுக்குள் கைகளை ஆழமாக விட்டுக் கொண்டனர். கைத்துப்பாக்கிகளையும் இடுக்குகளில் அணைத்துக் கொண்டனர். ராணுவ உத்தரவின் கண்டிப்பான கட்டுப்பாட்டு விதிகளுக்கிணங்க அந்தப் படைப் பகுதி சேற்றில் நன்றாக நிலைத்துப் போயிருந்தன. இயற்கையின் நியதியில் செடிகளின் வேர்களும், குச்சுகளும் நிலத்தின் ஆழத்தில் பதிந்து கிடப்பதுபோல் சிப்பாய்களும் அவரவர்கள் இருந்த இடத்திலேயே வேரூன்றி விட்டனர்.

ஆற்றுக்கு அப்பால் மங்கலாகத் தெரிந்த நகர்ப்பகுதியிலிருந்து சப்தம் கேட்டபோதெல்லாம், சிப்பாய்கள் உன்னிப்பாக அதைக் கவனித்ததுமன்றி சண்டையின் தீவிரத்தைப்பற்றியும் ஆராய்ந்தனர். சப்தம் அடங்கினாலும் எப்போதும் போல அந்த சேற்றுப் பகுதியைப் பற்றியும் அதில் தாங்கள் எவ்வளவு காலம் புதைந்து காத்துக்கொண்டிருக்க வேண்டுமோ என்பதைப் பற்றியும் பேசிக் காலங் கழித்தனர். அவர்களுடைய அணிக்குத் தலைமை தாங்கிய தளபதி குதிரை மீதேறி துருப்புக்களிடையே மேற்பார்வையிட வந்தபோதெல்லாம் அவனை மகிழ்ச்சியுடனும், அன்புடனும் ஆர்ப்பரித்து வரவேற்றனர். வரப்போகும் சண்டையில் வெற்றியே கிட்டும் எனச் சந்தோஷத்தோடு கத்தினார்கள். ஒவ்வொரு சிப்பாயும் தளபதியைப் பற்றி மிகவும் பெருமையுடன் அவனுடைய தீரத்தையும் சாமர்த்தியத்தையும் நேரில் கண்டதுபோலப் புகழ்ந்து பேசி அவனிடம் தனக்குள்ள பக்தியையும் நம்பிக்கையையும் காட்டிக்கொண்டான். உண்மையில் பார்க்கப்போனால் ஒவ்வொருவன் சொன்ன கதையும் ஒரு கட்டுக் கதைதான். இம்மாதிரி வேடிக்கைப் பேச்சுகளும் விகடத்துணுக்குகளும் அங்கே நிரம்பக் கேட்டன. எவனாவது ஒருவன் தன்னுடைய கீச்சுக் குரலில் தமாஷான செய்திகளைச் சொல்லித் தன் தோழர்களைச் சிரிக்க வைக்கும் போது, தூரத்திலிருந்தவர்கள் தங்கள் காதுக்குக் கேட்காததால் அவற்றைத் திரும்பச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்வார்கள். இப்படிச் சிரிப்பொலி ஒரு அணியிலிருந்து மற்றொரு அணிக்குப் பரவிச் சென்றது. ஒரு சமயம் ரத்தம் சொட்டும்



சோர்ந்த முகங்களுடன் காயம்பட்ட வீரர்கள் அந்த வழியாகத் தூக்கிச் செல்லப்படுவர். தங்களைக் காத்து உதவி புரியும்படி பரலோகத்திலுள்ள ஆண்டவனுக்கு முறையிடுவது போல அவர்களுடைய கண்கள் பரிதாபமாக மேல் நோக்கி மலர்ந்திருக்கும். அவதிப்பட்டு அவ்வழியே எடுத்துச் செல்லப்பட்ட அவர்களைக் காணும் போதெல்லாம், சேற்றில் புதைந்திருந்த வீரர்கள் எந்தப் போரில் எப்படிக் காயம் ஏற்பட்டது என்பதைப்பற்றி எல்லாம் கேட்டுத் தெரிந்துகொள்ளுவர். தங்கள் படைகளைப் பற்றியும், பிரிவைப் பற்றியும், படை வகுப்பினைப் பற்றியும், பெரும் படையணியைப் பற்றியும் அவர்கள் ஒவ்வொருவரும் பெருமையாகப் பேசிக் கொண்டனர். நாற்புறமும் சாவினால் சூழப்பட்ட அந்த நிலையில் சிறிதும் கவலையின்றித் தைரியத்துடனிருக்க வேண்டுமென்றால், பல போர்களில் ஈடுபட்டு அநுபவம் வாய்ந்த் தீரர்களால் தான் முடியும். மற்றவர்களால் இவ்வளவு அலட்சியமாக இருக்க முடியாது.

மிகவும் எரிச்சலடைந்திருந்த ஒரு வீரன், "வீரர்களாம் வீரர்கள்; மரக்கட்டை வீரர்களைப்போல் சேற்றில் நூறாண்டுகளாக நின்று கொண்டிருக்கிறோம்," என்று அலுத்துக் கொண்டான். பில்லி டெம்ஸ்டர் என்ற அந்தச் சிப்பாய் தன் கால்களைச் சேற்றில் அசைத்தபடியே சுற்று முற்றும் பார்வையை வீசித் தன் அருவருப்பை உணர்த்தினான். "போதுமே, வாயை மூடு," என்று அவனுடைய சகோதரன் டான் அவனை வாயடைத்தான். தன் சகோதரனுடைய குரல் தனக்கு எவ்வளவு தூரம் சலிப்பை யூட்டுகிறது என்பதை நன்றாகவே உணர்த்தும்படி அமைந்திருந்தது டான் இவ்வார்த்தைகளை உச்சரித்த மாதிரி.

"நான் ஏன் வாயை மூடிக்கொள்ளவேண்டும்?" என்று உரிமையுடன் பில்லி கேட்டான்.

"ஏனெனில் நீ ஒரு முட்டாள். இந்தப் பட்டாளத்திலேயே நீதான் முழு முட்டாள்," என்று சுருக்கென பதிலளித்தான் டான். தான் சொல்லிய வார்த்தைகளைப்பற்றி அவன் ஆலோசிக்கவே இல்லை.

இந்த வாக்கு வாதம் நடந்தபோது அவர்களுக்கிடையே ஒருவன்தான் இருந்தான். ஆனால் சகோதரர்களிருவரும் பரிமாறிக்கொள்ளும் வசைமொழிகளைக் கேட்டுக் கேட்டுப் பழக்கப்பட்டவன். அவர்கள் வழங்கிய வசைச் சொற்களும், வீசிய கொடூரப் பார்வையும் நடுவிலிருந்த இந்த வீரனைத் துளைத்துக் கொண்டே செல்லும். இப்படி ஒரு நாள் இரண்டு நாள் அல்ல, இரண்டு யுத்த காலங்கள் பூராவிலும் இவர்களுடைய அண்ணன் தம்பிச் சண்டையைப் பார்த்துப் பழகியவன் அவன். எனவே இப்போது அவர்கள் திட்டிக்கொண்டதைப் பார்த்து ஒரு புன்னகை செய்துவிட்டுச் சும்மா இருந்தான்.

இந்தச் சகோதரர்களின் போக்கு அந்த அணியில் எல்லோ

ருக்கும் தெரிந்த விஷயம். அவர்கள் இருவரும் ராணுவத்தில் ஒரே காலத்தில் தான் சேர்ந்தனர். ஆனால் ஒருவன் சேர்ந்ததை மற்றவன் ஆமோதிக்கவில்லை. அதற்காக அவனை ஏளனம்கூடச் செய்தான். எனினும் இருவரும் தங்களுடைய சிற்றூரை விட்டு ஒன்றாகவே புறப்பட்டனர். கையில் கொடியுடன் அணிவகுத்துச் சென்றனர். ஒருவன் மீது மற்றவன் குற்றஞ்சாட்டிக் கொண்டும், சந்தேகப்பட்டுக் கொண்டும் சென்றனர். ராணுவ விடுதிகளிலும், இவர்களிருவருக்குமிடையே நிலவிய விரோதம் வெளிப்படையாகவே எல்லோருக்கும் தெரியும். இதை மற்ற சிப்பாய்கள் ஒரு வேடிக்கையாகக் கூடக் கருதினர். உல்லாசமாய்ப் பொழுதுபோக்கச் சிறு பிணக்குகள் இல்லாத சமயங்களில் அவர்களுடைய தோழர்கள் இவர்களுக்கிடையே ஏதாவது சச்சரவைக் கிளப்பிவிட்டு மகிழ்வதும் உண்டு. அவர்கள் வெளிப்படையாக ஒருவர்க்கொருவர் திட்டிக் கொள்வதைக் கண்டு களிப்பர்.

இருவருமே நல்ல உயரம். வலிமை மிக்க இளைஞர்கள். இடையில் குறுக்கிட்டு விலக்கிவிட ஒருவன் இல்லாதிருந்தால், முகாமில் அவர்கள் அடிக்கடி சண்டையிட்டுக் கொண்டே இருப்பர். இது அடிக்கடி நிகழ்ந்தது. ஏனெனில் காரணத்துடனோ, காரணமில்லாமலோ டான் எப்படிப்பட்டவனுடனும் சண்டையைத்தான் விரும்பினாலும், பில்லி சண்டையில் ஈடுபடுவதைக் கண்டால் நடுங்குவான். பில்லியோ, எப்பொழுதும் எந்தச் சண்டைக்கும் தயாராய் உள்ளவன். ஆனால் டான் சட்டையைத் தூக்கி விட்டு முஷ்டிகளை மேலே உயர்த்திக் கொண்டு சண்டையிலீடுபடுவதைப் பார்க்கச் சகியான். இந்த மனப்பான்மை பார்ப்பவர்களுக்குச் சற்று விசித்திரமாகவே இருந்தது. அதனாலேயே மற்றவர்கள் அடிக்கடி அவர்களைச் சண்டைக்குத் தூண்டி வேடிக்கை பார்த்தனர்.

சக்கரம் போல் வளைந்து நின்ற சிப்பாய்களின் அரணிலிருந்து ஒரு நாள் டான் தாவிக் குதித்து உறுமிக்கொண்டிருந்த தன் சகோதரன் கையைப் பிடித்துச் சண்டையிட இழுத்து வருகையில், நெடுநாட்களாக எதிர்பார்த்த நேரடியான சகோதரச் சண்டை நடந்தே தீரும் என்று எல்லோரும் எதிர்பார்த்தனர். ஆனால் மயிரிழையில் தப்பியது. அதேபோல பில்லி எப்பொழுதாவது டானைச் சண்டைக்கிழுத்தபோது, சண்டை நடந்துவிடுமென்றே எதிர்பார்த்தனர். ஆனால் மயிரிழையில் நிகழாது போய்விடும். அவர்களிருவரும் சண்டை போடுகின்ற நிலைமையை அடைந்தபோதிலும், உண்மையில் சண்டை என்னமோ எப்பொழுதுமே ஏற்பட்டதில்லை. ஒரு சமயம் அவ்விதக் கைகலப்புக்குத் தக்க ஏற்பாடுகள் கூடச் செய்திருந்தனர். அணியின் பாதிப்பேர் அதை ஆர்வத்துடன் ஊக்குவித்து குறிப்பிட்ட சமயத்தை ஆவலாக எதிர்பார்த்திருந்தனர். ஆனால் ஏனோ அது நிகழாமல் போய்விட்டது.

ராணுவ விதிகளைப் புறக்கணித்தால் தண்டனையாக விதிக்கப்



படும் 'காவல்காரன் வேலை' டானுக்கு விதிக்கப்பட்டால், மற்றவர்களுடைய கேலியை விட பில்லியின் சொற்கள்தான் அவனைப் பெரிதும் புண்படுத்தும். தலைமை அதிகாரியிடமிருந்து பில்லிக்கு ஏதாவது அழைப்பு வந்தால், 'எமனுடைய அழைப்பு வந்துவிட்டது, போ, ஒழிந்தாய்' என்றெல்லாம் சொல்லி பயமுறுத்துவதில் டானைவிடத் தேர்ந்தவர்கள் யாரும் இல்லை. உண்மையில் ஒருவனுக்கு வரும் சிறிய துன்பங்களை மற்றவன் மகிழ்ச்சியுடன் வரவேற்பான். இவ்விதச் சில்லறைத் துன்பங்கள் மற்றவனைப் பற்றி தான்கொண்டிருந்த அபிப்பிராயத்தை ஊர்ஜிதப்படுத்துவதாகவே அவ்விருவரும் எண்ணினர்.

அவர்கள் சிப்பாய்கள் என்ற முறையில் ஒருவரை ஒருவர் மனமார வெறுத்தனர். இருவரும் வசைமொழிகள் கடுமையாக வழங்கிக் கொண்டனர். ஒரு சமயம் ஒரு போர் முடிந்ததும், பில்லி 'கார்ப்பொர'லாகப் பதவியில் உயர்த்தப்பட்டான். அச்செய்தி டானுக்கு அறிவிக்கப்பட்டபொழுது அவன் வியப்பால் வாயடைத்துப் போனான். தேசாபிமான உணர்ச்சி வசப்பட்டு நாட்டு நலனுக்கும் இம்மாதிரி உதவாக்கரைக்கு பதவி உயர்வளிப்பது நன்மை பயப்பதல்ல என்று சீறினான். பில்லியைப் பார்த்துப் பொருமினான். பில்லியின் புருவம் உயர்ந்தது. ரத்தம் நெற்றிக்குப் பாய்ந்தது. கால்கள் சண்டைக்கு ஆயத்தமாவதுபோல் நிலத்தில் பதிந்தன. இப்போதுதான் டானுக்குப் பேச்சு வந்தது. "பேஷ், ஒரு முட்டாளுக்குப் பட்டம் கட்டியாயிற்று!" என்று அவன் வெறுப்புணர்ச்சி அவ்வளவையும் அந்த ஒரு வாக்கியத்தில் கொட்டித் தீர்த்தான். ராணுவ அணித் தலைவன் பதவிக்கு ஒரு கழுதையை நியமித்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டிருந்தால் கூட அவன் குரலில் இவ்வளவு ஏளனம் தொனித்திருக்காது. அன்று முதல் அவன் பிடிவாதமாக அவனுடைய உத்தரவிற்குக் கீழ்ப்படிவதில்லை என்றே உறுதி பூண்டான். புதிய கார்ப்பொரலுக்குப் பணியாமலிருப்பது ஒரு புனிதமான செய்கை என்றே அவன் நினைத்துக் கொண்டான். இதனால் அவர்களுக்குள் பல நாளாக எதிர்பார்த்த சண்டை நெருங்கிக்கொண்டிருந்தது. இந்தச் சமயத்தில் டானைப்பற்றி ஒரு விஷயம் சொல்ல வேண்டும். அருவருக்கத்தக்க வசைச் சொற்கள் அவனுக்கு மிகவும் சகஜமாயினும், அவனுடைய சகோதரன் முன்பு சாதாரணமாகச் சூளுரைப்பதில்லை. அப்படியேதான் பில்லியும். கூழாங் கற்களைப்போல் அழகுடன் பில்லியின் உதட்டிலிருந்து உதிரும் சூளுரைகள், தன் சகோதரன் டான் அருகில் இருக்கையில் உதட்டளவிலேயே நின்றுவிடும்.

அந்தப் படைதான் இப்படி எவ்வளவு நேரம் நின்ற இடத்திலேயே நிற்க முடியும். பிற்பகல் கழிந்தால் மாலை வந்துதானே ஆகவேண்டும். எனவே ஒரு நாள் அணியின் எல்லா மூலைகளிலிருந்தும் பலத்த கூக்குரல்கள் எழுந்தன. ஆயுதங்களின் ஓசை கேட்டது. சுறுசுறுப்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன

என்பதற்கு ஒரு அறிகுறி. படையில் சலனம் ஏற்பட்டது. சிப்பாய்களின் பேச்சரவம் மறைந்து எல்லோருடைய கவனமும் நதிக்கப்பால் லயித்திருந்தது. ஒரே கணத்தில் சிப்பாய்கள் எல்லோரும் ஓடையை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். அங்கிருந்து நகர்ப்பகுதிக்கப்பால் நடந்து கொண்டிருந்த சண்டைச் சப்தத்தையும் ஆரவார ஒலியையும் கேட்க முடிந்தது. காற்றை ஊடுருவி வரும் பீரங்கிகளின் முழக்கம், பறந்து வந்த வேகத்தில் கடுமை குறைந்து பலமின்றி 'தொப்,' 'தொப்' என்ற சப்தத்துடன் தரையில் விழுந்து கொண்டிருந்தது. படகுப் பாலத்திற்கு மேலே நதிக்கரையில் இந்தப் படையணி சற்று நின்றது. கரையிலிருந்து சரிவின் வழியே கீழிறங்கி பாலத்திற்குள் நுழைந்தபோது மூடுபனி பெருமளவில் மறைந்து விட்டிருந்தபடியால் தெளிவுடன் பிரகாசித்த அந்த அந்திநேரத்தில் தூரத்தில் முகாமிட்டிருந்த எதிரிகளுக்கு, இப்படை பாலத்தைக் கடந்து செல்வது நன்றாகவே தெரிந்தது. அப்படையினரின் தலைக்குமேல் எதிரிகளின் குண்டுகள் 'விர்' ரென்ற சப்தத்துடன் பாய்ந்து சென்றன. எப்போதாவது ஒரு குண்டு நதியிலேயே வெடித்து விழுந்து தண்ணீரை ஊற்றுபோல் செங்குத்தாகப் பீச்சியடித்தது. பெருமுழக்கம் செய்கின்ற பீரங்கிகளின் ஒளியால் எதிரிகளின் அணியெல்லாம் ஒரே பிரகாசமாயிருந்தது. வட கரையிலிருந்த பீரங்கிப் படைகள் ஒன்றன்பின் ஒன்றாகச் செயல்புரியத் தொடங்கி எண்ணற்ற குண்டுகளைக் கக்கிக் கொண்டிருந்தன. இடியோசைபோல் அவற்றின் எதிரொலி அமைதியான இரவில் எழும் பேரலைகளின் சப்தத்தை ஒத்திருந்தது. இந்த இசைக் கேற்றவாறு படகுப் பாலத்தின் மீது படையணி முன்னேறியது.

ஆழமான அந்நதியின் தண்ணீர் பெரும் படகுகளின் முனையிலிருந்து பலகைக்கிடையில் விரைந்து அலை எழுப்பிய வண்ணம் ஓடிக் கொண்டிருந்தது. படைக்கு முன்னாலிருந்த நகரின் இருண்ட சுவர்களிலிருந்தும் இதர மறைவிடங்களிலிருந்தும் அவ்வப்பொழுது பெருங் கூக்குரல்களெழுப்பி அங்கே பெரும் கைகலப்பும் துப்பாக்கிச் சுடுதலும் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தன என்பதை அறிவித்தன.

டான் தன் சகோதரனை முட்டாள் என்று இட்டியபொழுது, அவன் குரல், தீர்மானமாக, நிச்சயமாக ஒலித்தது. அந்தச் சூழ்நிலையில் மற்றவர்களும் அது ஒரு பெரிய விகடத்துணுக்கு என்று கருதிச் சிரித்தனர். ஆனால் அந்நிகழ்ச்சி பில்லியின் மனத்தில் பெருஞ் சஞ்சலத்தை ஏற்படுத்திவிட்டது. அவனுடைய சகோதரன் அவனை முட்டாள் என்றது ஒன்றும் புதுமையல்ல. உண்மையில், அவனே, பலர் மத்தியிலும்கூட அதே அளவு உறுதியுடனும் மகிழ்ச்சியுடனும் டானை முட்டாள் என்று கூறியிருக்கிறான். இந்தச் சமயத்தில் மட்டும் அவன் சொன்னதைத் தான் ஏன் இவ்வளவு பெரிய குற்றமாகக் கொண்டோம் எனத் தனக்குள்



ளாகவே வியந்தான். எப்படியும் கரையிலிருந்து தன் அணியுடன் பாலத்திற்கு வந்து சேர்ந்ததும் டானைப் பற்றிக் குத்தலாக ஏதாவது சொல்லி அவனுடைய இந்த அல்ப சந்தோஷத்தைக் குலைக்க வேண்டும் என்பதற்காக என்ன சொல்லலாம் என்று அவன் மனம் ஆராய்ந்து கொண்டிருந்தது. ஆனால் இப்பொழுது அதற்கான உபாயம் ஒன்றும் செய்ய இயலாததால், அவனுடைய சக்தியற்ற நிலையில் அவன் சகோதரனைப் பார்த்த விதமே, அவனுடைய குரூர சுவபாவத்தை எடுத்துக் காட்டிற்று.

தூரத்திலும் அண்மையிலும் துப்பாக்கிகளின் உறுமல் பயங்கரமானதும் பெரியதுமான சாவின் அரங்கத்தில் முன்னேறிக் கொண்டிருந்த இந்த அணிக்கு ஒரு அறிவிப்புபோல் இருந்தது. பில்லி அதை உணர்ந்தான். ஆனால் அதில் உணர்ச்சி வேகமில்லை. அத்தகைய சமயங்களில் மனிதனின் உணர்ச்சிகளை மறைக்கும் ஒரு திரையினால் அவன் உள்ளம் மூடப்பட்டிருந்தது போலத் தோன்றியது. குன்றுகளிலிருந்து வரும் பயங்கரக் குரல்கள், இக் கடும் போராட்டத்தில் அவனுடைய உயிர் குறிப்பிடத்தக்க ஒரு முக்கியத்துவம் வாய்ந்ததல்ல என்பதைக் கூறின. அவனுடைய சாவும் முக்கியத்துவம் வாய்ந்ததல்ல. வரவிருக்கும் சூறாவளிக்கு வண்ணாத்திப் பூச்சியின் விரிந்த இறக்கையைப் போலத்தான் அவனுடைய பணியும் இருந்தது என்று அவை உணர்த்தின. அந்த அமைதியற்ற வருத்தந் தோய்ந்த சூழ்நிலையிலும் அவன் மட்டும் அமைதியுற்று சந்தோஷமாக இருந்ததைக் கண்டு அவனே வியந்தான். நிகழ்ச்சிகளின் முக்கியத்துவத்திற்குத் தக்கவாறு அவன் மனம் இணங்கிய பொழுது, சண்டையின் மும்முரத்தில், பல தோழர்களுக்கு முன்னால் தன் சகோதரன் தன்னை முட்டாள் என அழைத்து தன்னை இழிவுபடுத்தியது ஒன்று மட்டுமே பெரு முக்கியத்துவம் வாய்ந்தது போலத் தோன்றியது.

டான் மகிழ்ச்சி நிறைந்த ஒரு மன நிலையிலிருந்தான். மந்திரவாதிகளின் பயங்கர ஏவல்களைப் போன்று வெளியெங்கும் வெடித்துக் கொண்டிருந்த குண்டுகள் பறந்து வந்ததைக் கண்ட அவன் ''பலே! பலே! அதோ! அவர்கள் சுடுவதைப் பார்'' என்று ஆரவாரம் செய்தான். தன் பக்கத்திலிருந்து கொண்டு சதா காலமும் ஒரு முள்ளைப்போல் குத்திக் கொண்டிருந்த டானைப் பார்த்து பில்லி ஆத்திரமடைந்தான். ஆனால் இவனைப்பற்றி டான் முற்றிலும் மறந்து விட்டது போலிருந்ததையும் கவனிக்காமலில்லை.

பாலத்தைக் கடந்து சென்ற அணி எதிர்ப்புறத்திலும் சதுப்பு நிலத்தில்தான் செல்ல வேண்டியிருந்தது. இந்தத் தெற்கு முனையில் அதிகாரிகளின் ஆணைகளும் உத்தரவுகளும் அடித் தொண்டையிலிருந்தும், கீச்சுக் குரலிலும் வெளிவந்த வண்ணமிருந்தன. எங்கும் ஒரே குழப்பமாக இருந்தது. அப்பகுதியை இருள் கௌவிக்கொள்ளத் தொடங்கியது. வழுக்கும் அந்தச் சரிவிலிருந்து அணிகள் விரைவாக உச்சிக்குச் சென்று கொண்டிருந்தன.

அந்தச் சேற்றில் தட்டுத் தடுமாறி நடந்த பில்லி, சுற்றிலும் சூளுரைகளும், பெருங் கூட்டமும் இருக்க, திடீரென்று டானைப் புண்படுத்தும் விஷயம் ஒன்றும் இல்லாததால், அவனைப் பார்க்காமலும் அவனுடன் பேசாமலும் அவன் இருப்பதையே உணராதது போலவும் இருப்பது ஒன்றே அப்போதைக்குச் சிறந்தது என முடிவு செய்தான். இதைச் சரிவர செய்து முடித்தால் அதுவே அவனுடைய சகோதரனை, வருந்தச் செய்யும் நிலைக்குக் கொண்டுவரும் என்று அவன் கற்பனை செய்து கொண்டான்.

கரையின் உச்சியில் அணி சிறிது நின்றது. மேட்டில் ஏறுபவன் உச்சியை அடைந்ததும் உடைகளைச் சரி செய்து கொள்ளுவது போல் அணியும் தன்னை ஒழுங்குபடுத்திக் கொண்டது. அப்பொழுது எஃகுக் கவசங்கள் அணிந்த பெரிய அணி ஒன்று லாகவமான நடையுடனும் பொலிவுடனும் குறுகிய ஒரு தெரு வழியினின்று வெளிப்பட்டது.

மாலைப் பொழுது விரைந்து வந்தது. நெடுந் தொலைவிலிருந்த நகரத்தின் எல்லைப்புறங்களில் சண்டை நடந்துகொண்டிருப்பது அங்கு வீசிய நெருப்புப் பொறிகள் மூலமே தெரிந்தது. ஏதோ ஒரு கட்டிடம் தீப்பிடித்துக் கொண்டிருந்தது. அதிலிருந்து எழும்பிய ஜ்வாலைகள் வானத்தில் மேகங்களிடையே பிரதிபலித்து மங்கிய செந்நிறத் திட்டுகளாகக் காட்சியளித்தன.

## II

துப்பாக்கி வேட்டுகளாலும் அலை அலையாக அணிவகுத்துச் சென்ற துருப்பின் நடமாட்டத்தாலும் நாட்டுப்புறத்தின் அமைதி குலைந்திருந்தது. சண்டையின் கரம் அந்தச் சிற்றூரைத் தீண்டிய மாத்திரத்தில் அது பொலிவிழந்து பாழடைந்த ஊராக மாறி விட்டது. கடுமையான பூகம்பம் ஏற்பட்டால் எப்படி அந்த ஊரே ஆட்டம் கண்டு சிதறிவிடுமோ அப்படிப் பாழடைந்திருந்தது. ஜன்னல்கள் இருந்த இடங்களெல்லாம் இப்போது பொந்துகளாக விருந்தன. கருகிப்போன பொருள்களும் இடிந்து விழுந்த சுவர்களும் முன்னம் இருந்த வீடுகளின் எலும்புக் கூடுகளெனக் காட்சியளித்தன. கதவுகள் எல்லாம் இடிந்து தூள் தூளாகச் சிதறிக் கிடந்தன. புகைப்போக்கிகள் உடைந்து செங்கற்கள் நாற்புறமும் சிதறியிருந்தன. பீரங்கிப் படையின் வேட்டுகள் தெருவில் வரிசையாக வளர்ந்த நிழல் தரும் மரங்களையும் விட்டுவைக்கவில்லை. கிளைகளும், பருத்த அடி மரங்களும் இங்குமங்கும் சின்னாபின்னமாகச் சிதறிச் சேறில் புதையுண்டு கிடந்தன. சில மரங்கள் மட்டும் மொட்டை மொட்டையாக ஆங்காங்கே பரிவாரங்களைப் பறிகொடுத்துத் தனித்து நிற்பவரைப்போல் தென்பட்டன. சண்டையின் பெருங் கொந்தளிப்பிற்குப் பலியான இந்தத் தாவர

O111,3MC1,B
N52



வர்க்கத்தினிடம் யாவருக்கும் இரக்கமேற்படத்தான் செய்யும். இதைத் தவிர மரத்தினடியிலெல்லாம் போரின் சின்னங்களான பலவிதக் கருவிகள் அங்கங்கே சிதறுண்டு கிடந்தன. அவைதான் அங்கே நடந்த போரைப் பற்றியும், முன்னேற்றம், பின்வாங்குதல் முதலியவற்றை யெல்லாம் சூசகமாகக் காட்டின. ஒருபுறம் தோட்டாப் பெட்டிகளும் மணற் பெட்டிகளும், மற்றொரு புறம் நீலப் போர்வையாலும், கபில நிறப் போர்வையாலும் போர்த்திக் கிடத்தப்பட்ட மரித்த சிப்பாய்களின் சடலங்களும், அவற்றின் முக பாவங்களும் அவர்கள் அந்நகரைப் பிடிக்க எவ்வளவு கஷ்டப் பட்டனரென்பதை விளக்கின. அங்கு நிகழ்ந்த அச்சண்டையின் விவரங்கள் சரித்திரத்தில் இடம்பெறும் வரையில் இந்தக் காட்சிகளே அதற்குச் சான்று கூறின.

இவ்வாறு சேதமுற்ற போதிலும் இச் சிறு நகரத்தின் மாண்பு, ஒளி குன்றினும் அதன் தனிச் சோபை பீரங்கிகளின் வெடிக்கும் குண்டுமாரிக்கும் மேலாகத் திகழ்ந்தது. பல வீடுகளைக் குண்டுக் கிரையாக்கிய போரின் இரக்கமற்ற தன்மையைத் துச்சமாக மதித்துப் பண்புடன் மிளிர்ந்தது அந் நகரம். கடினமான நடைபாதைகள், அமைதி நிலவிய நாட்களில் மரங்களின் நிழலில் நடைபெற்ற விளையாட்டுகளைப் பற்றி அறிவித்தன. "பலசரக்கு வியாபாரம்" என்று ஒரு விளம்பரப் பலகையில் எழுத்துக்களைச் சாய்வாகப் பார்த்துத்தான் படிக்க வேண்டியிருந்தது. ஏனெனில் அப் பலகையே ஒரு முனையில்தான் ஒட்டிக்கொண்டு ஆடிக்கொண்டிருந்தது. ஆனால் புகைந்து கொண்டிருந்த அப் பழைய கடையின் முன் தாழ்வாரம் ஒரு காலத்தில் பரந்த, தொப்பிகளணிந்த பல மனிதர்கள் அங்கே கூடிப் புகைப்பிடித்து உல்லாசமாகப் பொழுது போக்கினர் என்பதைக் காட்டின.

அந்த நகரத்தின் பண்பே அத்தகைய ஜீவத் துடிப்பில்தானிருந்தது. தெளிவுறத் தெரியாவிட்டாலும், இரு இறக்கைகளுடன் நகரத்தின் மேலே பறந்து கொண்டிருந்த ஒரு பக்ஷி போல இப்பண்பு நகர் பூராவும் பரவியிருந்தது. படகுப் பாலத்திலிருந்து விரைந்து வெளியேறிக் கொண்டிருந்த ராணுவத்தினரும் இந் நகரத்தின் ஜீவ களையை உணர்ந்தனர்.

இருளில் தற்காலிகமாகத் தெருவில் முகாமிட்டிருந்த நீல நிறத் திட்டுகள் போல் தோன்றிய அவ்வூர் மக்கள் கூட்டத்தினரின் பேச்சரவம் ஆழ்ந்து ஒலித்துக்கொண்டிருந்தது. அவ்வப்பொழுது தூரத்திலிருந்த காவற்படை வரிசையிலிருந்து துப்பாக்கி வெடி சப்தமும் இதனுடன் சேர்ந்து ஒலித்தது. கருகிப்போன பகுதிகளிலிருந்து எழுந்த நாற்றம் இரவின் குளிர் காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தது.

குண்டு வீச்சிற்கு இலக்கான ஒரு வீட்டின் வாசற்படியில் சிந்தித்த வண்ணம் உட்கார்ந்து கொண்டு, டான் அந்தப் படை

110862

யெடுப்பு திறமையற்ற முறையில் நடத்தப்பட்டது என்று மற்றவர்களுக்கு அறிவிப்பது போல வாய்விட்டே சொல்லிக்கொண்டிருந்தான். கணப்பு ஏற்படுத்திக் கொள்ளுவதைத் தடை செய்து உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

திடீரென்று தன் பேச்சை நிறுத்திக் கொண்டு, "பில்லி எங்கே? உங்களுக்குத் தெரியுமா?" என்று தன் தோழர்களைக் கவனித்தபடியே கேட்டான் டான்.

"காவற்படைக்குச் சென்றிருக்கிறான்" என்று யாரோ ஒருவன் பதிலளித்தான்.

"போய்விட்டானா? அதெப்படி?" என்றான் டான். "காவற்படைக்குப் போகவேண்டிய வேலையே கிடையாதே. மற்றக் கார்ப்பொரல்கள் இருக்கிறார்களே, அவர்கள் ஏன் இந்த வேலையை ஏற்றுக்கொள்ளக் கூடாது?" என இரைந்தான்.

தாடியுடனிருந்த ஒரு சிப்பாய் எவனிடமிருந்தோ பறிமுதல் செய்யப்பட்ட புகையிலையைக் குழாயில் வைத்துப் புகைத்துக் கொண்டிருந்தான். அந்த வீட்டிலிருந்த ஒரு பெட்டியின் மேல் சௌகரியமாக உட்கார்ந்து கொண்டிருந்த அவன் "இப்போது அவனுடைய முறை, அதனால்தான் போயிருக்கிறான்" என்று கூறினான்.

"முறை என்று அப்படி ஒன்றுமில்லை" என்று டான் இரைந்தான். அவனும் பெட்டியின் மேல் உட்கார்ந்திருந்தவனும் விவாதத்தில் ஈடுபட்டனர். தன் சகோதரன் காவலுக்கு அனுப்பப்பட்டிருந்தால் அது அநீதியாகுமென்று டான் சாதித்தான். அந்தச் சமயம் மங்கிய இரு பட்டைகள் தைக்கப்பட்ட உடையணிந்த ஒரு கார்ப்பொரல் அங்கு வந்ததும் அவன் தன் விவாதத்தை நிறுத்திவிட்டான். "ஹூம், எங்கு சென்றிருந்தாய்?" என டான் அந்தக் கார்ப்பொரலைக் கேட்டான். கார்ப்பொரல் பதிலொன்றும் பேசவில்லை. அப்பொழுது டான் கேட்டான், "பில்லி, எங்கு சென்றிருந்தாய்?" ஆம். அங்கு தோன்றியவன் அவன் சகோதரன் பில்லிதான். டானின் வினாக்களை காதில் வாங்கியவனாகவே காணப்படவில்லை அவன். அவர்களுக்கு எதிரில் உயர்ந்து கம்பீரமாக நின்ற வீட்டைச் சுட்டிக் காட்டியபடியே பெட்டியின் மீதிருந்த சிப்பாயைப் பார்த்து, "இது ஆச்சரியமில்லையா? இந்நகரத்திற்கு ஏற்பட்ட குண்டுமாரிக்குப் பின் ஒரு கட்டிடத்திலாவது ஒரு செங்கல் கூட உருப்படியாக இராது என்றே நினைத்தேன். ஆனால் இந்தக் கட்டிடத்தைப் பார்" என்று சாவதானமாகச் சொன்னான்.

"ஓ, ரொம்ப சாமர்த்தியமாகப் பேசுவதாக எண்ணமோ?" என்று ஏளனத்துடனே தன் சகோதரனின் முதுகுப்புறத்தைப் பார்த்தவண்ணம் டான் கேட்டான்.

மாலைப் பொழுதின் மங்கிய வெண்ணிற ஒளி முகாம்களில்



கணப்பு இல்லாததால் அவர்கள் அணிந்திருந்த நீல நிற உடைகளைக் கருநிறமாகக் காட்டிற்று. அவர்களுடைய முகங்களெல்லாம் உணர்ச்சியற்று வெளிறிப் போயிருந்தன. அவர்களிருந்த இடத்திற்குச் சற்று தூரத்தில் படிக்கட்டுகளுக்கருகாமையில் ஏதோ பரபரப்புக் காணப்பட்டது. ஒரு சிப்பாய் பாவாடை போன்ற ஒன்றை எங்கிருந்தோ கொணர்ந்து அதை அணிந்துகொண்டு, தன் தோழர்களை உற்சாகமூட்ட, நாட்டியம் ஆடிக்கொண்டிருந்தான். பில்லியும் மற்றும் பலரும் இதை வேடிக்கை பார்க்க உடனே அந்த இடத்திற்குச் சென்றனர்.

"பில்லிக்கு என்ன வந்துவிட்டது?" என்று டான் பெட்டியின் மீதமர்ந்திருந்தவனைப் பார்த்துக் கேட்டான்.

"எனக்கெப்படித் தெரியும்?" என்று அவன் சற்று எரிச்சலுடனே பதிலளித்தான். மேலும் அவன் எழுந்து அங்கிருக்க விரும்பாதவன் போல் அப்பால் போய்விட்டான். அவன் திரும்பிய பொழுது, சுருக்கமாக, கம்மிய குரலில், இரவில் மழை பெய்யக்கூடும் என்று ஹேஷ்யம் கூறினான்.

பெட்டியின் ஒரு முனையில் டான் உட்கார்ந்து கொண்டான். மகிழ்ச்சியுடன் இப்படியும் அப்படியும் சாய்ந்து நாட்டியம் ஆடிக் கொண்டிருந்தவனைச் சுற்றியிருந்த கூட்டத்தினரைப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்தக் கூட்டத்தில் தன் சகோதரனுடைய முகம் கூட தனக்குத் தெரிவது போல் தோன்றியது அவனுக்கு.

அவனும் பெட்டியின் இன்னொரு முனையில் உட்கார்ந்திருந்த மற்றவனும் ராணுவத்தின் போர் நிலையைப் பற்றிச் சிந்தனையுடன் பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் அபிப்பிராயத்தில் காலாட்படையும் பீரங்கிப் படையும் நகரத்தின் தெருக்களில் ஒழுங்கற்று சிதறிக் குழப்பிக்கொண்டிருக்கின என்று தோன்றியது. ஆனால் அவர்கள் அதைப்பற்றி வருத்தப்படவில்லை. ஏனெனில் ராணுவத்தின் நிலையைப் பற்றி இவ்விதமாக அவர்கள் அடிக்கடி நினைத்ததுண்டு. தாங்கள் ராணுவத்தில் மிகவும் சாதாரணச் சிப்பாய்களாதலால் இதெல்லாம் ஒழுங்கற்ற முறையில் இருப்பதாகத்தான் அவர்களுக்குத் தோன்றும் என்றும், ஆனால் இவற்றின் உண்மை நிலவரத்தையும், அவசியம் ஏற்பட்டபோது குழப்பம் நீங்கி சீரான நிலையை அடைந்துவிடும் என்பதை அறிந்த சில அதிகாரிகளும் ராணுவப் படையில் எங்கோ இருக்கின்றனர் என்பதையும் அவர்கள் நம்பினர். அப்படி தலைவனற்ற ராணுவப் படை உண்மையிலேயே தலையற்ற முண்டமாக இருப்பதாய் வைத்துக் கொண்டாலும் போரில் நன்கு அநுபவப்பட்டவர்களைப் போன்று "இதெல்லாம் சரிவரச் சீராகிவிடும்" என்ற ஸ்தூலமான நம்பிக்கையையே அவர்களும் கொண்டிருந்தனர். ஆனால் சிப்பாய்களாயிருக்கும்வரை இம்மாதிரி உயர்ந்த விஷயங்களெல்லாம் அவர்கள் கவலையல்ல. சமயம் கிடைத்த போதெல்லாம், அகப்பட்ட உணவை உண்டு உறங்கி, போர் ஆரம்பித்து உத்தரவு பிறப்பிக்கப்

படும்போது உற்சாகத்துடன் போர் செய்வதும்தான் அவர்களுடைய வேலை. இந்த வேலையே அவர்களுக்குப் போதிய உற்சாகத்தையும், ஊக்கத்தையும் அளித்தது. இதற்கு மேல் அவர்கள் ஏன் சிந்திக்க வேண்டும்?

மற்ற அணிகளைப் பற்றி அவர்கள் பேசினர். இவை மிகவும் ரகசிய விஷயங்களாதலால் அவர்கள் மெல்லிய குரலில் பேசினர். "ஒன்பதாவது அணி—முதலாவது அணி—ஐந்தாவது அணி—ஆறாவது அணி—மூன்றாவது அணி" என்று வெறும் எண்ணிக்கைகள்தான் உச்சரிக்கப்பட்டாலும் சொல்லாற்றலுடன் அவை ஒலித்தன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு அர்த்தபாவத்துடன் விளங்கின. புரியாத கணக்கைப் போன்று அவை தோன்றினாலும், ஊர்களின் பெயர்களைக் கேட்ட மாத்திரத்தில் அந்த ஊரைப் பற்றிய விஷயங்கள் நினைவுக்கு வருவது போல இந்த எண்ணிக்கைப் பெயர்கள் அவர்களுக்கு அர்த்தம் நிரம்பியனவாக விளங்கின.

அவர்களுடைய சொந்த அணியைப் பற்றி அவர்கள் ஆழ்ந்த மரியாதையுடன் பேசினர். ஒருவகை விக்கிரக ஆராதனையைப் போல எதனோடும் ஒப்பிடாத அளவில் அதை உயர்த்தி நிலையான நம்பிக்கையுடன் அதைப்பற்றிக் குறிப்பிட்டனர்.

தங்களைப் போன்ற வீரர்களைக் கொண்டதாக இல்லாவிட்டாலும், மற்றப் படை அணிகளும் கூட யுத்தத்தில் அக்கறை காட்டித் திறம்பட நிர்வகிக்கப்படுகிறதே என்ற ஆச்சரியத்தினால் பிற படைகளிடத்தில் கௌரவ புத்தியுடனே அவர்கள் இருந்தனர். படைகளிலேயே அவர்களுடைய படைதான் சிறந்தது என்பதையும் அதிலும் அவர்களுடைய அணிதான் அந்தப் பிரிவிலேயே உயர்ந்தது என்பதையும் அவர்களால் நிரூபிக்க முடியும். அவர்களுடைய படை அணியோ—காவற் படையின் முதலணி—இந்தப் படையில் சேவை செய்வதன் மூலம்தான் ஒருவன் பிறந்த பயனை அடையலாம். இதைக்காட்டிலும் வாழ்க்கையில் பெரும் அதிர்ஷ்டம் ஒன்றுமில்லை என்று சொல்லும்படி இருந்தது. இராக்காலங்களில் கணப்பு மூட்டக்கூடாதென்ற உத்தரவின் விளைவால் சுடச்சுடக் காப்பி தயாரிக்க இயலவில்லை என்ற காரணத்தினால், டான் சில சமயங்களில், பெயர் சொல்லிக் குறிப்பிடாமல் பொதுவாகத் திட்டுவதுண்டு. அவனுடைய படபடப்பையும் அதிகப்பிரசங்கித்தனத்தையும் வெகுவாக அவன் வெறுத்தான்.

வரும் போரில் தங்களுக்கு வெற்றி நிச்சயம் என்று டான் சொன்னான். மற்றவனுக்கு இதில் சற்றுச் சந்தேகமிருந்தது. அவன் பலப்படுத்தப்பட்ட குன்றுகளின் நிலையைக் காட்டினான். ஆற்றுக்கு மறுபுறம் இருக்கும்போதே அவனுக்கு அது பட்டது. "சட் உளறாதே" என்று அவனை வாயடைத்தான் டான். இந்தக் குன்றுகளின்மேல் நீல உடையணிந்த வீரர்கள் நொடியில் கைப்



பற்றி சமுத்திரம்போல் அதை வியாபித்து விடமாட்டோமா என்று பெருமை பேசினான். பேசிக்கொண்டே டானின் பார்வை நடனமாடிக்கொண்டிருந்தவனைச் சுற்றியிருந்த கூட்டத்தையே ஆராய்ந்து கொண்டிருந்தது. தெருவில் உளறும் சப்தங்களுக்கு மேலாக, சில சமயங்களில் தொடுவானத்தின் முனையிலிருந்து கேட்பதுபோலத் தூரத்தில் இடி முழக்கமென ஓயாத துப்பாக்கிகளின் "பூம்-பூம்" ஒலி கேட்டுக்கொண்டிருந்தது.

## III

இரவின் இருள் கருநிற வெல்வெட்டையும் தோல்வியுறச் செய்தது: நெருப்பில்லாத முகாமினுடைய வரிவடிவம் பழைய சித்திரச் சீலையின் மங்கிய சித்திரம் போன்றிருந்தது. கைத்துப்பாக்கியின் ஒளியும் சிப்பாய்களுடைய பொத்தான்களின் பிரகாசமும் இரவென்னும் மென் துணியில் இழையோடிய, வெள்ளி, தங்கம் போன்றவற்றின் நூல்கள்போல மின்னின. கண்ணுக்குத் தெரிந்தது கொஞ்சமே. ஆனால் நுண்ணிய உணர்விற்கு அந்தச் சூழ்நிலையில் ஒருவித ஜீவத்துடிப்பு இயங்கிக் கொண்டிருந்தது தெரிந்தது. ஏதோ ஒருவிதப் பயங்கர ராட்சத உருவம் இங்கே இருக்கிறதென்பதை ஒன்றும் அறியாத வழிப்போக்கனுக்கு உணர்த்தும் ஜீவகளை போன்ற துடிப்பு. உண்மைதான். அங்கே ஒரு சேனையின் அணி அல்லவோ உறங்கிக்கொண்டிருந்தது.

அடுப்பு மூட்டுவது தடை செய்யப்பட்டதால் சமையலறையின் உலர்ந்த தரை, டிசம்பர் மாதக் குளிர்ந்த பூமிக்கு உகந்த மாற்றாகவிருந்தது. குண்டு வெடித்துச் சிற்சில பகுதிகள் உருத்தெரியாது சேதமாகியிருந்தாலும் அந்த இடத்தை ராணுவத்தினர் விரும்பினர். விழித்துக்கொண்டவுடன் போர்வைக்குள் சுருட்டிக்கொண்டு படுத்திருந்த அவர்களுடைய முதல் எண்ணம் தங்கள்மேல் எப்போது விழுந்துவிடுமோ என்று ஐயுறும் வண்ணம் நின்றுகொண்டிருந்த சுவரைப் பற்றியிருக்கும்.

தன் முகத்தின்மேல் எந்தச் சமயத்திலும் மழை பொழிவது போல் விழுந்துவிடுமோவென்று தோன்றிய செங்கற்களைப் பில்லி பார்த்தான். நகரத்தின் எல்லையில் கடமையுணர்ச்சியுடன் கடும் உழைப்பில் ஈடுபட்டிருந்த காவற்படையினர் சுட்டுக்கொண்டிருந்தனர். வரப்போகும் சண்டையின் போக்கை அவன் ஓரளவு கற்பனை செய்து பார்த்தான். டானையும் அவன் தன்னிடம் பேசியபோது தான் மௌனம் சாதித்து அவன் மனத்தை நோகச் செய்ததையும் எண்ணினான்.

எப்போதோ அன்றிரவு நேரந்தெரியாத வேளையில் பலகைகளின் உராயும் சப்தம் கேட்டு பில்லி விழித்துக்கொண்டான். முழங்கையை ஊன்றிக்கொண்டே தலையைத் தூக்கிக் கவனித்தான். தூங்கிக்கொண்டிருந்தவர்களைக் கவனித்துக்கொண்டு ஒரு சார்

ஜெண்ட் பழைய மெழுகுவத்தியில் எரிந்து கொண்டிருக்கும் தீபமொன்றை வைத்திருந்தான். ஒளிரும் பொத்தான்களும் மடித்த சட்டையும் அவனுடைய உத்தியோக அந்தஸ்தைக் காட்டியிராவிட்டால் நள்ளிரவில் பிரயாணம் செய்யும் ஒரு கிழட்டுக் குடியானவனைப் போன்றுதான் அவன் காட்சியளித்திருப்பான்.

அரைத் தூக்கத்திலிருந்து தன் மனம் திரும்பும்வரை பில்லி, அந்த விளக்கையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த அந்தச் சிப்பாய்களிடம் குனிந்து, வத்தியைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு ஒவ்வொரு முகமாகக் கவனித்து வந்தான் அந்த சார்ஜெண்ட்:

"ஹல்லோ, ஹெய்ன்ஸ், உனக்கு என்ன" என்றான் பில்லி.

"ஹல்லோ, பில்லி, பிரத்தியேக வேலை" என்று சார்ஜெண்ட் அவனுக்குப் பதிலளித்தான்.

"டான் போகவேண்டியிருக்குமே?"

"ஜேம்சன், ஹன்டர், மக்கார்மாக், டி. டேம்ஸ்டர் எல்லாரும் இருக்கிறார்கள். ஆனால் டான், ஆம்-அவனெங்கே?"

"அந்தப் பக்கம் ஜன்னலுக்குப் பக்கத்தில் பார். எதற்குக் கேட்கிறாய் ஹெய்ன்ஸ்?"

"எனக்குத் தெரியாது என்று நினைக்கிறாயா?" என்று அதிகார தோரணையிலேயே பில்லியைப் பார்த்துச் சொன்னான்.

தரையிலிருந்தவர்களைப் பார்த்துக் கண்டிப்புடனும் ஆனால் மகிழ்ச்சியுடனும் கூப்பிட்டான். "வா, மாக், இங்கு எழுந்து வா. உனக்கு விசேஷ வேலையிருக்கிறது, எழுந்திருந்து வா ஜேம்சன், புறப்படு. டான் நீ கூட" என்று ஒவ்வொருவனாகக் கூப்பிட்டான்.

கடமையின் இந்த அழைப்பை ஒவ்வொருவனும் தனக்கு ஏதோ தீங்கிழைக்கப்பட்டது போலவே கருதினான். எனினும் போர்வையை உதறிவிட்டுக் கண்களைக் கசக்கிக்கொண்டே அந்த நிசி வேளையில் தங்களைத் தொந்தரவு செய்தவனைச் சபித்துக்கொண்டே எழுந்தனர். "நான் என்ன செய்யட்டும். அவருடைய உத்தரவு" என்று சார்ஜெண்ட் இரைந்தான். "வாருங்கள், இங்கிருந்து எல்லோரும் கிளம்புங்கள்." யார் என்று தெரியாத ஒருவன் போர்வைக்குள்ளிருந்து தலையைமட்டும் நீட்டி தூங்கி வழியும் குரலில் "வாயை மூடு ஹெய்ன்ஸ். போ வீட்டுக்கு" என்று அவனைச் சபித்தான்.

அவர்களெல்லோரும் சமையலறையிலிருந்து வெளியேறிய போது மீதியிருந்தவர்களில் ஒருவனைத் தவிர மற்றெல்லோரும் தூங்கத் தொடங்கினர். பில்லி மட்டும் முழங்கையை ஊன்றிக்கொண்டு இருளையே பார்த்துக் கொண்டிருந்தான். காலடிகள் ஒய்ந்ததும் அவன் போர்வைக்குள் சுருண்டு கொண்டான்.

வைகறையின் குளிர்ந்த வெளிச்சம் பட்டதும் அவன் மறுபடியும் விழித்துக்கொண்டு பக்கத்திலிருந்த தன் தோழர்களைக் கவனித்தான். ஒருவன் எழுந்திருந்ததைக் கண்டதும் "டான் இன்னும் திரும்பி வரவில்லை?" என்று அவன் கேட்டான்.



"அவனைப் பார்க்கவில்லை" என்று அவன் பதில் அளித்தான்.

இரு கரங்களையும் தலைக்குப் பின்னால் கட்டிக்கொண்டு அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தான். "இரவில் ஒரு விவரத்தையும் காணமுடியவில்லை. வெறும் உபத்திரவங்கள். அவர்கள் ஏன் இதையெல்லாம்—" என்று காரணமின்றி அவன் இறுதியில் உறுமினான்.

வேலை ஓய்ந்து கூட்டத்துடன் டான் நுழைந்ததும், பில்லி, நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தான்.

## IV

வீதி வழியாகப் படையணி, பெருநடையில் விறுவிறுவென்று சென்றது. பீரங்கிப்படையின் அதிகாரிகளுடன் தங்களுக்கு வீதியில் வழி விடுவதைப்பற்றி கர்னல் சண்டை பிடித்துக்கொண்டிருந்தான். சேறில் பீரங்கிகள் புதைந்திருந்தன. அவற்றுடன் போராடிக்கொண்டிருந்த ஆட்கள் இந்தக் காலாட்படையினர் எழுப்பிய ஆரவாரத்தால் எரிச்சலடைந்து முஷ்டிகளை உயர்த்தி உயர்த்தித் தங்கள் வெறுப்பை வெளிக்காட்டினர். வசைமொழிகளும் மாறி மாறிப் பொழிந்து கொண்டே இருந்தனர். ஏளனம், ஹாஸ்யம், ஆத்திரம் எல்லாம் அவர்கள் வார்த்தைகளில் கலந்திருந்தன. சாய்ந்த துப்பாக்கிகள் நிலத்தை நோக்கித் தொங்கிக் கொண்டிருந்தன.

பாழடைந்த அந்த நகரத்தின் சுற்றுப்புறத்தே நீல நிற சிப்பாய்களின் ஒரு பகுதி மூடுபனிக்கப்பால் எதையோ நோக்கிச் சுட்டுக் கொண்டிருந்தது. சிறு கைகலப்புகள் நடைபெற்றுக் கொண்டிருந்த பகுதிக்குள் படையணி பாய்ந்தது. தங்களுக்கு மாற்றுப்படை வந்து விட்டதை அறிந்து கொண்ட அந்த அணி மகிழ்ச்சியுடன் ஒரு பக்கமாகத் திரும்பி அங்கிருந்து புறப்பட்டது.

கடும் மூடுபனியைத் துளைத்துக்கொண்டு, தூரத்திலிருந்த ஒரு மேட்டுப் பூமியின் மீது குண்டுகள் வெடித்துக் கொண்டிருந்தன. குண்டு வீச்சுகள் உச்சநிலையை அடைந்தபொழுது, தலைக்கு மேல் குண்டுகள் வெடிக்கும் சப்தம், கண்ணுக்குத் தெரியாத திரையொன்றைக் கிழித்துக்கொண்டு செல்வது போன்று கேட்டது. குன்றின் மேலிருந்து பீரங்கியொன்று பெரும் சப்தத்துடன் தாக்கிக் கொண்டிருந்தது. துப்பாக்கிகளே ஒன்றையொன்று தாக்கிக்கொண்டும் வீறிட்டுக் கொண்டும் இருப்பதுபோல் தோன்றியது. நகரினை நோக்கித் தாக்கிக் கொண்டிருந்த பீரங்கிகள் பேரிரைச்சலுடன் குண்டுகளைப் பொழிந்து கொண்டிருந்தன. கண்ணுக்குத் தெரியாத வரிசை யொன்றின் வழியாக ஆரஞ்சு நிறப் புகைமண்டலத்தைக் கிளப்பிக் கொண்டு, அண்மையிலிருந்து பீரங்கிப் படையின் சப்தமொன்று வந்தது.

கைகலப்புகள் நடந்து கொண்டிருந்த புதிய பகுதிகளில் பலர் புகைப் படலத்தின் நடுவே தோன்றிய பல்வேறு நிழல்களின் மேலும் சுடத் தொடங்கினர். மேகத்திரள்களிலிருந்து மனிதர்கள் திடீரெனத் தோன்றுவதுபோல் அங்கெல்லாம் சிப்பாய்களிருந்தனர். துப்பாக்கிகளின் 'படபட' வென்ற சப்தம் எதிரி குண்டுகளின் சிறு சப்தத்தை அமுக்கிவிட்டது. முதல் வரிசையிலிருந்த டான், துப்பாக்கியைக் குறி பார்த்து உயர்த்தி மூடுபனியைக் கடந்து ஒரு இலக்கைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான். அவனுடைய தசைகளும் நரம்புகளும் ஒருமுகப்பட்டு, அவன் அப்போதைக்கு ஒரு மனித யந்திரமாகவே ஆகிவிட்டான். அவன் உடலெல்லாம் உணர்ச்சியற்றிருந்த போதிலும் அவனுடைய இதயம் மட்டும் போரின் ஓசைக்குத் தக்கவாறு அடித்துக் கொண்டிருப்பதை நிறுத்தவில்லை.

கைகலப்பு நடந்து கொண்டிருந்த சண்டையின் முன் வரிசை முன்புறமும் பின்புறமும் நகர்ந்து கொண்டிருந்தது. ஒரு சமயம் இந்தப் பக்கமும், மற்றொரு சமயம் அந்தப் பக்கமும் கைகலப்பு நிகழ்ந்தது. மூடுபனியில் சிக்குண்டவர்கள் ஒரு சமயம் எங்கோ மறைந்து போயினர். மறுபடியும் எங்கிருந்தோ தோன்றினர். பயங்கரமான அந்த மேட்டுப் பிரதேசத்திற்கு வெகு சமீபமாக ஒரு சமயம் சென்றபொழுது, பொதுத் தாக்குதலை விரட்டியடிக்கும் வேகத்தில் அது குண்டுகளைப் பொழிந்தது. இன்னொரு சமயம் நீல நிற உடையணிந்த ஒரு அணி சுட்டுக்கொண்டே அவர்களை நெருங்கி விட்டது. ஒரு சமயம் ஒரு பீரங்கிப் படை கச்சிதமாகத் திட்டமிட்டு எதிரி அணியை அடியோடு அழித்துக்கொண்டிருந்தது. சுறுசுறுப்புடன் அவர்கள் அந்தச் சமவெளி எங்கும் வியாபித்திருந்தனர். எதிரிகளைக் கண்டவிடங்களிலெல்லாம் சுட்டனர். ஈரமான அந்த மஞ்சள் நிறப் புல்வெளியிலேயே பல பல தீரச் செயல்கள் புரிந்து அவற்றின் அடையாளங்களைப் பதித்துவிட்டு மிகச் சுறுசுறுப்புடனும் திறமையுடனும் போர் புரிந்தனர்.

திரையின் மீது படர்ந்த விரல்கள் திரையை விலக்குவதுபோல் எதிர்பாராத விதமாக ஒரு சமயம் பனி மூட்டம் கலைந்தபோது அமைதியும் சிலையின் கம்பீரமும் உடைய சாம்பல் நிறப் போர்வீரர்களின் ஒரு சிறிய கூட்டம் திடீரென்று டான் முன் தோன்றி அவனையும் அவனுடனிருந்தவர்களையும் திகைக்க வைத்தனர். அவர்கள் அவ்வளவு நெருங்கி அங்கு எப்படித் தோன்றினர் என்பதே புரிந்து கொள்ள முடியாத ஒரு புதிர். இவ்விரு கூட்டத்தினரும்—டானும் அவன் சகாக்களும் ஒரு புறமும், எதிரித் துருப்புகளின் சிறு கூட்டம் மறுபுறமும்—ஒருவரையொருவர் ஒரு கணம் பார்த்துக் கொண்டனர். உடனே எல்லோருடைய துப்பாக்கிகளும் தோள் உயரத்திற்குத் தூக்கிப் பிடிக்கப்பட்டன. டானினுடைய பார்வை அவனுடைய துப்பாக்கியின் குழாய் வழியே சென்றபொழுது அதன் எதிரில் ஒரு மனிதனுடைய உருவம் அங்கே தோன்றியதைப்



பார்த்தான். துப்பாக்கிக் குழாய் ஒரு 'டெலஸ்கோப்' போல அவ்வுருவத்தைக் காட்டிற்று. கருந் தாடியுடனும், தொங்கிய தொப்பியுடனும் தோன்றிய அவ்வுருவத்தை டானினுடைய மனம் அப்படியே படம் பிடித்துக் கொண்டது. ஆனால் அதே கணம் உயர்த்திய அவன் கை, கைத்துப்பாக்கியின் விசையை இழுத்தது. ரவை வெளிப் போந்தது. அந்த மனிதன் தாக்குண்டு விழுந்தான். அவன் சுட்டுக்கொண்டிருந்த துப்பாக்கியும் வெடித்து கருஞ்சிவப்பான கோடுகள் ஏற்படுத்தின. அவனுக்கு முன்னால் அந்தத் தொங்கிய தொப்பி விழுந்தது. மூடுபனியின் புகையலைகள், அவர்களுக்கிடையே புகுந்து சென்றது.

"நீ அவனை நிச்சயமாகத் தொலைத்து விட்டாய்" என்று டானைப் பார்த்து அவன் தோழன் கூறினான். ஆனால் அவன் சொன்னதை டான் காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை. அவன் கவனம் எங்கேயோ இருந்தது.

## V

அடுத்த நாட்காலை இன்னொரு பனி மூட்டம். அணியிலிருந்தவர்கள் முந்திய நாள் நடவடிக்கையைப் பற்றிப் பிரமாதமாக விமரிசனம் செய்து கொண்டிருந்தனர். ஆனால் அவர்கள் அத்துமீறிப் பேசவில்லை. ஏனெனில் தெருக்களில், இப்பொழுது மூன்று குதிரைப் படைகளுக்குத் தேவையான உதவிப்பொருள்கள் இருந்தன. அந்தப் பெரும் போர் இறுதி நிலைக்கு வந்து விட்டதை அவர்கள் உணர்ந்தனர்.

முன்னர் ஒரு பெட்டியின் மீது உட்கார்ந்து கொண்டிருந்தானே அவனுடன் டான் பேசினான். ஆனால் முன்னர் மகிழ்ச்சியாயிருந்த நாட்களில் பேச்சுக்கு ருசி தந்த அந்த மூன்று குன்றுகளின் வரிசையைப்பற்றி அவர்கள் பேசவில்லை. தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட மனிதர் சாவைப் பற்றி நினையாதிருப்பது போன்று அவர்கள் அதை விலக்கினர். எனினும் மற்றக் காரியங்களைப் பற்றிப் பேசிக் கொண்டு ஒருவரையொருவர் நோக்கிய பொழுதும் அதைப் பற்றிய எண்ணமே அவர்களின் கண்களில் நிலைத்திருந்தது.

'வரிசையில் நில்லுங்கள்' எனும் அழைப்பு தெருக்களில் தொடர்ந்து கேட்டவுடன் அந்த அணி ஆழ்ந்த பெருமூச்சு விட்டது. காத்துக் கிடக்க வேண்டிய காலம் முடிந்துவிட்டது. ரத்த வெறிபிடித்த சண்டை தவிர்க்க முடியாதது. எனவே அவர்கள் மனதைத் திடப்படுத்திக்கொண்டு போருக்கு ஆயத்தமாயினர். ஆனால் மறுபடியும் நீண்டகாலம் சேற்றிலேயே அழிந்து காலம் கடத்த வேண்டும் என்னும் நிலை வந்து விட்டது. மற்ற அணிகள் எங்கேயோ சென்று கொண்டிருந்தன. இந்த அணியிலிருந்த வீரர்கள் கழுத்தை நீட்டி நீட்டி எங்கே போகிறோம் என்பதையே பார்த்துக்கொண்டிருந்தனர். இறுதியில் பனிமூட்டங்கள்

மறைந்தன. விரோதிகள் ஒருவரையொருவர் நன்றாகவே காண முடிந்தது. உடனே ஒவ்வொரு குன்றிலிருந்தும் பீரங்கிகள் கர்ஜிக்கத் தொடங்கின. கைகலப்பில் ஈடுபட்டிருந்த வீரர்களின் ஓயாத கூச்சலும், பீரங்கிகளின் சுழல் தாக்குதலில் ஒன்றிப் போயிற்று. வீடுகளிலெல்லாம் பயங்கர வெடிச் சப்தங்கள் கேட்டன. டான் டிரங்குப் பெட்டிக்காரனைப் பார்த்துக் கொண்டே ஜாக்கிரதை, இதோ ஒன்று வருகிறது என்று எச்சரித்தான்.

இளம் அதிகாரிகளின் கீச்சுக் குரல்களும் வயதானவர்களின் கம்மிய குரல்களும் தெருக்களில் கேட்டன. அதிகார தோரணையிலெழுந்த இக்கூக்குரல்கள் தார்க்குச்சிகளைப் போன்று வீரர்களைக் குத்தி உற்சாகப்படுத்தின.

சற்று முன்னர் சாதாரண மக்கள் கூட்டம்போல் தோன்றிய அந்த அணி இப்போது அதிகாரிகளின் அதிகார தொனியினால் தட்டி எழுப்பப்பட்டு சண்டையிடத் தயாராயிருந்த படை வீரர்களின் நிலையை அடைந்துவிட்டது. ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட உத்தரவுகள்தான் அவை என்றாலும் அணியின் உற்சாகத்தைக் குறைக்கவில்லை.

நகரத்திலிருந்த வீரர்களும் குதிரைகளும் அணி அணியாக ஒரே சமயத்தில் போரில் குதித்தன. பயங்கரமான அந்த மேட்டு பூமியைப் பார்த்திருந்த தெருக்களிலெல்லாம் வீரர்களும் குதிரைகளுமே எங்கும் காணப்பட்டன.

இம்மாதிரி வீரர்களின் அணி வெளியே வந்தது நாடக மேடையில் நாடக பாத்திரங்கள் வெளி வருவது போலிருந்தது. அரசனுடைய உண்மைத் தோற்றத்தை மறைத்து வைக்கும் வேடத்தைப் போன்று அந்த கிராமம் இருந்தது. இப்போது அந்த மேலாடை கிழித்தெறியப்பட்டு ராஜா வேஷக்காரனின் உண்மை சொரூபம் வெளிப்படுவதுபோல் எஃகும், நீலமும் கலந்த பெருஞ் சேனையொன்று இருட்டைவிட்டகன்று சூரிய ஒளியில் நன்கு காணப்பட்டது.

அவர்கள் கனவில் கூட நினைத்திராதபடி அவ்வளவு கம்பீரமாக நின்ற அந்த அணியைக் கண்டவுடன் அணியிலிருந்த சிப்பாய்கள் கூட ஆச்சரியத்தினால் பெருமூச்சுவிட்டனர். விரோதிகள் இருந்த மலை உச்சியில், மக்கள் திரண்டு ஒரு பிரமிக்கத்தக்க நாடகத்தைப் பார்க்க வந்தவர்களைப் போலிருந்தனர். ஆனால் அவரவர்களுடைய இடத்திற்கு அந்த அணிகள் ராணுவ நடையில் செல்லும் பொழுது துப்பாக்கிகளும் வீரர்களும் இருமடங்காகப் பெருகி, கூட்டமாகவிருந்த சமவெளியை நோக்கிக் குண்டுமாரி பொழிந்தனர். அணியின் வரிசைகளுக்குள் குண்டு ஒன்று வந்து விழுந்தது. அதன் ஆர்ப்பாட்டமும் அது எழுப்பிய புகைப்படலமும் மறைந்த பின், தங்களுக்குத் தெரிந்த வசை மொழிகளை எல்லாம் கக்கிக் கொண்டே எதிர்த்தாக்குதல்

# மணமகள் வருகிறாள்

(சிறு கதைத் தொகுதி)

ஸ்டீபன் க்ரேன்

(THE BRIDE COMES TO YELLOW SKY: *Stephen Crane*)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 - MAR 1959
MADRAS

435
1-60

COMPLIMENTS OF
INDIA BOOK HOUSE

பேர்ல் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்
பம்பாய் 1
விலை 75 நயா பைசா

ஆங்கில மூலத்தின் முதலாவது தமிழ் மொழிபெயர்ப்பு. மறு பதிப்புக்குள்ள எல்லா உரிமைகளும் வெளியிடுவோர்களைச் சேர்ந்தவை.

1958 முதல் பெர்ல் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டுக்கு காப்பிரைட் உரித்தானது.

முதல் நூலின் கலைச் சித்திர வேலைப்பாடுகள் யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆஃப் அமெரிக்கா நியூ யார்க்கில் உள்ள அவான் பப்ளிகேஷன்ஸ் இன்கார்ப்பரேஷனது தயைமிக்க அநுமதியின் பேரில் உபயோகிக்கப்பட்டுள்ளன.

O111,3M4L.B
N58

TAMIL NADU ARCHIVES LIBRARY
110862

முதல் பதிப்பு 1958

பம்பாய் 1, மஹாத்மா காந்தி ரோட், ரீகல் சினிமாவுக் கெதிரிலுள்ள வாட்டர்லூ மான்ஷன்ஸ் 12-ஆம் நெம்பரிலிருந்து செயல்புரியும் பெர்ல் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டுக்காக ஸ்ரீ ஜி. எல். மிர்சந்தானியால் வெளியிடப்பட்டது

Printed by Thompson & Co Private Ltd (Minerva Press)
33 Broadway Madras 1



செய்தனர். தாம் தயாராய் இல்லாத சமயத்தில் கொல்லப்படுவதை அநுபவப்பட்ட போர் வீரர்கள் விரும்பமாட்டார்கள்.

இதுவரை சண்டைக்கே போகாத ஆட்கள் நிறைந்த தங்கள் படையணியை அவர்கள் சில வேளைகளில் பக்கவாட்டில் கண்டனர். ஆனால் சமவெளியில் நெரிசல்பட்டுக் கிடந்த துருப்புகளின் முன்னால் இந்தப் படையின் ஒளி வீசி பிரமிக்கவைக்கும் காட்சிக்கு முன்னர், உணர்ச்சியின்றி உறைந்துவிட்ட ரத்தம் கூடக் கொதித்தெழுந்தது. இவர்கள் எல்லோரும் ஒரே நோக்கமுடைய பெருங் கூட்டத்தினர். அவர்கள் நடவடிக்கைகளை எல்லாம் மிக அலட்சியமாகச் செய்து கொண்டிருந்தனர். பின்புறம் ஒரு ஓய்ந்து போன பீரங்கி இருந்தது. பீரங்கிப் படையின் மூன்று வீரர்கள் ஒருவரையொருவர் பின்புறமாக முழங்கையால் இடித்து இடித்து புதிதாகச் சேர்க்கப்பட்டவர்களின் செயல்களைக் காட்டிப் பரிகசித்தனர். ''நீங்கள் விரைவில் அந்த மேட்டுத் திடலைப் பிடித்து விடுவீர்கள்,'' என்று ஏளனம் செய்தனர். தாங்கள் கூட விரைவில் அதைப் பிடிக்க முடியாது என்பது அவர்கள் எண்ணம். ஆனாலும் அந்தப் புது வீரர்கள், படையின் கம்பீரமான தோற்றத்தையும், அதன் ஆர்வத்தையும் நினைத்து கடலலைகளிலிருந்து சிதறி விழும் நீர்த்திவலைகள், அலைகளிடத்தில் பக்தி பூண்டொழுகுவதுபோல ஏளனம் செய்த அவர்களிடம் மரியாதையே காட்டினர். அதன் ஆற்றலிலும், புகழிலும் அவர்களுக்கும் பங்கு உண்டல்லவா?

பீரங்கிப் படை வீரர்களின் அணியைப் பார்த்துச் சிரித்து, ''எப்படியாவது தொலைந்து போங்கள்'' என்று ஒரு வசைமொழியையும் வீசினர்.

அணி சில சிறிய பாலங்களை விரைவாகக் கடந்து சென்று போர் நடந்து கொண்டிருந்த இடத்தில் சென்று கலந்து கொண்டது. உடனே போரிலும் ஈடுபட்டது. அவர்களுக்கு முன்னால் சமவெளியின் ஒரு பாகம் தான் தெரிந்தது. அதற்குப் பின்னால் தான் அந்த மேட்டுப் பூமியிருந்தது. சமவெளியையே உற்றுப் பார்த்துக்கொண்டு அதை எப்படிக் கடப்பது என வியந்து கொண்டிருக்கும்போதே முன்னர் சென்று கொண்டிருந்த படையின் மற்றொரு அணி ''ஹோ'' என்ற கூக்குரலுடன் தாக்குதலை ஆரம்பித்தது. குன்று முழுதும் நெருப்புப் பொறிகளும், ஜ்வாலைகளும், சாம்பல் நிறப் புகையுமாகக் காட்சியளித்தது.

போரின் பயங்கரமே வீரர்களுக்கு பிரமிக்கத்தக்க ஒரு உற்சாகத்தை ஊட்டியது. இப்படிப்பட்ட உற்சாகம் ஒரு மனிதனின் இதயத்தைப் பற்றிக் கொழுந்துவிட்டு எரியும்போது அவன் தன் உயிரையும் துரும்பென மதித்து இழக்கத் தயாராகிறான். போரின் ஆவேசம் முகத்தில் பல வர்ண தீபங்களின் ஒளியைப் போல் வீச, கூண்டிலிருந்து விடுபட்ட காட்டு மிருகங்களைப் போல் ஆத்திரத்துடனும், ஆவேசத்துடனும், பயமென்பதே சிறிதுமில்லாமலும் விளங்கினர். படையணி வரிசையே பயங்கரம் நிறைந்த உத்தரவுகளினால் உந்தப்பட்டு, முன்னால் சென்று தாக்குதலில் முன் வரிசையில் குதித்தது.

கத்தி முனைத் தாக்குதலுக்குத் துடிதுடிக்கும் வீரர்கள் துவந்த யுத்தத்திற்கு ஏங்கி நிற்பர். அது மெல்ல மெல்லப் பரவி அந்த வரிசையையே ஆட்கொண்டது. தெற்கிலிருந்து அடிக்கும் குளிரில் போர்க்களம் பரந்து, உண்மையிலிருந்ததைவிட அதிக அகல முள்ளதாகத் தெரிந்தது. புகைப் படலம்—மெதுவாக மிதந்து செல்லும் புகைப்படலம், எரியும் பருத்தியின் நாற்றத்தோடு கூடிய புகைப் படலம் அவர்களை முற்றிலும் சூழ்ந்து கொண்டது. இப் புகைப் படலத்தில் அவர்களுக்கு முன் அந்த மேட்டுப் பூமி, சாம்பல் நிறக் கடற்கரையின் வரிவடிவம் போன்று, நெருப்பு ஜ்வாலையின் நாக்குகளால் குறுக்கும் நெடுக்குமாக நிறைந்து காணப்பட்டது. பேய்க் காற்றின் ஓசையுடன் போர்க்களத்தின் இரைச்சலும் கலந்தொலித்தது.

காயம்பட்ட குதிரைகளைப் போல அந்த அணி வரிசை துள்ளித் துள்ளி முன்னேறுவதும், பின்னடைவதுமாக மாறி மாறிப் போய்க் கொண்டிருந்தது. அவர்களுக்கு முன்னால் தாக்குதல் நடத்திய போது இறந்துபட்ட வீரர்களின் சடலங்களையெல்லாம் கடந்து சென்றது.

இந்த முன் வரிசையில் முகம் கருத்து, உரத்த குரலில் கத்தி முன்னேறிக் கொண்டிருந்த டானுக்கு முன்னே பூதம் போன்று ஒரு காயம்பட்ட மனிதன் திடீரென்று தோன்றினான். நிலை குலைந்து கிடந்த தன் உடம்பைக் கஷ்டப்பட்டுத் தாங்கிக் கொண்டு அவனைத் தாண்டிப் போகும் சிப்பாய்களை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். எந்த நிமிஷத்திலும் தான் நசுக்கப்பட்டு விடலாம் என்ற எண்ணம் அவனுக்கு உண்டாயிற்று. அந்நிலையிலிருந்து தப்புவதற்காக பரிதாபகரமாக ஒரு இறுதி முயற்சி செய்பவன் போல பிரயத்தனம் செய்துகொண்டிருந்தான். எப்படியோ அங்கிருந்து சற்று விலகிக் காயமடைந்திருந்த மற்றவர்கள் மத்தியில் ஒதுங்கிக் கொண்டான். டானும் அவனருகிலிருந்த அந்தச் சிப்பாயும் காயம் பட்டவனைப் பற்றி எவ்விதச் சிந்தனையுமில்லாது அவனைக் கவனிக்காமலே தாண்டிச் சென்றுவிட்டனர். வேகமாக ஓடும் ரயில் பாதையோரத்து மொட்டைப் பாறையைத் தாண்டிக்கொண்டு செல்லுவது போல், இந்தக் காயமுற்ற மனிதனையும் அப்படையணி தாண்டிச் சென்றது.

ஒரு புகைப் படலத்தைக் கிழித்துக் கொண்டு முன்னால் சென்ற இந்த அணியின் ஒரு பகுதி அங்கே சேதமடைந்து சிதைந்து சின்னா பின்னமாகக் கிடந்ததைக் கண்டனர். இவர்களுக்கு முன்னால் சென்ற எதிரிகளின் குண்டுமாரிக்கு இலக்காகி இக்கதிக்கு ஆளானவர் இவர்கள். இக்காட்சி அவர்களுக்கும் எத்தகைய கதி நேரவிருக்கிறதென்பதை ஒரு மந்திரவாதி தெள்ளென விளக்குவது போலிருந்தது. ஆனால் அதைச் சிறிதேனும் பொருட்படுத்தாது அந்த முன் வரிசையினர் சிந்தனையே இல்லாத ஒரு யந்திரம்போல் முன்னேறிக் கொண்டிருந்தனர். காயம்பட்டிருந்த



ஆட்களின் மேலும், மரித்த சடலங்கள் மேலும் நடந்தே எதிரிகள் தாக்கும் முன்னணியை அடைந்தனர். மேட்டுப் பகுதியிலிருந்து எழும்பிய நெருப்பு ஜ்வாலைகள் இங்கேதான் எல்லாவற்றையும் பொசுக்கிக் கொண்டிருந்தன.

பரக்கப் பரக்க விழித்துக்கொண்டு வியர்வை சொட்ட, மேல் மூச்சு வாங்க, களைப்புற்ற முகத்துடன் அந்த பயங்கரப் பிரதேசத்தையும் கடந்து செல்ல முயன்றனர். ஆனால் முன்னேற முடியவில்லை. ஏதோ ஒரு கற்சுவரின் தடை ஏற்பட்டது போலிருந்தது. இத்தடைக்கு முன்னால் விறுவிறுப்புடன் சென்ற படை அணியின் வேகம் தடைப்பட்டது. ஒரு கணம் என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாற்றம். அடுத்த கணம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது போல், ஒரு பயங்கரத் தாக்குதல். ஒரு முன்னேற்றம். ஆனால் அடுத்த கணமே அணி தூள் தூளாகச் சிதறிச் சின்னா பின்னமாகி, உருத் தெரியாமல் போய்விட்டது.

இப்போதுதான் புதிதாகச் சேர்ந்தவர்களுக்கும், அநுபவசாலிகளுக்குமுள்ள வித்தியாசம் புலப்பட்டது. புதியதாகச் சேர்ந்த யுத்த வீரர்கள் மிக வேகமாக அபாயத்தைப் பொருட்படுத்தாது முன்னால் சென்றனர். தோல்வியுற்றுச் சிதறிப் போயினர். இப்படி ஒரு படையணி இருந்ததா என்றே சந்தேகிக்கும் வண்ணம் அழிந்து போயினர். ஆனால் அவ்வாறு அவர்கள் தோல்வியுற்றும், தங்கள் கடமை என்ன என்பதை அநுபவசாலிகளான வீரர்கள் மறந்துவிடவில்லை. கடைசி முயற்சியாக வெறி கொண்ட அந்தப் படையினர் முன்னேறி மேட்டுப் பூமியை நோக்கி ஒரு முறை பொழிந்த குண்டுமாரியின் வேகத்தில் எதிரிகளின் அரணை கிடுகிடுத்தது. எதிரிகள் வீசிய நெருப்பு ஜ்வாலைகளை எதிர்த்து நிற்க முடியும் என்ற தைரியத்தை இப்படையினருக்கு ஊட்டியது அந்த வீரர்களின் செயல்.

பிரமிக்கத்தக்க இந்த நிகழ்ச்சிக்குப் பின், அவர்கள் தம் படை வகுப்பிற்கு மறு பெயர் சூட்டினர். அதை "லிட்டில் ரெஜிமெண்ட்" (சிறிய படையணி) என்று அழைத்தனர்.

## VI

"நேற்று ஒருவனை டான் சுட்டதை நான் பார்த்தேன். ஆம். அவன்தான் சுட்டான் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். டான் அவனைப்பற்றி இப்பொழுது நினைத்துக்கொண்டு இந்த மாதிரி தான் அவன் சுருண்டு விழுந்தானா என்று எண்ணிக் கொண்டிருக்கிறானோ என்னவோ! இப்படிப்பட்ட விஷயங்கள்தான் மனிதனுக்கு இந்த நேரத்தில் நினைவுக்கு வரும்."

பாதை ஓரங்களிலும், தெருக்களிலும், வழிகளிலும் இருந்த தற்காலிக முகாம்களின் அடுப்புகள் கொழுந்து விட்டெரிந்தன.

பெயர்ந்து விழுந்து கொண்டிருந்த செங்கற் குவியலையும், மாசுபடிந்த சுவர்களையும், விரல்களால் தொட்டுத் தொட்டுப் பார்ப்பதுபோல், அடுப்பு வெளிச்சத்தின் ஜ்வாலைகள் பாழடைந்த பகுதிகளைப் பிரகாசப்படுத்தின. நீலநிற அணிப் பகுதியிலிருந்து மறுபடியும் ஆரவாரம் கேட்டது.

பன்றியிறைச்சி வறுக்கப்படும் மணமும், ஏராளமான சிறிய காப்பிக் குவளைகளிலிருந்து வரும் நறுமணமும் பாழடைந்த பாகத்திலிருந்து மிதந்து வந்தன. நிழலில் வைக்கப்பட்டிருந்த துப்பாக்கிகள் மீது ஜ்வாலைகளின் ஒளிவீசிப் பளிச்சிட்டன. எங்கெங்கு தேசியக் கொடி தரையில் கிடத்தப்பட்டிருந்ததோ அங்கெல்லாம் பருந்தின் சின்னம் மேலே தெரிந்தது. அந்தச் சின்னம் தானே தேசாபிமானத்தைத் தட்டி எழுப்பி வீரர்களைப் புகைப் படலத்தையும், நெருப்பு அரணையும் மீறி முன்னேறத் தூண்டியது.

ஓரிடத்தில் கணப்பைச் சுற்றியிருந்தவர்கள் மகிழ்ச்சியுடன் காணப்பட்டாலும், அவர்கள் தங்கள் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி அடக்கிக் கொண்டிருந்தனர். அவர்கள் பேச்சு தாழ்ந்த குரலில் மெதுவாகவே இருந்தது முழுதும் கடுமையாக உழைத்து விட்டு ஓய்வடைந்த தொழிலாளியைப் போன்று அவர்கள் கணப்பின் முன் அமர்ந்திருந்தனர்.

ஒருவன் மட்டும் மற்றவர்களை விட்டு விலகி உட்கார்ந்திருந்தான். அவனை மற்றவர்கள் குறிப்பாகக் கூப்பிடவுமில்லை. நேராகக் கூட நிமிர்ந்து பார்க்கவுமில்லை. எப்பொழுதும் ஓரப் பார்வையாகவே பார்த்துக் கொண்டிருந்தனர். அவனிடம் பேசினாலும் அவர்களுடைய குரலில் மாறுதல் காணப்படும்.

தூரத்திலுள்ள கணப்பிலிருந்து ஒரு சிப்பாய், இந்த உற்சாக மிகுந்த கூட்டத்திற்கு வந்தான். அவன் தனியாக அமர்ந்திருந்த அந்த மனிதனை ஒரு கணம் ஆராய்ந்தான். பிறகு தயக்கத்துடன் அவனை அணுகி "ஏதாவது செய்தி கிடைத்ததா டான்!" என்றான்.

"ஒன்றும் கிடைக்கவில்லை" என்று பதிலளித்தான் டான்.

புதிதாக வந்தவன் சற்றே நகர்ந்தான். கணப்பை ஒரு கணம் பார்த்தான். மற்றொரு கணம், வானத்தையும், மற்றவர்களையும், டானையும், மாறி மாறிப் பார்த்தான். அவன் முகத்தில் ஒரு விதக் கவலை தோய்ந்திருந்தது. அவன் நாக்குச் செயல் புரிய மறுத்தது. இறுதியாக அவன் எப்படியோ சமாளித்துக் கொண்டு "கவலைப்பட வேண்டாம். செய்தி கிடைப்பதற்கு இன்னும் வாய்ப்பிருக்கிறது, டான். காயம்பட்டவர்கள் ஏராளமாக இன்னும் அங்கு கிடக்கிறார்கள் அதுதான் உனக்கும் தெரியுமே. அதனால் தான் இன்னும் கொஞ்சம் வாய்ப்பு இருக்கிறது" என்று அவன் சொன்னான்.

"ஆம்" என்று டான் அதை ஆமோதித்தான்.



மறுபடியும் அந்தச் சிப்பாய் சிறிது நகர்ந்தான். மற்றொரு முறை மிக்கக் கவலையுடன் வானத்தை நோக்கி ஒரு பெருமூச்சு விட்டான். அவன் மனம் ஒரு நிலையிலில்லை. பிறகு மீண்டும், "இன்னும் கொஞ்சம் வாய்ப்பிருக்கிறது" என்று சொல்லிவிட்டு அவ்விடத்தை விட்டு விரைந்து நடந்தான்.

அவன் கேட்ட மாதிரியைக் கண்டு தைரியமடைந்து மற்றொருவன் முன்னவனைப் போலவே அமைதியுடன் தூரத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த அந்த உருவத்தை அணுகினான். அவன் கவனத்தை ஈர்க்க இருமிக்கொண்டே, "ஒன்றும் செய்திகளில்லையே?" என்று கேட்டான்.

"ஒன்றும் இல்லை" என்றான் டான்.

"நல்லது. உன்னைக் காவல் வேலைக்கு அழைத்துச் சென்ற அந்த இரவு அவன் உனக்காக எவ்வளவு துடித்துக் கொண்டிருந்தான் என்பதை அடிக்கடி நான் நினைத்துக்கொள்ளுவதுண்டு. உனக்கு நினைவுக்கு வருகிறதா? பரவாயில்லை. எனக்கு ஒரே ஆச்சரியம். அவன் அதைப்பற்றி அதிகம் பேச முடியவில்லை. நான் நிச்சயமாகச் சொல்கிறேன். நீ சென்றபின் அவன் அன்றிரவு பூராவும் கண் இமைக்கவில்லை. அது முற்றிலும் உண்மை. விழித்துக் கொண்டே காவல் வேலையைப்பற்றிப் பழித்துக் கொண்டே கவலைப்பட்டுக் கொண்டிருந்தான். எனக்கு ஒரே ஆச்சரியம். ஆனால் அவன் மட்டும் அங்கேயே படுத்துக் கொண்டு அவர்களையெல்லாம் சபித்துக் கொண்டிருந்தான். அவன்—"

டானின் தொண்டையிலிருந்து ஒருவிதச் சப்தம் தான் வெளிப்பட்டது. கல் அடைத்துக் கொண்டு வார்த்தைகளையே அமுத்தியது போல் தோன்றியது. "வாயை மூடிக்கொண்டு பேசாமலிரு" என்று மட்டுமே அவனால் பேச முடிந்தது. அவன் எரிச்சலடைந்திருந்தான். ஆகவே அவன் தனிமை கலைக்கப்படுவதை விரும்பவில்லை. சிந்தனையில் ஆழ்ந்திருக்க அவனை விட்டுவிட எண்ணினர்.

"ஓ, அவனைத் தனியாக விட்டுவிட மாட்டாயா?" என்றான் ஒருவன்.

"அங்கிருந்து வந்துவிடு கேளி!" என்றான் மற்றொருவன்.

"அவனை விட்டுவிட்டு வரமாட்டாய்?"

அசையாத அந்த உருவத்திடம் அவர்கள் மரியாதையுடன் நடந்து கொண்டனர். அதன் முகம் இனந் தெரியாத வேதனையில் மூழ்கி இருந்தது.

## VII

சூரியனுடைய செவ்வட்டக் கிரணங்கள் நெடுநேரம் அச்சிறு சமவெளியில் வீசியது; பின்னர், இருள் மெதுவாகக்

கவிந்தது. செத்தவர்களின் வெளுத்துப்போய்ப் புதுமையாகத் தோற்றமளித்த அங்கங்கள் இருட்டில் மறைந்தன.

சமவெளியின் முன்பாக மேட்டுப் பூமியில் சிறிய கணப்புகளின் ஜ்வாலைகள் தெரிந்தன. அவற்றிற்குப் பின்னாலிருந்த நகரத்திலிருந்து 'மினுக், மினுக்' எனும் சிறிய ஒளி தற்காலிக முகாம்களின் ஒளியில் கலந்துவிட்டது. சமவெளி என்னும் கருநிற வெளியில் அவ்வப்பொழுது ஒளிச் சிதறல்கள், விளக்குகள், அங்குமிங்கும் தோன்றின. இந்தப் போர்க்களங்களே ஒரு பயங்கரமான மர்மமாயிருந்தன.

திடீரென்று ஒரு இருண்ட இடத்திலிருந்து ஏதோ ஒன்று உயிர்த்தெழுவது போன்று காணப்பட்டது. மூட்டை போன்ற ஒரு பாகத்திலிருந்து முனகல் சப்தம் கேட்டது. சண்டையில் தோற்கடிக்கப்பட்டுக் கீழே விழுந்து கிடந்த அந்த உருவம், சிறிது பிரயாசைப்பட்டு உட்காரும் நிலைக்கு எழுந்ததும்தான் அவ்வுருவம் மனிதன் என்பது தெரிந்தது.

குன்றின் மேலுள்ள விளக்குகளையும், பிறகு நகரின் மங்கிய நிறத்தையும் அம்மனிதன் ஒரு கணம் உற்றுப் பார்த்தான். சில கணங்கள் வரை அவன் சோர்ந்த கண்களால் பார்த்துக்கொண்டே இருந்தான். அவன் முகம் உணர்ச்சியற்று மரக்கட்டை போன்றிருந்தது.

இறுதியில் தன்னைச் சுற்றி மங்கலாகத் தெரிந்த உயிரற்ற சடலங்களைப் பார்த்தான். இவர்களைப் பார்த்ததில் அவன் முகத்தில் ஒருவித மாறுதலும் தோன்றவில்லை. தன்னைப் பற்றிய இறுதி முடிவு இன்னமும் கூறப்படவில்லை என்பதை அவை நினைவுறுத்தின. தன்கைகளையும் மார்பையும் விரல்களால் தடவிக் கொண்டான். ஒரு பிச்சைக்கார விடுதிக்கு முன் நிற்கும் அப்பாவியைப் போல் அவன் காணப்பட்டான்.

மார்பிலோ, கைகளிலோ காயங்கள் ஏதும் காணப்படாததால் கையைத் தலைக்குக் கொண்டு போனான். அங்கு ஏதோ பிசுக்குடன் உறைந்துபோன திரவம் விரல்களுக்குத் தென்பட்டது. பிசுக்கடைந்த விரல்களைத் தன் கண்களுக்கு நேரே உயர்த்திப் பிடித்துக் கொண்டு அவற்றை அதே வெறித்துப் போன பார்வையுடன் ஆராய்ந்தான். உடம்பு லேசாக நடுங்கியது.

அந்த வீரன் மறுபடியும் நகர்ப்புறத்தை நோக்கி விழிகளை உருட்டினான். அவன் எழுந்தபொழுது நனைந்த தாளைப் போன்று, அவனுடைய உடைகள் உறைந்துபோன நிலத்திலிருந்து பிய்த்துக் கொண்டு வருவதைக் கண்டான். அது எழுப்பிய அந்த சப்தத்தைக் கேட்ட பிறகுதான் அதற்கான காரணத்தை அவன் யோசிப்பது போன்று தெரிந்தது. பெருமூச்சு விட்டுக் கொண்டே நிலத்தைப் பார்த்தான். பிறகு தனது கால்ச்சட்டைகளையும் நிலத்தையும் மாறி மாறி நோக்கினான்.



இறுதியில் அவன் மங்கலாகத் தெரிந்த வெளிச்சத்தை நோக்கி மெதுவாக நடந்தான். உள்ளங் கைகளை முன்னால் நீட்டிக் குருடனைப் போன்று, அவன் நடந்தான்.

## VIII

தாழ்ந்த குரலிலேயே தமக்குள் பேசிக் கொண்டிருந்த தோழர்களின் நடுவே டான், அசைவற்று யாராலும் தொந்தரவு செய்யப்படாது தன்னந் தனியாகவே உட்கார்ந்திருந்தான். வழக்கமான காலைப் பனியின் ஈரத்தில் சிறு கணப்புகள் ஆத்திரமூண்டு எரிவது போல் இருந்தன.

திடீரென்று தெருவில் ஒரு கூக்குரல் எழுந்தது, மகிழ்ச்சியும் வியப்பும் கலந்த கூக்குரல். அடுப்பைச் சுற்றி காலையுணவு உண்டு கொண்டிருந்தவர்கள் திடுமெனத் தெருப்பக்கம் உற்றுப் பார்த்தனர். அவர்கள் ஆச்சரியத்துடன் பெருங்குரலில் அழைத்தனர். "நல்லது! தேவலையே! டான்! இப்படிப் பார் டான்! யார் வருவது என்று நீயே பாரேன்! ஓ, டான்!" என்று எல்லோரும் உற்சாகத்துடன் ஆர்ப்பரித்தனர்.

மௌனமே உருவான டான், கண்களை உயர்த்தி, இரும்புத் தொப்பியளவு தலையில் கட்டுடன் கூடிய ஒரு மனிதன், படைகள் முழுவதிலுமிருந்து பேராரவார வரவேற்புக் கோஷத்துக்கிடையில் தன்னை நோக்கி வருவதைக் கண்டான். அவன் எல்லோருடனும் கைகளைக் குலுக்கிக் கொண்டிருந்தான். ஏதேதோ அவர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தான். உரத்த குரலில் உற்சாகத்துடன் பேசிக் கொண்டிருந்தான்.

டான் தன்னிடத்தை விட்டெழுந்தான். அவனுடைய வெண்கல நிற முகத்தில் கன்னம்வரை சிவந்து ஒளிர்ந்தது. தரையிலிருந்து குதித்துத் தாவிச் செல்லுவது போன்று அவன் காணப்பட்டான். ஆனால் திடீரென்று பின்வாங்கினான். மறுபடியும் பழைய உணர்ச்சியற்ற பார்வையுடன் வெறித்து நோக்க ஆரம்பித்து விட்டான். மற்றவர்கள் மட்டும் உற்சாக மேலீட்டால் ஒருவரை யொருவர் பார்த்தனர்.

"டான்! பார்! யார் வருவதென்று பார்!" சிலர் மறுபடியும் கூக்குரலிட்டனர். "டான்! பாரேன்!"

இறுதியில் அவன் பேசினான். தன் தோள்களைத் திருப்பிக் கொண்டான். "ஏன், எனக்குத் தெரியாதா? தெரியாதென்று எண்ணினாயா?"

ஆனால் அவன் கண்கள் புதியதாக வந்தவன் பக்கம் நோக்கினவா என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது.

"டான் உன்னால் ஏன் பார்க்க முடியவில்லை? பார், யார் வருவதென்று!" என அவர்கள் திரும்பத் திரும்பக் கூறினர்.

சலிப்பும் கோபமும் நிறைந்த குரலில் அவன் பேசினான். ''நாசமாய்ப் போக! எனக்குத் தெரியாதா!''

இரும்புத் தொப்பியளவு கட்டுடன் வந்த அந்த மனிதன் அவர்களை நெருங்கினான். சலிப்பின்றி கைகுலுக்கி ஏதேதோ விளக்கங்கள் கூறினான். சில சமயங்களில் அவனையே ஆணியடித்தாற் போன்று ஒரே பார்வையோடு பார்த்துக் கொண்டிருக்கும் டானின் கண்களை அவனுடைய கண்கள் சந்தித்தன.

பல தடவை சமாளித்த பிறகு தலைக்கட்டுடன் இருந்த மனிதன் கணப்பையே கண்கொட்டாமல் பார்த்த அந்த மனிதனுக்கு மிக அண்மையில் வந்து விட்டான். அவன் முன்னால் வந்து சிறிது தயங்கினான். பிறகு சிறிது மௌனம் நிலவியது. இறுதியில் அவன்தான் பேசினான்.

''ஹல்லோ, டான்!'' என்றான் முதல்வன்.

''ஹல்லோ, பில்லி!'' என்றான் இரண்டாமவன்.

# அவமானம்

''இங்கே வந்து என்னைத் தொந்தரவு செய்யாதே,'' என்று சமையற்காரி இரைந்தாள்.

அவள் பொறுமை இழந்திருந்தாள். ''உன் அம்மாவும் ஊருக்குப் போய் விட்டாள்; அப்பா சாப்பிட வரும் வேளையாகி விட்டது. எனக்கு நிறைய வேலையிருக்கிறது. இது போதாதென்று நீ வேறு தொந்தரவு கொடுக்க வந்து விட்டாய். சமையற்கட்டில் சிறுவர்களுக்கு என்ன வேலை? என் காரியத்தைக் கெடுக்காதே. ஓடு வெளியே'' என்று அவள் முணுமுணுத்தாள். மிகுதியாக இல்லாவிட்டாலும் மலையத்தனை வேலை குவிந்து கிடந்ததாகவே காண்பித்துக் கொண்டாள். ஜிம்மி — இதுதான் அச்சிறுவனின் பெயர்—அவ்விடத்தை விட்டு நகரவில்லை.

''அவர்கள்—வனபோஜனத்திற்குப் போகிறார்கள்'' என்று அவன் மெல்ல மெல்ல மென்று விழுங்கினான்.

''என்ன?'' என்று அதட்டலுடன் கேட்டாள் சமையற்காரி.

''அவர்கள் வனபோஜனத்திற்குப் போகிறார்கள்'' என்று பையன் இழுத்தாற் போல் சொன்னான்.

''யார் போகிறார்கள்?'' என்று அவள் மறுபடியும் அதிகாரத்துடனேயே கேட்டாள். அவள் குரல் உரத்து ஒலித்தது. வன



போஜனத்திற்கு ஏற்பாடு செய்தவர்கள் தகுதியான ஆட்களாக அவள் கருதாவிட்டால் உடனே வனபோஜனத்தையே தடை செய்து விடுவாள் போன்றிருந்தது, அவள் கேட்ட மாதிரி.

ஜிம்மிக்கு முன்னைவிடச் சற்று அதிக நம்பிக்கை பிறந்தது. மேற்கொண்டு பேச அவகாசம் அளிக்கப்பட்டதல்லவா? அவளை மறுபடியும் உற்றுப் பார்த்தான். இருபது நிமிஷங்களுக்கு மேலாக இப்படியும், அப்படியுமாகச் சமையற்கட்டிலேயே சுற்றி வளைத்துக் கொண்டிருந்த பின் இறுதியில் ஒரு மாதிரியாக அவனால் விஷயத்தைச் சொல்ல முடிந்தது. அதுதான் அவன் நம்பிக்கைக்குக் காரணம். எனவே அவள் வினாவிற்கு, '' ஆமாம் எல்லோரும் போகிறார்கள்; ஏராளமாகப் பையன்களும். ஆமாம் எல்லோரும்...'' என்று ஆவலுடனேயே பதிலளித்தான்.

''எல்லோரும் என்றால் யார்?'' என்று சமையற்காரி மேலும் கேட்டாள் திருப்தியடைந்தவளாக.

அவன் வழக்கம் போலத் தனது பாணியிலேயே பதில் சொல்லத் தொடங்கினான். அவன் பேசியதை யாராலும் சீக்கிரம் புரிந்து கொள்ள இயலாது. அவன் பேசவா செய்தான்? இல்லை. மூக்கினால் பாடினான். முக்கியமானவர்களையெல்லாம் கணக்கிடத் தொடங்கினான். '' வில்லி டேல்செல்;......ம்......டான்......ஏல்; ...ம்......எல்லா ஏல்...ம்... வோல்காட் மார்கேட்;...ம்...ரீவ்ஸ் மார்கேட்;...ம்...வாய்டர் பெப்ஸ்;...அப்புறம்...மின்னி பெப்ஸ்; ...ம்...வந்து, நிறையப் பெண்கள்...ம்...எல்லோரும்; அவர்களுடைய தாய்மார்கள், சகோதரிகள்...எல்லோரும்தான்.'' இவ்வாறு சொல்லிவிட்டு அதைத் தொடர்ந்து ஒரு ''புதிய செய்தியை'' முதற் தடவையாக அறிவிப்பது போல் ''அவர்கள் வனபோஜனத்திற்குப் போகிறார்கள்'' என்றுத் திரும்பவும் சொன்னான். சமையற்காரி இதற்கெல்லாம் அசைந்து கொடுத்ததாகத் தெரியவில்லை. சாவதானமாக, '' நல்லது அவர்கள் போகட்டும்'' என்று மட்டுமே அவள் சொன்னாள்.

ஜிம்மி கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தான். கடைசியில் '' உம்...வந்து, நான்...என்னையும் நீ அனுப்புவாய் என்று நினைத்தேன்!'' என்று தனக்குள்ளாகவே முணு முணுத்தான். எனினும் சமையற்காரிக்குத் தெளிவாகவே கேட்டது.

அவன் இன்னும் சமையலறையில் இருக்கிறான் என்பதை உணர்ந்த அவளுக்கு வியப்பும், ஆத்திரமும் பொங்கியது. வேலையை விட்டுவிட்டு அவன் பக்கம் திரும்பி '' நீ போவதை யார் தடுக்கிறார்கள்?'' என்றாள் கடுமையாக.

''ஒருவரும் தடுக்கவில்லை'' என்று அவன் ஆமோதித்தான். அவன் மெல்லிய குரலில் பேசினான்.

''ஒருவரும் உன்னைத் தடுக்கவில்லை. அப்படியானால் நீ ஏன் போகக் கூடாது?'' என்று அவள் மறுபடியும் இரைந்தாள்.

ஜிம்மி தொடர்ந்தான். '' வந்து...நான் ...இப்போ...ஒவ்...

ஒவ்வொருவனும் சாப்பிட ஏதாவது தன்னுடன் எடுத்துச் செல்கின்றான்.''

''ஓகோ!'' என்று அவள் வெற்றிச் கூச்சலிட்டாள். அவளுக்கு இப்போதுதான் விஷயம் விளங்கியது. ''கடைசியில் இதுதானா விஷயம்? இங்கு வளைய வந்ததெல்லாம் இதற்குத்தானா? போதும். அதிகமாகப் பேசாமல் நீ இங்கிருந்து போய்விடு. அம்மாவும் வெளியே போயிருக்கிறாள். உன் அப்பாவும் விரைவில் சாப்பிட வந்து விடுவார். எனக்கு ஒரே கவலையாக இருக்கிறது. உன்னிடம் பேசிக்கொண்டிருக்க நேரமில்லை'' என்று கூறிவிட்டுத் தன் வேலையிலீடுபட்டாள்.

ஜிம்மி ஒன்றும் பேசவில்லை. என்ன செய்வதென்றே தோன்றவில்லை. துக்கம் நிறைந்த முகத்துடன் கதவை நோக்கிச் சென்றான்.

அவள் இதையெல்லாம் கவனிக்காதவள் போல், ''இந்த வீட்டிலிருக்கும் சிலர் இந்தச் சமையலறையில் ஆயிரம் சமையற்காரர் இருப்பதாக எண்ணிக்கொள்ளுகிறார்கள். நான் முன்பிருந்த வீட்டிலெல்லாம் இப்படியில்லை. அவர்களிடம் கொஞ்சம் நியாய உணர்வு இருந்தது. ஓய்வின்றி உழைப்பதற்கு நான் ஒன்றும் குதிரையில்லை,'' என்று சொல்லிக் கொண்டே போனாள்.

ஜிம்மி ஒன்றும் கூறவில்லை. ஆனால் அவன் அங்கேயே சுற்றிக் கொண்டிருந்தான்.

''எனக்கு இங்கு ஏகப்பட்ட வேலையிருக்கிறது. நீ வேறு என்னைச் சுற்றி வந்து வனபோஜனத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறாய். இதைக் கேட்பதா என் வேலை? நான் செய்ய வேண்டிய காரியத்தைப் பற்றி யாரும் கவலைகொள்ளுவதில்லை. அதைப்பற்றி யாரும் எண்ணியும் பார்ப்பதில்லை. ஆனால் என்னிடம் வனபோஜனத்தைப்பற்றி மட்டும் பேச வந்து விடுகின்றனர். யார் வன போஜனத்துக்குப் போனால் எனக்கென்ன?'' என்று சமையற்காரி அலுத்துக் கொண்டாள்.

ஜிம்மி மறுபடியும் அங்கேயே தயங்கி நின்றான்.

''நான் முன்பு வேலை செய்துகொண்டிருந்த இடத்திலெல்லாம் கொஞ்சம் நியாயம் இருந்தது. உன் அம்மாவும் வெளியே போயிருக்கும்பொழுது, உன் அப்பாவும் விரைவில் சாப்பிட வரவிருக்கையில் வனபோஜனத்திற்குப் போவதைப் பற்றிப் பேசுவதை நான் வேறெங்கும் கேட்டதில்லை. அதெல்லாம் முட்டாள்தனம்,'' என்று அவள் மேலும் அடுக்கினாள்.

ஜிம்மி சுவரோரமாகத் தலையை ஒருபுறம் சாய்த்து வைத்துக் கொண்டு அழத்தொடங்கினான். இகழ்ச்சியும், வெறுப்பும் தோன்ற அவனைப் பார்த்தாள். ''அழவா செய்கிறாய். எதற்காக அழுகிறாய்?''

''எதற்குமில்லை'' ஜிம்மி தேம்பினான்.

அங்கு அமைதி நிலவியது. அமைதியின்மையால் கொந்தளிக்கும் உள்ளத்துடன் ஜிம்மி விட்ட பெருமூச்சுதான் அந்த அமைதியைக் கலைத்தது. கடைசியில் அவள் தான் பேசினாள். ''உன் அழுகையை நிறுத்து. போதும்.........போதும் அதற்குச் சமையலறையில் இடமில்லை. நல்லது. நீ அழுகையை நிறுத்தாவிட்டால் வனபோஜனத்திற்குப் போவதற்கு நான் ஒன்றும் தர மாட்டேன். தெரிந்து கொள்,'' என்றாள் அவள்.



உடனே அழுகையை நிறுத்தத்தான் எண்ணினான் ஜிம்மி. ஆனால் கண்ணீரை நிறுத்த முடியவில்லை. அவன் மறுபடியும் விசும்பினான். ''ஏதாவது தருவேன் என்று நீ முதலிலேயே ஒன்றும் கூறவில்லையே'' என்று தட்டுத் தடுமாறிச் சொன்னான்.

''நான் ஏன் சொல்ல வேண்டும்?'' என்று அவள் பதிலுக்கு இரைந்தாள். ''ஆடுபோலக் கத்திக்கொண்டும், அழுது கொண்டும், தேம்பிக்கொண்டும் சமையலறையைச் சுற்றி வரும் உனக்கு ஏதாவது தின்பண்டங்கள் கொடுத்து வனபோஜனத்திற்கு அனுப்புகிறேன் என்று முன்னாடியே நான் அறிவிக்க வேண்டுமோ? ஒரு ஸ்திரீயை வெறிபிடித்தவளாக்க அதுவே போதும். இந்த நிலையில் நான் ஏதாவது உனக்கு உண்பதற்குச் செய்துதர வேண்டுமென நீ எப்படித்தான் எதிர்பார்க்கிறாயோ? எனக்குப் புரியவில்லை. உன்னுடைய எண்ணமே எண்ணம்!'' என்று அவள் பொரிந்தாள்.

இதற்குள் ஜிம்மி சமாளித்துக் கொண்டான். ''நான் அழுவதை நிறுத்தி விட்டேன். இனிமேல் அழவே மாட்டேன்; எனக்கு மட்டும் ஏதாவது தின்பண்டம் செய்து கொடு.''

''நல்லது, நீ அழாமலிரு. எனக்கு ஒரே குழப்பமாயிருக்கிறது,'' என்று அவள் கோபத்துடன் தாழ்ந்த குரலில் முணுமுணுத்தாள். அந்தச் சமயம் அவள் பகலுணவுக்காக சில சாலமன் மீன் வற்றல்களைத் தயார் செய்து கொண்டிருந்தாள். அவளருகே உள்ள மேஜையில் இன்னும் அரை டப்பா பாதி வெந்த மீன் இருந்தது. முணுமுணுத்தபடியே ஒரு ரொட்டித் துண்டையெடுத்து கத்தியால் வெட்டி நான்கு சிறு துண்டுகளாக ஆக்கினாள். ஒவ்வொன்றும் ஆறு ஷில்லிங் நாவலைப்போல பெரியதாக இருந்தது. அவற்றின் மீது வெண்ணெயைக் கனமாகத் தடவி, வெண்ணெய் படிந்திருந்த அந்தக் கத்தியை சாலமன் மீன் இருந்த டப்பாவில் சொருகி சில மீன் துண்டுகளை எடுத்தாள். பின்னர் அவற்றை ரொட்டியின் மேல் வைத்து தட்டையாகப் பரப்பினாள்.

பின்பு அந்த ரொட்டித் துண்டுகளை இரண்டிரண்டாக மடித்து ஒன்றன் மீது மற்றொன்றை ஜாலரானவை அறைவது போன்று அறைந்தாள். இரண்டு இறைச்சி ''ஸான்டுவிச்'' துண்டுகள் தயார் செய்து விட்டோம் எனும் திருப்தி அவள் மனத்தில் எழுந்தது என்பதில் ஐயமில்லை.

''இங்கே பார், உன்னுடைய தேவைக்கு இது போதும்.''

ஆமாம் இவற்றை எதில் வைத்துத் தருவது? (இப்படியும், அப்படியும் பார்த்தாள்) ''ஆ...அதோ கிடைத்து விட்டது''...

என்று கூறிய வண்ணம் அந்த ஸாண்டுவிச்சுகளை ஒரு தகரக் குவளையில் வைத்து மூடிவிட்டு அதை ஜிம்மியிடம் நீட்டினாள்.

வனபோஜனத்திற்குப் புறப்பட இப்பொழுது ஜிம்மி தயார்! "ஓ ரொம்ப நன்றி, மேரி" என்று சந்தோஷம் பொங்கச் சொல்லிக் கொண்டே அங்கிருந்து ஒரு கணத்தில் வெளியேறினான். பிக்னிக் ஸ்தலத்தை நோக்கி ஓடினான்.

சமையற்காரியைத் துரிதப்படுத்திப் பணியவைக்க அவனால் முடியவில்லையாகையால் மற்றவர்களெல்லோரும் வனபோஜனத்திற்கு அரைமணி நேரம் முன்னதாகவே புறப்பட்டுவிட்டிருந்தனர். ஆனால் ஏரிக்கரையிலுள்ள சிறு குன்றின் மேல் உயரமாயும், தூண்கள் போன்று பருத்தும் இருந்த ஹெம்லாக், பைன் மரங்கள் நிறைந்த தோப்பில்தான் அவர்கள் கூடுவர் என்பது அவனுக்குத் தெரியும். தகர்க் குவளையைச் சுழற்றிக் கொண்டே அந்த இடத்தை நோக்கி விரைந்து ஓடும்பொழுது அவன் உள்ளம் மகிழ்ச்சியால் நிறைந்திருந்தது. சில நிமிஷங்களுக்கு முன்பு அவன் மனம் எப்படி சோர்ந்திருந்தது! ஆனால் இப்பொழுது மகிழ்ச்சியுடன் காணப்பட்டான். அவனால் இப்போது வனபோஜனத்தில் கலந்து கொள்ள முடியுமல்லவா? இந்தக் குவளையில்தான் அவன் பண்டங்கள் வைத்திருக்கிறானே! அவைதானே வன போஜனத்தில் கலந்துகொள்ள உதவும் அநுமதிச்சீட்டு! ஆமாம், அவன் வனபோஜனத்திற்குத்தான் போய்க் கொண்டிருக்கிறான்.

அவன் தோப்பின் வெளிப்புறத்தை அடைந்தபொழுது மகிழ்ச்சி நிறைந்த ஆரவாரம் தூரத்திலிருந்து கேட்டது. குன்றின் உச்சியை அடைந்து அங்கிருந்து சரிவைப் பார்த்தபொழுது அவன் கண்ட காட்சியால் அவன் இளம் உள்ளம் பூரித்து வெடித்துவிடும் போலிருந்தது. அவர்கள் எல்லோரும் திறந்த வெளியில் முகாம் இட்டிருந்தனர். இருவிடங்களில் நெருப்பு தெரிந்தது. இரண்டு எரியடுப்புகள்! ஒன்றில் மிஸஸ். ஏல் ஏதோ செய்துகொண்டிருந்தாள். அவைகள் சாக்லெட்டுகளாகத்தானிருக்கவேண்டும், சந்தேகமில்லை, மற்றொன்றில் மாலுமியணியும் தொப்பியும், வெள்ளை மேலங்கியும் அணிந்த ஒரு இளம் பெண் கொதிக்கும் நீரில் முட்டைகளைப் போட்டுக்கொண்டிருந்தாள். பெரியவர்களெல்லாம் ஒரு வெள்ளைத் துணியை விரித்து கூடைகளிலிருந்து பொருள்களையெடுத்துப் பரப்பிக் கொண்டிருந்தனர். மரங்களின் குளிர்ந்த நிழலில் குழந்தைகளெல்லாம் சிரிப்பும், கும்மாளமுமாகவிருந்தனர். ஜிம்மி தன் சகாக்களுடன் சேர்ந்துகொள்ள விரைந்தான்.

அவன் வருவதை முதலில் ஹோமர் பெப்ஸ் தான் கவனித்தான். "ஓ, இதோ ஜிம்மி டிரெஸ்காட் வருகிறான். ஓடிவா, ஜிம்மி! நீ எங்கள் கோஷ்டியில் சேர்ந்துகொள்," என்று அவன் தூரத்திலிருந்தே உரக்கக் கத்தினான்.

விளையாட்டு முதலிய காரியங்களுக்காகச் சிறுவர்கள் இரு



அணிகளாகப் பிரிந்து இருந்தனர். ஹோமர் பெப்ஸின் கோஷ்டியைச் சேர்ந்த மற்றவர்களும், "ஆமாம், ஜிம்மி, நீ எங்கள் அணியில் இருப்பாய்," என்று அவன் முடிவை ஆமோதித்தனர்.

உடனே சிறுவர்களுக்குள் ஏற்படும் வழக்கமான தகராறு எழுந்து விட்டது. "எங்கள் கோஷ்டி பலவீனமானது. ஆகையால் ஜிம்மி எங்கள் பக்கம் இருக்கட்டும்," என்று எதிர் கோஷ்டியின் ஆட்சேபம் தொடங்கியது. "எங்கள் கோஷ்டியைவிட உங்கள் கோஷ்டி ஒன்றும் பலவீனமில்லை," என்று முதல் கோஷ்டியைச் சேர்ந்த ஒருவன் சமாதானம் கூறினான்.

ஹோமர் பெப்ஸின் பார்வை, ஜிம்மியின் கையில் வைத்திருந்த குவளைமீது சென்றது. "வாளியில் என்ன வைத்திருக்கிறாய், ஜிம்?" என்று கேட்டான். ஜிம்மி மிகவும் சஞ்சலத்துடன், "என் சிற்றுண்டி அதில் இருக்கிறது," என்று பதிலளித்தான்.

இதைக் கேட்ட உடனே அங்கேயெழுந்த மின்னி பெப்ஸ் என்னும் பெண்ணின் ஏளனம் கலந்த 'கிரீச்' எனும் சப்தம் வானைப் பிளந்தது. "அதில் அவன் உணவு வைத்திருக்கிறான்! ஒரு தகரக் குவளையில்!" என்று அவள் கேலிக் கூக்குரலுடனேயே தன் அம்மாவிடம் ஓடினாள். "அம்மா, அம்மா! இந்த விசித்திரத்தைக் கேட்டாயா! ஜிம்மி டிரெஸ்காட் தன் சிற்றுண்டியை ஒரு தகரக் குவளையில் கொண்டு வந்திருக்கிறானாம்!"

அவள் இம்மாதிரி சொன்னாளே தவிர, குறிப்பாகப் பையன்களை அக்கறைகொள்ளச் செய்யுமளவிற்கு இதில் குறைவு ஒன்றுமேயில்லை. அதைப் பற்றி அவர்கள் கவனம் செலுத்தவேயில்லை. தகரக் குவளை என்ன; ஒரு நிலக்கரித் தொட்டியில் பகலுணவு கொண்டுவந்தாலும் கூட அதைப் பற்றி அவர்களுக்குக் கவலை ஒன்றுமில்லை. ஆனால் குழந்தைகள் சமூகத்திற்குரிய சம்பிரதாயத்தை ஒட்டி அவர்கள் அனைவரும் சட்டென்று அவனை விட்டு விலகிச் சென்றனர்.

ஒரு விநாடியில் அவர்களெல்லோரும் சேர்ந்து அவனை ஒரு "தீண்டத்தகாத"வனாக, ஆக்கி விட்டனர். சொல்லப்போனால் பழைய நாள் நட்புறவெல்லாம் அந்த ஏரியில் தூக்கியெறியப்பட்டன போல் தோன்றியது. அவர்களுக்குள் சமாதானம் ஏற்படுவதென்பது இனியில்லை. கொஞ்சம் தொலைவில் இருந்து கொண்டு அவர்கள் அலட்சியமும், வெறுப்பும் கலந்த குரலில் கூச்சலிட்டனர். "ஊ...... வனபோஜனத்தைத் தகரக் குவளையில் வைத்திருக்கிறான் டோய்!" என்ற ஏளனம் பையன்களிடையே பரவியது. வனபோஜனத்தின்போது அவர்கள் ஒரு தடவை கூட அவனை ஜிம்மி டிரெஸ்காட் என்று பெயரிட்டே குறிப்பிடவில்லை. பெயர் உச்சரிக்கக் கூடாத "அவன்" என்றே ஜிம்மி இப்போது ஆகிவிட்டான்.

அவன் உள்ளம் இறுகிப்போயிற்று. வேதனையால் அவன் துடித்தான். கல்லும் மண்ணும் கலந்த கப்பியை நாய் உதைத்துப்

புரட்டுவதைப் போன்று அவர்களுடைய செய்கையை எதிர்க்கும் வகையில் தனக்குள்ளாகவே முணுமுணுத்த வண்ணமிருந்தான். "நான் தகரக் குவளையில் கொண்டுவர நினைத்தால் அதன்படி செய்வேன். இதில் இழிவென்ன?" என்று சொல்ல அவன் வாய் துடித்தது. ஆனல் இந்தச் சூழ்நிலையில் இதைப் போன்ற சுதந்திர உணர்ச்சி மிக்க அறிவிப்பா இங்கு முக்கியம்? இதை யார் கவனிக்கப் போகிருர்கள்? இதனல் ஒரு பயனுமில்லை. இது அவனுக்குத் தெரியும். இருந்தாலும் இந்த எண்ணந்தான் அப்போதைக்கு அவன் மனத்திலிருந்தது.

முன்பு ஒரு தடவை தேவலோகத்துக் குழந்தையோ என்று ஐயுறும் வண்ணம் காணப்பட்ட கோரா எனும் சிறுமிக்கு அவன் சிறுபிள்ளைத்தனமாக ஏதோ ஒரு கடிதம் எழுதியது கண்டுபிடிக்கப்பட்டு அவன் தொல்லைக்கு ஆளானன். அப்போது தன் கௌரவத்தை எப்படிக் காப்பாற்றிக் கொள்ளுவது என அவனுக்குத் தெரிந்திருந்தது. அவ்வாறே காப்பாற்றியும் கொண்டான். ஆனல் இப்பொழுதுள்ள நிலை அதுபோன்றதல்லவே! வயது வந்த மனிதர்கள் நடுவில் இவன் அகப்பட்டுக் கொண்டிருந்த அந்த நிலையில் இது ஒரு சமூகப் பழக்கத்தைப் பொறுத்த விஷயமாக அல்லவோ ஆகிவிட்டது! மார்கேட் சிறுவர்களிருவரையும் பிடித்துச் செம்மையாக உதைத்து அவனுடைய தகரக் குவளைக்குத் தலைவணங்குமாறு செய்துவிட அவன் உள்ளம் துடித்தது. அப்படிச் செய்வது இனிமை பயக்கலாம். ஆனல் அது குழந்தைகளின் கூட்டுறவாயிற்றே! அதில் பெரியவர்கள் தலையிட முடியாது. அவன் அவர்களை முறைத்துப் பார்க்க மட்டுமே முடிந்தது.

திருமதி ஏலின் இனிய குரல் அவனுக்குக் கேட்டது. "குழந்தைகளே எல்லாம் தயாராய் விட்டது. எல்லோரும் வாருங்கள்." ஜிம்மி தகரக் குவளையுடன் எட்டி நிற்பதைப் பார்த்த சிறுவர்களும், சிறுமியரும் அலட்சியத்துடனும், குறும்புத்தனத்துடனும் அவனை நோக்கினர். அவனைவிட தாங்கள் எவ்வளவு உயர்ந்தவர்களென்று தமக்குள் பெருமை கொண்டனர்.

அவனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. பெரியவர்கள் என்னமோ தன்னையும் அவர்களுடனமர்ந்து உணவு கொள்ளவே விரும்புவர் என்பது அவனுக்குத் தெரியும். ஆனல் தானாக அவர்களிடம் போனல் தனக்கு அவமானம் உண்டாக்கும்படியான "வரவேற்பு" தானே குழந்தைகளிடமிருந்து கிடைக்கும். அதிலும் முக்கியமாகச் சனியன் பிடித்த அந்தச் சிறு பெண்களிடமிருந்து வருமே! என் செய்வது? அங்கே விரிப்பின் மேல் கனவிலும் காண முடியாத உயர்ந்த ரக உணவுப் பொருள்கள் விதவிதமான வகையில் தயாரிக்கப்பட்டு குவிந்திருந்தன. மனத்தை விட்டே அகலாத காட்சி அது.

ஒரு வேலை குற்றம் செய்தவனைப் போல தண்டனிட்டு மிகவும்



பணிவாகவும், இனிமையாகவும் அந்தப் பெண்கள்பால் நடந்து கொண்டால் தன்னோடு அவர்கள் சமாதானமாகப் போகலாம். ஆயினும் இத்தகைய பெரிய வன•போஜனத்திற்கு ஒரு தகரக் குவளையுடன் வருவது விரும்பத் தகாததுதான். அதை அவனுடைய சிறு உள்ளம் உணர்ந்திருந்தது. ஆயினும் மற்றப் பையன்களாகட்டும், பெரியவர்களாகட்டும் அதைப் பொருட்படுத்தியிருக்க வேண்டாம். அவனை மன்னித்திருக்கலாம்.

ஆம், மன்னித்திருக்கலாம். ஆனல் மன்னிக்க மாட்டார்கள். அவர்களை அவன் நன்கு அறிவான். எத்தகைய இனிய நினைவுகளுடன் அந்தத் தோப்புக்கு அவன் ஓடி வந்தான் என்ற எண்ணம் திடீரென அவன் மனத்தில் எழவே, சொல்ல முடியாத வேதனை அவனை ஆட்கொண்டது. தான் உடனே செத்துப்போய்விட்டால் என்ன? அதன் மூலம் அவர்களனைவரையும் வருத்தமுறச்செய்ய முடியாதா என்றெல்லாம் அவன் பிஞ்சு உள்ளம் எண்ணியது.

மாலுமியணியும் தொப்பியும், வெள்ளுடையும் அணிந்திருந்த அந்த இள மங்கை அவனைப் பார்த்துவிட்டு அவள் சகோதரி திருமதி ஏலை நோக்கி, "தூரத்தில் சுற்றிக்கொண்டிருப்பது யார் எமிலி?" என்று வினவினள். திருமதி ஏல் மிகவும் பெருந்தகைமையுடன் "அதுவா, அது ஜிம்மி டிரெஸ்காட்," என்று பதிலளித்துவிட்டு அவனை நோக்கி, "ஜிம்மி, சாப்பிட வா, ஏன் ஜிம்மி, நீ வனபோஜனத்தில் கலந்து கொள்ளவில்லையா?" என்று பரிவுடன் வினவினள்.

அவன் பயந்தவன் போலத் துணிகள் விரித்திருந்த பக்கமாக ஒதுங்கினன். ஆனல் திருமதி ஏலின் அழைப்பு குழந்தைகள் பலரிடமிருந்து மறுபடியும் ஒரு இரைச்சலைத்தான் உண்டாக்கியது. "அவன் வனபோஜனம் அவனுடைய தகர டப்பாவில் இருக்கிறது; ஒரு தகர டப்பாவில் வைத்திருக்கிருன்" என்று அவர்கள் ஒரே குரலில் இரைந்தார்கள்.

பின்னி பெப்ஸ் என்ற சிறுமியைக் கிரீச்சிடும் ஒரு குட்டிப் பிசாசுக்குச் சமமாகச் சொல்லலாம்.

"அம்மா, அவன் அவனுடைய வனபோஜனத்தை ஒரு தகரக் குவளையில் கொண்டு வந்திருப்பது வேடிக்கையாயில்லை? ரொம்ப வேடிக்கையாயில்லை?" என்று தன் தாயிடம் கத்திற்று. தாய் எமிலியின் பக்கம் திரும்பி, "என்ன கொடூரமிக்க குழந்தைகளடி இவர்கள், எமிலி, இந்தச் சிறுமிகள் அவன் உள்ளத்தை நோகச் செய்து விட்டார்கள். இன்றைய பொழுதையே அவனுக்கு நரகமாக்கி விட்டார்களே. பாவம், அவனுக்கு நான் ஆறுதல் கூறுகிறேன்," என்று சொன்னள்.

திருமதி ஏல் நம்பிக்கையின்றி, "நீ போகாதிருப்பது நல்லது. இதெல்லாம் சிறுவர்கள் விஷயம். அவர்களே தங்களுக்குள் சரி செய்து கொள்ளுவர். நீ தலையிட்டால் எல்லாம் விபரீதமாகிவிடும்," என்று எச்சரித்தாள்.

"இருந்தாலும் நான் முயற்சி செய்வேன்" என்று அவள் தீர்மானித்துக் கொண்டாள்.

இரண்டாவது தடவையாக ஏளனக் குரல் எழுந்த பொழுது, ஜிம்மி ஒரு மரத்தின் பக்கம் சென்று ஒதுங்கி, பாதி மறைந்தும், பாதி மறையாததுமாக அப்பாற் சென்று நின்று கொண்டான். எதிரில் ஏரி பரந்து கிடந்தது. அதை உற்று நோக்கிய வண்ணமிருந்தான். நிழலின் ஊடே தெரிந்த நீரின் ஒரு பகுதி சிலேட் நிறமுடைய ஒரு சுவர் எழும்பி நிற்பது போலக் காட்சி யளித்தது. அதையே கவனித்துக் கொண்டிருந்தவன் தன் பக்கம் உண்டான சலசலப்பு சப்தத்தை உணர்ந்து திரும்பியபோது, அந்த இளம் பெண் தன்னை நோக்கி வருவதைக் கண்டான். அவளுடைய கையில் உணவுத்தட்டுகள் இருந்தன. அவனை அணுகி மகிழ்வுடன், "நான் உன் பக்கத்தில் உட்காரலாமல்லவா?" என்று அவள் கேட்டாள்.

ஜிம்மிக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. அவளையும், அந்தத் தட்டையும் ஒரு முறை பார்த்துவிட்டு "அங்கு மிகவும் நெரிசலாயிருக்கிறது. நான் வன போஜனத்தில் நெரிசலை விரும்ப மாட்டேன். எனவே இங்கு வர நினைத்தேன். அதனால் உனக் கொன்றும் தொந்தரவில்லை என்று நினைக்கிறேன்," என்றாள் அந்த இளமங்கை.

ஜிம்மி பேசத் துடித்தான். "அதனால் எனக்குத் தொந்தரவு ஒன்றுமில்லை. நீ என் பக்கத்திலிருப்பதையே நான் விரும்புவேன்," என்று பதிலளித்தான். அறிவு பூர்வமான அந்த வார்த்தைகளில் தோன்றிய அழுத்தம், அவனுக்குத் தெம்பையளித்தது. சமூக விதிகளைப் புறக்கணித்து விட்ட அந்தக் கூட்டத்தை விட்டு விலகி, அவள் ஒருவளாவது தன் அருகில் இருப்பதை அவன் மனமார விரும்பினான். ஆனாலும் அவள் முறுவலிக்கவில்லை. "ஏரி எவ்வளவு பெரியது?" என்று ஏதோ பேச்சை ஆரம்பித்தாள் அவள்.

ஜிம்மி ஒரே நொடியில் அவளிடம் வெகுவாக ஈடுபட்டுப் போனான். உடனே அந்த ஏரிக்குத் தானே சொந்தக்காரன் போல, எல்லாம் தெரிந்ததுபோலத் தன் கற்பனைக் கெட்டியபடி அளக்கத் தொடங்கினான். "ஓ, அது இருபது மைல் நீளமுள்ளது...... அங்கோரிடத்தில் அது நான்கு மைல் அகலமிருக்கும்...... அது மிகவும் ஆழமுடையது. ஆமாம்; பயங்கர ஆழம்...... அதில் உண்மையான பல நீராவிப் படகுகள் இருக்கின்றன. அது மட்டுமா, இன்னும் இதர படகுகள்கூட நிரம்ப இருக்கின்றன. இன்னும்......"

"நீ அதற்குள் போயிருக்கிறாயா?"

"ஓ, எத்தனையோ தடவைகள். எங்கப்பாவே ஒரு சொந்தப் படகு வைத்திருக்கிறார்," என்று சொல்லியபடியே தன் சொற்கள் அவள்பால் எத்தகைய மாறுதல்களை உண்டாக்கின என்பதை கவனிக்கலானான்.



"ஆமாம், அது ஒரு பெரிய படகாக்கும். அதன் துடுப்புகளெல்லாம் கூட உண்மையான துடுப்புகளே...... சில வேளைகளில் அவர் என்னையும் படகில் அழைத்துச் செல்வதுண்டு. அப்படித்தான் ஒரு நாள் நாங்கள் போனோம். நான் மீன் பிடிக்கத் தூண்டில் போட்டுக் கொண்டிருந்தேன். நாங்கள் நிறைய இறைச்சி ரொட்டிகள் வைத்திருந்தோம்...... ஆமாம், எங்கப்பா பாட்டிலிலிருந்த பூரா பீரையும் குடித்து விட்டார். பாட்டில் முழுவதையும் காலி செய்து விட்டார்," என்று அவன் மேலும் பேசிக் கொண்டே போனான்.

அந்த இளம் பெண் வியப்பை யூட்டவல்ல அவனுடைய அறிவால் பெரிதும் அவன்பால் கவரப்பட்டாள். தன்னுடைய பேச்சில் அவளுக்குள்ள ஆர்வத்தைக் கண்டதும் ஜிம்மி கதையைத் தொடர்ந்தான்.

"அப்புறம் அவர் அந்தப் பாட்டில்களை நீரில் எறியும்படி கூறினார். நானும் அப்படியே எறிந்து விட்டேன். ஆமாம் வெளியே......அவையெல்லாம் நீரில் மூழ்கி விட்டன. திரும்பி மேலே வரவேயில்லை." என்று அவன் விறுவிறுப்புடனும், பாவனைகளுடனும் கதையை முடித்தான்.

அவன் முகம் இப்பொழுது மகிழ்ச்சியால் மலர்ந்திருந்தது. தகரக் குவளையைப் பற்றியெல்லாம் அவன் இப்பொழுது மறந்து விட்டான். அவன் கூறுவதையெல்லாம் ஆர்வத்துடன் கேட்கத் தயாராயிருந்த, அவன்பால் பேரன்பு காட்டிய அந்த இளநங்கையின் கூட்டுறவில் தன்னையே மறந்தான். அவளிடம் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டுவிட்டான்.

ஒரு தட்டைச் சுட்டிக் காட்டி அவள் கூறினாள்: "அந்த இறைச்சி ரொட்டி உனக்குப் பிடிக்குமென்று நினைக்கிறேன். நானே அவற்றைச் செய்தேன். ஆலிவ்களை உனக்குப் பிடிக்குமா? இன்னும் அதில் ஒரு சமைத்த முட்டை உள்ளது. அதையும் நானே செய்தேன்."

"உண்மையாகவா? நீதான் செய்தாயா?" ஜிம்மி மிகவும் அடக்கமாக வினவினான். அவன் முகத்தில் ஒரு கணம் துயரநிழல் படர்ந்தது. ஏனெனில் அவன் தன் தகரக் குவளையை நினைத்துக் கொண்டான். உடனே அவள் நீட்டிய தட்டிலிருந்த இறைச்சி ரொட்டியை எடுத்துக் கொண்டான்.

"நான் அவித்த முட்டையின் மேல் உனக்குக் கோபமில்லையே?" அவள் கனிவுடன் கேட்டாள். இப்போது அவள் ஜிம்மிக்கு ஒரு தேவதையென விளங்கினாள். தொடர்ந்து, "அதைப்பற்றி நான் ரொம்பப் பிரமாதமாக எண்ணிக் கொண்டிருக்கிறேன்" என்றாள் அவள். இல்லை, அவனுக்குக் கோபம் இல்லை. அந்த முட்டைமேல் மட்டுமல்ல—தட்டில் இருந்த எதன் மேலும் அவனுக்குக் கோபம் இல்லை.

அவர்களுடைய உறவு மிக உயர்ந்தது, கண்ணியமிக்கது. அதை

அவனால் சொல்லில் வெளியிட முடியாது. தனக்கு ஒரு சிநேகிதி—அதிலும் அழகிய இளம் பெண்—இன்னும் வன போஜனத்திற்கு வந்திருந்தவர்களெல்லோரையும் விட்டுத் தனியாக அவனிருக்குமிடத்திற்கு வந்து தன்னை நேசித்தவள்—தனக்கே கிடைத்து விட்டாள் என்று நினைத்தான். கூத்தும் கும்மாளமும் நிறைந்த அந்த கூட்டத்தை விட்டு, அவன் பொருட்டு—எல்லோராலும் விரட்டியடிக்கப்பட்ட அவன் பொருட்டு—அவள் வந்ததே இதை நிரூபிக்கவில்லையா? அப்பெண்ணின் சாகஸங்களுக்கு அவன் மிக விரைவில் அடிமையாகி விட்டான்.

திடீரென்று "நீ எங்கு வசிக்கிறாய்?" என்று அவளைக் கேட்டான். "இங்கிருந்து நெடுந்தூரத்தில் நியூ யார்க்கில்," என்று அவள் பதிலளித்தாள்.

அவனுடைய அடுத்த வினா மிகவும் யோசனையின்றி வெளிப்பட்டது. "உனக்குத் திருமணம் ஆகிவிட்டதா?" என்று தைரியமாகவே கேட்டுவிட்டான்.

"ஓ—இன்னும் ஆகவில்லை." அவள் பதில் சொன்ன பொழுது கொஞ்சம் யோசித்துப் பேசுவது போலத்தோன்றியது.

ஜிம்மி கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தான். அதற்குள் சிறிது கூச்சத்துடனும், ஆசையுடனும் அவள் முகத்தை ஏறிட்டு நோக்கினான். அவன் உணர்ச்சி வசப்பட்டிருந்தான்.

இறுதியாக முகத்தில் அசடு வழிய அவன் பேசினான். "நான் பெரியவனாக ஆகும் பொழுது......"

"ஓ, அதற்கு இன்னும் நெடு நாட்கள் இருக்கின்றனவே..." என்று அந்த அழகி இடைமறித்தாள்.

"ஆமாம், நான் பெரியவனானதும்தான், உன்னை மணம் செய்து கொள்ள ஆசைப்படுகின்றேன்," என்றான்.

"நல்லது, நீ சொல்லியதை நான் நினைவில் வைத்திருப்பேன்." ஆனால் அதைப்பற்றியெல்லாம் இப்பொழுதே பேசாதே. ஏனெனில் இடையில் நெடுங்காலம் இருக்கிறது. இப்போதிலிருந்தே' வாக்குக் கொடுத்து விட்டு, அதற்குக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டாம். அதை நான் விரும்பவில்லை." அவள் இவ்வாறு சொல்லி விட்டு அவனை நோக்கிப் புன்முறுவல் பூத்தாள்.

அவன் தன் பிரதாபத்தைத் தொடர்ந்தான். "நான் பெரியவனானதும் ஏராளமான பணம் சம்பாதிப்பேன். உம்...... பிறகு ஒரு பெரிய மாளிகை வாங்குவேன்.......உம்......அப்புறம் ஒரு குதிரை....ம்...ஒரு துப்பாக்கி...ம்...யானைகள்...புலிகள்...ம்... ஏராளமாக ஐஸ்கிரீம்...மரங்கொத்திகள்...ம்..."

முன்போலவே அவன்பால் அவள் ஈடுபட்டாள் என்பதை அவன் காண முடிந்தது. அவன் உற்சாகம் மேலிட்டது. அவன் தொடர்ந்து பேசினான். "...இன்னும் நான் நிறையக் குழந்தைகள் பெறப்போகிறேன். சுமார் முந்நூறு குழந்தைகள். அப்



படித்தான் நினைக்கிறேன். அவர்களில் ஒருவர்கூட பெண்கள் இருக்க மாட்டார்கள். அவர்கள் அனைவரும் பையன்கள். அதிலும் என்னைப்போல" என்று அவன் தோன்றியபடியெல்லாம் பேசினான்.

இதைக் கேட்டு அவள் பிரமிப்படைந்தாள். "அடே அப்பா!" என்று மட்டுமே அவளால் சொல்ல முடிந்தது. ஆச்சரியத்தினால் அவள் வாயடைத்தே போனாள்.

அவனைச் சுற்றியிருந்த அவமானம் என்னும் திரை இப்போது முற்றிலும் விலகி விட்டது. தகரக் குவளை எங்கோ மறைந்து புதைக்கப்பட்டு விட்டது. அந்தப் பெரு மகிழ்ச்சியில் பக்கலில் அமர்ந்திருந்த அழகியுடன் பல மாதங்கள் கழித்து விட்டதாக அவனுக்குத் தோன்றியது. அவன் பெருமையை அவள் உலகுக்கு உணர்த்திக் கொண்டிருந்தாள்.

அவர்கள் மகிழ்ச்சியைக் கலைக்க இறுதியில் தூரத்திலிருந்து அந்தக் குரல் கேட்டது. "வாருங்கள், நாங்கள் வீடு செல்கின்றோம்." வனபோஜனத்திற்கு வந்திருந்தவர்கள் எல்லோரும் தோப்பிலிருந்து கும்பலாகக் கிளம்பி விட்டனர். குழந்தைகள் மறுபடியும் அவனைக் கேலி செய்ய விரும்பின. இன்னும் தகரக் குவளை அவர்கள் கவனத்திலிருந்து மறையவில்லை. ஆனால், அவனுடைய தற்போதைய அந்தஸ்து அவர்களை முன்போல் கேலி செய்ய வொட்டாமல் தடுத்தது. அவன் அந்த அழகியின் பக்கத்தில் பெருமையுடன் நடந்து சென்றுகொண்டிருந்தான்.

இந்தப் பிரயாணத்தின்போது அவன் பல பழக்கங்களைத் துறந்து விட்டான். பாறைக் கற்களினூடே ஒவ்வொரு இடுக்கிலும் நின்று தட்டாமலும், குதிக்காமலும் அவன் சென்றதேயில்லை. தன்னைக் கார்களின் தொடராக எண்ணிக்கொள்வதுண்டு. குழந்தைத்தனத்தின் இயல்பான சப்தங்களையெல்லாம் எழுப்பிக் கொண்டே செல்வது வழக்கம். ஆனால் இப்பொழுது அவன் அதையெல்லாம் விட்டு விட்டுக் கண்ணியமாக நடந்து கொண்டான். ஒரு பூனை எழுப்பும் சப்தம் போன்ற சிறு சப்தம்கூடச் செய்யவில்லை. பக்கத்தில் இளம் பெண் ஒருத்தி வருகிறாள் அல்லவா? ஏல் வீட்டு வாசல் வரை அந்த அழகியுடன் சென்ற அவன், ஒரு பயத்துடனும், பெருமையுடனும் ஆசையை வெளிப்படுத்துகிற மாதிரியாகவும் அவளிடம் கைகுலுக்கி விடைபெற்றுக் கொண்டான். அவள் வீட்டிற்குள் புகும் வரையில் அவளைப் பார்த்தபடியே நின்றான். அவள் வீட்டு வாசற் கதவு சாத்தப்பட்டது.

அவள் பக்கத்தில் பெருமையுடன் நடந்து வந்த வழி முழுதும் அவன் கனவு கண்டுகொண்டே வந்தான். அதில் ஒரு கனவு சுவை மிக்கது. அந்த அழகி அவனுக்கு ஆசிரியையானால்...! ஓ... அவன் மிகவும் நல்ல பையனாகவே இருப்பான். அடித்து வைத்த சிலை போன்று நாள் முழுவதும் துஷ்டத்தனம் செய்யாது வகுப்பில் அமைதியாக உட்கார்ந்திருப்பான். ஒவ்வொரு பாடத்தையும் தவறேயில்லாது சரிவரப் படிப்பான். அப்புறம்...எவனாவது அவ

னிடம் வாலாட்டினால் வீட்டுக்குப் போகிற வழியில் அந்தப் பயலை படுத்துகிற பாட்டைக் கண்டு, பெரியவர்களே பார்க்கச் சகிக்காது கண்களை மூடிக்கொள்ள நேரிடும். ...ம்...அவள் அவனை மேலும் மேலும் நேசிப்பாள். அவளுடைய மதிப்புக்குரிய சிறு கடவுளாகவே ஆகிவிட மாட்டானா!

ஆனால் தன் வீட்டு வாசலருகில் வந்தவுடன் பயங்கரமான நினைவலைகள் படையெடுத்தன. வாளியில் ரொட்டி வெண்ணெயுடனும், சால்மன் மீன் துண்டுடனும் அவன் திரும்பி வந்து கொண்டிருந்தான். கைகளை ஆட்டிக்கொண்டு திடீரென்று எழுந்த சமையற்காரியின் பேருருவம் அவன் முன் நிற்பதாகக் கற்பனை செய்து கொண்டான். "இதற்குத் தானா நான் அத்தனை சிரமம் எடுத்துக் கொண்டேன். நீ அவற்றையெல்லாம் அப்படியே திரும்பக் கொண்டு வந்தாய். எல்லாவற்றையும் அப்படியே திரும்பக் கொண்டு வந்தாய்..." என்று அவள் இரைவது போல் ஒரு தோற்றம்.

வீட்டின் அருகே வரும்பொழுது திருடன் புதரில் மறைந்து வருவது போல வந்தான். சமையலறைக் கதவருகில் தனி வேகம் காட்டினான். விரைவில் குதிரை லாயத்தை அடைந்து ஸாண்டுவிச்சுகளையெல்லாம் கீழே கொட்டிவிட்டுக் குற்றத்தை மறைத்து விடலாம் என்று பதுங்கி வந்து கொண்டிருந்தான். அவன் லாயத்தை நெருங்கி விட்டான். சிறிது நேரத்தில் அதைக் கொட்டியிருப்பான். ஆனால் அப்பொழுது அந்த இடியோசை கேட்டது. "ஜிம்மி, அந்த வாளியுடன் எங்கே போகிறாய்?" அந்தக் குரலுக்குரியவள் சமையற்காரி. அவன் பதிலொன்றும் பேசவில்லை. குதிரை லாயத்திற்கு விரைந்து மூடியைத் திறந்து எல்லாவற்றையும் கொட்டிவிட்டு துணிக் குவியலின் ஊடே யாருக்கும் தெரியாமல் மறைந்து விட்டான். பரக்க விழித்துக் கொண்டு கதவைப் பார்த்த வண்ணமிருந்தான். அவள் அவனைத் தொடரவில்லை. இருந்தாலும் "தகரக் குவளையுடன் அங்கே என்ன செய்கிறாய்?" என்று அவள் அதட்டினாள். அவன் அதை ஆட்டிய வண்ணம் "ஒன்றுமில்லை" என்று ஸத்தியஸந்தனைப் போல் கத்தினான். அவள் என்னமோ நம்பவில்லை. 'எனக்கு நன்றாகத் தெரியும்' என்று அவள் படபடத்தாள். அவள் வழங்கிய அந்தச் சாபத்தையும் வாங்கிக் கொண்டான்.

மறு நாள் காலையில் லாயத்தின் அருகில் ஜிம்மி விளையாடிக் கொண்டிருந்தான். டாக்டர் டிரெஸ்காட்டின் குதிரையைக் கவனித்துக் கொண்டிருந்த பீடர் வாஷிங்டன் "ஜிம். ஓ...ஜிம்!" என்று இரைந்து கூப்பிடுவதைக் கேட்டான்.

"என்ன?"

"வா, இங்கே"

லாயத்தின் கதவருகே விருப்பமின்றி ஜிம்மி வந்தான். பீடர் வாஷிங்டன் "இந்தத் துணிகளின் அடியில் உன் ரொட்டியும் மீனும் என்ன செய்கின்றன?" என்று கேட்டான். "எனக்கொன்றும் தெரியாது. அதற்கும், எனக்கும் ஒரு சம்பந்தமுமில்லை" என ஒன்றுந் தெரியாதவன் போல் ஜிம்மி வெறுப்புடன் பதில் கூறினான்.



"என்னிடம் பொய் சொல்லாதே" அவன் இரைந்தான்: "என்னிடம் மறைக்காதே. மீனையும், ரொட்டியையும் துணிகளின் அடியில் கண்டதுமே இவை குதிரைகளுக்கல்ல, உன் தந்தையும் வைத்திருக்க மாட்டார் என்று எனக்குத் தெரிந்து விட்டது. எனக்குத் தெரியும் இது யார் வேலையென்று. இனிமேல் ஏதாவது தட்டோ, மீனோ, ரொட்டியோ இவ்வாறு வீணாக லாயத்தில் கொட்டப்படுவதைப் பார்த்தால் உடனே உன் தந்தையிடம் சொல்லி உனக்குப் பாடம் கற்பித்து விடுவேன் ஜாக்கிரதை!" என்று எச்சரித்தான்.

# பயங்கர மனிதன்

பாலர்கள் உபயோகிக்கும் ரெயில் வண்டியை வைத்துக் கொண்டு சிறுவன் ஜிம் வீட்டுத் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்தான். அந்த வண்டிக்குப் பெட்டிகள் கிடையாது. என்ஜின் மட்டுந்தானிருந்தது. அதனுடைய நெம்பர் 36 என்று பொறித்திருந்தது. அது ஸைரக்யூஸுக்கும், ரோசெஸ்டருக்குமிடையே அந்த சமயம் ஓடிக்கொண்டிருப்பதாக பாவனை. பதினான்கு நிமிடங்கள் தாமதமாகச் சென்றதால், வேகத்தை அதிகரிக்க விசை நன்றாக திறந்து விடப்பட்டிருந்தது. அதன் விளைவாக ஒரு வளைவில் வண்டி வேகமாகத் திரும்பியபொழுது அதன் சக்கரங்களுள் ஒன்று தடத்திற்கருகாமையிலிருந்த ஒரு புஷ்பச் செடியை நசுக்கி அழித்து விட்டது.

உடனே என்ஜின் வேகத்தைக் குறைத்துக் கொண்டது. ஜிம் குற்றவாளியைப் போல் சற்று தூரத்திலிருந்த தன் அப்பாவைப் பார்த்தான். அவர் புல் வெட்டும் இயந்திரத்தை மேலும், கீழும் ஓட்டிக் கொண்டே தன் வேலையில் ஆழ்ந்து ஈடுபட்டிருந்தார். புஷ்பச் செடிக்கு நேர்ந்த விபத்தை அவர்—அந்த ஊர் டாக்டர் அவர்—கவனிக்கவில்லை. தன்னுடைய வேலையிலேயே கவனமாயிருந்தார்.

ஜிம் என்ஜினை நிறுத்திவிட்டு, அதன் விசையையும் அதனின்றும் அப்புறப்படுத்தினான். அங்கிருந்தபடியே ஒடிந்து விழுந்திருந்த புஷ்பச் செடியைப் பார்த்தான். பிறகு தன் தந்தையைப் பார்த்தான். மறுபடியும் புஷ்பச் செடியைப் பார்த்தான். அந்தச்

செடி அருகில் சென்று ஒடிந்த துண்டை மறுபடியும் செடியில் பொருத்திப் பார்த்தான். அதன் தண்டு ஒடிந்திருந்ததால் அதனால் நிமிர்ந்து நிற்க முடியவில்லை. துவண்டு துவண்டு கீழே விழுந்தது. அவனால் அதனைச் சீராக்க முடியவில்லை. அவன் தன் தந்தை இருந்த பக்கம் பார்த்தான்.

ஜிம் புல் தரையைக் காலால் உதைத்துக் கொண்டே தந்தை இருந்த இடத்திற்குச் சென்றான். அப்பொழுதும் அவர் புல் உருளையைத் தள்ளிக் கொண்டேதானிருந்தார். உருளைகளின் இரண்டு கத்திகளும் விர்ரெனும் ஒலியை எழுப்பிக் கொண்டிருந்தன. அவற்றின் இடுக்கிலிருந்து பசும்புல் வெளியே தெறித்துக் கொண்டிருந்தது. அவன் மெல்லிய குரலில் 'அப்பா' என்று அழைத்தான்.

ஒரு பாதிரியின் முகத்திற்கு க்ஷவரம் செய்வது போல அவ்வளவு குட்டையாக டாக்டர் அந்தப் புல்தரையைச் சீராக்கிக் கொண்டிருந்தார். அமைதியான மாலைப் பொழுதுகளிலும் இரவுச் சாப்பாட்டிற்குப் பின்னும் குளிர்ந்த வேளைகளிலும் அந்தப் பருவம் முழுவதும் அவர் இவ்வாறு வேலை செய்து தன் தோட்டத்தை அழகுறச் செய்து வந்தார். செர்ரி மரங்களின் நிழலிற்கூட அந்தப் புற்கள் நன்றாக வளர்ந்திருந்தன. ஜிம் மறுபடியும் சற்றே குரலை உயர்த்தி 'அப்பா' என்றான்.

டாக்டர் திரும்பிப் பார்த்தார். புல்வெட்டியின் இரைச்சல் இல்லாமலிருந்ததால், செர்ரி மரங்களில் கூடுகட்டி வாழ்ந்த ராபின் பறவைகளுடைய இன்னிசைகூட நன்றாகக் கேட்டது. ஜிம் கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டான். சில சமயங்களில் கைகளைப் பிசைந்தபடியே நின்றான். மறுபடியும் 'அப்பா' என்று அழைத்தான். சிறுவனுடைய மெல்லிய சிவந்த உதடுகள் குவிந்தன. முகம் தாழ்ந்தது. ஆனால் வார்த்தைகள் வரவில்லை.

டாக்டர் மகனை உற்றுப் பார்த்தார். தலையை ஒரு பக்கம் சாய்த்து முகத்தைச் சுளித்துக்கொண்டே "என்ன ஜிம்மி?" என்று வினவினார்.

மறுபடியும் 'அப்பா' என்று மட்டுமே அழைத்தான். பின் தன் விரல்களை உயர்த்தி புல் தரையில் புஷ்பப் பாத்தியைக் காண்பித்தபடி "அதோ" என்று ஒரு வார்த்தை சொன்னான். "அங்கே என்ன ஜிம்மி?" என்று டாக்டர் ஒன்றும் புரியாதவராய் மறுபடியும் கேட்டார்.

சிறிது நேரம் மௌனம் நிலவியது. அதற்குள் சிறுவனுடைய மனம் பலவித வேதனைக்குட்பட்டது. இறுதியில் மறுபடியும் முன் போலவே விரலைக் காட்டி 'அதோ' என்று மட்டும் ஜிம் சொன்னான்.

அவன் கூறியதை அவர் அமைதியாகக் கவனித்தார். பிறகு அவன் விரல்கள் காட்டிய திசையில் டாக்டரின் பார்வை சென்றது. ஆனால் அவரால் எதையும் பார்க்க முடியவில்லை. "நீ



சொல்வது ஒன்றும் எனக்குப் புரியவில்லை; என்ன சொல்ல விரும்புகிறாய் ஜிம்?" என்று மறுபடியும் கேட்டார்.

அந்த விஷயத்தின் முக்கியத்துவம் அவனை அப்போதைக்கு ஊமையாக்கி விட்டிருந்தது. வார்த்தைகள் வந்தால்தானே. ஒன்றை மட்டும் அவனால் கூற முடிந்தது. "அதோ, அங்கே" என்றான் மறுபடியும். டாக்டர் சுற்று முற்றும் பார்த்தார். அவர் கண்களுக்கு ஒன்றும் படவில்லை. இறுதியாக "வந்து எனக்குக் காட்டு" என்று சொன்னார்.

இருவரும் புல் தரையைக் கடந்து தோட்டத்துக்குள் வந்தனர். அந்த உருக்குலைந்த செடிக்குக் கொஞ்ச தூரத்தில் நின்று கொண்டு ஜிம் மறுபடியும், "அதோ" என்று சுட்டிக் காட்டினான். வார்த்தை உணர்ச்சியின்றி வெளிப்பட்டது.

"எங்கே?" என்று அவர் திரும்பவும் கேட்டார்.

ஜிம் தரையை உதைத்துக் கொண்டே "அதோ, அங்கே" என்று மறுபடியும் கூறினான். டாக்டர் அவன் சொல்லை மதித்து முன்னே சென்றார். கொஞ்ச நேரம் தேடிய பிறகு அவன் குறித்த இடத்தைக் கண்டு பிடித்தார். சிதைந்த அந்த மலரைப் பார்த்தார். பிறகு திரும்பிச் சிறுவனைப் பார்த்தார். பயந்து விட்ட ஜிம்மி தயங்கித் தயங்கி அவருடைய முகத்தைக் கவனித்தபடியே பின்னால் நின்று கொண்டிருந்தான்.

அவர் யோசனையிலாழ்ந்தார். சிறிது நேரம் கழித்து 'ஜிம், இங்கே வா', என்று அழைத்தார். மிகுந்த அடக்கத்துடன் ஜிம் அவர் முன் வந்தான். "ஜிம்மி, இது எப்படி நிகழ்ந்தது?" என்று கேட்டார்.

ஜிம் பதில் சொல்லத் தொடங்கினான் "...வந்து...நான்...ரெயில் வைத்துக் கொண்டு விளையாடினேன். அப்புறம்...வந்து...அது மேலே ஏத்திட்டேன்." என்று தயங்கியபடியே வார்த்தை வார்த்தையாகச் சொன்னான்.

"நீ என்ன செய்து கொண்டிருந்தாய்?"

"நான் ரெயில் வண்டி ஓட்டி விளையாடினேன்."

டாக்டர் மறுபடியும் யோசனையிலாழ்ந்தார். "பரவாயில்லை, ஜிம்மி, இன்றைக்கு விளையாடினது போதும். வீட்டுக்குச் செல். இன்னும் விளையாட வேண்டும் என்று நினைக்கிறாயா?"

"இல்லை அப்பா" என்றான் ஜிம்மி.

இந்தத் தீர்ப்பை தந்தை வெளியிடும்போது ஜிம் அவர் முகத்தைப் பார்க்கவேயில்லை. கலங்கிய கண்களுடன் தலையைத் தாழ்த்திய வண்ணம் புல் தரையை தேய்த்துக் கொண்டே ஜிம் அந்த விடத்தை விட்டகன்றான்.

## II

ஜிம்மி அந்தவிடத்தைவிட்டுச் சென்ற மாதிரியிலிருந்து அவன்

தன்னைத் தானே நொந்து கொண்டிருந்தான் என்பது தெளிவாகத் தெரிந்தது. அங்கிருந்து நேரே வீட்டுக்குள் போகாமல் குதிரை லாயத்துக்குச் சென்றான்.

டாக்டருடைய குதிரைகளை கவனித்து வந்த ஹென்றி ஜான்ஸன் எனும் நீக்ரோ குதிரை வண்டியைக் கழுவிக் கொண்டிருந்தான். ஜிம்மி வருவதைப் பார்த்ததும், அன்புடன் பல்லைக் காட்டினான். அவர்களிருவரும் நண்பர்கள். அநேகமாக வாழ்க்கையில் ஒவ்வொரு அம்சத்தைப் பற்றியும் பெரும்பாலும் அவர்களிருவரும் ஒரே கருத்தைக் கொண்டிருந்தனர். எனினும் தீவிரமாக மாறுபட்ட அபிப்பிராயத்திற்குட்பட்ட விஷயங்களும் சில இருந்தன என்பது உண்மைதான். உதாரணமாக, ஹென்றியின் பேச்சிலிருந்து அவன் தன்னை மிக்க அழகுடைய நீக்ரோ என்று எண்ணியிருந்தான் என்பது தெரியவந்தது. நிறைய நீக்ரோக்கள் வாழ்ந்த அந்த பகுதியில் அவன் எல்லோரையும் விடச் சிறந்தவனாகத் தன்னை எண்ணினான். இப்படி ஒருவனுக்குத் தனிச் சிறப்பு இருக்கக்கூடுமென்பதே ஜிம்மியின் உள்ளத்துக் கற்பனைக்கு அப்பாற்பட்டது. ஆனால் ஜிம் அதை ஓரளவு உணர்ந்து கொண்டது மன்றி, பாராட்டவும் செய்தான். ஏனெனில் ஹென்றியே அதை உணர்ந்து கொண்டு பெருமைப்பட்டானே, ஆதலால் தானும் அதை ஒப்புக் கொள்ளத்தானே வேண்டும். ஆனால் அவர்களுடைய மன வெளியில் வெகு உன்னதமாக டாக்டர் ஒருவர்தான் பிரகாசித்துக் கொண்டிருந்தார். ஏனென்பதை இருவரும் வாய்விட்டுச் சொல்லாவிட்டாலும் நன்றாகவே புரிந்து கொண்டிருந்தனர். ஜிம்மிக்கு ஏதாவது, எப்போதாவது மனக்கலக்கம் ஏற்பட்டாலோ, உற்சாகம் குன்றியிருந்தாலோ அவன் நேராக ஹென்றியிடம்தான் செல்லுவான். அங்கு அவனுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் ஹென்றி தான் செய்த பெரிய பெரிய தவறுகளையெல்லாம் ஜிம்மிக்குச் சொல்லுவான். அதைக் கேட்டு தான் செய்த தவறுகள் எவ்வளவு சாமானியமானவை யென்று ஜிம்மி சாந்தி யடைவான். இவ்வாறு ஜிம்மிக்காகத் தன்னை இழிவுபடுத்திக்கொள்வதையும் அந்த நீக்ரோ பொருட்படுத்த மாட்டான். நீக்ரோ இனத்திற்கே இம்மாதிரி ஒரு குணமுண்டு. செய்யாத பெரும் பாவத்தைச் செய்ததாகச் சொல்லுவர். புரியாத குற்றத்தைப் புரிந்ததாகச் சாதிப்பார்கள். சில நாட்களுக்கு முன் வண்டியின் வார்க்கட்டையைக் கழட்டிப் பின்னால் வைக்க மறந்து விட்டதாகவும், அதற்காக டாக்டர் தன்னைக் கடிந்து கொண்டதாகவும் சும்மாவாவது சொல்வான். உடனே இருவர் உள்ளங்களிலும், ஒருவித ஒற்றுமையுணர்ச்சி நிலவும். வார்த்தைகள் வெளிவராவிட்டாலும், கருத்துக்கள் பரஸ்பரம் இருவருள்ளத்திலும் பாய்ந்து கொண்டிருந்தன. டாக்டர் சம்பந்தப்பட்ட வரையில் ஒரே மாதிரியான குற்றங்களைச் செய்தவர் போன்று இருவரும் ஒன்றிவிடுவர்.

சில வேளைகளில் இதற்கு மாறாகவும் ஹென்றி நடந்து கொள்வ



துண்டு. ஜிம்மி ஏதாவது தவறு செய்துவிட்டு அவனிடம் ஆறுதலுக்காக வந்தால், டாக்டர் செய்தது சரிதான் என்று உணர்ந்து அவர் கொள்கைகளில் உள்ள சிறப்புக்களைப்பற்றி நீண்ட அறிவுரைகள் வழங்குவான். ஜிம்மி செய்தது விரும்பத்தகாத செயல்கள் என்று கண்டிப்பதுடன் குறிப்பிட்டும் உணர்த்துவான். அப்படிச் செய்வதை ஹென்றியே உண்மையில் விரும்பவில்லை என்பதை ஜிம்மியால் கண்டுகொள்ள முடியவில்லை. அவன் சொல்வதையெல்லாம் அப்படியே பணிவுடன் ஏற்று ஹென்றியின் நட்பின் நிழலிலேயே இருந்தான். தன்னுடைய பணிவை வெளிப்படையான செயல்கள் மூலம்கூட வெளிப்படுத்தி அவனுடன் சமாதானமாகவே பழகினான். இதனால் மகிழ்ச்சியுற்ற ஹென்றி, வண்டியின் சக்கரத்தை கடற்பஞ்சால் கழுவும் வேலையைச் செய்யக்கூட அவனை அவ்வப்போது அநுமதித்தான். இதை ஒரு பெரும் பாக்கியமாகக்கூட ஜிம்மி கருதிச் சந்தோஷப்பட்டான்.

சிற்சில சமயங்களில் தெய்வ பக்தி மேலிட்டால் சாக்குத் துணியணிந்து ஒன்றிலும் கலந்து கொள்ளாமல் ஹென்றி தனித்திருப்பதுமுண்டு. அம்மாதிரி சமயங்களில் ஜிம்மி அவனையணுகித் தொந்தரவு கொடுக்க மாட்டான். அவனுடைய வயதிற்கும், அநுபவத்திற்கும் இம்மாதிரி இருக்க வேண்டியது அவசியந்தானோ என்னவோ! நிச்சயமாகச் சொல்லமுடியாது. அதைப் பற்றி ஜிம்மி கவலை கொண்டதுமில்லை. ஆனால் ஹென்றியால் ஒரு குதிரை வண்டியை ஓட்ட முடியும். இந்த மகத்தான சாதனை ஜிம்மியின் உள்ளத்தைக் கவர்ந்தது. ஹென்றியிடம் மரியாதை உணர்ச்சியை மேலும் வளர்த்தது. கிராமாந்தரச் சாலைகளின் வழியாக டாக்டர் போக வேண்டிய பயணங்களிலெல்லாம் ஹென்றிதான் வண்டியோட்டிச் சென்றான். ரஸ்தாவின் நாலா பக்கங்களிலிருந்தும் பசுக்களும், ஆடுகளும், மாடுகளும் இன்னும் இம்மாதிரிப் பல நாட்டுப்புற அற்புதங்களும் நடமாடிக் கொண்டிருந்த பண்ணைகள் வழியே செல்வது ஹென்றிக்கு ஒரு தனி உரிமை என்று ஜிம்மி கருதினான். கையிலிருந்த கடற்பஞ்சைத் தூக்கிப் பிடித்தபடியே "ஹலோ ஹென்றி!" என்று தன்னை நோக்கி வந்த ஜிம்மியை ஹென்றி வரவேற்றான். வண்டியிலிருந்து நீர் சொட்டிக் கொண்டிருந்தது. லாயத்திலிருந்து குதிரைகளின் குளம்படி ஓசை கேட்டுக் கொண்டிருந்தது. சுற்று முற்றிலும் வைக்கோலும், சேணமும்தான் நிரம்பிக் கிடந்தன.

ஒரு நிமிடம் ஜிம்மி எதிலும் அக்கறை கொள்ளவில்லை. அவன் மனமுடைந்து போயிருந்தான். வண்டி கழுவிச் சுத்தம் செய்யப்படுவதைக் கூட அவனால் இந்த சமயம் வியந்து ரசிக்க முடியவில்லை. வேலையில் ஈடுபட்டவாறே ஹென்றி அவனைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான்.

"உங்க அப்பாகிட்டே இன்று நல்ல வசவு கிடைச்சுதா? அப்படித்தானே?" என்று அவன் இறுதியில் ஊகமாகக்கேட்டான்.

"இல்லை" என்றான் ஜிம்மி. தன்னைக் காட்டிக்கொடுக்க விரும்பாதவன் போல் பேசினான். "அவர் ஒன்றும் என்னைத் திட்டவில்லை."

அசிரத்தையுடன் இவ்வாறு ஒரு கேள்வி கேட்டுவிட்டு ஹென்ரி அவன் வேலையைக் கவனிக்கலானான். ஆனால் தோற்றத்தில் சினம் படர்ந்திருந்தது. பிறகு ஹென்ரி, "நான் உனக்கு எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறேன். அசட்டுத்தனமாக அந்தப் புஷ்பச் செடிகளின் பக்கம் போகாதே, அவற்றைப் பறித்துப் பாழாக்காதே என்று. இதெல்லாம் உங்கப்பாவுக்குப் பிடிக்காது" என்றான். உண்மையில் ஹென்ரி பூக்களைப்பற்றியெல்லாம் ஒருபோதும் சொன்னதேயில்லை.

ஜிம்மி பதில் சொல்லவில்லை. அங்கே மௌனம் நிலவியது. எனவே ஹென்ரி வண்டியைக் கழுவுவதில் ஜிம்மியின் கவனத்தைத் திருப்ப வேண்டி, தன் சாமர்த்தியத்தைக் காட்ட முற்பட்டான். முதலில் பலன் கிடைக்கவில்லை. கடைசியாக வண்டிச் சக்கரத்தை வேகமாகச் சுழற்றி, தண்ணீரையும், சேறையும் அந்த வேகத்தில் அருகிலிருந்த மரத்தின் இலைகளின் மீது வாரியடித்தபோது பையனின் உற்சாகம் சிறிது திரும்பியது. வண்டி விடப்பட்டிருந்த அறையின் வாசற்படியில் உட்கார்ந்திருந்தவன், வேலை தொடங்கியதும் எழுந்து வண்டியருகில் சென்று சக்கரத்தைத் தானே சுற்றவாரம்பித்தான். இந்த வேடிக்கையில் சற்று முன்னர் தான் பட்ட அவமானத்தை முற்றிலும் மறந்து உற்சாகம் மேலெழுந்தது.

வாரியடித்தத் தண்ணீர் ஜிம்மியின் சட்டையைக் கறைப்படுத்திவிடக்கூடாது என்ற நல்லெண்ணத்தில் ஜான்ஸன் கடமையுணர்ச்சியுடனும், அதிகாரத்துடனும் சிறுவனை எச்சரித்தான். "பையா, இங்கே பார். ஜாக்கிரதையாக இரு. உன் கால் சட்டையை வீணாக்கிக் கொள்ளாதே. இம்மாதிரி அசட்டுத்தனமாய் சட்டையைப் பாழ்படுத்திக் கொள்வதை உன் தாயார் விரும்ப மாட்டாள். இங்கு சுற்றிக்கொண்டுக் கால் சட்டையைப் பாழாக்கிக் கொள்வதை நான் பார்த்துக் கொண்டும் சும்மாயிருக்க முடியாது. அப்புறம் மிஸஸ். டிரெஸ்காட் என்னைத்தான் கோபித்துக் கொள்வாள்" என்று அவன் சொன்னான்.

அவன் சற்று எரிச்சலுடன் பேசினான். ஆனாலும் அவனுக்குச் சற்றேனும் கோபம் இருந்ததாகத் தெரியவில்லை. தான் ஒரு பொறுப்புள்ள முக்கியமான மனிதன் என்பதைக் காட்டும் அளவுக்குத்தான் அவன் குரலில் கடுமையிருந்தது. உண்மையில், லாயத்தில் தான் வேலை செய்வதை ஜிம் பார்த்துக்கொண்டிருக்க வேண்டும் என்றே அவன் பெரிதும் விரும்பினான். அதில் மகிழ்ச்சியும் கொண்டான். உதாரணமாய், சேணத்திற்கு எவ்வாறு பாலிஷ் ஏற்றி மினுக்க வைக்கவேண்டும்; குதிரையை எவ்வாறு பழக்குவது என்பவற்றைக் கேட்கும்போது ஜிம் வியப்பிலாழ்ந்து விடுவான். இவ்வளவெல்லாம் தெரிந்து வைத்திருந்த ஜான்



ஸனிடம் அவனுக்கிருந்த மரியாதையும் அதிகரிக்கும். சிறுவனுக்கிருக்கும் ஆர்வத்தையுணர்ந்து, பேருவகையுடன், ஒவ்வொரு வேலையைப்பற்றியும், சின்னஞ்சிறு விஷயங்கள்கூட விடாமல் அவனுக்கு விளக்கிச் சொல்லுவதில் ஹென்ரிக்குத் தனி இன்பம்.

## III

சமையலடியில் இராச்சாப்பாட்டிற்குப் பின் வண்டிவிடப்பட்டிருந்த அறைக்கு மேல்தளத்திலிருந்த தன் அறைக்குச் சென்று ஜான்ஸன் மிக விரிவாக ஆடைகள் அணிந்து கொண்டான். சாதாரணமாகவே அரசனுடைய தர்பாருக்கு வழக்கமாகச் செல்லும் அழகி கூட ஜான்ஸனைப் போல் தன்னைச் சிங்காரித்துக் கொள்வதில் அவ்வளவு கவனம் செலுத்தமாட்டாள். அரச அவைக்குப் போகாவிட்டாலும், ஆலய அணிவகுப்புக்குத் தயாராக பாதிரி உடை அணிவது போலவாவது அவன் அந்தச் சமயம் தன்னை அலங்கரித்துக் கொண்டான் என்றே சொல்லலாம். அவன் அறையிலிருந்து வெளிப்பட்டு வண்டியைக் கடந்து ஒரு அழகு நடைநடக்கும்பொழுது யாருமே இவன் வண்டியைக் கழுவி விடும் ஒரு வேலைக்காரன் என்று சந்தேகிக்க முடியாது. அவன் அணிந்திருந்த 'லாவண்டர்' நிறச் சராயோ, பட்டு நாடாவினால் சுற்றப்பட்ட ஓலைத்தொப்பியோ, இங்கு அவனுடைய தோற்றத்தில் முக்கியமல்ல. அவனிடம் காணப்பட்ட மாறுதல் ஹென்ரியின் மனத்தில் நிகழ்ந்தது. அது வெளிப்பார்வைக்காக மட்டும் மேற்கொள்ளப்பட்டத் தோற்றப் பொலிவு அல்ல. உண்மையிலேயே அவன் ஒரு கௌரவமுள்ள நாகரிகப் பண்புமிக்க பணமும் பிற நலன்களும் நன்கு வாய்க்கப் பெற்ற ஒரு கனவானைக் காட்சியளித்தானே தவிர வாழ்க்கையில் ஒரு வண்டி கழுவும் வேலைக்காரனைப் போலல்ல.

காலை நேரங்களில், அதற்கேற்ற உடையுடன் அவன் வேலை செய்து கொண்டிருக்கும்போழுது அவனுடைய நண்பர்களைச் சந்திக்க நேர்ந்தால், சாதாரணமாக, 'ஹலோ, ஹென்ரி,' 'ஹலோ பீம்' என்றுதான் வணக்கம் கூறுவான். ஆனால் மாலை நேரங்களில் பளிச்சென்று ஆடையணிந்து பொலிவுடன் உலாவச் செல்லும்போது அதே நண்பர்களைச் சந்திக்க நேர்ந்தால் அவன் வணக்கம் கூறும் முறையே மாறுபட்டிருக்கும். கண்யமாகத் தலையை ஒய்யாரமாகத் தாழ்த்தி, ஒரு புன்முறுவல் செய்வான். அதிலிருந்து மற்றவர்கள் ஏதாவது உணர்ந்து கொள்ள வேண்டுமென்றால் தான் ஒரு கனவானுக்குள்ள தாராளத்தன்மை வாய்ந்தவன் என்பதுதான். 'குட் ஈவினிங் மிஸ்டர் வாஷிங்டன், குட் ஈவினிங் மிஸ்டர் பீடர்' என்று வாய் நிறைய உச்சரித்து மகிழ்வான். உருளைக் கிழங்குப் பாத்தியில் வேலை செய்து கொண்டிருந்த அழுக்கு உடையணிந்த மிஸ்டர் பீட் என்பவனும் அதே பாணியில்

தன்னைக் குறைவுபடுத்தியும், ஹென்ரியை உயர்த்தியும் '' குட் ஈவினிங் மிஸ்டர் ஜான்ஸன் '' என்று பதில் வணக்கம் தெரிவிப்பான்.

நகரத்தின் மத்தியிலுள்ள மின்சார ஆர்க் விளக்குகளின் நீல ஒளி பளிச்சென்று பிரகாசித்துக் கொண்டிருந்தது. இடையிடையே இரு பக்கங்களிலும் எண்ணற்ற கடைகளின் ஜன்னல்களிலிருந்து, தெருவில் வீசிய ஆரஞ்சு நிற ஒளி வீதி வெளிச்சத்தை ஆங்காங்கு மங்கச் செய்தது. இவ்வாறு ஒளி வீசிய வீதி வழியே சென்று கொண்டிருந்தவர்கள் தெருக்கோடியிலிருந்த தபால் நிலையத்தை அடைந்தபொழுது ஒரு கூட்டமாகவே கூடிவிட்டனர். மாலைத் தபால் பட்டுவாடா செய்யப்படும் சமயமாதலால் அதற்காக அவர்கள் காத்திருந்தனர். வெட்டுக் கிளிகளின் கூட்டத்தைப் போன்று, ஜனங்கள் அடைக்கப்பட்ட ட்ராம் வண்டி எச்சரிக்கைக்காக மணியடித்துக் கொண்டு, ஜனக்கூட்டத்தைப் பிளந்து அடிக்கடி அவ்வீதியில் சென்றது. நியூ யார்க்கில் சிறந்த தியேட்டர்களில் ஒன்றான "சிறிய தியேட்டர்" வார்னிஷும், செந்நிறமும் பூசப்பட்டு, அப்பகுதியில்தானிருந்தது. '' கிழக்கு லினி '' எனும் நாடகம் ஒரு டூரிங் நாடகக் கம்பெனியாரால் அதில் நடத்த ஏற்பாடாயிருந்தது. நகரத்தின் இளைஞர்களெல்லாம் தெரு மூலைகளில் அவரவர்கள் நட்பிற்கேற்றபடி சிறு சிறு கூட்டங்களாகக் கூடியிருந்தனர். சமூக அந்தஸ்து அங்கே பிரதிபலிக்கப்படவில்லையென்றாலும் நட்பு மிகுந்திருந்தது. ஊர் வம்புகள் எல்லாம் அங்கு சுவையுடன் விவாதிக்கப்பட்டன. அந்த ஊரே மாலை வேளைகளில் அந்தத் தெருவில் கூடி விட்டது போன்று தென்பட்டது. டிராம் வண்டியின் காதைத் துளைக்கும் மணியோசை ஓய்ந்ததும், நடைபாதையில் சாவதானமாகச் சென்று கொண்டிருந்த மக்கள் கூட்டத்தின் நடையோசை கேட்கும். மாலை இளங்காற்றில் பரந்த ஏரியில் சின்னஞ்சிறு அலைகள் தவழ்ந்து விளையாடுவதைப் போல் நடைபாதையில் நடமாடிய கூட்டம் அலை அலையாகச் சென்று கொண்டிருந்தது. தூரத்தில் குன்றின் அடியில் இருபக்கங்களிலும், மாப்பிள் மரங்கள் காவலாளிகளைப் போன்று கம்பீரமாகக் காட்சியளித்தன. அவற்றின் பின்னால் உயர்ந்து நின்ற தெரு விளக்கின் ஒளி, மரத்தின் இலைகளின் இடுக்குகளில் புகுந்து விசித்திரமான நிழற்கோலங்களை பூமியின்மீது வரைந்து கொண்டிருந்தது.

அந்தத் தெருவில் ஜான்ஸன் நுழைந்ததுமே அங்கு ஒரு மூலையில் நின்றுகொண்டிருந்த காலிப்பயல்களின் கூட்டம் அவனைக் கவனித்தது. அதுமட்டுமல்ல ; ஒரு பெரிய மனிதனின் வருகையை அறிவிப்பது போல், அக்கூட்டத்தில் ஒருவன் சமிக்ஞை மூலம் இதர நண்பர்களுக்கு இச்செய்தியை அஞ்சல் செய்தான். உடனே எல்லோரும், '' ஹலோ, ஹென்ரி, கேக் பரிசுக்குப் போட்டியிடப் போகிறாயா ? '' என்று அவனைக் குசலம் விசாரித்தான் ஒருவன்.



'' அதற்கு அவன் தகுதியுடையவன் போல் தோன்றவில்லையா ? '' என்றான் கூட்டத்திலிருந்த மற்றொருவன்.

'' ஏன் அந்தப் பரிசை இதற்குள்ளாகவே நீ அடைந்துவிடவில்லையா ? உன் ஜேபியில் அது இருப்பது போல் காண்கிறதே ஹென்ரி,'' என்று கிண்டல் செய்தான் மற்றொருவன்.

'' உன் மார்பைச் சற்று முன்னுக்குத் தள்ளி நிமிர்ந்து நடந்தால் இன்னும் நன்றாக இருக்கும் '' என்று கேலியாக ஒருவன் ஆலோசனை கூறினான்.

ஹென்ரி இதையெல்லாம் கொஞ்சம்கூட பொருட்படுத்தவேயில்லை. அவர்கள் தன்னைக் கேலி செய்ததையும், பாராட்டியதையும் கவனிக்கவேயில்லை. பதிலுக்கு கம்பீரமாக ஒரு சிரிப்பு சிரித்துவிட்டு மேலே சென்றான். என்னதான் அவர்கள் தன்னைப் பற்றி எண்ணிக்கொண்டாலும், தான் எவ்வகையிலும் உயர்ந்த அந்தஸ்துள்ளவன் என்பதைத்தான் அவர்கள் நடத்தையும் அவனுடைய நட்பு ததும்பிய அந்தச் சிரிப்பும் காட்டின.

கிரிஸ்கம் என்ற இளம் வக்கீல் அப்பொழுதுதான் ரெய்வ்ஸ்னைடரின் க்ஷவரக் கடையிலிருந்து திருப்தியுடன் தன் கன்னத்தைத் தடவிய வண்ணம் வெளியே வந்தான். படிக்கட்டுக்களில் வரும்பொழுது தெருவிலிருந்த கூட்டத்தைப் பார்த்து ஏதோ ஆச்சரியத்தைப் பார்ப்பது போல நோக்கினான். அவசர அவசரமாக கடைக்குள் மறுபடியும் ஓடினான். உள்ளிருந்தவர்களை நோக்கி, ' அதோ அந்த நீக்ரோ வருகிறான். அவன் நடையழகை நீங்கள் சற்று வந்துதான் பாருங்களேன் ' என்று பரபரப்புடன் சொன்னான்.

ரெய்வ்ஸ்னைடரும், அவனுடைய உதவியாளும் கையிலிருந்த க்ஷவரக் கத்தியை உயரத் தூக்கி ஜன்னல் வழியாக வெளியே நோக்கினர். சோப்புத் தடவி விடப்பட்ட இரு தலைகள், நாற்காலியிலிருந்து நிதானமாகத் திரும்பின. ரெய்வ்ஸ்னைடரின் கடையிலுள்ள மஞ்சள் நிறக் கண்ணாடி ஜன்னலின் வழியே வெளியே பார்த்த அவர்கட்குத் தெருவின் மின்ஒளி நீர் தெளித்தாற் போன்றதொரு தோற்றத்தை யுண்டு பண்ணியது. க்ஷவரக் கடையின் உட்புறத்திலிருந்தவர்களுக்கு தெருவிலிருந்த ஜனங்கள் கூட மீன்காட்சிச் சாலையிலுள்ள மீன்களைப் போன்றுதான் தோன்றினர். ஒவ்வொரு கடையின் சதுரக் கண்ணாடி வாயிற்புறம் இக்கண்காட்சியைக் காண்பித்த ஜன்னல் வெளி போலிருந்தன. கண்ணாடி வழியே தெருவில் அப்போதுதான் மிதந்து வந்து கொண்டிருந்த ஹென்ரி ஜான்ஸனின் உருவத்தைக் கடையிலிருந்தவர்கள் கண்டனர்.

'' பலே, பலே '' என்று சந்தோஷத்தினால் ஆர்ப்பரித்தான் கடைச் சொந்தக்காரன் ரெய்வ்ஸ்னைடர். அவனும் அவன் உதவியாளர்களும் சோப்பு நுரையுடன் நாற்காலியில் உட்கார்ந்திருந்த வாடிக்கைக்காரர்களை அப்படியே பரிதாபமாக விட்டுவிட்டு,

தங்கள் பொறுப்பையெல்லாம் காற்றில் பறக்கவிட்டு தெருவில் சென்றுகொண்டிருந்த அற்புதத்தைக் கண்டு களிக்க ஜன்னலை நோக்கி விரைந்தனர். "அவன் அழகாயில்லை?" என்று தன் வியப்பை அடக்க முடியாமல் ரெய்வ்ஸ்னைடர் சொன்னான்.

எரிச்சலடைந்திருந்த முதல் நாற்காலியிலிருந்தவன், "அது வேறு யாருமில்லை. ஹென்றி ஜான்ஸன்தான்! முட்டாள்கள்! இவனைப் பார்ப்பதில் என்ன அதிசயம்! ஏ, ரெய்வ், இங்கே வா. எனக்கு விரைவில் முகத்தை வழித்துவிடு. நான் என்ன சவமா, இங்கே சிலைபோல் உட்கார்ந்து கிடக்க? என்ன நினைத்துக் கொண்டாய்?" என்று இரைந்தான்.

பரபரப்படைந்த ரெய்ல்ஸ்னைடர் திரும்பினான். "அவன் ஹென்றி ஜான்ஸனா! இல்லை, இல்லை! நிச்சயமாகச் சொல்லுவேன்! ஏன், இல்லையென்று பந்தயம் கூட கட்ட முடியும்! அவன் ஹென்றி ஜான்ஸனாம்! ப்பூ! ஒன்றும் தெரியாத எலிக்குஞ்சுகள்!" என்று அவன் தன் அபிப்பிராயத்தைத் தெளிவாக்கினான். இறுதிச் சொல்லிலுள்ள வசவை அவன் வேண்டுமென்றே அழுத்திச் சொன்னது அங்கே கொந்தளிப்பை ஏற்படுத்தியது. "அந்த மனிதன் ஒரு புல்மன்கார் போர்ட்டரோ, அல்லது அது போன்ற வேறு எவனோதான். அவன் எப்படி ஹென்றி ஜான்ஸனாக முடியும்?" என்று அவன் நிச்சயமாக்கி, "உன் கண்கள் பழுதடைந்துள்ளன போலும்!" என்று அவர்களுக்கு ஒரு குறையையும் கற்பித்தான். முதல் நாற்காலியிலிருந்தவனுக்குப் பொறுமை எல்லை கடந்து விட்டது. "அந்த லாவண்டர் நிற சராயை நான்தானே அவனுக்கு இனாமாகக் கொடுத்தேன்" என்று கர்ஜித்தான்.

ஜன்னலின் பக்கத்தில் நின்று நிதானமாகக் கவனித்துக் கொண்டிருந்த கிரிஸ்கம், "ஆமாம், அவன் ஹென்றி ஜான்ஸன் என்றுதான் நினைக்கிறேன். அவனைப் போலத்தான் தெரிகிறது." என்று முதலவன் சொன்னதை ஆமோதித்தான்.

இதற்குள் தன் வேலைக்குத் திரும்பிய ரெய்வ்ஸ்னைடர் "நல்லது. அப்படியே இருக்கட்டும். நீங்கள் அவ்வாறு கருதினால் அப்படியே இருக்கட்டும்" என்று ஒப்புக்கொண்டான். அல்லது ஒப்புக் கொண்டது போலக் காண்பித்தான்.

இரண்டாவது நாற்காலியிலிருந்தவன் முகத்தில் தடவப்பட்ட சோப்பு நுரை உலர்ந்து விட்டதால் வாய் பேச முடியாமல் இறுகிப் போயிருந்தது. அப்படியிருந்தும், "அவன் ஹென்றி ஜான்ஸன்தான். அவன் எப்பொதுமே இப்படித்தான் யாரையாவது சந்தித்துத் தன்னைப் பற்றி உயர்வான அபிப்பிராயம் உண்டு பண்ண வேண்டுமானால் இதைப்போலத்தான் ஆடையணிந்து செல்வான். இந்த ஊரிலேயே அவன் பெரிய ஆடம்பரப் பிரியன் என்று எல்லோரும் அறிந்ததுதானே!" என்று அவன் முணுமுணுத்தான்.



தன்னைப்பற்றித் தனக்குப் பின்னால், தெருவில் எழுந்த வியப்பையும், பரபரப்பையும் இந்தச் சமயம் ஹென்றி நன்றாகவே உணர்ந்திருந்தான். அதில் அவன் சந்தோஷம்கூட அடைந்தான். மற்ற சமயங்களிலேயும் அவன் இதேவித மகிழ்ச்சியை அடைந்திருக்கிறான். தன்னைப் பற்றி மற்றவர்கள் பெருமைப் படுவதை அவன் விரும்பினான். அதில் கண்ணும் கருத்துமாகக் கூட இருந்தான். எனவே மகிழ்ச்சியால் மலர்ந்த முகத்துடன், அந்த வீதியைக் கடந்து பக்கத்திலுள்ள ஒரு குறுகிய சந்தில் திரும்பினான். அந்தச் சந்திலும் மின் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. அவற்றின் வெளிச்சத்தில் அந்த சந்தில் நிறைந்திருந்த பாழடைந்த வீடுகளைத்தான் காணமுடிந்தது. பாரிச வாயுக்காரர்கள் ஒருவரையொருவர் நெருங்கித் துணைகொள்ளுவது போல் சில வீடுகள் ஒன்றையொன்று தாங்கி இணைந்திருந்தன.

குங்குமப்பூப் போன்ற மேனியுடைய மிஸ் பெல்லா பெராகட் கலிகோ, 'பாடிப்பாவாடை' அணிந்து அவள் வீட்டு முன்பக்கப் படிக்கட்டில் குனிந்து, யாருடனோ ஏதோ ஊர் வம்பு பேசிக்கொண்டிருந்தாள். ஆனால் தூரத்திலேயே ஹென்றி ஜான்ஸன் தன்னைத் தான் பார்க்க வந்து கொண்டிருக்கிறான் என்பதைக் கண்டு கொண்டாள். உடனே குதிரைக் குட்டியைப் போல் வீட்டிற்குள் பாய்ந்தோடி மறைந்தாள். அதையெல்லாம் ஹென்றி தூரத்திலிருந்தே பார்த்து விட்டான். ஆனாலும் மது வழங்கும்போது சிறு துளி சட்டையில் சிந்திவிட்ட பரிசாரகனை மரியாதையுடன் நோக்கும் பண்புள்ள விருந்தாளியைப் போன்று, அவன் கண்யத்துடன் நடந்துகொண்டான். எந்த எக்கச்சக்கமான நிலையிலும் அவன் நடந்துகொண்ட விதம் பாராட்டத்தக்கதாய் இருந்தது.

பக்கத்து அறைக்குத் தாவி ஓடித் தன் சிறந்த அங்கியை அவசர அவசரமாக அணிந்துகொள்ளுவதில் அவள் முனைந்திருந்ததால், ஹென்றியை வரவேற்கும் பொறுப்பு மிஸஸ் பெராகட்டின் மேல் விழுந்தது. பருத்த அந்த மாது பல்லெல்லாம் தெரியப் புன்னகை புரிந்து, தலைகுனிந்து தான் முன்னே வழி காட்டிச் சென்று, மட்டற்ற மகிழ்வுடன் அவனை வரவேற்றாள். "மிஸ்டர் ஜான்ஸன், உங்களுக்கு நல்வரவு, நல்வரவு. நீங்கள் சௌக்கியந்தானா மிஸ்டர் ஜான்ஸன்?" என்று குசலம் வினவினாள்.

ஹென்றியும் பதிலுக்குத் தலையைத் தாழ்த்தித் தாழ்த்தி வணக்கம் தெரிவித்தபோது, அவன் முகமெல்லாம் கண்ணாடி போல் பளிச்சென்று ஒளிவீசியது. அவன் குனிந்தபோது தலை ஏறக்குறையத் தரையைத் தொட்டு விட்டது. "குட்-ஈவினிங் மிஸஸ் பெராகட். நீங்கள் சுகமாகவே இருக்கிறீர்களா? உங்கள் குடும்பத்தினர்களெல்லாம் நலமா மிஸஸ் பெராகட்?" என்று வாயார ஹென்றியும் க்ஷேமம் விசாரித்தான்.

இத்தகைய சம்பிரதாயம் முடிந்ததும், அறையில் எதிரெதிரிலிருந்த இரு நாற்காலிகளில் அவ்விருவரும் அமர்ந்தனர். இங்கு

அவர்கள், உயர்ந்த பண்பைக் காட்டும் மரியாதைகளையெல்லாம் மேலும் பரஸ்பரம் பரிமாறிக் கொண்டனர். இதற்குள் பெராகட்டின் குமாரி அங்கு வந்துவிடவே மூவருக்குமிடையே மறுபடியும் மிக விரிவாக மரியாதை வாசகங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. எல்லோருமே பூரித்த முகத்துடன் சந்தோஷமாக இருந்தனர். ஒவ்வொருவருடைய புன்முறுவலின் போதும் அவரவர்களுடைய பல்வரிசைகள் பளிச்சென்று தெரிந்தன.

சமையலுக்கான ஸ்டவ் அந்த அறையின் ஒரு மூலையில் இருந்தது. அடுப்பில் ஏதோ மாமிசத் துண்டு வெந்து கொண்டிருந்தது. அதைக் கவனித்துக்கொள்ள மிஸஸ் பெராகட் அவ்வப்போது எழுந்து போய்க் கொண்டும், வந்து கொண்டுமிருந்தாள். அத்துடன் மற்றொரு மூலையில், அப்போதுதான் உள்ளே நுழைந்த சிறுவன் ஒரு கோரைப் பாயில் படுத்துக் கொண்டான். இம்மாதிரி வீட்டு விஷயங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தும் இதையெல்லாம் மூவரில் ஒருவருமே பொருட்படுத்தவில்லை.. அதில் ஒருவருக்கும் கவனமே செல்லவில்லை. ஒருவருக்கொருவர் மரியாதையுடனும், கண்யத்துடனும் சம்பிரதாயமாகப் பேசிக் கொண்டிருந்தனர். இந்தக் குடிசையின் அறைக்குப் பதில் உலகத்திலேயே ஆடம்பரம் மிருந்த ஒரு ஹோட்டலின் வரவேற்பு அறையில் இம்மூவரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தால், மூன்று குரங்குகளைப் போன்றே அவர்கள் தோன்றியிருப்பர்.

ஹென்றி அவ்விடம் விட்டு புறப்பட்டுச் சென்றபின், பெல்லா பொருத்தமான சொல்லடுக்கை மிக்க பிரயாசையுடன் தொகுத்து, "அம்மா, அவர் ஒரு தெய்விக புருஷர் இல்லையா?" என்று தன் அபிப்பிராயத்தைத் தன் தாயாரிடம் தெரிவித்தாள்.

## IV

சனிக்கிழமை மாலை அந்த ஊரில் எப்போதுமே அதிகக் கூட்டமிருக்கும். கோடையில் சிறு பூங்காவில் பத்து மணி வரை பாண்டின் இசை ஒலித்துக் கொண்டிருக்கும். நகரத்தின் இளைஞரெல்லாம் இந்தப் பாண்டு கோஷ்டியைக் கண்டால் அலட்சியம் கொள்வர். ஏன், அதை வெறுக்கவும் செய்வர். எனினும் நறுமணம் கூடிய மென்காற்று வீசிய குளிர்ந்த மாலைப் பொழுதினில் அவர்கள் வெளியே கூட்டம் கூட்டமாக இந்த இடத்தை நோக்கி வந்துவிடுவர். ஏனெனில் அந்த ஊரில் பெண்களெல்லாம் பாண்டு இசையைக் கேட்க நிச்சயம் வருவார்கள். அவர்கள் கவனத்தைக் கவருவதற்காவது இளைஞர் கூடினர். அப்பெண்கள் இருவராகவும், மூவராகவும் பிரிந்து புல் தரையில் உல்லாஸமாகச் சென்றனர். பொதுவிடங்களில் இம்மாதிரி மும்மூன்று பேராகச் சேர்ந்து செல்வது அவர்களுக்கு ஒரு பாதுகாப்புணர்ச்சியை அளித்ததுடன், அந்த ஊர்ச் சம்பிரதாயமும்கூட. இந்தக் கூட்டத்தில் குறிப்பிடத்



தக்க சமூகப் பண்பு ஒன்றுமில்லையென்றாலும் ஒரு கூட்டம் மற்ற கூட்டத்தைக் கூர்ந்து கவனிக்கத் தவறுவதில்லை. அபிப்பிராயங்களைக்கூட மௌனமாக ஜாடைகள் மூலமே பரிமாறிக் கொள்வார்கள். எப்போதாவது ஒருத்தி இன்னொருத்தியை இடித்து, "அதோ பார், ஜெர்ட்டி ஹட்ஸனும், அவன் சகோதரியும் போவதை," என்பாள். அவர்கள் செல்வதை ஒரு முக்கிய நிகழ்ச்சியாக அவர்கள் கருதினர்.

ஒரு சனிக்கிழமையன்று மாலைப் பொழுதினில் அந்தப் பூங்காவைச் சுற்றி ஓடிய பாதையில் கூடியிருந்த இளைஞர் கூட்டம் வழக்கத்தைவிட அதிகமாக இருந்தது. அவர்கள் அந்த பாண்டு கோஷ்டியினரிடமிருந்து சற்று ஒதுங்கியிருந்தனர். தங்கள் கவுரவத்தை உத்தேசித்துத் தங்களைவிடச் சிறுவர்களுக்கென்று ஏற்பட்ட கேளிக்கைகளில் கலந்து கொள்ள அவர்கள் விரும்பவில்லை. சிறுவர்கள் அந்தக் கூட்டத்தில் இங்குமங்கும் தங்களிஷ்டப்படி அலைந்து கொண்டிருந்தனர். அவர்களுக்குத் தலைகால் புரியவில்லை. சிறு சிறு விபத்துக்கள் கூட அவ்வப்போது நேரிட்டன. ஆனால் அதற்காகத் தண்டிக்கப்படுவதைத் தவிர்க்க, அவர்களெல்லாம் காற்றினால் துரத்தப்பட்ட மூடுபனி போன்று ஓடிக்கொண்டிருந்தனர்.

பாண்டு கோஷ்டியினர் "வால்ட்ஸ்" என்ற ஒரு கூட்டு நடன கீதத்தை வாசித்துக் கொண்டிருந்தனர். வாத்தியங்களில் அகன்ற வாயுடைய பித்தளைக் குழாய்தான் பிரதானமாக ஒலித்துக் கொண்டிருந்தது. அந்த இசை, மலையிலுள்ள ஒரு என்ஜின் தண்ணீரை இறைப்பதைத் தனக்கு நினைவுபடுத்துவதாக சுற்றுப்பாதையிலிருந்த இளைஞனொருவன் கூறினான். இப்படி அவனுக்குத் தோன்றியதில் ஆச்சரியமொன்றுமில்லை. ஆனால் பாண்டு கோஷ்டியின் இசை நன்றாகயில்லையென்பதற்காக அவன் அவ்விதம் அதைப்பற்றிக் குறைகூறவில்லை. அந்தக் கோஷ்டியைப் பற்றி இழிவுபடுத்திச் சொல்லுவதுதான் அப்போதெல்லாம் பாஷனாகக் கருதப்பட்டதால் அவனும் அப்படிச் சொன்னான். எனினும் மேடையின் மேல் வாசித்துக் கொண்டிருந்த பில்லி ஹாரிஸ் என்பவனைச் சுற்றிலும், பையன்கள் கூட்டம் என்னவோ அவனைப் பாராட்டிக் கொண்டிருந்தது.

ரொசெஸ்டரிலிருந்தும், நியூயார்க்கிலிருந்தும் வந்த தபால்கள் எல்லாம் பட்டுவாடா செய்யப்பட்ட பின் கூட்டம் அவ்விடத்தை விட்டகன்று தபாலாபீசுக்கெதிரேயிருந்த பூங்காவில் ஏற்கனவே குழுமியிருந்தவர்களுடன் கலந்து விட்டது. மாப்பிள் மரங்களின் இலைகள் காற்றில் மெதுவாக அசைந்தாடிக் கொண்டிருந்தன. அவற்றிற்கு மேலே உயரத்தில் பளிச்சென்று எரிந்து கொண்டிருந்த "ஆர்க்" விளக்குகளின் நீல ஒளியில் மரங்களின் நிழல்கள் தரையில் அழகழகாகக் கோலம் போட்டுக் கொண்டிருந்தன. இவ்விளக்கொளி தற்செயலாகத் தலையை நிமிர்த்திய ஒரு

பெண்ணின்மேல் பட்டபொழுது அவள் முகம் ஒரு தனிப்பட்ட சோபையுடன் வசீகரமாகப் பிரகாசித்தது. ஒரு போலீஸ்காரன் எங்கிருந்தோ இருளிலிருந்து திடீரென்று அங்கு தோன்றித் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த சிறுவர்களை விரட்டியடித்தான். பையன்கள் அவன் பிடியிலிருந்து தப்பிச் சென்று அவனைக் கேலி செய்தனர். ஆந்தை போன்று கத்தினர். பெரும் இசைவாணர்களைப் போன்று, பாண்டு கோஷ்டியின் தலைவனும், பிரபல சங்கீத வித்வான்களின் அங்கசேஷ்டைகளில் சிலவற்றை அப்பியசித்து வைத்திருந்தான். ஒரு மூச்சு வாசித்து விட்டு நிசப்தம் நிலவியபோது தன் கையைத் தூக்கிப் புருவத்தின் பக்கத்திற்குக் கொண்டுபோய் உணர்ச்சியுடன் தடவிக் கொடுத்துப் பிறகு வானை நோக்கி வேதனை தோய்ந்த பாவத்துடன் உயர்த்திய போது கூட்டம் இதை ரசித்துச் சிரித்தது. அந்த மினுக்கும் ஒளியில், பூங்காவே நீலநிற மண்டபம் போல் தோற்றமளித்தது. இம்மண்டபத்தில் கூட்டம் நிரம்பி வழிந்துகொண்டிருந்தது. ஆடைகளின் சலசலப்பு ஓசையும், பேச்சு சப்தமும் கலந்து அந்தப் பூங்காவில் ஜீவகளை நிரம்பியது.

மனோகரமான இச்சூழ்நிலையில் அதைக் குலைக்க வந்ததுபோல் எங்கிருந்தோ தூரத்தில், முன்பின் எதிர்பாராத தொழிற்சாலைச் சங்கு போன்றதொரு சோக ஒலி எழுந்தது. சிறிது நேரத்தில் அது உரம்பெற்று உச்சஸ்தாயிக்கு எட்ட ஒரு ஓலமாகவே மாறியது. மாறியதோடன்றி அந்த இரவில் காற்றில் அது எழுப்பிய நீண்ட அவல அழைப்பு பூங்காவிலிருந்த கூட்டத்தை அப்படியே அசைவற்றதாகவும், பேச்சற்றதாகவும் அடித்துவிட்டது. பாண்டு கோஷ்டித் தலைவன் ஒரு பாட்டை அப்போதுதான் முடித்துவிட்டு, அடுத்த பாட்டை மிக ஆடம்பரமாக ஆரம்பிப்பதற்காக விரிவான முஸ்தீப்புக்களுடன் தொடங்கவிருந்தான். இந்த அவலக் குரலொலி கேட்டதும், அதனால் ஸ்தம்பித்துப்போய், உயரத் தூக்கிய தன் கைகளை உற்சாகமிழந்து மெதுவாக முழங்காலுக்குத் தாழ்த்திக் கொண்டான். திறந்த வாயை மூடாமல் என்னவோ ஏதோ வென்று தன் தோழர்களை மௌனமாகப் பார்த்தான். அந்தக் கூக்குரல் மெதுவாகப் பேரழுகையாகத் தணிந்து பின் ஓய்ந்து விட்டது. சிலையாக அடித்துப் போட்டதுபோல் நடைபாதையிலிருந்த அந்த இளைஞர்களிடையே இப்போதுதான் கொஞ்சம் உணர்ச்சி வந்தது. அவர்களுடைய உடல்களும், தசைகளும் வேலை செய்ய ஆரம்பித்தன. அவர்களெல்லோரும் ஒரே குரலில் —' ஒன்று ' என்று கத்தினர்.

மறுபடியும் முதலில் கேட்ட அந்தச் சப்தம் இரவின் அமைதியைக் கிழித்துக் கொண்டு கேட்டது. முன்போலவே அதன் நீண்ட ஓலம் ஓய்ந்தவுடன் இளைஞர்கள் ஒருவரையொருவர் சுற்றிக் கொண்டு ஒரே குரலில் ' இரண்டு ' என்று கத்தினர்.

ஒரு விநாடி எல்லோரும் மூச்சின்றி எதையோ எதிர்பார்த்த



வர்கள் போல ஸ்தம்பித்து நின்றனர். பிறகு ஒரே குரலில் '' இரண்டாவது வட்டம் ! '' என்று அவர்களெல்லோரும் கூக்குரலிட்டனர். இரண்டாவது வட்டத்தில் எங்கோ தீப்பிடித்து ஆபத்து ஏற்பட்டிருக்கிறது! சங்குகளிட்ட ஓலம் இதைத்தான் அறிவித்தது. ஒரே நொடியில் அங்கிருந்த அவ்வளவு கூட்டமும் வெடியால் தாக்குண்ட பனிப்பந்துகள் போல் ஓடி மறைந்தது.

V

டஸ்கரோரா ஹோஸ் கம்பெனியின் ஆறாவது நெம்பர் தீயணைக்
கும் படையின் காரியாலயத்தை முதலில் சென்று அடைந்தவன்
ஜேக் ரோஜர்ஸ் தான். தெருவுக்குள் நுழைந்து அவன் ஓடிய
போதே, பைக்குள்ளிருந்த சாவியை எடுத்துத் தயாராக வைத்
துக் கொண்டான். பேய் போன்று ஸ்பிரிங் பூட்டினைத் திறந்தான்,
கதவுகள் அகலத் திறந்து கொண்டதும், ஒரே பாய்ச்சலாக உள்ளே
சென்றான். தீயணைக்கும் என்ஜினின் சக்கரத்தில் படுத்திருந்த
ஆப்புக்களை ஒரு உதை கொடுத்து அப்பால் தள்ளினான். தன்
பலங்கொண்ட கரங்களினால் பிரம்மாண்டமான அந்த கித்தான்
குழாய்ச் சுருளை யிழுத்து, வெளிக் கொணர்ந்தான். இதையெல்
லாம் அந்நிலையத்தில் அமைக்கப்பட்டிருந்த மின் விளக்கு வெளிச்
சத்தில் பின்னால் வந்தவர்கள்கூட நன்றாகப் பார்க்க முடிந்தது.
ஜேக் ரோஜர்ஸின் வலிமையுள்ள புஜங்களுக்கு வணங்குவதுபோல
அந்த பிரம்மாண்டமான வண்டி மெதுவாகக் கதவுகளைக் கடந்து
வெளி வந்தது. நான்கு பேர் இப்போது அவனுடன் சேர்ந்து
கொண்டனர். அவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து வண்டியைத்
தெருவுக்குக் கொண்டு வந்தனர். மின்விளக்குகளின் பின்புறத்
திலிருந்து கரிய உருவங்கள் பல அந்தப் பெரும் நிழலில் அவர்
களைச் சூழ்ந்து கொண்டன. எல்லோர் வாயிலும் மேலோங்கி
நின்ற ஒரே கேள்வியைத்தான் அவர்கள் கேட்டனர். '' எந்த
வட்டாரத்தில் நெருப்பு?''

'' இரண்டாவது '' என்று அந்தக் கேள்விக்குச் சுருக்கமாகப்
பதிலளிக்கப்பட்டது. டஸ்கரோரா ஹோஸ் கம்பெனி ஆறாவது
படை ' நயாகரா ' வீதிக்குள் வேகமாக நுழைந்தது. வண்டியின்
ஒரு ராட்சதச் சக்கரம் தெருவில் திரும்பியதும் வண்டியிலிருந்த
நீண்ட கயிறு அவிழ்த்து விடப்பட்டது. அதைப் பற்றிக்கொண்
டிருந்த அந்தக் கூட்டம் தங்கள் பலங்கொண்ட மட்டும் இழுக்க
வும் அச்சின் அடியிலிருந்த வட்டமான மணி கண கணவென்று
ஒலித்தது. மறுபடியும் முன்னர் கேட்கப்பட்ட கேள்வி எழுந்
தது. '' எந்த வட்டாரத்தில் நெருப்பு ? ''

'' இரண்டாவது '' என்று சுருக்கமாக முன்போலவே பதில்.
சரிவான ஒரு பகுதியில் வண்டி சென்றபோது வண்டியிலிருந்து

ஜானி தார்ப் என்பவன் தவறிக் கீழே விழுந்து விட்டான். ஆனால் வெகு சாமர்த்தியமாகத் தன் முழுப்பலத்தையும் உபயோகித்து வேகமாக உருண்டுவரும் சக்கரத்தில் அகப்பட்டுக் கொள்ளா திருக்கத் தன்னை பாதையிலிருந்து அப்புறப்படுத்திக் கொண்டான். அவன் வெளியே வந்தபோது தலைவிரி கோலத்தில், ஆடைகள் நலுங்கி, பார்க்கப் பரிதாபகரமாக இருந்தது. என்ஜினின் பின்னு லிருந்து அலைபோல மக்கள் கூட்டம் அதைத்தொடர்ந்து வந்தது. ஒரு உடைந்த அணைக்கட்டின் வழியே சுழன்றடித்து வரும் அலைகளைப் போல் தோன்றியது. பின்பக்கத்தில் புல்வெளி. சாலை யிலிருந்தும், சாலையின் இருபுறத்திலிருந்த வீடுகளிலிருந்தும், "எங்கே நெருப்பு?" என்ற கேள்விதான் ஒவ்வொருவரும் கேட்டனர்..,

இத்தகைய வீடுகள் ஒன்றிலிருந்து ஒருத்தி கையில் விளக் குடன் முன் வாயிலுக்கு வந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந் தாள். முகத்தில் விழுந்த வெளிச்சத்தைக் கைகளால் மறைத்துக் கொண்டாள். வெட்டி விடப்பட்ட புல்வெளிக்குப் பின்னால் சாலை யில் பலர் சைக்கிளில் ஏறிக்கொண்டு வெகுவேகமாக எங்கேயோ போய்க் கொண்டிருந்ததைப் பார்த்தாள். அதெல்லாம் அலை மோதிக்கொண்டு எங்கோ செல்வது போலவே அவளுக்குப்பட்டது.

வீட்டின் மற்றொரு மூலையிலிருந்து ஒரு சிறுவன், அவளுடைய மகன்தான்—அவள் முன் தோன்றினான். யாரோ பின்னாலிருந்து உதைத்ததனால் பல்டி அடித்ததுபோல பரபரப்புடன் காணப்பட் டான். எப்படியோ சமாளித்துக்கொண்டு, வீட்டின் முன்னால் தன் தாயாரின் முன் நின்றுகொண்டு, "நான் போகட்டுமா? போகட்டுமா?" என்று கெஞ்சினான்.

அவள் மனம் வருந்தினாலும், விளக்கைப் பிடித்திருந்த கை லேசாக நடுங்கினாலும், ஒரு தாயாருக்குள்ள நிதானத்தை இழக் காமல், தன் குமாரனுடைய நிலையையும் தெளிவாகத் தெரிந்து கொண்டு "வேண்டாம், வில்லி, நீ உள்ளே சென்று படுக்கைக்குப் போவதே நல்லது" என்றாள்.

அதைக் கேட்ட அச்சிறுவன் ஒரு குதிரைக் குட்டியைப்போல் துள்ளினான். மறுபடியும் தாயாரிடம் கெஞ்சினான். "ஓம்மா! ஓம்மா! நான் போக முடியாதா? தயவுசெய்து நானும் போக அனுமதி கொடு, நான் போக முடியாதா; நான் போகக்கூடா தாம்மா?" அவன் முகம் சிணுங்கியது.

"வில்லி, இப்போழுது மணி ஒன்பதரை!" என்று படுக்கைக் குச் செல்லும் நேரம் வந்துவிட்டதென்பதை அவனுக்கு நினைவூட்டி னாள். ஆனால் அவன் சாந்தியடையவில்லை. எனவே அவன் சமா தானத்திற்கு வந்தான். "அந்த மூலைவரையிலுமாவது போய்



வருகிறேன் அம்மா. மூலைவரையில்தான் 'மா'" என்று மன்றாடினான்.

காலையிலிருந்து மேலும் மேலும் விரைந்து வரும் மனிதரின் காலோசையும், இரைச்சலும் கேட்டன. எவனோ ஒருவன் கையில் மெதாடிஸ்ட் தேவாலயத்திலுள்ள மணிக்கூண்டின் கயிறு அகப் பட்டுக்கொண்டது. கோவில் மணி ஒலிக்க ஆரம்பித்துவிட்டது. மேகத்திலிருந்து எழுந்த நாதம்போல, கோவில் மணியோசை அந்த இரவில் நகர மக்களின் இதயத்தில் எதிரொலியை எழுப்பிக் கொண்டிருந்தது. மணியசையும்போதெல்லாம் மக்கள் மனமும் அசைந்தது; இருதயமும் துடித்தது.

"அந்த மூலைவரையில் 'மா'" என்று சிறுவன் மறுபடியும் தன் தாயாரைப் பார்த்துக் கெஞ்சினான்.

"வில்லி, இப்பொழுது மணி ஒன்பதரை" என்று கண்டிப் பாகக் கூறி அவள் அனுமதி தர மறுத்துவிட்டாள்.

## VI

டாக்டர் டிரெஸ்காட்டின் பங்களா மாலை ஒளியில் கொஞ்சம் கொஞ்சமாக மங்கி மறையலாயிற்று. கருவானத் திரையின்மீது அதன் வரி வடிவங்கள் சிறிது சிறிதாகப் பொலிவிழந்து மங்கின. சுற்றுப்புறங்களெல்லாம் கூட மிக அமைதியாக இருந்தது. உண்மையை உரைக்க வேண்டுமானால் அங்கு நிலவிய அமைதியில் பக்கத்து வீட்டு, ஹன்னிகனின் நாய்கூடத் தன்னைக் கண்டிப்பதற்கு ஒருவருமில்லை என்று நினைத்துத் தான் போகக்கூடாத இடங்களுக் கெல்லாம், தைரியமாக இரை தேடிச் சென்றது. அந்த நாய் டிரெஸ்காட்டின் காம்பவுண்டுக்குள் நுழைந்து, அவர் மிகுந்த பிர யாசையுடன் வெட்டி அழகுபடுத்தியிருந்த புல் தரையைத் தன் கால்களால் பிராண்டியது. இந்தப் பகுதிக்கே அந்தச் சமயத்திற்கு தான்தான் பயங்கர மிருகம் என்பதுபோல் அது தன்னை நினைத்துக் கொண்டது. தட்டுத் தடங்கலேதும் இல்லாத அமைதி.

சிறிது நேரங்கழித்து அவ்வழியே சென்ற ஹென்ரியின் தோழன் பீடர் வாஷிங்டன்—அவ்வீட்டின் முன்னின்று ஒரு சீழ்க்கை யடித் துத் தனது வருகையைத் தன் தோழனுக்கு அறிவித்தான். ஆனால் ஹென்ரியின் அறையிலிருந்து சிறு வெளிச்சம்கூடத் தெரியவில்லை. எனவே அவன் தன்வழிச் சென்றான். தெரு விளக்குகளிலிருந்து வீசிய ஒளிக்கதிர்கள் டிரெஸ்காட் மாளிகைமீதும், புல் தரையின் மீதும் பாற்கடல் அலைகளெனப் படர்ந்தன. இவ்வெளிச்சத்தில்

பாதையோரத்திலிருந்த செடிகள் புல் தரையில் தங்கள் நிழல்களைப் பதித்தன.

அந்த வீட்டின் கோடியிலிருந்த ஜன்னலிலிருந்து ஒரு சிறு புகைச்சுழல் கிளம்பிப் பக்கத்திலிருந்த செர்ரி மரத்தின் கிளைகளில் மெதுவாகப் படர்ந்தது. அதைத் தொடர்ந்து அதேயிடத்திலிருந்து கிளம்பிய புகைப்படலங்கள் மேலும் மேலும் அதிகரித்துச் சிறிது நேரத்தில் கரையை உடைத்துக்கொண்டு ஓடும் வெள்ளத்தைப்போல், அந்தப் புகை மண்டலம் பழங்கள் குலுங்கிக்கொண்டிருந்த செர்ரி மரத்தின் கிளைகளையெல்லாம் பார்க்க முடியாதபடி மறைத்து விட்டது. ஒரு குரங்குப் பட்டாளம் அம்மரத்தின்மீது படையெடுத்து அதைச் சின்னாபின்னப் படுத்தியிருந்தால்கூட அதை எவரும் அச்சமயம் கவனித்திருக்க முடியாது.

ஒரு விநாடிக்குப் பிறகு அந்த ஜன்னலில் தோன்றிய ஒளி அதன் நான்கு கண்ணாடிகளும் ரத்தத்தினால் பூசப்பட்டனவோ என எண்ணும்படி பிரகாசித்தது. உட்புறம் தீப்பிடித்து எரிந்துகொண்டிருந்தது. ஒரே நெருப்பு! எங்கும் பெரு நெருப்பு! ஒன்றிலிருந்து இன்னொன்றுக்குப் பற்றிக்கொண்டு தீ ஜ்வாலைகள் படர்ந்தன. படைத்தலைவனின் உத்தரவுக்குப் பணிந்து வீரர்கள் அணியில் பரபரப்புடன் நுழைவதுபோல் நெருப்பின் ஜ்வாலைகள் ஒன்று சேர்ந்தன. தெருவிலிருந்து பார்ப்பதற்கு, அது குடியிருப்பதற்கு எவ்வகையிலும் ஏற்ற ஒரு அமைதியான வீடு என்ற தோற்றந்தான் உண்டாகியது. அதில் வசிப்பவர்கள் நிம்மதியாக உறங்கி ஆனந்தமாக இன்பக் கனவுகள் கண்டு கொண்டிருப்பர் என்றுதான் எண்ணத்தோன்றும். அந்த வீட்டின் உட்புறத்திலிருந்து எழுந்த இந்த தீ ஜ்வாலைகளின் 'சட சட' வென்ற சப்தத்தைத் தெருவிலிருந்த எவரும் கேட்டிருக்கமாட்டார்கள்.

செக்கச் செவேலெனப் பிரகாசித்த அந்த ஜன்னல்களின் கண்ணாடிகள் சிறிது நேரத்திற்கெல்லாம் கலகலவென்ன வெடித்து முறிந்துச் சிதறின. மற்ற ஜன்னல்களிலும் நெருப்பு ஜ்வாலைகள் வீசின. பேய்களின் உறைவிடமான பாழடைந்த கட்டிடத்தின் வெடிப்புகளிலீருந்தெல்லாம் பயங்கர உருவங்கள் தெரிவதுபோல் அந்த வீட்டினின்று கிளம்பிய நெருப்பு ஜ்வாலைகள் தோற்றமளித்தன. தீயிட்டுக் கொளுத்துவதையே தொழிலாகக் கொண்டவர்கள் திட்டமிட்டுச் செயல் புரிந்தால்கூட இதைவிடப் பயங்கரமான முறையில் எதையும் செய்திருக்க முடியாது.

இப்போதுதான் ஒரு மனிதனின் குரல் முதன் முதலாகக் கேட்டது. "தீ, தீ, தீ" என்று அந்தக் குரல் ஒலித்தது. ஹன்னிகன் ஆவேசம் கொண்டவனைப்போல் தன் புகைக் குழாயை விட்டெறிந்தான், அவனுக்கு மூச்சுத் திணறியது. தான் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து ஒரே குதியாகக் குதித்து, வேலியை ஒரே தாவில் தாண்டிக்கொண்டு, டிரெஸ்காட் மாளிகையின் முன்வாசலை யடைந்தான். வாயிற் கதவை தடதடவென்று தன் கை முஷ்டிகளால்



இடித்தான். அவன் கைகள் சம்மட்டியோ எனத் தோன்றின. உடனே டிரெஸ்காட்டின் மனைவி இரண்டாவது மாடியின் ஜன்னலிலிருந்து எட்டிப்பார்த்தாள். யாரோ டாக்டரைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்று எண்ணிய அவள், கதவைத் தட்டியவன் வார்த்தைகளைக் கேளாமலே, "டாக்டர் வீட்டிலில்லை. உங்கள் பெயரைச் சொல்லிச் சென்றால் வந்தவுடன் அவரிடம் சொல்லுகிறேன்" என்று சொல்ல வாயெடுத்தாள். ஹன்னிகன் பரபரப்புடன் இரைந்துகொண்டிருந்தான். ஒரு நிமிஷம் அவன் பேச்சு தொடர்பின்றி சப்தம் மட்டுமே கேட்டது. ஆனால் வந்தவன் வியாதியஸ்தனல்ல வென்பதை மட்டும் மிஸஸ் டிரெஸ்காட் தெரிந்து கொண்டாள்.

ஜன்னலிலிருந்தபடியே, வெளியே தலையை நீட்டி, "என்ன?" என்று கேட்டாள்.

"உங்கள் வீடு தீப்பற்றி எரிகிறது; நீங்களெல்லோரும் சிறிது நேரத்தில் வெந்து சாம்பலாவீர்கள்; சீக்கிரம் வெளிக்கிளம்புங்கள். இல்லாவிட்டால்..........." அவன் குரல் தெருவெல்லாம் மூலைக்கு மூலை எதிரொலித்தது. அவன் குரலுக்குப் பதில் சொல்லுவது போல கற்தரை மீது பல பேர்களின் காலடியோசை கேட்டது. அவர்களுள் ஒரு மனிதன் மட்டும் அசுர வேகத்துடன் தலைதெறிக்க ஓடிவந்தான். அவன் லேவாண்டர் நிற சராய்களை அணிந்திருந்தான். பகட்டான பட்டுத் துணி நாடாவினால் சுற்றியிருந்த ஒரு தொப்பி அவன் கையில் பாதி நசுங்கிக் கிடந்தது.

வீட்டின் முன் வாயிலை ஹென்ரி அடைந்தபொழுது அவனுக்கு முன்னால் வந்த ஹன்னிகன் ஒரு அடி கொடுத்து வாயிற்பூட்டை உடைத்து விட்டான். புகைப்படலம் அவர்களைச் சூழ்ந்தது. ஹென்ரி அதனுட் புகுந்து தலையைத் தாழ்த்திக் குனிந்தபடியே சென்றான். ஹன்னிகன் குழப்பத்தில் போட்ட இரைச்சலிலிருந்து அவன் தெரிந்துகொண்டது ஒன்றுமட்டுந்தான். ஆனால் எந்த உணர்ச்சியோ அவனைப் பயத்தால் நடுங்கவைத்தது. கூடத்தில் தொங்கிக் கொண்டிருந்த "உறுதிமொழியில் கையெழுத்திடும் சாஸனம்" என்ற பலகை மாட்டியிருந்த கயிற்றில் தீயின் செந்நாக்குப் பட்டு, அது கீழே விழுந்து ஒரு வெடிகுண்டின் ஓசையைப்போல் பயங்கரமாக ஒலித்தது. பைன் மரங்களினூடே புகுந்த மாரிக்கால காற்றைப்போல் தீ அக்கட்டிடத்தில் பரவியது.

படிக்கட்டின் உச்சியில் மிஸஸ் டிரெஸ்காட் கையை ஆட்டி ஆட்டி ஏதோ சொல்லிக்கொண்டிருந்தாள். இரு கைகளும் நாணல் சுள்ளிகள்போல் உணர்ச்சியற்றுக் கிடந்தன. "ஜிம்மி! ஜிம்மி! ஜிம்மியைக் காப்பாற்றுங்கள்" என்று அவள் ஹென்ரியைப் பார்த்துக் கத்தினாள். இதைக்கேட்ட ஹென்ரி அவளைத் தாண்டிக்கொண்டு ஒரே பாய்ச்சலாக உள்ளே நுழைந்தான். வீட்டுக் காரியஸ்தருக்கு ஒரு காலத்தில் இரண்டாவது உதவியா

ளாக் பணியாற்றியபோது பழக்கப்பட்ட வழிமூலம் மேல் மாடியை யடைந்து அவன் மறைந்தான்.

ஹென்னிகன் அவனைத் தொடர்ந்து படிக்கட்டுகள் வழியே ஏறினான். பித்துப் பிடித்தவள்போல் நின்று கொண்டிருந்த மிஸஸ். டிரெஸ்காட்டைப் பற்றி வெளியில் இழுத்தான். அவள் முகம் பேயறைந்ததுபோல் வெளிறிப்போயிருந்தது. 'நீங்கள் உடனே கீழே செல்லவேண்டும்' என்று அவன் அடிவயிற்றிலிருந்து கத்தினான்.

பதிலுக்கு, "ஜிம்மி, ஜிம்மி, ஜிம்மியைக் காப்பாற்றுங்கள்" என்றுதான் அவளால் வீறிட முடிந்தது. அவள் உளறிக் கொண்டிருக்கையிலேயே அவன் அவளைப் பற்றிக் கீழே இழுத்துக்கொண்டு வந்தான்.

அவர்களிருவரும் வீட்டிற்கு வெளியே புல்வெளிக்கு வந்த பொழுது ஒருவன் அவ்வழியே வீட்டை நோக்கி ஓடிவந்தான். மூடியிருந்த ஒரு கதவை அதன் கீலிலிருந்து ஒரு உதையில் பெயர்த்துத் தரையில் விட்டெறிந்தான். வெறி பிடித்தவன் போன்று ஒவ்வொரு கதவாகப் பிடுங்கி எறிந்தான். பைத்தியம் போன்று ஆவேசத்துடன் அவன் செயல் புரிந்தான்.

ஹென்னிகன் கூக்குரலிட்டான்......'மிஸஸ் டிரெஸ்காட்டைப் பார்த்துக் கொள்ளுங்கள்.........' டிரெஸ்காட் மாளிகை தீப்பற்றி எரிகிறது என்ற செய்தித் தந்தியைவிட வேகமாகப் பரவியது. ஒருவன் மணிக்கட்டை யசைத்தான். அண்டை வீட்டுக்காரன் பறந்தோடினான். தெரு மூலையிலிருந்த நெருப்புப்படை விடுதியை அடைந்தான். ஹென்னிகனும், மிஸஸ் டிரெஸ்காட்டும் தள்ளாடித் தள்ளாடி வீட்டிற்கு வெளியே வந்துகொண்டிருந்தபோதே நெருப்புப் பெட்டியிலிருந்து அந்த பயங்கர "விசில்" சப்தம் கேட்டது. பார்க்கிலிருந்தவர் இந்த அலறலைக் கேட்டனர். பாண்டு வாத்தியக் குழுவின் தலைவன் அப்போது ஒரு ராணுவ அணி வகுப்பின் வெற்றிக் கீதத்தை இசைக்கவிருந்தான். அபாய அறிவிப்பைக் கேட்டதும் அவன் கை தானாகக் கீழே விழுந்தது.

## VII

மாடிக்கூடத்தில் ஹென்ரி தலைவிரிகோலமாகக் காலை உதைத்து உதைத்து முன்னேறிக் கொண்டிருந்தான். சுவர்களிருந்த நிலையைக் கொண்டுத் தடவித்தடவி வழியை நிதானிக்க முயற்சித்தான். சுவர் சூடேறி விட்டதால் அப்படிச் செய்யக்கூடவில்லை. சுவர் காகிதங்களெல்லாம் எரிந்து கருகிப் போயிருந்தன. எந்த நிமிஷத்திலும் அவன் கைகளுக்குக் கீழேயிருந்து தீ ஜ்வாலை குமுறிக்கொண்டு கிளம்பலாம்.

'ஜிம்மி' என்று அழைத்தான்.

அவன் உரக்கக் கூப்பிடவில்லை. ஆர்த்தெழுந்த தீப்பிழம்புகள்



அவன் குரலை ஒட்டுக்கேட்டுவிடும் என்று பயந்தான் போலும்!
"ஜிம்மி, ஓ ஜிம்மி," என்று மறுபடியும் கூப்பிட்டான்.

இடறி விழுந்தான், மேல் மூச்சு வாங்கியது, சமாளித்து எழுந்தான். எப்படியோ விரைந்து ஜிம்மியின் அறைக் கதவை நெருங்கி அதை உடைத்தெறிந்தான். அச்சிறு அறையில் புகை இன்னமும் உட்புகவில்லை. வீட்டை ஆக்ரமித்திருந்த நெருப்பின் செந்நிற ஜ்வாலையில் அவ்வறை மங்கிய ஒளி பெற்றிருந்தது. அப்பொழுது தான் இரைச்சல் கேட்டுச் சிறுவன் விழித்திருந்தான். படுக்கையின் மீது உட்கார்ந்திருந்தான். அவன் உதடுகள் சற்றே விரிந்தன. கண்கள் அகல விழித்துக் கொண்டிருந்தன. தீயின் வெளிச்சம் அவன் வெள்ளுடையை ஒளிரச் செய்தது. கதவு திறந்ததும் அவன் முன் நின்றது அவனுடைய நண்பனின் பேயுருவம்! பயத்தால் நடுங்கிய அந்த நீக்ரோவின் கரிய தோற்றம். அவன் கம்பளிச் சட்டை பொசுங்கியிருந்தது. பயங்கரக் கள்ளர் தலைவன் ஒரு குழந்தையைக் களவாடிச் செல்வதுபோல் அவன் சிறுவன் மேல் பாய்ந்து ஒரு போர்வையில் அவனை அப்படியே சுருட்டிக் கொண்டான். வழக்கம்போல் முகத்தைச் சுருக்கிப் பேசுவதற்குப் பதில், ஜிம்மி பயங்கரமாகக் கூக்குரலிட்டான். பேராபத்தின் பயத்தினால் கதறும் ஒரு கன்றின் குரலென அது ஒலித்தது. ஜான்ஸன் அவனைச் சுமந்து கொண்டு கூடத்தின் புகை மண்டலத்தில் புகுந்து தடுமாறும்பொழுது ஜிம் அவன் கழுத்தைச் சுற்றி அணைத்துத் தன் முகத்தைப் போர்வைக்குள் புதைத்துக் கொண்டான். போர்வைக்குள் புதைந்த வாயாலேயே அவன் 'அம்மா, அம்மா!' என்று இருமுறை அழைத்தான்.

கையில் தாங்கிக்கொண்டிருந்த சிறுவனுடன் படிக்கட்டுகளின் உச்சிக்கு ஜான்ஸன் வந்தபொழுது சட்டென்று அவன் பின்னோக்கி நகர வேண்டியிருந்தது. அவனைச் சுற்றியிருந்த புகையினூடே கீழ்க் கூடம் முழுவதும் ஒரே தீப்பிழம்பாக எரிந்துகொண்டிருந்ததைக் கண்டான். ஜிம்மி சற்றுமுன் கதறியதுபோல் அவன் உதவிக் கென்று கத்திப்பார்த்தான். பயத்தால் அவன் கால்கள் வைக்கோல் காரைகள்போல் மடிந்து மடிந்து விழத்தொடங்கின. அப்படியே ஆபத்தான பாதையைக் கடந்து மேற்கூடத்தின் வழியாகப் பின் னோக்கியே நடந்தான். அவன் போன போக்கிலிருந்து எரியும் வீட்டி லிருந்து தப்பும் எண்ணத்தை-ஏன் அந்த் விருப்பத்தையே கைவிட்டு விட்டான் என்றே எண்ணத் தோன்றியது. அடிமைப் பெற்றோர் களுக்கு அடிமையாகவே பிறந்து அடிமையாகவே வளர்ந்த அவன் தன்னை இந்தப் பெருந்தீக்கும் இரையாக்கிக்கொள்ளத் தயங்க வில்லை. தீக்குக்கூட அவன் அடிமையாகி விட்டிருந்தான்.

சிறிது முன்பு வீட்டை நோக்கி வருகையில் பட்டு நாடா சுற்றியிருந்த தன் தொப்பியை உணர்ச்சியின்றிப் பற்றியிருந்ததுபோல் ஜிம்மியை அவன் தன்னையுமறியாது உறுதியாகப் பற்றிக்கொண்டான்.

படுக்கையறையிலிருந்து பின்புறம் படிக்கட்டுகள் தனியாக ஒரு அறைக்குச் சென்றது அப்போதுதான் அவனுக்கு ஞாபகம் வந்தது. அந்த அறையில் டாக்டர் தன் தொழிற்கூடமும், ஆராய்ச்சிசாலையும் அமைத்திருந்தார். பல சமயங்களில் அதில் அவருடைய ஓய்வுப் பொழுதையும் கழிப்பதுண்டு. அவர் தொழில் சம்பந்தப்பட்ட படிப்பையும் கவனித்து, ஆராய்ச்சிகளையும் அங்குதான் நடத்தி வந்தார்.

ஜான்ஸன் அந்தப் படிக்கட்டை நினைவிற்குக் கொண்டு வந்த பொழுது நெருப்பைப் பற்றிச் சற்றுமுன் அவனுக்கிருந்த பயம் ஓடி ஒளிந்தது. நெருப்பு இப்பொழுது அவனுக்குப் பழக்கமாகி விட்டது. அப்பழக்கமே அதனிடமிருந்த பயத்தை மறைத்து விட்டிருந்தது.

உணர்ச்சிகள் ஸ்தம்பித்த அந்த நிலையில் பயத்தைப் பற்றிய அடையாளமேயில்லை. ஆனால் இப்பொழுது பாதுகாப்பான வழியொன்றைக் கண்டபின், பழைய அச்சம் பிடித்துக்கொண்டது. அவன் தீயின் ஜ்வாலைக்கு இரையாக முடியாதே! அவன் அதனுடன் போரிடத் துணியவில்லை. இரண்டு தடவை நெருப்புக்குப் பயந்தான். ஆனால் அதற்குப் பணியவில்லை. ஒரு முறை பணிந்தான். ஆனால் அப்போது அவனுக்குப் பயமில்லை.

"ஜிம்மி," என்று அழைத்துக்கொண்டே அவன் தள்ளாடித் தடுமாறிச் சென்று கொண்டிருந்தான். அவனுடைய விம்மல்களில் அவன் மார்பில் ஒட்டியிருந்த அச்சிறு ஜீவனும் பங்கு பெற வேண்டுமென்று விரும்பினான். இந்த நீண்ட போராட்டத்தில் அதனிடமிருந்து ஒரு அசைவும் வெளிப்படவில்லை. ஆனால் அந்தப் பிஞ்சு துவண்டு அமைதியாயிருந்தது.

இரண்டு அறைகளைக் கடந்து படிக்கட்டின் மேல்நிலைக்கு வந்தான் ஜான்ஸன். கதவைத் திறந்தவுடன் பெரும் புகை அலைகள் அவன் முகத்தில் வீசின. ஜிம்மியை இறுக அணைத்த வண்ணம் அவற்றினூடே விரைந்தான். புகையில் பல பொருட்கள் எரிந்த நாற்றங்கள் கலந்து வீசின. நாற்றமும், மணமும், பொறாமை, பகைமை, வெறுப்பு முதலிய குணங்களே உயிர்த்தெழுந்து விட்டன போல் தோன்றின. ஆராய்ச்சிக் கூடத்தின் கதவுக்கு முன் வந்த போது அங்கே வேறு விதமான காட்சியைக் கண்டான். ஒரு புஷ்பத் தோட்டமே தீப்பற்றியெரிந்தால் எப்படியிருக்குமோ, அப்படியிருந்தது உட்புறம்! எங்கும் பச்சை, ஊதா, கருஞ்சிவப்பு, நீலம், ஆரஞ்சு, நீலங்கலந்த சிவப்பு, இப்படிச் சுடர் விட்டெரிந்தது நெருப்பு! உயர்ந்த பவளத்தின் நிறம் போன்ற ஒரே ஜ்வாலை ஒரு பக்கம், இன்னொரு இடத்தில் கந்தகக் குவியல் போன்ற ஏதோ சில பொருள்கள் இந்த நெருப்பு ஜ்வாலையின் மத்தியில் எரிந்து பளிச்சென்று தெரிந்தன. இந்த அதிசயங்களையெல்லாம் கொடும் புகையினூடே, பெருமூச்சுகளின் மத்தியில், திருப்பங்களின் நடுவேதான் காணமுடிந்தது.



ஜான்ஸன் நிலைப்படியின் உச்சியில் ஒருகணம் நின்றான். சகதிக் கடலில் சிக்கியவனின் துயரக்குரல் போன்று நீக்ரோக்களுக்கு உரித்தான அவலக்குரலில் உதவிக்கான ஒரு கூக்குரலிட்டான். அந்த அறையினுள் விழுந்தடித்து ஓடினான். ஆரஞ்சு நிற ஜ்வாலையொன்று ஒரு சிறுத்தையின் பாய்ச்சலைப்போல் சீறி ஜான்ஸன் அணிந்திருந்த உயர் ரக சராயை எரிக்கத் தொடங்கிற்று. அவன் உடலெல்லாம் வெந்து கொண்டிருந்தது. அவன் முன்னால் ஏதோ வெடித்தது போன்ற ஒரு சப்தம். ஏதோ புதிய சில பொருள்கள் தீயில் அகப்பட்டு எரியத் தொடங்கின. புதியதொரு ஜ்வாலை கிளம்பிற்று. நடுக்கமுறும் ஒரு பெண்மணியின் உருவத்தைப் போன்று நீலநிறமுடன் எழுந்த அந்த ஜ்வாலை அவனையும், ஜிம்மியையும் சூழ்ந்து கொண்டது. ஜான்ஸன் கிறீச்சிட்டுக் கொண்டே நீக்ரோ ஜாதியினர் ஓட்டப்பந்தயத்தில் குனிவதுபோல் குனிந்து அந்தத் தீ ஜ்வாலைக்கு இடது பக்கமாக வளைந்து செல்ல முயற்சித்தான். ஆனால் அந்த ஜ்வாலை அவனை முந்திக் கொண்டது. ஒரு பருந்தின் நகங்கள் இரையைப் பிடித்துக் கொள்ளுவதுபோல் அந்த ஜ்வாலை அவன் ஒதுங்கியபோது நன்றாகவே பிடித்துக் கொண்டு விட்டது. கழுத்து ஒடிந்தவனைப்போல் தலையைக் குனிந்து கொண்டே ஜான்ஸன் இடப்பக்கமும் வலப்பக்கமும் மாறி மாறி முன்னேறினான். மேலும் செல்ல சக்தியற்றவனாக அப்படியே மல்லாந்து தரையில் விழுந்தான். போர்வைக்குள் சுற்றப்பட்டிருந்த, சிறுவனின் அசைவற்ற உருவம் அவன் கையிலிருந்து நழுவி உருண்டு ஜன்னலின் கீழே ஒரு மூலையை அடைந்தது.

ஜான்ஸன் விழுந்த இடம் ஒரு பழைய மேஜையினடியில். அவன் தலை அந்த மேஜையின் நேர்க் கீழேயிருந்தது. அதன் மீது வரிசையாக சில ஜாடிகள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் பெரும்பாலானவை இந்தக் கலவரத்தில் அப்படியே யிருந்தன. ஆனால் ஒன்றுமட்டும் நெருப்பில் உருக ஆரம்பித்து, நெளிந்து ஒளிரும் பாம்பைப் போன்று காணப்பட்டது.

பார்த்துக் கொண்டிருக்கும்போதே அந்தக் கண்ணாடி ஜாடி சுக்கலாக உடைந்தது. உள்ளிருந்து செவேலென்று ஒரு திரவம் பாய்ந்து மேஜையின் மேல்புறமெல்லாம் ஒரு பாம்பு நெளிந்து போவதுபோல் ஓடிற்று. இப்படியும் அப்படியும் பரவி கடைசியில் மேஜையின் வாட்டத்திற்கேற்ப சாய்வான பக்கம் வழிந்தோடியது. வழிந்தோடிய கொதிக்கும் திரவம் மேஜையின் ஓரத்திலிருந்து கீழே உருக்குத் தாரை போல் தரைமீது விழுந்தது. விழுந்தபோது மேஜைக்கடியில் உணர்வற்றுக் கிடந்த ஜான்ஸனின் மூடிய கண்கள் மீதும், முகத்தின் மீதும் நன்றாகப் பரவிப் படர்ந்து தரையில் சிந்தியது. ஒரு சிவப்பு நாகம் படமெடுத்து ஒருவனை முகத்தில் தாக்கினால் எப்படியோ, அப்படியிருந்தது. அந்தக் கொதிக்கும் திரவம் அவன் முகத்தில் பரவியது. இத்துடன் போதாதென்று, மேலும் சில குப்பிகள் வெடித்து சுவற்றிலும், வெளிக் கிளம்பிய

திரவங்கள் மேஜை மீதிலிருந்து சொட்டு சொட்டாகத் தொடர்ந்து ஜான்ஸனின் முகத்தின் மீதும் விழுந்து கொண்டே இருந்தது.

## VIII

அந்த ஊரே டாக்டர் டிரெஸ்காட் வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. ஊர் முழுவதும் ஒரேயிடத்தில் வந்து குவிந்து கொண்டிருந்தது. நயாகரா சதுக்கத்தின் வழியாக டஸ்கரோரா குழாய்க் கம்பெனியின் தீயணைப்புப் படை அதிவேகமாக வந்து கொண்டிருக்கும்போதே சிப்லே குழாய்க் கம்பெனியின் முதலாவது நெம்பர் தீயணைப்பு என்ஜின் "பிரிட்ஜ் தெருவு மேடு" வழியாக விரைந்து கொண்டிருந்தது. இதற்கிடையில் தொட்டி, ஏணிகள் அமைப்பதில் 'வல்லுநர்களின் ஒரு கோஷ்டி சதுப்பு நிலத்தில் குறுக்கே பாய்ந்து வேகமாக வந்து கொண்டிருந்தது. நெருப்பணைக்கும் படையினரின் தலைவன், ஒயிட் லேபிள் சுருட்டுக் கடையின் முன்னறையில் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தான். முதன் முதலாக அபாயச் சங்கொலி கேட்ட மாத்திரத்தில் பணத்துடன் தப்பிச் செல்லும் மனிதனைப்போல் அவ்விடத்தை விட்டுச் சிட்டாய்ப் பறந்தான்.

ஒயிலோம் வில்லியில், இதுதான் அந்த ஊரின் பெயர்—இம்மாதிரிச் சமயங்களில் பலபேர் கோவில்களிலும், பள்ளிகளிலும் உள்ள மணியோசையைக் கவனமாகக் கேட்பதுண்டு. இந்த மணியோசை அபாய நிலையை அறிவிப்பதோடு நிற்பதில்லை. நெருப்பு முழுவதும் அணையும் வரை இவ்விடங்களிலிருந்து மணிகள் ஒலித்துக் கொண்டிருக்கும். எந்த மணி அதிக ஒலியை எழுப்புகிறது என்பதைக் கூடக் கவனிப்பவர்களும் உண்டு. நான்கு மைல் தொலைவில் பண்ணைகளின் நடுவேயுள்ள "வேலிசர்ச்" மணிக்கூண்டு கூட பிறர் எழுப்பும் ஓசையைக் கேட்டு அவர்கள் எழுப்பிய ஓசையுடன் தன்னுடைய அநுதாபக் குரலைக் கலந்தது.

அந்தச் சமயம் டாக்டர் டிரெஸ்காட் சுருட்டைப் பிடித்த வண்ணம் வெகு சாவதானமாகவே தனது கோச் வண்டியில் வீடு நோக்கி வந்து கொண்டிருந்தார். அவர் மனம் நிம்மதியாயிருந்தது. அன்று அவர் கவனித்த அந்தக் கடைசிக் கேஸ் அவருடைய கட்டுக்கடங்கி விட்டது. ஒரு கொடிய விலங்கைத் தன் வசப்படுத்தியது போன்ற மகிழ்ச்சியுடன் அவர் வந்து கொண்டிருந்தார். அப்போதுதான் அந்த நீண்ட அபாயச் சங்கு கேட்டது. உடனே தன் குதிரையை முடுக்கினார். அவர் வீட்டிற்கு இரண்டு மைல் தொலைவிலிருந்த புதியதாக நிர்மாணிக்கப்பட்ட தனிகர்கள் வாழ்ந்த ஒக்காஸ்ட் எனும் பகுதியில் எங்கோ தான் தீப்பற்றியிருக்க வேண்டுமென அவர் நினைத்தார். ஆனால் இரண்டாவது பேரொலி கேட்டு, அதன்பின் ஒரு அமைதியும் நிலவியபோதுதான், அந்த விபத்து தான் வாழும் பகுதியில் எங்கோ



நிகழ்ந்திருக்கிறது என்று அறிந்தார். அப்போது தன் வீட்டுக்குச் சுமார் பத்து வீடு தள்ளி வந்து கொண்டிருந்தார். சாட்டையை எடுத்துக் குதிரையை லேசாகச் சுண்டினார். உணர்ச்சியுள்ள குதிரை அது. வழக்கத்திற்கு மாறாகச் சாட்டை பிரயோகித்ததைக் கண்டு ஏதோ அவசரம் என்பதை உணர்ந்த அந்தக் குதிரை தாவிப் பாய்ந்தது. லகான்கள் இரும்புச் சட்டம் போல் விறைத்து நின்றன. டாக்டர் பின்புறமாகச் சாய்ந்து லகானைக் குறுக்கிப் பிடித்தார். தன்னுடைய வீட்டை அணுகிக் குதிரைகள் வேகமாக உள்ளே நுழைந்ததும், வெளி வாயிற் கதவு சாத்தியிருந்ததைக் கண்ட அவர், யார் வீடு தீப்பற்றிக் கொண்டிருக்கலாம் என ஒரு கணம் சிந்தித்தார். தீ அறிவிப்புப் பெட்டியை உடைத்த அந்த மனிதன் அவரை நோக்கி ஏதோ சொன்னான். அதற்குள்ளாகவே அவருக்கு விஷயம் விளங்கி விட்டது. குதிரையை வண்டியிலிருந்து அவிழ்க்கக் கூடவில்லை. அப்படியே அதன் போக்கில் விட்டு விட்டார்.

கதவுக்கு முன்னால் அவர் மனைவி பித்துப் பிடித்தவள் போல் ஒரு போர்வையில் தன்னைச் சுற்றிக் கொண்டிருந்ததைப் பார்த்தார். அவரைக் கண்டதும், "ஐயோ, ஜிம்மி! ஜிம்மியைக் காப்பாற்றுங்கள்" என்று அலறினாள்.

அவர் அமைதியை இழக்காமல் அசைவற்று நின்றார். "எங்கே, எங்கே இருக்கிறான் அவன்?" என்று அவளைக் கேட்டார்.

மிஸஸ் டிரெஸ்காட்டின் பேச்சு குளறியது. "மேலே, மேலே, மேலே" என்று மட்டுமே கூற முடிந்தது. கை இரண்டாவது மாடி ஜன்னலைக் காட்டிற்று.

ஹென்னிகன் அப்போதே "அந்த வழியாகப் போகவேண்டாம். அந்த வழியாகப் போக முடியாது" என்று இரைந்து கொண்டிருந்தான்.

டிரெஸ்காட் வீட்டின் மூலையைச் சுற்றி ஓடினார். நொடியில் அவர்களிடமிருந்து எங்கோ மறைந்து விட்டார். நடுக் கூடத்தின் வழியாக மேலே ஏறிச் செல்ல முடியாது என்பதை அங்கிருந்து பார்த்த முதல் பார்வையிலேயே தெரிந்து கொண்டார். அவர் நம்பிக்கையெல்லாம் இப்போது ஆராய்ச்சி அறையிலிருந்து மேலே சென்ற படிக்கட்டின் மீதுதான் இருந்தது. அந்த அறையிலிருந்து வீட்டுக்கு முன் புல்வெளியை நோக்கியிருந்த கதவு சாத்திப் பூட்டப்பட்டிருந்தது. பூட்டப்பட்டிருந்த பாகத்தில் ஒரு உதை கொடுத்தார். பலத்த சப்தத்துடன் கதவு திறந்து கொண்டது. உள்ளிருந்து வீசிய புகையில் டாக்டருக்கு மயக்கம் வந்து விடும் போல் இருந்தது. நன்றாகக் குனிந்தபடியே வர்ணப் புஷ்பங்கள் எரிந்து கொண்டிருந்தது போல் நெருப்புப் பிழம்பாக இருந்த அந்த ஆய்வுக் கூடத்தில் நுழைந்தார். வேல் போன்ற கூரிய அவரது பார்வை ஜன்னலுக்குக் கீழே தரையில் பொசுங்கிக் கொண்

டிருக்கும் போர்வைக்குள் ஒரு உருவத்தின் மீது விழுந்தது. தன் மகனை வாரியெடுத்து அலக்காக ஏந்திக்கொண்டு கதவருகில் வந்தபொழுது, கீழே புல்வெளியில் மக்களும், குழந்தைகளும் ஒரே கூட்டமாகக் கூடியிருந்ததைக் கண்டார். நகரிலுள்ள மக்களனை வரும் அவர் வீட்டில் கூடிவிட்டனர். அவர்கள் அவரையும், அவர் தூக்கி வந்த பொருளையும் தாங்கிக் கொண்டனர். ஈரப் போர்வை யாலும், நீராலும் அவர்களை நன்றாக நனைத்தனர்.

ஆனால் ஹன்னிகன் மட்டும் கத்திக்கொண்டே யிருந்தான். "ஜான்ஸன் இன்னும் உள்ளேயே இருக்கிறான். ஹென்ரி ஜான் ஸன் இன்னும் உள்ளேயே இருக்கிறான். குழந்தையைத் தேட, அவன்தான் முதலில் போனான். ஜான்ஸன் இன்னும் உள்ளேயே இருக்கிறான்."

டிரெஸ்கார்ட்டின் மங்கிக் கொண்டு வந்த உணர்ச்சிகளை அவன் போட்ட கூக்குரல்கள் தட்டி யெழுப்பின. அவர் உணர்வடைந்து விட்டார். தன்னைப் பிடித்துக்கொண்டிருந்தவர்களிடமிருந்து திமிறினார். தன்னை விடுவித்துக்கொள்ள அவர்களை எல்லாம் வாயில் வந்தபடி யெல்லாம் திட்டினார்—அவர் மருத்துவப் பள்ளி மாணவராயிருந்தபோது வெகு சரளமாக உபயோகித்த வசைமொழிகள் எல்லாம் எப்படித்தான் அவருக்கு நினைவு வந்ததோ? அவருக்கோ, அவர்களுக்கோ புரியாதபடி அத்தனை வசைமொழிகளையும் வீசித் தன்னை விடுவித்துக்கொண்டு மறுபடி யும் ஆய்வுக்கூடக் கதவருகில் விரைந்தார். அவரிடம் அவர்களுக்கு பயமிருந்தாலும் அவரை நிறுத்த அவர்கள் பெரு முயற்சி செய்தனர்.

இதற்குள்ளாக ரெயில்வேயில் 'பிரேக்மென்'னாக இருந்த ஒரு இளைஞன்—டிரெஸ்காட் வீட்டிற்குப் பின் தெருவில் குடியிருந்த வன்—ஆய்வுக் கூடத்தினுள் நுழைந்து ஏதோ ஒன்றைத் தாங்கி வந்து புல்வெளித் தரையின் மேல் கிடத்தினான்.

## IX

வீட்டின் முன்புறமிருந்த கூட்டத்திலிருந்து பல அதிகாரக் குரல்கள் கேட்டன. "ஏய், ஐந்தாம் நெம்பர், தண்ணீரைத் திருப்பு, யாரங்கே, ஒன்றாவது நெம்பர் அவர்களைப் போக விடு," என்றெல்லாம் குரல்கள் கேட்டன. கூட்டம் இப்பக்கமும், அப் பக்கமும் அசைந்து கொடுத்தது. கொழுந்து விட்டு வீட்டிற்கு மேல் எரிந்த தீயின் நாக்குகள் கூட்டத்திலிருந்தவர்கள் முகத்தில் செவ்வொளி பரப்பியது. அடுத்தத் தெருவிலிருந்து கணீரென்று மணியின் ஒலி கேட்டது. கூட்டம் அதைக் கேட்டது. ஆரவாரத் துடன் "இதோ மூன்றாவது படை வருகிறது; அங்கு வருவது நிச்சயமாக மூன்றாவது நெம்பர் தீயணைப்பு என்ஜின்தான்" என்று அதை வரவேற்றனர். இரைச்சலும், ஒழுங்கின்மையும் நிறைந்த



ஒரு புதிய கூட்டம் மோதிக்கொண்டு அங்கே தோன்றியது. ஒரு
சுருள் குழாய் பொருத்திய வண்டியையும் இழுத்துக்கொண்டு வந்
தது. சிறுவர்களிடமிருந்து மகிழ்ச்சி ஆரவாரம் எழுந்தது.
"இதோ மூன்றாம் படை" என்றனர் இளைஞர்கள். 'நெவர் டை'
குழாய்க் கம்பெனியின் மூன்றாம் படையை பேராவலுடன் வர
வேற்றனர் (இறப்பென்பதே இல்லாத படையாம் அது).
தேவதைகளால் செலுத்தப்படும் இரதம் போல் அதை மக்கள்
நினைத்தனர். வியர்த்து ஓய்ந்துபோன மக்களெல்லாம் புது
உற்சாகத்துடன் ஆரவாரத்தில் கலந்து கொண்டனர். சிறுவ
ரெல்லாம் அவர்கள் திறமையை மனமுவந்து பாராட்டினர்.
இரண்டாவது படையின் வருகைக்கு ஆரவாரித்தனர். நான்காம்
படை வந்தபொழுது கரகோஷம் செய்து வரவேற்கப்பட்டது.
இதில் சூழ்ந்திருந்த அவர்கட்கு 'தொட்டில்—ஏணிக் கம்பெனிக்
காரர்கள்,' பாலத்துத் தெரு மேட்டையே தமது பெரும் தளவா
டங்களால் அடைத்துக் கொண்டிருந்ததைக் கண்டு ஏக்கம் கொண்
டனர். இளைஞர் பொதுவாக நெருப்பை வெறுத்தனர். ஏன்—
பயப்படவும் செய்தனர். எவனுடைய வீடு பற்றி எரிவதையும்
அவர்கள் விரும்பவில்லை. இருப்பினும் பல கம்பெனிகளின் தீ
யணைப்புப் படைகளின் கூட்டத்தைக் காண்பதிலும் பேராரவாரத்
திற்கிடையே அவர்களுடைய வீரர்களின் தீரச்செயலைக் காண்பதி
லும் மிகவும் ஆவல் கொண்டனர்.

ஒவ்வொரு கம்பெனியின் தராதரத்தைப் பற்றியும் அவர்கள்
தனித்தனிப் பிரிவுகளாகப் பிரித்து அலசினர். தம்தம் கருத்துக்
களைச் சண்டையிட்டுக்கூட நிலைநாட்டினர். உதாரணத்துக்கு நான்
காவது படையினர் வாழ்ந்த பகுதியில் வாழும் எந்த இளைஞனிட
மும் வேறெந்தக் கம்பெனியின் சிறப்பையும் பாராட்டிப் பேசிவிட்டு
லேசில் தப்பிச் செல்லமுடியாது. இதேபோன்று மற்றொரு பகுதி
யில் அந்தப் பகுதி இளைஞனொருவனிடம் ஓய்லோம் வில்லியில்
சிறந்த தீயணைப்புப் படைக் கம்பெனி எதுவெனக் கேட்டால் ஒன்
றாவது படை என்ற பதிலைத்தான் அவனிடமிருந்து எதிர்பார்க்க
லாம். இம்மாதிரி சிறு சிறு அபிப்பிராயபேதங்களும், சச்சரவு
களும், அச் சிறுவர்களிடையே அப்போதைக்கப்போது நிகழ்ந்து
கொண்டிருந்த சம்பவங்களின் முக்கியத்தையும், அவரவர்
களுடைய ஞாபக சக்தியையும் அநுசரித்து மிக சகஜமாகக்
காணப்பட்டன.

நெருப்பணைக்கும் படையின் தலைவனான ஜான் ஷிப்லேயைப்
பற்றி அவர்கள் யாரும் உயர்வாக எண்ணவில்லை. அவன் என்
னவோ விண்ணிலிருந்து விழும் தேவ தூதனுடைய வேகத்தில்
நெருப்பினுள் பாய்ந்து செல்லுவது உண்மைதான். ஆனால் எரிந்து
கொண்டிருக்கும் வீட்டில் இப்படியும், அப்படியும் சாவதானமாக
ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருப்பவனைப்போன்று நடமாடிக்கொண்
டிருப்பான். ஏன், ஒரு சமயம் ஒரு சுருட்டுகூடப் பற்றவைத்துக்

கொண்டு சிந்தனையிலாழ்ந்திருக்கிறான். அமைதியே உருவான இந்த மனிதன் உயிர் போய்க்கொண்டிருந்த நிலையிலுங்கூட தன் குரலை உயர்த்திப் பேசமாட்டான். எனவே இவனைப் பற்றிச் சிறு பிள்ளைகள் உயர்வாக மதிக்காததில் வியப்பில்லை. அவன் அப்படியிருந்தும் நியணைப்புப் படையைச்சேர்ந்த எல்லாக் கம்பெனிக்காரர்களும் ஒவ்வொரு வருஷமும் ஷிப்லேயைத்தான் தங்களுக்குத் தலைவனாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். இது ஏன் என்பது ஊரில் சில பையன்களுக்கு விளங்கியதேயில்லை. ஆனால் இதன் காரணத்தை ஏதோ புரிந்து கொண்டவர்கள்போல் சிலர் நடிப்பதும் உண்டு. இடையிடையே தெரிந்ததுபோல் 'எங்கப்பா சொல்கிறார்' என்று தங்கள் அபிப்பிராயங்களையும் கலந்துகொள்வார்கள். தந்தைமார்கள் எல்லோரும் ஷிப்லேயையே வெகு உயர்வாக எண்ணியிருந்தனர் என்பது தெரிந்தது.

இந்தச் சமயத்தில் எரிந்து கொண்டிருக்கும் வீட்டின் மீது எந்தக் கம்பெனி முதலில் தண்ணீர் அடித்தது என்பதைப்பற்றி விவாதம் எழுந்தது. பெரும்பாலான பையன்கள் ஐந்தாவது படைக்குத்தான் அந்தப் பெருமை உரியது என்றனர். ஆனால் ஒன்றாவது படைதான் அதைச் செய்தது என்று பிடிவாதத்துடன் வாதாடிய பையன்களுமிருந்தனர். அதிகாரிகளுடைய உறவினர்களாயிருந்த சில பையன்கள் பாடு இந்த விவாதத்தில் திண்டாட்டமாகப் போய்விட்டது. இவ்விரு படையில் எதைப் புகழ்ந்து பேசுவது என்பதில் காரசாரமாக விவாதம் எழுந்தது.

கூட்டத்தினரிடையே இப்போது ஒரு முக்கிய சமாசாரம் வதந்திபோல் பரவ ஆரம்பித்தது. அதை அவர்கள் குசுகுசுவென ரகசியம் போலவே பேசிக்கொண்டனர். இதைக்கேட்ட பையன்களும் சற்று அமைதி யடைந்து மரியாதை காட்டத் தொடங்கினர். ஹென்ரி ஜான்ஸனும், ஜிம்மி டிரெஸ்காட்டும் எரிந்து சாம்பலானார்களென்றும் டாக்டர் டிரெஸ்காட்டும் பெருங் காயங்களுக்குள்ளானார் என்பதும்தான் அந்த வதந்தி. போலீஸ் அவர்களைத் தள்ளிக்கொண்டே யிருந்தனர். அதைக்கூட அவர்கள் உணரவில்லை. உயர்ந்த நிழல்கள்மீது கவலைக் கண்களுடன் பார்வையைச் செலுத்தினர்.

இந்தச் சமயத்தில் தனக்கு விஷயம் தெரியும் என்று சொன்னவன் முக்யத்வம் பெற்று விளங்கினான் அந்தக் கூட்டத்தில். அவன் எல்லாம் தெரிந்தவன்போல் மெல்லிய குரலில் முழு நிகழ்ச்சியையும் விளக்க முற்பட்டான். "அதோ—அந்த மூலையில்தான் சிறுவனுடைய அறையிருந்தது. அவனுக்கு அம்மையோ அல்லது அது போல் ஏதோ போட்டிருந்தது. அவனருகில் இந்த நீக்ரோ ஜான்ஸன் உட்கார்ந்திருக்கிறான். உட்கார்ந்தபடியே அந்தப் பையன் தூங்கிவிட்டான். தூக்கத்தில் அருகிலிருந்த விளக்கைத் தள்ளிவிட்டான். எல்லாம் எரிய ஆரம்பித்து விட்டது. டாக்டர் கீழே தன் அலுவலறையில் இருந்திருக்கிறார். உடனே மேலே ஓடிவந்



திருக்கிறார். அகப்பட்டுக்கொண்டு உள்ளே உடலெல்லாம் வெந்துவிட்டது. அவர்களை வெளியே கொண்டுவரப் போகிறார்கள்" என்றான்.

எப்பொழுதும் தன் முடிவான அபிப்பிராயத்தைக் கடைசியாகச் சொல்வதற்காகத் தள்ளிப்போட்ட மற்றொருவன், "ஓ, அவர்களனைவரும் இறந்துபோவதைப் பற்றிச் சந்தேகமே யில்லை. இந்த நெருப்பில் அகப்பட்டுக் கொண்டவர் எப்படிப் பிழைக்கமுடியும்? அனைவரும் செத்துத்தான் போவர். எல்லோரும் சாகத்தான் போகிறார்கள்" என்று அலட்சியமாகச் சொன்னான். கருவானில் உயர்ந்து எரிந்து கொண்டிருந்த தீயின் ஜ்வாலையைக் கூட்டத்தினர் அசையாது பார்த்துக் கொண்டிருந்தனர். நகரிலுள்ள மணிகளெல்லாம் ஓயாது ஒலித்துக் கொண்டிருந்தன.

புல்தரை வழியாகத் தெருவை நோக்கி ஒரு சிறு கூட்டம் இப்போது நகர்ந்தது. நெருப்பணைக்கும் படையின் பன்னிருவரால் மூன்று கட்டில்கள் வெளியே கொண்டுவரப்பட்டன. போலீஸ்காரர்கள் ஆள் நடமாட்டத்தைக் கண்டிப்பாக கட்டுப்படுத்திக் கொண்டிருந்தனர். இவர்களுக்கு அக்கூட்டத்தில் பாதை உண்டு பண்ணிக்கொள்வது அவ்வளவு கடினமாக இல்லை. கட்டிலைத் தூக்கிச் சென்றவர்களனைவரும் கூட்டத்தினர்க்கு நன்கு அறிமுகமானவர்களே. ஆனாலும் மணியோசைகளுக்கும், நெருப்புப் பற்றிய சூழ்நிலைக்கும் நடுவே அவர்களனைவரும் அயலார் போன்றே தோன்றினர். அந்த ஊரே அவர்கட்கு உண்மையாகவே மரியாதை செலுத்திற்று. ஸ்ட்ரெச்சரைத் தூக்கிச் சென்ற ஒவ்வொருவரும் ஒரு தீரனல்லவா? மிக கம்பீரத்துடன் நடந்தனர். சாவுக்கு வழி காட்டுவதுபோல் அல்லவா அவர்கள் அந்தச் சமயம் தோற்றமளித்தனர். சீக்கிரத்திலேயே எழும்பவிருக்கும் மூன்று சமாதிகளின் நினைவாக இறந்தவர்களின் பொருட்டு எழுந்த உயர்ந்த மரியாதையையும், பணிவான வணக்கத்தையும் இப்போதே அந்தக் கூட்டம் செலுத்தத் தொடங்கியது. முதல் ஸ்ட்ரெச்சரில் போர்த்தியிருந்த உருவத்தினைக் கண்டதும் ஒருத்தி 'கிரீச்' சென ஓலமிட்டாள். மக்களனைவரும் அமைதியாகவும், வருத்தங்கலந்த கோபத்துடனும் அவளைக் கண்டித்தனர். இதைத் தவிர பன்னிருவரும் தங்கள் சுமைகளைத் தூக்கிய வண்ணம் பாதை வழியே செல்கையில் வேறெவ்வித ஒலியும் கேட்கவில்லை.

பல்வேறு நெருப்பணைக்கும் கம்பெனிகளைப் பற்றிய சிறப்புக் கதைகளைப் பையன்கள் இப்போது பேசிக் கொண்டிருக்கவில்லை. பெரும் பகுதியினர் அந்த இடத்தை விட்டே விரட்டியடிக்கப்பட்டனர். கொஞ்சம் தைரியசாலிகள்தான் மஞ்சள் போர்வையால் போர்த்தப்பட்டிருந்த அந்த மூன்று உருவங்களையும் பக்கத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தனர்.

# X

டிரெஸ்காட் வீட்டின் எதிரே குடியிருந்தார் டென்னிங் ஹெகன்தார்ப். அவர் வயதான நீதிபதி. விபத்துக்குள்ளான குடும்பத்ினரை வரவேற்க நீட்டிய கைகளுடன் திறந்த வாயிற்படியண்டை காத்திருந்தார். காயமடைந்தவர்கள் அவர் வீட்டிலேயே சிகித்சைக்கு வைத்துக் கொள்ளப்பட்டனர். டாக்டர், அவருடைய மகன், அந்த நீக்ரோ—இவர்கள் மூவரும் இன்னும் உயிருடன் இருக்கின்றார்கள் என்று எல்லோருக்கும் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டதும் காயமடைந்தவர்களைப் பார்க்க மக்கள் வீட்டின் தாழ்வாரத்தில் கூடிவிட்டனர். அவர்களைக் கட்டுப்படுத்த ஒரு தனிப் போலீஸ்காரனே தேவைப்பட்டான். ஒரு கிழவி காயங்களுக்கு வைத்துக் கட்ட அற்புத மாவு கொண்டு வந்தாள். தன்னைக் கடந்து உள்ளே போகக் கூடாது என்று இடைமறித்த அதிகாரியைப் பார்த்து அவள் பொழிந்த வசைமாரி காது கொண்டு கேட்கக் கூடாதது. பெற்றோர்களால் அநுமதிக்கப்பட்டோ அன்றி தாய்மார்களை ஏமாற்றியோ தங்கள் வீட்டை விட்டு வந்த சில பையன்கள் இரவு முழுவதும் வீட்டின் முன்புறத்தை விட்டு அகலவேயில்லை. மூவரில் யாராவது ஒருவர் இறந்து விட்டதாகவோ அல்லது அதைப் போன்றதாகவோ அறிவிப்பு எந்தக் கணத்திலும் வரக்கூடும் என்று எதிர்பார்த்துக் கண் விழித்திருந்தனர். ' மார்னிங் டிரிப்யூன் ' பத்திரிகையின் நிருபர் மூன்று மணி வரை மணிக்கொருதரம் சைக்கிளில் வந்து நிலவரத்தைத் தெரிந்து போய்க்கொண்டிருந்தார்.

ஒய்லோம் வில்லியிலிருந்த பத்து டாக்டர்களில் அறுவர் நீதிபதி ஹெகன்தார்ப்பின் வீட்டிற்கு வந்து காயமுற்றவர்களை கவனித்துக் கொண்டனர். முதல் பரிசோதனையிலேயே டாக்டரின் காயங்கள் அவ்வளவு அபாயகரமானதல்ல என்று அறிந்துகொண்டனர். சிறுவனுக்கு மட்டும் பெருங்காயங்கள் பட்டிருப்பினும் உயிருக்கு ஆபத்து இல்லையென்பது நிச்சயமாகத் தெரிந்தது. நீக்ரோவைப் பொறுத்தவரை அவன் பிழைக்க முடியாது. அவன் உடம்பெங்கும் பயங்கரத் தீப்புண்கள். எல்லாவற்றிற்கு மேலாக இப்பொழுது அவனுக்கு முகமேயில்லை. முகமெல்லாம் எரிந்து விட்டிருந்தது.

மற்ற இருவரின் நிலையைப் பற்றியே டிரெஸ்காட் ஓயாது விசாரித்துக் கொண்டிருந்தார். மறு நாள் காலையிலேயே அவர் தெளிவுடனும், பொலிவுடனும் காணப்பட்டதால் அவருக்கு ஜான்ஸன் பிழைப்பதரிது என்ற நிலையைக் கூறினர். இதைக் கேட்ட உடனே அவர் பெருங் கலக்கமுற்றார். நேராக அவன் படுக்கைக்கு ஓடினார். கட்டுகள் சரி செய்யப்பட வேண்டுமா என்பதையெல்லாம் பரிசோதித்தார். பார்த்த மாத்திரத்தில் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாற்றி கட்டினார். சிங்கத்தின் பாய்ச்சல் வேகத்தில்—ஒரு புலியின் திறத்துடன் அவர் வேலை செய்தது அவர்களுக்கு அமானுஷிகமானதாகவே தோன்றியது.



காலை பத்திரிகை ஹென்ரி ஜான்ஸன் இறந்து விட்டான் என்ற செய்தியை அறிவித்தது. எட்வர்ட் ஜே. ஹன்னிகனுடன் நடத்திய ஒரு நீண்ட பேட்டியின் விவரமும் அதில் காணப்பட்டது. ஹென்ரி ஜான்ஸன் நெருப்புக்குள் எவ்வாறு புகுந்து, எப்படிப்பட்ட தீரச் செயல் புரிந்தான் என்பதைப் பற்றி மிக விரிவாக அதில் கூறப்பட்டிருந்தது. உயர்ந்த சொல் திறமிக்க தலையங்கமும், ஆசிரியர் குழுவின் திறமை வாய்ந்த ஒருவரால் எழுதப்பட்டிருந்தது. நகர மக்கள் பழக்கப்பட்ட இந்த வீட்டின் முன்னால் சென்றபோது, சற்று நின்று தலைதாழ்த்தி இந்தக் குசினிக்காரனுக்குக் கடைசி மரியாதையைச் செலுத்திவிட்டுச் சென்றனர். அவன் உயிருடனிருக்கையில் அவனைப் பற்றி அதிகம் தெரிந்து கொள்ளவில்லையே என்றும், அவனுக்குக் கைகொடுத்து உதவுவதற்கு நாம் கொடுத்து வைக்கவில்லையே என்றும் துக்கப்பட்டுக் கொண்டது வெளிப்படையாகவே தெரிந்தது. அதற்காக அவர்கள் தங்களையே நொந்து கொண்டனர்.

பையன்களுக்கு ஹென்ரி ஜான்ஸன் ஒரு மகானாக ஆகிவிட்டான். அதைப்பற்றி முதன் முதலில் நினைத்த ஒரு பையன் மற்றவர்களுடைய விவாதத்தின்போது இதைச் சொன்ன மாத்திரத்திலேயே அந்த விவாதத்தில் வெற்றியடைந்து விட்டதாகக் கருதப்பட்டான். விவாத விஷயத்திற்கு இது பொருத்தமானதாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் அவன் ஒரு மகான் என்ற கருத்தே உன்னதமாக விளங்கிற்று. ஒரு சிறு கவிதையே ஒருவன் புனைந்து விட்டான்.

" கறுப்பா கறுப்பா சாவேல் கறுப்பா
கறுப்பு முகத்தாய் கவினொளிக் கண்ணாய். "

இவ்வாறு அவர்கள் மனமார உருகி அவனுடைய இறுதி யாத்திரையை எண்ணியெண்ணித் துக்கித்தனர்.

அன்று மாலையில், வாட்டர் மெலான் சந்து, ஏழாவது நெம்பர் வீட்டில் வசித்து வந்த ஜான்ஸனின் காதலி மிஸ் பெல்லா பெராகட், தான் மிஸ்டர் ஹென்ரி ஜான்ஸனுக்கு நிச்சயிக்கப்பட்டிருந்ததாக பஹிரங்கமாகவே அறிவித்தாள்.

# XI

வயதான அந்த நீதிபதி ஒரு பூண் போட்ட கைத்தடி வைத்திருந்தார். எப்போதும் இந்தத் தடியின்மீது சாய்ந்தபடியே அதன் தந்தப் பிடியை வருடிக் கொண்டே இருப்பார். முக்கியமாய் அவர் சிறப்பாக ஏதாவது கருத்துக்கள் சொல்ல வேண்டுமானால் இவ்வாறு கைத்தடியின் மீது சாய்ந்து நின்றால்தான் அவருக்குக் கருத்துக்களே ஓடும். அதன் தந்தப் பிடியை வருடுவது அவருக்கு

ஒருவித மன அமைதியை உண்டு பண்ணிற்று. ஞாபகப் பிசகால் அவ்வாறு செய்வது தவறி விட்டால் அவர் அமைதி கலைந்து விடும். முகம் சிடுசிடுவென்று கடுமையாக மாறிவிடும். தன் சகோதரியின் மீது எரிந்து விழுவார். அவள் பாவம், ஒண்டாரியோ தெருவிலுள்ள அந்தப் பழைய மாளிகையிலேயே அவருடன் முப்பது ஆண்டுகளாக வசித்து வந்தாள். அவளுடைய புத்திக்கூர்மையைப்பற்றி நீதிபதிக்கு மட்டமான அபிப்பிராயம். அவள் ஒரு அரைப் பைத்தியம் என்றே எண்ணியிருந்தார். அவர் சீற்றமுறும் போதெல்லாம் அவள்மீதுதான் பாய்வார். தனது சகோதரன் தன்னைப் பற்றிக் குறைவாக எண்ணியிருக்கிருன் என்பதை அவள் உண்மையில் தெரிந்து கொண்டதேயில்லை. நீதிபதி தன் உள்ளக் கருத்தைக் கால் நூற்ருண்டு காலமாக அவ்வளவு திறமையாக மூடி வைத்திருந்தார். கைத்தடி காணுமல் போன சமயங்களில் மட்டுமே அவர் மனத்திலிருந்ததை ஒளிக்காமல் சொல்லுவார்.

ஒரு நாள் நீதிபதி சாய்வு நாற்காலியில் தன் வீட்டு முகமண்டபத்தில் அமர்ந்திருந்தார்: ‘ லில்லாக் ’ செடிகளின் மேல் பட்ட சூரிய வெளிச்சம் கீழே சிறு சிறு வட்டங்களாக நிழலை உண்டாக்கிக் கொண்டிருந்தது. நடைபாதையை யொட்டி வரிசையாக நின்ற மரத்தில் குருவிகள் கொஞ்சின. அவர் கைத்தடியை வருடியவாறே சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்.

சிந்தனை கலையாமலேயே அவர் எழுந்து வீட்டிற்குள் நுழைந்தார். அவர் முகத்தில் சிந்தனை ரேகைகள் தெரிந்தன. அவர் நடந்தபோது டக்டக்கென்று சாவதானமாகத் தடியின் சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது. நேராக இரண்டாம் மாடியில் ஹென்ரி ஜான்ஸனின் படுக்கைக்கருகில் டாக்டர் டிரெஸ்காட் ஏதோ கவனித்துக் கொண்டிருந்த இடத்திற்குச் சென்ருர். நீக்ரோவின் தலையெல்லாம் ஒரே கட்டுகள். வெளியே கட்டுகளுக்கிடையில் தெரிந்த பாகம் ஒன்றுதான்—ஒரு கண், இந்த ஒற்றைக் கண் இமைகொட்டாது—நீதிபதியை உற்றுப் பார்த்தது. நீதிபதி அவனுடைய நிலையைப் பற்றி விசாரித்தார். பிறகு அவர் ஏதோ சொல்லவிருந்தார். ஆனல் அந்த ஒற்றைக் கண் தன்னையே பார்த்துக்கொண்டிருந்ததால், அவர் மேலும் பேசவில்லை. அவரும், அந்த நீக்ரோவின் ஒற்றைக் கண்ணை அடிக்கடி ஓரக்கண்ணுல் பார்த்தார்.

ஜிம்மி டிரெஸ்காட் நன்ருகவே குணமடைந்த பின் கனெக்டிகட்டிலுள்ள தன் பாட்டனர் வீட்டுக்கு அவனுடைய தாயாருடன் சென்றிருந்தான். டாக்டர் மட்டும் தன் நோயாளிகளைக் கவனித்துக்கொள்ளுவதற்காக ஊரிலேயே தங்கிவிட்டார். உண்மையை உரைக்கவேண்டுமானல் ஜான்ஸனின் உடல் நிலைமைக்காகவே அவர் தங்கிவிட்டார் என்று சொல்ல வேண்டும். அவனுடன் நீதிபதியின் வீட்டிலேயே அவர் பெரும்பொழுதைச் செல



விட்டார். இங்குதான் அவர் சாப்பிட்டார். இங்குதான் அவர் உறங்கினர். இரவும், பகலும் ஜான்ஸனின் பக்கத்தில் உட்கார்ந்தே காலத்தைக் கழித்தார்.

ஜான்ஸனின் கண் மந்திர சக்தி வாய்ந்ததுபோல் நீதிபதியை வாட்டிற்று. அதன் பார்வையினின்று விலகி ஒருநாள் சாப்பிடும் போது திடீரென நீதிபதி டிரெஸ்காட்டைப் பார்த்துச் சொன்னர். “ டிரெஸ்காட், நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? இவ்விதம்......” அவர் முடிக்கவில்லை. சிந்தித்து சிந்தித்து வார்த்தைகள் மெதுவாகத்தான் வெளிவந்தன. அடுத்தபடியாக நீதிபதியின் வாயிலிருந்து வரும் வார்த்தைகளை எதிர்பார்த்து டாக்டர் வெகு கவனமாக இருந்தார். உணவுத் தட்டிலிருந்த கத்தியைக் கையில் எடுத்தபடியே, “ யாரும் அப்படி நடக்க விரும்புவதில்லை., இருந்தாலும் எனக்கென்னமோ, பரிதாபத்துக்குரிய இந்த நீக்ரோ இறந்து போவதுதான் நல்லது என்று தோன்றுகிறது,” என்று சொன்னர்.

டிரெஸ்காட்டின் முகத்தில், நிலைமையைப் புரிந்து கொண்ட சாயை தெரிந்தது. அடிமைகள் சம்பந்தப்பட்ட வரையில் இது ஒரு பழைய பிரச்னைதான். இதைத்தான் நீதிபதி குறிப்பிடுகிருர் என்பது அவர் சொன்ன மாதிரியிலிருந்து தொனித்தது. ஆனலும் டாக்டர் ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டே, “ யாருக்குத் தெரியும்? எப்படிச் சொல்லமுடியும்?” என்று மட்டுமே சொன்னர்: சொற்கள் ஆழ்ந்த கருத்துடன் வெளி வந்தன. கருத்து என்ன என்பது மட்டும் சரிவர வெளிப்படையாகப் புரியவில்லை.

வழக்கமாக நியாயஸ்தலங்களில் உணர்ச்சியற்று பேசும் தோரணையில் நீதிபதி பேசத் தொடங்கினர். “இம்மாதிரி விஷயங்களை நான் பிரஸ்தாபிப்பது முறைக் குறைவாகத் தோற்றலாம். ஆனலும் இந்த நீக்ரோவின் உயிரைக் காப்பாற்றுவதற்கு நீங்கள் எடுத்துக்கொண்ட பிரயாசைகளினல் அவனுக்கு நன்மைதான் செய்கிறீர்களா என்று எனக்குச் சந்தேகம். இதை உங்களிடம் சொல்ல வேண்டும்போல் தோன்றியது. உங்கள் தயாளம் இந்த விஷயத்தில் உண்மைத் தயாளம் தான என்பதில் எனக்குச் சந்தேகமே. ஏனெனில், எனக்குத் தெரிந்தமட்டில், அவன் இனிமேல் ஒரு பயங்கர மனிதனகத்தான் இருப்பான்-ஒரு பயங்கரக் கோர உருவமாக இருப்பான். வெகுவாக அவன் மூளைகூட பாதிக்கப்பட்டிருக்கும். நீங்கள் என்னுடைய சிறந்த நண்பர். நான் உங்களை யறிந்திருப்பதைப்போல் பிறர் உங்களைப் பற்றித் தெரிந்து கொண்டிருக்க முடியாது. இந்த விஷயம் உங்கள் மனச்சாட்சி சம்பந்தப்பட்ட ஒரு விஷயம் என்பது எனக்குத் தெரியும். ஆனல் என் நண்பரே, நீங்கள் செய்யும் காரியத்தை நல்லது செய்யப்போய் விளையும் கெடுதல் என்றே நான் நினைக்கிறேன் ” என்று நீதிபதி வழக்கமான சொல்லாற்றலுடன் இதைக் கூறி முடித்தார். தாமே கண்டு பிடித்தது போன்ற தனி அழுத்தத்துடன் அந்த கடைசி வாக்கியத்தைச் சொன்னர்.

டாக்டர் நீண்ட சோர்வுக்குப் பின்னர், " அவன் என் மகனின் உயிரைக் காப்பாற்றினான்," என்று குறிப்பிட்டார்.

" ஆமாம், ஆமாம், அது எனக்குத் தெரியும்," என்று நீதிபதி சட்டென்று பதிலளித்தார்.

" அப்படியானால் என் கடமை என்ன? நான் என்ன செய்ய வேண்டும்? " என்றார் டாக்டர். அவர் கண்கள் திடீரென நன்றியுணர்வால் மின்னின. " நான் என்ன செய்யவேண்டும்? அவன் தன்னையே அர்ப்பணித்தான்—ஜிம்மிக்காக—அவனுக்கு நான் செய்யக்கூடியது தான் என்ன? " என்று மீண்டும் கேட்டார்.

இதைக் கேட்டதும் நீதிபதி அப்படியே குன்றிப் போனார். அவர் கண்கள் தாழ்ந்தன. தட்டிலிருந்த கத்திரிக்காயை முட்கரண்டியால் குத்திக் கொண்டிருந்தார். அவரால் நேராக உட்காரவும் கூடவில்லை. நாற்காலியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். " இனிமேல் அவன் உங்களுடைய சிருஷ்டியாகவிருப்பான், அது மட்டும் நினைவிருக்கட்டும். அவன் இறந்து போனவன்தானே, அவனை உயிர்ப்பித்து விட்டீர்கள். ஆகவே அவன் முழுக்க முழுக்க உமது படைப்புத்தான். இயற்கையைப் பொறுத்தமட்டில் அது அவனை முன்னமே கைவிட்டு விட்டது. அவன் செத்து விட்டான்," என்று தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தார் நீதிபதி.

" நீங்கள் அவனுக்குப் புத்துயிர் அளித்திருக்கிறீர்கள். அவனை நீங்கள் உருவாக்கி யிருக்கிறீர்கள். அவன் ஒரு பயங்கர உருவம் ஆவது நிச்சயம்—அதிலும் மனமென்ற ஒன்றே இல்லாதவனாகவே சஞ்சரிப்பான்," என்று அவர் திரும்பவும் தன் கருத்தை வலியுறுத்தினார்.

" நீங்கள் நினைப்பது போல் அவன் இருக்கலாம். அவன் எப்படியாவது இருக்கட்டும். ஆனால் கடவுளறிய என் குழந்தையைக் காப்பாற்றினானே அதை நான் எப்படி மறப்பேன்? " அவர் பணிவுடன்தான் சொன்னார். ஆனால் சீற்றம் மேலோங்கி நின்றது.

நீதிபதி உணர்ச்சிப் பெருக்குடன் தழுதழுத்துப் பேசினார். " டிரெஸ்காட், டிரெஸ்காட், இது எனக்குத் தெரியாதா? "

டிரெஸ்காட் பேசிப் பயனில்லை என்று உணர்ந்தவர் போல் மௌனம் சாதித்தார். மனத்தில் எரிச்சல். அது மெதுவாக வார்த்தையில் வெளிவந்தது. " ஆமாம், அதை நீங்கள் அறிவீர்கள்! ஆனால் நீங்கள் அறியாதது ஒன்று உண்டு. உங்களுடைய மகன் சாவிலிருந்து காப்பாற்றப்படவில்லை. அப்படி என்றால் என்ன என்பது உங்களுக்குத் தெரியாது," என்று வருத்தத்துடன் டாக்டர் சொன்னார்.

நீதிபதி கலியாணமே ஆகாதவர். டாக்டரின் சொற்கள் அதைத்தான் வேடிக்கையாகச் சுட்டிக் காட்டுவது போலிருந்தது. குறும்பு! அது சிறுபிள்ளைத்தனம் என்று டிரெஸ்காட்டுக்குத் தெரியும். அவருக்கு அப்போது அதில் ஒரு தனி மகிழ்ச்சி ஏற்பட்டது.



ஆனால் அது நீதிபதியை அசைக்கவில்லை. இதற்கெல்லாம் வசப்படாதவர் அவர். " நீங்கள்சொல்லுவது எனக்குப் புரியவே இல்லை. உங்களுக்கு எப்படிச் சொல்லி விளக்குவது, என்ன சொல்லுவது என்று எனக்குத் தோன்றவில்லை," என்று ஆழ்ந்த சிந்தனையுடன் கூறினார்.

டிரெஸ்காட் தன்னுடைய தவறுக்காக வருந்தினார். " நீங்கள் கூறுவதை நான் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்காதீர்கள். ஆனால் அதற்காக நான் பாராட்டவும் செய்கிறேன்," என்றார்.

" ஆமாம், ஆமாம், நானும்......" அவர் உடனே சொன்னார். " அது வந்து," டிரெஸ்காட் மேலும் பேச ஆரம்பித்தார். " நானும் புரிந்து கொள்கிறேன் " என்று நீதிபதி அவரை இடைமறித்தார். மௌனமாகவே அவர்கள் சாப்பாட்டை முடித்துக் கொண்டனர். " இத்தகைய நிலையில் என்ன செய்யவேண்டும் என உணர்வது யாருக்கும் கடினம்தான்," என்று இறுதியாக நீதிபதி கூறினார்.

" அதுதான்—." டாக்டர் உணர்ச்சியுடன் சொன்னார். மறுபடியும் மௌனம் நிலவியது. அதை நீதிபதி தான் கலைத்தார். " இங்கே பாருங்கள் டிரெஸ்காட், நான் சொல்லுவதைப் பற்றி நீங்கள் தவறாக எண்ணுகிறீர்கள் என்று......"

" இல்லை, நிச்சயமாக அவ்விதம் இல்லை," என்று டாக்டர் உண்மை தொனிக்கப் பதிலளித்தார்.

" நல்லது, எனக்குத் தோன்றியதையெல்லாம் சிந்தனை செய்யாமல் உங்களிடம் சொல்கிறேன் என்று நீங்கள் நினைக்கக்கூடாது. இந்தக் காரியமே முற்றிலும் நன்மை விளைவிப்பது தானா என்பதில் எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது. அதனால் இதை உங்களிடம் தெரியப்படுத்தலாம் என்று எனக்குத் தோன்றுகிறது என்றுதான்—உங்களை வற்புறுத்துவதற்காக இல்லை என்று நினைத்தேன் " எனத் தயக்கத்துடன் தன் கருத்தை நீதிபதி கூறினார்.

தன் மனத்தின் அடித்தளத்திலுள்ள உண்மையான கலக்கத்தை வெளிப்படுத்தும் முறையில் டாக்டரின் தோற்றத்தில் திடீர் மாறுதல் கண்டது. அவர் குரலில் கடுமையும், பொறுமையின்மையும் இருந்தன.

" நல்லது. நீங்கள் என் நிலையில் இருந்தால் என்ன செய்வீர்கள்? அவனைக் கொன்றுவிடுவீர்களா?" என்று பட்டவர்த்தனமாகக் கேட்டார்.

" டிரெஸ்காட் நீங்கள் ஒரு அசடு " என்று வயதில் முதிர்ந்த அந்த நீதிபதி மென்மை ததும்பிய குரலில் உரிமையுடன் சொன்னார். " ஆமாம் அதுவும் உண்மைதான். எனக்குப் புரிகிறது. ஆனால் ஒன்று புரிகிறது." அவர் முகம் சிவந்து விட்டது. மீண்டுமொரு முறை பொறுமையிழந்து பேசினார். " தயவு செய்து கவனிக்க வேண்டுகிறேன். அவன் என் குழந்தையைக் காப்பாற்றினான்...... தெரிகிறதா? என் மகனைக் காப்பாற்றினான் " என்று திருப்பித் திருப்பிச் சொன்னார்.

ஆர்வத்துடன் நீதிபதி சொன்னார்: "அது உண்மை; அது முற்றிலும் உண்மை."

அவர்கள் ஒருவரையொருவர் பார்த்த வண்ணம் பேசாதிருந்தனர். அவன் புரிந்த அந்த செயலைப் பற்றிய நினைவுகள் அவர்களிருவர் மனத்திலும் ஒரே காலத்தில் தோன்றி அதனால் முகங்களும் பிரகாசித்தன. மீண்டும் சில நிமிஷம் மௌனத்திற்குப் பின் "இந்த நிலைமையில் என்ன செய்ய வேண்டுமென முடிவுக்கு வருவது எவனுக்கும் கடினம்தான்" என்றார் நீதிபதி.

## XII

ஒரு நாள் மாலை டிரெஸ்காட் தொழில் சம்பந்தமாக எங்கேயோ போய்விட்டுத் திரும்புகையில் ஹெகன்தார்ப் வாசலில் தனது கோச்சு வண்டியை நிறுத்தினார். அங்கிருந்த ஒரு கம்பத்தில் குதிரையைக் கட்டிவிட்டு வீட்டிற்குள்ளே நுழைந்தார். வீட்டைவிட்டு வெளியே வந்தபோது அவருடன் மற்றொருவன் காணப்பட்டான். அவன் மிகவும் மெதுவாகவும் கவனமாகவும் புதியதாக நடக்கக் கற்றுக்கொள்ளுபவனைப்போல் நடந்தான். அவன் உடல் முழுவதும் நீண்டதொரு மேற்சட்டையால்-போர்வை என்றே அதைச் சொல்லலாம்—குதிகால் வரை போர்த்தியிருந்தது. இருவரும் வண்டியில் ஏறிக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

வழவழப்பான சாலையில் வண்டி சென்றபோது ஏற்பட்ட இனிய ஓசை தவிர வேறு சப்தமே இல்லை. அவர்கள் கூட அது வரை பேசிக்கொள்ளவில்லை. இந்த மௌனத்தைக் கலைத்து டிரெஸ்காட்தான் பேசினார். "ஹென்ரி, அந்தக் கிழவன் அலெக் வில்லியம்ஸ் வீட்டில் நீ தங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். அதையே உன்னுடைய வீடாகக் கருதவேண்டும். அங்கு உனக்குச் சாப்பாடு எல்லாம் கிடைக்கும். தூங்குவதற்கும் நல்ல இடமாக வசதி செய்யப்பட்டிருக்கிறது. நீ சுகமாகவே இருக்கலாம் என்று நம்புகிறேன். உனக்காக ஏற்படும் செலவுகளையெல்லாம் நானே ஏற்றுக் கொண்டிருக்கிறேன். அத்துடன் என்னால் முடிந்த போதெல்லாம் வந்து உன்னைக் கவனித்துக்கொள்ளுவேன். அங்கே உனக்கு ஏதாவது கஷ்டமாக இருக்கிறதென்று தோன்றினால் உடனே எனக்குத் தெரிவி. அதை நிவர்த்தி செய்ய என்ன வேண்டுமோ அதை நான் கவனிப்பேன்" என்று அவர் செய்துள்ள ஏற்பாட்டை ஜான்ஸனுக்கு விளக்கினார்.

டாக்டரின் பக்கத்திலிருந்த அந்தக் கரிய உருவம் சந்தோஷத்தால் சிரித்தது.

"டாக்டர், நேற்று நான் கழுவியபோதிருந்த மாதிரி இந்த வண்டிச் சக்கரங்கள் இல்லையென்றே தோன்றுகிறது," என்றான்.

டாக்டர் என்ன சொல்லுவதென்று ஒரு கணம் தயங்கினார்.



பின்னர் தான் சொன்னதை வற்புறுத்துவதுபோல் "நான் உன்னை இப்பொழுது அலெக் வில்லியம்ஸ் வீட்டிற்கு அழைத்துச் செல்லுகிறேன்" என்று அவர் தொடர்ந்து பேசினார். அந்த உருவம் மறுபடியும் பெட்டைச் சிரிப்பு சிரித்தது:

"இல்லை நிச்சயமாக இல்லை, ஸார், அலெக் வில்லியம்ஸுக்குக் குதிரை என்றால் என்னவென்றே தெரியாது. ஆமாம், தெரியவே தெரியாது. அவனுக்கு, பன்றிக்கும் குதிரைக்கும் வித்தியாசம் தெரியாது" என்று அவன் சொன்னான். அதைத் தொடர்ந்த சிரிப்பு கூழாங்கற்களின் ஓசையைப் போன்றிருந்தது.

வண்டி கூட்டிலிருந்தபடியே டிரெஸ்காட் திரும்பி அவனைப் பார்த்தார் அந்த மங்கிய மாலைப் போதினில். "ஹென்ரி, நான் குதிரையைப் பற்றியொன்றும் பேசவில்லை, நான் சொல்லிக்கொண்டிருந்தது," என்று கண்டிப்பாகவே பேசினார். ஆனால் அவன் இடைமறித்தான். "குதிரை......குதிரை......குதிரை, எனக்குக் குதிரையைப் பற்றி ஒன்றும் தெரியாதா? எனக்கா தெரியாது!" என்று சொல்லிவிட்டுச் சிரித்தான். அவன் சிரிப்பில் ஏளனம் தொனித்தது.

மூன்று மைல் ரஸ்தாவில் சென்ற பின்னர் வண்டியின் வேகம் குறைந்தது. லகானை இழுத்தபடியே டாக்டர் முன்னால் குனிந்து ஒரு வீட்டிற்குள் உற்றுப் பார்த்தார். வண்டியின் சக்கரங்கள் அடிக்கடி ரஸ்தாவில் சிதறிக்கிடந்த பாராங்கற்கள் மீது மோதி மோதி அசைந்து கொண்டிருந்தன. அது மலையடிவாரத்தைச் சேர்ந்த பகுதி. அவர் குனிந்து பார்த்த அந்த வீட்டின் சதுரமான ஜன்னலிலிருந்து வெளிச்சம் வந்து கொண்டிருந்தது.

கருத்த அந்த மலைக்கு முன்னாலிருந்த அந்தச் சிறு வீடு ஒரு சதுரக்கல் போன்று காட்சியளித்தது. நான்கு நாய்கள் வண்டியை நோக்கிக் குரைத்தன. வண்டி அங்கேயே நின்றுவிட்டதென்பதை அறிந்ததும் அவை குரைத்துக் கொண்டே அதைச் சுற்றிச் சுற்றி வந்தன. ஜன்னலருகிலிருந்த ஒரு கதவு திறந்தது. ஒரு மனிதன் வெளியே வந்து மஞ்சள் வெளிச்சத்தில் நின்றான்.

"ஏலே, ஏலே, ரோவா, ஏமி ஸூஸி, வாங்க எல்லாம் வாங்க, உடனே வாங்க," என்று அந்த மனிதன் தன் குடும்பத்தினரை எல்லாம் அழைத்தான். ரஸ்தாவிலிருந்தே டிரெஸ்காட் புல்வெளிக்கப்பால் இருந்தபடி அந்த வீட்டுக்காரனைப் பார்த்து,

"ஹல்லோ அலெக்!" என்று அழைத்தார்.

"ஹல்லோ!" என்று அவனும் பதிலளித்தான்.

"இங்கே வந்து வண்டியை எந்தப் பக்கம் ஓட்ட வேண்டும் என்று வழி காட்டு" என்றார். அவன் இருந்த இடத்தை விட்டு எங்கேயோ மறைந்தான். அவன் குரலிலிருந்து தான் தன்னை நோக்கி எந்தப் பக்கத்திலிருந்தோ வந்து கொண்டிருக்கிறான் என்பது மட்டும் தெரிந்தது. வண்டியை அணுகியதும்

டாக்டருக்கு நல்வரவு கூறி குதிரையைப் பிடித்துக் கொண்டு நின்றான். நாய்களை விரட்டி விட்டுக் குதிரையைப் பிடித்துக் கொண்டே வண்டியை விட்டுப் பக்கமாக நடத்திச் சென்றான். வாயிலை அடைந்ததும் டாக்டர் கீழே இறங்கினார். வில்லியம்ஸ் "அது வெளியே நிற்குமா" என்று குதிரையைப் பற்றிக் கேட்டான்.

"நிற்கும், நிற்கட்டும்; ஆனால் ஒரு நிமிஷம் அதைப் பிடித்துக் கொள்," என்று அவனிடம் சொல்லி விட்டு வண்டிக்குள் திரும்பி, "இப்போ ஹென்ரி" என்று டாக்டர் அந்தக் கரிய உருவத்தை நோக்கி இரண்டு கைகளையும் நீட்டினார். ஏணியிலிருந்து கீழே இறங்குவது போன்று அந்த உருவம் மெதுவாக நகர்ந்து, நகர்ந்து வண்டியை விட்டிறங்கிற்று. வில்லியம்ஸ் குதிரையைக் கொண்டு மரத்தடியில் கட்டச் சென்றான். கட்டிவிட்டுத் திரும்பியபொழுது அவர்கள் எல்லோரும் விட்டிற்குள் அவனுக்காகக் காத்திருப்பதைக் கண்டான். கட்டை விரலால் அழுத்தப்பட்ட பீச்சாங் குழலைப் போல் அவன் உணர்ச்சிப் பெருக்கெடுத்தோடியது. ஜான்ஸனைக் கண்டதும் 'ஓ'வென்று அவன் கத்தி விட்டான். "ஹென்ரி, ஹென்ரி என் பழைய நண்பன், நல்லது, நீ பிழைத்திருக்கிறாயே. எனக்கு ரொம்ப சந்தோஷம், ரொம்ப சந்தோஷம்," என்று அவன் ஜான்ஸனை வரவேற்றான்.

மௌனமாக இதைக் கேட்டுக் கொண்டிருந்த அந்தக் கரிய உருவத்தை டிரெஸ்காட் கைகொடுத்து உள்ளே வெளிச்சத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கே அதை நிறுத்திவிட்டு "நல்லது அலெக், இப்போது ஹென்ரியை அழைத்துக் கொண்டு போய் படுக்க வை. நான் காலையில் வந்து..." அவர் வாக்கியத்தை முடிக்கவில்லை. வில்லியம்ஸ் அப்போதுதான் ஹென்ரியை நேருக்கு நேராகப் பார்த்தான். ஒரு கணம் பெருமூச்சு விட்டான். அடுத்த நிமிஷம் இருதயத்தில் கத்தியால் குத்தப்பட்டவனைப் போன்று பயங்கரமாக அலறினான். டாக்டருக்குப் பொறுக்கவில்லை. கண்டிப்புத் தொனியுடன் உரத்த குரலில்தான் அவர் பேசினார். "ஏ கிழட்டுக் கருப்பா, ஏ மரமே, வாயை மூடு, மூடடா வாயை, தெரிகிறதா?" என்று கடிந்து கொண்டார். வில்லியம்ஸ் உடனே பணிந்தான். அவனுடைய அலறல் அடங்கிற்று. பேச்சுமட்டும் ஓயவில்லை. தாழ்ந்த குரலில் "கடவுளே இப்படியிருக்குமென்று நினைக்கல்லையே. ஆண்டவன் கருணாமூர்த்தி! கருணாமூர்த்தி!" என்று முணுமுணுத்தான்.

ஒரு படையின் தளபதியைப் போன்றே மறுபடியும் டிரெஸ்காட் கடுமையாக "அலெக்" என்று எச்சரித்தார். இம்மாதிரி அநுதாப வார்த்தைகள் கூடாதென்பதை அவர் சைகை மூலமே உணர்த்தினார்.

மறுபடியும் அந்தக் கிழட்டு நீக்ரோ வாயை மூடிக்கொண்டான். ஆனால் தனக்குள்ளே "கடவுளே! கடவுளே!" என்று சொல்லிக்



கொண்டே இருந்தான். அவன் பயத்தால் நடுங்கிக்கொண்டிருந்தான்.

அவர்கள் மூவரும் வாயிற் கதவை நோக்கிச் சென்றபொழுது ஒரு நீக்ரோ கிழவி அங்கு தோன்றினாள். டாக்டரை வணங்கியவாறே "குட்ஈவினிங் டாக்டர், குட்ஈவினிங், வாங்க, வாங்க" என்று வரவேற்றாள். அவள் அப்போது தான் மிக்க சிரமத்துடன் ஒரு அறையை இந்தப் புது மனிதனுக்காக ஒழுங்குபடுத்தி விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தாள். ஆனாலும் தலை குனிந்து வணங்கினாள். பிரயாசையுடன் நீச்சலடிப்பவனைப் போலிருந்தது அவள் குனிந்து வணங்கினது.

அறையில் நுழைந்து கொண்டே டிரெஸ்காட் "அதிகமாக சிரமப்படுத்திக் கொள்ளாதே மேரி, ஹென்ரியை அழைத்து வந்து உன்னிடம் ஒப்படைத்து விட்டேன். அவனைக் கவனித்துக் கொள்வது உன் பொறுப்பு. நான் சொல்கிறபடி நீ செய்தால் அதுவே போதும்" என்று அவளைப் பார்த்துச் சொன்னார். பிறகு தன்னை யாரும் பின்தொடரவில்லை என்று நிச்சயித்துக் கொண்டு கதவுப் பக்கமாகத் திரும்பி "உள்ளே வா, ஹென்ரி" என்று அவனை அழைத்தார்.

ஜான்ஸன் அவனுக்காக ஒதுக்கப்பட்ட அறைக்குள்ளே நுழைந்தான். மிஸஸ் வில்லியம்ஸ் அவனைப் பார்த்தவுடனே 'கிரீச்' சிட்டாள். அதிர்ச்சியினால் குப்புற விழுந்துவிட்டாள் என்றே சொல்லலாம். சிறிது தவறினாள். வில்லியம்ஸ் வீட்டிலிருந்த ஆறு சிறுவர்களும் அடுப்புக்குப் பின்புறமாக ஓடி ஒளிந்துகொண்டு அங்கே கும்பலாக அழுது கொண்டிருந்தனர்.

## XIII

"நீயும் உன் குடும்பமும் வாரத்திற்கு மூன்று டாலருக்கும் குறைந்த வருவாயில்தானே இதுவரை பிழைத்து வந்திருக்கிறீர்கள். இப்போது டாக்டர் டிரெஸ்காட் ஜான்ஸனுடைய உணவுக்காக மட்டும் வாரம் ஐந்து டாலர் தருகிறார். நீங்கள் கோடீஸ்வரனைப் போல் வாழ்கிறீர்கள். ஜான்ஸன் உன்னுடன் தங்க ஆரம்பித்ததிலிருந்து நீ ஒரு சிறு வேலையும் செய்வதில்லை. இது எல்லோருக்கும் தெரிந்ததே. அப்படி இருக்கும்போது எதற்காகக் கையைப் பிசைந்து கொண்டிருக்கிறாய்?" என்று நீதிபதி தன் எதிரில் நின்ற வில்லியம்ஸிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

தடியை வருடிய வண்ணம் நீதிபதி அவருடைய முன் வாசலில் உட்கார்ந்திருந்தார். லில்லாக் புதரின் கீழே நின்ற அந்த நீக்ரோக் கிழவனைக் கூர்ந்து நோக்கினார். "ஆமாம் அது உண்மைதான், நீதிபதி அவர்களே, டாக்டர் செய்யும் உதவிக்கு நான் நன்றி செலுத்தவில்லை என்று எண்ணாதீர்கள். ஆனால்...ஆனால் நீதிபதியவர்களே, அது மிகவும் கஷ்டமான வேலை. இந்தக்

கிழவன் என்றைக்கும் இவ்வளவு துன்பப்படவில்லை, பிரபு! துன்பப்படவில்லை'' என்று தலையை ஆட்டிக் கொண்டே அவன் தயக்கத்துடன் ஆரம்பித்தான். பிறகு பேச்சில் கொஞ்சம் வேகம் காணப்பட்டது. '' அது மிக்வும் கடினமான வேலை எசமான். நான் இதுவரையில் இவ்வளவு கஷ்டமாக வேலை செய்ததே இல்லை. கடவுளே, என்ன வேலை, '' என்று மேலும் பேசினான்.

'' அலெக், இந்த மாதிரி உளறுதே.'' அவர் வெட்டிப் பேசினார். '' உன் வாழ்க்கையிலேயே நீ அதிகம் வேலை செய்ததில்லை. உன்னுடைய குருவிக் குஞ்சுகளைப் போன்ற பெருங் குடும்பத்துக்குப் போதுமான அளவு நீ எப்போதுமே உழைத்ததில்லை. முன் எப்போதையும்விட நல்ல நிலையில் இருக்கும்பொழுது, ஏதேதோ முட்டாள்தனமாகப் பேசிக் கொண்டு இங்கே வந்து விட்டாயே. ''

நீக்ரோ தலையைச் சொரிய வாரம்பித்தான். '' நான் சொல்ல வந்தது...வந்து...என் பெண்சாதி. அவளைப் பார்க்க வர பொம்பிளைகளை 'வா'ன்னு கூட சொல்ல முடியறதில்லேன்னு தாபப்படுது,'' என்று இழுத்தாற்போல சொன்னான்.

நீதிபதிக்குக் கோபமுண்டது. '' அவங்களை யெல்லாம் தூக்கி உடைப்பிலே போடு! அவங்களாலே என்ன ஆவும். காலணுவுக்கு உதவுவாங்களா? பீப்பாய் நிறைய கோதுமை மாவும் பானை நிறைய இறைச்சியும் இருந்தால் உன் பெண்ஜாதிக்கு மத்த பொம்பிள்ளைங்களைப் பற்றி கவலை எதுக்கு? அவங்க இல்லாமெ பொழுது போவாதா?'' என்று துடுக்காகப் பேசினார்.

'' அதுக்காக சொல்லல்லே எசமான். அவங்க இப்போதெல்லாம் எங்க விட்டுக்கு வருவதே இல்லை. வரதையே நிறுத்திக்கிட்டாங்க'' என்றான். அவன் பேச்சில் திகைப்படைந்தவனுடைய பீதி தெரிந்தது. '' என் மனைவியின் நண்பர்களோ, என்னுடைய நண்பர்களோ இப்போ என் விட்டுப் பக்கமே வருவதில்லை.''

'' அவர்கள் அவ்வளவு அசடர்களாய் இருந்தால் அவர்கள் விட்டிலேயே இருந்து கொள்ளட்டுமே'' என்று அவர் வெட்டிப் பேசினார். நீதிபதியின் பேச்சின் போக்கு கிழவனுக்குப் பிடிக்கவில்லை. இதிலிருந்து எப்படி விடுவித்துக் கொள்ளலாம் என்று சிந்தித்தான். பதில் என்ன சொல்வதென்று தெரியவில்லை. கால்களைத் தேய்த்த வண்ணம் அங்கிருந்து விட்டிற்குத் திரும்ப எண்ணினான். மறுபடியும் தயங்கி நின்றான்.

'' நீதிபதி அவர்களே, என் மனைவிக்குச் சிட்டத்தட்டப் பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கிறது '' என்று இழுத்தான்.

'' உன் மனைவி ஒரு மூடம் '' என்று அவனை மடக்கி விட்டார். வில்லியம்ஸ் சற்று நெருங்கி வந்து லிலாக் செடியின் கொடியைச் சீண்டியவாறே '' நீதிபதியவர்களே...குழந்தைகள்கூட....'' என்று ரகசியம் பேசுவது போல் சொன்னான்.



'' அவர்களுக்கென்ன வந்தது? ''

சாவு ஊர்வலத்தில் பேசுவது போன்று துக்கம் தொண்டையை அடைக்க வில்லியம்ஸ் சொன்னான் :'' அவர்கள்—அவர்கள், சாப்பிடவே மாட்டேன் என்கிறார்கள்.''

'' சாப்பிட முடியவில்லையா? '' நீதிபதி கோபத்தில் இரைந்தார் '' சாப்பிட முடியவில்லை? உன்னைப் போல ஒரு சரியான கிழட்டு முட்டாளாக என்னையும் எண்ணி விட்டாய். சாப்பிட முடியவில்லை—குட்டிப் பிசாசுகள். ஏன் சாப்பிட முடியவில்லையாம்? ''

பதிலுக்கு அவன் துக்கத்தால் பேசுவது போல ''ஹென்ரி'' என்று அழுத்தமாகச் சொன்னான். அந்தப் பெயரே ஒரு சோகச் சின்னம் என்ற பாவம் தொனிக்கும்படி அந்த வார்த்தையைத் தான் உச்சரித்து விட்டதில் அவனுக்கு ஒரு திருப்தி. இது நீதிபதியின் தோற்றத்தில் என்ன மாறுதலை உண்டாக்கியது என்பதைக் கவனிக்க அவருடைய முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

நீதிபதி பொறுமை யிழந்து பெருமூச்சு விட்டார். '' விஷயத்துக்கு வந்து தொலைடா கிழட்டுப் பயலே. இன்னும் சுற்றி வளைத்துப் பேசாதே, இப்போ உனக்கு என்ன வேண்டும்? மனிதனைப் போல பேசு. இது மாதிரி கதை பேசி என் பொறுமையைச் சோதிக்காதே'' என்று இரைந்தார். '' நான் ஒன்றும் சுற்றி வளைத்துப் பேசவில்லை நீதிபதியவர்களே.'' வில்லியம்ஸ் சலிப்புடன் பதிலளித்தான். '' நான் சொல்ல வேண்டியதை எல்லாம் சொல்லுகிறேன்—இதுதான் உண்மை.''

'' அப்படியானால் சொல்லித் தொலை, சீக்கிரம்,'' என்று இரைந்தார், நீதிபதி.

தொப்பியைக் கையில் எடுத்துக் கால் பக்கம் தேய்த்துக் கொண்டே அவன் சொல்லத் தொடங்கினான். '' நீதிபதி அவர்களே, மற்றவர்களைப் போல நானும் வாரம் ஐந்து டாலர் ஊதியம் பெறப் போதுமான வேலை செய்ய முடியும் என்பது எஜமானுக்குத் தெரியும். ஆனால் இந்தத் தொழில் ரொம்ப வேதனையளிக்கிறது. டாக்டர் அவனைக் கொண்டு வீட்டில் சேர்த்ததிலிருந்து நான் என் வீட்டில் தூங்கினதே இல்லை,'' என்றான்.

'' அதற்கு என்ன செய்ய வேண்டுமென்கிறாய்?''

வில்லியம்ஸ் கண்களை உயர்த்தி மரங்கள் பக்கமாக அண்ணாந்து பார்த்தான். '' நான் எப்போதுமே நன்றாகச் சாப்பிடுவேன். நன்றாக நிம்மதியாய்த் தூங்கவும் செய்வேன். ஆனால் அதையெல்லாம் அவன் இப்போ கெடுத்து விட்டான். என் உடம்புக்கு அது நல்லதற்கில்லை. இரவில் நான் அடிக்கடி விழித்துக்கொள்ளுகிறேன். அவன் சத்தத்தைக் கேட்க வேண்டியிருக்கிறது. முனகல் ...முனகல்...ஓயாத முனகல். ராவு முழுக்க நான் பிடிக்கப் பிடிக்க நழுவி விடுகிறான். உள்ளே அவனை விட்டுப் பத்திரமாக பூட்டும் வரையில் பெரும் தொல்லை. '' எப்போ எழுந்து விடுவானோ?''

இரவு என்ன செய்திடுவானோன்னு ஒரே பயம்; குழப்பம். குழந்தைகளின் பக்கம் அவனை விட முடியல்லே," என்று ஒரேயடியாகப் பேசினான். பிறகு கொஞ்சம் தயங்கினான்.

"மழை காலத்தில் என்ன நேருமோ? பயமாயிருக்கிறது. இப்போ இருக்கிற இடத்திலேயே உறைந்து கிடந்தால் என்ன ஆகும்?" வில்லியம்ஸ் தனக்குத் தானே பேசுவது போல இதையெல்லாம் பேசினான். திரும்பவும் சிறிது யோசித்த பின் தொடர்ந்தான்: "சுற்றிலுமுள்ள ஜனங்கள் அவன் ஹென்ரி ஜான்ஸனே இல்லேன்னு சொல்றாங்க. அவன் ஒரு பிசாசுன்னு தான் சொல்றாங்க."

"என்ன சொன்னாய்!" என்று கர்ஜித்தார் நீதிபதி.

"ஆமாங்க, நான் நெஜத்தைச் சொல்கிறேன். அப்படித் தான் அக்கம் பக்கத்திலே பேசிக்கிறாங்க" என்றான் அவன் உறுதியாக.

"நல்லது, நீ அவ்வாறு நினைக்கவில்லை—இல்லையா?"

"இல்லை, அது ஒன்றும் பிசாசு இல்லை. அவன் ஹென்ரி ஜான்ஸன்தான்."

"அப்படியானால் உனக்கென்ன வந்தது? அந்த முட்டாள் ஜனங்கள் கூறுவதைப் பற்றி நீ ஒன்றும் கவலைப்படாதே. இத்தகைய மூடத்தனமான வீண் பேச்சைப் பற்றி யோசனை பண்ணாதே. போய் உன் வேலையைப் பார்."

"நீதிபதி அவர்களே, அது முட்டாள்தனம்தான். ஆனால் அது பிசாசுபோல் தான் தோணுது."

"அவன் எப்படித் தோன்றினால் உனக்கென்ன?" நீதிபதி கேட்டார்.

"மாசத்துக்கு இரண்டரை டாலர் நான் வாடகையே தர்ரேன்," என்று வில்லியம்ஸ் இழுத்தாற்போல் சொன்னான்.

"மாதத்திற்கு பத்தாயிரம் டாலராய்த்தான் இருக்கட்டுமே. எப்படியும் நீதான் வாடகை கொடுக்கும் பழக்கமே வைத்துக் கொள்ளவில்லையே!" என்று நீதிபதி மடக்கினார்.

"இன்னொரு விஷயம்" என்று வில்லியம்ஸ் அதே சிந்தனை தோய்ந்த குரலில் தொடர்ந்தான். "அவனுடைய மூளை சரியாய் இருந்தால் அவனைப் பற்றிப் பொருட்படுத்த மாட்டேன். ஆனால் அவன் சித்த ஸ்வாதீனமில்லாமே இருக்கிறானே. சாதாரணப் பைத்தியத்தை விட பயங்கரமான பைத்தியமாக இருக்கிறானே.

"பார்ப்பதற்கு பிசாசு போன்று இருந்து கொண்டு என் நண்பர்களை எல்லாம் பயத்தினால் விரட்டியடித்து, என் குழந்தைகளும் சரியாகச் சாப்பிட முடியாமல் என் வீட்டுக்காரியும் நாள் முழுதும் விழித்துக் கொண்டிருந்து, இத்துடன் மாதம் இரண்டரை டாலர் வாடகையும் வேறு கொடுக்க வேண்டியுமிருந்து, மூளை சரியில்லாத ஒரு மனிதனை பாதுகாப்பதற்கு வாரம் ஐந்து டாலர்......"



அந்தக் கடைசி வார்த்தையைக் கேட்டவுடனே நீதிபதி தடியை தரைமீது 'டக், டக்' என்று தட்டினார். "கடைசியில் இதற்குத்தானா இவ்வளவு பீடிகை? இதுபோல் ஏதோ நீ சொல்லப் போகிறாய் என்று நான் அப்பொழுதே நினைத்தேன்."

நீக்ரோக்கள் வழக்கமாகச் செய்வது போல் வில்லியம்ஸ் தலையை அப்படியும், இப்படியும் ஆட்டினான். "ஒரு நிமிஷம் பொறுங்கள் நீதிபதியவர்களே, இப்படிச் சொல்வதால் நான் டாக்டரின் உதவியைப் பாராட்டவில்லேன்னு நினைக்காதீங்க. நெசம்மா சொல்றேன், டாக்டர் டிரெஸ்காட் ஒரு நல்ல மனிதர். அவர் எனக்குச் செய்வதை எல்லாம் நான் நல்லா தெரிஞ்சிட்டிருக்கேன். ஆனா...ஆனா..."

"ஆனால் என்ன? வளைத்து வளைத்துப் பேசி என்னை வதைக்கிறாயே! இப்போ நான் கேட்கிறேன்—அலெக், என்னிடம் சொல்லு. உன் வாழ்க்கையில் ஒழுங்கா வாரத்துக்கு முழுசாக ஐந்து டாலர்கள் சம்பாதித்திருக்கிறாயா?"

உடனே அவன் அமைதியானான். ஆனால் அந்தக் கேள்விக்குப் பின் நிலவிய மௌனத்தில் அவன் தன்னுடைய பாவத்தையே வேறு விதமாக மாற்றிக் கொண்டான். பிறகு தைரியமாகவே முடிவில் பதிலளித்தான்: "இல்லை நீதிபதியவர்களே, நான் சம்பாதித்ததில்லை. என்னைப் போன்றவனுக்கு ஐந்து டாலர்கள் அற்பம் என்று நான் ஒருபோதும் சொல்லவில்லை. ஆனால் நீதிபதியவர்களே, இதைப்போன்ற ஒரு வேலைக்குச் சம்பளம் என்று நிர்ணயமாக ஏதாவது இருக்க வேண்டும். ஆமாம் எசமான். இம்மாதிரி...ஆமாங்க." அவன் அதை வலியுறுத்த விரும்புவது போல மறுபடியும் சொன்னான்: "இதைப் போன்ற வேலைக்குச் சம்பளமாக ஏதேனும் கொடுக்கத்தான் வேண்டும்." இறுதிச் சொல்லில் பயங்கர அழுத்தம் வைத்துப் பேசினான்.

நீதிபதி சிரித்தார். "அலெக், இதைப் பொறுத்தவரை டாக்டர் டிரெஸ்காட்டின் உள்ளம் உனக்குத் தெரியும். உன்னிடம் விட்டு வைத்திருப்பவனைப் பற்றி உனக்கு திருப்தி ஏற்படாவிட்டால் வேறொரு இடத்திற்கு அவனை அழைத்துச் செல்ல அவர் தயார். இந்த ஏற்பாடு உனக்குப் பிடிக்கவில்லை என்று என்னிடம் சொல்லிவிடு. உண்மையில் அதை மாற்ற விரும்பினால் அவர் வந்து ஜான்ஸனை அழைத்துப் போவார்."

"வில்லியம்ஸுக்குக் குழப்பமாகப் போய்விட்டது. தலையைச் சொறிந்து கொண்டே முடிவாகச் சொன்னான். "ஒருவனுடைய சாப்பாட்டிற்கு ஐந்து டாலர் அதிகம் தான். ஆனால் ஒரு பைத்தியத்துக்குச் சோறு போடுவதற்கு அது ஒன்றும் பெரும் தொகையல்ல" என்றான்.

"உனக்கு எவ்வளவு கிடைக்க வேண்டுமென்று நீ விரும்புகிறாய்?" நீதிபதி கேட்டார். அலெக் சம்பளத் தொகையையும், வேலையையும் தராசில் எடை போடுவது போல கணக்குப் பார்த்-

தான். "அவன் ஒரு பிசாசு போலவே காணப்படுகிறான். யார் பார்த்தாலும் பயப்படுகிறார்கள். என் குழந்தைகளும் சாப்பிட முடிவதில்லை, நானும் தூங்க முடியல்லே, அவனுக்கு மூளையும் சரியில்லை. மேலும்—"

"இவை எல்லாவற்றையும் முன்பே சொல்லிவிட்டாய்" என்று நீதிபதி பொறுமை இழந்து கத்தினார். கம்பளிச் சட்டையைத் தேய்த்துக் கொண்டான். தொப்பியால் காலைத் தட்டினான். மரங்களினூடே வெறித்துப் பார்த்தான். நிலத்தை நோக்கினான். கடைசியாக கப்பியை உதைத்துக்கொண்டே "நல்லது நீதிபதியவர்களே அதற்காக நான் கேட்பது—" அவன் தத்திப் பேசினான்.

"எவ்வளவு ?"

"ஆறு டாலர்கள் !" என்று நெஞ்சில் குமுறிக் கொண்டிருந்த சொற்கள் வெடித்துக்கொண்டு வந்தன.

சாய்வு நாற்காலியிலமர்ந்திருந்த நீதிபதி நன்றாகச் சாய்ந்து கொண்டு வயிறு வெடிக்கச் சிரிக்கும் மனிதன் என்னென்ன செய்வானோ அவ்வளவும் செய்தார். ஆனால் ஒரு சிறு இருமல் தவிர வேறு சப்தமே வரவில்லை. வில்லியம்ஸ் அவரிடம் பதிலை எதிர் நோக்கி அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"நல்லது. ஆறு டாலர்களை நீ ஒரு சம்பளமாகக் கருதுகிறாயா ?"

"இல்லை ஐயா, அது ஒரு சம்பளமில்லை. உண்மையில் இல்லை. அது ஒரு சம்பளமில்லை." தன் புத்திசாலித்தனத்தை இந்த வழியில் சோதனை செய்யும் அந்த நீதிபதியின் மேல் அவனுக்குக் கோபமாக வந்தது.

"நல்லது, உன் குழந்தைகள் சாப்பிடவேயில்லை என்றாலும்..."

"நான்—"

"அவன் ஒரு பிசாசு மாதிரியே தோற்றமளித்தாலும், எல்லாம் எந்தவித மாறுதலுமின்றி இப்போதிருப்பது போலவே தொடர்ந்திருந்தாலும் வாரம் ஆறு டாலர்களுடன் திருப்தியடைந்து விடுவாயா ?"

இத்தகைய கேள்விகளால் வில்லியம்ஸின் மனம் பழைய நிகழ்ச்சிகளை எண்ணியது. அவன் சந்தேகத்துடன் பதிலளித்தான். "மூளையும் இல்லை. பிசாசு போலவும் காணப்படுகிறான், அது உண்மை. ஆனால் ஆறு டாலர்கள்—" இந்த இரண்டு வாக்கியங்களைச் சொன்னதும், தடைப்பட்டிருந்த வார்த்தைகள் வெள்ளமாக வரத் தொடங்கின.

கைகளை வீசிக்கொண்டு "நீதிபதி அவர்களே, நான் சொல்றேன். எப்படியும் ஆறு டாலர்கள் ஆறு டாலர்கள்தான். ஆனால் ஹென்ரி ஜான்ஸனுக்குச் சோறு போடுவதற்காக நான் ஆறு டாலர்கள் பெற்றால் அந்தப் பணத்தை நான் சம்பாதிக்கிறேன்— சம்பாதிக்கிறேன்."

"நீ செய்யும் வேலைக்கு, நீ விரும்புவது போல வாரத்துக்கு ஆறு டாலர் ஊதியம்தான் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை."



"ஆமாம் எசமான். ஹென்ரி ஜான்ஸனுக்குச் சோறு போட்டு வாரம் ஆறு டாலர்கள் பெற்றால்—அதை நான் முற்றிலும் சம்பாதிக்கிறேன். சம்பாதிக்கிறேன்" என்று வில்லியம்ஸ் கூக்குரலிட்டான்.

## XIV

ரெய்வ்ஸ்னைடரின் சிப்பந்தி சாப்பிடப் போயிருந்தான். அவசரமாக முக க்ஷவரம் செய்துகொள்ள வேண்டுமென்று கடைக்குள் ஒரே சமயத்தில் நுழைந்த நான்கு பேர்களையும் சமாளிக்கக் கடையின் சொந்தக்காரன் தன் சாமர்த்தியம் முழுமையும் காட்டிக் கொண்டிருந்தான். க்ஷவரத் தொழில் செய்யும் வகுப்பினர் பொதுவாகப் பேச்சில் ஈடுபட மாட்டார்கள். அதுதான் அவர்கள் தொழில் சம்பிரதாயம் கூட.

ஆனால் ரெய்வ்ஸ்னைடர் இவ்விதிக்கு விலக்கு. அவனுக்கு பேச்சென்றால் வெகு பிரியம். அதுதான் மற்ற க்ஷவரத் தொழிலாளரை விட அவனிடமிருந்த சிறப்பான அம்சம். சாதாரணமாக வாடிக்கைக்காரர்கள்தான் மற்ற இடங்களில் பேசுவர். இங்கே சொந்தக்காரன்தான் பேசினான்.

நாற்காலியிலிருந்த ஒருவனுடைய கன்னத்தை வழித்துக் கொண்டே பொறுமையிழந்து காத்துக் கொண்டிருக்கும் மற்ற நாற்காலியிலிருந்தவர்களை தன் இனிமையான பேச்சைக் கொண்டே சமாதானப்படுத்துவான். அவர்கள் என்னமோ இவன் பேச்சை ஒன்றும் ரசிக்க மாட்டார்கள்.

"ஓ, அவர் அவனைச் சாக விட்டிருக்க வேண்டும்," என்றான் காத்திருந்தவர்களில் ஒருவனான பெய்ன் பிரிட்ஜ் என்ற ஒரு ரெயில்வே என்ஜினீயர். ரெய்வ்ஸ்னைடரின் சளசளவென்ற பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைப்பது போல அவன் அதைச் சொல்லிவிட்டு, "ரெய்வ், வாயை மூடிக்கொண்டு உன் வேலையைப் பார்" என்று அவனுக்கு ஒரு எச்சரிக்கையும் விடுத்தான்.

ஆனால் ரெய்வ்ஸ்னைடர் க்ஷவரம் வழித்துக் கொண்டிருந்ததை அப்படியே நிறுத்திவிட்டு பேசினவன் பக்கம் திரும்பினான். "என்ன சொன்னீர்கள் ? அவனை சாகும்படி விட்டு விடுவதா. அது எப்படி ? ஒரு மனிதனை எப்படிச் சாக விடுவது ?" என்று அவன் பேச்சைக் கிளறினான்.

"முட்டாளே, எப்படி என்றால் அவனைச் சாக விடுவதன் மூலம்தான்" என்று பதில் சொன்னான் என்ஜினீயர். மற்றவர்கள் எல்லோரும் கொஞ்சம் சிரித்தனர். மூன்று பேரும் ஏக காலத்தில் சிரித்து தன்னைக் கேலி செய்ததால் மௌனமடைந்தான் சொந்தக்காரன். வேலையைக் கவனிக்கலானான்.

ஆனால் சிறிது நேரங்கழித்து "அது எப்படி முடியும் ? ஒருவன் அவ்வளவு உபகாரம் செய்திருக்கும்பொழுது அவனை எப்படிச்

செத்துப் போக விட்டுவிடுவது?'' என்று சமாதானமடையாத உள்ளத்துடன் அவன் முணுமுணுத்தான்.

''உனக்கு நிறைய உட்காரம் செய்திருக்கிறானா? அப்படியானால் எங்களுக்கு முக க்ஷவரம் செய்து விடு—எப்படி? இது என்ன க்ஷவரக் கடையாக இல்லையே!'' என்றான் அந்த என்ஜினீயர் எரிச்சலுடன். காத்துக் கிடந்தவரில் இதுவரை மௌனமாக இருந்த மற்றொருவன் ''டாக்டர் டிரெஸ்காட் ஸ்தானத்தில் நான் இருந்திருந்தால் அவர் செய்ததைத்தான் நானும் செய்திருப்பேன்'' என்றான்.

''அதுதான் சரி,'' என்றான் ரெய்வ். ''யாராக இருந்தாலும் அதைத்தான் செய்வர். உன்னைப் போல ஒரு இரக்கமற்ற—இரும்பு நெஞ்சம் படைக்காத மற்ற எவனும் அப்படித்தான் செய்வான்.'' இறுதிச் சொற்களை அவன் மிகவும் ஜாக்கிரதையாகப் பொறுக்கியெடுத்துத் திரட்டிப் பெய்ன் பிரிட்ஜ் மீது வீசினான். என்ஜினீயர் இதைக்கேட்டுச் சிரித்துக் கொண்டான்.

க்ஷவரம் செய்து கொண்டிருந்தவனுக்குத் தலையில் எண்ணெய் தடவிச் சீவிவிடும் கடைசி வேலையைக் கவனித்தான் ரெய்வ். நாற்காலியிலிருந்த மனிதனும் நிமிர்ந்து உட்கார்ந்து பேச்சில் கலந்து கொள்ளும் நிலைமையில் இருந்தான். அவன் சொன்னான்: ''அவன் உலகத்திலேயே மிகப் பயங்கர உருவமாய் இருக்கிறான் என்று எல்லோரும் சொல்லிக்கொள்ளுகிறார்கள்.''

''அலெக் வில்லியம்ஸின் குடிசையில் அவனை ஜானி பெர்னாட்—அவன்தான் பலசரக்கு லாரி ஓட்டுபவன்—ஒரு தடவை பார்த்தானாம். பிறகு இரண்டு நாட்களுக்கு அவனுக்கு சாப்பாடே ஏற்றுக் கொள்ளவில்லையாம்.''

''சே, சே, அப்படி ஒன்றும் இல்லை,'' என்றான் ரெய்வ்ஸ்னைடர்.

''அவ்வளவு பயங்கரமாக இருக்க அவனுக்கு என்ன ஆகிவிட்டது?'' மற்றொருவன் கேட்டான்.

''ஏனெனில் அவனுக்கு முகம் என்ற உறுப்பே இல்லையாம்'' என்று ரெய்வும், என்ஜினீயரும் ஒரே குரலில் சொன்னார்கள்.

''முகமே இல்லையா?'' அவன் திரும்பக்கேட்டான்.

''முகம் இல்லாது ஒரு மனிதன் எப்படியிருக்கமுடியும். தலைக்கு முன்னால் அவனுக்கு முகம் இல்லை?''

"முகமில்லை தலை முன்னே
முண்டமலால் வேறில்லை"

பெயின் பிரிட்ஜ் தன் தொப்பியை கொக்கியில் மாட்டியவண்ணம் இந்த வரிகளைப் பரிதாபகரமாகப் பாடினான், நாற்காலியிலிருந்தவன் அப்போது தான் இடத்தைக் காலி செய்தான். அதில் என்ஜினீயர் உட்கார்ந்து ''சீக்கிரமாக ஆகட்டும். நான் 7-31-க்கு வெளியே போகவேண்டும்'' என்று கடைக்காரனைத் துரிதப்படுத்தினான். என்ஜினீயர் முகத்தில் சோப்பு நுரையைத் தடவும்போது ரெய்வ் ஏதோ யோசனையிலாழ்ந்திருந்தான். திடீரென அங்கிருந்தவர்களை நோக்கி அவன் கேட்டான். ''உங்களுக்கு முகம் இல்லையென்றால் எப்படி இருக்கும்.''



''உன்னுடைய முகம் மாதிரி எனக்கு முகம் இருந்திருந்தால் ............'' ஒருவன் எரிச்சலுடன் பதில் சொன்னான்.

சோப்பு நுரைக்குள் புதைந்திருந்த வாயிலிருந்து பெயின் பிரிட்ஜின் பேச்சு வெளிவந்தது. ''நிறையப் பேருக்கு இந்த மாதிரி முகமே இல்லாது போய்விட்டால் உனக்கு வேலையே இருக்காது என்றுதானே உன் கவலை, அப்படி என்றால் நீ உன் கடையைக் கட்டவேண்டியதுதான்."

''முகம் இல்லாமல் போகவேண்டுமென்று எல்லோரும் விரும்புவார்களா? ரொம்பப் பேர் விரும்பமாட்டார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன்,'' என்றான் கடைக்காரன்.

மற்றொருவன் சொன்னான், ''அவன் முகம் அழிந்துபோன மாதிரி மற்றவர்களுடைய முகமும் தேய்ந்து போவதானால் ஒருவரும் விரும்பமாட்டார்கள் தான். நான்கூட இப்போது இருக்கும் முகத்தை வைத்துக் கொள்ளத்தான் விரும்புவேன். என்ன நினைக்கிறாய்?''

''நான் அப்படித்தான் நினைக்கிறேன். கொஞ்சம் யோசனை செய்து பாருங்கள்,'' என்றான் ரெய்வ்.

பெய்ன் பிரிட்ஜின் க்ஷவரம் எளிதாகப் பேச்சில் கலந்துகொள்ளும் நிலைக்கு முடிந்திருந்தது. ''டாக்டரே இதைப்பற்றி தனக்குள் என்ன நினைத்துக் கொண்டிருப்பார் என்று எனக்குச் சந்தேகம் தான். அவனைப் பிழைக்க வைத்ததற்காக வருந்திக் கொண்டிருந்தால் ஆச்சரியமில்லை,'' என்றான்.

''அவரால் செய்யக்கூடியது அது ஒன்றுதானே'' என்றான் ஒருவன். மற்றவர்களும் அவன் கருத்தை ஆமோதித்தனர்.

''டாக்டர் ஸ்தானத்தில் நீ இருந்து உன் குழந்தையை ஜான்ஸன் காப்பாற்றியிருந்தால் நீ என்ன செய்திருப்பாய்?'' என்று ஒருவன் கேட்டான்.

''நிச்சயமாக அவர் செய்ததைத் தான் செய்திருப்பேன்.''

''உண்மை, அவனுக்காக உலகில் எதையும் செய்வாய், அவனுக்காக எத்தகைய தொந்தரவையும் சகித்துக் கொள்வாய், உன் செல்வமனைத்தும் அவனுக்கே செலவிடுவாய் அப்படித்தானே?''

''முகம் இல்லாதிருந்தால் எப்படி இருக்கும்?'' ரெய்வ் தன்னை மறந்து கேட்டான்.

முதலில் பேசியவன் தன்னுடைய கருத்தைத் தெளிவாகச் சொல்லிவிட்டதாக எண்ணி, மறுபடி சொன்னான். ''அவனுக்காக உலகில் எதையும் செய்வாய், எத்தகைய தொந்தரவையும் சகித்துக்கொள்வாய், உன் செல்வமனைத்தையும் அவனுக்கே செலவிடுவாய். பிறகு என்ன?'' என்று கடைசிக் கேள்விக் குறியில் அர்த்தபாவத்தைப் புகுத்தினான் ''அது இருக்கட்டும், உனக்கு முகமே இல்லையென்று வைத்துக்கொள்வோம்'' என்றான் ரெய்வ்.

# XV

ஜட்ஜின் பார்வையிலிருந்து மறைந்ததும் வில்லியம்ஸ் திருப்தியடைந்தவனாகத் தனக்குள் பேசிக்கொண்டான். மனத்தின் சிந்தனை ஓட்டத்திற்கேற்ப கைகளும் நீட்டி, மடக்கி அசைந்தன. அவனுடைய உள்ளத்தில் ஒரே மகிழ்ச்சி. தான் ஒரு சுற்று பெருத்திருப்பதாகக் கூட எண்ணிக்கொண்டான். பிரமாதமான ஒரு காரியத்தைச் சாதித்துவிட்டதாக ஒரு சிட்டிகை போட்டான். அவனுக்குத் தெரிந்த தெம்மாங்கில் சிலவற்றைப் பாடினான்.

தன் குடிசையை நோக்கி நடந்து சென்றவிதமே அவன் நாட்டியமாடிக் கொண்டுதான் போகிறான் என்று எண்ணும்படி இருந்தது. அவ்வப்போது அவன் வாயிலிருந்து ஒவ்வொரு வார்த்தைகள் உரக்கக் கேட்டன.

தன் பெருமையைத் தனக்கே வாய்விட்டுச் சொல்லிக்கொண்டிருந்தான். அதெற்கெல்லாம் காரணம் அவன் நீதிபதியிடம் சாதுர்யமாகப் பேசி வெற்றிமாலை சூடிக்கொண்டு திரும்பியதுதான். இப்போது அவன் ஒருவனாலும் தோற்கடிக்க முடியாத வெற்றி வீரன். அலெக்ஸாண்டர் வில்லியம்ஸ் ஆயிற்றே !

அவன் தன்னம்பிக்கை அவ்வளவு உச்ச நிலையை அடைந்திருந்தது. அவனுடைய ராஜ நடையும், தெம்மாங்கும், கைவீச்சும், அவன் உலகத்தையே எதிர்த்து வெற்றியடைந்தவன் என்பதைக் காட்டின !

வழியில் டவுன் பக்கமாய் போய்க்கொண்டிருந்த நண்பன் ஜேக் பாட்டர்ஸனைச் சந்தித்தான். ஐம்பது கெஜ தூரத்திலேயே ஒருவரை ஒருவர் க்ஷேமம் விசாரித்துக் கொண்டனர்.

"சகோதரர் பாட்டர்ஸன் சுகம்தானா ?"

"சகோதரர் வில்லியம்ஸ் சுகம்தானா ?"

அவர்களிருவரும் அந்தக் கிராமத்து மாதா கோவிலில் சில்லறை வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"உங்க வீட்டில் எல்லோரும் சுகம்தானா ? பாட்டர்ஸன்."

"இருக்காங்க, இருக்காங்க. உங்க வீட்டிலே எல்லோரும் சுகந்தானே சகோதரர் வில்லியம்ஸ்?"

ஒருவரும் நடையின் வேகத்தை கொஞ்சங்கூடக் குறைத்துக் கொள்ளவில்லை. இருவருக்கும் கொஞ்ச தூரத்திலிருந்தே இந்தப் பேச்சை ஆரம்பித்தனர். நடந்தபடியே பேச்சைத் தொடர்ந்தனர். கொஞ்சதூரம் ஒருவரையொருவர் கடந்து செல்லும் வரையில் உபசாரத்துக்கு இம்மாதிரி சில கேள்விகளைக் கேட்டுக்கொண்டனர்.

வில்லியம்ஸின் மனம் ஒரு பலூன் மாதிரி உப்பி இருந்தது. அவன் ஆகாயத்தில் அல்லவா பறந்துகொண்டிருந்தான் ! தன்னெதிரில் வந்த பாட்டர்ஸன் தன்னை நேருக்கு நேராக பார்த்தபோது ஒதுங்கி பாதை ஓரத்திலேயே நடந்துபோனான் என்பதைக் கூட அவன் கவனிக்கவில்லை.



மறுபடியும் தனியாக அவன் சென்றபோது மீண்டும் முன்போலவே பாடத் தொடங்கிவிட்டான்.

அவன் கால்கள் துள்ளு நடை போட்டன. வீட்டருகில் வந்துகொண்டிருந்தபொழுது வயல்கள் அந்திப்பொழுதின் நீல நிறத்தில் தோய்ந்திருந்தன. ஜன்னல் வழியாக வந்த வெளிச்சம் மங்கலாகத் தெரிந்தது. மகிழ்ச்சி பொங்கச் சில விநாடிகள் அவற்றையெல்லாம் தூரத்திலிருந்தே பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது மற்றொரு நினைவு அவன் மனத்தில் தோன்றியது. அவன் நின்றான். திடீரென உற்சாகம் குன்றியவனைப்போல் தனது பாவத்தை மாற்றிக்கொண்டு எதிரியின் கோட்டைக்குள் நுழைவதுபோன்று தன் வீட்டை அடைந்தான்.

சில நாய்கள் யாரோ என்று எண்ணி அவனைப் பார்த்துக் குரைத்தன. நெருங்கியதும்தான் வந்தவன் தங்கள் எஜமானன் என்பதைக் கண்டதும் அவை கோழையைப்போல் அப்பால் சென்று மறைந்தன. அலெக் அவைகளை முணுமுணுத்தபடியே திட்டித் தீர்த்தான்.

வாயிற் கதவருகில் வந்ததும் ஒரு திருடன் மெதுவாக அதைத் தள்ளுவதுபோல் கதவைத் தள்ளினான். அக்கம் பக்கத்தில் யாராவது இருக்கிறார்களாவென்று கவனமாகப் பார்த்துக்கொண்டான்.

உள்ளே மேஜையருகில் இருந்த தன் மனைவியைக் கண்டான். அவளும் இவனைப் பார்த்துவிட்டான். அவள் முகம் பாதி வெளிச்சத்திலிருந்தது. அவளை எச்சரிக்கை செய்யும் விதத்தில் 'உஷ்' என்று சப்தம் போடாமல் இருக்க சைகை செய்தான். அவள் பார்வை ஜான்ஸன் படுக்கை யறைக்குச் சென்ற கதவின்மேல் நின்றது. அவனுடைய 'குஞ்சுக' ளெல்லாம் தரையில் தாறுமாறாகப் படுத்து மெல்லிய குறட்டைவிட்டுத் தூங்கிக்கொண்டிருந்தன. நன்றாகச் சாப்பிட்டு எல்லோரும் ஆடிவிட்டுத் தூங்கியிருக்கிறார்கள் என்பது தெரிந்தது. "ஷ்" என்று சிலைபோன்று உட்கார்ந்திருந்த மனைவியைப் பார்த்து மறுபடியும் அங்கிருந்தபடியே எச்சரித்தான். அவன் தலையை மட்டுமே உள்ளே நீட்டினான்.

ஒரு கையில் மேஜையின் விளிம்பையும், மற்றொன்றில் தன் முழங்காலையும் கட்டியவண்ணம் இருந்தவள், விரிந்த கண்களுடனும், பிளந்த வாயுடனும் ஒரு பயங்கர தோற்றத்தைப் பார்ப்பதுபோல கதவுக்கருகில் நின்றிருந்த தன் கணவனைப் பார்த்தாள். பயத்தின் சூழ்நிலையிலேயே வாழ்பவள் போன்று அவள் காணப்பட்டாள். அவளுக்குப் பழக்கப்பட்ட கணவனின் முகம்கூட திடீரென்று தோன்றியதால் அவளைப் பயமுறுத்தியது.

வில்லியம்ஸ் அந்த அமைதியைக் கலைத்தான். "அவன் சரியாய் இருக்கிறானா ?" என்று உட்கதவைச் சுட்டிக் காட்டியவண்ணம் அவன் மெதுவாகக் கேட்டான்.

தயங்கியபடியே அவள் பதில் சொன்னாள். "அவன் தூங்கியிருப்பானென்று நினைக்கிறேன்." —இவ்வாறு நிச்சயப்படுத்திக்

கொண்ட பிறகு வாசற்படியைத் தாண்டி உள்ளே சென்றான் வில்லியம்ஸ்.

ஒரு நாற்காலியை இழுத்து மிகுந்த ஜாக்கிரதையுடன் போட்டுக்கொண்டு உட்கதவைப் பார்த்தபடியே அதில் உட்கார்ந்து கொண்டான். அவன் மனைவியும் அதைப் பார்த்தபடியே இருக்கும்படி நாற்காலியைத் தள்ளிப் போட்டுக்கொண்டாள். ஏதோ ஒரு மகத்தான துக்க சம்பவம் ஏற்படப்போகிறது போலவும், அதை எதிர்பார்த்துக் காத்திருப்பது போலவும் அவ்விருவரும் உட்கார்ந்துகொண்டனர்.

வில்லியம்ஸ் கையை மறைத்துக்கொண்டு லேசாக இருமினான். அவன் மனைவி பீதியுடன் அவன் பக்கம் திரும்பினாள். "இன்றிரவு முழுதும் அமைதியாய் இருப்பான் போலிருக்கு" என்று சொல்லி அவன் மூச்சு விட்டான்.

பிசாசுக்கும் பிணத்துக்கும் மரியாதை செய்வது போல் அவர்கள் ஓயாது உட்கதவைச் சுட்டிக் காட்டியபடியேதான் பேசினர். இதையடுத்து மற்றொரு நீண்ட மௌனம். இருவருடைய கண்களும் விரிந்து ஒளி வீசிக்கொண்டிருந்தன.

தூரத்திலுள்ள சாலையில் ஒரு லாரி சப்தத்துடன் சென்றது. நாற்காலியிலிருந்து எழுந்து ஜன்னல் வழியே அதைப் பார்த்தனர். வெளியே ஒரே இருள் கவ்விக்கொண்டிருந்தது. அந்த இருளில் இவர்கள் வீட்டு ஜன்னல் வெளிச்சம் மாதா கோவில்களில் சமக் கிரியைகள் நடைபெறும்பொழுது ஒற்றை விளக்குபோல் தோற்றமளித்தது. அவள் மாதா கோவில் சமச் சடங்கின்போது நடந்து கொள்ளுவது போலவேதான் நடந்துகொண்டாள். ஒவ்வொரு சமயம் பிரார்த்தனைகூடத் தொடங்கி விடுவாளோ என்று தோன்றியது.

"இன்றிரவு அமைதியாக இருப்பான் என்றே தோன்றுகிறது. பகல் பொழுது நல்லபடியாக இருந்தானா?" என்று அவன் மெதுவாகக் கேட்டான்.

பதிலுக்கு அவள் கூரையைப் பார்த்தாள். ஆண்டவன் அருளால் ஏதோ நல்லபடியாகப் போயிற்று என்று சொல்லுவது போல இருந்தது அந்தப் பார்வை. அறையில் அவன், குறுக்கும் நெடுக்குமாகச் சிறிது நடந்தான். பிறகு ஜாக்கிரதையாகக் கதவருகிற் சென்று ஓசைப்படாது மெதுவாகப் போய் சாவித் துவாரத்தில் காதைப் பொருத்தி கவனித்தான்.

பின்னால் ஏதோ சலசலவென்ற சப்தம் கேட்கவே திடுக்கிட்டுத் திரும்பினான். அவன் மனைவிதான் அவனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் அடுப்பின்முன் நின்று கொண்டாள். அருகில் தூங்கிக் கொண்டிருந்த அவள் குழந்தைகளை எப்படியும் பாதுகாக்க வேண்டும் என்று உறுதி பூண்டவள் போல் இரண்டு கைகளையும் அகல விரித்துநின்றபோது குழந்தைகளை அணைக்கும் பாவனைதோன்றியது.



ஆனால் வில்லியம்ஸ் கதவைத் தொடாமலே திரும்பிவிட்டான். "அவன் தூங்குகிறான் என்று நினைக்கிறேன்" என்று சட்டையைத் தடவிக்கொண்டே சொன்னான். சிறிது நேரம் தனக்குள்ளே ஏதோ சிந்தித்தான். தன் குழந்தைகளைக் காப்பாற்றும் மாபெருஞ் சிலை போன்று அவள் மனைவி நின்று கொண்டிருந்தாள்.

இப்போது அவனுக்குக் கொஞ்சம் தைரியம் வந்து விட்டது. சப்தமெழுப்பிய வண்ணம் கதவருகில் வந்தான். அவன் விரல்கள் கைப்பிடி மீது பதிந்தன. பிறகு என்ன நினைத்துக் கொண்டானோ திடீரெனக் கையை இழுத்தவாறே தலையைத் தட்டிவிட்டுக் குனிந்தவாறே பின்னடைந்தான்.

கதவே அவனைப் பயமுறுத்தியதுபோலும்! இவன் சட்டென்று பின்னடைந்ததைப் பார்த்து அடுப்பருகில் நின்று கொண்டிருந்த அவன் மனைவியும் அப்படியே பின்னடைந்தாள். அந்த வேகத்தில் கீழே படுத்திருந்த குழந்தைகளைக் கூட மிதித்து விட்டிருப்பாள். மயிரிழை தப்பியது.

பயம் தெளிந்தபின் வில்லியம்ஸ் தன்னுடைய கோழைத்தனத்துக்கு மிகவும் வெட்கப்பட்டான். மறுமுறை கதவருகில் சென்றான். தைரியத்திற்காக சப்தம் போட்டுக்கொண்டே இரு கையால் கைப்பிடியைப் பற்றிக்கொண்டு வலது கையால் பூட்டைத் திறந்தான்.

கதவை உள்ளே தள்ளியதும் கூட்டிலிருந்த சிங்கத்தை அவிழ்த்துவிடும் அடிமையைப் போல் ஒருபுறம் ஒதுங்கி நின்றான். பயத்தினால் வெளிறிப் போயிருந்த அவன் மனைவி, அவன் அப்படியே குப்புற விழுந்து விடுவான் என்று எதிர்பார்த்து நின்று கொண்டிருந்தாள்.

கதவைத் திறந்த பிறகும் கூட வில்லியம்ஸ் கத்திக்கொண்டேதான் நின்று கொண்டிருந்தான். ஜன்னல் திறந்திருந்தது. அடுப்பருகில் ஒரு கூட்டம் கூடியிருந்தது. பயத்தால் நடுங்கிய தாய், எழுந்துவிட்ட குழந்தைகளை அணைத்தவண்ணம் நின்றிருந்தாள். குழந்தைகள் அவளுடைய அங்கியை நடுக்கத்துடன் பற்றிக் கொண்டிருந்தன.

அறையுள் வெளிச்சம் வந்தது. அந்த அறை ஆறடி நீளம், ஆறடி அகலம் கொண்டது. மிகச் சிறிய அந்த அறையில் ஒருவன் சௌகர்யமாகப் படுக்கவும் முடியாது. கதவைப் பற்றியவண்ணம் ஒரு மூலைக்குச் சென்றான் வில்லியம்ஸ்.

திடீரென அவன் முன்னேறினான். தயங்கினான். கூக்குரலுடன் மறுபடியும் முன்னேறினான். கைகால் உதறலெடுத்திருந்த அவன் குடும்பம் அவன் வெளியே ஓடிவருவான் என்று எதிர்பார்த்தது. அவன் குரலைக் கேட்டதும் நடுங்கி விட்டனர்.

ஆனால் வில்லியம்ஸ் அந்தச் சிறு அறையில் திறந்த ஜன்னல் முன் நின்றுகொண்டு கூக்குரலிட்ட வண்ணமிருந்தான். "ஓடி விட்டான் அவன், அவனைக் காணோம், அவன் ஓடிப் போய்விட்

டான்." அவன் பார்த்த பார்வையும், கை ஜாடைகளும் அதை விரைவில் நிரூபித்தன. ஒரு அலமாரியைத் திறந்து கூடப் பார்த்து விட்டான்.

உடனே வெளியே ஓடி வந்தான். தொப்பியை இறுகப் பற்றிக்கொண்டே வெளிக் கதவைத் திறந்து தலை தெறிக்க "டாக்டர் டிரெஸ்காட், டாக்டர் டிரெஸ்காட்," என்று கூவிக்கொண்டே அந்த இரவில் ஓடினான். அவன் பயங்கர வேகத்துடன் வயல்கள் வழியாக ஓடி நகரத்தை நோக்கிப் பறந்து கொண்டிருந்தான். டிரெஸ்காட்டை அழைப்பதை நிறுத்தவில்லை.

அவன் குரலைக் கேட்கும் தூரத்தில் அவர் இருப்பதாக நினைத்துக் கொண்டான் போலும்! ஓடிக்கொண்டிருக்கும் அந்த நீக்ரோவுக்கு மேலுள்ள வானத்தில் டிரெஸ்காட் நின்றுகொண்டிருந்தாற்போல அவரை அழைத்தான். "டாக்டர் டிரெஸ்காட்."

இரவு முழுவதும் குழந்தைகள் தன்னைச் சுற்றிக் கொண்டேயிருக்க அவன் மனைவி அரைப் பைத்தியம் போன்று அவர்களைக் கட்டிக்கொண்டு இருந்தாள்.

இவ்வாறு இரவு கழிந்து பொழுது விடிந்தது. பகல் வேளை வந்ததும் அது அவர்களுக்குப் புதிய வலுவினைத் தந்தது. திமிரும், அதிகப்பிரசங்கித்தனமும், பகட்டு நடையும் குழந்தைகளிடம் மறுபடியும் வந்து விட்டன. எல்லையற்ற தைரியம் உள்ள தாயாராக அவள் ஆகிவிட்டாள்.

## XVI

தெரஸா பேஜ் என்னும் பள்ளி மாணவி தன் நண்பர்களுக்கு ஒரு விருந்து அளித்தாள். தன் தாயுடன் பல நாட்கள் விவாதம் நடந்த பிறகுதான் செய்யப்பட்ட ஏற்பாடு இது. தாய்க்கும், மகளுக்கும் நடந்த வாக்குவாதத்தை அவளுடைய தந்தையும் சிறிது ஒட்டுக் கேட்டார். அவர் முடிவாக "ஓ அவளிஷ்டப்படி விருந்து அளிக்கட்டுமே" என்று தன் தீர்மானத்தைத் தெரிவித்தார். தாயும் மகிழ்ச்சியுடன் அதற்குக் கீழ்ப்படிந்தாள்.

தெரஸா பத்தொன்பது பேர்களுக்கு அழைப்பிதழ்கள் அனுப்பியிருந்தாள். அவற்றையெல்லாம் பள்ளிக்கூடத்தில் இடைவேளையின் போது தன் பள்ளி நட்பினர்களுக்கு வழங்கினாள். விருந்துக்காக அவளுடைய தாய் ஐந்து பெரிய கேக்குகள் தயார் செய்திருந்தாள். அத்துடன் நிறைய லெமனேடும், பானமும் வைத்திருந்தாள்.

எனவே ஒன்பது சிறுமிகளும், பத்து பையன்களும், சாப்பாட்டு அறையில் ஒழுங்காக அமர்ந்திருந்தனர். தெரஸாவும், அவள் தாயாரும் அவர்கட்கு கேக்கும், லெமனேடும், இன்னும் ஐஸ்கிரீமும் வழங்கினர். சிறுவர்களும், சிறுமிகளும் இவ்வளவு அமைதி



யுடனிருந்ததற்கு காரணம், மிஸஸ் பேஜின் பிரஸன்னமே. சற்று நேரத்திற்கு முன்பு எல்லாம் ஒரே ரகளையாய் இருந்தது. ஒருவன் நாற்காலியை தலைகீழாகப் புரட்டினான். கூச்சலும், கொக்கரிப்பும் அறை முழுதும் ஒலித்தன. சிற்சில சமயங்களில் நிலவிய சூழ்நிலைக்கேற்ப பெண்கள் கையோங்கி பையன்களை இரக்கமின்றி மட்டம் தட்டினர்.

ஆனால் இப்போது சாப்பாட்டு அறையில் மாதா கோவிலில் ஞாயிற்றுக்கிழமை வகுப்பில் இருப்பது போல் அமைதியுடனிருந்தனர். ஆனாலும் அவ்வப்பொழுது ஓரக்கண் பார்வையும், குறும்புச் சைகைகளும், கேலி அபிநயங்களும், உதட்டைப் பிதுக்குதலும், நேர்ந்ததைக் கொண்டுதான் அதை ஒரு குழந்தைகளின் விருந்து நிகழ்ச்சி என்று தெரிந்து கொள்ள முடிந்தது.

அமைதி நிறைந்த இந்தக்கூட்டத்திலிருந்து இரண்டு பெண்கள் சாய்வு பெஞ்சியின் மீது உட்கார்ந்து கொண்டு ஒருவரையொருவர் பார்த்துப் பூரித்துப்போனவர்களாகப் பையன்களையெல்லாம் கேலி செய்து மகிழ்ச்சியுடனிருந்தனர். அவர்களுடைய மகிழ்ச்சி மலர்ந்த முகங்களில் தெரிந்தது.

அவர்களுக்கு முதுகுப் பக்கம் அந்த அறையின் ஜன்னலிருந்தது. ஜன்னலருகில் ஏதோ சப்தம் கேட்கவே ஒரு பெண் திரும்பினாள். தட்சணமே "ஹா" வென்று அலறிப் புடைத்துக்கொண்டு முகத்தைக் கைகளால் மூடியபடியே அங்கிருந்து ஓடினாள்.

"என்ன அது? என்ன அது?" என்று எல்லோரும் ஒரே குரலில் இரைந்தனர். அழுது நடுங்கிக் கொண்டிருந்த அந்தச் சிறுமி சைகை மூலம் ஜன்னலருகில் தோன்றிய ஒரு உருவத்தைக் கண்டு தான் பயந்து விட்டதாகக் கூறினாள்.

உடனே எல்லோரும் அந்த ஜன்னல் பக்கம் உற்று நோக்கினர். ஒரு கணம் நிசப்தம் குடிகொண்டது. அவர்களுக்குள்ளே புத்திசாலியான ஒரு பையன் உள்ளேயிருந்த மற்ற பையன்களைக் கணக்கெடுத்தான். அவர்களில் யாராவது ஒருவன் விளையாட்டுக்காக இம்மாதிரி வெளியே சென்று இப் பெண்கள் மீது பழி தீர்த்துக் கொள்ள இந்த முறையைக் கையாண்டிருப்பானோ என்று அவனுக்குச் சந்தேகம். ஆனால் உள்ளே பத்து பையன்களும் சரியாகவே இருந்தனர். எல்லோர் முகத்திலும் ஒரே வியப்புக் குறி தோன்றி அப்படியே அசையாதிருந்தனர்.

நிலைமையை ஒருவாறு சமாளித்துக் கொண்டு கூக்குரலுடன் பக்கத்துக் கதவு வழியாக எல்லோரும் வெளியேறினர். வெளியே தோன்றி அவர்களைப் பீதியடையச் செய்த அந்த உருவத்தைப் பிடித்துக் கொண்டு வருவதில் ஒருவருக்கொருவர் போட்டியிட்டுக் கொண்டு ஓடினர். அந்த விசாலமான தோட்டத்தில், இருட்டில் சாதாரணமாக எவனுமே இம்மாதிரி ஒன்றைத் தேடிச் செல்லமாட்டான். அதை அவர்களில் ஒருவனும் விரும்பவில்லை. ஆனால் சாப்பாட்டு அறையில் ஒன்பது பெண்கள் அல்லவா கூடியிருந்தனர்.

அவர்களின் மதிப்பைப் பெறுவதற்காகவேனும் ஒரு தீரச் செயல் புரியவேண்டாமா? எனவே ஒருவனும் தயங்கவில்லை. தைரியத்துக்கு ஒருவனையொருவன் கூப்பிட்டுக் கொண்டே ஒரு படையின் அணி முன்னேறுவது போல புல்வெளியெல்லாம் தேட ஆரம்பித்தனர். நிழல் தெரிந்த இடங்களையெல்லாம் முக்கியமாக கவனித்தனர்.

ஆனால் எச்சரிக்கையுடன்தான் முன்னேறினர். இரவின் அமைதியைக் குலைக்கும் எதையும் அவர்கள் காணவில்லை. ஒரு பையன் வெகு சாதுர்யமாக ஒரு பெரும் பொய்யை அவிழ்த்துவிட்டதென்னவோ உண்மைதான்.

வேலி வழியாக ஒரு பயங்கர உருவம் கீழே குனிந்து கொண்டு மறைந்து சென்றதாகச் சொல்லி அதைப்பற்றிச் சில விவரங்கள் கூட சொன்னான். கதைகளில் அவன் கேட்டிருந்தவற்றையெல்லாம் சேர்த்துத் தன் பொய்யை அழகுபடுத்தினான்.

அந்த உருவம் பெருங் கூச்சலிட்டுச் சிரித்ததைத் தான் கேட்டதாகக்கூடச் சாதித்தான். முதன் முதலாக இந்த உருவத்தைப் பார்த்த அந்தச் சிறுமிக்கு வீட்டிற்குள் இன்னும் உடம்பு உதறிக் கொண்டிருந்தது. தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள். மிஸஸ் பேஜ் மிகுந்த சிரமப்பட்டு அவளைத் தன்னால் முடிந்தவரையில் தேற்றிச் சமாதானப்படுத்தினாள். தான் உடனே வீடு செல்ல வேண்டுமென அவள் விரும்பினாள்.

அப்போதுதான் மிஸ்டர் பேஜ் உள்ளே நுழைந்தார். பண்பு தெரிந்த அவர் குழந்தைகளின் குதூகலத்தைக் குலைக்கக்கூடாதென்று விருந்து முடிந்து அவர்களெல்லாம் வீடு செல்லத் தயாராகும் வரையில் அந்தப் பக்கமே தலைகாட்டாமல் வெளியிலேயே இருந்தார்.

கதவைத் திறந்து வெளியேவந்ததும் இருட்டைப் பார்த்து அவள் மறுபடியும் அழத் தொடங்கி விட்டாள். எனவே அச்சிறுமியை வீட்டுக்குக் கொண்டு சேர்ப்பது அவர் பொறுப்பாயிற்று.

தன் வீட்டை அடைந்த பிறகும் தன் தாயிடம் அவளால் ஒன்றும் சரியாய்ச் சொல்ல முடியவில்லை. அவளை விரட்டியது என்ன? மனிதன்தானா? அவளுக்குத் தெரியாது. அது ஏதோ ஒன்று என்றுதான் அவளால் சொல்ல முடிந்தது.

## XVII

வாட்டர்மெலான் சந்தில் தன்னுடைய குடிசையின் முன்புறத் தாழ்வாரமொன்றில் பெர்ராகட் குடும்பத்தினர் மாலையில் என்றும் போல் உட்கார்ந்திருந்தனர். அவர்களைப் போலவே அடுத்த குடிசைகளின் தாழ்வாரத்தில் உட்கார்ந்திருந்தவர்களுடன் ஊர் வம்பு பேசிக் கொண்டிருந்தனர். இதுதான் அவர்கள்



வழக்கம். ஒரு வீட்டிலிருந்து ஒரு குழந்தை வீறிட்ட சப்தம் கேட்டது. மற்றொரு வீட்டில் ஒருவன் தன் மனைவியுடன் தீவிரமாக ஏதோ விவாதித்துக் கொண்டிருந்தான். இதையெல்லாம் அந்தச் சிறு சந்தில் வசித்தவர்கள் யாரும் கவனிக்கவில்லை.

திடீரென்று பெர்ராகட் குடும்பத்தினர் முன் ஒரு பயங்கர உருவம் வந்து நின்றது. தலையைத் தாழ்த்தி வெகு நாகரிகப் பாணியில் அவர்களுக்குக் குனிந்து வணக்கம் தெரிவித்தது. ஒரு கணம் அமைதி; அடுத்த கணம் பூகம்பத்தினால் பூமி பிளந்து சின்னாபின்னமானது போன்ற ஒரு நிகழ்ச்சி அங்கே நடந்தது.

பயங்கரக் கூச்சலுடன் மிஸஸ் பெர்ராகட், பின்புறமாக விழுந்து விட்டவள் சமாளித்துக் கொண்டு வீட்டின் புறக்கடைப் பக்கம் ஓலமிட்டுக் கொண்டு ஓடத் தொடங்கினாள். சிறுவன் ஜிம், வேலிமேல் சொகுசாக உட்கார்ந்திருந்தான். இந்தக் கோரவுருவத்தைக் கண்டவுடன் அப்படியே தடாலென்று தரையில் விழுந்தான்.

அவன் ஒன்றும் சப்தம் போடவில்லை. கண்கள் நிலைகுத்தி விட்டன. கீழே தடுமாறி விழாமல் இருக்க உணர்ச்சியை இழந்த கைகள் வேலியைப்பற்ற முயற்சித்துக் கொண்டிருந்தன. அடுத்த கணம் அவன் எங்கேயோ மாயமாக மறைந்து விட்டான். பெல்லாவுக்கு தலையிலிருந்து கால் வரை ஒரே உதறல். தலைவிரி கோலமாக மண்டியிட்டுப் படிகளின் வழியே கைகளால் தடவிக்கொண்டே அப்பால் சென்று விட்டாள்.

கலங்கிப்போன இந்தக் குடும்பத்தினர் முன் அந்த கோர உருவம் தொடர்ந்து வணக்கம் செலுத்திக்கொண்டிருந்தது. பயப்படவேண்டாம் என்று கேட்டுக் கொள்வது போல தன் கைகளைக் கூட உயர்த்தியது. பிறகு அது பேசிற்று:

"மிஸ் பெர்ராகட், என்னைக் கண்டு ஒன்றும் பயப்பட வேண்டாம். இல்லை மிஸ் பெர்ராகட், நீ சுகமாயிருக்கிறாயான்னு விசாரித்துப் போகத்தான் இன்று மாலை வந்தேன். வேறெதற்காகவும் வரவில்லை. ஒன்றும் கவலை வேண்டாம். என்னுடன் இன்று ஒரு நடனத்துக்கு வரமுடியுமா? என்று உன்னைக் கேட்க வந்தேன், மிஸ் பெர்ராகட். மறுபடியும் கேட்கிறேன், மிஸ் பெர்ராகட், அந்த நடனத்திற்கு சோபையூட்டும் உன்னுடைய தோழமையை எனக்களித்து என்னைப் பெருமைப்படுத்தினால் உனக்கு நன்றி உள்ளவனாக இருப்பேன்," என்று மிகுந்த மரியாதையுடன் அவ்வுருவம் பேசிற்று.

அவள் பரிதாபகரமாகத் திரும்பிப் பார்த்தாள். இன்னும் அவள் மெதுவாக நகர்ந்து நகர்ந்து படிக்கட்டு வழியே போய்க் கொண்டேயிருந்தாள். தாழ்வாரத்துக்குப் பின்னால் சிறுவன் ஜிம் விநோதமாக ஆடுபோல் வறட்டுக்கத்தல் கத்திக்கொண்டேயிருந்தான். அவன் பயந்திருந்தான். அவனால் அசைய முடியவில்லை.

அப்பொழுது அந்தக் கோர உருவம் நாகரிகமாக நடந்து

அவளைப் பின்தொடர்ந்து படிகளில் ஏறியது. அது ஒரு நாற்காலியில் அமர்ந்த பொழுது அவள் பயத்துடன் ஒரு மூலையில் சென்று ஒடுங்கி விட்டாள்.

நாற்காலி நுனியில் அது வெகு ஒய்யாரமாக உட்கார்ந்து கொண்டது. '' மிஸ் பெர்ராகட், ஒன்றும் பயப்பட வேண்டாம். ஒன்றும் கவலை கொள்ளவேண்டாம். இன்று மாலை நடனத்திற்கு இந்த எளியேன் விடுக்கும் அழைப்பை ஏற்று என்னை மகிழ்விப்பாயா? என்று கேட்கவே வந்தேன் மிஸ் பெர்ராகட், அவ்வளவு தான்,'' என்றது.

அவளுடைய பயம் உச்சநிலைக்குச் சென்று விட்டது. தன்னைப் பாதுகாத்துக் கொள்ளக் கடைசி வழியாக அழுது கொண்டே தரையில் குப்புற விழுந்து விட்டாள்.

அந்த உருவம் நாற்காலி முனையில் உட்கார்ந்து கொண்டே இருந்தது. 'நாட்டியத்தைப் பற்றிக் கேட்க வந்தேன்' என்று அதன் வாய் முணுமுணுத்துக் கொண்டே இருந்தது. மரியாதையில் ஒன்றும் குறையவில்லை. கையில் பிடித்திருந்த தொப்பி வயிற்றில் அழுந்தியிருந்தது. பண்பின் அறிகுறி நன்கு தெரிந்தது.

மிஸஸ் பெர்ராகட் ஒரு இரட்டை நாடி சரீரம். கடந்த எட்டாண்டுகளாக சாய்வு நாற்காலியில் உட்கார்ந்த வண்ணம் தனக்கு வந்த பலவித நோய்களைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருப்பதைத் தவிர வேறொரு வேலையும் செய்ததில்லை. இப்பொழுது வீட்டின் பின்புறம் வரையில் ஓடி பின்னாலிருந்த வேலியை வெகு லாகவமாகத் தாண்டிக் கொண்டிருந்தாள்.

## XVIII

எரிந்துபோன டிரெஸ்காட்டின் வீட்டின் சாம்பல் குவியல்கள் இன்னமும் குளிர்ச்சி அடையவில்லை. அதற்குள்ளாகவே கொத்தர்களும், மேஸ்திரிகளும் புது வீடு கட்டுவதில் வெகு மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். புது வீடு வேகமாகவே உருவாகிக் கொண்டிருந்தது.

ஏதோ ஒரு மந்திர சக்தியால் சாம்பல் குவியலிலிருந்து புதிய வீடு தோன்றுவது போல டாக்டருடைய வீடு உருவாகிக் கொண்டிருந்தது. ஆபீஸ் அறைதான் முதலில் கட்டி முடிக்கப்பட்டது. இந்தப் புதிய ஆபீசுக்கு அதற்குள் அவர் புத்தகங்கள், கருவிகள், மருந்துகள் முதலியவற்றைக் கொண்டு சேர்த்து விட்டார்.

டிரெஸ்காட் அவருடைய மேஜையின் முன் உட்கார்ந்திருந்தார். அப்போதுதான் போலீசுப் படைத் தலைவன் உள்ளே நுழைந்தான். '' நாங்கள் அவனைக் கண்டு பிடித்து விட்டோம் '' என்று அவன் வந்தவுடனே அறிவித்தான். '' கண்டு பிடித்து விட்டீர்களா? நல்லது எங்கே?'' என்று கேட்டார் டாக்டர்.



'' காலை வெய்யிலில் அவன் தெருக்களில் சுற்றிக்கொண்டிருந்தான். இரவு எங்கே கழித்தான் என்பதை என்னால் சொல்ல முடியாது. ஏனெனில் எனக்குத் தெரியாது.''

'' இப்போது அவன் எங்கேயிருக்கிறான்?''

'' ஓ, நாங்கள் அவனை அடைத்து வைத்திருக்கிறோம். அவனை என்ன செய்வதென்றே தெரியவில்லை. அதை எங்களுக்கு நீங்கள்தான் சொல்ல வேண்டும். நாங்கள் அவனை அடைத்து வைத்திருக்கக் கூடாதுதான். அவன் மீது எந்தக் குற்றமும் சாட்ட முடியாது. இது உங்களுக்கே தெரியும்,'' என்றான் போலீஸ் தலைவன்.

'' நான் வந்து அவனை அழைத்துக்கொள்ளுகிறேன்,'' என்றார் டிரெஸ்காட்.

அதிகாரி பழைய கதைகளை நினைத்துக் கொண்டவன் போல் பல்லை இளித்துச் சிரித்தான். '' வெளியில் இருந்தபொழுது அவன் குஷியாகவே இருந்ததாகத் தெரிகிறது! முதன் முதலாக பேஜ் வீட்டில் சிறுவர்கள் நடத்திக் கொண்டிருந்த விருந்தைக் கெடுத்து அவர்களை விரட்டியடித்தான். அப்புறம் வாட்டர்மெலான் சந்துக்குப் போயிருக்கிறான். அங்கு ஒரே குழப்பம். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரும் கத்திக் கொண்டே தலை தெறிக்க ஓடியிருக்கின்றனர். வேலியைத் தாண்டி ஓட முயற்சித்த ஒருவளுக்கு காலே முறிந்து விட்டதாம். பிறகு நேரே நடுத்தெருவுக்குப் போயிருக்கிறான். ஐரிஷ் பெண்ணொருத்தி அப்படியே மூர்ச்சையடைந்து விழுந்தாளாம். அதைத் தொடர்ந்து அங்கு நடுத்தெருவில் ஒரு சிறு கலவரமே மூண்டதாம். மூண்டதும் உடனே ஓடத்தொடங்கி விட்டான்.

'' பெருங் கூட்டம் கற்களை வீசிக்கொண்டே அவனைத் துரத்தியிருக்கிறது. அவர்களிடம் அகப்படாது எப்படியோ அந்த ரெயில் பாதை சமீபம் வந்தபோது தப்பித்துக்கொண்டான். இரவெல்லாம் தேடினோம். ஆனால் அவனைக் கண்டு பிடிக்க முடியவில்லை,'' என்று அதிகாரி அவனுக்குத் தெரிந்த விவரங்களை எல்லாம் சொன்னான்.

'' அவனுக்கு ஏதாவது காயம் பட்டிருக்கிறதா? யாராவது அவனைக் கல்லால் அடித்து விட்டார்களோ?'' என்று கவலையுடன் கேட்டார் டாக்டர்.

'' இனிமேல் காயம்பட அவன் உடம்பில் எங்கேயிடமிருக்கிறது. படவேண்டியதெல்லாம் பட்டு விட்டான். இல்லை; ஒருவரும் அவனைத் தொடவில்லை. உண்மையில் ஒருவரும் அவனை அடிக்க விரும்பவில்லை. ஆனாலும் உங்களுக்குத் தெரியாதா ஜனங்கள் எப்படி நடந்துகொள்வரென்பது? அது வந்து—அது எனக்குத் தெரியும்.''

ஒரு கணம் யோசனையுடன் தரையைப் பார்த்தான் போலீஸ் அதிகாரி. பிறகு தயங்கிக் கொண்டே, '' ஜேக் விண்டரின் பெண்தான் அந்த விருந்தின்போது ரொம்ப பயந்து விட்டது. உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அவள் இன்னமும் படுத்த படுக்கை

யாகவே யிருக்கிறாளாம். அப்படித்தான் நான் கேள்விப்பட்டேன்."

"அப்படியா? ஏன் அவர்கள் என்னை அழைக்கவில்லை. நான் தான் விண்டர் குடும்பத்திற்கு வைத்தியம் செய்வது."

"உங்களை அழைக்கவில்லையா? அதிகாரி மெதுவாகக் கேட்டான். "நல்லது—விண்டரை உங்களுக்குத் தெரியும். அவனுக்கு இந்த விஷயத்தில் ஒரே கோபம்—நீங்கள் கைது செய்யப்பட வேண்டுமென்பது அவன் விருப்பம்—அவன் விருப்பம்!"

"நான் கைது செய்யப்பட வேண்டுமா? அவன் ஒரு முட்டாள். என்னை எதற்காக கைது செய்வது? வேடிக்கையாயிருக்கிறதே?"

"அவன் முட்டாள் தான். 'சும்மா விழுந்து கிடடா' என்று நான் கூட எச்சரித்தேன். ஆனால் அவன் ஊரெங்கும் சென்று இதைப் பற்றிக் கதைத்துத் தீர்த்து விடுவான். அவன் குணம் தான் உங்களுக்குத் தெரியுமே. இதை உங்கள் காதில் போட்டு வைப்பது நல்லது என்று நினைத்தேன்."

"ஓ, அவன் கிடக்கிறான். ஆனாலும் உண்மையில் நான் உங்களுக்கு மிகவும் கடமைப் பட்டிருக்கிறேன்."

"நீங்கள் அவ்விதம் சொல்லக்கூடாது. "இன்றிரவு நீங்கள் வந்து அவனை அழைத்துக் கொள்வீர்கள், இல்லையா? ஜெயிலர் உங்களை கௌரவமுடனே வரவேற்பான். இவனை அடைத்து வைத்திருப்பதில் அவனுக்குக்கூட கொஞ்சமும் விருப்பமில்லை. எப்பொழுது வேண்டுமானாலும் உங்கள் ஆளை அழைத்துச் செல்லலாம். அவனை உள்ளே வைத்திருப்பதால் எங்களுக்கு ஒரு லாபமும் இல்லை."

"ஆனால் இந்த விண்டர் என்னைக் கைது செய்ய வேண்டுமென்று விரும்புவதாகச் சொன்னாயே அது என்ன? எதற்காக?"

"ஓ அதுவா, நீங்கள் அவனை எப்படியும் வெளியில் இவ்வாறு சஞ்சரிக்க விட்டிருக்கக்கூடாது, அப்படி உங்களுக்கு உரிமை இல்லை என்பது அவன் குற்றச்சாட்டு. ஆனால் 'உன் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தால் போதும்' என்று கண்டிப்பாக நானே அவனிடம் சொல்லியிருக்கிறேன்.......எதற்கும் அதைப்பற்றி உங்களிடம் ஒரு வார்த்தை சொல்லி வைக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொன்னேன்.........ஆனால் இதையும் சொல்லிவிடுகிறேன். ஊரில் இதைப் பற்றிப் பலபேர் பலவிதமாய்ச் சொல்லிக்கொள்கிறார்கள். டாக்டர், உங்கள் நிலையில் நான் இருந்தால், இரவு நேரங்கழித்துத் தான் ஜெயிலுக்கு வருவேன். ஏனெனில் வாயிற் கதவண்டை ஜனங்கள் கூடியிருப்பர். அவர்களிடமிருந்து தப்பிச் செல்ல நான் ஒரு மேலங்கி, போர்வை போன்று ஏதாவது கொடுக்கிறேன். அதைக் கொண்டு அவனைப் போர்த்தி அழைத்துச் செல்லலாம்."

# XIX

மார்த்தா குட்வின் என்பவள் மணமாகாதவள். வாழ்க்கையின் துன்ப நாட்களை ஒரு மாதிரியாக ஓட்டிக்கொண்டிருந்தாள். ஓய்லோம் வில்லியில் மணமான தன் சகோதரியுடன் வசித்து வந்தாள். தனக்கு இருக்க இடம் கொடுத்ததற்காக வீட்டு வேலைகளையெல்லாம் அவளே கவனித்து வந்தாள்.

அவளுடைய கடும் உழைப்பைப் பற்றி எல்லோரும் பாராட்டினர். சிறுவயதில் அவளுக்கு நிச்சயம் செய்யப்பட்டிருந்த மாப்பிள்ளை அகாலத்தில் அம்மையில் இறந்து விட்டான். பின்னர் அவள் உழைத்து உழைத்து வாழ்வதையே ஒரு விரதம் போல், மேற்கொண்டிருந்தாள்.

நாள் முழுவதும் கடுமையாக வேலை செய்த போதிலும் அவளுடைய மனம் தீவிரமாகச் சிந்திக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தது. ஆர்மினியாவின் அரசியல் நிலவரத்திலிருந்து சீனத்துப் பெண்கள் நிலைவரையிலும், இளைஞன் கிரிஸ்கமுக்கும் நயாகரா அவென்யூவிலுள்ள மிஸஸ் மின்ஸ்டருக்குமுள்ள மறைமுகமான காதல் உறவிலிருந்து பாப்டிஸ்ட் மாதா கோவிலிலுள்ள முரண்பாடு, க்யூபா கலகக்காரர்கள்பால் ஐக்ய நாடுகள் பின்பற்ற வேண்டிய கடமை வரையிலும், இன்னும் பல பெரிய விஷயங்களைப் பற்றியும் அவளுக்குத் தீர்மானமான அபிப்பிராயங்கள் இருந்தன.

ஒரு நாள் ஒரு வேட்டை நாய் தடியால் அடித்துப் பணியவைக்கப்பட்டதை அவள் கண்டபொழுதுதான் இம்மாதிரி முறையிலுள்ள பலனைப்பற்றி அவளுடைய கருத்தும் உருப்பெற ஆரம்பித்தது. அதிலிருந்து உலகத்தைத் திருத்த அவள் தயாரித்த திட்டத்தில் தீவிரமான முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென சிபாரிசு செய்வாள். உதாரணமாக, துருக்கியரெல்லாம் கடலில் தள்ளப்பட்டு மூழ்கடிக்கப்பட வேண்டுமென்றும், மிஸஸ் மின்ஸ்டரும், இளைஞன் கிரீஸ்கமும் பக்கத்து பக்கத்து தூக்குமேடையில் ஒன்றாகவே தூக்கிலிடப்பட வேண்டுமென்றும் விரும்பினாள்.

உண்மையில் இவள் அமைதியை விரும்பிய ஒரு மாதுதான். தன் வாழ்வில் அமைதியையே கண்டிருந்தும்கூட இவள் மனம் என்னமோ வரம்பில்லாத கொடூரச் செயல்களை ஆதரித்தது. இத்தகைய வாதங்களில் அவளை வெல்லுதல் அரிது. எதிர்ப்பவர்களையெல்லாம் அசட்டையுடன் ஒரு "ஹூங்" காரத்தாலேயே வாயடைக்கச் செய்திடுவாள்.

இந்த ஹூங்காரமே அவளுடைய சக்திவாய்ந்த ஆயுதம்.

இவளுடைய வெறுப்பும், அதிருப்தியும் நிறைந்த வசவுகளிலிருந்து மீளுவது மற்றவர்களுக்கு அவ்வளவு எளிதல்ல. அவை மற்றவரைச் செயலற்றவர்களாக்கி, அடிமைப்படுத்தி விடும்.

ஒருமுறை இவளுடன் வாதாடித் தோல்வியுற்றவர்கள் மறுமுறை இவள் ஜோலிக்கு வரவேமாட்டார்கள். அவளுடைய சமை-

யல் அறையில் நெறித்த புருவத்துடன் ஒரு நெப்போலியனைப் போல ராஜ்யபாரம் செய்து வந்தாள்.

அவமானமடைந்த அவளுடைய சிநேகிதிகளெல்லாம் வெளிப் பார்வைக்கு சிநேகமாக இருந்தாலும் ரகசியத்தில் அவளுக்கு எதிராகவே நெடுநாளாக வேலை செய்தனர். அவர்களுக்குள் இந்த விஷயத்தில் இருந்த ஒற்றுமையைச் சதி என்று சொல்லுவது அவ்வளவு பொருத்தமாகாது. ஏனெனில் தங்கள் கருத்துக்களையெல்லாம் வெளிப்படையாகச் சொல்ல அவர்களுக்குத் தைரியமில்லை. அவ்வாறு செய்ய அவர்கள் நினைக்கவுமில்லை.

ஆனால் மார்த்தாவின் அபிப்பிராயங்களுக்கு மாறான கருத்துக்களை யார் சொன்னாலும், அப்படிச் சொன்னவள் மற்றெல்லாருடைய ஆதரவையும் பெறத் தகுதிவாய்ந்தவள் என்பது பொதுவாகவே அந்தச் சிறு கூட்டத்தினருக்குள் ஒப்புக்கொள்ளப்பட்டது.

மார்த்தா சொன்ன எந்தக் கொள்கையுமே ஏற்றுக்கொள்ளக் கூடாதென்ற சம்பிரதாயமே அவர்களுக்குள் வளர்ந்துவிட்டது. உள்ளூற இவ்விதமிருந்தாலும் வெளிப்படையாக மார்த்தா சொல்லுவதை எல்லாம் அப்படியே அங்கீகரித்தவர்கள்போல் கௌரவமாகப் பேசுவதில் அவர்கள் எவ்விதத் தடையும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை.

அவளுடைய கடுந்தாக்குதலுக் குள்ளானவர் இருவர்.' ஒருத்தி அவளுடைய சகோதரிகேட்; அவளைக் கண்டாலே கேட்டுக்கு பயம். மற்றொருத்தி கேர்ரி டஞ்சன். சமையலறையிலிருந்து அவ்வப்போது மிதந்து வந்து பயபக்தியுடன் மார்த்தாவின் பாதங்களிலமர்ந்து உலக விஷயங்களைப் பற்றி எல்லாம் தெரிந்து கொள்வது போல் பாடங்கேட்டு அறிந்துகொள்வாள்.

மார்த்தாவின் தலை மறைந்ததும் அவளைப்பற்றி கேலியாகப் பேசி அவளுடைய அபிப்பிராயங்களை எல்லாம் எள்ளி நகையாடுவாள். ஆனால் அந்த மஹாராணியின் முன்னிலையில் அவள் வாயடைத்து வியப்புடன் உட்கார்ந்திருப்பாள். அவள் சகோதரி கேட்டை எவ்விஷயத்திற்குமே அவள் பொருட்படுத்தியதில்லை.

வீட்டின் மாடியிலிருந்த வேலைகள் பூராவும் அவள் கவனித்துக் கொண்டதாக அவளுக்கு எண்ணம். மார்த்தா கீழே உள்ள வேலைகளைச் செய்வதாக எல்லோரும் நம்பினர். ஆனால் இதன் உண்மை கேட்டின் கணவனுக்குத்தான் தெரியும்.

அவன் மார்த்தாவை மரியாதையும், பயமும் கலந்த ஒருவகை அன்புடன் நடத்தினான். வீட்டு விவகாரங்களில் தானே எஜமானி என்பதில் மார்த்தாவுக்கு சிறிதும் ஐயமில்லை. இதைப்பற்றித் திட்டவட்டமாக ஒன்றும் பாகுபாடு கிடையாது. ஆனால் மார்த்தா ஒழுங்கு முறையை வகுக்கப் பிரயத்தனம் செய்தாள். அவள் வகுத்த ஒழுங்குமுறை எல்லாம் ஆர்மீனியன்கள், கிரீஸ்கம், சீனாக்காரர்கள், இன்னும் மற்ற விஷயங்களில்தான் பயன்பட்டன.

இளமை நாட்களில் காதல், புல்வெளிகள், மர நிழல்கள்,



ஒருவனுடைய முகம் முதலியவைகளைப் பற்றியெல்லாம் அவள் கண்ட கனவுகள் இப்பொழுது வேறு இடங்களில் சென்று விட்டன. ஆனால் அவளுக்கு வேண்டிய எல்லா விஷயங்களும் அந்த சமையலறையிலேயே கிடைத்து விட்டதுதான் ஆச்சரியம். வெந்நீர் கெட்டில்தான் க்யூபா. எச்சில் தட்டு கழுவுவதுதான் அவளுக்கு ஆர்மீனியா. இவ்வாறு உலகமே சமையற்கட்டுக்கு வந்து விட்டது. சமூகத்தில் நிகழும் கெட்ட நடத்தைகளைப் பொறுத்தவரையில் உணர்ச்சிகள் நசித்த கல்லறைக்குச் சமமான அவள், நாக்கில் நரம்பின்றி விமர்சிப்பதில் நகரத்திலேயே பெயர் போனவள்.

கிணற்றிலிருப்பது போலச் சமையலறையில் அடைபட்டுக் கிடந்த, ஒருவருக்கும் அறிமுகமில்லாத இந்த அம்மாள், அந்த நகர வாழ்க்கையிலேயே ஏதாவது ஒருவகையில் பரபரப்பை ஏற்படுத்தி வந்தாள்.

சமூக வாழ்க்கை எந்த அம்சத்திலாவது ஒரு கெஜம் முன்னேறியிருந்தால், அதில் ஒரு அங்குல முன்னேற்றத்துக்கு மார்த்தா காரணமாயிருந்தாள். ஒரு விஷயத்தைப் பற்றி அவள் விவாதிக்கத் தொடங்கிவிட்டால் எவ்வளவு சிக்கலான விவகாரமும் அவள் முன்னால் சிதறிவிடும். வகையே காணமுடியாது ஜடமாக நிற்கும் எதுவுமே அவள் முன்னிலையில் உயிர் பெற்றுவிடும்.

அவளை ஒரு ரெயில் என்ஜின் என்றே கூறலாம். ஆனால் தான் அவ்வளவு சக்தி வாய்ந்தவள் என்பது அவளுக்குத் தெரியாது. இருந்தும் பலனுக்கு ஒரு குறைவுமில்லை. அவளை எதிர்க்கவே முடியாது.

தான் பயங்கரமானவள் என்பதை அவள் கற்பனைகூட செய்ததில்லை. அதுவே அவளை பயங்கரமானவளாக்கியது. பலஹீனமான, அப்பாவியான, வீண் பிடிவாதமுள்ள அவள் தனித்தே இந்த உலகத்தை எதிர்த்து நிற்க வேண்டுமானாலும் அவ்வாறே எதிர்த்து நிற்பாள்.

ஒரு நாள் கேர்ரி டஞ்சன் அவளுடைய சமையலறையிலிருந்து விரைந்து வந்தாள். ஒரே படபடப்பு. அன்றைய பேச்சுக்கு நிறைய விஷயம் இருந்தது. "ஓ இதைக் கேட்டாயோ, ஹென்ரி ஜான்ஸன் அவன் அடைபட்டிருந்த அறையிலிருந்து வெளியே வந்துவிட்டானாம். நேற்று இரவு நகருக்குள் புகுந்து எல்லோரையுமே நடுங்கச் செய்து விட்டான்." மார்த்தா ஒரு தட்டிற்கு மும்முரமாக பாலிஷ் செய்துகொண்டிருந்தாள். ஏற்கனவேயே தட்டு வெள்ளி போல பிரகாசித்துக் கொண்டிருந்தது. அதற்கு இன்னும் மெருகு தேவையில்லை. ஆனாலும் அதற்கு மெருகு ஏற்றுவதை நிறுத்தவில்லை. "அப்படியா, பார்த்தாயா, நான்தான் அப்போவே சொன்னேனே. நான் சொன்ன ஜோசியம் அப்படியே பலித்து விட்டது" என்றாள். அப்படித்தான் அவள் பேசுவது வழக்கம்.

கேர்ரி சொல்லுவதற்கு நிறைய விஷயங்கள் வைத்திருந்தாள். அவளால் அமைதியாய் இருக்க முடியவில்லை. பேசுவதற்குக் கூட தன்னைச் சமாளித்துக்கொள்ள வேண்டியிருந்தது. "குழந்தை சாடி வின்டர் கடு நோயுற்றிருக்கிறது. டாக்டர் டிரெஸ்காட்டை கைது செய்ய ஜேக் வின்டர் காலை முழுதும் துடியாய்த் துடித்ததாகக் கூடப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். வேலியைத் தாண்ட முயற்சித்த மிஸஸ் பெர்ராகட் காலிலே சுளுக்கு உண்டாகி விட்டது. நாள் முழுக்க ஜெயிலைச் சுற்றி ஒரே கூட்டம்; வேலியின்மீது தாவித் தாவி உள்ளே பார்த்துக் கொண்டிருக்கிறது. அவனை என்ன செய்வதென்று தெரியாமல் ஜெயிலில் அடைத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அவன் ரொம்ப ரொம்ப பயங்கரமாக இருக்கிறான்," என்று சொல்லிக்கொண்டே போனாள்.

மார்த்தா தட்டை வைத்துவிட்டு விடாது பேசிக்கொண்டிருந்தவளை நோக்கினாள். "அப்படியா?" என்று ஒரு வார்த்தை சொல்லிவிட்டு மேலே பேசத் தன்னைத் தயார்படுத்திக்கொண்டிருந்தாள்.

அறையில் நாவல் படித்துக் கொண்டிருந்த கேட் புதிதாகச் செய்தி கொண்டு வந்தவளைப் பின்தொடர்ந்து உள்ளே ஓடிவந்தாள். அவள் ஒரு சிறு உருவம். இரண்டு சிறு ஐஸ் தகடுகளைப் போலிருந்தன அவள் தோள்பட்டைகள். அவற்றை அவள் ஓயாது குலுக்கிக்கொண்டே இருப்பாள். "அவன் தன் தொழிலை முற்றிலும் இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் அது அவனுக்கு வேண்டியதுதான்" என்று மார்த்தா ஆத்திரம் பொங்கச் சொன்னாள். அவள் உதடுகள் கத்திரியோ என்று எண்ணும்படி அந்த சொற்களை வெட்டி வீசின.

"அப்படித்தான் நடக்கும் போலிருக்கு", என்று கேர்ரி டஞ்சன் உற்சாகத்துடன் சொன்னாள். "இனிமேல் அவரை யாரும் கூப்பிடக்கூடாது என்று பலர் சொல்லிக் கொண்டிருப்பதுதான் நன்றாகவே கேட்கிறதே."

"நீ இயற்கையாகவே கொஞ்சம் பயந்தாங்கொள்ளியாக இருந்தால் டாக்டர் டிரெஸ்காட் உன்னைப் பூரா பயமுறுத்தி உயிரையே உடலிலிருந்து விரட்டி விடமாட்டாரா? அவன் அப்படித்தான் செய்வான். நான் மேலும் ஆலோசிக்கிறேன் இவ்விஷயத்தைப் பற்றி", என்று அவள் முடித்தாள்.

மார்த்தா மற்ற இரு பெண்களையும் பார்த்து முகத்தைச் சுளித்துக்கொண்டே அறையில் அப்படியும் இப்படியுமாக நடந்தாள். யோசனையில் ஆழ்ந்திருந்தாள்.

## XX

ஜிம்மி கனெக்டிகட்டிலிருந்து திரும்பினான். கோச்சு வண்டி விட்டிருந்த இடத்திற்கு மேல் அறையில் அந்தக் கோர உருவத்தைக்



கண்டதும் முதலில் ரொம்ப பயந்துவிட்டான். அவனை அடையாளம் கண்டு கொள்ளவே முடியவில்லை.

கொஞ்சம் கொஞ்சமாக அவனுக்கிருந்த பயம் தெளிந்து இயற்கைக்கு மாறுபட்டிருந்த அந்த உருவத்தின்பால் ஒருவகை கவர்ச்சி உண்டாயிற்று. சிறிது, சிறிதாக அதை அணுகி அத்துடன் நெருங்கிப் பழக ஆரம்பித்தான்.

அன்று ஒரு நாள் பிற்பகல். சூரிய வெளிச்சத்தில் லாயத்திற்குப் பின்னால் ஒரு பெட்டியின் மீது உட்கார்ந்திருந்தது அந்த உருவம். தலையைச் சுற்றிக் கனமான ஒரு போர்வை முக்காடிட்டது போல் மூடியிருந்தது.

லாயத்தின் மூலைக்கு ஜிம்மியும், அவன் பள்ளித் தோழர்களும் வந்தனர். அவர்களனைவரும் பாலர் வகுப்பில் படிக்கிறவர்கள். எனவே மற்றப் பையன்கள் வருவதற்கு அரை மணி முன்னதாகவே வந்துவிடுவர்.

பெட்டியின் மீது உட்கார்ந்திருந்த உருவத்தைக் கண்டதும் திடீரென நின்றனர். அவன் பக்கமாக கையைக் காட்டி அவனுக்குத் தானே சொந்தக்காரன் போல் "அதோயிருக்கிறான் பாரு," என்று தன் தோழர்களுக்கு அவனைக் காட்டினான். "ஊ உ உ" என்று சிறுவர்கள் முணுமுணுத்தனர். "ஊ உ உ" என்று மறுபடியும் சொல்லிக்கொண்டே பின்னடைந்து அவனவன் தைரியத்திற்கும், அநுபவத்திற்கும் ஏற்பச் சிறு சிறு கூட்டமாகப் பிரிந்தனர்.

இந்த சப்தத்தில் அந்த உருவம் லேசாகத் தலையை இவர்கள் பக்கம் திருப்பியது. வண்டியில் ஜிம்மி மட்டும் தனியாக இருந்தான். "பயப்படாதீங்க. அவன் உங்களை ஒன்றும் செய்யமாட்டான். நான் பார்த்துக் கொள்கிறேன்," என்று அவன் உற்சாகத்துடன் சொன்னான். "'ஊ' எங்களுக்கு ஒன்றும் பயமில்லை" என்று மற்றவர்கள் சொன்னாலும் அவர்களுக்கு பயம் இருக்கத்தான் செய்தது.

உலகின் ஒரு அதிசயப் பொருளுக்குச் சொந்தக்காரன் போல் ஜிம்மி தன்னை நினைத்துக்கொண்டான். அதை மற்றவர்களுக்குக் காண்பிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டான். மற்றப் பையன்கள் தூரத்திலிருந்தபடியே வியப்புடனும், பயத்துடனும், பொறுமையுடனும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அவர்களில் ஒருவன் ஜிம்மியை அழைத்தான். "அவனைத் தொட்டுவிட்டு வர முடியுமா உன்னால்? முடியாதுங்கறேன்," என்று அவனைத் தூண்டினான்.

ஜிம்மியைக் காட்டிலும் அவன் கொஞ்சம் பெரியவன். எப்பொழுதுமே ஜிம்மியைக் கொஞ்சம் மட்டம் தட்டிவிடும் சுபாவமுள்ளவன். இந்தச் சமயத்திலும் தன்னைப்பற்றிக் குறைவாக மற்றப் பையன்களுக்கு முன்னால் பேசியதை அவனால் தாங்க முடியவில்லை.

"ஹூம்! இது என்ன பிரமாதம்! என்னாலா போகமுடியாது? முடியாதா என்றால்? உம், முடியாதென்று சொல்லுகிறாய்," என்று ஜிம்மி அலட்சியமாகக் கூறினான்.

உடனே கூட்டம் முழுவதும் ஜிம்மியுடன் பேசிய பையனையே வெறித்துப் பார்த்தது. அவன் சிறிதும் விட்டுக் கொடுக்காமலே, "உன்னால் முடியாது, இல்லை, உன்னால் முடியாது," என்று அழுத்தமாகச் சொன்னான். எனினும் ஜிம்மி புறப்படத் தயாராக இருந்ததைக் கண்ட அவன் தனக்கு வரப்போகும் தோல்வியைப் பற்றி எண்ணத் தொடங்கிவிட்டதாகவே தோன்றியது.

"ஹோ, பார்த்துக் கொண்டேயிரு, பார்த்துக் கொண்டேயிரு", என்று ஜிம்மி இரைந்தான். மௌனத்திற்கு நடுவே அவன் அந்தப் பயங்கர உருவத்தை நோக்கி நடந்தான். தன் தோழர்களிடமிருந்த உக்கிரதை உணர்ச்சியும், பயமும் சிறிது அந்த சமயத்திற்கு ஜிம்மிக்கும் பரவியிருந்தது.

பக்கத்தில் சென்றதும் சில விநாடி தயங்கி நின்றான். உடனே பார்த்துக் கொண்டிருந்த மற்றப் பையன்கள் இவன் பயப்படுவதாக எண்ணி ஏளனக் குரல் எழுப்பினர். அது அவனை மேலும் முன்னேற உந்தியது. அந்த உருவத்தினிடம் சென்று, "ஹல்லோ ஹென்ரி" என்று மெல்லிய குரலில் அழைத்தான். குரலில் சற்று நடுக்கம் தெரிந்தது. அந்த உருவம் ஒரு நீக்ரோ பாட்டைப் பாடிக்கொண்டு உட்கார்ந்திருந்தது. பாட்டு ஒரு மெல்லிய ஓசையாய்க் கேட்டது. எனவே முதலில் ஜிம்மி கூப்பிட்டதை அது கவனிக்கவில்லை.

ஜிம்மி தன் தோழர்களிடம் திரும்பி வந்தான். அவர்கள் அவனைப் பாராட்டிவிட்டு அவன் தைரியத்தைத் தவறாக மதிப்பிட்ட எதிரியைப் பரிகாசம் செய்தனர்.

இந்தப் பரிகாசத்தில் பெரிய பையன் ரொம்பக் கஷ்டப்பட்டுத் தன்னைச் சமாளித்துக் கொண்டிருந்தான்.

"என்னால் முடியாதுன்னு சொன்னாயே, முடிந்ததா இல்லையா இப்போ?"—அவனைப் பார்த்து ஜிம்மி வெற்றியுடன் கேட்டான்.

"நீ இவ்வளவு பேசினாயே, நீ போ பார்க்கலாம்," என்று சவால் விட்டான். பையன்களிடையே புதிய ஆரவாரம். மறுபடியும் கேலி, ஏளனம், குத்தல் வார்த்தைகள். பெரிய பையனின் கன்னங்கள் உப்பிவிட்டன. திடீரென "எனக்கு மட்டும் பயமா? நான் ஒன்றும் பயப்படவில்லை," என்று கோபத்துடன் சொன்னான். ஆனால் இவன் அப்படிச் சொல்லி இருக்கவேண்டியதில்லை. தந்திரத்தில் சிறு தவறுதான்.

ஏனெனில் மற்றப் பையன்கள் அவனைச் சூழ்ந்துகொண்டு ஏசத் தொடங்கிவிட்டனர். சேவல்களைப்போல் கூவினர்; ஆடுகளைப்போல் கத்தினர். இன்னும் எத்தனையோவித ஒலிகள் எழுப்பி அவனை அவமானத்தால் குன்றச் செய்து விட்டனர்.



"நான் ஒன்றும் பயந்துடலே" என்று திரும்பித் திரும்பி அவன் சொல்ல வேண்டியிருந்தது. அந்தக் கூட்டத்தின் வீரனாய் விளங்கிய ஜிம்மி "நீ பயப்படல்லே? ஹே ... பயப்படல்லேனா, போயேன் பாக்கலாம்!" என்று இரக்கமே காட்டாது சவால் விடுவது போல் சொன்னான்.

"போகவேணும்னு எனக்குத் தோன்றினால் கட்டாயம் போய் விடுவேன்," என்று அவன் வீராப்பு பேசினான். ஆனால் அவன் கண்களில் பயம் படர்ந்திருந்தது. வெளித் தோற்றத்திற்கு தைரியசாலியாகக் காண்பித்துக்கொண்டான்.

தன்னை ஏளனம் செய்தவர்களில் ஒருவனைப் பார்த்து, "நீ அவ்வளவு தைரியசாலியாய் இருந்தால் நீதான் போயேன்டா!" என்றான். அவன் உடனே பின்னடைந்து விட்டான்.

இது மற்றப் பையன்களின் பரிகாசம் ஒரு புது திசையில் திரும்ப வகை செய்தது. அவனுக்குக் கொஞ்சம் தைரியமூட்டிற்று. இன்னும் யாராவது போவதாகச் சொன்னால் நானும் போகத் தயார் என்று பெருமையுடன் சொன்னான். இப்படியும், அப்படியுமாக அவன் நடந்து கொண்டிருந்தான்.

போட்டிக்கு எந்தப் பையனும் முன்வரவில்லை. அவன் விடுத்த எதிர்ச் சவாலிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள மறுபடியும் அவர்கள் கத்தத் தொடங்கினர். ஒரு கணம் அந்தப் பையனிடமிருந்து சப்தமே வரவில்லை. உதட்டைத் திறந்தால் இவர்களுடைய சப்தம் அவனை வாயடைக்கச் செய்து விட்டது.

இறுதியில், "மற்ற எந்தப் பையன் எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவு தானும் செய்யத் தயார்" என்றான் திரும்பவும்.

"நல்லது, நீ முதலில் போ" என்று அவர்கள் கூக்குரலிட்டனர். பெரிய பையனுக்கு எதிராக மற்றவர்களைத் தானே தலைமை தாங்கி நடத்தும் தோரணையில் ஜிம்மி குறுக்கிட்டு, "ரொம்ப தைரியசாலி என்று நீ தான் பீத்திக்கொண்டாய் இல்லையா? இப்போ பயப்படுகிறது யார்?" என்று அவனுக்கு கோபமூட்டும் வகையில் கேட்டான்

இதை முற்றிலும் ஆமோதித்த மற்றவர்கள் ஆரவாரம் செய்தனர்.

வெட்கத்தால் தலைகவிழ்ந்த அவன் சிறிது நேரம் தயங்கினான். காலைத் தேய்த்துக் கொண்டான். "நான் ஒன்றும் பயந்தாங்கொள்ளி அல்ல" என்று மறுபடியும் மறுபடியும் சொன்னான். அந்த உருவத்தை ஒரு முறை பார்த்தான். "நான் பயப்படல்லே," என்றான் மறுபடியும். கொலைகாரர்களைப்போல் அவனைப் பரிகசித்த பையன்களை ஒரு முறை வெறுப்புடன் நோக்கிவிட்டு இறுதியாக "நீங்களெல்லாம் ரொம்ப விரட்டுகிறீர்களே, நான் போறேன் இப்போ, பார்த்துக் கொண்டிருங்கள்" என்று திடமனதுடன் தன்னைத் தயார்ப்படுத்திக்கொண்டான்.

பெட்டி மீதிருந்த அந்த உருவத்தை அவன் பயந்து, பயந்து பார்ப்பதை அவர்கள் கண்டு மேலே நிகழப் போகும் சம்பவத்திற்குக் காத்திருந்தனர்.

அவர்களிடை முதலில் தோன்றிய ஆரவாரம் சிறிது ஓய்ந்தது. அவன் நடந்து சென்றதே வேடிக்கையாக இருந்தது. கோழைத்தனத்தால் உடம்பு முன்னேற மறுத்தது. மனோவலிமையினால் அதை முன்னுக்குத் தள்ளிக் கொண்டிருந்தான். இப்படியாக அந்த உருவத்திற்குச் சில அடி தூரத்தில் வந்தபொழுது, ஒரு கற்சுவரைக் கண்டவனைப்போல் அப்படியே நின்று விட்டான். இமை கொட்டாது கவனித்துக் கொண்டிருந்த பையன்கள் அவன் நின்றதும் உடனே கேலி செய்யத் தொடங்கினர். பாவம், இதனால் உணர்ச்சியூட்டப்பட்ட அவன் மேலும் சில அடிகள் நடந்தான். பின்னுக்கு ஓடத் தயாராயிருக்கும் ஒரு பூனை போன்று குனிந்தான். பின்னிருந்த கூட்டம் இதைக் கண்டதும் அவனைப் பாராட்டும் முறையில் உற்சாகமாகக் கத்திற்று. கடைசித் தடவையாகத் தன்னைத் திடப்படுத்திக்கொண்டு திடீரென்று அந்தப் பையன் முன்னால் விரைந்து, நீட்டிய விரலால் அந்த உருவத்தைத் தொட்டு விட்டு ஓடியே வந்து விட்டான். தூரத்தில் பார்த்துக் கொண்டிருந்தவர்களிடையே 'ஓ'வென்ற சிரிப்பு, மகிழ்ச்சிச் சிரிப்பு.

பையன்களெல்லாம் உடனே அவனைப் பாராட்டினர். அவனுடைய தீரத்தை மெச்சினர். அவர்களுக்கு அந்தக் கணத்திற்கு அவன் ஒரு வீரனாகி விட்டான். ஜிம்மி ஒரு கணம் அவமானமடைந்து நின்றான். ஆனால் அவனும் அந்த மற்றப் பையனும் ஒருவனை ஒருவன் பார்த்துக்கொண்டதிலிருந்து தைரியத்தில் இருவரும் சம அந்தஸ்து உள்ளவர்கள் தான் என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டதாகவே தோன்றியது. மற்றப் பையன்களுக்கு எதிரில் இருவரும் பெருமையுடன் உலாவினர்.

“இதில் ஒன்றும் பிரமாதமில்லை, ஒன்றுமேயில்லை” என்று பெரியவன் அலட்சியமாகச் சொல்லிவிட்டு “இல்லையா, ஜிம்?” என்று அவனையும் தன்னுடன் சேர்த்துக்கொண்டான்.

“ஆமாமா அது சு-ல-ப-ந்-தா-ன்,” என்று விட்டுக் கொடுத்தது போல் ஒப்புக்கொண்டான் ஜிம்மி. அந்த நிமிஷத்திலிருந்து அவர்களிருவரும் தனி வகுப்பினராகவே ஆகிவிட்டனர். பன்னிரு போர்க்களங்களில் வெற்றி வாகை சூடியிருந்தால் கூட மற்றவர்களை இவ்வளவு தாழ்வானவர்களாக எண்ணுவது கிடையாது. அவ்வளவு பெருமிதத்துடன் அப்போது அவர்களிருவரும் விளங்கினார்கள்.

அந்த மகாப் பெரியவர்கள் தாங்கள் அந்த உருவத்தைத் தொடச் சென்றபொழுது மனத்தில் ஏற்பட்ட உணர்ச்சிகளை வருணிக்கத் தயை கூர்ந்தார்கள். மற்றப் பையன்களுடைய கோழைத்தனத்தைப் பரிகசிப்பது போலிருந்தது அவர்களுடைய பேச்சு. “ஏன்? அதில் ஒன்றுமேயில்லை. அவன் உங்களை ஒன்றும் செய்ய மாட்டான்” என்று மற்றவர்களுக்கு எரிச்சலூட்டும் வகையில் பேசினர்.



ரொம்பச் சிறு பையன்களில் ஒருவன் தன் தீரத்தைக் காட்டிப் பெருமைப்படுத்திக் கொள்ள விரும்புவது போல் காணப்பட்டது. எல்லோரும் அவனைப் பார்த்தனர். அவர்களை விட்டு விலகித் தயங்கிய பொழுது அவன் தோள்களைப் பிடித்துத் தள்ளினர். எவ்வளவுதான் தூண்டியபொழுதும் அவனால் சில அடி தூரத்திற்கு மேல் போக முடியவில்லை. வாயைத் திறந்த வண்ணம் அசையாது நின்று விட்டான். வற்புறுத்தியும், கூச்சலிட்டும் ஜிம்மியும், அந்தப் பெரிய பையனும் எவ்வளவு முயன்றும் அந்தச் சிறுவன் பேசாதிருந்து விட்டான்.

மிஸஸ் ஹன்னிகன் தாழ்வாரத்தின் பின்புறம் தண்ணீர் வாளியுடன் வந்தாள். வெளி மூலையிலிருந்து டிரெஸ்காட் வீட்டு லாயத்துக்கு பின்னாலிருந்த பகுதியைக் கவனித்தாள். பெட்டியின் மேல் உட்கார்ந்திருந்த அந்த உருவத்தையும் பையன்களின் கூட்டத்தையும் கண்டாள். நன்றாகத் தெரிவதற்காகக் கையைக் கண்களின் மேல் வைத்து மறைத்துக் கொண்டு நன்றாகப் பார்த்தாள். தான் கொலை செய்யப்படுவதுபோன்ற ஒரு உணர்ச்சி அவளுக்கு மேலிட்டது. உடனே “எடி, எடி, உடனே இங்கு வா,” என்று அலறத்தொடங்கி விட்டாள். எடி என்று தன் மகனைத்தான் அழைத்தாள்.

அவள் மகன் வேண்டா வெறுப்புடன் “எதுக்கு?” என்று கூட்டத்தில் கலந்திருந்த அவன் கேட்டான்.

“இங்கே வான்னா, வா. காதிலே விழல்லே?” தங்களுள் ஒருவன் கண்டிப்புடன் கூப்பிடுவதைக் கண்ட மற்றப் பையன்கள் சிறிது நேரம் குற்றவாளிகளைப் போன்று அமைதியாய் இருந்தனர்.

சிறுவன் ஹன்னிகன் மறுக்க மறுக்க, தன் தாயாரால் உள்ளே இழுத்துச் செல்லப்படுவதைக் கண்டனர். மிஸஸ் ஹன்னிகன் அவர்களையெல்லாம் விழுங்கி விடுவதைப்போலப் பார்த்தாள்.

புதியதும், அழகியதுமான டிரெஸ்காட்டின் வீடே தன்னை அவமானப்படுத்தி விட்டதுபோல வெறுப்புடன் பார்த்து விட்டுத் தன் மகனைப் பின்தொடர்ந்தாள்.

கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. ஒருவனுடைய அம்மா வந்து அவனைக் கூட்டிச் சென்று விட்டாள். இன்னும் எந்தெந்தப் பையனுடைய தாய்மார்கள் வருவார்களோ? என்று சுற்று முற்றும் பார்க்கத் தலைப்பட்டனர். ‘நல்லவேளை, இது என் வீடு; நான் வீட்டிற்குப் போக வேண்டியதில்லை’ என்று ஜிம்மி பெருமையோடு சொல்லிக் கொண்டான்.

பெட்டி மீது உட்கார்ந்திருந்த அந்தப் பயங்கர உருவம் தன் கரிய முகத்தைத் தூக்கி வானத்தைப் பார்த்தது. கைகளை மேலே ஆட்டிய வண்ணம் தன் கீதத்திற்கு அபிநயம் போல ஏதோ பிரார்த்தித்துக்கொண்டது.

"இப்போ அவனைப் பாருங்கள்" என்று ஒருவன் சொன்னான். எல்லோரும் திரும்பினர். அமைதியும், மர்மமும் கலந்த அவனுடைய அங்க அசைவுகளைக் கண்டு அவர்களெல்லோரும் செயலிழந்து நின்றனர். ஒரு சோக கீதத்தின் ஒலி பின்னணி இசை போன்று ஒலித்தது. இதைக் கேட்டு அவர்கள் பின்வாங்கினர். சாவு ஊர்வலத்தைக் கண்டு வாய் புதைத்து நிற்பதைப் போலிருந்தது அவர்கள் நிலை. அதையே கவனித்துக் கொண்டிருந்த அவர்கள் டாக்டருடைய வண்டி லாயத்திற்கு வந்ததைக் கூட கவனிக்கவில்லை.

டிரெஸ்காட் கீழிறங்கிக் குதிரையைக் கட்டிவிட்டு அவர்களை நோக்கி வந்தார். ஜிம்மி தான் முதலில் அவரைப் பார்த்தான். அவனுடைய கலவரமடைந்த பார்வையைக் கண்டதும் மற்றப் பையன்களும் அவரைக் கண்டனர். "இதெல்லாம் என்ன ஜிம்மி?" என்று கேட்டார், ஆச்சர்யமடைந்த டிரெஸ்காட்.

தன் தோழர்களை விட்டு ஒரு அடி முன்னால் வந்தான் ஜிம்மி. தன் தகப்பனார் முன் தயங்கி நின்றான். ஒன்றும் பேசவில்லை. டிரெஸ்காட், சோகம் தோய்ந்த முகத்துடன் அப்பையன்களையும், அந்தக் காட்சிகளையும் பார்த்தார்.

"என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்...ஜிம்மி?"

"விளையாடிக்கொண்டிருந்தோம்" என்றான் குற்றவாளியைப் போல்.

"என்ன விளையாட்டு?"

"சும்மா விளையாடினோம்."

டிரெஸ்காட் மற்றப் பையன்களை வருத்தத்துடன் நோக்கி 'தயவு செய்து வீடு செல்லுங்கள்' என்று கேட்டுக் கொண்டார்.

தாங்கள் கொலைகாரர்கள் என்பது கண்டு பிடிக்கப்பட்ட பின்னர் நடந்து செல்லும் குற்றவாளிகளைப்போல் அவர்கள் தெருவுக்கு வந்தனர். என்னதான் அவன் அன்புடன் அழைத்த போதிலும், மற்றவனுடைய வீட்டிற்குள் நுழைந்தது குற்றந்தானே? அப்படித்தான் கருதப்படும் என்று அவர்கள் உணர்ந்திருந்தனர் போலும்!

தங்கள் நண்பனுடைய வீட்டிலிருந்து நண்பனுடைய தகப்பனார் அல்லது தாயார் இவர்களால் வெளியேற்றப்படுவது அவர்களுக்கு அடிக்கடி ஏற்பட்ட அநுபவந்தான். ஜிம்மி தன் தோழர்கள் செல்வதை வருத்தத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். தகப்பனாருடைய வீட்டில் தனக்குள்ள உரிமைகளை இழந்த மகனாகத் தன்னை நினைத்துக் கொண்டான்.

ஆனாலும் இவ்வளவு பையன்களையும் விருந்தினராக ஒரே சமயத்தில் அழைக்கத் தனக்கு உரிமை இல்லையென்பதையும் கூடவே உணர்ந்தான் ஜிம்மி.

வெளியேற்றப்பட்ட சிறிது நேரத்திற்கெல்லாம் அவர்கள் அடைந்த அவமானத்தை விரைவில் மறந்து விட்டனர். அந்தப் பெரிய பையன் தான் தீரச்செயல் புரிந்தபோது தனக்கு ஏற்பட்ட அநுபவங்களை மற்றவர்களுக்கு விவரிக்கத் தொடங்கி விட்டான்.



தெருப்பக்கமாக வந்ததும், பயந்து கொண்டே பாதி தூரம் சென்றானே அந்தப் பையன், பெரிய பையனிடம் உற்சாகத்துடன் கூவினான்:

"ஆமா, நான்கூட கிட்டத்தட்ட அவனைத் தொடும் வரையில் சென்றேன், இல்லையா வில்லி?" அந்தப் பெரியவன் உடனே அவனை வாயடைத்து விட்டான்.

"ஹூக், நீ கொஞ்சதூரம்தான் போனாய். நான் கடைசி வரை போனேன்." பையன்கள் நடந்து சென்ற வேகத்தில் அப்பொடியன் ஓட வேண்டியிருந்தது. அடிக்கடி அவன் பின்தங்க நேரிட்டது. அவர்களை விடத் தான் கொஞ்சம் முக்கியமானவன் என்று அவனால் காட்டிக்கொள்ள முடியவில்லையே! அவன் அப்பக்கமும், இப்பக்கமுமாக அசைந்து வந்தான். புகழுக்குரியவனாவதற்குத் தனக்கும் கொஞ்சம் உரிமையுண்டு என்பதை முடிந்தபொழுதெல்லாம் தானே பறைசாற்றிக் கொண்டான்.

## XXI

"அதோடு, கிரேஸ், பள்ளிக்கு போவதற்கு முன் ஜிம்மியை என்னிடம் அனுப்பி வை," என்று தன் அலுவலக அறையிலிருந்து சாப்பாட்டு அறையை நோக்கிய வண்ணம் டாக்டர் டிரெஸ்காட் கூறினார். கிரேஸ் என்று அவர் அழைத்தது அவர் மனைவியை.

ஜிம்மி வந்தான். அவன் சந்தடியின்றி வந்ததால் டிரெஸ்காட் கூட அவனை முதலில் கவனிக்கவில்லை. "ஓ, வந்து விட்டாயா?"

"ஆமாம்."

நாற்காலியில் அமர்ந்தார் டிரெஸ்காட். யோசித்தவாறு மேஜையை விரலால் தட்டிக்கொண்டே, "ஜிம்மி, நேற்று நீயும் அந்தப் பையன்களும் தோட்டத்திற்குப் பின்னால் ஹென்ரியை என்ன செய்தீர்கள்?"

"நாங்கள் ஒன்றும் செய்யலையேப்பா."

நிமிர்த்து உட்கார்ந்து மகனைக் கடுமையாகப் பார்த்தார். "நிச்சயமாய் அவனை யொன்றும் நீங்கள் தொந்தரவு படுத்தவில்லையா? அப்படியானால் அங்கே என்ன செய்தீர்கள்?"

"வந்து—நாங்க, வந்து நாங்க அப்பொ வில்லிடால் செல், நான் கிட்ட போகமுடியாதுன்னான். நான் போக முடியுமென்று சொல்லி அவ்வாறே போனேன். அப்புறம் அவன் போனான். அப்புறம் மற்றப் பையன்கள் பயந்து விட்டார்கள். அப்புறம் நீங்கள் வந்து கூப்பிட்டீர்கள்."

டிரெஸ்காட் ஆழ்ந்த பெருமூச்சு விட்டார். அவர் முகம் சோகத்தால் வாடிற்று. அதன் மர்மத்தை உணராத சிறுவன் துக்கத்துடன் அழுது புலம்பத் தொடங்கி விட்டான். "இதோ

பார், அழாதே ஜிம்" என்று டிரெஸ்காட் மேஜையைச் சுற்றிக் கொண்டே பேசினார்.

சிறுவனைத் தன் கால்களுடன் அணைத்துக்கொண்டு பெரிய தோல் நாற்காலியில் சாய்ந்த வண்ணம், "நான் சில விஷயங்களை விளக்கவேண்டுமென்றுதான் எண்ணினேன் உனக்கு," என்று ஆரம்பித்தவர் முடிக்காமலே விட்டுவிட்டார். ஜிம்மியும் பள்ளிக்குச் சென்றுவிட்டான்.

அவன் பள்ளிக்கூடம் சென்றபின் டிரெஸ்காட் காலையில் நோயாளிகளைப் பார்வையிடப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது டாக்டர் மோஸரிடமிருந்து ஒரு செய்தி வந்தது. இருபது மைல்களுக்கப்பால் உள்ள தன் சகோதரி சாகக் கிடப்பதாகவும், அவளைக் கவனிக்கத் தான் அங்கு செல்வதாயும், அன்றைக்கு மட்டுமாவது தான் பார்க்க வேண்டிய நோயாளிகளை அவரே கவனித்துக் கொள்ள வேண்டுமென்றும் அதில் கண்டிருந்தது. ஒவ்வொரு கேசைப் பற்றிய சிறு வரலாறும் இதுவரை என்ன செய்யப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றிய குறிப்பும் காணப்பட்டது. டிரெஸ்காட், தான் அதை மகிழ்ச்சியுடன் செய்வதாக வந்தவனிடம் பதிலளித்தார்.

மோஸருடைய பட்டியலில் முதலாவதாக விண்டர் பெயர் காணப்பட்டதைக் கவனித்தார். ஆனால் அதைப்பற்றி பிரமாதமாக ஒன்றும் நினைக்கவில்லை. அதனுடைய முறைப்படி விண்டரின் வீடு சென்றார். கதவைத் திறந்த மிஸஸ் விண்டரிடம் சந்தோஷமாகவே பேசினார்.

"குட்மார்னிங் மிஸஸ் விண்டர்.—டாக்டர் மோஸர் வெளியூருக்குப் போகவேண்டியிருந்தது. அவருக்குப் பதிலாக என்னைப் போய்ப் பார்க்கச் சொன்னார். இன்று காலை குழந்தைக்கு எப்படி இருக்கிறது?" என்றார். அவரைக் கண்டதும் மிஸஸ் விண்டர் கல்லாய்ச் சமைந்து விட்டாள். வீட்டுக்குள்ளே தலை தெறிக்க ஓடினாள். டிரெஸ்காட் கூடத்தினுள் நுழைந்து இடது புறமுள்ள அறைக்குள் சென்றார்.

அப்பொழுதுதான் விண்டர் மற்றொரு அறையிலிருந்து அங்கே வந்தார். ஆனால் உள்ளே வரத் தயங்கினார். தூரத்தில் நின்றபடியே டிரெஸ்காட்டை நோக்கி, "உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கடுமையாகவே கேட்டார்.

தலையை உயர்த்திய வண்ணம், "எனக்கு என்ன வேண்டுமா? எனக்கு என்ன வேண்டும்?" என்று டிரெஸ்காட் ஒன்றும் விளங்காமல் அவர் சொன்னதையே திரும்பித் திரும்பிச் சொன்னார். அவருக்கு இந்தக் கேள்வி விசித்திரமாகப் பட்டிருக்க வேண்டும்.

"ஆமாம், அதைத்தான் நானும் கேட்டேன். உமக்கு என்ன வேண்டும்?" விண்டர் நடுக்காகவே கேட்டார். டிரெஸ்காட் ஒரு கணம் மௌனமாயிருந்தார். மோஸர் அனுப்பியிருந்த குறிப்பைப் பார்த்தார். "உங்கள் குழந்தையின் நிலை கொஞ்சம்



கவலைக்கிடமாய் இருப்பதாக இதில் காணப்படுகிறது. விரைவில் ஒரு டாக்டரை அழைத்து வந்து காட்டுவது நல்லது. டாக்டர் மோஸரின் குறிப்பிலிருந்து ஒரு பிரதி தருகிறேன். வழக்கமாக வைத்தியத்திற்கு கூப்பிடும் யாரிடமாவது அதைக் காட்டி மருந்து வாங்கிக் கொள்ளுங்கள்." குறிப்பைப் பார்த்து அதைத் தன் நோட்டின் ஒரு பக்கத்தில் எழுதினார். அந்தத் தாளைக் கிழித்துக் கதவை நோக்கிச் சென்றுகொண்டிருந்த விண்டரிடம் நீட்டினார்.

தாளை வாங்கத் திரும்பிய பொழுது அவர் தலையைத் தொங்கப் போட்டிருந்தார். நிலையைப் புரிந்துகொண்ட டிரெஸ்காட், விண்டரின் காலடியில் தாளை வீசி எறிந்தார். வெளியேறிக் கொண்டிருந்த டிரெஸ்காட் கூடத்திலிருந்த வண்ணம் "குட் மார்னிங்" என்றார். இது விண்டரை மேலும் கோபமடையச் செய்தது. தான் ஏற்கனவே டிரெஸ்காட்டை சரமாரியாகத் திட்டிப் பொழிய வேண்டுமென்று சிந்தித்து வைத்திருந்த வசைமொழிகளையெல்லாம் இப்போது கவனப்படுத்திக் கொண்டார், விண்டர். அதை அவர்மீது வீசத்தான் அவரைப் பின்தொடர்ந்தார்.

முதலில் கூடம் வரையில், பின்னர் வாயல் வரையில், அங்கிருந்து தாழ்வாரம் வரையில் மரியாதைக்காக வந்தார். கோபம் மட்டும் தணியவில்லை. சாலைக்கு வந்துவிட்ட டிரெஸ்காட் திரும்பிப் பார்த்தபொழுது விண்டர் தாழ்வாரத்தில் நின்றுகொண்டு இன்னும் இரைந்து கொண்டிருந்தார். அவர் ஒரு நாய்க்குட்டியைப் போல குலைத்துக் கொண்டிருந்தார்.

## XXII

"உனக்குச் சேதி தெரியுமா?" என்று மார்த்தா இருந்த சமையலறையை நோக்கி வந்த கேர்ரி டஞ்சன் கேட்டாள். "உனக்குச் சேதி தெரியுமா?" அவளுடைய கண்கள் மகிழ்ச்சியால் ஒளிர்ந்தன. "தெரியாதே!" மார்த்தாவின் தங்கை கேட் ஆவலோடு வினவினாள். "என்ன விசேஷம்?"

கேர்ரி வெற்றியுணர்வுடன் கதவருகில் தோற்றமளித்தாள். "ஓ டாக்டர் டிரெஸ்காட்டிற்கும், ஜேக் விண்டருக்குமிடையே பலத்த சண்டையாம். அவர்கள் நடந்துகொண்ட விதத்தைக் கேட்கவே சகிக்கவில்லையாம். ஜேக் விண்டர் ஒரு கோழை மனிதன் என்றுதான் நினைத்திருந்தேன். அவன் டாக்டர் டிரெஸ்காட்டைப் பார்த்து நேருக்கு நேராக அவன் மனத்திலிருந்ததை எல்லாம் கொட்டி விட்டானாம்."

மார்த்தா, "அவரைப் பற்றி என்னென்ன சொன்னான்?" என்று கேட்டாள்.

"ஓ! அவரை வாய்க்கு வந்தபடி எல்லாம் திட்டினான். மிஸஸ் ஹோவர்த் அதை முழுக்க முழுக்கத் தன் காதாலேயே கேட்டா

ளாம். அது கேட்கவே பயங்கரமாயிருந்ததாம். ஊர் முழுவதும் இதே பேச்சு. எல்லோருக்கும் தெரிந்த விஷயம் இது.''

'' இதையெல்லாம் கேட்டுக்கொண்டு டாக்டர் ஒன்றும் பதில் சொல்லவில்லையா ? ''

'' இல்லை, அதுதானே ஆச்சர்யம். மிஸஸ் ஹோவார்ட் சொன்னாள். அவர் திரும்பி ஒரு வார்த்தை கூடப் பேசவில்லையாம். அவர் பேசாமல் வெளியேறி வண்டியில் ஏறிக்கொண்டு சா-வ-தா-ன-மா-கப் போய்விட்டாராம். ஆனால் ஜேக் மட்டும் ஆத்திரம் தீரப் பேசிவிட்டானாம்.''

'' சரி, சரி அவன் என்னதான் சொன்னான் ? '' கேட் கீச்சுக் குரலில் கத்தினாள். அவளுக்கு ஒரே உற்சாகம். வம்புப் பேச்சுக்கு சுவையுள்ள சமாசாரம் அல்லவோ கிடைக்க விருக்கிறது.

'' ஓ ! அன்று இரவு வரை தன் பெண் ஸாடி நன்றாகவே இருந்தாள். ஆனால், ஹென்ரி ஜான்ஸன், தெரஸா பேஜின் விருந்தின்போது அவளை பயமுறுத்திவிட்டான்; அதிலிருந்து, படுத்த படுக்கை. அதற்கு டாக்டர்தான் பொறுப்பு என்று அவன் சாதித்தான்.''

'' அப்படியிருக்க அவன் வீட்டிற்குள் அவர் எந்த முகத்தைக் கொண்டு உள்ளே நுழைந்தார். இன்னும்...இன்னும்......''

'' இன்னும் என்ன சொன்னான் ? '' என்று மார்த்தா கேட்டாள் ஆவல் அடங்காமல்.

'' அவரிடம் ஏதாவது சபதம் பேசினானா ?'' என்று கேட் பயங்கர மகிழ்ச்சியுடன் கேட்டாள்.

'' இல்லை, அவ்வளவு அதிகமாக இல்லை. சிறிது வசைமொழிகள் வீசினான். ஆனால் ஒரு மனிதன் முழுப் பைத்தியமாயிருக்கும் பொழுது பேசுவது போலத்தான் இருந்தது. அப்படித்தான் மிஸஸ் ஹோவர்த் சொன்னாள்.''

'' ஓ.'' கேட் மூச்சு விட்டாள் '' ஏதும் திட்டவில்லை ?''

இதையெல்லாம் கேட்டுக் கொண்டே தன் வேலையிலேயே ஈடுபட்டிருந்த மார்த்தா கொஞ்ச நேரம் ஏதோ யோசனையில் இருந்தாள். இப்பொழுது மற்றவர்களை மடக்கிப் பேசினாள்.

'' ஹென்ரி ஜான்ஸன் வெளியே வந்ததிலிருந்து ஸாடி வின்டர் அப்படி ஒன்றும் படுத்த படுக்கையாக இருக்கவில்லை. அவள் தினம் தவறாமல் பள்ளிக்குப் போய் வந்துகொண்டிருக்கிறாளே, இல்லையா ?''

அவர்களுடைய பேச்சை நம்பாதவள் போல் கேட்ட கேள்விகளால் கோபமடைந்த இருவரும் அவள் மேல் பாய்ந்தனர். '' பள்ளிக்கூடம், பள்ளிக்கூடம்...நான் அப்படி ஒன்றும் நினைக்கவில்லை.''

''அவள் இருக்கும் நிலைமையில் பள்ளிக்கூடமாவது, பள்ளிக்கூடம்!''

மார்த்தாவின் சுயரூபம் வெளிவரத் தொடங்கிற்று. அவள்



கையில் ஒரு இரும்புக் கரண்டி இருந்தது. அதைக் கொண்டே அவர்களைத் தாக்கவருவதுபோல் இருந்தது அவள் திரும்பிய மாதிரி. '' ஸாடி வின்டர் அதற்குப்பின் எத்தனையோ தடவை காலைப்போதில் கையில் பள்ளிக்கூடப் பையுடன் இவ்வழியாகப் போவதை நான் பார்த்தேன். கையில் புத்தகங்களுடன் பள்ளிக்கூடத்திற்கல்லாது வேறே எங்கே போய்க் கொண்டிருந்தாள் ? ஏதாவது திருமணத்திற்கா ?''

அவளுடைய யதேச்சாதிகாரத்துக்குட்பட்டு மனோவேதனையடைந்திருந்த மற்றவர்கள் உடனே இந்தத் தாக்குதலுக்கு முன் சரணடைந்தனர். '' அப்படியா, நான் பார்த்ததே இல்லையே,'' என்று கேட் சொன்னாள்.

கேர்ரி டஞ்சன் அதை ஆமோதித்தவள் போன்று சைகை செய்தாள்.

'' நான் மட்டும் டிரெஸ்காட்டாக இருந்தால் அந்த அதிகப்பிரசங்கி ஜேக் வின்டரின் மண்டையைப் பிளந்திருப்பேன்,'' என்று மார்த்தா உரத்த குரலில் விளக்கம் செய்தாள்.

கேட்டும் கேர்ரியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். ஏதோ ஒருவித உடன்பாட்டுக்கு வந்தவர்கள் போல், '' நீ ஏன் அப்படிச் சொல்லுகிறாய், மார்த்தா ?'' என்று ஒரு கேள்வியை வீசினர். கேர்ரி தான் இதைக் கேட்டாள். அதற்கே ரொம்ப தைரியம் வேண்டும். கேட் புன்முறுவல் செய்து தன் ஆதரவைத் தெரிவித்தாள். '' ஒருவனுடைய பெண்ணை இறந்து போகும் நிலைமைக்குப் பீதியடையச் செய்தால் யாருக்கும் கோபம் வருவது இயல்புதானே ? அதை எப்படிக் குற்றமாகக் கருதுவது. அத்துடன் எல்லோரும் சொல்லுகிறார்கள்.. ...''

'' மற்றவர்கள் சொல்லுவதைப் பற்றி நான் கவலைப்படவில்லை,'' என்று மார்த்தா கூறினாள்.

உடனே கேர்ரி, அசாதாரண தைரியத்துடன், '' நீ தனியாக ஊரையே எதிர்க்க முடியாது மார்த்தா,'' என்றாள். அதில் அவளுடைய எதிர்ப்பு மனப்பான்மை நன்றாகவே தெரிந்தது.

'' ஊர் முழுவதுமா ? உன் கருத்தில் ஊர் முழுதும் என்றால் என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய், சொல்லு, எனக்குத் தெரிய வேண்டும். ஜான்ஸனைக் காண்பதற்கே பயப்படும் இந்த அற்பர்களையா ' ஊர் முழுதும் ' என்கிறாய் ?'' என்று மார்த்தா கர்ஜித்தாள்.

'' ஏன் மார்த்தா, அவனைக் கண்டால் நீ பயப்படவே மாட்டாய் போல் பேசுகிறாயே, அப்படித்தானா ?'' என்று கேர்ரி வினவினாள். அவள் கேட்ட முறையில் ஒரு அழுத்தம் இருந்தது.

'' நான் பயப்பட மாட்டேன்.''

'' ஓ மார்த்தா, நீ என்ன அப்படிப் பேசுகிறாய். உன்னுடைய பேச்சே பேச்சு ! ஒவ்வொருவனும் பயந்து சாகிறானே,'' என்று அவள் வார்த்தைகளை நம்பாதவள் போல் சொன்னாள்.

கேர்ரி அசட்டுச் சிரிப்புடன், "நீ அவனை நேரில் பார்த்த தில்லையே? பார்த்திருக்கிறாயா?" என்றாள் விஷமப் பார்வையுடன்.

"இல்லை," என்று மார்த்தா ஒப்புக் கொண்டாள்.

"சரி, அப்படியானால் அவனைப் பார்த்து நீ பயப்படமாட்டாய் என்று எப்படிச் சொல்லலாம்?"

மார்த்தா திருப்பிக் கேட்டாள். "நீ மட்டும் என்னவது அவனைப் பார்த்திருக்கிறாயா? இல்லையே? அப்போ நீ மட்டும் பயந்து விடுவாய் என்று உனக்கு எப்படித் தெரியும்?"

மற்ற இருவரும் ஒரே குரலில் பதிலளித்தார்கள். "ஆனால் மார்த்தா, எல்லோரும் சொல்லுகிறார்களே, ஊரில் எல்லோரும் சொல்லுகிறார்களே?"

"எல்லோரும் என்ன சொல்லுகிறார்கள்?"

"அவனைப் பார்த்த எல்லோரும் பயந்து செத்ததாகச் சொல்கிறார்கள். பெண்கள் மட்டும்தான் என்றில்லை. ஆண்களும் கூடத்தான். ஒரே பயங்கரம்! என்கிறார்கள்."

மார்த்தா தலையை மெதுவாக ஆட்டிக் கொண்டு, "நான் அவனைக் கண்டாலும் கூட பயப்படாதிருக்கவே செய்வேன்," என்றாள். அவள் சற்றுத் தளர்ந்து விட்டாள் என்பது தெரிந்தது.

"உன்னையும் மீறிப் பயந்து விட்டால்?" என்று விடாமல் கேட்டாள் கேட்.

"ஆமாம் இங்கே பார், இன்னொரு செய்தி சொல்லுகிறேன், கேள். பக்கத்து வீட்டிலிருந்த ஹன்னிகன் குடும்பத்தினர் கூட வேறு வீட்டிற்குக் குடிபோகப் போகிறார்கள்," என்றாள் கேர்ரி.

"அவனுக்குப் பயந்து கொண்டா?" என்று கேட்டாள் மார்த்தா.

கேர்ரி பதிலளித்தாள். "ஆமாம். மிஸஸ் ஹன்னிகனே அவ்வாறு சொன்னாள்."

"அப்படியா, வீடு மாற்றிக் கொண்டா போகிறார்கள்? நிச்சயமாகவா? எங்கே போகப் போகிறார்கள்?"

"ஆர்ச்சர்ட் அவென்யூவுக்கு."

"அப்படியா சேதி, நல்ல வீடோ?"

"அதைப் பற்றி எனக்கொன்றும் தெரியாது. ஆர்ச்சர்ட் அவென்யூவில் தான் நல்ல வீடுகள் நிறைய இருக்கின்றனவே."

"உண்மைதான். ஆனால் அவற்றிலெல்லாம் குடியிருக்கிறார்களே. காலியாக ஒரு வீடு கூட இல்லையே," என்றாள் கேட்.

"இருக்கிறது, இருக்கிறது. அந்தப் பழைய ஹாம்ஸ்டெட் இருந்த வீடு காலியாகத்தானிருக்கிறது," என்றாள் மார்த்தா.

"ஆமாமா, ஆனால் மிஸஸ் ஹன்னிகனுக்கு அது பிடிக்காது. அவர்கள் எங்கே அதற்குப் போகப்போகிறார்கள். வேறு எந்த வீட்டுக்குப் போகிறார்களோ?"



"எனக்கும் தெரியாது. நமக்குத் தெரியாத ஒரு இடமாகத் தானிருக்க வேண்டும்," என்றாள் மார்த்தா.

"எப்படியும் நமக்குத் தெரியத்தானே போகிறது. பார்த்துக் கொள்ளலாம்," என்று கொஞ்சம் யோசித்தவாறே கேர்ரி டஞ்சன் சொன்னாள்.

"யாருக்குத் தெரியும்? இந்தப் பக்கங்களில் யார் இருக்கிறார்கள்?" என்று கேட்டாள் கேட்.

"ஏன், மிஸஸ் ஸ்மித், அவள் தோட்டத்தில் தானிருக்கிறாள்," என்று சொல்லிவிட்டு உடனே அவளை அழைத்துவர விரைந்தாள் கேர்ரி. அவள் வாசலுக்கு ஓடவும், கேட்டும், மார்த்தாவும் ஜன்னல் பக்கம் சென்றனர். கேர்ரியின் குரல் நன்றாகவே கேட்டது. "மிஸஸ் ஸ்மித், மிஸஸ் ஸ்மித், ஹன்னிகன் குடும்பம் எந்த வீட்டுக்குப் போகப் போகிறதென்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டுக் கொண்டிருந்தாள்.

## XXIII

இலையுதிர் காலம். ஒயிலோம்வில்லியின் மரங்களெல்லாம் மஞ்சளும் கருஞ் சிவப்பும் கலந்து காட்சியளித்தன. காற்று பலமாக வீசியது. இரவின் இருண்ட அமைதியில் வீட்டின் ஜன்னல் வழியே தெரியும் வெளிச்சம் அழகாகவிருந்தது. சிறுவர் மேப்பிள் மரங்களிலிருந்து உதிரும் இலைகளைக் கண்டு அவற்றைப் பெரும் அளவில் தெருக்களில் குவித்து மங்கிய மாலைப் பொழுதுகளில் தாம் கொளுத்தும் காலம் விரைவில் வரும் என்று எண்ணி மகிழ்ந்தனர்.

நயகரா அவென்யூவில் மூவர் நடந்து கொண்டிருந்தனர். நீதிபதி ஹெகன்தார்ப்பின் வீட்டருகில் வருகையில் அவர்கட்காகவே காத்திருந்தவர் போன்று நீதிபதி அவர்களை வரவேற்றார்.

வந்தவர்களில் ஒருவர் கேட்டார்: "நீங்கள் தயார்தானா, நீதிபதி அவர்களே?"

"தயார்தான்" என்று அவர் பதிலளித்தார்.

நால்வரும் டிரெஸ்காட்டின் வீட்டை நோக்கி நடந்தனர். டிரெஸ்காட் தாம் படித்துக் கொண்டிருந்த அலுவலகத்திலேயே அவர்களை வரவேற்றார். நகரத்திலேயே செல்வாக்குள்ள நான்கு பிரமுகர்களின் வருகையைக் கண்டு அவர் வியப்படைந்தாரென்றாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

எல்லோரையும் அமரச் செய்தபின் டிரெஸ்காட் அவர்கள் என்ன சொல்லப்போகிறார்களோவென்று ஆவலுடன் ஒவ்வொருவருடைய முகத்தையும் ஆராய்ந்தார். சிறிது நேரம் அமைதி நிலவியது. பெரிய பலசரக்கு வியாபாரியான ஜான் ட்வெல்வ்தான் முதலில் பேசினார். அவர் 400,000 டாலர்கள் சொத்துடையவர். ஆனால் ஊரில் 10 லட்சம் டாலர் சீமானென்று மதிக்கப்பட்டவர்.

"டாக்டர்" சிறு சிரிப்புடன் தொடங்கினார்: "எங்களுக்குச் சிறிதும் சம்பந்தமில்லாத ஒரு விஷயத்தைப் பற்றித்தான் நாங்கள் பேச வந்திருக்கிறோம் என்பதை முதலில் நானே சொல்லிவிடுகிறேன்."

" ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்? என்ன அது?" என்று டிரெஸ்காட் மறுபடியும் ஒவ்வொருவராகப் பார்த்தார். அவர் நீதிபதி ஹெகன் தார்ப்பையே முக்கியமாகக் கவனித்தார். ஆனால் அந்தக் கிழவரோ தம் கைத்தடியைப் பார்த்துக் கொண்டிருந்தார். டாக்டரை நிமிர்ந்து பார்க்கவேயில்லை.

" ஊரில் ஒருவரும் அதிகமாக விவாதிக்காத விஷயம்—ஆனால் எல்லோரும் உணர்ந்து கஷ்டப்படுவது ஹென்ரி ஜான்ஸனைப் பற்றியது" என்று ட்வெல்வ் கூறினார்.

டிரெஸ்காட் நாற்காலியில் நன்றாக அமர்ந்து கொண்டார். " அப்படியா? சொல்லுங்கள்."

தலைப்பை முதலில் எப்படியோ அறிவித்துவிட்ட ட்வெல்வுக்கு இப்போது கொஞ்சம் அச்சம் நீங்கியிருந்தது. "அதாவது அதைப் பற்றி உங்களுடன் கொஞ்சம் பேச விரும்புகிறோம்" என்று அவர் மிகவும் மரியாதையுடன் பேசினார்.

" சொல்லுங்கள்." என்றார் டிரெஸ்காட்.

ட்வெல்வ் உடனே தாக்குதலுக்குத் தயாரானார். " இங்கே பாருங்கள், டிரெஸ்காட், நாங்கள் உங்களை நேசிக்கிறோம். அதனால்தான் இதைப்பற்றி நேராகவே உங்களுடன் பேசவந்திருக்கிறோம். அது ஒன்றும் எங்கள் சொந்த வீட்டுக் காரியமல்ல. அதிலும் என்னைப் பொறுத்தவரையில் நீங்களே அப்படிச் சொன்னாலும் வருந்தமாட்டேன். ஆனாலும் நீங்களே உங்களை நாசமாக்கிக் கொள்வதைப் பார்த்து என்னால் சும்மாயிருக்கமுடியாது. அப்படித்தான் நாங்கள் எல்லோருமே நினைக்கிறோம்."

" நான் ஒன்றும் என்னை நாசமாக்கிக் கொள்ளவில்லையே" என்று நிதானமாகவே டிரெஸ்காட் பதிலளித்தார்.

"இருக்கலாம். உங்களுக்கு நீங்களே தீமை செய்து கொள்ளவில்லை என்றுதான் நினைக்கலாம். நகரத்து டாக்டர்களில் முதன்மை ஸ்தானம் வகித்த நீங்கள் இப்பொழுது கடைசியாக உங்களை மாற்றிக்கொண்டிருக்கிறீர்கள். எல்லா ஊரையும் போல் இங்கேயும் சிந்தனையற்ற முட்டாள்கள் அதிகமாயிருப்பது இதற்குக் காரணமாயிருக்கலாம் ஆனாலும் நிலைமையை அது முற்றிலும் மாற்றிவிடாது" என்று ட்வெல்வ் சொன்னார்.

இதுவரை பேசாதிருந்த ஒருவர் மெதுவாக ஆரம்பித்தார். "முக்கியமாகப் பெண்கள்தான்..." என்று இழுத்தார். ட்வெல்வ் மறுபடியும் தொடர்ந்தார்: "நான் சொல்ல விரும்பியதெல்லாம், உலகத்தில் நிறைய முட்டாள்கள் இருந்த போதிலும் அவர்களை எதிர்ப்பதன் மூலம் நீங்கள் உங்களை ஏன் கெடுத்துக்கொள்ள வேண்டும் என்பது எங்களுக்குப் புரியவில்லை. நீங்கள் ஒன்றும் அவர்களுக்கு புத்தி புகட்ட முடியாது."



" நான் ஒன்றும் அவர்களுக்குப் புத்தி புகட்ட முயற்சிக்கவில்லை. நீங்கள் சொன்ன அந்த விஷயம்......" டிரெஸ்காட் வறட்டுப்புன்னகையுடன் பேசினார்.

" ஆமாம், ஆமாம்...... அதற்காகீ உங்களை நாங்களே பாராட்டுகிறோம். ஆனால் அது முட்டாள்களின் மனத்தை மாற்றப்போவதில்லை. அதைத்தான் சொல்ல வந்தேன்." ட்வெல்வ் குறுக்கிட்டுப் பேசினார்.

" இந்த அசட்டுப் பெண்கள்தான்......" என்று இரண்டாமவர் மறுபடியும் சொன்னார்.

"நல்லது. நான் சொல்ல வேண்டுவது இதுதான். இப்போதிருக்கும் தொந்தரவினின்றும் உங்களை நீங்கள் விடுவித்துக் கொண்டு மறுபடியும் பழைய நன்னிலைக்கு நீங்கள் வரவேண்டுமென்றே நாங்கள் ஆசைப்படுகிறோம். உங்களுடைய வீண் பிடிவாதத்தினால் உங்கள் தொழிலையே நாசமாக்கிக் கொண்டீர்கள். இது ஒரு அசாதாரண விஷயம்தான். இதை நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனாலும் இதை முறியடிக்க வேறு வழிகளும் இருக்கத்தானே வேண்டும். எனவேதான் நாங்கள் அதைப்பற்றிப் பேசினோம்—நாங்கள் பன்னிரண்டு பேர் கூடி ஆலோசித்தோம். எங்கள் வேலையைப் பார்த்துக்கொண்டு போகுமாறு நீங்கள் சொன்னால்—சொல்லிவிட்டுப் போங்கள்—ஆனால் அதைப்பற்றி நாங்கள் கலந்தாலோசித்தோம். செய்ய வேண்டியதெல்லாம்—இங்கிருந்து தொலைவில் இந்தப் பள்ளத்தாக்கிற்கப்பால் வேறோரிடத்தை ஜான்ஸனுக்கு ஏற்பாடு செய்யவேண்டும்—இதுதான் எங்கள் சிபார்சு" என்று ட்வெல்வ் நிதானமாகப் பேசினார்.

டிரெஸ்காட் ஆழ்ந்த பெருமூச்சு விட்டார். "நண்பரே, உங்களுக்குத் தெரியாது. எல்லோரும் அவனைக்கண்டு வீணாகப் பயப்படுகிறார்கள். அவர்களால் அவனை ஒரு சிறிதும் கவனிக்கவும் முடியாது. நான் அவனைப் பார்த்துக் கொள்ளுவதைப் போன்று யாரும் பார்த்துக் கொள்ளவு மாட்டார்கள்."

ட்வெல்வ் வருத்தத்துடன் சொன்னார்: "கிளாரென்ஸ் மலைக்கு அப்பால் ஒரு நல்ல பண்ணை எனக்கிருக்கிறது. இப்போது அதிலிருந்து எனக்கு வருமானம் கிடையாது. நான் அதை ஜான்ஸனுக்குத் தந்துவிடுகிறேன். நீங்கள் ஏதாவது ... நீங்கள் ஏதாவது ... ஏதாவது—எரிந்த உங்கள் வீட்டிலிருந்து — அல்லது எப்படியோ—ஏன்? உங்களிடமிருந்து அவனைத் தூக்கிச் செல்லக்கூட எல்லா ஆட்களும் தயாராயிருக்கின்றனர். அப்புறம் ...... அப்புறம் ......"

டிரெஸ்காட் எழுந்து ஜன்னலருகில் சென்றார். அவர்களுக்கு முதுகுப்புறம் தெரியுமாறு திரும்பிக்கொண்டார். அவரிடம் வரும் பதிலை எதிர்பார்த்து மௌனமாக அவர்கள் அமர்ந்திருந்தனர். அவர் திரும்பிய பொழுது அவர் நிழல்பக்கமாகத் தன் முகத்தை வைத்துக்கொண்டு சொன்னார். "இல்லை ஜான் ட்வெல்வ், நீங்கள் சொல்வது போல் செய்ய முடியாது."

மறுபடியும் அமைதி நிலவியது. திடீரென்று ஒருவர் தன் நாற்காலியிலேயே அசைந்தார். "அப்படியானால் ஏதாவது ஒரு பொது விடுதியில் ......" அவர் தொடங்கினார்.

"இல்லை. பொது நிலையங்கள் மிகவும் நன்றாய்த்தானிருக்கின்றன. ஆனால் அவன் அங்கே போகப்போவதில்லை"—டிரெஸ்காட் முடிவாகச் சொன்னார்.

அவர்கட்குப் பின்புறம் நீதிபதி ஹெகன்தார்ப் ஆழ்ந்த யோசனையுடன் பூண்போட்ட தடியின் தலையை தடவிக்கொண்டிருந்தார்.

## XXIV

டிரெஸ்காட் காலடியிலிருந்து பனிப் படலத்தைத் தட்டினார். புயங்களிலிருந்த பனித்துகள்களைத் தட்டினார். வீட்டினுள் நுழைந்ததும் நேராக உணவு அறைக்குள் முதலில் சென்றார். பின் உட்காரும் அறைக்குப் போனார். அங்கே ஒட்டைச் சிவிங்கிகள், புலிகள், முதலைகள் முதலியவற்றைப் பற்றிய ஒரு பெரிய புத்தகத்தை ஜிம்மி ஆழ்ந்து படித்துக்கொண்டிருந்தான்.

"அம்மா எங்கே, ஜிம்மி?" என்று டிரெஸ்காட் கேட்டார்.

"எனக்குத் தெரியாதப்பா. மாடியில் இருக்கலாம்னு நினைக்கிறேன்" என்றான் பையன்.

படியருகில் சென்று டிரெஸ்காட் குரல் கொடுத்தார். மாடியிலிருந்து பதிலில்லை. வரவேற்பறையின் கதவு திறந்திருந்ததைக் கண்டதும் அதனுள் சென்றார். பெரிய அடுப்புக் கெதிரிலிருந்த நான்கு மைகா பட்டைகளிலிருந்து வந்த வெளிச்சத்தில், அறை மங்கலாயிருந்தது. கண்களைச் சுற்றிப் பார்க்கவே ஒரு சாய்வு நாற்காலியில் மனைவி சுருண்டுகிடந்தது தெரிந்தது. அவளருகில் சென்றார். "என்ன கிரேஸ், நான் கூப்பிட்டது உனக்குக் கேட்கவில்லையா?" அவர் கேட்டார்.

அவள் பதிலளிக்கவில்லை. அவளருகில் சென்று குனிந்து பார்த்தார். அவள் விம்மலுடன் அழுகையை அடக்க முயற்சிப்பதைக் கண்டார்.

"கிரேஸ், அழுதுகொண்டாயிருக்கிறாய், ஏன்?"—அவர் பதற்றத்துடன் வினவினார்.

அவள் நிமிர்ந்து பார்த்தாள். "எனக்குத் தலைவலி. ரொம்பக் கடுமையான தலைவலி, நெட், வேறொன்றுமில்லை."

"தலைவலி?" அவர் திருப்பிச் சொன்னார். அவர் குரலில் நம்பிக்கையின்மையும் வியப்பும் இழையோடின.

அவளுக்கருகில் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டார். சிவப்புக்கண்ணாடிகளின் வழியே வந்த வெளிச்சத்தில் அவர் கண்கள் அந்த அறையைத் துருவிப்பார்த்தன. அடுப்பருகில் ஒரு சிறு மேஜையிருந்ததையும் அதன்மேல் வெட்டப்படாத



கேக்குகளும் பல சிறு கோப்பைகளும் இருந்ததைக் கண்டார். அன்று புதன்கிழமை என்பது நினைவுக்கு வந்தது. அவருடைய மனைவி புதன்கிழமைகளில் தன் நண்பர்களை வரவேற்பது வழக்கம்.

"இன்று யார் வந்திருந்தது, கிரேஸ்?"—அவர் கேட்டார்.

அவருடைய தோள்பக்கமிருந்து ஒரு குரல் முணுமுணுத்தது. "மிஸஸ் ட்வெல்வ்"

"அவள் வந்திருந்தாளா? உம். ஏன்—அன்னா ஹெகன்தார்ப் வரவில்லை?" அவர் கேட்டார்.

அவர் பின்புறமிருந்து மறுபடியும் அதே முணுமுணுப்புத் தொடர்ந்தது. "அவளுக்கு உடல் நலமில்லையாம்!"

கோப்பைகளைப் பார்த்துக் கொண்டே டிரெஸ்காட் அவற்றைக் கணக்கிட்டார். பதினைந்து கோப்பைகள். "பாரு, பாரு, அழாதே கிரேஸ், அழாதே." அவர் அமைதிப்படுத்தினார்.

வீட்டைச் சுற்றிக் காற்று பலமாக வீசிக்கொண்டிருந்தது. ஜன்னலெங்கும் ஒரே பனி மூட்டம்! சில வேளைகளில் அடுப்பிலிருந்த நிலக்கரி வெடித்துக் கொண்டு இருந்தது. மைக்காவின் நான்கு பட்டைகளும் புதிய கருஞ் சிவப்பு நிறத்தில் திடீரென ஒளிவிட்டன. அவள் தலையைத் தன் புயத்தில் சாய்த்துக் கொண்டு அமர்ந்திருந்த பொழுது டிரெஸ்காட் விட்டுவிட்டு அந்தக் கோப்பைகளை எண்ண முயற்சிப்பார். பதினைந்து கோப்பைகள்!

# சாம்பல் நிறக் கை

"இன்று மாலை மழை வரும்போல் தோன்றுகிறது" என்று பீரங்கிப் படை அதிகாரியான லெப்டினன்ட் சொன்னான்.

"அப்படித்தானிருக்கிறது" என்று காலாட்படைத் தலைவன் ஆமோதித்தான். வானத்தை ஒருமுறை அண்ணாந்து பார்த்தான். முன்னாலிருந்த பசும்புல் நிலப் பரப்பையும் அவன் கண்கள் தாழ்ந்து கவனித்தன. "எதிர்ப்புறத்திலிருந்து மத்தியானத்திலிருந்தே அவர்கள் நம்மீது குண்டுமாரி பொழிந்தவண்ணம் இருக்கின்றனர். அவர்கள் அங்கிருந்து ஒழிந்தால் தேவலை" என்று எரிச்சலுடன் கூறினான்.

பரந்த வயல்களின் நடுவே, மேப்பிள் மரத்தோப்பிற்கப்பாலிருந்து வானத்திற் படர்ந்த சிறிய மேகத்திரள்கள் மழை பெய்யப் போகிறது என்பதைக் காட்டின. தூரத்திலிருந்து ஓயாது சுட்டுக் கொண்டேயிருந்த எதிரியின் துப்பாக்கி வீரர்களை நோக்கி நீல உடை அணிந்திருந்த சிப்பாய்கள் நீலத்தொப்பிகளுடனும், துப்

பாக்கிகளுடனும் சோர்வுற்று முன்னேறிக் கொண்டிருந்தனர். சிலர் துப்பாக்கி முனைகளின் மீது சாய்ந்து கொண்டு அந்தத் தோப்பையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தனர். ஒரு சமயம் அணியிலிருந்த ஒரு சிப்பாய் பின்வரிசையில் நின்று கொண்டிருந்த தன்னுடைய நண்பனிடமிருந்து கொஞ்சம் புகையிலை கேட்பதற்காகத் திரும்பினான். ஆனால் அவனுடைய கையை மட்டும் பின்னால் நீட்டினானே தவிர பார்வை என்னவோ எதிரிலிருந்த தோப்பின் மீதுதான் லயித்திருந்தது. அவன் கவனிக்காமல் அஜாக்கிரதையாக இருக்கும்போது எதிரிகள் அவனைச் சுட்டுவிடுவார்களோ வென அவன் அஞ்சினான். போர் அவ்வளவு மும்முரமாக நடந்து கொண்டிருந்தது.

திடீரென்று "அதோ என்ன வருகிறது, பார்" என்று பின்புறமாக ஒரு மூலையைச் சுட்டிக் காட்டியபடியே பீரங்கிப்படை அதிகாரி சொன்னார்.

காலாட்படை அணிக்குப் பின்புறத்திலிருந்து ஒரு குதிரைப் படையணி பாய்ந்து வந்து கொண்டிருந்தது. அப்படையின் வலது புறத்தில் சவாரி செய்து வந்த அதிகாரியான லெப்டினன்ட் வரிசையிலிருந்து பின்தங்கி விட்ட நான்கு குதிரை வீரர்களைக் கடுங் கோபத்தோடு இரைந்து கொண்டிருந்தான். அவனுடைய அதிகாரக் குரலைக் கேட்டவுடன், அவர்கள் குதிரைகளை வேகமாக விரட்டி படையணியின் வரிசையோடு சேர்ந்து கொண்டனர்.

குதிரைப் படையைச் சேர்ந்த தாரை ஊதுபவன் படைத் தலைவனின் பின்னால் ஊதிக்கொண்டே சென்றான். அவனுடைய முரட்டுக் குதிரை படை வரிசையிலிருந்து அதிக தூரம் ஓடிப் போகாமலிருக்க அதைக் கட்டுப்படுத்த வேண்டியிருந்தது. ஒரு மல்யுத்த வீரனைப்போல குதிரையுடன் வெகு பாடுபட வேண்டியிருந்தது.

வசந்த காலத்தில் அடர்த்தியாக வளர்ந்திருந்த அந்தப் புல் தரையில் எண்ணற்ற குதிரைகளின் குளம்புச் சப்தம் இடிமுழக்கம் போலக் கேட்டது. சிப்பாய்களின் சிவந்த முகங்களில் அவர்களுடைய கண்கள் ஒளிவீசும் எஃகுத் துண்டுகள் பதித்து வைத்தாற் போலிருந்தன.

ஓய்வாக நின்று கொண்டிருந்த காலாட்படையின் நீண்ட வரிசை விரைந்து செல்ற குதிரைப் படையின் வருகையைக் கண்டதும் சட்டென்று நகர்ந்து அவர்களுக்கு வழிவிட்டது. விரைந்து ஓடும் ஆற்றைப்போல ஓடிக்கொண்டிருந்த குதிரைகளையும், அவைகளின் மேலிருந்தவர்களையும் பார்ப்பதற்காகக் காலாட்படையினர் அனைவரும் திரும்பினர்.

அணியின் தலைப்பில் சுருண்டு கிடந்த மஞ்சள் கொடி பட்டொளி வீசி விருப்பமில்லாததுபோல் பறந்தது. சிற்சில சமயங்களில் குதிரைகள் துள்ளித்துள்ளிப் பாயும் வேகத்தில் அவற்றின் மீது அமர்ந்திருந்த வீரர்கள் எழும்பி எழும்பி அணியின் மட்டத்



திற்கு மேலே வெகு உயரத்திலிருப்பது போலத் தோன்றினர். குதிரைகளின் குளம்படிச் சப்தத்திற்கும் மேலாக அவற்றின் சேணங்களின் அசைவினால் ஏற்பட்ட 'கிரீச்' என்னும் ஓசையும் இரும்பினாலான ஆயுதங்களின் மோதலினாலேற்பட்ட ஒலியும் குதிரைகளைச் செலுத்தும்போது அவ்வீரர்கள் கிளப்பிய வீர நாதங்களும் ஓங்கி ஒலித்தன. குதிரைகள் கூட, வீரர்களுடைய மனோபாவத்தை உணர்ந்து கொண்டவைபோல, வெறிபிடித்தவைகளாய் முன்னேறிக் கொண்டிருந்தன. உரம்பெற்ற தாடைகள் கடிவாளத்துண்டுகளைக் கௌவிக்கொண்டபோது குதிரைகளின் தலைகள் பின்னுக்குச் சென்று உயர்ந்திருந்தன. கடிவாளங்களை இறுக்கிப் பிடித்தபோது குதிரைகள் வீரர்களின் பிடியின் வலிமையினால் தத்தளித்துத் தவித்துக் கொண்டிருந்தன. கடிவாளங்கள் இழுத்துப் பிடிக்கப்பட்டபோது கொல்லன் பட்டறை இடுக்கியைப்போல் குதிரைகளின் வாய்களில் இறுக்கின. சினமடைந்த குதிரைகள் தம் தலைகளை அசைத்து அசைத்துக் கழுத்தை உயர்த்தியபோது அவை பளபளத்து மின்னின. வீரர்களின் இரும்புப் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ள வகை தெரியாது தவித்த இக்குதிரைகள், தங்கள் இஷ்டத்திற்கு மாறாக இருந்தாலும் வீரர்கள் எத்திசையில், எவ்விதம் எவ்வித வேகத்துடன் செல்ல வேண்டுமென்று விரும்பினரோ, அவ்விதமே சென்றன.

முன்னால் செல்லும் காப்டனுடைய செங்குதிரை, குதிரைப் படையின் முன்னால் குறிப்பிட்ட தூரத்தில் பண்பட்ட ஒரு வீரன் செல்லுவதுபோல் ஒழுங்காகச் சென்று கொண்டிருந்தது. தனக்குப் பின்னால் குளம்படிச் சப்தமெழுப்பிவரும் மற்றக் குதிரைகளுக்குத் தானே தலைவன் என்னும் பெருமிதத்தில் சென்று கொண்டிருந்தது. நீல உடை தரித்த தங்களது படைவரிசையை நோக்கி எதிரியின் வீரர்கள் குண்டுமாரி பொழிந்து கொண்டிருக்கையில் இந்தக் காப்டனின் பார்வை மேப்பிள் தோப்பின் பக்கமே நிலைத்திருந்தது; ஏதோ யோசனையில் ஆழ்ந்திருப்பதுபோல் தெரிந்தது. மாதா கோவில் அதிகாரி தன்னுடைய ஆசனத்தில் அமர்ந்து சுற்றுப்புறச் சூழ்நிலைகளை அலட்சியபாவத்துடன் பார்ப்பதுபோல் அவன் தன்னுடைய குதிரையின் மீதமர்ந்து அதன் அசைவுகளுக்கேற்பத் தானும் மேலும் கீழுமாக எழும்பி எழும்பி அசைந்தான். மோதி வரும் பெருவெள்ளத்தைப் போல இந்த அதிகாரிக்குக் கீழுள்ள குதிரைப்படை அணி இரைச்சலுடனும் பரபரப்புடனும் முன்னுக்குச் சென்று கொண்டிருக்கும் பொழுது, இந்தக் காப்டன் மட்டும் ஏன் இவ்வளவு அமைதியாக, ஏதோ சிந்தனை வயப்பட்டிருக்கிறான் என்று, அவனைக் கவனித்துக் கொண்டிருந்த காலாட்படை வீரர்களுக்கு அதிசயமாயிருந்தது. எப்படி அவ்வாறு நிதானத்தை இழக்காது அந்தச் சூழ்நிலையிலிருக்கமுடியும் என்றுகூடப் பலர் வியந்தனர்.

அந்த அணி ஒரு வளைந்த பட்டாக் கத்தியைப் போல வளைந்து

அருகாமையிலிருந்த வேலி ஒன்றை நோக்கித் திரும்பி அதன் நடுவிலிருந்த திறந்த வழியே புகுந்து ரஸ்தாவை அடைந்தது. ஒரு சமயம் ஒரு பலகைப் பாலத்தின்மேல் அவ்வணி வரிசை செல்ல நேர்ந்தபொழுது குதிரைகளின் குளம்பொலி பல பேரிகைகள் முழங்குவது போலக் கேட்டது. காலாட்படையைச் சேர்ந்த வயதான காப்டன் ஒருவன் தன் கீழிருந்த லெப்டினன்டை நோக்கிக் குதிரைப் படையைக் குறித்துத் தன் அபிப்பிராயத்தைச் சொன்னான். பொதுவாகக் குதிரைப் படையைக் கடுமையாகக் கண்டித்தாலும் குறிப்பிட்ட அந்த அணியைப் பற்றி வியந்து பாராட்டியே குறிப்பிட்டதாகத் தோன்றியது.

திடீரென்று தாரை முழங்கியது. அந்தப் படைவரிசை ஒன்று போல "டக்" "டக்" என்ற சப்தத்துடன் ஒலியெழுப்பி நின்றது. அடுத்த கணத்திற்குப் பின் வீரர்களனைவரும் அவர்களுடைய குதிரைகளினின்று குதித்துத் கைத்துப்பாக்கிகளுடன் பெருக்கெடுத்தோடும் வெள்ளம் போல மேப்பிள் தோப்பை நோக்கி ஓடினர். அவர்களணியில் காலையில் பட்டை கட்டிய கால்களுடன் நின்று கொண்டு திமிர் பிடித்த நான்கு குதிரைகளுக்கு ஒவ்வொருவனாகக் கடிவாளங்களைப் பிடித்து இழுத்து அவற்றைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

காப்டன் தன்னுடைய பூட்ஸுடனேயே இங்குமங்கும் ஓடிக் கொண்டிருந்தான். அவனுடைய பட்டாக்கத்தி அவன் பக்கலில் தொங்கிக் கொண்டிருந்தது. அதன் நீண்ட நுனி கூடத் தரையைத் தொட்டுக் கொண்டிருந்தது. அவனுடைய மஞ்சள் நிறக் கேசம் அதை மறைத்திருந்த தொப்பிக்கு வெளியே கலைந்து காற்றில் பறந்து கொண்டிருந்தது. "தாக்குங்கள் சீக்கிரம்," என்று பயங்கரச் சப்தத்துடன் அவன் உத்தரவிட்டுக்கொண்டிருந்தான். முகம் ஒரே வெப்பாக மாறிவிட்டிருந்தது.

ஒரு பெரிய மிருகத்தின் மீது ஓநாய்க் கூட்டம் பாய்வதைப் போல அத்தோப்பை நோக்கிப் படைவீரர்கள் பாய்ந்தனர். அந்தக் காட்டின் ஒருபக்கம் பூராவிலும் துப்பாக்கிகளின் வெடிச் சப்தமும், தீப்பொறி பறத்தலும், ஒரே புகைப்படலமும் காட்சி தந்தன. காட்டினிடையே பெருங் கூச்சலெழுப்பிப் படை வீரர்கள் குண்டுகளைப் பொழிந்து கொண்டிருந்தனர்.

அந்தத் தோப்பை அணுகியதும் அப்படையணி ஒருகணம் நின்றது. வேகமாக ஓடும் வெள்ளத்தில் எதிர் நீச்சலடிப்பவர்கள் போன்று வீரர்கள் சிறிது நேரம் தத்தளித்தனர். பின்னர், உறுதியுடன் ஒரேமுகமாகப் பெருத்த முயற்சி செய்து தோப்பிற்குள் முன்னேறினர். தூரத்திலிருந்து பார்க்கும்பொழுது, உட்புறம் என்ன இருக்கிறது என்று புரிந்துகொள்ள முடியாத ஒரு சுவரைப் போல இலைகளையும், தழைகளையும் கொண்டிருந்த தோப்பிற்குள் வெறி கொண்டவர்கள் போல அவர்கள் புகுந்துவிட்டனர். தோப்பின் ஒவ்வொரு மரமும் அதன் பல்வேறு பாகங்களும் அவர்களுடைய அமைதியான கண்களுக்கு இப்போது தெரிந்தன. மேலும் தாவித் தாவி உள்ளே புகுந்து முன்னேறி, குளிர்ச்சி மிகுந்த அத்தோப்பின் மையத்திற்கே சென்று விட்டனர். கருகிய காகிதத்திலிருந்து எழும் நாற்றத்தைப் போன்று, ஒருவகை நாற்றம் அந்த இடத்தைச் சூழ்ந்திருந்தது. சாம்பல் நிறப்புகை சுற்றிச் சுழன்று மேல் நோக்கிப் படர்ந்து சென்று கொண்டிருந்தது. உள்ளே புகுந்த வீரர்கள் சற்றே நின்றனர். பயங்கரத் தோற்றத்தோடும், வியர்த்த முகத்தோடும் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க தோப்பின் ஒவ்வொரு மூலையையும், ஆர்வத்தோடும், அச்சத்தோடும் கூர்ந்து கவனித்தனர். தூரத்தில் ஏதோ உருவங்கள் செல்லுவதும் சென்று மறைவதுமாகத் தெரிந்தன. பன்னிரண்டு கைத்துப்பாக்கிகள் அவர்களை நோக்கிக் குண்டுமாரி பொழிந்தன.



இந்த இடைவேளையில் திருப்தியடைந்த மனத்தினோடும் பொங்கியெழுந்த புன்சிரிப்பு முகத்துடனும் காப்டன் படைவரிசையைப் பார்வையிட்டுக் கொண்டே மேலே நடந்துசென்றான். "நமது படையணியை எக்காரியம் செய்ய வேண்டுமென்று பணித்தாலும், நாம் அப்பணியைத் திறமையுடன் விரைவாகச் செய்து முடிப்போம் என்பதை அவர்கள் இப்போது கண்டுகொள்வார்கள்" என்று சிரித்தபடியே தன்னுடைய கீழ் அதிகாரியான லெப்டினன்டிடம் சொன்னான்.

அவனுக்குக்கீழ் மற்றொரு உத்தியோகஸ்தன், "அவர்கள் அந்த ஒரு நிமிஷத் தாக்குதலைக் கூடச் சமாளிக்க முடியவில்லை, இல்லையா?" என்றான். இரண்டு அதிகாரிகளும் அணிந்திருந்த உடை அழுக்கடைந்திருந்தது. இரண்டு தெருக்குழந்தைகளின் முகத்தைப் போல அவர்கள் முகங்களில் புழுதி படிந்திருந்தது.

அவர்களுக்குப் பின்னால் புல்வெளியில் தடுக்கி விழுந்து கிடந்த மூன்று உருவங்கள் அவர்கள் கண்களில் பட்டன.

அப்பொழுது மறுபடியும் அணி முன்னேறியது. அவர்கள், மரத்துக்கு மரம் ஒளிந்து மிருகங்களைத் துரத்தும் வேடர்களைப் போலப் பதுங்கிப் பதுங்கிப் போய்க் கொண்டிருந்தனர். சில வேளைகளில் வரிசையின் இடப்புறத்திலிருந்தும் சில வீரர்கள் சுட்டனர். வலப்பக்கமிருந்தவர்கள் அந்தத் திக்கையே கவனிக்கலாயினர். வயல்களின் குறுக்கே அந்த வீரர்கள் சற்று நேரம் முன்பு ஓடிவந்த களைப்பு தீரவில்லை. அவர்களுக்கு மேல்மூச்சு வாங்கிக் கொண்டிருந்தது.

இருந்தாற்போலிருந்து ஒரு வீரன் நின்று, "அதோ! ஒரு வீடு" என்று ஆச்சரியத்துடன் கூறவே எல்லோரும் சற்று நிதானித்தனர். தங்கள் தலைவனைத் திரும்பிப் பார்த்து உத்தரவை எதிர்பார்த்து நின்றனர்.

காப்டன் தலையை உயர்த்தி இப்படியும் அப்படியும் கூர்ந்து கவனித்துவிட்டு, "ஆமாம், ஆமாம்! அது ஒரு வீடுதான்" என்று அவர்கள் சொன்னதை ஊர்ஜிதப்படுத்தினான்.

அடர்ந்த இலைகளுக்கிடுக்கில் ஒரு பெரிய வெண்ணிற வீடு தூரத்தில் தெரிந்தது. இந்த வீரர்களும் போர்தொடுத்த நாளி லிருந்து இதுவரை நடத்திய சண்டைகளினால் சோர்வடைந்து முகங்களெல்லாம் கருஞ்சிவப்பு நிறமாய் மாறிவிட்டிருந்தனர். ஒவ்வொருவருடைய முகத்திலும் தன்னம்பிக்கையும் தைரியமும் ஒளிவீசின. அவர்களெல்லோரும் தோப்பிற்ருள் அந்த வீட்டைக் கண்ட மாத்திரத்தில் அப்படியே நின்று விட்டனர். அதனுட் சென்று பார்த்தால் என்ன? உள்ளே என்ன இருக்கும்? எல்லோர் மனத்திலும் இவ்வெண்ணம் லேசாக எழுந்தது. ஆனால் என்ன இருக்குமோ என்று இனம் தெரியாத பயமும் எங்கோ ஒரு மூலையி லிருந்து அவர்களுக்கு அச்சம் விளைவிக்காமலுமில்லை.

அந்த வீட்டின் அடர்ந்த புல்தரையைச் சுற்றி ரெயில் தண்ட வாளத் துண்டுகளால் வேயப்பட்ட ஒரு வேலி இருந்தது. வேலியி லிருந்து உள்ளே சென்ற பாதையில் ஏழு 'பைன்' மரங்கள் நிமிர்ந்து நின்றுகொண்டிருந்தன. அப்பாதை, இரு தூண்கள் கொண்ட ஒரு தலைவாயிலுக்கு இட்டுச் சென்றது தெரிந்தது. வாயிற்புறம் மறைந்திருந்ததால் நன்கு தெரியவில்லை. நீல நிற உடையணிந்த வீரர்கள் முன்னேறி அந்த வேலிவரைச் சென்று அதைக் கூர்ந்து கவனித்தனர்.

காப்டன் ஒரு கையை வேலியின் மேல் பாகத்தில் வைத்து மேலே எழும்பி வேலியைத் தாண்ட முயற்சித்தான்? தாண்டப் போகும் சமயத்தில் ஏதோ நினைத்துக் கொண்டவன் போலச் சற்றுத் தயங்கி "வாட்ஸன் நீ என்ன நினைக்கிறாய்? தாண்டி உள்ளே செல்லலாமா? என்று மெதுவான குரலில் கேட்டான்.

வாட்ஸன் என்று அழைக்கப்பட்ட அந்த லெப்டினன்ட் வீட்டை ஒரு முறை உற்றுப் பார்த்தான். "எனக்கு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை. கடவுளுக்குத்தான் வெளிச்சம்" என் றிழுத்தான்.

காப்டன் யோசனையிலாழ்ந்தான். அந்த அணி முழுவதுமே அவர்களை எதிர்நோக்கியிருந்த அந்தக் கட்டிடத்தையே பார்த்துக் கொண்டிருந்தது. கவலையுடனும், சந்தேகத்துடனும் அவர் களிடையே ஒரு ஆழ்ந்த மௌனந்தான் நிலவியது.

இறுதியில் காப்டன் ஏதோ தீர்மானத்திற்கு வந்தவன் போல "நாம் மடையர்கள், சந்தேகமில்லை; ஐக்கிய நாட்டின் தலைசிறந்த குதிரைப்படையின் அணி ஒரு பாழடைந்த வீட்டின் முன் நின்று கொண்டு குழந்தைகளைப்போல "ஆ" வென்று வாய்பிளந்து நின்றுகொண்டிருப்பது முட்டாள்தனமின்றி வேறென்ன?" என்று சப்தமும் எரிச்சலுமாகக் கூறினான். "ஆமாம், ஆனால் அதில் ஒரு விஷயம்......ஒரு விஷயம்......" என்று அவனுடைய கீழ் அதிகாரி திக்கித் திக்கிச் சொன்னான்.

"நல்லது. அதில் ஏதோ ஒன்று—ஏதோ ஒன்று அங்கிருக்கு மானால் நான் அதை வெளியே கொண்டுவருவேன்." என்று காப்



டன் கூறினான். "வீட்டின் பின்புறத்திற்கு நல்ல பொறுக்கியெடுத்த வர்களாக பன்னிரண்டு பேர்களை ஷார்ப் என்பவனின் தலைமையில் அனுப்பு. உன்னுடைய அந்த "ஏதோ ஒன்றைப்" பிடித்து விட லாம். அத்துடன் நான் இவர்களில் சிலரை அழைத்துக் கொண்டு இந்தப் பழைய வீட்டுக்குள் என்ன இருக்கிறது என்று இந்தப் பக்க மாகச் சென்று பார்க்கிறேன்" என்று அவன் தன் திட்டத்தைச் சொன்னான். அருகிலிருந்த எட்டு வீரர்களை அந்த வீட்டைத் தகர்த்தெறிய ஒரு சூறாவளிப் படையாகப் பொறுக்கிக்கொண்டான் அந்த லெப்டினன்ட். மற்றவர்கள் அவரவர்கள் இடத்திற்கு வந்து சேரும் வரை சில நிமிஷங்கள் காத்திருந்தபின், தன்னுடைய சகாக்களை, "வாருங்கள், செல்லலாம்", என்று அழைத்துக் கொண்டு வேலியைத் தாண்டினர்:

வேலிக்குட்புறம் பிரகாசமான வெளிச்சம் அந்த வீட்டை யொட்டிய அடர்ந்த புல்வெளியைப் பிரகாசப்படுத்தியது. இவ் வொளியில் அவன் உருவம் நன்றாகவே தெரிந்தது. இவனும் இவ னுடைய வீரர்களும் உள்ளே வருவதை எதிர்பார்த்து ஏதாவது ஒரு மர்மமான வஸ்து வீட்டுக்குள்ளிருக்குமோ என்று கூட அவ னுக்கு வியப்பேற்பட்டது. அவனுடைய ஆட்கள், அவனுக்குப் பின்னால் மௌனமாகப் போய்க் கொண்டிருந்தனர். ஒவ்வொரு ஜன்னலையும் கூர்ந்து கவனித்தனர். அவற்றிற்குப் பின்னால் ஒளிந்து கொண்டு தங்களை எந்தக் கூரிய விழிகளாவது இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கின்றனவோ, அவைகள் எப்படிப்பட்ட விழிகளோ, நன்மை பயக்கும் விழிகளோ, அன்றி தீமை கக்கும் கண் களோ என்றெல்லாம் அவர்கள் சிந்தனையிலாழ்ந்தனர்.

திடீரென்று அவர்களில் ஒரு வீரன்—அவன் ஒரு 'கார்ப்பொரல்' என்னும் குட்டி அதிகாரி—எச்சரிக்கைக் குரல் எழுப்பித் தன் கைத் துப்பாக்கியை உயரத்தூக்கிக் குறிவைத்தான். இதைக்கண்ட காப்டன் அவன் பக்கம் திரும்பி "என்ன கண்டாய்?" என்று கேட் கும் பாவனையில் அவனைப் பார்த்தபோது, அந்தக் கார்ப்பொரல் "அந்தச் சாளரத்துக்குப் பின்னால் ஏதோ ஒரு கை அசைந்ததைக் கண்டேன். சாம்பல்நிறச் சட்டை அணிந்த கை" என்றான்.

"முட்டாள்தனமாக ஒன்றும் உளறாதே! ஜோன்ஸ்!" என்றான் காப்டன் சூடாக: அவன் சொன்னதைக் காப்டன் நம்ப வில்லை என்பது அவன் குரலிலேயே தொனித்தது.

"நிச்சயமாகச் சொல்லுகிறேன். சத்தியம் கூடச் செய் வேன் ......" என்று ஆரம்பித்தான். ஆனால் காப்டன் அவனைப் பேசவிடவில்லை.

வீட்டின் தலைப்புறத்தை அடைந்ததும், அவர்கள் அப்படியே நின்றுவிட்டனர். காப்டன் மட்டும் படிக்கட்டுகளின் மீது ஏறிச் சென்று வீட்டின் பெரிய முன் கதவை அடைந்து அதனை ஆராய்ந் தான். நீண்ட புல்வெளியில் சில்வண்டின் ஒலி கேட்டது. பக்கத்தி லிருந்த பைன்மரத்தின் அசைவினால் ஏற்படும் முடிவில்லா சப்தமும்

கேட்டது. வீரர்களில் ஒருவன் மிகச் சோர்வுடன் நகர்ந்தான். அவனுடைய கால்கள் தரையில் பதிந்திருந்த கப்பியில் இடறின. இதற்குள் மனத்தைத் திடப்படுத்திக் கொண்ட காப்டன், சபித்துக் கொண்டே கதவைப் பலமாக உதைத்தான். பெருத்த சப்தத்துடன் கதவு திறந்து கொண்டது. இப்போது வாயிற்படியைக் கடக்க எவ்விதத் தடையுமில்லை.

## II

காப்டன் வேகமாக வெளிக்கதவை உதைத்தபோது, அந்தப் பழைய வீட்டினுள்ளே பகற்பொழுதின் பிரகாசமிக்க ஒளி பாய்ந்தது. அடுத்தபடியாக விரிப்புகள் பரப்பப்பட்டிருந்த கூடமும், உள் வீடு வரை சென்ற நடைபாதையும் அவன் கண்களுக்குத் தெரிந்தன. அக்ரோட்டு மரத்தால் ஆக்கப்பட்ட தொப்பிகள் மாட்டும் 'ஸ்டாண்டும்' பூக்கிண்ணங்களுடன் ஒரு பெரிய பளிங்கு பதித்த மேஜையும், அதன்மேல் இரண்டு புத்தகங்கள் வைக்கப்பட்டிருந்ததும் அவன் கண்களுக்குப் பட்டன. கூடத்துப் பின்பகுதியில் சாம்பல் நிறைந்த பெரிய கணப்பும் இருந்தது.

ஆனால் காப்டனுக்கு நேருக்கு நேராக எதிர்ப்பட்டது ஒரு இளமங்கைதான். கதவு திடீரென்று உதைக்கப்பட்டுத் திறந்தது அவளுக்குப் பெரும் ஆச்சரியத்தை உண்டாக்கியிருக்க வேண்டும். ஏனெனில் அவள் கூடத்தின் நடுவே காப்டனை அகல விரித்த கண்களுடன் இமைகொட்டாது நோக்கியபடி நின்ற இடத்திலேயே அசைவற்றிருந்தாள். தின்பண்டங்களைத் திருடித் தின்றுகொண்டிருக்கையில் பிடிபட்ட ஒரு குழந்தையைப்போல் அவள் அப்போது தோன்றினாள். இன்னது செய்வதென்றறியாமல் கைகளைப் பின்னால் கட்டியபடியே இப்படியும் அப்படியும் அசையப் பார்த்தாள். அவளுடைய கண்களிரண்டும் பயம் நிறைந்த இரு புள்ளிகளென விளங்கின. அழுக்கடைந்த நீல நிற ஆடையுடனும் சிவந்த முகத்துடனும் மஞ்சள் நிற மயிர்க்கற்றையுடனும் தன் முன்னால் நிற்கும் காப்டனை வெறித்துப்பார்த்தாள். ஒளி விட்டுப் பயமுறுத்திய அவனுடைய கத்தியையும் பார்த்தாள்.

இவர்களிருவரும் அசையவில்லை; மௌனமாயிருந்தனர். கொஞ்ச நேரம் வரை ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டே நின்றனர். காப்டன் முகத்தில் தோன்றிய சினம் இப்போது மறைந்ததையும், அதனால் அவன் மனம் கூட சற்றுப் பலவீனப்பட்டதையும் அவன் உணர்ந்தான். முதன் முதலில் இந்த வீடு அவனைத் தடுத்துத் தயங்கவைத்தபடியால் அதனிடம் ஒருவிதக் கடுமையான சீற்றத்தை அடைந்திருந்தான். அவன் மிகுந்த ஜாக்கிரதையுடனும் அச்சத்துடனும் நடந்துகொள்ள வேண்டியிருந்தது. சாதாரணமாகவே அவன் அச்சத்துடன் நடந்துகொள்வதை வெறுத்தான், தைரியமாகவே எப்போதும் இருக்க விரும்



பினான். ஆகையால்தான் கதவை உதைத்துத் திறந்துகொண்டு வெற்றி வீரனைப்போல வீட்டினுள் நுழையவும் தயாராயிருந்தான்.

ஆனால் இப்பொழுது மற்ற விஷயங்கள் எப்படி யிருந்தாலும் ஒன்று அவனை உறுத்தியது. தன்னுடைய ஆடை அழுக்கடைந்திருந்ததும், அவனது வயது தன்னை முதியவன் என்று மற்றவர் எண்ணும்படியாய் அதிகமாகக் காட்டியதுமே அவன் கவனத்தை ஈர்த்தது. மேலும், வியர்வை, தூசி, பயங்கரம் இவையெல்லாம் கலந்து தன் முகம் பொலிவிழந்திருக்கிறதென்ற உணர்ச்சியும் மேலோங்கி நின்றது. ஒரு அடி முன்வந்து “உன்னைப் பயமுறுத்த நான் நினைக்கவில்லை” என்று எதிரில் நின்ற அந்தப் பெண்மணியைப் பார்த்து அவன் பேச்சை ஆரம்பித்தான். ஆனால் அதை அவன் சொன்ன வகை சண்டையில் கர்ஜனையிடுவதைப் போன்று கரகரப்பாகத்தானிருந்தது. தன் குரல் சணல் நாரால் ஆனது போல் அவனுக்குத் தோன்றியது.

பெண்ணின் மூச்சு மெதுவாக வந்தது. நீண்ட விரைவான பெருமூச்சுகளுடன் அவள் ஒரு நாகப்பாம்பைப் பார்ப்பது போல் அவனைப்பார்த்தாள்.

“உன்னைப் பயமுறுத்தவேண்டுமென்ற எண்ணம் எனக்கு இல்லை” என்றான் காப்டன் இரண்டாந்தடவையாக.

கைகள் இன்னும் பின்புறமே கட்டியிருந்த அப்பெண் பின்புறமாகவே நடக்க ஆரம்பித்தாள்.

அவளைத் தொடர்ந்த வண்ணம், “வீட்டில் வேறு யாராவது இருக்கிறார்களா?” என்று கேட்டான். “உன்னைத் தொந்தரவு படுத்த விரும்பவில்லை. ஆனாலும் நாங்கள் கட்டுக்கடங்காத சில கலகக்காரர்களுடன் சண்டை செய்து கொண்டிருக்கிறோம். அவர்களில் சிலர் இங்கு பதுங்கியிருக்கலாமோ என நினைக்கிறேன். என் வரையில் நிச்சயமாக அவ்வாறிருக்குமென நம்புகிறேன். அப்படிப்பட்டவர்கள் யாராவது இங்கே இருக்கிறார்களா?” என்று தொடர்ந்து பேசினான்.

அவனை மற்றும் ஒரு முறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு “இல்லை” என்ற ஒரே வார்த்தையில் பதிலளித்தாள் அந்தப் பெண். பரபரப்படைந்துவிட்டால் சில பெண்களின் கண்கள் தெளிவுடனும் ஒளியுடனும் விளங்குவது ஏன் என்று காப்டன் வியப்புற்றான் அச்சமயம்.

“உன்னைத் தவிர இங்கே வேறு யார் இருக்கிறார்கள்?” இதற்குள் அவள் கூடத்தின் கோடிக்கு நடந்து சென்று விட்டாள். சுவரில் சாய்ந்த வண்ணம் திரும்பி கைகளை இன்னும் பின்னுக்குக் கட்டியவாறே, அங்கேயே நின்றுவிட்டாள். தொடர்ந்து வந்த காப்டனும் அப்படியே நின்றான். அவனுக்குப் பதிலளிக்கையில் அவள் அவனைப் பார்க்கவில்லை. ஆனால் கீழே தரையைப் பார்த்தாள். குரலைச் சரி செய்துகொண்டு “இங்கு வேறு யாரும் இல்லை” என்று விடையளித்தாள்.

" ஒருவரும் இல்லையா ? "
அவளை நிமிர்ந்து நோக்கினாள். அந்தப் பார்வையில் ஒருவிதக்
கெஞ்சும் பாவமிருந்தது. விழுந்து கொண்டிருக்கும் மரங்களிடத்
தும், சரிந்து நெகிழ்ந்து கொண்டிருக்கும் பாறைகளிடமும், கொந்
தளிக்கும் கடலினிடமும் கூட சில சமயங்களில் இரக்கம் காட்டும்
படி மனிதன் வேண்டுகிறான். சிற்சில சமயங்களில் அம்மாதிரி
யிருந்தது இங்கேயும்.
" இங்கு யாருமில்லை " என்று அவள் மீண்டும் உறுதியாகச்
சொன்னாள். ஆனால் அவள் உடல் நடுக்கமுற்றதை அவனால் நன்ரு
கவே காண முடிந்தது.
தன் கைகளைப் பின்புறமே அவள் கட்டிக் கொண்டிருக்கிறாள்
என்ற நினைவு அவனுக்குத் திடீரென்று இப்போது முக்கியமாகப்
பட்டது. முதலில் கண்டவுடன் அவள் நிலையை எண்ணிப்பார்த்த
பொழுது, தவறு செய்து கொண்டிருக்கையில் பிடிபட்ட ஒரு குழந்
தையின் நிலையில் அவள் இருப்பதாகவே எண்ணினான். மேலும்
அவனிடமிருந்து அவள் ஒதுங்கியே நின்றாள். அந்த வீட்டினுள்
யாரோ விரோதி ஒருவனிருக்கிறான். அதை அவள் மிகுந்த பிர
யாசையுடன் மறைக்கிறாள் என்று இப்பொழுது காப்டன் நினைக்க
லானான்.
" உன் கைகளில் என்ன வைத்திருக்கிறாய் ?" என்று அவன்
திடீரென்று ஒரு கேள்வியை வீசினான். அவளிடமிருந்து ஒரு முனகல்
சப்தம் வந்தது. பலம் பொருந்திய கையொன்று அவள் தொண்
டையை நெரித்தாற்போல ஒரு உணர்ச்சி.
" பின்னால் என்ன வைத்துக்கொண்டிருக்கிறாய்?" என்று மறு
படியும் கேட்டான்.
" ஓ ! ஒன்றுமில்லை. நான் பின்பக்கம் ஒன்றும் வைத்திருக்க
வில்லை—உண்மையில் ஒன்றும் வைத்திருக்கவில்லை" என்று அவள்
பதிலளித்தாள்.
" நல்லது, அப்படியானால் உன் கைகளை முன்னால் நீட்டு. சாதா
ரணமாக இருப்பது போல் முன்னால் சரியாக வைத்துக்கொள்வது
தானே ?"
" ஓ! உண்மையில் என் பின்னால் ஒன்றும் வைத்திருக்கவில்லை...
உண்மையில் ஒன்றும் இல்லை."
"நல்லது." அவன் தொடர்ந்தான். பிறகு சற்றுத் தயங்கினான்.
ஒருகணம் சந்தேகத்துடன் நின்றான். இறுதியில் அசட்டுச் சிரிப்
புடன், " நல்லது, எப்படியும் என் ஆட்களை விட்டு வீடு முழுவதும்
தேடச் செய்வேன். உன்னைத் தொந்தரவு செய்வதற்கு வருந்து
கிறேன். ஆனால், எங்களுக்குத் தேவைப்படுபவன் ஒருவன் இங்கே
இருக்கிறான் என்று நான் நம்புகிறேன்" என்று சொல்லிக்கொண்டே
கார்ப்பொரல் பக்கம் திரும்பினான். அவன் வாயிற்படியண்டை
மற்றவர்களுடன் கதவையடைத்து நின்று கொண்டிருந்தான்.
"ஜோன்ஸ், வீட்டை முழுவதும் சோதனை செய்."



அவனைப் பொறுத்தவரையில் அவன் அந்தப் பெண் முன்னிலை
யில் நிலையாக நின்றுவிட்டான். ஏனெனில் அவள் அசையவுமில்லை.
அவள் முதுகுப்புறம் மிகக் கவனமாக வைத்திருக்கும் அந்தப்
பொருளைப் பார்க்க விடவுமில்லை. எனவே அவள் அவனுடைய
கைதி. மற்றவர்கள் வீட்டின் கீழ்தளம் முழுவதிலும் ஆராய்ந்து
தேடினர். அவ்வப்போது காப்டன் அவர்களை நோக்கி, " கக்கூசிலும்,
ஸ்நான அறையிலும் பாருங்கள். ஏதாவது நிலவறை இருக்கின்
றதா பாருங்கள் " என்று எச்சரித்துக் கொண்டிருந்தான். ஆனால்
அவர்கள் ஒன்றையும் காணவில்லை. இறுதியில் எல்லோருமாக
முதல் மாடிக்குச் செல்லும் படிக்கட்டுகளில் ஏறினர்.
ஆனால், அவர்கள் படிக்கட்டை நோக்கிப் பாய்ந்ததைக் கண்டு
அந்தப் பெண் நடுக்குற்று ஒரு கூக்குரலிட்டாள். அந்தக் கூக்குர
லில் தொனித்த பயங்கரமும் அதனுடன் இணைந்திருந்த கெஞ்சுத
லும் அவர்களை அப்படியே நிற்கச் செய்தன. "வேண்டாம், நீங்
கள் மேலே செல்ல வேண்டாம். தயவு செய்து போகவேண்டாம்.
த--ய--வு செய்யுங்கள்—அங்கு ஒருவரும் இல்லை ! உண்மையில்—
உண்மையில்-அங்கு யாருமில்லை என்று நான் உறுதியளிக்கிறேன்.
த-ய-வு செ-ய்-யு-ங்-கள் !" என்று அவர்களை இறைஞ்சினாள்.
இவ்வளவு கெஞ்சியும் தன் அமைதியை இழக்காத காப்டன்
சாவதானமாகத் தன் கீழ் அதிகாரியைப் பார்த்து " ஜோன்ஸ்,
போ, மேலே " என்று உத்தரவிட்டான்.
கடமை உணர்வுள்ள கார்ப்பொரல் முதல் படிக்கட்டில் காலை
வைத்தான். அந்தப் பெண் மற்றொரு கூக்குரலுடன் படிக்கட்டு
களுக்கு ஓடி அவர்களை மேலே ஏறிச் செல்லவிடாது வழிமறித்து
நின்றாள்.
காப்டனைக் கடந்து சென்றபோது அவள் முதுகுப்புறம் கையில்
மறைத்து வைத்திருந்த அந்தப் பொருளை அவன் பார்த்துவிட்
டான். அப்போதிருந்த உணர்ச்சி வேகத்தில் அதைப்பற்றி அவள்
முற்றிலும் மறந்துவிட்டாள். அது ஒரு கைத்துப்பாக்கி.
முதற்படியின்மீது நின்றுகொண்டபடியே ஒரு கையைக்
குறுக்கே நீட்டி அவர்களை மேலே போகவிடாது தடுத்து, மற்றொரு
கையால் கைத்துப்பாக்கியைப் பிடித்துக் கொண்டிருந்
தாள். "வேண்டாம், தயவு செய்து மேலே போகவேண்டாம் !
அங்கு ஒருவருமில்லை—நிச்சயமாக ஒருவருமில்லை — த-ய-வு செய்
யுங்கள் என்று மறுபடியும் இறைஞ்சினாள். பிறகு திடீரென்று
படியை விட்டிறங்கி தரைக்கே வந்துவிட்டாள். பாதுகாப்பின்
றிக் கைவிடப்பட்ட ஒரு குழந்தை போல் நடுக்கமும், குழைவும்
தோன்ற விசும்பி விசும்பி அழத்தொடங்கினாள். கைப்பிடியி
லிருந்த கைத்துப்பாக்கி நழுவிக் கீழே விழுந்தது.
திகைப்படைந்த வீரர்கள் ஆச்சரியத்துடன் தங்கள் காப்
டனைப் பார்த்தபடியே நின்றனர்.
கீழே விழுந்த கைத்துப்பாக்கியைக் காப்டன் குனிந்து எடுத்

தான். ராணுவத்தினர் உபயோகிக்கும் கனமான கைத்துப்பாக்கி அது. ரவைகள் திணிக்கப்பட்டிருக்கவில்லை என்று பார்த்து நிச்சயப்படுத்திக் கொண்டான்.

நடுங்கிக் கொண்டிருந்த அப்பெண்ணின் பக்கம் மெதுவாக நகர்ந்து, மிருதுவான குரலில்—" இந்தக் கைத்துப்பாக்கியை வைத்துக் கொண்டு என்ன செய்யவிருந்தாய் என்பதை எனக்குக் கூறுவாயா ?" என்று கேட்டான்.

ஆனால் பதில் இல்லை.—அந்தக் கேள்வியை அவன் அடிக்கடி கேட்க வேண்டியிருந்தது. கடைசியாக அவள் வாயைத் திறவாமலே " ஒன்றுமில்லை " என்று பதிலளித்தாள்.

" ஒன்றுமில்லையா !" என்று ஆச்சரியத்தினால் காப்டன் அவளை மேற்கொண்டு பேசவைக்கும் எண்ணத்துடன் தூண்டினான். காப்டனின் குரலிலிருந்த கனிவைக் கண்ட கார்ப்பொரல் அதை அடுத்தாற் போலிருந்தவனிடம் சுட்டிக்காட்டுவதுபோல், அவனைப் பார்த்து ஒரு மாதிரியாகக் கண்ணைச் சிமிட்டி ஜாடை செய்தான்.

" உண்மையைச் சொல்லமாட்டாயா ?"

முடியாதென்பதைத் தெரிவிப்பது போல் அப்பெண் தலையை ஆட்டினாள்.

" தயவு செய்து என்னிடம் சொல்லிவிடு !" என்று காப்டன் மீண்டும் வற்புறுத்தினான்.

மௌனமாக நின்றிருந்த வீரர்கள் இப்படி எவ்வளவு நேரம் காத்திருக்க வேண்டியிருக்குமோ என்று வியந்த வண்ணம் அமைதியிழந்து கிடந்தனர்.

" தயவு செய்து என்னிடம் சொல்லமாட்டாயா ?" என்று மீண்டும் காப்டன் அந்தப் பெண்ணைக் கனிவுடன் கேட்டான்.

விசும்பல்களுக்கிடையே விட்டு விட்டு அந்தப் பெண்ணின் உடைந்த குரல் வார்த்தை வார்த்தையாக வெளிவந்தது. " அது என் பாட்டனாருடைய கைத்துப்பாக்கி. அவர்......அவர்......அவர் வீட்டிற்குள் எவன் வந்தாலும் அவனைக் கட்டாயம் சுடப்போவதாகச் சொன்னார். ஆயிரம் பேர் வந்தாலும் அதைப் பற்றி அவர் கவலைப்படமாட்டார். வந்து, அவர் அப்படிப்பட்டவர்தானென்பது எனக்குத் தெரியும். அவர்கள்...அவரைக் கொன்று விடுவார்களோ என்று நான் பயந்தேன். எனவே...வந்து....ஆகையால் இது அவரிடமிருந்தால் ஆபத்து என்று அதை நான் எடுத்து வந்து விட்டேன். நீங்கள்—நீங்கள்—நீங்கள் கதவை உதைத்துத் திறந்த போது நான் அதை மறைத்து வைக்கப் போய்க்கொண்டிருந்தேன்."

இதைக் கேட்டுக் கொண்டிருந்த அந்தச் சிப்பாய்கள் நிமிர்ந்து நின்று ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டனர். அந்தப் பெண் பேச்சை முடித்து விட்டு மறுபடியும் அழத்தொடங்கி விட்டாள்.

காப்டன் தன் புருவத்தைத் தடவிக் கொண்டான். அந்தப்



பெண்ணையே உற்றுப் பார்த்தான். மறுபடியும் புருவத்தைச் சுளித்துக் கொண்டான். சிந்தனை ஒன்றும் ஓடவில்லை. அந்தப் பெண்ணைப் பார்த்து " ஆ ! அப்படியெல்லாம் அழக்கூடாது, அழாதே," என்றான் காப்டன்.

அவன் தன் பூட்ஸுகளைப் பார்த்தபடியே இருந்தான்; அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. மறுபடியும் புருவங்களைச் சுளித்துக் கொண்டான்.

பிறகு, தன்னுடைய கீழ் அதிகாரியான கார்ப்பொரலைப் பிடித்து மற்றவர்களிடமிருந்து கொஞ்ச தூரம் அழைத்துச் சென்று " ஜோன்ஸ், இப்போது நான் என்ன செய்வது என்று தோன்றவில்லை. உனக்கு ஏதாவது புரிந்தால் யோசனை சொல்லு," என்று கேட்டான்.

தன் மேலதிகாரிக்கு யோசனை கூறுமாறு தான் கேட்கப்பட்டதில் ஒருவாறு திருப்தியடைந்த அவன் முகம் ஒளிர்ந்தது. ஆழ்ந்து யோசிப்பவன் போல் இருந்து விட்டுப் பிறகு " நான் கண்ட அந்தச் சாம்பல் நிறச்சட்டை யணிந்த பயல் மேலேதானிருக்க வேண்டும். எப்படியாவது இந்தப் பெண்ணைத் தள்ளிக்கொண்டு மேலே நாம் போகத்தான் வேண்டும். ஏன், நானே இந்தப் பெண்ணைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு மேலே சென்றால் என்ன ?........." என்று சொன்னான்.

அவன் பேச்சை இடைமறித்து " என்ன !" என்று அதட்டலும் ஆச்சரியமும் பொங்க, பற்களைக் கடித்த வண்ணம் பேசினான் காப்டன். கார்ப்பொரலுக்கு முதுகைக் காட்டியபடி, " என்ன ! அந்தப் பெண்ணைக் கரம்பற்றி நீ அழைத்துச் செல்லுவதா ! அவளைத் தொடு, உன் மண்டையைப் பிளந்து விடுகிறேன், பார்," என்று உறுமினான்.

## III

வியப்பு, சோகம், வெறுப்பு எல்லாம் கலந்த பார்வையுடன் கார்ப்பொரல் தன் காப்டனை நோக்கினான். " என்னதானிருந்தாலும் நம்பிக்கை வாய்ந்த மனிதர்களுங்கூட சில சமயங்களில்—துரதிருஷ்டவசமாக நம்பத்தகாதவர்களாக மாறிவிடுகின்றனர்," என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். மறுபடியும் தன் தோழர்கள் இருந்த இடத்தை அவன் அடைந்தபோது காப்டன் அந்தப் பெண் பக்கம் குனிந்து மிக்கக் கனிவுடன் " மாடியை நாங்கள் சோதனை செய்வதை நீ ஏன் விரும்பவில்லை ?" என்று கேட்டுக் கொண்டிருந்தான். அவள் தலை அவளுடைய குவிந்த கைகளில் புதைந்திருந்தது. முடித்திருந்த அவள் கூந்தல் அவிழ்ந்து சிதறி அவள் புயங்களில் புரண்டு கொண்டிருந்தது. " ஏன் என்று எனக்குச் சொல்லக் கூடாதா ?" என்று மேலும் இறைஞ்சினான்.

இப்பொழுதும் கார்ப்பொரல் தன்னை அடுத்திருந்தவனைப் பார்த்துக் கண் சிமிட்டினான்.

'' ஏனெனில்......'' அவள் முணுமுணுத்தாள், '' ஏனெனில்... ...அங்கு ஒருவரும் இல்லை.''

இறுதியாகக் காப்டன் வருத்தத்துடன் கூறினான் : '' அப்படியானால் நாங்கள் மேலே போகத்தான் வேண்டும். இதை நான் அவசியம் செய்தே ஆக வேண்டும்.''

அந்தப் பெண் மறுபடியும் திடீரென எழுந்து நின்று கைகளை நீட்டிக் கெஞ்சினாள். தன் கூரிய பார்வையால் அவனுடைய கண்களை ஆழ்ந்து நோக்கினாள். தன்னை அடித்து வீழ்த்தும் வேடனிடம் கெஞ்சும் புறாவைப்போல '' என்னிடம் இரக்கம் காட்டக் கூடாதா ?'' என்று கேட்பது போல் இருந்தது அவள் பார்வை.

இவர்களிருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு நின்றனர். காப்டனுடைய கால், முதல் படிக்கட்டில் நிலைத்திருந்தது. ஆனால், அவன் அங்கிருந்து பின்வாங்கி விடுவான் போலிருந்தது. வெட்கத்தாலும் வருத்தத்தாலும் நிலைகுலைந்து போயிருந்தான் அவன். அங்கு திரும்பவும் மௌனம் நிலவியது.

அதே சமயத்தில் தான் பரபரப்புடன் ஆனால் மெல்லிய குரலில் கார்ப்பொரல் '' அங்கே பாருங்கள் ; ஜாக்கிரதை !'' என்று மாடிப்படியின் மேல்புறத்தைக் காட்டி காப்டனை எச்சரித்தான்.

எல்லோருடைய கண்களும் படிக்கட்டுகளின் உயர் நிலையையே உற்று நோக்கின. சாம்பல் நிற உடையுடன் ஒரு இளைஞன் அங்கு தோன்றினான். அங்கிருந்தபடியே கீழே இருந்தவர்களைக் கூர்ந்து கவனித்தான். ஒருவரும் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அந்தப் பெண் பரிதாபமாக அழுது கொண்டே '' ஓ ! ஹேர்ரி !'' என்று அவன் மீது தன் பார்வையைத் திருப்பினாள்.

அவன் மெதுவாகப் படிக்கட்டுகளில் இறங்கத் தொடங்கினான். அவனது வலது கை வெள்ளைத் துணியால் கட்டப்பட்டுத் தொங்கிக் கொண்டிருந்தது. துணிக்கு மேலே புதிதாகப் படிந்திருந்த ரத்தக் கறைகள் செவேலென்று தெரிந்தன. அவனுடைய முகம் வெளுத்துப்போய் விறைத்திருந்தது. கண்கள் சுடர்விட்டன. அந்தப் பெண் மறுபடியும் துக்கமிகுந்து தேம்பிக்கொண்டிருந்தாள். நீல உடையணிந்திருந்த சிப்பாய்களை நோக்கி மெதுவாக இறங்கி வந்து கொண்டிருந்தான் அந்த இளைஞன்.

கீழிருந்து ஆறு படிகளுக்கு மேல் நின்றுகொண்டு '' என்னைத் தான் நீங்கள் தேடிக்கொண்டிருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்,'' என்றான் அமைதியுடனேயே.

அந்தச் சிப்பாய்கள் கூட்டமாகச் சற்றே முன்வந்தாலும், பூனைகளைப் போன்று பதுங்கி அவனையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தனர். காப்டன் அசையாது நின்றவிடத்திலேயே நின்றிருந்தான். தலையை ஆட்டிய வண்ணம் அந்த இளைஞனின் வினாவுக்கு '' ஆமாம் '' என்று பதிலளித்தான்.



சாம்பல் நிற உடையணிந்திருந்த அந்த இளைஞன் அந்தப் பெண்ணைப் பார்த்தான். பார்த்து விட்டு, அதே அமைதியான குரலில் '' என்னைத் தேடிவந்திருக்கையில் என் சகோதரியை அவமானப்படுத்தியதற்கு ஏதாவது காரணம் இருக்கிறதா ?'' என்று கேட்டான். பொங்கியெழுந்த சினத்தைப் பிரயாசையுடன் அவன் அடக்கிக் கொண்டிருந்தான் என்பது தெரிந்தது.

இந்தச் சொற்கள் வெளிவந்தபொழுது அப்பெண் சாம்பல் நிற உடையணிந்தவனுக்கும், நீல நிற உடையணிந்திருந்த அதிகாரிக்குமிடையே துணிச்சலுடன் குறுக்கிட்டாள். "ஓ ! இல்லை......ஹேர்ரி......ஒன்றுமில்லை. அவர் என்னிடம் மரியாதையாகவேதான் நடந்து கொண்டார். அவர் என்னிடம் கௌரவமாகத்தான் நடந்து கொண்டார் ஹேர்ரி. உண்மையில் மரியாதையுடன்தானிருந்தார்" என்று பதற்றத்துடனும் அவள் வலியுறுத்தினாள்.

காப்டன் தன் பூட்ஸ் காலைப் பார்த்தவண்ணம் இன்னும் முதற்படியிலேயே அசையாது நின்று கொண்டிருந்தான். இளைஞன் நிமிர்ந்த வண்ணம் படிக்கட்டுகளின் வழியே மேலும் இரண்டு படிகள் இறங்கினான். அவள் தொடர்ந்து, "ஓ! ஹேர்ரி! ஓ ஹேர்ரி!" என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தாள். அவள் இருவருக்கும் இடையில் நின்றபோது இருவரையுமே தன் கையால் தொடக் கூடிய அளவு அருகில் இருந்தாள். அந்த இளைஞன் காப்டனை வெறித்து நோக்கினான். முதலில், அந்தப் பெண்ணின் தோளின் வலது புறத்திலிருந்து எட்டிப் பார்த்தான். பிறகு தோளின் இடது புறத்திலிருந்து பார்த்தான். கணீரென்ற குரலில், அவன் சொன்னான், '' நீ ஆயுதம் வைத்திருக்கிறாய் ; காயமுற்றிருப்பதாயும் தெரியவில்லை. ஆனால் நானோ ஆயுதங்கள் ஒன்றுமில்லாதவன் ; காயமுற்றுச் செயலிழந்திருக்கிறேன். ஆனால் ...''

இதைக் கேட்ட காப்டன் ஓரடி பின்னால் நகர்ந்து தன்னுடைய உருவிய கத்தியை உறையில் இட்டான். இருவ டைய கண்களும் நெருப்பைப்போல் ஒளிர்ந்தன. ஆனால் காப்டனின் முகத்தில் கோபமிருக்கவில்லை. அவன் பேசினான், ''நீ தவறாக ஏதோ எண்ணிவிட்டாய் என்று நினைக்கிறேன். நீ இவ்வாறு கூறுவதற்கு...'' என்று தொடர்ந்த காப்டனை முடிக்க விடவில்லை அந்த இளைஞன்.

'' நீ பொய் சொல்லுகிறாய் '' என்று இரைந்தான்.

காப்டன் தொண்டையைக் கனைத்துக் கொண்டான். தனியானதும், பயங்கரமானதுமான பார்வையை அவன் அந்த இளைஞன் மீது செலுத்தினான். அவன் கூறிய அந்த இரண்டு வார்த்தைகள் உடைந்த கண்ணாடிபோல் அங்கு ஒலித்தன. எனினும் காப்டன் தனது மெல்லிய குரலில் '' நீ இப்பொழுது கூறியவற்றின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு சொன்னாய் என்றே நான் நினைக்கவில்லை.''

காப்டனுடைய கையின்மேல் அவனையறியாது அப்பெண்ணின்

விரல்கள் பதிந்திருந்தன என்பதை உணர்ந்தான். இனிமேலும் தன்னால் தனியாக அப்படிக்கட்டின் மீது நின்றுகொண்டிருக்க முடியாது என்பதைப் போல் அவள் சுவரில் சாய்ந்துகொண்டிருந்தாள். ஆனால், அந்த விரல்கள்—அவனிடம் எவ்வித உணர்ச்சியையும் உண்டாக்கவில்லை. அவள் மீண்டும் முணு முணுத்தாள். "ஓ! ஹேர்ரீ! அவரை ஒன்றும் செய்யவேண்டாம்; அவர் என்னிடம் மரியாதையுடனே நடந்து கொண்டார்; உண்மையில் அவர்..."

அந்த இளைஞன் முன்னால் வந்து நின்று விடுவதுபோல் கார்ப்பொரல் சற்று முன்னே வந்தான். ஏனெனில், காப்டனின் மேல் அந்த மெல்லிய விரல்களைப் பார்த்தான். அத்தகைய சமயங்களில் மிகவும் மனோ உறுதி வாய்ந்தவர்கள்கூட தங்கள் வலிமையிழந்து கைகால்கள்கூட செயலிழந்து போகும் நிலையை அடைந்து விடுவது சகஜம்தான் என்பது அவனுக்குத் தெரியும்.

ஆனால் அதுவரையில் விறைப்புடன் நிமிர்ந்து நின்றுகொண்டிருந்த அந்த இளைஞன் திடீரென்று வலுவிழந்தவன் போலத் தோன்றினான். பெருமூச்சு விட்டுக்கொண்டே படிக்கட்டுகளின் கைப்பிடிச் சுவர்களைப் பற்றிக் கொண்டான். அவன் காப்டனைப் பார்த்துக் கொண்டிருந்தான். மனத் தைரியத்தையெல்லாம் ஒன்று சேர்த்துத் தன்னுடைய வலிவிழந்த நிலையினைச் சமாளித்தான். அந்தக் கார்ப்பொரல் பட்டவர்த்தனமாகவே அவனைப் பார்த்து, "நீ என்ன முட்டாளா? அப்படி ஒன்றும் காரியம் செய்து விடாதே" என்று சொன்னான். அதற்குப் பதில் அந்த இளைஞன் அவனைப் பார்த்த பயங்கரப் பார்வையில் அந்தக் கார்ப்பொரல் விலங்கிடத் தயாராயிருக்கும் சிறுவனைப் போன்று பின் வாங்கினான்.

அந்தப் பெண் காப்டனிடம் கெஞ்சிக் கொண்டிருந்தாள். "அவனைத் துன்புறுத்தமாட்டீர்களே? தான் சொல்வதை எல்லாம் அவன் உணர்ந்து சொல்லவில்லை. அவன் காயமடைந்திருக்கிறான் என்பது உங்களுக்குத் தெரியும்; தயவு செய்து அவனைப் பொருட்படுத்தாதீர்கள்."

"நான் அவனைத் தொடமாட்டேன்; அவனைப்பற்றியொன்றும் கவலைப்படாதே; நான் அவனைத் தொடவேமாட்டேன்" என்று அசாதாரணமான பரிவுடன் காப்டன் அவளுக்குப் பதிலளித்தான்.

பிறகு, அவளைப் பார்த்தான்; அவள் திடீரென விரல்களை அவன் கைகளிலிருந்து எடுத்துக்கொண்டாள்.

படிக்கட்டின் மேல் தட்டையே பார்த்துக் கொண்டிருந்த கார்ப்பொரல் வியப்புடன், "அதோ, அவர்களில் மற்றொருவன் வருகிறான்," என்று காப்டனுக்கு மற்றொரு எச்சரிக்கை விடுத்தான்.

ஒரு கிழவர் கைகால்களை அசைத்துக் கொண்டு படிகளில் இறங்கி வந்து கொண்டிருந்தார். ஒரு தடியை பயங்கரமாக



ஆட்டிக்கொண்டிருந்தார். "என் வீட்டைவிட்டு வெளியேறுங்கள்; திருட்டுப்பயல்கள்; வெளியேறுங்கள். என் வீட்டு வாயிற்படிக்குள் எப்படி அடியெடுத்து வைக்கலாம்? வெளியேறுங்கள்" என்று அவர் கர்ஜித்தார். வார்த்தைகள் உணர்ச்சிப் பெருக்கால் சரிவர வரவில்லை. தலையை மட்டும் ஆட்டி ஆட்டிப் பேசினார். முடிந்தால் அவர்களைத் தாக்க வேண்டும் என்றுதான் அவர் விரும்பினார் என்பதில் சந்தேகமில்லை.

ஆக அந்த நிகழ்ச்சி—எட்டுத் துப்பாக்கி வீரர்கள் சூழ ஆயுதபாணியாயிருந்த ஒரு வீரமிக்க காப்டனை, கைத்தடி மட்டும் வைத்துக்கொண்டிருந்த ஒரு கிழவரிடமிருந்து ஒரு இளம்பெண் காப்பாற்றவேண்டியிருந்தது என்ற நிலைமை அங்கு நிலவியது. அந்தக் காட்சி அப்படிப்பட்டதாகத்தானிருந்தது.

காப்டனுடைய நெற்றிப் பொட்டும் இமையும் துடித்தன. அவன் வெறி கொண்டிருந்தான். அந்தப் பெண்ணினுடைய முயற்சிகளையும் மீறி திடீரென அந்தக் கிழவரைப் பார்த்தான்.

"இங்கே பாருங்கள். நாங்கள் இங்கே வந்தோம்; எதற்காகத் தெரியுமா? நாங்கள் காட்டுக்கு அப்பால் சண்டை செய்துகொண்டிருந்தோம்; எதிரிகளில் ஒருவன், அதிலும் சாம்பல் நிறச் சட்டையணிந்தவனை ஜன்னல் வழியாகப் பார்த்தவுடன், இங்கே பதுங்கியிருக்க வேண்டும் என்று எண்ணினோம். ஆனால், இந்த இளைஞன் காயமடைந்திருக்கிறான்; அவனுக்கு நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. அவனைப் போன்றவர் வேறு யாரும் மேலே இல்லை என்பதைக் கூட நான் இப்போது ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். நாங்கள் பார்த்தபடியே பாழாய்ப் போன உங்கள் பழைய வீட்டை விட்டு நாங்கள் வெளியேறி விடுவோம்; எனவே எங்களைத் திருடர்கள் எனக் குற்றம் சாட்டவேண்டாம். உங்களைக் காட்டிலும் மோசமான திருடர்களாகவோ, அயோக்கியர்களாகவோ நாங்கள் இல்லை" என்று மிகத் தெளிவாகப் பேசினான்.

கிழவர் இரைந்தார். "இந்த வீட்டில் என்ன இருக்கிறது, பாருங்களேன். ஒரு பசு மாடோ, ஒரு பன்றியோ அல்லது ஒரு கோழிக்குஞ்சோ இல்லை; எவ்வளவு எடுத்துச் செல்ல முடியுமோ அவ்வளவையும் உங்கள் வீரர்கள் சூறையாடிவிட்டனர். என்னுடைய வேலியிற் பாதியை அவர்கள் விறகுக்காக வெட்டி எடுத்துச் சென்றுவிட்டனர். சனியன் பிடித்த உங்கள் ஆட்கள் இன்று பிற்பகல் கூட என் ஜன்னல் கண்ணாடிகளை உடைத்து விட்டார்கள்."

அந்தப் பெண் திக்கித் திக்கிப் பேசித் தன் பாட்டனாரின் கோபத்தைச் சாந்தப்படுத்த முயன்று கொண்டிருந்தாள். "தாத்தா! ஓ! தாத்தா! வேண்டாம்!" - அவள் இறைஞ்சினாள்.

காப்டன் அந்தப் பெண்ணைப் பார்த்தான். கிழவரின் தோள்களின் பின்னால் மறைந்து கொண்டிருந்த அப்பெண் அங்கிருந்தே காப்டனையும் பார்த்தாள். ஒரு கணம் அவள் முகத்தை ஆராய்ந்த பின் அவன் சொன்னான், "நல்லது; நாங்கள் போகிறோம்."

கதவை நோக்கி நடந்தான். அவன் கீழ்ப்படிதலுள்ள தோழர்களும் ஒலியெழுப்பிய வண்ணம் பின்தொடர்ந்தனர்.

அதே சமயம் ஓடிவரும் காலடி ஓசையும் கொடுமையான சப்தமும் வெளியிலிருந்து கேட்டன. கதவு திறந்தது. நீல உடையணிந்த வீரர்கள் உள்ளே நுழைந்தனர். அவர்கள் முன்னர் லெப்டினன்ட் வந்தான். "ஓ! இங்கேயா இருக்கிறீர்கள்?" மூச்சைப்பிடித்துக்கொண்டு அவன் கத்தினான். "உங்களைக் காணவில்லையே என்று நாங்கள் பயந்தோம்.... அதோ, அந்தப் பெண்ணைப் பாருங்கள்!"

உடனே காப்டன் குறுக்கிட்டு "முட்டாளே! வாயை மூடு" என்று லெப்டினன்டை அடக்கினான்.

அவர்கள் அப்படியே நின்றனர்; வீட்டிற்கு வெளியே கேட்ட குளம்படிச் சப்தங்கள் மெதுவாகக் குறைந்தன.

"குதிரைகளை வரிசைப்படுத்தினாயா?" என்றான் காப்டன்.

"ஆம்! நாங்கள் நினைத்தோம் ......"

"பரவாயில்லை. இங்கிருந்து புறப்பட்டு விடுவோம்" என்றான், காப்டன் முகத்தைச் சுளித்துக்கொண்டு.

அவர்கள் வெளியேறத் தொடங்கினர். சாம்பல் நிற உடையணிந்திருந்த இளைஞன் இன்னும் படிக்கட்டிலேயே அசையாது நின்று கொண்டிருந்தான். அவன் இப்பொழுது இரண்டாவது மாடிக்கு ஏறிக்கொண்டிருந்தான். அந்தக் கார்ப்பொரலைப் பார்த்து அந்தக் கிழவர் இரைந்தார். "இங்கு ஒரு கோழிக் குஞ்சு கூட பாக்கி இல்லை."

"நல்லது, நான் அவைகளை எடுக்கவில்லை அல்லவா?"

"இல்லை. ஒருவேளை நீ எடுக்காமலிருக்கலாம்; ஆனால் ..."

காப்டன் கூடத்தைக் கடந்து அந்தப் பெண் முன் ஒரு குற்றவாளியைப் போன்று நின்றான். "என் மேல் உனக்குக் கோபம் இருக்காது இல்லையா?" பயந்த பாவத்துடன் அவன் கேட்டான்.

"இல்லை." அவள் கூறினாள். ஒரு கணம் தயங்கி நின்ற அவள் திடீரென தன் கரத்தை நீட்டினாள். "நீங்கள் என்னிடம் மிகவும் அன்பாக இருந்தீர்கள். நான் உங்களுக்கு மிகவும் கடமைப் பட்டிருக்கிறேன்."

அவள் கரத்தை எடுத்துக் கொண்ட காப்டன் வெட்கத்தினால் முகம் சிவந்தான்; ஏனெனில் அந்த நிலைக்குப் பொருத்தமாக ஒரு சொற்றொடர் கூட முறைப்படுத்திக் கூற அவனால் இயலவில்லை.

அந்த வேளையில் பற்றியிருந்த அந்தக் கரத்தை அவன் ஒன்றும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

உடனே, அவன் பிடியைத் தளர்த்தினான்; ஏனெனில் அறிவுடன் ஒரு வார்த்தைகூடப் பேசாது அதைப் பற்றியிருக்க அவன் வெட்கப்பட்டான். இறுதியில் அணிவகுக்கப்பட்ட ஒரு படைக்கு உத்தரவு அளிப்பது போல் "நான் எது வேண்டுமானாலும் செய்



வேன்; ஆனால் உன்னைத் துன்பப்படுத்தவோ, பயமுறுத்தவோ மாட்டேன்" என்று கூறினான்.

அவனுடைய புருவம் வியர்த்திருந்தது. தூசி படிந்த முகமும் அழுக்குப்படிந்த உடையும் அணிந்திருக்கிறோம் என்ற உணர்வு அவனை விட்டகலவேயில்லை.

அவள் கூறினாள், "ஓ! வேறெவருமில்லாது நீங்களாயிருந்தீர்கள். அதில் மகிழ்ச்சி. வேறு யாராவதிருந்தால் பாட்டனாரையும் அண்ணனையும் நிச்சயம் காயப்படுத்தியிருப்பார்கள்."

அவன் அவளிடம் கூறினான், "என்ன காரணம் இருந்தாலும் தாக்கியிருக்கமாட்டேன்."

சிறிது நேரம் மௌனம் நிலவியது அங்கே.

"நல்லது, நான் போய் வருகிறேன்" என்று அவன் இறுதியில் அவளிடம் கூறி விடைபெற்றுக்கொண்டான்.

"சென்று வாருங்கள்" என்று அவளும் விடையளித்தாள்.

கார்ப்பொரல் சென்றபின் அவனையே திட்டிக்கொண்டிருந்த கிழவரைக் கடந்து அவன் சென்றான். காப்டன் திரும்பிப் பார்த்தான். அங்கே அவனைப் பார்த்துக் கொண்டே அவள் நின்றிருந்தாள்.

தாரையொலி கேட்டு குதிரைகளின் பின்னால் நின்றிருந்த வீரர்கள் கடிவாளத்தை விரைந்து சரி செய்தனர். லெப்டினன்ட் முதல் சார்ஜண்டை நோக்கி வினவினான்: "வில்லியம்ஸ், அவர்கள் இருவரும் இதற்கு முன் சந்தித்திருக்கிறார்களா?"

"யாருக்குத் தெரியும்?"

"தெரியாவிட்டால் சரி. ஒரு வேளை........" என்று அவன் இழுத்தான்.

ஜன்னல்களில் ஒன்றில் ஒரு திரை அசைவதைக் காப்டன் பார்த்தான். அணியின் முதலாவதிருந்த அவன் குதிரையைத் திருப்பி இரண்டு புஷ்பப் பாத்திகளுக்கு நடுவில் வந்து நிறுத்திவிட்டு "நல்லது! போய் வருகிறேன்" என்றான்.

அணி மெதுவாக ஊர்ந்தது.

"சென்று வாருங்கள்" என்றாள் கடைசி முறையாக அந்த பெண் காப்டனைப் பார்த்து.

அவர்கள் கை குலுக்கிக்கொண்டனர்.

அவளிடம் ஏதோ மிகவும் முக்கிய செய்தி சொல்ல அவன் நினைத்தது போல் தோன்றியது; ஆனால் அவனால் அதைச் சொல்ல முடியவில்லை. அவன் பெரு முயற்சி செய்து தான் பார்த்திருந்தான்; பலனில்லை. அந்தப் பெரு வீரன் திடமனத்துடன் அவ்விடம் விட்டகன்றான். அவனைச் சுமந்து சென்ற குதிரைகூட ஏதோ விஷயத்தை ஒருவாறு புரிந்து கொண்டதைப் போல அவனுடைய தோள்களுக்கும்மேலே திரும்பி அப் பெண்ணை ஒருதரம் பார்த்தது.

காப்டன், வீட்டு முன் பக்கத்திலிருந்த பைன் மரத்தைப் பார்த்துப் பார்த்து ஏங்கினான். அந்தப் பெண்ணோ புல் வெளி

-யையே வெறித்து நோக்கிக் கொண்டிருந்தாள். இறுதியில் காப்டன் தழுதழுத்த குரலில் "நான் உன்னை மறுபடியும் காண்பேனோ என்னவோ? முடியாது போல் தோன்றுகிறது. ஊஹூம்...முடியாது!" என்றான் ஏக்கத்துடன்.

பயத்துடன் அவனைப் பார்த்த அவள் ஜன்னலிலிருந்து பின்னுக்கு நகர்ந்துகொண்டாள். அவனுடைய வினாவிற்கு இத்தகைய வருத்தந் தோய்ந்த வரவேற்பை அவன் எதிர்பார்த்ததைப் போல் காணப்பட்டான். அவன் அவளை வேண்டிக்கொள்ளுவது போல் நோக்கினான்.

அவள் சொன்னாள்; "ஆமாம்; முடியாதென்றுதான் நினைக்கிறேன். எங்கே சந்திக்கப் போகிறோம்?"

"என்றைக்குமே முடியாதா?"

"முடியாது. அது சாத்தியமில்லை. ஏனென்றால் நீங்கள்—நீங்கள் ஒரு வடக்குப் பிராந்தியத்தைச் சேர்ந்தவர்."

"ஓ! அது எனக்குத் தெரியும். ஆனால்..." அவன் தொடர்ந்தான், "நல்லது—ஒரு நாள்—தெரிகிறதா? இனிமேல் சண்டையே இல்லை என்ற பிறகு......நாம்......" என்று அவன் ஆரம்பித்தான். ஆனால் அவள் மறுபடியும் ஜன்னலுக்குட்புறம் மறைந்ததை அறிந்த அவன், "நல்லது, போய் வருகிறேன்" என்று கடைசி முறையாக விடைபெற்றுக்கொண்டான்.

அவளது விரல்களை அவன் பற்றியிருந்தபோது அவள் தலை குனிந்தாள்; அப்பொழுது அவள் கழுத்திலும், கன்னக் கதுப்புகளிலும் வெட்கத்தாலுண்டான சிவப்பு படர்வதைக் கண்டான்.

"நான் உன்னை இனிமேல் என்றும் காணமுடியாதா?"

அவள் பதிலளிக்கவில்லை.

"என்றைக்கும் முடியாதா?" அவன் மீண்டும் கேட்டான்.

நெடுநேரத்துக்குப் பின் மென்மையான குரலில் அவளிடமிருந்து வார்த்தைகள் வெளிப்போந்தன. அதைக் கேட்க அவன் ஜன்னல் பக்கம் குனிந்தான். "சில வேளைகளில்—சுற்றுப்புறத்தில் படைகளின் நடமாட்டம் ஒன்றும் இல்லாத சமயங்களில்—பிற்பகற் பொழுதுகளில்—அதோ தூரத்தில் தெரியும் பெரிய 'ஓக்' மரம் வரை நான் செல்வதை என் தாத்தா தடுக்க மாட்டார்" என்று அவள் மொழிந்தாள்.

காப்டனுடைய பிடிப்பு வலுமிக்கதாக இருந்திருக்க வேண்டும்; ஏனெனில் அவனது பிடியில் தன் விரல்கள் துண்டு துண்டாக ஒடிந்துவிட்டன போன்று அவள் வியப்புடனே எண்ணியிருந்தாளோ என்னவோ அவற்றைப் பார்த்துக் கொண்டாள். அவன் புறப்பட்டான்.

குதிரை ஒரு செடியைத் தாண்டி வந்தது. அது ஓடத் தயாராகவிருந்த தருணத்தில் அவள் பயத்தால் தாக்குண்டவள் போலக் கூக்குரலிட்டாள்.



காப்டன் முரட்டுத்தனமாகக் குதிரையை நிறுத்தினான். திரும்பி விரைந்து புஷ்பச் செடியின் அருகில் நேராக வந்தான்.

அவள் கைகளைத் தட்டிக் கூப்பிட்டுக் கொண்டிருந்தாள்; அவள் கண்களில் அவனைக் கெஞ்சும் பாவனை தென்பட்டது. "ஓ! தயவு செய்து நான் சொன்னதை நம்பாதீர்கள். நான் என்றும் அந்தப் பெரிய 'ஓக்' மரத்திற்கு வரமாட்டேன்; உண்மையில் என்றைக்கும்—நான் என்றைக்கும் அங்கு வரப்போவதில்லை," என்றாள் அவள்.

இதைக் கேட்ட காப்டனின் கை தளர்ந்தது. பிடித்திருந்த கடிவாளம் நழுவியது. காப்டனுடைய உருவமே மங்கி விட்டது போன்றிருந்தது. கொஞ்சமும் உற்சாகமில்லாத உணர்வோடும், வருத்தத்தோடும் இருண்ட பச்சை மர வரிசைகளையும், அவற்றைத் தொட்டு நின்ற வானத்தையும் நோக்கினான். நெடுநேரமாகக் கொட்டத் துடித்துக் கொண்டிருந்த மழை வருத்தம் நிறைந்த சப்தத்துடன் சொட்டுச் சொட்டாகக் கீழே விழுந்தது. அங்கு நிசப்தம் நிலவியது.

இறுதியில் ஒரு மெல்லிய குரல் ஒலித்தது. "நல்லது—நான்—சில சமயங்களில் நான்—ஒரு வேளை—ஆனால்—நீண்ட நாட்களில் எப்போதாவது ஒரே ஒரு முறை-நான் அந்தப் பழைய மரத்தடிக்கு வருவேன்—பிற்பகற் பொழுதுகளில்" என்ற வார்த்தைகள் காப்டனின் காதுகளில் அமிர்தமென விழுந்தன.

# போர் முனையும் குழந்தையும்

மலையின் சரிவுப் பாதை வழியே இறங்கிக் கொண்டிருந்த குடியானவர்கள், பயத்தின் மிகுதியால், தாங்கள் ஓட்டிச் சென்ற மந்தையின் ஆடுகளை எண்ணக் கூடத் திறமையற்றிருந்தனர். தனித்தனி வட்டமாகத் தெரிந்த மந்தைகளின் கணக்கு மட்டுமே அவர்களுக்கு அந்தச் சமயத்திற்குப் போதுமானதாயிருந்தது. முன்பு மூன்று ஆடுகளிருந்த இடத்தில் இப்போது இரண்டு ஆடுகள் இருந்தாலே அவர்கள் திருப்தியடைந்தனர். ஒன்று குறைந்து விட்டதே என்று அவர்கள் கவலை கொள்ளவே இல்லை. மந்தை விஷயத்தில்தான் இப்படி என்றிருக்கவில்லை. மற்றப் பொருள்களிலும் கூட இதே போலத்தான். நஷ்டமான பொருள்களைப் பற்றியோ, பின்னால் விட்டு வந்த வஸ்துக்களைப் பற்றியோ அவர்கள் சிந்திக்கவே இல்லை. உலர்ந்த புல்லைத் தின்பதற்காக ஒரு

வெள்ளாடு சற்றுப் பின்தங்கியது. அதன் சொந்தக்காரன் பெருங்குரலில் அதை ஓட்டிக் கொண்டும், கழுதைகளைக் கம்பால் அடித்துக் கொண்டும் முன்னால் போய்க் கொண்டிருந்தான். காரணமின்றி பீதியடைந்த ஒரு ஆண் குதிரைக் குட்டி குன்றுப்புறமாக ஓடத் தொடங்கி விட்டது. அதை அப்படியே ஓடிச் செல்ல விட்டு விட்டனர். எவ்வளவு பொருள்களை இழந்து விட்டனர் என்று அப்போதைக்கு முடிவு கட்ட முடியாது. அவர்கள் அதைப் பொருட்படுத்தவுமில்லை, கவனிக்கவுமில்லை. பயம்; பயம்; பயம் ஒன்றுதான் அவர்களை அப்போது விரட்டிக் கொண்டிருந்தது. பெருக்கெடுத்தோடும் நதியில் சுழல் ஒன்றின் மீது தவழ்ந்து ஓடுவது போன்று, இந்த மனிதப் பிரவாகம் ஒழுங்கையிழந்து, மிருகம் மனிதன் மீதும், மனிதன் மிருகத்தின் மீதும் தடுமாறி விழுந்தவாறே முன்னேறிக் கொண்டிருந்தது. காட்டுப் பிரதேசத்தில் வெட்டி வீழ்த்திய மரங்கள் சாய்வது போலும், குன்றுகளிலிருந்து பாறைகள் உடைந்து விழுவதுபோலும் இம்மந்தைகளும் மனித வெள்ளமும் பள்ளத்தாக்கின் சமவெளியை நோக்கித் தடங்கலின்றிப் போய்க்கொண்டிருந்தன. உயரமான மலையின் சரிவில் பாய்ந்தோடும் மலையருவி போல இம்மானிட வெள்ளம் நிலத்தின் ஊடே ஒரு நீலக்கோடு போலத் தோன்றியது. ஆனால் இந்த அருவியில் அடித்து வந்ததுதான் என்ன? ஆயிரக்கணக்கான குடும்பங்கள், மனிதர்கள், பெண்கள், குழந்தைகள், மிருகங்கள் உட்பட யாவும் இந்தப் பயம் என்னும் சுழலில் சிக்கித் தத்தளித்துச் சென்றன. பல்வேறு பாஷைகளில் அவர்கள் பேசிக்கொண்டனர். ஒரே இரைச்சல்தான் கேட்டது. கீச், கீச்சென்னும் ஓசைகள், உளறும் சொற்கள், தொண்டை கம்மிய குரல்கள், பெருமூச்செறிந்த அலுப்பு,—இவைதாம் அங்கெழுந்த ஒலி. வானத்தில் அவர்கள் அவ்வப்போது கைகளை வீசி வீசிப் பேசியது, அவர்களுடைய கவலைகளை எழுதிக் காட்டுவது போலிருந்தன. ஆமாம், காற்றில் எழுதிய எழுத்துக்கள்!

அவர்களுக்கு முன்னால் வெகு தூரத்தில் நீல நிற வளைகுடா, கப்பல்களுடன் தெரிந்தது. அவர்களுக்கு எதிரில் அச்சமவெளியில் வெண்ணிற நகரம், தட்டையாக அமைதியுடன் காட்சியளித்தது. வானத்தில் பறந்து கொண்டிருக்கும் பறவைக்கு நிலப்பரப்பின் அமைதி தெளிவாகத் தெரிவதுபோல இந்த மனித வெள்ளத்தில் கூட ஒருவித அமைதி நிலவியது தெரிந்தது. ஆம், ஏதோ ஒரு பாதுகாப்பான இடத்துக்கு அவர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள் அல்லவா? எங்கேயுள்ளது அந்த இடம்? அவர்களுக்கே தெரியாது நிச்சயமாக. எனினும் இந்தச் சமயம் இம் மலை உச்சியில், பத்தாயிரம் உள்ளங்களில் பதிந்து கிடந்த வருத்தத்தையும் கடந்து பரந்த ஒரு உலகம் நிலைத்து நிற்கிறது என்ற உண்மையைக் காண முடிந்தது. நீல வானம் வில்லென வளைந்திருந்தது. பள்ளத்தாக்குகளினின்று கம்பீரமாக நிமிர்ந்து நின்ற மலைகளுக்குக் கூட,



பயத்தினால் ஓடிக்கொண்டிருக்கும் இந்த ஜனத்திரள் ஒரு அற்பப் பொருளாகவே தோன்றிற்று. கடலும், வானமும், குன்றுகளும் கூட இந்தத் துன்ப வெள்ளத்தை ஒரு பொருட்டாக எண்ணியதாகத் தெரியவில்லை.

வானவெளியில் மேகத்தினூடேயிருந்து கீழே இந்த ஜனத்திரளை ஒருவனோ ஒருத்தியோ பார்த்தால் அக்கூட்டத்திலிருந்த ஒவ்வொருவனும் தன் துக்கத்தை விட மற்றவனது துக்கத்தையே பெரிதாக மதித்தது போலத் தென்பட்டிருக்கும். ஒரு சிறு குழந்தை அழுதால் கூட, பக்கத்தில் யாருக்கோ நிகழ்ந்து கொண்டிருந்த துன்பத்திற்காகத்தான் அழுதது. இந்த அகதிகள் எழுப்பிய துக்கம் நிரம்பிய இசையில், அடிக்கடி உணர்ச்சியற்ற நாதங்களும் ஒலித்தன. பயம் அவர்களுடைய உணர்ச்சிகளை மங்கச் செய்திருந்தது. அவர்கள் பயத்தில் ஆழ்ந்திருந்தனர். அந்தச் சமயத்தில் ஒருவனை ஊசியால் குத்தினால் கூட அவர்கள் சப்தமெழுப்பமாட்டார்கள்.

அவர்கள் சென்ற பாதை அங்கங்கே தடைப்பட்டு நின்றது. அந்த இடங்களிலே ஆடுகள் தங்களிஷ்டம்போல் திரும்பித் திரும்பிச் சென்றன. அவை சென்ற வழியே பாதையாக்கியது.

இந்த ஜனத்திரள் எல்லாம் ஒரே திசையில் போய்க் கொண்டிருந்தது; இல்லை, ஓடிக்கொண்டிருந்தது; தங்களது வீடுகளுடனும் நிலபுலங்களுடனும் தங்களைப் பிணைத்திருந்த தொடர்பை அறுத்துக்கொண்டு ஓடிக்கொண்டிருந்தது. இதை எதிர்நோக்கி ஓர் இளைஞன் மிக விரைந்து மலைமீது நடந்து கொண்டிருந்தான். அந்தச் சமயம் விரைந்து ஓடிவரும் மந்தைகளுக்கும் மனிதர்களுக்கும் வழிவிட்டு, அடிக்கடி பாதையோரம் ஒதுங்க வேண்டியிருந்தது. தனக்கெதிர்ப்பட்ட ஒவ்வொன்றையும் கிளர்ந்தெழுந்த உள்ளத்தோடும் இரக்க உணர்ச்சியுடனும் கவனித்தான். பைத்தியம் பிடித்தவர்கள் போன்று தோன்றிய சிலரைப் பார்த்து எச்சரிக்கை விடுத்தான். சிலைபோல உணர்ச்சியற்ற சிலரைக் கண்டு வெறித்து வெறித்துப் பார்த்துக் கொண்டான். அவர்களில் பெரும்பான்மையினர் குன்றுகளிலிருந்து சரிந்து விழுந்த பெரும் பாறைகளைப் போல் உணர்ச்சியற்ற முகங்களுடன்தான் காணப்பட்டனர். அவர்களையெல்லாம் கனிவுடன் கண்ட அவனுக்கு அவர்கள் பால் துக்கமும் கருணையும் ஓங்கி நின்றன.

ஒருமுறை பின்னால் திரும்பிப் பார்த்தான். இவன் சென்ற அதே திசையை நோக்கி லெப்டினன்ட் என்னும் பதவியிலுள்ளவன் ஒருவன் தன் ராணுவ உடையில் வருவதைக் கண்டான். தன் உள்ளத்தில் குழம்பிக்கொண்டிருந்த உணர்ச்சிகளையும் மனத்தில் குமுறிக் கொண்டெழுந்த எண்ணங்களையும் வாய்விட்டுச் சொல்ல ஒரு துணைவன் கிடைத்தானே என்ற சந்தோஷம் ஒளிவீசிய அவன் கண்களில் பிரகாசித்தது. சற்று நேரம் அப்படியே நின்றான். அந்த அதிகாரி தன்னை அணுகியதும் கைகளை வேகமாக ஆட்டி,

ஆட்டி தன்னை எதிர்நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஜனத்திரளைச் சுட்டிக் காட்டி ஃபிரஞ்சு மொழியில் மிக வேகமாகப் பேசினான். "ஆ, இது கொடுமை! மிகவும் கொடுமை! மிகமிகக் கொடுமை!! இல்லையா? இது இவ்வளவு கொடுமையாயிருக்கும் என்று நான் கொஞ்சமும் எண்ணியதில்லை—நான் எண்ணவே இல்லை. கடவுளே! நிலைமை இவ்வளவு மோசமாக இருக்குமென்று நினைக்கவேயில்லை. இருப்பினும் நான் ஒரு கிரேக்கன்; முழு கிரேக்கன் அல்லவென்றாலும் அரைக் கிரேக்கன். என் தந்தை ஒரு கிரேக்கர். நான் உண்மையில் இங்கு போர் புரிய வரவில்லை. நான் ஒரு பத்திரிகை நிருபன்தான். ஒரு இத்தாலிய பத்திரிகைக்கு எழுத வேண்டும். நான் இத்தாலியிலேயே கல்வி பயின்றேன். என் வாழ்க்கை முழுவதையும் இத்தாலியிலேயே பெரும்பாலும் கழித்திருக்கிறேன்—பள்ளிகளிலும் பல்கலைக் கழகங்களிலும். எனக்குப் போரைப்பற்றி ஒன்றுமே தெரியாது. நான் ஒரு மாணவனாயிருந்தேன்—ஆமாம் ஒரு மாணவன். என் தந்தை ஒரு கிரேக்கராயிருந்ததால்தான் நான் இங்கே வர நேர்ந்தது. அவருக்காகத்தான் நான் கிரீஸ் நாட்டைப் பற்றியே நினைத்தேன். நான் கிரீஸ் தேசத்தை மிகவும் நேசிக்கிறேன்; ஆனாலும் நான் இப்படி நிகழுமென்று கனவிலும் நினைக்கவில்லை......"

அவன் பேசிய வேகத்தில் மேல்மூச்சு வாங்கியது. சிறிது நேரம் நிறுத்தி ஆசுவாசப் படுத்திக் கொண்டான். ஒரு இளம் பெண் தன்னைக் கடைக் கண்ணால் நோக்கும்போது ஏற்படும் மந்தஹாஸ உணர்ச்சிபோல் அவனுடைய கண்கள் ஒளிர்ந்தன. கனிவு, பரிதாபம், ஆத்திரம், ஆர்வம் முதலிய உணர்ச்சிகளால் உந்தப்பட்டு அவன் அந்த ஜனத்திரளைப் பார்த்தபோது, அவன் வாயிலிருந்து வெளிவந்த முதற் சொற்கள் அவனுக்கும் அந்த ஜன சமுத்திரத்திற்கும், அந்தப் பிரதேசத்திற்கும், ஏன் உயிர் வாழ்க்கைக்குமுள்ள தொடர்பையே அளவிட்டுக் கூறுவதாக அமைந்திருந்தன. அந்தச் சமயத்திற்கு ஒரு சோக நாடகத்தின் கற்பனையாசிரியனைப் போல தற்பெருமையுடன் அவன் விளங்கினான்.

இவன் பரபரப்புடன் பேசிய பேச்சைக் கேட்ட அந்த அதிகாரி இவன் கூற்றுக்குச் செவிசாய்ப்பவன் போல "ஆம், இவர்கள் மிக்க பரிதாபத்துக்குரியவர்கள்—எளியவர்கள்—இந்தத் திக்கற்றவர்களுக்கு என்னதான் நேரிடுமோவென்று எனக்குத் தெரியவில்லை" என்று அவன் மரியாதையாகவே உள்ளக் கனிவுடன் பேசினான்.

இளைஞன் மறுபடியும் உணர்ச்சியுடன் பேசினான். "நான் கனவு காணவில்லை. அது இப்படியாகும் என்று நான் கனவு கூடக் கண்டதில்லை! இது மிகவும் கொடுமையாகவிருக்கிறது—பெருங் கொடுமை! நான் இப்பொழுது ஒரு சிப்பாய் ஆக விரும்புகிறேன். இப்பொழுது போரில் நேரடியாகவே சேர விரும்புகிறேன். என் தந்தையர் நாட்டிற்காக நான் போர் செய்ய விரும்புகிறேன்."



தன் நாட்டிற்கு என்றபோது வடமேற்குத் திசையை நோக்கி வட்டமிட்டுக் காட்டினான்.

அதிகாரியும் ஒரு இளைஞன்தான். விறைப்பாக ராணுவ உடையிலிருந்தான். கருஞ் சிவப்பு நிறக் கழுத்துப்பட்டைக்கு மேல் வெண்மை நட்சத்திரச் சின்னம் பளபளத்தது. கழுத்துப் பட்டைக்கு மேலே தன்னம்பிக்கை, அமைதி, உறுதி, அஞ்சாத உள்ளம் முதலியவற்றை எல்லாம் ஒருங்கே வெளிப்படுத்திக் கொண்டிருந்த அந்த லெப்டினன்டின் முகம் கம்பீரமாகக் காட்சியளித்தது. அவன் உடைகள் அழுக்கடைந்திருந்தன. கருஞ் சிவப்பு நிறக் கழுத்துப்பட்டைதான் பளிச்சென்று தெரிந்தது. உடன் வந்தவனின் பெருங் கூக்குரல்களைக் கேட்டு அவன் தனக்குள் சிரிப்பது போலப் புன்முறுவலித்தாலும் அவன் பார்வை மட்டும் அவனுக்கு முன்னாலேயே லயித்திருந்தது.

அவர்கள் கூர்ந்து நோக்கிய பகுதியிலிருந்து பீரங்கிப்படையினரின் பெருமுழக்கம் தொடர்ந்து வந்தது. பிரம்மாண்டமான ஒரு கடியாரத்தின்-நட்சத்திரங்களின் வாழ்க்கையைக்கூட விநாடி விநாடியாக எண்ணும் சக்தி வாய்ந்த ஒரு கடியாரத்தின்—சப்தத்தைப் போன்று ஒழுங்காக அந்த முழக்கம் கேட்டுக்கொண்டிருந்தது. அதன் 'டிக்-டிக்' ஒலிகளுக்கிடையில் பலர் மாண்டவண்ணமிருந்தனர். அலட்சியமான அமைதியுடனும், இரக்கமற்ற தன்மையுடனும் வருங்காலத்தை உணர்ந்தது போல் இரக்கமின்றி அந்த மாபெரும் கடியாரம் விநாடிகளை எண்ணிக்கொண்டிருந்தது. குன்றின்மேல் உச்சியிலிருந்த அந்த கடியார முகட்டில் ஆண்டவனே அமர்ந்துகொண்டிருப்பது போலவும், ஆகாயத்தின் அடிவானமே அம்முகட்டின் பரிதி போலவும் தோன்றியது. இந்தக் காட்சிக்கு முன் வீரனும், நிருபரும் மௌனமாயிருந்தனர். குறிப்பாக நிருபர் பெரும் துக்கத்தில் ஆழ்ந்திருந்தான். விருப்பமிருப்பினும் இல்லாவிடினும் யுத்த களத்தின் ரகசியங்களெல்லாம் புதைந்து கிடந்த அதபாதாளத்திற்கே செல்லத் தயாராக அவன் இருந்தான். யுத்தகள ரகசியங்களை அறிய ஆர்வம் கொண்டிருந்தாலும் உண்மையில் அங்கே காணுவது நம்பிக்கையின்மையும், கொடூரமும் தான் என்பதையும் உணர்ந்திருந்தான். அவனுடைய காலின் கீழ்ப் பகுதியிலிருந்த தோல்பட்டைகள் அவிழ்ந்து சரிந்தன. குழந்தையின் சவக்குழியைக் குனிந்து பார்ப்பதுபோல் அவன் மெதுவாகக் குனிந்து அதைச் சரிசெய்தான்.

பிறகு திடீரென்று தொடர்ந்து வந்த பீரங்கிகளின் வெடி ஓசை கேட்டது. அவற்றின் எதிரொலியும் அவற்றுடன் கலந்து எது பீரங்கியின் சப்தம், எது எதிரொலி என்று பிரிக்கக்கூட இயலாதபடி ஒன்றோடொன்று பின்னிக் கிடந்தன. இதற்கிடையில் சாவதானமாகத் துப்பாக்கி ஓசையும் அடிக்கடி கேட்டது. அப்போதெழுந்த சப்தம் அவனுக்குச் சலிப்பைத்தான் உண்டாக்கிற்று; எரிச்சலுண்டாக்கிற்று; அர்த்தமற்றது போல் தோன்றியது. வினை

யாடும் குழந்தை தனது பேரிகையைக் கொட்டி எழுப்பும் ஒலியைப் போன்றிருந்தது அந்தப் பீரங்கியின் முழக்கமும் துப்பாக்கியும்.

விரலைத் தூக்கி லெப்டினன்டு பீரங்கி ஒலித்துக் கொண்டிருந்த பகுதியைக் காட்டினான். சலிப்பை உண்டாக்கிய அந்தச் சப்தத்திற்கு மற்றவனே காரணம் என்று நினைத்திருந்ததுபோல் ஆத்திரமடைந்த குரலில் "பார், அங்கே! நீ போரில் கலந்து கொள்ள விரும்பினால், இப்பொழுது ஒரு மகத்தான வாய்ப்பு அதோ இருக்கிறது" என்று அந்த இளைஞனைப் பார்த்துச் சொன்னான்.

நிருபர் நேராக நிமிர்ந்து நின்றான். பெருமையுடன் தனது மார்பைத் தட்டிக்கொண்டான். "ஆம். அதோ போர் நடக்கிறது! நான் கலந்து கொள்ள விரும்பும் போர் அங்கே நடக்கிறது. நான் வலிய முன்வருகிறேன் — நான் ஒரு கிரேக்கன் — ஒரு கிரேக்கன். புரிகிறதா? என் நாட்டுக்காக நான் போர் செய்ய விரும்புகிறேன். உங்களுக்குப் போரைப் பற்றி எல்லாம் தெரியும். எனக்கு வழிகாட்டுங்கள். நான் என்னையே அர்ப்பணிக்கிறேன்" என்று பெருமையுடன் பேசினான். திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டான். சட்டைப்பையிலிருந்து ஒரு பெட்டியை எடுத்தான், அதிலிருந்து தன்னுடைய பெயர் பொறித்த ஒரு கார்டை வணக்கத்துடன் அந்த அதிகாரியிடம் நீட்டி "என் பெயர் 'பிஸா'" என்றுமட்டும் சொன்னான்.

அந்த லெப்டினன்டின் முகத்தில் ஒரு புதுமையான புன்னகை பளிச்சிட்டது. இரக்கமும் பெருமையும் அதில் இருந்தன—அநுபவத்திலிருந்து விளைந்த தற்பெருமையும் திருப்தியும் இருந்தன. பதிலுக்கு வணக்கம் செலுத்திவிட்டு "ரொம்ப நல்லது; என்னுடைய அணி போர்க்களத்தின் நடுவில் இருந்தால் உன்னை அங்கே அழைத்துச் செல்ல எனக்கு ஆட்சேபமில்லை. என் அருகிலேயே இருத்திக் கொள்ளுகிறேன். அவ்வாறு இல்லாதிருந்தால் உனக்கு வேறு ஏற்பாடுகள் செய்கிறேன்" என்றான் அவன்.

பிஸா இன்னொரு முறை விறைப்புடன் வணங்கிவிட்டு சரியான முறையில் அவனுக்கு நன்றியும் கூறினான். சாவை எதிர்நோக்கி அவன் நின்ற அந்த நிலையில், லெப்டினன்ட் கூறிய வார்த்தைகளில் தோன்றிய ஒருவிதக் கடுமை தன்னை வருத்தியதை உணர்ந்தான். உடனே அவன் கண்ணுக்கு அங்கு நடந்தவையெல்லாம் புதுமையாகவும் அசாதாரணமான காரியங்கள் போன்றும் தோற்றமளித்தன. கஷ்டங்களை அள்ளி வீசும் போர்க்களம் இந்த நிருபருக்கு இப்போது மிகச் சாதாரணமான இடமாகிவிட்டது. லெப்டினன்ட் என்ன எண்ணினான் என்பதை அறிவதிலேயே அவன் சிந்தனை ஓடியதே தவிர போரைப்பற்றி அவன் கவலை கொள்ளவில்லை. எனவே மீண்டும் ஒரு முறை அவனை வணங்கினான். லெப்டினன்டும் வணங்கினான். அவர்கள் ராணுவ விதி முறைகளை எல்லாம் பின்பற்றினர். அந்த யுத்த அரங்கத்தின் மத்தியில்கூட



அவர்கள் இவ்விதச் சின்னஞ்சிறு அம்சங்களை எல்லாம் புறக்கணிக்காமல் கவனித்தது அவர்களுக்குத் திருப்தியளித்தது.

இதற்கிடையில், அவர்களைத் தாண்டிச் சென்றுகொண்டிருந்த அந்த ஜனத்திரள் வேகமாக முன்னேறிவிட்டது. அதன் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாது பின்தங்கி நின்ற சிலர் மட்டுமே பரவலாக இப்போது அப்பாதையில் காணப்பட்டனர். அகதிகளின் பிரவாகம் வடிந்து சிறு அருவிகளாக மாறிக் கொண்டு வந்தன.

அவர்களிருவரும் குன்றின் உச்சிக்கு வந்துவிட்டனர். அவர்கள் முன், ஒரு கடல் தீவினுக்குச் சமமாக ஒரு பசும்புல் சமவெளியிருந்தது. அது வடபக்கம் பரந்திருந்தது. அதன் எல்லை ஒரு வெண்ணிற மூடுபனி மூட்டத்தில் கலந்துவிட்டிருந்தது. இந்தச் சமவெளியில் இவர்களுக்கருகில் மரங்களற்ற இரு சாம்பல் நிற மலைகளிருந்தன. அவற்றின் சரிவில் இரண்டு கருங்கோடுகள் போன்று வரிசையாகத் துருப்புக்கள் நின்று கொண்டிருந்தன. அவ்விடத்திலிருந்து புகைப் படலம் மேலெழுந்து ஆகாயத்தில் பரவிக்கொண்டிருந்தது. அப்போது நடந்துகொண்டிருந்தது நரம்புக்கு அதிர்ச்சி தரும் அவ்வளவு பயங்கரமான போர் அல்ல. தேநீர் அருந்தும் மேஜையைப் பார்ப்பதைப் போல் ஒருவன் அதை அமைதியாகப் பார்த்து ஆராய முடியும். ஆனால் அப்போது எழுந்த பீரங்கி முழக்கம் பிஸாவின் மனத்தில் ஒரு பலத்த கணீரென்ற அடியாக விழுந்தது. இதுதான் போர் என்பதை வலியுறுத்துவது போலிருந்தது. போரின் சொரூபத்தைத் தெரிந்துகொண்டவன் போல வெற்றியுணர்வுடன் அவன் பெருமூச்சு விட்டு திடீரென்று அப்படியே நின்றான். ஆச்சரியத்தால் உதடுகள் விரிந்தன. இளமைப் பருவத்துக் கனவுகளில் வந்த மனித வர்க்கத்தின் படுகொலைகள் அத்தனையையும் அவன் நினைத்துக் கொண்டான். அன்பு எப்படி இருக்குமென்று அவன் அறிந்திருந்தான். தனிமையாகத் துணையற்று, வியப்புடன், அசாதாரண சக்தி வாய்ந்த ஒரு அணுவைப் போல்—அவன் அதைக் கண்டிருக்கிறான். ஆனால் போரைப்பற்றி? நெற்றியில் வீசும் மென்மையான காற்றுப்போல, நாற்பதினாயிரம் மனிதர்களின் நெஞ்சத்துடிப்பை அவன் தன் நெற்றியில் அந்தச் சமயம் உணர்ந்தான்.

லெப்டினன்டின் நாசித்துவாரங்கள் புடைத்தன. "நான் உடனே போகவேண்டும். நான் உடனே போகவேண்டும்," என்று அவன் படபடப்புடன் கூறினான்.

"நீங்கள் போகுமிடங்களுக்கெல்லாம் நானும் உடன் வருவேன்" என்று பிஸா உரத்த குரலில் இரைந்தான்.

மலையோரத்தில் ஒரு பழைய ஒற்றையடிப்பாதை போய்க்கொண்டிருந்தது. அவசரமாகச் செல்லவேண்டி அவர்கள் இங்குமங்கும் ஓடி சாதாரணமாக ஆபத்து நிறைந்ததென்று ஒதுக்கித் தள்ளிவிடும் வழிகளிலெல்லாம் அவர்கள் சென்றனர். தாங்கள்

எச்சரிக்கையின்றி இவ்வாறு சென்றதைக்கூட அவர்கள் பொருட்படுத்தவில்லை. லெப்டினன்டின் முழு ஆற்றலையும் மிஞ்சுமளவில் நிருபர் சுறுசுறுப்புடனும் உற்சாகத்துடனும் முன்னேறினான்.

"வாருங்கள்! வாருங்கள்!" என்று அவன் பின்தங்கிய லெப்டினன்டை எச்சரிக்க வேண்டியிருந்தது.

பாதைக்குக் கீழே ஒரு பெரும் சாலைக்கு அவர்கள் வந்தனர். அப்பாதை நேராகச் சண்டை நடக்கும் இடத்திற்குச் சென்றது. பாதையில் சில சிப்பாய்கள் களைப்புடன் பின்தங்கியிருந்தனர். அவர்களிடம் துப்பாக்கியில்லை. அவர்களுடைய உடைகள் அழுக்கடைந்து அலங்கோலமாயிருந்தன. போர்க்களம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த இருவரையும் பார்த்து அவர்களில் சிலர் வருத்தமுற்றோர் போல் காணப்பட்டனர். மற்றவர்கள் காயமுற்ற ரணங்களுக்கு கைக்குட்டையினாலேயே கட்டுக் கட்டிக்கொண்டிருந்தனர். ரத்தக்கறைகள் "படம் 1", "படம் 2", "படம் 7" என்னும் எழுத்துக்களைப் போல் பார்வைக்குத் தெரிந்தன. கட்டுப் போடும் முறைகளுக்குச் சிறிய விளக்கப் படங்களைப் போல இவை காணப்பட்டன. ராணுவ நடைபோட்டு நடந்து சென்றுகொண்டிருந்த சிப்பாய்களிடம் சண்டையைப் பற்றி ஏதேதோ அசிரத்தையுடன் பேசிச் சிரித்துக்கொண்டே சென்றனர் சில குடியானவர்கள். சண்டை அவர்களுக்கு வெகு தொலைவில் நடக்கும் ஒரு நாடகம் போலத் தோன்றிற்று. ஒருவன் மூன்று கழுதைகளை ஓட்டிக்கொண்டு போய்க்கொண்டிருந்தான். அடிக்கடி காயமடைந்த—அல்லது நோய்வாய்ப்பட்ட வீரர்கள் அவனை அணுகி நயமாகப் பேசித் தங்களை ஏற்றிச் செல்லும்படி அவர்களைக் கெஞ்சினர். அவர்கள் வெகு தந்திரமாக ஜாடை மூலமாகவே ஒன்றும் புரிந்துகொள்ளாதவர்கள் போலச் சைகை காட்டிவிட்டு நோயாளிகளை ஏற்றிச் செல்லாமலே தங்கள் கழுதைகளை மேலே நடத்திச் சென்றுவிட்டனர். சிப்பாய்களும் தளர்ச்சியுற்றுப் பின் தங்கினர்.

வழியில் மேலும் கொஞ்சதூரம் சென்றபொழுது, ஒரு சிப்பாய் தன்னுடைய நீண்ட கழியுடன், மெதுவாக நடந்து வந்துகொண்டிருந்ததைப் பார்த்தான். அவனுடைய தலையில் பெருங்கட்டொன்று போடப்பட்டிருந்தது. அதில் சேறும் ரத்தமும் கறைபடிந்திருந்தன. அவன் மேலே சொன்ன குடியானவனிடம் பொழுது போக்காகப் பேச்சுக் கொடுத்தான். ஆனால் சீக்கிரத்திலேயே மிகவும் சூடான விவாதத்தில் இறங்கிவிட்டனர். குடியானவன் படபடப்புடன் பேசினான்; கூக்குரல் இட்டான். காயம்பட்ட சிப்பாய் குடியானவனின் கன்னத்தில் அறைந்தான். அவன் பெருங் கைகள் குடியானவனுடைய தலையில் பலமாகத் தாக்கின. ஒரு தடவை தன் கழியைத் தூக்கிக் காட்டிப் பயமுறுத்தினான். திடீரென்று சச்சரவு எப்படி ஆரம்பித்ததோ அப்படியே அந்தக் குழப்பம் அடங்கியது. நோயுற்றிருந்த மற்றவர்கள் தங்கள்



தோழன் ஒருவன் மட்டும் முதலில் சென்று கொண்டிருந்த கழுதை மீதேறிச் செல்வதைக் கண்டனர். கழுதையின் விலாவில் ஆனந்தமாக உதைத்து உதைத்து அதை வேகமாக ஓட்டினான். காலியாகச் சென்று கொண்டிருந்த மற்றிரண்டு கழுதைகள் மீது ஏறிச் செல்ல முயற்சிக்கவில்லை. இவனையே எல்லோரும் சோர்வுடன் பார்த்தனர். இம்மூன்று கழுதைகளும் கண்களை விட்டு மறையும் வரையில் பார்த்துக் கொண்டே இருந்தனர்.

அந்தச் சிப்பாய் இன்னும் அந்தக் குடியானவனை நோக்கிக் கைகளை உயர்த்தி உயர்த்தி ஆத்திரத்துடன் வாதித்தான்.

அமைதியும் துக்கமும் தோய்ந்த கண்களுடன் தன்னைப் பரிதாபகரமாகப் பார்த்த இந்த மனிதர்களுக்காகப் பிஸா பெரிதும் வருந்தினான். "ஐயோ பாவம், கடவுளே, இவர்கள் பரிதாபத்துக்குரியவர்கள்! இவர்கள் பரிதாபத்துக்குரியவர்கள்!" என்று லெப்டினன்டிடம் தன் உணர்ச்சிகளைக் கொட்டினான் பிஸா. ஆனால் லெப்டினன்ட் இம்மாதிரி உணர்ச்சிகளுக்கெல்லாம் வசப்பட்டவனல்ல. பிஸாவை நோக்கி ஒரு கோபப் பார்வை பார்த்து, "உனக்கு என்னுடன் வர இஷ்டமிருந்தால் இம்மாதிரி பச்சாத்தாபத்திற்கெல்லாம் நேரமில்லை" என்றான். பிஸா உடனே அவன் அதிகாரத்திற்குட்பட்டு அமைதியானான். அந்த நேரத்தில் ஓரளவு அவனிடமிருந்த அகம்பாவம் சிறிது விலகிற்று என்று கூடச்சொல்ல வேண்டும். உலகம் அவனைப் பற்றி அந்நிலையில் என்ன நினைக்கிறது, அவனை ஒரு பொருட்டாக மதிக்கிறதா என்றெல்லாம் கூட சந்தேகத்துடன் தன்னையே கேட்டுக் கொண்டான். பூமியின் பாரத்தைக் குறைப்பதற்காகத்தானோ என்னவோ என்று சரிவரக் கூற முடியாதபடி அமைந்துள்ள இந்தச் சாவு மேடையில் எதிர்பாராது பிஸா என்னும் ஒரு தனி மனிதன் திடீரென்று மாய்ந்தொழிந்தால் அது ஒரு பெரிய சம்பவம் என்று எண்ண வேண்டுமா? எவ்வளவோ சாவுகளுக்கிடையில் இது ஒரு சாதாரண சம்பவம் தானே. சிறிது நேரத்திற்கெல்லாம் பிறைவடிவமான பல போர்ப் பள்ளங்களின் வழியாக, அவன் விரைவாக லெப்டினன்டுடன் நடந்து கொண்டிருந்தான். தேநீர் விருந்தினர்களைப்போல் கலகலப்புடனும் உற்சாகத்துடனும் வீரர்கள் அந்தப் பள்ளங்களில் அமைதியாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். இந்தச் சமயத்தில் அவர்கள் மீது குண்டு வீச்சு ஏதும் நடக்கவில்லை என்றாலும் அப்போதிருந்த நிலைமையிலிருந்து, அவர்களெல்லோரும் அசாதாரண தைரியத்துடன் இருந்தார்கள் என்றே அவன் நினைத்தான். அவ்வாறு இல்லாவிட்டால் அவர்கள் அவ்வளவு சுகமாக, வீட்டிலிருப்பதைப் போன்று அந்த மோசமான குழிகளுக்குள் இருக்க முடியாது. அன்றையப் பொழுது சாயுமுன்னரே கூட தாம் தாக்கப்படலாம் என்று அவர்கள் நிச்சயமாகவிருந்தனர். இத்தகையதொரு சூழ்நிலையில் அவ்வீரர்களின் மனநிலையை அறியப் பல்கலைக் கழகங்கள் அவனுக்குக் கற்றுத்தரவில்லை. மிகச் சிறந்த கம்பளி

யுடையில் பளபளத்த புதிய பூட்ஸுடன் புதிய வெண்ணிற இரும்புத் தொப்பி, போர்க்களத்தைப் பார்க்க, தூரதர்ஸனிப் பெட்டி, புதிய துப்பாக்கி உறை—ஆகியவற்றுடன் இவ்விளைஞன் அவர்களைக் கடந்து சென்றதைப் பார்த்த தூசு படிந்த அந்த வீரர்கள், தெருக்களின் முனைகளில் பகட்டான உடைகளணிந்து பவனி வரும் ஒரு புது மனிதனைப் பார்த்ததுபோல் வியப்புற்றனர். ஏன், இந்த இளைஞன் போர்க்களத்திற்குப் பதில் நெருக்கடி மிக்கதொரு பட்டணத்து உல்லாசப்பாதையில் இருந்திருக்கலாம். அவன் தோற்றம் அவர்கள் மனத்தில் அவ்வித எண்ணத்தைத்தான் உண்டாக்கிற்று. அவன் யாராயிருக்கக்கூடும் என்பது பற்றி அவர்கள் மிக விரிவாகவே விவாதித்தனர்.

அந்தச் சிப்பாய்களின் ஒவ்வொருவர் குரலிலும் பேச்சிலும் சைகையிலும் காணப்பட்ட சகஜபாவமும் போரைப் பற்றிய சாதாரண மனப்பான்மையும் பிஸாவுக்கு வெறுப்பூட்டுவது போலத் தோன்றியது. போர்வெறி பிடித்த அவர்கள், ஒரு உணவு விடுதியில் காணப்படுபவர்கள் போல் உற்சாகத்துடனிருந்தனர். இம்மாதிரி சூழ்நிலையில், இம்மாதிரி மனப்பான்மையுடனிருந்த சிப்பாய்கள் மத்தியில் சாவை எதிர்நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் தான் என்ன செய்வதென்று தெரியாத சங்கடத்தில் இருப்பதை உணர்ந்தான். அவன் முகத்தில் சோகம் படர்ந்திருந்தது. அமைதியை வரவழைக்கப் பெருமுயற்சி செய்து கொண்டிருந்தான். விருந்தினர் கூட்டத்தில் அகப்பட்ட ஒரு அவலட்சணமிக்கவனின் நிலையிலிருந்தான்.

பிறர் தன்னை ஏளனம் செய்வதாகக்கூட நினைத்தான். அதற்காக மிகவும் வருந்தினுன். போர்முனை முன்னணியிலும் வெகு சாவதானமாக தன்னையும், தன் உடைகள், நடவடிக்கைகளைப் பற்றியும் அந்த சிப்பாய்கள் விவாதிப்பதை அவன் வெறுத்தான். போரைப்பற்றி இதுவரையில் அவன் கொண்டிருந்த கருத்துக்களில் ஒரு புதிய கருத்து அந்தச் சூழ்நிலையில் அவன் மனத்தில் உதித்துக்கொண்டிருந்தது.

படையினர்கள் வரிசைக்குள் லெப்டினன்ட் வேகமாக நடந்து சென்றதை அவன் வெறுக்கவில்லை. சண்டையின் முழக்கம் அவனுடைய காதுகளில் ஒலித்துக்கொண்டேதானிருந்தது. இடது புறத்திலிருந்தும், முன்னுலிருந்த சில குன்றுகளிலிருந்தும் அந்த பீரங்கி முழக்கம் வந்தது. அவர்கள் நடந்து கொண்டே இருந்தனர். அவர்கள் சென்ற பாதை வளைந்து ஒரு காட்டிற்குள் சென்றது. சரிந்த புல்வெளியையொட்டி நின்ற மரங்கள் அழகிய பசுங்கிளைகளுடன் விளங்கின. அப்பொழுது வீசிய காற்று அவற்றை மெல்ல அசைத்து இனிய ஓசையை எழுப்பிக் கொண்டிருந்தது. முன்னுலிருந்து ஓயாது கேட்டுக் கொண்டிருந்த போரின் முழக்கத்திற்கிடையிலும், இக்காட்டிற்குள் மரங்கள் இன்னும் வளர்ந்து கொண்டிருப்பதையும், புல்வெளிகள் பசுமையுடன் செழித்திருப்பதையும் அவனுல் கவனிக்காமலிருக்க முடியவில்லை. அந்தப் பெரும்



காட்டிலிருந்து வீசிய இனிய மென்காற்றை நீண்ட சுவாசங்களுடன் பருகினுன். குளிர்ச்சியும் மணமும் நிறைந்த அந்த மெல்லிய காற்று இயற்கை நியதியின் வளத்தையும், கோடிக் கணக்கான ஜீவராசிகளையும் தாவர வகைகளையும் உயிர்ப்பித்துக் காக்கும் தன்மையையும் சாவுகள் மலிந்து குவிந்த போதிலும் உயிர்ப்புச் சக்திக்குக் குறைவில்லை என்பதையும் உணர்த்தியது.

மேலும் நடந்து செல்லுகையில் துருக்கிய பீரங்கிகள் விழுந்து வெடித்துக்கொண்டிருந்த இடத்திற்கு அவர்கள் வந்தனர். முதலில் ஒரு நீண்ட இரைச்சல் ஏதோ சலசலப்பது போல் கேட்டது. அதைத் தொடர்ந்து ஏதோ கனமான ஒரு பொருள் பூமியில் விழும் சப்தம்; பிறகு வெடியோசை. அது போர்க்கப்பல்களில் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டிருக்கும் கூம்பு போன்ற ஒரு ஆயுதம் போலக் காணப்பட்டது. விசித்திரமாகவே, இந்த முதல் குண்டு, அவனுக்கென்னமோ ஒரு உலைக் கூடத்தைத்தான் ஞாபகமூட்டியது. சோர்வுற்ற முகங்கள், உலையின் நெருப்பு ஜ்வாலை— இவைதான் அவன் கவனத்திற்கு வந்தன. அப்போது அதையடுத்து யந்திரம் பற்றிய நினைவு எழுந்தது. போர்க்களத்தில் இம்மாதிரி ஒரு குண்டு வீச்சில் அவன் கொல்லப்பட்டால் ஒரு தொழிற்சாலையில் ஒரு எஃகுத் துண்டு சிதறி விழுந்து ஏற்படும் பழங்காலத்திய சாவைக்காட்டிலும், இப் புதுமுறைப் போர்க்களச் சாவு உற்சாகமாகக் கூட இருக்குமோ என்றது அவன் மனம்.

## II

சமவெளியில் நடந்து கொண்டிருக்கும் சண்டையைப்பற்றி எவ்விதக் கவலையும் இல்லாமல் மலையுச்சியில் ஒரு பாகத்தில் குழந்தையொன்று விளையாடிக்கொண்டிருந்தது. ஓடிப்போன அதன் பெற்றேர்களுடைய சிறிய குடிசை அதன் பின்னே தெரிந்தது. அந்தக் குடிசையை முத்துப் போன்ற வெண்ணிறப் பசுவொன்று இப்பொழுது ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. அந்த இருட்டில் அந்தப் பசு மருண்ட கண்களுடனும் கவலையுடனும் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தது. குழந்தை அங்குமிங்கும் ஓடி சிறு சுள்ளிகளை வைத்துக்கொண்டு விளையாட்டில் ஈடுபட்டிருந்தது. கூழாங்கற்களை வைத்துக்கொண்டு பல்வேறு மாதிரிகளாக யந்திரங்கள் போல அடுக்கியடுக்கி அழகு பார்த்துக் கொண்டிருந்தது. அக்குழந்தையின் விளையாட்டில் அச்சிறு சுள்ளிகள்தாம் குதிரைகளாகவும், பசுக்களாகவும், நாய்களாகவும் செயலாற்றின. கூழாங்கற்கள் செம்மறியாடுகளாகப் பாவிக்கப்பட்டன. ஒரு பெரிய விவசாயப் பண்ணையையும், அதற்கு சம்பந்தப்பட்ட ஒரு ஆட்டு மந்தையையும் நிர்வகித்து வருவதாக அவன் எண்ணம். விளையாட்டிலேயே லயித்திருந்த குழந்தை நான்கு மைல்களுக்கப்பால் நிகழ்ந்து கொண்டிருந்த சண்டையைப் பற்றித் துளிக்கூட கவலைகொள்ளவே இல்லை. ஒரு கற்பாறையில் மோதும்

அலைகளைப்போல், இந்தப் போர்க்களத்தின் ஆர்ப்பாட்டத்திற் கிடையிலும் அலட்சியமாகத் தன் காரியத்திலேயே கண்ணாக இருந்தது. ஒவ்வொரு சமயம், அதனையும் மீறி போர் முனையிலிருந்து எழுந்த பீரங்கி முழக்கங்கள் அதனுடைய கவனத்தைக் கவரும். அப்பொழுது குழந்தை, அது என்ன? என்று கேட்பது போல அந்தச் சண்டையைப்பற்றி அறிய நிமிர்ந்தெழும். கையில் ஒரு சிறு குச்சியை எடுத்து அதை ஒரு நாயெனக் கருதி கூழாங்கற்களாகிய ஆட்டு மந்தைக்குப் பின்னே அனுப்புவதில் ஈடுபட்டிருந்த அதன் கவனம் குலைந்து விடும். சமவெளியில் நடைபெறும் சாவைப் பற்றி அந்தச் சமயத்தில், அது விளையாடிக் கொண்டிருந்த மலை எவ்வாறு அலட்சியமான அமைதியுடனிருந்ததோ, அதே அமைதியுடன் அக்குழந்தையுமிருந்தது.

தலைச்சன் பிள்ளையாகப் பிறந்த இந்தக் குழந்தையையும் மறந்து அப்படியே போட்டுவிட்டு அதன் பெற்றோர்கள் அவ்வீட்டை விட்டு வெளியேறினர் என்றால் அவர்களுடைய பயம் எவ்வளவு உச்ச நிலையை அடைந்திருந்தது என்பது தெளிவு. குடிசை துப்புரவாகக் காலி செய்யப்பட்டிருந்தது. தன் எஜமானர்களுக்குச் சொந்தமான இடத்தில் தான் தங்குவதில் அந்தப் பசு ஒன்றும் தகாத காரியம் செய்து விடவில்லை. புகை வண்ணமும் நாற்றமும் நிறைந்த அக்குடிசையின் உள்ளே சிறு பொருளும் இருக்கவில்லை. பயங்கர முறையில் அச்சம் அவர்களைப் பிடித்திருந்தது. சில்லறை வஸ்துக்களையெல்லாம் பெரியவைகளாகக் காட்டி பயம் அவர்கள் பகுத்தறிவையே சிதறவடித்திருந்தது. ஒரு பொத்தானைப் பற்றிக்கூட 'ஜாக்கிரதையாக இருப்பவன் தன் மேலங்கியை அப்படியே விட்டு விட்டான். உடைந்த காப்பிக் குவளையைக் கவனமாக எடுத்துக் கொண்டான். பழைய புகைக் குழாயைப் பாதுகாப்பது பற்றிய கவலையுடன் அதையும் விடவில்லை. ஆனால் முதலிற் பிறந்த இந்தக் குழந்தையை மறக்க வைத்தன போலும்! இதற்கிடையில் குழந்தை தன் தட்டுமுட்டுச் சாமான்களை வைத்துக் கொண்டு கவலையற்று விளையாடிக் கொண்டிருந்தது.

அது தனியாகவிருந்தது. தன் வேலையிலேயே மூழ்கிக் கிடந்தது. உலகம் ஏன் இவ்வளவு ஆரவாரம் செய்கிறது என்பதை அறிய அது தலை நிமிர்ந்து பார்க்கவுமில்லை. கையிலுள்ள குச்சிகள் தூரத்திலுள்ள ராணுவத்தைவிட முக்கியமாக இருந்தன. குழந்தையின் மனத்துக்கு ராணுவப் படையின் பகுதி ஒரு அர்த்தமற்ற பொருளாகவேதான் தோன்றியது. அது கள்ளிகளை வைத்து விளையாடிக்கொண்டிருந்தது.

மணலுக்கு வந்த கடற் பிராணியைப் போன்று சில சமயங்களில் போரணிகள் கவலையுடன் நெளிந்தன. இப்பின்னணியின் உறுப்புகள் ஒரு கடற் சிலந்தியின் உறுப்புகளைப் போல் வெகு தூரம் நீண்டு, படர்ந்து, வேதனையின் முதிர்ச்சியாலும் வலியின் மிகுதியாலும் தளர்ந்து தத்தளித்துக்கொண்டிருந்தன. இப்படி



நெளிந்து நெளிந்து அல்லல்பட்ட போரணியின் முனைகள் அக்குழந்தையின் பக்கத்திற்கே கூட வந்து விட்டன. இதைக் கவனிக்க ஒரு சமயம் அக்குழந்தை சமவெளியை நோக்கியது. அங்கே சில மனிதர்கள் வயல்களைக் கடந்து மாறுமாறாகத் தலை தெறிக்க ஓடிக் கொண்டிருந்தது தெரிந்தது. முரட்டு மிருகங்களைத் துரத்திச் செல்லும் மனிதர்கள் இப்படித்தான் ஓடுவார்கள். இதைக் கண்ட அக்குழந்தைக்கு இது பிடித்தமான ஒரு விளையாட்டாகப் பட்டது. இந்த அம்சத்தையும் தன்னுடைய விளையாட்டில் இணைத்துக் கொண்டால் நன்றாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டது. அதன்படி கூழாங்கற்களை யெல்லாம் (அவைதானே அதற்கு ஆடுகள்!) விரட்டி விரட்டி ஓட்டிற்று. இடையனைப் போன்று கூக்குரல் எழுப்பி அவ்வப்போது சமவெளியில் சண்டை செய்பவர்களிடமிருந்து ஏதாவது தன்னுடைய விளையாட்டிற்குப் புதுக் கருத்துக்கள் கிடைக்கின்றனவா என்று அறிந்துகொள்ள அவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தது. அவர்கள் நிகழ்த்திய செயலில் ஏதாவது ஆடு மேய்ப்பவர்களின் செய்கைக்கு ஒத்திருந்தால் அவற்றையெல்லாம் தன்னுடைய விளையாட்டில் சேர்த்து அமைத்துக் கொண்டது. அதனுடைய கருத்தில் ஆடு மேய்த்தல் தான் சம்பிரதாயமான சீரிய வாழ்க்கை முறை. தன் தகப்பனார் மேற்கொண்டு கடைப்பிடித்த முறை.

## III

சமுத்திரத்தின் அடித்தளத்தில் நடமாடும் ஒரு நடைப்பிணத்திற் கொப்பாக பிஸா அந்தப் போர்முனைக் குழிகளின் மத்தியில் சென்று கொண்டிருந்தான். அங்கே அவன் கண்டதுதான் என்ன? வயல்கள், புதர்கள், செடிகள், மனித முகங்கள், குரல்கள் முதலியவற்றைத்தான் அவன் கண்டான். அதுவும் கடலடியில் காண்பவற்றைப் போல் கண்டான். போர்! மனித இனத்திற்கு இப்படி ஒரு தொழில்—வியப்பையூட்டும் தொழில். இத் தொழிலில் அறிமுகமான பழக்கப்பட்ட மனிதர்கள் உள்பட பல பல வஸ்துக்கள் ஈடுபட்டிருந்தன. அவைகளெல்லாம் சகபாவத்துடனே பயமென்பதையே அறியாதவைபோல் காட்சியளித்தன. இக்காட்சி அவனுக்கு வியப்பையூட்டிற்று. அதிர்ச்சியடையும் அளவிற்கு வியப்பூட்டிற்று. வியப்பிற்குக் காரணம்? அங்கே காணப்பட்ட பச்சைப் புல்வெளிப் பரப்பும், ஒளிமிக்க மலர்களின் பிரகாசமும், இடையிடையே மலர்ந்த 'பாப்பி' புஷ்பங்களும் இந்தப் போர் என்னும் அரக்கனுக்கு ஒவ்வாத சூழ்நிலை. அவை அங்கே நிலைபெற்றிருக்கத் தகுதியற்றவை. இதைப்பற்றியெல்லாம் பிஸா மேலும் மேலும் சிந்திக்கத் தொடங்குகையில் இந்த மரங்கள், மலர்கள், புற்கள் இனிய அமைதியான பொருள்கள் அனைத்தும் போர் தொடங்கிய உடனே அவ்விடம் விட்டுப் பெயர்ந்து ஏன்

ஓடிவிடவில்லை என்று வியப்புறுவான். ஆனால் அந்த மாறுபட்ட சூழ்நிலையிலும் அசைவற்று ஓங்கி வளர்ந்த அந்த வண்ணமலர்களைக் கண்டு அவற்றிற்கு வணக்கம் கூடச் செய்தான்.

கிரேக்கர்களின் இரு தரப்பு அணிகளால் உண்டாக்கப்பட்ட ஒரு கோணத்தின் உச்சிக்கு அவன் சென்றுகொண்டிருந்த அந்தச் சாலை அவனை இட்டுச் சென்றது போல் காணப்பட்டது. காயம் பட்டவர்கள், துப்பாக்கி இல்லாதவர், இளைத்துப் போனவர்கள் ஆகியவர்களுடைய போராட்டம் வேறு அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவர்கள் ஒருவருமே பயந்திருப்பது போலக் காணப்படவில்லை. அவர்கள் அமைதியாக, அவசரப்படாது, வம்பு பேசியவாறுதான் அந்த அகழிகளில் நடந்து கொண்டிருந்தனர். பிஸா அவர்களை அரைக் கண்ணால் கவனித்து அவர்களைப் புரிந்துகொள்ள முயற்சித்தான். போர் நிகழ்ந்தபோது இந்த வீரர்களெல்லோரும் மனவுறுதி, துன்பம், அதிர்ச்சியைத் தாங்கும் சக்தி, தைரியம் முதலியவை நிறைந்துதான் இருந்திருக்க வேண்டும். ஆனால் போர் நிகழ நிகழ இவையெல்லாம் வற்றி விட்டிருக்க வேண்டும். பிறகு அவ்விடத்தை விட்டு வெளியேறியிருக்க வேண்டும்.

அழகிய காட்சிகளுடன் கூடிய ஒரு சினிமாவுக்கு எப்போதோ தான் சென்றதைப்பற்றி நினைவு படுத்திக் கொண்டான் பிஸா. அங்கே படத்தில் கண்ட காட்சிகள் நினைவுக்கு வந்தன. சொர்க்க லோகம் வரையில் பரந்து நின்ற வானவெளி, அதலபாதாளத்தில் ஒரு நள்ளிரவு ;—பாலைவன மணலில் தகிக்கும் சூரியனின் ஒளி—குளிர் நிலவில் கடற்கரையில் நிர்வாணமாக உலவும் உருவங்கள்—இருளில் சுவரேறும் பயங்கர உருவங்கள் கொண்ட பட்டினிப் பட்டாளம்—குளித்துக்' கொண்டிருக்கும் இளமங்கை—முத்துப் போன்ற அவளுடைய தோள்களில் துள்ளி விளையாடும் இளங் கதிர்கள்—ஒரு நடனம், ஒரு சாவு ஊர்வலம்—ஒரு விமர்சனம்—ஒரு தூக்கு மேடை, கலையின் ஆயிரம் கண்களுடன் ஆர்வமுடன் நோக்கும் கலைஞன்—அவன் உலகத்தை ஓயாது சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்த கலைஞன். அவனுடைய மகிழ்ச்சியும் வருத்தமும் கலந்த கூக்குரல்கள்—பாவமும் அழகும் பொங்கும் வார்த்தைகள்—அவற்றை எல்லாம் கண்டு களித்துவிட்டுப் பின்னர் அக் கொட்டகையை விட்டு வெளியே வந்து விட்டான். அங்கிருந்து வெளியே வந்ததும் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டு ஒரு சிற்றுண்டிச்சாலைக்குள் நேராக நுழைந்ததையும் நினைத்துக் கொண்டான். வெளியே வந்ததும் உள்ளே கண்ட காட்சிகளுக்கும் வெளியே கண்டவைகளுக்கும் ஒப்பிட்டுப் பார்த்ததில் இந்த உலகத்தில் அமைதி ஒரு பெரும் பள்ளம்போல நிலவியிருப்பது தோன்றியது.

ஆனால் இப்போது இது வேறான ஒரு விஷயம். எனினும் துப்பாக்கியில்லாது நடமாடிக்கொண்டிருந்த அந்த சிப்பாய்களைப் பற்றி அவன் நினைத்த போது மேலே சொன்ன காரணத்தைத் தான்—வீரம் வற்றிவிட்ட காரணத்தைத் தான்—அவர்களிடம் கண்டான். அவர்களும்கூட தங்கள் சக்தியவ்வளவும் தீரும் வரை மின்னல் வேகத்தில் போர் புரிவதாகத்தான் கனவு கண்டிருக்க வேண்டும். பிறகு அதற்குக் கூட சக்தியற்று ஓய்ந்து போயிருக்க வேண்டும். அவர்களைக் கவனித்த பொழுது, மறுபடியும் சிகரெட்டைப் புகைத்துக்கொண்டு சிற்றுண்டிச்சாலை நோக்கி நடந்தானே அந்த நினைவுதான் மறுபடியும் வந்தது. அவன் கொண்டிருந்த கருத்துக்கு ஆதாரமளிப்பது போன்று ஒரு சிப்பாய் அவனை நிறுத்தி ஒரு தீக்குச்சி கேட்டான். அவன் தன் சிறிய பையிலிருந்து புகையிலையும் காகிதமும் எடுத்து அங்கேயே அதைச் சுருட்டிப் பற்றவைத்து முழுமூச்சுடன் புகைவிடத்தொடங்கினான்.



காயம்பட்டவர்களைப் பார்த்து இப்போதெல்லாம் பிஸா கவலையுடன் இருக்கவில்லை. கவலைக்கும் இரக்கத்திற்கும் கூட ஒரு எல்லை உண்டென்பது போன்ற ஒரு அறிவை அப்போது அவன் பெற்றான். அந்த வரம்பைத் தாண்டியதும் கவலையும் இரக்கமும் மாறி வேறு ஒரு உணர்ச்சி அதனிடத்தே அடைகிறது. இப்போது அவர்களைக் கண்டதும் அவர்களுக்கேற்பட்ட துரதிர்ஷ்டம் தனக்கேற்படாததற்குச் சந்தோஷமும் அவர்களைவிடத் தான் உயர்ந்தவன் என்னும் எண்ணமும் தான் அவனிடம் தோன்றியது. அந்த மேலான அதிர்ஷ்டமே தொடர்ந்திருக்க வேணடுமென்று வேண்டிக் கொண்டான். ஏனெனில் கூனிக் குறுகி, ரத்தக் கறை படிந்து அவலட்சணமுள்ள அந்த ராணுவத்தினரை அவன் தாண்டிச் சென்ற போது அவனுள்ளத்தில் ஒரு எச்சரிக்கைக் குரல் ஒலிப்பது போன்ற தோற்றம் எழுந்தது. அவனுடைய மனத்தின் ஒரு பாதி மனித உருக்கொண்டு தன்னுடைய சட்டையைப் பற்றிக் கெஞ்சுவதாக ஒரு தோற்றம். என்ன சொல்லி அது கெஞ்சிற்று ? அவனை என்ன வேண்டிக்கொண்டது அது ? '' இந்தச் சிப்பாய்களைப் பார்த்துக் கலங்காதே. அவர்களைப் பார்த்துப் பச்சாதாபப்படாதே. ஒரு பொம்மையின் கைகால் ஏதேனும் உடைந்து போனால் எப்படி நீ கலங்காமல் இருப்பாயோ, அவ்விதமே கலங்காமலிரு'' என்று எச்சரித்ததாக அவனுக்குத் தோன்றியது. அவன் உள்ளத்தில் தனக்கும் இப்படிப்பட்ட கதி ஒருக்கால் நேரக்கூடுமோ என்று அலை மோதியது.

வேகமாக நடந்து கொண்டேயிருந்த லெப்டினன்ட் சட்டென்று நின்றான். ''இதோ பார், எனக்கு வேறிடத்தில் வேலையிருக்கிறது. இங்கிருந்து நான் உன்னைவிட்டுப் பிரிந்து வேறு வழியே செல்லவேண்டும். எனவே நீ போரில் கலந்து கொள்ள விரும்பினால் இப்படியே முன்னேறிச் சென்றால் போதும், முன் வரிசையில் போரில் ஈடுபட்டிருக்கும் எந்த அணியின் அதிகாரியும் உனக்கு ஒரு வாய்ப்புத் தருவார் '' என்று கூறிவிட்டு ராணுவ முறையில் மரியாதையுடன் தனது தொப்பியை உயர்த்தி லெப்டினன்ட்

விடை பெற்றுக் கொண்டான். பிஸாவும் பதிலுக்குத் தன் இரும்புத் தொப்பியை உயர்த்தினான். சண்டைக்குப் புதியவன் தன்னை அழைத்துவந்து வழிகாட்டிய லெப்டினன்டுக்கு நன்றி கூறினான். அவர்கள் ராணுவ விதிப்படி ஒருவருக்கொருவர் வணக்கம் செலுத்திக் கொண்டனர். மரியாதை தோன்ற ஒருவரையொருவர் கடைசி முறையாகப் பார்த்துக் கொண்டனர்.

லெப்டினன்டு ஒரு வயல் வழியாய் அமைதியாக அவ்விடம் விட்டகன்றான். அந்தக்கணத்தில் அவனுடைய அந்தப் பிரிவு தனக்கு நம்பிக்கை மோசம் செய்வதாகப் பிஸாவுக்குப் பட்டது. போரிலிருந்து தப்பியோடுபவனைப்போலல்லவா அவன் அங்கிருந்து வெளியேறிவிட்டான். இப்படி ஏதோ ஒரு குற்றம் செய்தவனைப் போன்று திடீரென்று அவன் கைவிடப்பட்டானே என்று அவன் மனம் எண்ணியது. போர்க்களத்தின் மையம் வரை அவனை அழைத்துக் கொண்டுவந்து சாவை எதிர்நோக்கிச் செல்லும்படி தன்னைப் பணித்துவிட்டு அந்த அதிகாரி சென்றுவிட்டாரே. ஒரு சமயம் அந்த அதிகாரியைக் கூக்குரலிட்டுத் திருப்பி அழைத்தால் என்ன என்று கூடத் தோன்றியது.

பள்ளத்தாக்கில் தனியாக விடப்பட்ட பிஸா சண்டைக்கு அடித்தளத்தில் தான் இருப்பது போன்ற உணர்ச்சியை அடைந்தான். போர் அவனுக்குமேலே உயரத்தில் எங்கேயோ நடந்து கொண்டிருந்தது. தனியாக, வழிகாட்ட யாருமின்றி, பிஸா நிலவறையொன்றில் இருட்டில் தட்டுத் தடுமாறிக் கொண்டிருக்கும் நிலையில் இருப்பதுபோல உணர்ந்தான். எவ்வாறேனும் போர் எப்படி ஆரம்பிக்கிறது என்பதை ஒரு முறை பார்க்கத்தான் வேண்டுமென்று நினைத்தான். போர் மும்முரமாக நடந்து கொண்டிருக்கையில் அதை ஆரம்ப நிலையில் பார்ப்பதைப் போலப் பார்க்க முடியாது. துருப்புக்களின் நடமாட்டங்களைக் காணவியலாதபடி மரங்கள் மறைத்தன. தான் சென்றுகொண்டிருக்கும் வழியே போனால், ஒருக்கால் போரின் மையஸ்தானத்திற்கே, ஒரு முட்டாள் மட்டுமே செல்லக்கூடிய அந்த இடத்திற்கே போய் விடக்கூடும் என்று நினைத்துக் கொண்டான். எனவே பக்கத்தில் சென்றுகொண்டிருந்த சிப்பாய்களிடம் வழிவகைகளைப்பற்றி ஆர்வத்துடன் விசாரித்தான். சிலர் அவனை மதிக்கவேயில்லை. மற்றவர்கள் வருத்தத்துடன் தலையசைத்துவிட்டு மேலே சென்றனர். சண்டை ஒரு கடினமான தொழில் என்பது தவிர அவர்களுக்கு வேறொன்றும் தெரியாது. அவர்கள் ஏதாவது பேசினால் அவர்கள் நன்றாகச் சண்டை செய்ததற்கு அத்தாட்சிகளைப்பற்றியிருக்கும். ராணுவம் முன்னேறிச் செல்லப்போகிறதா. இருந்தவிடத்திலேயே இருக்கப்போகிறதா. அன்றிப் பின்வாங்குமா என்பதெல்லாம் அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் களைத்துப் போயிருந்தனர்.

நீண்ட குறிப்பான தொடுகுண்டு 'விர்' ரென்று பறந்து வந்து விழுந்து ஒரு மரத்தினடியில் பயங்கர ஓசையுடன் வெடித்தது; நெருப்பையும் மணலையும் வாரி அடித்தது. புழுதிப்படலம் மறைந்ததும் அந்த இடத்தைத் திரும்பிப்பார்த்தான் பிஸா. சலசலத்த அந்த மரம் அதிர்ச்சியினால் உச்சியிலிருந்து அடிவரை நடுங்கியதைப் பார்த்தான். அந்த மரம் முழுதுமே அசைந்தது. வேருடன் ஆட்டம் கண்டு கீழே சாய்வதுபோல் அது ஆடியது. மரண வேதனையால் துடிப்பதுபோல நடுங்கிற்று. இதை அவன் ஆழ்ந்த வியப்புடன் உற்று நோக்கினான். பள்ளத்தாக்கின் வழியாக முன்னேறி வரும்போழுது மேலும் குண்டுகள் வானிலும் நிலத்திலும் தொடர்ந்து வெடித்தன. பிரமித்துப் போய் இருந்த இயற்கையின் மார்பின்மேல் ஆயுதங்கள் விழுவது போல குண்டுகள் நிலத்தில் விழுந்து வெடித்தன. இயற்கை வெளியின் அப்போதைய தோற்றம் பயங்கரமாகவும், வருத்தம் தோய்ந்தும் மோசமான தாக்குதல்களால் சூழப்பட்டுமிருந்தது. அதே சமயம் அங்கிருந்த பல்லாயிரக் கணக்கான வீரர்களின் கண்கள் கலைமானின் மருண்ட பார்வையுடன் தன்னையே பார்ப்பது போல பிஸா உணர்ந்தான்.



இடதுபுறமிருந்த குன்றின் மீதிருந்து, பீரங்கிப்படை குண்டுகளை மும்முரமாகப் பொழிந்துகொண்டிருந்தது. நேர் முன்னாலிருந்து பீரங்கிப்படையும் துப்பாக்கிப்படையும் குண்டுகளை வீசின. ஆச்சரியம், தனிமை, அறியாமை, முதலியன கலந்த நிலையில் தான் பெருமிதத்துடன் அநுபவமில்லாத அந்த இடத்தை நோக்கி முன்னேறுவது மடத்தனம் என்று பிஸா நினைத்தான். அப்படிப்பட்ட சூழ்நிலையில் அங்கே தன்னைக் கொண்டுவிட்ட தன் விதியைக் கூட நொந்துகொண்டான். ஆனால் அந்த லெப்டினன்ட் நடந்து கொண்டதையும், குன்றின் உச்சியில் குடியானவர்களைப் பார்த்துப் புன்முறுவல் செய்ததையும் நினைவுபடுத்திக் கொண்டான். பிஸா உணர்ச்சிவசப்பட்டுவிட்டான். இரும்புத்தொப்பியை நெற்றிக்கு இழுத்து விட்டுக்கொண்டான். மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு அவன் உறுதியுடன் மேலே நடந்து கொண்டிருந்தான். இருந்தாலும் அந்த லெப்டினன்டிடம் கொண்டிருந்த வெறுப்பு மாறவில்லை. எதிர்காலத்தில் ஒரு சமயம் இந்தக் குறும்புக்காரர்களையெல்லாம் கவனித்துக் கொள்ள பெருமுயற்சி செய்ய வேண்டியிருக்கும். அந்த வாய்ப்பு அவனுக்குக் கிடைக்கவேயில்லை. முன்பொரு முறை எவனோ ஒருவன் அவனைப் பார்த்துப் புன்முறுவல் பூத்ததால் அவன் இப்போது போர்க்களம் நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறான், என்ற ஞாபகமே அவனுக்கு அப்போது இல்லை. அது பின்னால்தான் அவனுக்கு வரப்போகிறது!

## IV

ஒரு சிறிய குன்றைச் சுற்றிக் கொண்டு அந்தச் சாலை ஓடியது. இந்தக் குன்றின்மேல் ஒரு பீரங்கிப் படை சாவதானமாக எதையோ நோக்கிச் சுட்டுக் கொண்டிருந்தது. என்ன அது என்

பது தெரியவில்லை. காற்றை எதிர்நோக்கி மறுபுறத்தில் கனத்த சேணங்களைத் தாங்கிக்கொண்டு சுமைக் கழுதைகள் அமைதியாகப் புல்வெளியில் மேய்ந்து கொண்டிருந்தன. பிஸா ஒரு சரிவான பாதை வழியாக அந்தக் குன்றின் மேலேறினான். உச்சியை அடைந்ததும் அவன் இருதயம் வேகமாக அடித்துக் கொண்டதை உணர்ந்தான். குன்றின் உச்சியில் போர் நிகழ்ந்து கொண்டிருக்கும் காட்சியை நேருக்கு நேராகப் பார்க்க வேண்டுமல்லவா? பிரம்மாண்டமான ஒரு புது வேகத்துடன் சண்டை நடைபெறுவதற்குதான் அங்கு தோன்றுவது ஒரு யுத்த தந்திரம்போல் பயன்படக் கூடும் என்று அவன் எண்ணி மலை உச்சியை நோக்கி விரைந்து ஓடினான். அந்தச் சமயத்திற்கு அந்த எண்ணம் உண்மை எனவே பட்டது. எப்படியோ அந்தப் போர்முனைகூட உண்மையில் ஒரு முக்கியஸ்தர் வருகிறார் என்பதை அறிந்திருந்தது போலத் தோன்றியது. நாகரிகமற்ற ஒரு ஜாதியாரின் பொம்மைத் தேவதைகளுக்கு இருப்பது போன்ற ஒருவித அழிவு இந்தப் போர்க்களத்திற்கே இருந்ததாக அவன் எண்ணினான். எனவே அவன் அதை நோக்கி விரைந்தான். போரையே ஆச்சரியத்திலாழ்த்திவிட வேண்டுமென்று அவன் விரும்பினான். இந்த யுத்த தேவதை தன்னுடைய சிம்மாசனத்தில் அமர்ந்து ஒரு நாய் உறுமிக்கொண்டிருந்ததைப்போல் நிலைகொள்ளாது தவித்த நிலையில் அவனை எதிர்நோக்கிச் சென்று அவனைத் திணற அடிக்க வேண்டுமென்று எண்ணினான். ஆனால் அதை எப்படிச் செய்வது? தன்னுடைய வரவை அந்த யுத்த அரக்கன் பயன்படுத்திக்கொண்டு ரத்தமும் புகையும் கக்கும்படி விடக்கூடாது. ஆகையால் அவனுக்குத் தெரியாமலேயே அப் போர்க்களத்தையடைந்து விடுவதுதான் அதற்குகந்த வழி என்று மனத்திற்குள்ளாக முடிவு செய்து கொண்டான்.

சுமைக் கழுதைகளையே பார்த்துக் கொண்டிருந்த சிப்பாய்கள், அவைகளிடம் கவர்ச்சிகரமாக ஏதும் காணப்படாத போதிலும் சேர்ந்து உட்கார்ந்து கொண்டு சாவகாசமாகப் பேசிக்கொண்டிருந்தனர். மற்றொருவன் மல்லாந்து படுத்துக்கொண்டு வானத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். இன்னொருவன் தன் இஷ்டப்படி இணங்கி வரவில்லை என்பதற்காக அவனுடைய கழுதையைச் சபித்துக் கொண்டிருந்தான். ராணுவ உடை அணிந்திருந்தும், அவர்களுடைய துப்பாக்கிகளும் பிறவும் உறைகளில் பத்திரமாக இருந்தன. அடிக்கடி குன்றின் முகட்டிலிருந்து நீளமான குண்டுகள் வேகமாகப் பறந்து சென்று பள்ளத்திலிருந்த மரங்கள், மலர்ச் செடிகள், புற்கள், இவற்றின் மீது விழுந்து வெடித்த வண்ணமிருந்தன. அந்த வெடிகளைப் பார்த்தும், அவற்றின் சப்தத்தைக் கேட்டும் பிஸா, அந்தச் சுமைக் கழுதைகளின் சொந்தக்காரர்கள் அமைதியாக அமர்ந்திருந்ததைப் பார்த்து, கொஞ்சம் தைரியமடைந்தான். ஒரு புகையிலைக் கடையில் உட்புகுந்தால் மரியாதைக்காக அளிக்கப்படும் நாற்காலியில் அலட்சியமாக உட்காரும் ஒரு மாலுமியைப் போல, அந்தச் சிப்பாய்களும் சண்டையைப்பற்றி எவ்விதக் கவலையுமின்றி சாவதானமான முறையிலேயே போரை ஏற்றுக் கொண்டனர். அல்லது பண்ணையிலிருந்த சிறுவன் ஒருவன் கடலுக்குச் சென்று அங்குள்ள சூழ்நிலைக்கேற்பத் தன்னைச் சரிப்படுத்திக் கொள்வதைப் போன்று நடைமுறையில் வழக்கமான முதல் தோல்விகளை அநுபவிப்பது போன்றதுதான் போரைப் பற்றிய அநுபவமும். அவர்களைப் பற்றியெல்லாம் நினைத்தபோது அவர்களைப் போல் தான் ஒருவனல்ல என்று எண்ணி மனம் மகிழ்ந்தான். அதில் அவனுக்கேன் அவ்வளவு திருப்தி, மகிழ்ச்சி. அந்தக் குடியானவ மடப் பயல்கள்தானே உலகம் முழுதிலும் அரசர்களைச் சிம்மாதனத்திலேற்றி வைத்து அவர்களுக்குப் பெருமை தேடித் தருவது? போர் புரிந்து விட்டு புகழையும் பெயரையும் தளபதிக்கு வாங்கித் தருவது? தொடர்ந்து வெற்றிகளை அடைந்தான் என்று படைத் தலைவன் அடையும் கீர்த்தி யாரால் கிடைத்தது? ராஜதந்திரிகளுக்குப் புகழ் தேடித் தருவதும் இவர்கள் தானே? இவர்கள் இதையெல்லாம் எப்படிச் செய்கிறார்கள்? அறியாமையாலும், அலட்சிய மனப்பான்மையாலும், பைத்தியக்காரனைப் போன்ற அரை வெறுப்புடனும் இக் குடியானவர்கள் தானே கடவுள் பெயராலும், அரசன் பெயராலும், பிரபுக்கள் பெயராலும், போரில் ஈடுபட்டு வலிமை மிக்க தங்கள் புஜபலத்தினால் உலகத்திலேயே ஒரு முக்கியமான சக்தியாக விளங்குகின்றனர். இவர்களை முட்டாள்கள் என்று சொல்வதில் தவறென்ன? தாங்கள் ஏதோ அழியாப் புகழ் தேடிக் கொள்ளுவதாகக் கனவு கண்டுகொண்டு தங்கள் சிந்தனா சக்தி, சுய அறிவு எல்லாவற்றையும் எங்கேயோ ஒரு மூலையில் ஒய்யாரமாக சிம்மாதனத்தில் அமர்ந்திருக்கும் ஒரு அப்பாவி அரசனுக்கு ஒப்படைத்துவிட்டு, தங்கள் விலை மதிக்க ஒண்ணாத உயிரை யாரோ ஒருவனுக்கு விலை பேசித் துரும்பாக மதித்துப் போரில் இயங்கும் மக்களை ஏன் முட்டாள்கள் என்று கூறக்கூடாது. இவ்வாறு எண்ணிக்கொண்ட பிஸாவுக்கு இந்த மடப் பயல்களை ஒரு உதை கொடுத்தாவது ஏன் உணர்ச்சியூட்டக் கூடாது என்றும் தோன்றிற்று.

அந்த மேட்டின் ஓரத்திற்கு மேல் அண்ணாந்து பார்த்தபோது பீரங்கிப் படை அதிகாரிகள் சிலர் மிக முக்கியமான ஒன்றைப் பற்றி விவாதித்துக் கொண்டிருப்பதைக் கண்டான். அவர்களும் இவனைப் பார்த்தனர். பிஸா உச்சியை நோக்கி ஏறிச் சென்று கொண்டிருந்தான். ஒரு கணம் கழித்து சிறிய துப்பாக்கிகள் ஏந்தி நின்ற சிப்பாய்களின் வரிசை ஒன்று அவன் மலைமீது ஏறி வருவதைக் கவனித்தது. அந்த அதிகாரிகளுக்குப் பிஸா ராணுவ முறையில் வணக்கம் செலுத்தினான். தான் ராணுவ முறையில் செலுத்திய வணக்கம் சரியான முறையில் அமைந்து விட்டதை எண்ணி அவனே வியந்து கொண்டான். அவனும் அந்தச் சமயம் மிகுந்த-

பரபரப்படைந்திருந்தான். மூச்சுக்கூட விட்டு விட்டு வந்தது. குடி போதையிலிருக்கும் ஒருவன் தள்ளாடித் தள்ளாடி நடக்கும் நிலையை மற்றவர்களிடமிருந்து மறைத்துக் கொள்ள விரும்புவது போல் பிஸா அப்போது அவன் பரபரப்பை வெளிக்குக் காட்டாமலிருக்க முயற்சித்துக் கொண்டிருந்தான். அந்த அதிகாரிகள் இதைக் கவனித்தது போல் காட்டிக் கொள்ளவில்லை. இவன் வணக்கத்திற்கு அவர்களும் பதில் வணக்கம் செய்தனர். அவர்கள் நின்றுகொண்டிருந்த இடத்திற்குப் பின்னால் பரந்து கிடந்த சமவெளியைப் பிஸா கண்டான். இதன் மத்தியில் மூன்று அணிகள் கறுப்புக் கோடுகள் வரைந்தாற்போல் வரிசையாகக் காணப்பட்டன. இந்த வரிசைகளில் முன் வரிசையில் புகைப் படலம் மிதந்து நுரைபோல் படர்ந்து காணப்பட்டது. இந்தக் குன்றின் இடது பக்கத்திலிருந்த ஒரு செங்குத்தான மலையிலிருந்து பீரங்கி முழக்கம் தணிந்து கேட்டுக் கொண்டிருந்தது. அவற்றின் வெடியினால் ஏற்பட்ட வெண்புகை மலையுச்சி முழுவதையும் சூழ்ந்து கொண்டிருந்தது. சமவெளியின் கருநிற அணி வரிசைகள் மெதுவாக நகர்வது போல ஒரு தோற்றம். அங்கிருந்து போந்த குண்டுகள் தலைக்குமேல் பறந்து சென்று வெடித்தன. பறவைகள் பயத்துடன் இறக்கைகளை அடித்துக் கொள்ளும் சப்தத்தைப் போன்று அக் குண்டுகள் ஒலி எழுப்பிக் கொண்டு சென்றன. புயலின்போது கடலின் தோற்றம் எப்படியிருக்குமோ, அதைப்போல இங்கே போர் முனையிலும் முதன் முதலாக இந்த அணிகளின் தோற்றத்தைக் கண்டான். ஆம், போர் நிகழ்ந்து கொண்டிருப்பதை அவன் பார்த்துக் கொண்டிருக்கிறான் அல்லவா? கொந்தளிக்கும் குளிர்ந்த பேரலைகளின் உச்சியில் வீசும் காற்றை எதிர்நோக்கி அவன் அப்போது நின்று கொண்டிருந்தான்.

தூரத்திலிருந்து ஒரு குரல் அவனை அழைத்தது கேட்டது. "ஐயா, நீங்கள் இங்கே என்ன செய்ய விரும்புகிறீர்கள்?" என்ற அந்தக் குரலைக் கேட்டு அவன் திரும்பினான். பீரங்கிப் படையின் காப்டன் தூய உடையுடன் தன்னருகில் நிற்பதைக் கண்டான். ஒரு கணம் மௌனம்.

"மன்னிக்கவும் ஐயா" என்றான் பிஸா, மறுபடியும் வணங்கியவாறே.

அதிகாரி இந்த முறை பதில் வணக்கம் செய்யவில்லை. பிறகு செய்து கொள்ளலாம் என்று விட்டு வைத்ததுபோல் தோன்றியது. பிஸாவை அந்தக் காப்டன் ஏற இறங்கப் பார்த்துக் கொண்டிருந்தான். "நீங்கள் ஒரு பத்திரிகை நிருபரா?" என்று அவன் கேட்டான்.

பிஸா ஒரு சீட்டை எடுத்து அவன் பக்கமாக நீட்டி "ஆமாம். நான் இங்கே வரும்போது ஒரு நிருபராகத்தான் வந்தேன். ஆனால் இப்பொழுது வேறு எண்ணங்கள் கொண்டிருக்கிறேன். நான் என்னாலான உதவி செய்ய விரும்புகிறேன். உங்களுக்குப்



புரிகிறதா? இந்தப் போரில் ஏதாவது என்னாலான உதவியைச் செய்ய விரும்புகிறேன்" என்று சொன்னான்.

"உங்கள் கருத்து என்னவென்று சொல்லுங்கள். நீங்கள் ஒரு கிரேக்கரா? சண்டையில் ஈடுபட விரும்புகிறீர்களா?" என்று கேட்டான் காப்டன்.

"ஆம். நான் ஒரு கிரேக்கன்தான். நான் போரில் கலந்து கொள்ள விரும்புகிறேன்" என்றான் சாவதானமாக. உதட்டிலிருந்து வந்த சொற்கள் அழுத்தமாக இருந்தன. அதைக் கண்டு பிஸாவே வியந்தான். பண்பு மிக்க முறையிலே நடந்துகொண்டதாக அவன் பெருமைப்பட்டுக் கொண்டான். சமவெளியில் எங்கோ ஒரு இடத்திலிருந்து கிளம்பிய குண்டு சமவெளியில் பயங்கரமாகப் பறந்து வந்து பூமியைத் தொடப்போவதே இல்லை என்று தோன்றும் வகையில் எங்கேயோ மறைந்தது. அது எங்கு விழுந்து வெடித்ததோ?

"இதோ பாருங்கள், இந்தச் சமயத்தில், இங்கே, ஒரு பயங்கரமான போரில் உம்மை உடனே ஈடுபடுத்த முடியும் என் என்னால் உறுதிகூற இயலாது. ஆனாலும்..." காப்டன் புன்முறுவலுடன் பேசினான் பிஸாவுடன். பீரங்கிகளுக்குப் பின்புறம் இப்படியும் அப்படியுமாக நடந்து கொண்டே இருந்தனர். பிஸாவுக்குக் கிரேக்கர்களின் அணியைக் காண்பித்தான். எதிரியின் தாக்குதலைச் சமாளிப்பதற்காக பாதுகாப்புத் திட்டங்களைப் பற்றித் தன் அபிப்பிராயங்களை அவன் விவரித்தான். விருந்து அளிப்பவன் விருந்தாளியுடன் பேசுவதுபோல அந்தக் காப்டன் பேசினான். அணியிலிருந்த இதர அதிகாரிகள் போர் சம்பந்தமாக அரசியல் விவகாரங்களைப் பற்றியெல்லாம் பிஸாவை வினவினர். கிரேக்க மன்னன், மந்திரி சபை, ஜெர்மனி, இங்கிலாந்து, ரஷ்யா முதலிய மகத்தான வார்த்தைகள் தொடர்ந்து அவர்கள் பேச்சில் வெளிவந்தன. ஏதென்ஸ் நகரத்திலுள்ள மக்களைப் பற்றியும் கேட்டனர். "ஏதென்ஸில் மக்கள் இருக்கிறார்களா?" என்றுகூடக் கேட்டனர். நகரம் காலிசெய்யப்பட்டுவிட்ட தென்ற எண்ணம் அவர்களுக்கு. இந்த ருசிகரமான பேச்சின்போது பிஸா, தோட்டாப் பெட்டியொன்றின்மீது உட்கார்ந்துகொண்டு மேலே பறந்து சென்ற ஒவ்வொரு குண்டையும் கவனித்துக் கொண்டிருந்தான். பல நாட்களாகக் காட்டில் கெட்டலைபவர்களைப்போல் காணப்பட்டனர் இந்த அதிகாரிகள். வெளியுலகத்திலிருந்து எவ்விதச் செய்தியுமே அவர்கள் அதுவரையில் கேட்டதில்லை. எனவே சிறு சிறு செய்தித் துணுக்குகளுக்குக்கூட ஏங்கிக்கிடந்தனர். இருந்தாலும் எப்பொழுதாவது ஒருவன், கிடைத்த செய்தியை மறுத்துக் கூறுவதுமுண்டு. "செர்வியா அதற்கு என்ன சொல்லவிருக்கிறது?" என்று ஒருவன் கேட்பான். இல்லை, இல்லை, ஃபிரான்சும் ரஷ்யாவும் அதை அனுமதிக்கப் போவதில்லை என்பான் மற்றொருவன். இம்மாதிரிப் பேச்சையெல்லாம் கேட்ட பிஸா குதூகல

மடைந்தான். பறந்துசென்ற குண்டுகள் ஒருவரையும் கொல்லவில்லை. போர் என்பது அப்படி ஒன்றும் மோசமாக இல்லை! ஏதோ ஒரு தூரதராலயத்தில் உள்ள ஓய்வு அறையில் அவன் காபியைச் சுவைத்துக் கொண்டிருக்கும்போது இதர நாடுகளின் பெயர்கள் அடிபட்டுக் கொண்டிருக்குமே அதுபோலத்தான் இங்கேயும் இருந்தது.

போர்ப்பள்ளங்களில் முடங்கிக்கிடந்த சிப்பாய்களின் வரிசையில் ஒரு வதந்தி திடீரென்று உலவியது. தூய வெண்ணிற ஆடையுடனும் இரும்புத் தொப்பியுடனும் அவர்கள் மத்தியில் தோன்றிய அந்தப் புது மனிதர் இங்கிலாந்து பீரங்கிப் படையின் புகழ் பெற்ற அதிகாரி என்றும், இந்த ராணுவத்திற்குத் தன் அநுபவ மிக்க ஆலோசனையைக் கூறவே வந்திருக்கிறார் என்றும் பேசிக் கொண்டனர். அதிகாரிகளால் சூழப்பட்டிருந்த பிஸாவின் உருவத்தை அவர்கள் உற்று உற்றுப்பார்த்தனர். அவர்கள் எல்லோரும் குசுகுசுவென்று பேசிக்கொள்ளுவதிலிருந்தும், தன்னை வெறுத்துப் பார்ப்பதிலிருந்தும் தன் வருகை முக்கியத்துவம் பெற்றிருந்தது என்பதைப் பிஸா புரிந்துகொண்டான். இச் சிறு செயலுக்கே இவ்வளவு பெருமை கிடைத்ததைக்கண்ட பிஸா மேலும் சிறப்பாக ஏதாவது காரியம் செய்யவேண்டும் என்றும் எண்ணினான். கிரேக்க காலாட்படை போர் நடவடிக்கையிலீடுபட்டிருந்த அந்த மலையை ஒருமுறை உற்றுப்பார்த்து விட்டு, பீரங்கிப் படைக் காப்டனிடம் தான் அந்தத் திசையில் சென்று உடனே போரில் கலந்து கொள்ள விரும்புவதாய்ச் சாவதானமாக் கூறினான். தான் ஒரு தேசாபிமானி என்பதையும், தன்னுடைய தேசிய உணர்ச்சிகளையும் அவன் அந்தச் சமயம் அவ்வார்த்தைகளின் மூலம் வெளிப்படுத்திக் கொண்டிருந்தான்.

காப்டன் வியப்புற்றவன் போன்று காணப்பட்டான். "அவசியமில்லை. இங்கேயே இன்னும் சில நிமிஷங்களில் சண்டை தொடங்கும். அதுவே போதுமானதாயிருக்கும் நீங்களும் எங்களுடனேயே தங்கியிருப்பது நலம் தரும். மேலும் மறுபடிம் சுட ஆரம்பிக்க வேண்டுமென்று எனக்கும் உத்தரவு வந்திருக்கிறது" என்று சொல்லி அதிகாரிகளனைவரும் அவன் அங்கிருந்து சென்று விடாதபடி பார்த்துக்கொண்டனர். அவ்வளவு சிரமம் எடுத்துக் கொள்ளவேண்டாம் என்று சொல்லி அவனைத் தடுத்தனர். சற்று நேரத்தில் பீரங்கிப் படை வேலை செய்யத் தொடங்கும். அவனுக்கு வேண்டிய காட்சியை அங்கேயே காணலாம்.

தன்னுடைய தேசிய உணர்ச்சிகளைப் பற்றி எவ்வளவோ உயர்வாகப் பேசியும் இந்த அதிகாரிகள் அவனுடைய பிரகடனங்களைக் கொஞ்சமும் லட்சியம் செய்யவே இல்லை. அவர்கள் அநுபவமிக்க அதிகாரிகளல்லவா? அவர்களுக்கிடையில் தான் பயனற்ற முறையில் தன்னைப் பற்றிக் கூறிக் கொண்டே திரிந்து கொண்டிருப்பது போல் உணர்ந்தான் பிஸா. அவர்களனைவரும் களைத்துப் போயி



ருந்தனர். அவர்களுடன் சண்டை செய்தவர்களையே அவர்கள் தாக்கினர். ஒருவகையான வெற்றுச் சொற்களின் அரட்டை தான் சண்டையில் அவர்கள்பால் பெரும் பங்கு வகித்தது. மேலும் பலர் அந்த முறையில் தான் பேசினர்; ஓயாது பேசினர். போரே பெரும் வாய்ப் போர்தானோ என்றுகூடத் தோன்றியது.

முதலில் அவர்கள் தன்னை அன்புடன் நடத்துவதாகத்தான் பிஸா நம்பினான். அவன் அநுபவம் இல்லாதவன் என்பதை உணர்ந்து அவனிடம் அநுதாபத்துடன் அவர்கள் நடந்து கொண்டனர். சண்டையே இவ்வளவு மிருதுவாகவும் சாதாரணமாகவும் இருப்பதை அவன் கண்டான். அவன் கொண்ட கருத்துக்களுக்கும் நேரில் கண்டவைகளுக்கும் உள்ள வேற்றுமையைக் கவனித்து வெறுப்புற்ற அவன் அவர்களுக்கு ஒரு வணக்கம் செலுத்திவிட்டு தடைகளையும் புறக்கணித்து விட்டு சண்டை நிகழ்ந்து கொண்டிருக்கும் இடத்தை நோக்கிப் புறப்பட்டான்.

எனினும் பின்னர் அவர்கள் நடந்து கொண்ட விதத்தை அவன் எண்ணிப் பார்த்தபோது தங்களுடைய சாகசச் செயல்களைக் காட்டி யாரையாவது ஒருவனைப் பரவசப்படுத்த வேண்டும் என்ற அசட்டு எண்ணத்தால் தூண்டப்பட்டுத்தான் அவர்கள் அவ்வாறு நடந்து கொண்டனர் என்று உணர்ந்தான். அவர்கள் சீக்கிரத்திலேயே போரில் இறங்கப் போகிறார்கள். சண்டையின் போது, அச்சமின்றி கச்சிதமாகத் தாங்கள் செயல்படுவதை அவன் பார்க்க வேண்டுமென்று அவர்கள் விரும்பினர்.

## V

மலை உச்சியில் காலாட்படை போர் புரிந்து கொண்டிருந்த இடத்திற்கு மெதுவாக ஏறி வந்த வழியில் பிஸா துப்பாக்கி ரவை பாய்ந்து கன்னத்தில் பாதி பிய்ந்துபோன ஒரு சிப்பாயைப் பார்த்து அதிர்ச்சியடைந்தான். கண்ணீர் வழிய, இரண்டு தோழர் கள் அவனைச் செங்குத்தான அப்பாதையில் கீழே எடுத்துச் சென்று கொண்டிருந்தனர். அவன் மார்பகம் முழுவதும் ஒரே ரத்தம். காயத்தின் மீது சுற்றியிருந்த துணியிலிருந்து ரத்தம் சொட்டுச் சொட்டாகத் தெறித்துப் பாதையில் கற்களெல்லாம் ரத்தம் தோய்ந்திருந்தன. அவன் ஒருகணம் பிஸாவை உற்றுப் பார்த் தான். அந்தப் பார்வையின் கருத்தைப் பிஸாவால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் அதைப் புறக்கணிக்கவும் முடிய வில்லை. அவன் ஒரு பிசாசைப் பார்ப்பதாகவே எண்ணினான். ஏனெனில் மனிதனுக்கு இருக்க வேண்டிய அடையாளங்களைத் தும் எப்படியோ இம்மனிதனின் முகத்திலிருந்து மறைந்து விட்டன. பிஸா அவர்களைத் தாண்டிச் சென்றபொழுது அவனைத் தாங்கிச் சென்ற சிப்பாய்களில் ஒருவன் அவனைக் கூவி அழைத்து அவர்களுக்கு உதவியாக வரும்படி வேண்டினான். ஆனால் பிஸா

வின் விரல்கள் கூட உதவி செய்ய மறுத்தன. அவனுடைய பிசாசு போன்ற உருவத்தைக் கண்டு பிஸா பயந்தான். அதை நெருங்கக் கூட அவனுக்குத் தைரியமில்லை. அவன் பாதை வழியே மேலே ஏறி வேகமாக ஓடினான். ஆமாம், போர்முனையிலிருந்தே அவன் ஓட்டம் பிடித்துக் கொண்டிருந்தான்.

குன்றின் உச்சியில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஒரு அணியின் பகுதிக்கு அவன் வந்தான். மற்றொரு பீரங்கிப் படை அங்கிருந்த சமவெளியிலுள்ள எதிரிப் படை மீது குண்டுகளை வீசிக் கொண்டிருந்தது. போர்ப் பள்ளங்களில் காலாட்படைகள் குழுமி இருந்தனர். போரின் ஆதார நிலையத்தில் மேலும் பல அரண்கள் அமைந்திருந்தன. இவைகள் அனைத்தும் பலத்த தாக்குதலில் ஈடுபட்டிருந்தன. கண்ணுக்கெட்டிய தூரம் சமவெளி பரந்திருந்தது. சமவெளிக்கப்பால் ஒரு வெண்பனி மூட்டமும் பனி மூடிய பெருமலைகளும் வானளாவி நின்றன. கிரேக்கத் துருப்புக்கள் இருந்த இடத்திற்கெதிரே உள்ள புல்வெளியில் பச்சையும் மஞ்சளுமாகத் தானிய வயல் வெளிகளடர்ந்த இரு சிறு குன்றுகள் இருந்தன. அவற்றிற்கிடையே தான் எதிரியின் சைன்யம் அணிவகுத்துப் போரிட்டுக் கொண்டிருந்தது. இங்கிருந்து பார்த்தபோது மரங்களின் வரிசையொன்றும், ஒரு கிராமமும், ஒரு சாலையின் மங்கிய தோற்றமும் இப்பரந்த வெளியில் சித்திரம் போலத் தெரிந்தன. ஆனால் அவை வெறும் கிராமம் அல்ல. துருக்கியப் படை வீரர்கள் அதில் நிலைபெற்றிருந்தனர். இந்த இரண்டு சிறு குன்றுகளுக்கும், கிரேக்கர்களுடைய மலை உச்சிக்குமிடையே துருக்கித் துருப்புகளின் நடமாட்டம் வரிசை வரிசையாக மை போன்று கரு நிறம் பெற்றிருந்தது. முன் அணி புகையில் மூழ்கி இருந்தது. ஆனால் அதற்குப் பின்புறத்திலிருந்த படையினர், இங்குமங்கும் உணவுத் தட்டில் எறும்புகள் ஊர்வன போல், நடமாடிக்கொண்டிருந்தனர். ஒரு மனிதக் கூட்டம் தனக்கு நேரவிருக்கும் அழிவு, முடிவு முதலியவற்றை இயற்கை முன்கூட்டியே உறுதியான சந்தேகமற்ற முறையில் அறிவித்துவிடுகிறது என்பதைச் செவ்வனே உணர்ந்த பின்னருங்கூட, அத்தகைய அழிவுக்குக் கலங்காமல் அதை எதிர் நோக்கி நிற்கும் காட்சியை பிஸா இதுவரையில் கண்டதேயில்லை. இப்படி ஒரு மனிதக் கூட்டம் நடந்து கொள்ளும் என்பதே அவன் கற்பனைக் கெட்டாததாக இருந்தது. தாக்குதல் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. நீர்வீழ்ச்சியின் ஓசையைத் தோற்கடிக்கும் கோஷத்துடன் அடுக்கடுக்காக வெளிவந்த பீரங்கிப் படையின் குண்டுமாரி தொலைதூரத்திலிருந்த பனி படர்ந்த குன்றுகளின் கம்பீரத்திற்கு எவ்வகையிலும் ஏற்றதாகவே இருந்தது. வெளிறிப் போயிருந்த பிஸா தான் ஒரு தூணின் மேல் சமைக்கப்பட்டிருப்பதாகவும் அங்கிருந்து மனித குலத்தையும் உலகத்தையும் தான் கண்ணோட்டமாகக் கவனித்துக் கொண்டிருப்பது போலும் உணர்ந்தான். இதற்கிடையே அவன் கண்ணில் தூசு விழுந்து விட்டது;



அதைத் துடைக்க கைக்குட்டையை எடுத்து யந்திரம் போல் கண்ணில் ஒற்றிக் கொண்டான்.

நீலங்கலந்த இரண்டு பட்டைகள் தைக்கப்பட்ட சராயணிந்த ஒரு அதிகாரி பீரங்கியிருந்த இடத்திற்குப் பின்புறம் வந்தான். கையில் ஒரு சிறிய பிரம்பை வைத்து ஆட்டிக்கொண்டே இருந்தான். சில சமயங்களில் அவனுடைய கண்ணாடிகளின் மூலம் களத்தை ஆராய்ந்து பார்த்தான். பிஸா வருவதைக் கண்டவுடன் "போர்க்களம் நல்ல அருமையான காட்சியப்பா!" என்றான் பிஸாவைப் பார்த்து. பரக்க விழித்துக் கொண்டிருந்த பிஸாவுக்கு அது நெஞ்சில் விழுந்த ஒரு அடி போன்றிருந்தது. போரைப் பற்றி இப்படி ஒரு கோணத்திலிருந்தும் ஆராயலாம் போலிருக்கிறது என்ற உணர்ச்சியைப் பிஸாவுக்கு உணர்த்தியது.

"ஆமாம் ஐயா, மிக அருமையான காட்சிதான்" என்று பதிலளித்தான் பிஸா.

அவர்கள் ஃபிரஞ்சு மொழியில் பேசிக் கொண்டனர். "நாங்கள் சிறிது பயிற்சி செய்யும் வகையில் தாக்குதல் நடத்திக் காட்டுகிறோம். அதைத் தாங்கள் கண்டு மகிழும் சந்தர்ப்பம் எங்களுக்குக் கிடைத்ததற்கு நாங்கள் சந்தோஷப் படுகிறோம்" என்றான் அந்த அதிகாரி. மேலும் தொடர்ந்து "அதோ தூரத்தில் தெரிகிறதே எதிரிகள் துருப்பின் நடமாட்டம். அவர்களில் வலது சாரியிலிருப்பவர்கள் மீது இப்போது நாங்கள் சுட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்கள் ஒரு எதிர்த் தாக்குதலுக்குத் தயார் செய்து கொண்டிருக்கலாம்," என்றான்.

பிஸா புன்முறுவல் பூத்தான். அவர்களிடையே மரியாதையும் பண்பும் கொஞ்சமேனும் குறையாது அநுசரிக்கப்பட்டது. ஒரு புறம் சாவு— அதன் பக்கத்தில் பழக்கமும் பண்பாடும்.

பீரங்கிப்படை வலது பக்கத்திலிருந்து இடியென முழங்கியது. புகையும் நெருப்பும் ஏககாலத்தில் கக்கின. விரைந்து பாய்ந்த குண்டுகள் போனது தெரியாமல் சென்றன. காதுக்கு ஓசை மட்டுமே கேட்டது. சங்கு ஊதுவது போன்ற அலறல், இடியென முழங்கிய பெரும் சப்தம். குண்டுகள் வெளிப்போந்த வேகத்தில் 'ஹோவட்ஸர்' பீரங்கிகள் பின்னுக்குத் திரும்பி, அவற்றின் சுக்கான்கள் கூட உயர்ந்து அந்தரத்தில் சுழன்றன. பீரங்கிப் படையினர் வேகமாக வந்து அவைகளை மறுபடியும் அவற்றிற்கு உரித்தான இடத்தில் பொருத்தி வைத்தனர். ஒவ்வொரு பீரங்கியும் தன்னால் இயன்ற அளவு பிரயாசை எடுத்துக் கொண்டு இந்தப் பிரம்மாண்டத் தாக்குதலில் ஈடுபட்டன என்பது பின்னால் தெரிந்தது. காது செவிடுபடும்படி பெரும் முழக்கங்களை அவை எழுப்பின. இடிமுழக்கம் பீரங்கியையே நடுங்கச் செய்தது. ஒவ்வொரு குண்டு வெடித்த பின்னரும் பீரங்கி பின்னுக்குச் செல்வது, யுத்தத்திலிருந்து புறமுதுகு காட்டியோடும் கோழைகளைப் போல் தோன்றிற்று. ஆனால் அவர்களைத் தப்பி ஓடவிடாது இந்தச் சிப்பாய்

களின் கூட்டம் பீரங்கிகளை வளைத்து அவற்றின் வேலையைத் தயக்கமின்றிச் செய்யத் தூண்டின. இவ்வாறு பீரங்கிகள் எல்லாம் ஒருமுகமாக நிறுத்தப்பட்டு செயலில் ஈடுபட்டன. அவை ஒவ்வொன்றும் தனித்தனியாக ஒலியை எழுப்பி, குண்டுகளைப் பொழிந்து அதற்குண்டான எஃகும், மரமும், தீயும், ஒளியும் கக்கிவிட்டு மனிதர்களுக்கு ஆனந்தமூட்டிக் கொண்டிருந்தன.

ஒவ்வொரு முழக்கத்தின் போதும் பக்கத்திலிருந்த காலாட்படை புன்முறுவல் பூத்த முகங்களுடனும், மகிழ்ச்சி நிறைந்த பேச்சின் மூலமும் பீரங்கிப் படையினரைப் பாராட்டிக் கொண்டிருந்தது.

ஒரு தடவை '' அதோ பாருங்கள் ஐயா '' என்று அந்த அதிகாரி பிஸாவுக்கு முன்னால் லேசான புகை தெரிந்த ஒரு இடத்தைத் தன் விரலால் சுட்டிக் காட்டினான். அவன் காட்டிய திசையில் சமவெளியில் எதிரியின் காலாட்படை தங்களைத் தாக்குவதற்காக முன்னேறி வந்து கொண்டிருந்ததைப் பரபரப்புடன் பார்த்தான். மசி போன்று கருமையாகக் காணப்பட்ட அணிகளிலிருந்து மனிதனின் நாக்கைப் போல் நீட்டிக் கொண்டிருந்த முன் அணியினர் மெதுவாக, நிதானத்துடன், ஆரவாரமின்றி முன்னேறிக் கொண்டிருந்தனர். நடக்கப் போவது நடந்தே தீரும் என்ற நம்பிக்கையைப் பறைசாற்றுவது போல் வந்து கொண்டிருந்தது.

இந்தத் தாக்குதலைச் சமாளிக்க கிரேக்கப் படையினர் தக்க நடவடிக்கைகளைத் தயங்காது மேற்கொண்டனர். அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்தனர். காலாட்படையினர் ஒருவரையொருவர் சட்டையைப் பிடித்து இழுத்து நிறுத்தினர். அணியில் ஒரு சலசலப்பு. ஒரு எழுச்சி, எல்லோருடைய கண்களும், மலையடிவாரத்தில் கூட்டமாக வந்த எதிரிகளின் அணியையே கூர்ந்து நோக்கின. சதுப்பு நிலத்தில் ஓடும் ஓடைகளில் ஒன்றைப்போல் அது காணப்பட்டது.

ஒவ்வொருவரிடமும் பிஸா ஒரு கேள்வியைக் கேட்டுக் கொண்டிருந்தான். வழியிலும், ஒதுங்கி நின்ற இடத்திலும் அவன் தொடர்ந்து அதே கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தான். '' அவர்கள் இந்த இடத்தைக் கைப்பற்றிக்கொள்ளுவார்களோ? அவர்கள் இந்தக் குன்றின் மேட்டைப் பிடித்துக்கொள்ளுவார்களா? அவர்கள் இங்கே வந்து விடுவார்களா ?'' ஆனால் அவன் கேள்விகளுக்கு ஒருவனாவது பதிலளிக்கவில்லை. செவிடர்கள் கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தது போலவே தோன்றியது. ஒவ்வொருவனும் அவனவன் செயலில் முழுக் கவனத்துடன் ஈடுபட்டிருந்தான். இந்தப் புதிய மனிதனை—வெள்ளைத் தொப்பியுடன் நடுங்கிய குரலில் பேசிக்கொண்டிருந்தவனை—அவர்கள் பார்த்ததாகவே தெரியவில்லை அந்தச் சமயத்தில்.

இறுதியில் விரைந்து வந்த காப்டன் அவனைக் கண்டு ''இல்லை, இல்லை. அது நிச்சயமாக முடியாத காரியம் ஐயா!'' என்று அவன் வினாவினுக்குப் பதிலளித்தான். அவன் கோபத்துடன் பேசினான். அவன் பேசிய விதம்; போதிய நேரமிருந்தால் பிஸாவை அவமானப்படுத்தியிருப்பான் போலக் கூடத் தோன்றியது. திட்டு கலந்த பாகத்தைக் களைந்தெறிந்துவிட்டு பதிலைமட்டும் பிஸா எடுத்துக்கொண்டான். கையைத் தூக்கி அவனுக்கு வணக்கம் செலுத்திவிட்டு தாக்குதலுக்கு இலக்காயிருந்த கிரேக்கர்களின் அணியை நோக்கிக் குன்றின் உச்சியிலேயே அவன் ஓடத் தொடங்கினான்.



## VI

மலையின் உச்சி வழியாக ஓடிய பொழுது, பிஸா தன் செயல் எதிரியின் கோபத்தைக் கிளறி விடுமோ என்று நினைத்தான். தன் செய்கையின் மூலம் விரோதியின் ஆயிரக் கணக்கானவர்களின் வெறுப்புப் பார்வைக்கு இலக்காவது அவனுக்கு அப்பொழுது மிகவும் அசட்டுத் தனமாகப்பட்டது. மாதா கோவிலொன்றில் அறிவு கெட்ட சில காரியங்களைச் செய்யத் தூண்டப்பட்ட ஒரு இளைஞனின் நிலையைப் போன்றிருந்தது அவன் நிலையும். ஒருவேளை ஓடும்பொழுது உணர்ச்சி வசப்பட்டிருக்கவும் கூடும். இவ்வாறு அவன் சென்றபோது சண்டை கூட சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொண்டு நின்றுவிட்டதோ என்று அவனுக்குத் தோன்றியது. இந்த இக்கட்டான நிலையைச் சீக்கிரமே முடிக்க எண்ணி பாறையின் மேல் அவன் தலைதெறிக்க ஓடினான். துப்பாக்கியைச் சுடுவதற்குத் தயாராய் வைத்திருந்த ஆர்வமிக்க சிப்பாய்களின் இடத்தை அவன் வந்தடைந்த பொழுது, மகிழ்ச்சியால் கூச்சலிட விரும்பினான். ஆனால் காலாட்படையில் ஒரு இளம் அதிகாரியைத் தவிர வேறு ஒருவனும் அவனைக் கவனிக்கவில்லை. அதிகாரி மட்டும் '' உங்களுக்கு என்ன வேண்டும் '' என்று பிஸாவை வினவினான். அவரவர் காரியங்களையும் சிறிது கவனித்துக் கொள்ளும் ஜனங்கள் அங்கே இருந்தனர் என்பது தெளிவாகத் தெரிந்தது.

எல்லாவற்றிற்கும் மேலாகத் தன் தந்தையர் நாட்டிற்காகப் போர் செய்ய விரும்புவதாகப் பிஸா கிரேக்க பாஷையில் சொன்னான். அதிகாரி அதைக் கேட்டு தலையை அசைத்து விட்டு புன்முறுவலுடன் அருகாமையில் போர்வையால் மூடப்பட்டு கிடத்தப்பட்டிருந்த பிணங்களைச் சுட்டிக் காட்டினான். அவர்களுடைய போர்வைக்கு வெளியே தூசு படிந்த ஜோடுகள் காலிலிருந்து கழற்றப் படாமலே நீட்டிக் கொண்டிருந்தன.

'' ஆம், எனக்குத் தெரியும்; எனக்குத் தெரியும் '' என்றான் பிஸா. போரில் ஏற்படக்கூடிய ஆபத்தைப்பற்றி அந்த அதிகாரி குறிப்பாகத் தனக்கு உணர்த்துவதாக பிஸா நினைத்தான்.

'' இல்லை. நான் சொல்ல வந்தது தோட்டாக்களைப் பற்றி—பிணங்களின் உடலில் கழற்றப்படாமலிருக்கும் தோற்கச்சையைப் பற்றி. அவர்களிடமிருந்து ஒரு கச்சையைக் கழற்றி எடுத்துக்

கொள்ளுங்கள்'' என்றான் அந்த அதிகாரி தாமதமின்றி. ஒரு சடலத்தை நோக்கி பிஸா மிகுந்த எச்சரிக்கையுடன் சென்றான். போர்வையின் ஒரு மூலையைக் கையால் விலக்கினான். பிறகு சற்றுத் தயக்கம். அவன் கை கட்டியாக உறைந்து விட்டது போன்ற ஒரு எண்ணம். பின்னால் ஏதோ சப்தம் கேட்கவே அவன் விரைந்து எழுந்தான். அருகிலிருந்த அணியைச் சேர்ந்த மூன்று சிப்பாய்கள் அவனைக் கவனித்துக் கொண்டிருந்தனர். அதிகாரி மறுபடியும் அங்கே வந்தான். அவன் தோளில் லேசாகத் தட்டி '' ஏதாவது புகையிலை வைத்திருக்கிறீர்களா ?'' என்று கேட்டான். பிஸா அவனைப் பார்த்து மிரள மிரள விழித்தான். அவன் கை இன்னும் மூடியிருந்த போர்வையை நோக்கியே நீண்டிருந்தது.

'' இருக்கிறது. என்னிடம் கொஞ்சம் புகையிலை இருக்கிறது '' என்று பதிலளித்தவாறே தன் சிறு பையை அவனிடம் நீட்டினான். அதற்கு ஈடு செய்வது போன்று, அதிகாரி, சடலத்திலிருந்து கச்சையை எடுத்துத் தருமாறு ஒரு சிப்பாயை ஏவினான். நீண்ட தோட்டாப் பையைத் தன் மார்பில் அணிந்து கொண்ட பிஸா, இறந்து போனவன் தன் இரு கரங்களையும் நீட்டித் தன்னைத் தழுவிக்கொள்ளுவது போன்ற உணர்ச்சி அடைந்தான்.

தலையை லேசாக அசைத்தவாறே புன்முறுவலுடன் ஒரு சிப்பாய் பிஸாவுக்கு ஒரு கைத் துப்பாக்கியைத் தந்தான். அதுவும் இறந்துபோன ஒருவனுடைய பொருள்தான். தன் கழுத்தைச் சுற்றி ஒரு பிரேதத்தின் தழுவலுக்கு மேலாக இப்போது துப்பாக்கி வேறு புற்றிலிருக்கும் ஒரு பாம்பு போன்று பயங்கரமாக அவனைச் சுற்றிக் கொண்டது. இறந்து போன இருவருடைய குரல்கள் போன்று ஏதோ அவன் காதருகில் கேட்பதாக ஒரு பிரமை. போரில் நேரிடும் அங்கவீனம் பற்றியும், சாவைப் பற்றியுமே அவர்கள் மெல்லிய குரலில் பேசியது போல் ஒரு எண்ணம். அந்தத் தோற்பை அவனை மேலும் கெட்டியாக இறுக்கியது. மூச்சுத் திணறுபவனைப் போன்று கழுத்திற்குத் தன் கைகளைக் கொண்டு செல்ல வேண்டுமென்று நினைத்தான். கைத்துப்பாக்கி வேறு கையில் விகாரமாகக் காட்சி தந்தது. அவனுடைய உள்ளங் கைகளில் பாம்பொன்று நெளிவது போல உணர்ந்தான். அது ஊர்ந்து சென்றது பயங்கரமாயிருந்தது.

அவனைச் சுற்றிலும் இந்தக் குடியானவர்கள் மட்டுமேயிருந்தனர். அவர்களுக்குப் பிரியமானவர்களுடன் சண்டையைப்பற்றி பேசிக் கொண்டனர். அடிக்கடி சிப்பாயொருவன் பாதி நகை மூட்டும் விதத்தில் தன் தாகத்தைப் பற்றிப் புலம்புவான். தாடிக்காரனொருவன் காய்ந்துபோன ரொட்டியொன்றை உட்கார்ந்து தின்று கொண்டிருந்தான். பருத்த தேகத்துடனும், பசையுற்ற சருமத்துடனும் உட்கார்ந்திருந்த அவன், கொழுப்பால் செய்யப்பட்ட சிலைபோன்று இருந்தான். இவனைப் பார்த்தபோது பிஸாவுக்கு கவிதைகள் புனையவும் பியானோவை நன்றாக வாசிக்கவும்



கூடிய ஒரு இளம் மாணவனுக்கும் இவனுக்கும் ஒரு வேறுபாடிருந்தது என்ற ஹாஸ்ய உணர்ச்சி தோன்றியது. இந்தக் கிழட்டுக் கருந்தலை அந்தச் சூழ்நிலையிலும், சாவகாசமாகக் கொஞ்சம் கொஞ்சமாக ரொட்டியைக் கடித்துக் கொண்டிருந்தான்— பிஸாவோ செத்துப் போனவனின் கரங்களால் அமுக்கப்பட்டு மூச்சுக்கே திணறிக் கொண்டிருந்தான்.

அவன் பின்னால் திரும்பிப் பார்த்தபோது ஒரு சடலத்தின் தலை மட்டும் போர்வையால் மூடப்படாதிருந்ததைக் கண்டான். அதன் முகத்தில் திரவம் போன்ற இரு கண்கள் தன்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தன. அதன் தலை கொஞ்சம் பக்க வாட்டில் சாய்ந்திருந்ததால் தன்னை நன்றாகவே ஆராய்ந்து பார்க்க அதற்கு வாய்ப்பிருந்தது போல் தோன்றியது. பிஸா தன் முகம் வெளுத்துப் போவதை அறிந்தான். இறந்துபோன இந்த மனிதர்களால் மெதுவாக ஆனால் உறுதியாகத் தானும் கீழே இழுத்துச் செல்லப்படுவதாக பிரமை ஏற்பட்டது. எங்கே இழுத்துச் செல்லப்பட்டான்? பூமிக்கடியிலுள்ள கல்லறைக்குச் சமமான இடத்திற்கு— அங்கு அவர்கள் நடப்பர்—உப்பிப் போயிருந்த ரத்தக்கறை படிந்த இந்தப் பயங்கர உருவங்கள் அவனை இழுத்துச் சென்றன. அதிகாரத் தோரணையுடனே அவர்கள் அவனைக் கட்டளையிட்டதாகத் தோன்றியது. அதை மீற முடியாமல் அவன் போய்க் கொண்டிருந்தான் — போய்க் கொண்டிருந்தான் — போய்க் கொண்டேயிருந்தான் என்ற பிரமை நிலைத்து விட்டது.

இதன் காரணமாகப் புதிய வெண் தொப்பி அணிந்திருந்த பிஸா சற்று பின்னால் வந்த பொழுது, சிப்பாய்களில் பலர் அவனும் தாக்கப்பட்டானோ என்றே சந்தேகித்தனர். ஆனால் அவனருகில் இருந்தவர்கள் அங்கிருந்த நிலைமையை நன்றாக அறிந்திருந்தனர். இல்லாவிடில் அவர்கள், ரவையின் மெல்லிய வழவழப்பான சப்தத்தையும் அதைத் தொடர்ந்து 'தொப்' என்று அது பாயும் ஒலியையுமே கேட்டிருப்பர் அல்லவா ? அவர்கள் அவனை நன்றாகச் சபித்தனர். தம்மைத் தாமே பெருமையுடன் பாராட்டிக் கொண்டனர். கோழைத்தனமுடைய செயலின் தன்மை ஒருபுறமிருக்க, தம்முடைய சொந்த தைரியத்தைப் பற்றி அவர்கள் உயர்வாகப் பாராட்டிக் கொள்ள இப்போது ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததல்லவா ? மற்ற சிப்பாய்கள் பிஸாவுக்கு கழுத்திலோ அல்லது வேறெங்கேயோ காயம் பட்டிருக்க வேண்டுமென்று நினைத்தனர். ஏனெனில் அவன் ஓடும்பொழுது வெறி பிடித்தவனைப் போன்று தான் அணிந்திருந்த தோற் பையைப் பிய்த்தெறிந்தபடியே ஓடினான். பிஸாவுக்கு அது இறந்தவனின் கைகள்தானே ! ரொட்டி தின்று கொண்டிருந்த சிப்பாய்கூட சிறிது நேரம் தயங்கினான். ஓடிக் கொண்டிருந்த பிஸாவின் தைரியத்தைப் பற்றிக் கேலியாகப் பேசிக் கொண்டிருந்தான்.

விரோதியின் அணி எவ்வளவு தூரத்திலிருப்பது என்பதை

விளக்கி பார்வைகளை அதற்கேற்பச் சரி செய்யும் அதிகாரி ஒருவன் திடீரென்று குரல் கொடுத்தான். அணிகளில் கலகலவென்னும் ஒலி எழுந்தது. சிப்பாய்களின் பார்வை முன்னால் நிலைத்தது. அவர்களுக்கிடையே இருந்த மற்ற அரண்களும் வலதுபுறமிருந்தவையும் இதற்குள்ளாக யுத்த நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தன. நீல வானை நோக்கிப் புகைப்படலம் எழுந்தது. ரொட்டி வைத்திருந்த சிப்பாய் அதை ஜாக்கிரதையாக ஒரு தாளில் சுருட்டி வைத்துக்கொண்டு அவனுடைய போர்ப் பள்ளத்துக்குள் பதுங்கிக் கொள்ளத் திரும்பினான்.

## VII

மலையின் மீது கவலையற்று விளையாடிக் கொண்டிருந்த குழந்தை மந்தையோட்டும் விளையாட்டை சிறிது நேரத்திற் கெல்லாம் நிறுத்தி விட்டது. அந்தக் குன்றின் அடிவாரத்தில் சமீபமாகவே சண்டையின் ஒரு பகுதி நடைபெற்றுக் கொண்டிருந்ததால் சப்தம் மிக அதிகமாயிருந்தது. சில சமயம் புகைப்படலம் மேலே கிளம்பி கொந்தளிக்கும் கடல் மீது பொங்கிவரும் நுரையில் தோன்றும் விசித்திரமான உருவங்களைப் போன்று பல உருவங்களாகத் தென்பட்டன. பிரம்மாண்டமானதொரு அலையின் சரிவைப் போன்று, அந்தச் சமவெளிப் பிரதேசம் உண்மையில் வெண்ணிற வட்டங்கள் போலும் ராட்டினம் சுற்றும் பொம்மையுருவங்கள்போலும் காட்சியளித்துக் கொண்டிருந்தன. ஒரு பாறை மீது அமர்ந்திருந்த குழந்தை அங்கிருந்தபடியே சண்டையின் போக்கைக் கவனித்தது. அதற்கு ஒரே வியப்பு! ஆட்டுமந்தை அவ்வளவு ஆரவாரத்துடன் மேய்க்கப் படுவதை குழந்தை அதுவரை கண்டதில்லை. இங்கு மங்கும் நெருப்புப் பொறிகள் பறந்துகொண்டிருந்தன. அதெல்லாம்அதற்குப் புரியாத புதிராகவே இருந்தது. எத்தகைய எச்சரிக்கையுமின்றி திடீரென்று குழந்தை அழத் தொடங்கியது. சமவெளியிலிருந்தவர்களுக்கு மட்டும் அவகாசமிருந்து பார்வையும் சரியாக இருந்திருந்தால், கண்களில் நீர் ஆறாய்ப் பெருக பெரும் பாறையொன்றின் மேல் உட்கார்ந்துகொண்டு தங்களையே கவனித்துக் கொண்டிருக்கும் இந்தச் சிறிய விநோதமான உருவத்தைக் கண்டிருப்பர். அது ஏதோ சக்தி வாய்ந்த ஆனால் எளிமை மிகுந்த ஒரு சின்னம் போலவே அவர்களுக்குத் தெரிந்திருக்கும்.

மலைகளினூடே பகற்பொழுதின் ஒளி தூரமான பகுதிகளை எல்லாம் மங்கச் செய்ததால், சமவெளி குண்டுகள் கக்கிய நெருப்பின் செவ்விழைகளால் குறியிடப்பட்ட தொரு நீல வண்ணத் துணியாகக் காட்சி அளித்தது. குழந்தையும் அவ்விடம் விட்டு எழுந்து, தன்னை வாவென்றழைக்காத அந்த வீட்டிற்குள் நுழைந்தது. அம்மாவென்று மெதுவாக அழைத்தது. வழக்கமான குழந்தைப் பாஷையில் தன் பசியைப் பற்றித் தெரிவித்துக் கொண்டது. அங்கே கட்டப்பட்டிருந்த வெண்ணிறப் பசு சாவதானமாக அசை போட்டுக் கொண்டிருந்தது. குழந்தையின் குரலுக்கு இப்பசுவின் பார்வை பதிலாய் அமைந்தது. மாலையின் அமைதி அந்தக் குன்றுப் பிரதேசத்தை மெல்ல மெல்ல ஆட்கொண்டது.



குன்றுப் பக்கத்தில் கலகலவென்று ஓசையைக் கேட்டுக் குழந்தை சப்தம் வரும் திசையை நோக்கவே, குன்றின் உச்சியில், ஒருவன் தன்னை நோக்கிக் கீழ் மூச்சு மேல் மூச்சு வாங்க ஓடி வருவதைக் கண்டது. ஓடிவந்தவன் அந்தக் குடிசையை அடைந்ததும் களைத்துக் கீழே விழுந்து விட்டான். தன் பசியையும் தன் அம்மாவையும் மறந்துவிட்டு குழந்தை ஆவலுடன் முன்னால் நடந்து அவன் கீழே விழுந்த இடத்தை அடைந்து அவன் முன் நின்று கொண்டது. அதனுடைய கண்களும் வீட்டிலுள்ள பசுவினது கண்களைப் போன்று இப்பொழுது விரிந்திருந்தன. விவரிக்க முடியாத ஒருவித அறிவும் கலக்கமும் அதன் கண்களில் தெரிந்தன.

சிறிது மௌனத்திற்குப் பின், அது ' நீ ஒரு மனிதனா ?' என்று ஒரு கேள்வி கேட்டது.

பிஸா புரண்டு திரும்பி சிறிதும் அச்சம் இல்லாத அந்தக் குழந்தையின் அழகிய முகத்தை உற்றுப் பார்த்தான். அவன் பதிலளிக்க முயற்சிக்கவில்லை. தன் உடலிலிருந்து உயிர் பிரிந்து செல்வது போன்று அவன் பெருமூச்சு விட்டான். அவன் உடலெல்லாம் தூசு படிந்திருந்தது. எப்படியோ அவன் முகத்தில் காயம் கூடப் பட்டிருந்தது. கன்னங்களில் ரத்தம் வடிந்திருந்தது. முன்னால் அவனிடம் காணப்பட்ட பளிச்சென்ற தோற்றம் இப்போது எங்கோ மறைந்து விட்டது. பூகம்பத்தின் போது உயரமாயும் செங்குத்தாயுமுள்ள பாறைகளிலும் புல்வெளிகளிலும் இங்குமங்கும் பாதுகாப்புக்கு ஓடியலைந்த ஒரு பிராணியைப் போன்று அவன் காணப்பட்டான். தன் கண்ணாடிக் கண்களால் குழந்தையைப் பிஸா உற்று நோக்கினான்.

குழந்தை தன் சொற்களைத் திரும்பக் கூறுவது வரை அவர்கள் அவ்வாறே இருந்தனர். " நீ ஒரு மனிதன் தானா ?" என்று அது அவனை மறுபடியும் கேட்டது.

பிஸா ஒரு மீனைப் போன்று பெருமூச்சு விட்டான். கை கால்கள் சோர, மூச்சுத் திணற, வலிமை இழந்த அவன்,—அந்தக் குழந்தையின் இயற்கையான தைரியத்தை, அதன் ஆற்றலை—மலை, வானம், கடல் ஆகியவற்றின் சோதரனை நேருக்கு நேராகக் கண்டான். அதன் தைரியத்துக்கு முன் தன்னுடைய கோழைத்தனம் எம்மாத்திரம். அவனுடைய வருத்தத்தின் லட்சணத்தை மிகவும் அற்ப வஸ்துவான ஒரு அருகம்புல் நுனியில்தான் எழுத வேண்டும்!

# தீரம்

எதிரெதிரே அணிவகுத்து நின்று போர் புரிந்த இரண்டு படைகளின் இடைவிடாத தாக்குதலினால் ஏற்பட்ட புழுதியினால் அவர்களுடைய கறுப்பு நிற ராணுவ உடைகளையெல்லாம் மேலும் கறுப்பாக்கி, குண்டுத் தாக்குதலிலிருந்து காப்பாற்றப்பட்ட அந்த மேட்டுப் பூமியின் களிமண்ணோடு களிமண்ணாகக் காணப்பட்டது. அந்த அணி. குன்றின் உச்சியில் அணிவகுத்து நின்ற ஒரு பீரங்கிப் படை, எதிர்ப்பக்கத்துப் பீரங்கிப் படையினருடன் பயங்கரமான தாக்குதலை நடத்திக் கொண்டிருந்தது. குன்றின் கீழே இருந்த காலாட் படையினருடைய கண்களுக்கு உச்சியிலிருந்த பீரங்கிப் படையினரும், துப்பாக்கிகளும், பீரங்கி வண்டியும், குதிரைகளும், நீல வானத்தின் பின்னணியில் எழுதப்பட்ட ஓவியம் போல் தெரிந்தன. ஒரு முறை பீரங்கி முழங்கியதும் கண்ணைப் பறிக்கும் மின்னலைப் போன்று, ஒரு பெரிய மரத்தடியளவு, செவ்வொளி படர்ந்து, வானத்தையே சிவக்கச் செய்தது. பீரங்கிப் படையினர் வெண்ணிறக் கால்சராய்கள் அணிந்திருந்தனர். அவையெல்லாம் அவர்களுடைய கால்களைத்தான் முக்கியமாக எடுத்துக் காட்டும் படி தைக்கப்பட்டிருந்தன. அதிகாரிகளின் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிந்து அவர்கள் இப்படியும், அப்படியுமாக ஓடி சிறு சிறு கூட்டங்களாகக் கூடிய பொழுது அவர்களுடைய கால்கள்தான் மேலும் எடுப்பாகத் தெரிந்தன. அதைக்கண்ட காலாட்படையினர் வியந்தனர்.

அக் காலாட்படை அணியின் "ஏ" பகுதியைச் சேர்ந்த பிரெட் காலின்ஸ் என்னும் சிப்பாய் "இடி விழ! எனக்கு மிகவும் தாகமாயிருக்கிறது. கொஞ்சம் தண்ணீர் கிடைத்தால் நல்லது! இங்கு எங்காவது தண்ணீர் கிடைக்குமா?" என்று சொல்லிக் கொண்டிருந்தான். குறிப்பாக இவ்வார்த்தைகளை அவன் எவனை உத்தேசித்தும் சொல்லவில்லை. எனவே அவன் கேள்விக்குப் பதில் கிடைக்கவில்லை. இதற்குள் "அதோ தாரை ஊதுபவன் போகிறான்" என்றான் அணியிலிருந்த ஒருவன்.

உடனே அவ்வணியிலிருந்தவர்களின் பார்வை முழுவதும் ஒரே சமயத்தில் இயந்திரம் இயங்குவது போல் அந்தத் தாரை ஊதுபவன் வரும் திசையை நோக்கின. படுகாயமுற்றிருந்த ஒரு குதிரையின் துள்ளலும், அதன்மேல் விரிந்த விரல்களுடன் முறிபட்ட கையையுடைய வீரனொருவன் சாய்ந்து உட்கார்ந்து கொண்டிருந்த காட்சியும் அவர்களுக்குத் தெரிந்தது. அவனுக்கு முன்னால் தரையில் அப்போதுதான் ஒரு குண்டு வெடித்து, அதி



லிருந்து கக்கிய நெருப்பு ஜ்வாலை நாக்குகள் ஈட்டிகளைப் போல் எழும்பின. பளிச்சென்று மின்னிய தாரையொன்று பக்கத்திலிருந்து கீழே விழ அதன்பின் குதிரையும், அதன் மீதிருந்த வீரனும் ஒன்றன்பின் ஒன்றாகக் கீழே சாய்ந்தன. தீப்பிடித் தெரியும் போது எழுவது போன்ற ஒரு துர்நாற்றம் எங்கும் பரவியிருந்தது.

காலாட்படை வீரர்கள் தங்களுக்கு முன்னால் தாழ்ந்து பரந்து கிடந்த அழகிய சிறு புல்வெளியை அவ்வப்பொழுது உற்று நோக்கினர். அந்த மைதானத்தில் உயர்ந்து வளர்ந்த பச்சைப் புற்கள் காற்றில் மெதுவாக அசைந்தாடின. அதற்கப்பால் வீரர்கள் மரங்களை விறகுக்காக வெட்டி வெட்டிச் சேதம் விளைவித்தது போதாதென்று, குண்டுத் தாக்குதலினால் பாழடைந்திருந்த ஒரு வீட்டின் மங்கிய உருவம் தெரிந்தது. பழைய வேலியொன்றின் வரிசை, உயரமாகப் புற்களாலும், அங்கொன்று மிங்கொன்றுமாக நின்ற கம்பங்களினாலும் மங்கலாகத் தெரிந்தது. அதனருகில் ஒரு கிணறு இருப்பதும் தெரிந்தது. ஒரு குண்டு அந்த வீட்டைத் தாக்கித் தூள் தூளாக ஆக்கியிருந்தது. வீட்டின் ஒருபுறத்திலிருந்து எழுந்து மேலே சென்ற மங்கிய புகைத் திரள், அங்குதான் அவ்வீட்டைச் சேர்ந்த தானியக் களஞ்சியம் இருந்திருக்க வேண்டுமென்பதை உணர்த்தியது.

எதிரிகள் பக்கத்தில் அமைந்த பச்சைமரக் காட்டுக்குப் பின்னாலிருந்து பெரும் தாக்குதலினால் எழும் சப்தம் வந்து கொண்டிருந்தது. சிறு தீவுகளினளவு பரிமாணமுள்ள பிரம்மாண்டமான மிருகங்கள் இரண்டு சண்டையிடுவது போலிருந்தது, அங்கே நிகழ்ந்த போரின் போக்கு. தூரத்தில் விட்டு விட்டு விரைந்து செல்லும் மனிதர்களும், குதிரைகளும், பீரங்கிகளும், கொடிகளும் காலாட் படையினரின் குண்டுமாரியும், அடிக்கடி கேட்டன. அத்துடன் ஆவேசமும், ஆத்திரமும் நிறைந்த கூக்குரல்களும் கேட்டன. இவற்றிற்கெல்லாம் மத்தியில்தான் "ஏ" கம்பெனியைச் சேர்ந்த இரு சிப்பாய்களான ஸ்மித்தும், பெர்கூஸனும், தேசியமுக்கியத்வம் நிறைந்த ஒரு பிரச்னையைப்பற்றி மிகத் தீவிரமான விவாதத்தில் ஆழ்ந்திருந்தனர்!

குன்றின் மேலிருந்து பீரங்கிப் படையினர் இப்பொழுது ஒரு பயங்கரத் தாக்குதலில் ஈடுபட்டிருந்தனர். துப்பாக்கி வீரர்களின் வெண்ணிறக் கால்கள் இப்பக்கமும், அப்பக்கமும் விரைந்து சென்று கொண்டிருந்தன. அதிகாரிகளின் உத்தரவுகள், துரிதமாகவும் உரத்தும் ஒலித்தன. குன்றைச் சுற்றிலும் சூழ்ந்திருந்த மரண தேவதையின் ஆதிக்க மத்தியிலும் அமைதியும், தைரியமும் நிறைந்த பீரங்கிப் படையினரின் நிச்சய புத்தியும், தீரமும், உயர்ந்ததொரு ஆற்றலுக்குச் சின்னமாக விளங்கின.

பீரங்கிப் படையின் தீரம் மிக்க பாகமாகக் கருதப்பட்ட கொலைப் படை என்று கூறும் ஒரு பகுதியிலிருந்த ஒரு வீரன் திடீரென்று தரையில் உருண்டு விழுந்தான். யுத்த-

வெறி பிடித்த அவன் சகா ஒருவன் உடனே அடிபட்டு விழுந்த நண்பனை இந்த ஆபத்து நிறைந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்திக் கொண்டிருந்தான். ஒரு இளம் வீரன் அதிகாரிகளிடம் சூளுரைத்த வண்ணம் குதிரையின் சேணத்தில் தாவி அமர்ந்து கடிவாளத்தைச் சுண்டினான். ஒரு அதிகாரி பெருங்குரலில் உத்தரவுகள் பிறப்பித்துக் கொண்டிருந்தான். அவன் போட்ட சப்தத்தில், உத்தரவுகளின் கடைசி வார்த்தைகள் 'கிரீச்' என்று கம்மி ஒலித்தன.

காலாட்படையின் முன்னணி எதிரிகளின் குண்டுமாரிக்கு இலக்காகி இருந்ததால் அதைக் குன்றுக்கடியில் பாதுகாப்பாகச் செல்லுமாறு கர்னல் அதற்கு உத்தரவிட்டான். எஃகோடு எஃகு மோதும் ஒலி எங்கும் கேட்டது.

பீரங்கிப் படையைச் சேர்ந்த லெப்டினன்ட் ஒருவன் அவ்வணியை அந்தச் சமயம் கடந்து சென்றான். செயலிழந்து விட்ட அவனது வலது கையை இடது கையால் கெட்டியாகப் பற்றியிருந்தான். அதை அவன் பிடித்திருந்த தோரணையிலிருந்து அந்தக் கை அவனுடைய உறுப்புகளில் ஒன்றல்ல என்பது போலவும், இன்னொருவனுக்குச் சொந்தமானது போன்றும் தோன்றியது. அவன் சவாரி செய்த குதிரை மெதுவாகத்தான் சென்றது. அவனுடைய முகம் வியர்வையாலும், புழுதியாலும் மாசு படிந்திருந்தது. ஒரு எதிரியுடன் நேரடியாகச் சண்டையிட்டது போன்று உடை கசங்கி அலங்கோலமாயிருந்தது. மற்றவர்கள் அவனை நோக்கியபொழுது அவன் ஒரு கோரச் சிரிப்புச் சிரித்தான். புல்வெளியை நோக்கி அவன் தன் குதிரையைத் திருப்பினான்.

"ஏ" கம்பெனியைச் சேர்ந்த அந்தக் காலின்ஸ் என்னும் சிப்பாய், "எனக்கு மிகவும் தாகமாயிருக்கிறது. தூரத்திலிருக்கும் அந்த பழைய கிணற்றில் தண்ணீர் இருக்கும் என்று நிச்சயமாக நம்புகிறேன்!" என்று அதிகாரியிடம் கேள்வியும், அறிவிப்புமாகச் சொன்னான்.

"இருக்கலாம், ஆனால் அதை எப்படி அங்கிருந்து கொண்டு வரப்போகிறாய்?"

ஏனெனில் எதிரிலிருந்த அச்சிறிய புல்வெளி அதற்கும் அப்பாலிருந்த எதிரிகளின் பயங்கரமான குண்டுத் தாக்குதலுக்கு இப்பொழுது இலக்காயிருந்தது. அதன் பசுமையும் அழகும், அமைதியும் முழுவதும் அழிந்து விட்டன. கருஞ் சிவப்பு நிறத் தரை குண்டுகளின் தாக்குதலால் பெயர்த்துப் பெயர்த்து வீசப்பட்டன. புற்களின் இளம் இதழ்களெல்லாம் தூள் தூளாக்கப்பட்டிருந்தன. அவையனைத்தும் எரிந்தும், பிய்த்து எறியப்பட்டும் உருத்தெரியாமல் ஆகியிருந்தன. சண்டையின் விநோதமான அர்த்தமற்ற போக்கினால் சிறிய அழகிய இப்புல்வெளி குண்டுகளின் செந்நாக்குகளுக்கு இரையாகியிருந்தது. ஒவ்வொரு குண்டின் வெடிப்பும்



கன்னியின் முகத்தில் வீசப்பட்ட சாபங்களைப்போல அந்த விடத்தை மாசுபடச் செய்திருந்தது.

பரந்த இப்புல்வெளியில் குதிரை மீது போய்க்கொண்டிருந்த லெப்டினன்ட், அங்கு விளைவித்திருந்த சேதத்தைப் பார்த்துத் தனக்குள் சொல்லிக் கொண்டான்: "படை முழுதும் இங்கேயே குவிக்கப்பட்டிருந்தால் கூட இதைவிட இன்னும் கடுமையாக இந்த இடத்தைத் தாக்கியிருக்க முடியாது?"

ஏற்கனவே புல்வெளிக்கிடையில் பாழடைந்திருந்த அந்த வீட்டை மேலும் ஒரு குண்டு தாக்கிற்று. வெடிச் சப்தத்திற்குப் பின் சிதறிய சுவர் துண்டு துண்டாகக் கீழே சரிந்தது. அது சரிந்து விழுந்த ஓசை குளிர்காலத்தில் பயங்கரமான சப்தத்துடன் மூடிக் கொள்ளும் கதவுகளின் ஒலியைப் போன்று இருந்தது. காலாட்படை அணி கடல் பொங்கி சீறுவதைப் பார்த்துக் கொண்டு கரையில் பிரமித்து நிற்கும் மனிதர்களைப் போன்று குன்றின் மறைவில் பாதுகாப்பான இடத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

வெண்ணிறக் கால் சட்டையணிந்தப் பீரங்கிப் படையினர் மீது எதிரிகளின் சீற்றம் திரும்பியது. அவர்களும் பீதியடைந்து செயல் புரிவதைக் குறைத்துக் கொண்டனர். பீரங்கியை இப்போது இயக்க சில வீரர்கள் மட்டுமே இருந்தனர். பீரங்கி ஒன்று எதிரியின் தாக்குதலினால் சேதமடைந்தது. குண்டு வெடித்த பின் எழுந்த நெருப்பு, புகை, தூசி எல்லாம் மறைந்த பின் வெள்ளையுடையணிந்து சற்று முன் நின்று கொண்டிருந்தவர்களெல்லாம் பிணமாகித் தரையில் நீட்டப்பட்டிருந்தது தெரிந்தது.

பீரங்கிப் படைக்குப் பின்னால் குதிரைகள் வரிசை வரிசையாக நின்று கொண்டிருந்தன போர் முனையை நோக்கிய வண்ணம்; போர் முனைக்கோ, அல்லது அதை விட்டு அப்பாலோ, அல்லது வேறு எந்த இடத்திற்கோ பீரங்கிகளை இழுத்துச் செல்லுவதற்காகப் பழக்கப்பட்டிருந்த இந்த வாயில்லாப் பிராணிகள், போர் முனையை நோக்கிய வண்ணம்; அதிகாரிகளின் உத்தரவை எதிர்பார்த்து நின்று கொண்டிருந்தன. சாட்டையும், குத்து முள்ளும் கொண்டு நிறைவேற்றப்படும் மனிதனுடைய கட்டளைக்குட்பட்டு போர் முனையில் தவித்து நின்றன இம்மிருகங்கள். போரின் போக்கில் அவற்றிற்கு எவ்வித அக்கறை இருந்தாலும், இல்லாவிட்டாலும், 'அந்த விடத்தை விட்டுப் பெயர்ந்து போக முடியாது', என்ற எஃகுத் தளையால் கட்டுண்டிருப்பதை அக்குதிரைகள் கூட நன்கு உணர்ந்திருந்தன போலும்! இவ்வாறு அக்குதிரைகள் நின்றிருந்த இடத்திற்கும், பீரங்கிப் படையினர் இருந்த இடத்திற்குமிடையே இருந்த சிறு இடைவெளிப் பிரதேசத்தில் தான் பயங்கரமான படுகொலை நடந்து கொண்டிருந்தது. இப்படுகொலையில் அகப்பட்டுக் கொண்ட ஒரு குதிரை தன் காயத்திலிருந்து இரத்தம் சொட்டச் சொட்டத் தன் முன்னங் கால்களை உயரத் தூக்கித் தலையை வானத்தை நோக்கி உயர்த்தி ஏதோ

பரிதாபமாக ஆண்டவனிடம் முறையிடுவது பார்ப்போரை பிரமிக்க வைத்தது.

இப் படுகொலையின் இடையில்தான் காலின்ஸின் தாகத்தைப் பற்றிச் சில தோழர்கள் அவனைக் கேலி செய்தனர். "நல்லது, உனக்கு மிகவும் தாகமாயிருந்தால், அந்தக் கிணற்றண்டைச் சென்று ஏன் தண்ணீர் குடித்து வரக்கூடாது?"

"நீங்கள் வாயை மூடிக்கொண்டு இருந்தால், இதோ நான் ஒரு நிமிஷத்தில் சென்று வருவேன்."

அந்தச் சமயம் பீரங்கிப் படையைச் சேர்ந்த ஒரு லெப்டினன்ட் சமவெளியில் சாவதானமாகச் சவாரி செய்வது போல நினைத்துக் கொண்டு தன் குதிரையை அலட்சியமாகக் குன்றின் சரிவில் செலுத்திக் கொண்டு இறங்கி வந்தான். காலாட் படையின் கர்னலை அவன் விரைந்து தாண்டியபொழுது குதிரை மீதிருந்தபடியே அவனுக்குச் 'சலாம்' செய்து "நாம் இங்கிருந்து உடனே எப்படியாவது வெளியேற வேண்டும்," என்று அவன் கோபத்துடன் இரைந்தான். அந்த உயர் அதிகாரி கருந் தாடி வைத்திருந்தான். அவன் கண்கள் இரு கண்ணாடித் துண்டுகள் என ஒளி வீசின. ஒரு பைத்தியக்காரனின் கண்களைப் போன்று அவை மின்னின. இந்த எச்சரிக்கையை விடுத்ததும் காலாட் படையணியைத் தாண்டி அவனுடைய குதிரை பறந்து சென்றது.

தடித்திருந்த அந்த மேஜர், அலட்சியத்துடன் தனக்குப் பின்னர் தன் பட்டாக் கத்தியைக் குறுக்காக வைத்திருந்தான். அவன் கால்கள் அகன்றிருந்தன. தன்னைத் தாண்டிச் சென்று தூரத்தில் மறைந்து கொண்டிருக்கும் குதிரை வீரனைக் கண்டு அவன் சிரித்தான். "உத்தரவு வாங்கிக் கொண்டு தன் படை அணியைச் சீக்கிரத்திலேயே அடைந்து விடலாம் என்று அவன் எண்ணுகிறான் போலும்! இல்லாவிட்டால் இவன் போவதற்குள் ஒரு பீரங்கி கூட மீதியிருக்காது," என்று தனக்குள்ளாகவே சொல்லிக் கொண்டான்.

இரண்டாவது கம்பெனியின் காப்டன் புத்திசாலியான இளைஞன். அவன் லெப்டினன்ட் கர்னலிடம் விரைந்து, எதிரியின் காலாட்படை விரைவில் குன்றைத் தாக்கலாம் என்று யுத்த தந்திர நிபுணன்போல் ஒரு ரஹஸ்யம் கூறினான். உயர் அதிகாரியான லெப்டினன்ட் கர்னல், தட்சணமே அவனை மட்டந்தட்டிப் பேசினான்.

பின் அணிகளிலிருந்த ஒரு சிப்பாய் புல்வெளியை உற்றுப் பார்த்துத் தன் நண்பனிடம் கூறினான். "ஜிம், அதோ பார்" என்று ஓரிடத்தைச் சுட்டிக் காட்டினான். அவன் குறிப்பிட்ட இடத்தில் பீரங்கிப் படையிலிருந்து சிறிது முன் சென்ற காயமுற்ற அதிகாரி விழுந்து கிடந்தான். வலது கையைக் கவனமாக இடது கையில் தாங்கிக் கொண்டு குதிரையைச் செலுத்திச் சென்றானே அவன்தான். அவன் சற்றே அஜாக்கிரதையாய் இருந்த சமயம்



ஒரு குண்டுத் தாக்குதலுக்கு ஆளானான். செத்துப்போனத் தன் குதிரைச் சேணத்தின் வளையத்தில் மாட்டியிருந்த காலை எடுக்காமலேயே முகம் கவிழ்ந்து அவன் கீழே தரையில் விழுந்திருந்தான். குதிரையின் ஒரு கால் கட்டையைப் போன்று மேல் நோக்கிச் சாய்ந்திருந்தது. அசையாது கிடந்த இந்த ஜோடியைச் சுற்றி குண்டுகள் இன்னும் வெடித்துக் கொண்டிருந்தன.

இங்கே "ஏ" கம்பெனியில் ஒரு சிறு குழப்பம். தன்னைப் பார்த்து ஏளனமாகச் சிரித்துக் கொண்டிருந்த சில தோழர்களை நோக்கிக் காலின்ஸ் கோபமாகத் தன் முஷ்டியைக் காட்டிக் காட்டி ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான். "இதோ பார், நான் அங்கே போவதற்கொன்றும் பயப்படவில்லை. இப்படியே நீங்கள் பேசிக் கொண்டிருந்தால் நான் நிச்சயமாகப் போய்விடுவேன்."

"நிச்சயமாக, நீ செய்வாய்! அந்தப் புல்வெளி வழியாக நீ சென்று தண்ணீர் கொண்டு வருவாய் என்று தானே சொல்லுகிறாய்? அப்படித்தானே?"

காலின்ஸ் பயங்கரக் குரலில் இரைந்தான். "பார்த்துக் கொண்டிருங்கள் செய்கிறேனா, இல்லையா?"

கெடுங்குறி காட்டும் இந்தச் சவாலைக் கேட்டு அவனுடைய தோழர்கள் மேலும் கேலி செய்தனர்.

அவர்களிடம் உறுமிவிட்டு தன் அதிகாரி காப்டனைப் பார்க்கப் புறப்பட்டான் காலின்ஸ்.

அணியின் கர்னலுடன் காப்டன் பேசிக்கொண்டிருந்தான்.

"காப்டன்—" என்று அவரைஅழைத்து விட்டு விறைப்பாக நின்று கொண்டு ஒரு 'ஸல்யூட்' அடித்தான் காலின்ஸ். அந்த நாட்களில் கால் சட்டைகள் எல்லாம் முழங்கால் வரையில் சுருட்டி விடப்பட்டிருந்தன. "காப்டன், இப் புல்வெளியில் சற்று தூரத்திலிருக்கும் கிணற்றுக்குச் சென்று கொஞ்சம் நீர் குடித்து வர உங்கள் அநுமதி வேண்டும்," என்றான்.

காப்டனும், கர்னலும் ஏககாலத்தில் திரும்பி அந்தப் புல் வெளியைக் கூர்ந்து பார்த்தனர். காப்டன் சிரித்தான். "காலின்ஸ், உன்னுடைய தாகம் மரண தாகமாகத்தான் இருக்க வேண்டும்" என்று பொருள்படக் கூறினான்.

"ஆமாம், ஐயா; அதிக தாகந்தான்."

"நல்லது" என்று தயங்கியபடியே, "கொஞ்சம் கூட உன்னால் காத்திருக்க முடியாதா?" என்று ஒரு கணம் கழித்து அவன் கேட்டான்.

"முடியாது, ஐயா!"

கர்னல் காலின்ஸின் முகத்தைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான். "இங்கே பார், குழந்தை," அவர் மிகவும் கனிவான குரலில் பேசினார். "இங்கே பார், குழந்தை—(காலின்ஸ் ஒன்றும் குழந்தையில்லை. எனினும் அன்பினால் கர்னல் அப்படி அழைத்

தான்): ''கொஞ்சம் குடி தண்ணிருக்காக மிகப் பெரிய ஆபத்துக்களில் சிக்கிக்கொள்ளுவது முட்டாள்தனமல்லவா ?''

காலின்ஸ், ''எனக்குச் சரியாகத் தெரியாது'' என்று சோர்வுடன் கூறினான். தன் தோழர்களின் மேலிருந்த கோபம் அவனை இந்த நிலைக்குத் துரத்தியிருந்தது. அது இப்பொழுது தணிந்து கொண்டிருந்தது. ''அப்படியிருக்கு மென்பது எனக்குத் தெரியாது.''

கொஞ்சநேரம் கர்னலும், காப்டனும் அவனையே ஆராய்ந்தனர்.

''நல்லது,'' இறுதியில் காப்டன் பேசினான்.

''நல்லது, போக விரும்பினால், ஏன், நீ போ'' என்றான் கர்னல்.

காலின்ஸ் மறுபடியும் வணங்கி விட்டு '' உங்கள் அநுமதிக்கு மிகவும் நன்றி,'' என்று அங்கிருந்து வெளியேறினான்.

அவன் திரும்பியதும் கர்னல் அவனை அழைத்தான். ''மற்றவர்களுடைய தண்ணீர் குவளைகளையும் உன்னோடு கொண்டுபோ, விரைவில் திரும்பிவா'' என்று விடைகொடுத்தான்.

'' அப்படியே செய்வேன், ஐயா !''

கர்னலும், காப்டனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். காலின்ஸ் உண்மையிலேயே போகவிரும்பினானா, இல்லையா என்பதை அவர்களால் அவன் முகபாவத்திலிருந்து கண்டு கொள்ள முடியவில்லை. எப்போதுமே கண்டுகொள்ள முடியாதோ என்று கூடத் தோன்றியது.

காலின்ஸை கவனிக்க அவர்கள் திரும்பினர். கேலிசெய்யும் தோழர்கள் சூழ அவனைக் கண்டதும் ''இவன் தலையில் இடிவிழ ! அவன் உண்மையாகவே போய்க்கொண்டிருக்கிறானே !'' என்றான் கர்னல் ஆச்சரியத்தினால்.

கனவு கண்டு கொண்டிருப்பவனைப் போலக் காலின்ஸ் தோன்றினான். வினாக்கள், அறிவுரை, எச்சரிக்கைகள், அதிர்ச்சியடைந்த தோழர்களின் பேச்சு—இவைகளுக்கிடையில் அவன் வியக்கத்தக்க மௌனத்தில் ஆழ்ந்தான்.

அவனைக் கடுஞ்சோதனைக்குத் தயார்படுத்துவதில் அவர்கள் முனைந்தனர். மிகக் கவனத்துடன் அவனை ஆராய்ந்தபொழுது, போட்டிக்கு விடுமுன், குதிரைகளைப் பராமரிப்பவன் குதிரையைப் பரிசோதிப்பது போலிருந்தது. இந்நிகழ்ச்சி கண்டு அவர்கள் வியந்தனர்; தயங்கினர். அவர்களுடைய வியப்பு மேலும் மேலும் காலின்ஸை ஒரே கேள்வியைத் திரும்பத் திரும்பக் கேட்கும்படிச் செய்தது.

''நீ நிச்சயமாகப் போகத்தான் போகிறாயா?'' என்று அந்த ஒரு கேள்வியைத்தான் அவர்கள் மறுபடியும் மறுபடியும் வற்புறுத்திக் கேட்டனர்.

இறுதியில் கோபத்துடன் காலின்ஸ் இரைந்தான்—'' நிச்சயமாகப் போகிறேன்.''



அவர்களிடமிருந்து அவன் பிடிவாதமாகப் புறப்பட்டான். கயிற்றில் கட்டப்பட்ட ஐந்தோ அல்லது ஆறோ தண்ணீர்க் குவளைகளை உடன் கொண்டு சென்றான். அவனுடைய குல்லாய் அவன் தலையில் படிய மறுப்பது போலிருந்தது. அவன் அதை அடிக்கடி அழுத்திப் பொருத்திக் கொண்டான்.

நெருக்கமான அந்த அணியில் பொதுவாக ஒரு சலனம் ஏற்பட்டது. நீண்ட மிருகம் போன்ற அது மெதுவாக அசைந்தது. அதன் நாநூறு கண்களும் காலின்ஸின் உருவத்தையே ஒரே சமயத்தில் நோக்கின.

'' நல்லது; எவ்வளவு அபாயகரமான வேலை அது; அத்தகைய காரியத்தில் பிரெட் காலின்ஸ் இறங்குவான் என்று நான் நினைக்கவேயில்லை.'' என்றான் ஒருவன்.

'' அவன் என்ன செய்யப் போகிறான்? எப்படியும்...'' என்றான் மற்றொருவன்.

'' அவன் அதோ இருக்கும் கிணற்றுக்குத் தண்ணீருக்காகப் போகிறான்.''

''நாம் ஒன்றும் வறட்சியால் சாகவில்லை? அங்கு போவது மடத்தனம்.''

''நல்லது; சிலர் அவனைத் தூண்டிவிட்டனர், அவனும் அதைச் செய்கிறான்.''

''அவன் வக்கிரம் பிடித்த ஆள் என்று கூறு.''

காலின்ஸ் அந்தப் புல்வெளியைப் பார்த்துக் கொண்டே அணியிலிருந்து சென்றபொழுது அவனுக்கும் அவனுடைய தோழர்களுக்குமிடையே ஒரு பள்ளத்தாக்கைப் போன்ற பெருத்த ஆழமான பிளவு இருப்பதாக அவன் உணர்ந்தான். எல்லாத் தற்பெருமைகளும் சேர்ந்து இப்பிளவை உண்டாக்கியிருப்பதை உணர்ந்திருந்தான். அது தற்காலிகமானதுதான். அவன் வெற்றிவீரனாகத் திரும்பினால் அது தற்காலிகமானதே. அவன் அறிவின்றி வெறும் உணர்ச்சிகளால் தூண்டப்பட்டுக் கட்டாயத்தின் பேரில் சாவையே எதிர்நோக்கிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

ஆனால் அவனால் முடியுமானாலும் தான் வெட்கமின்றி பின் வாங்கத் தயாரா என்று நிச்சயமாக அவனால் கூற முடியாது. உண்மையில் அதைப்பற்றி அவன் உறுதியாயிருக்கவில்லை. தன் செயலை அவனே வியந்து கொண்டான். அப்போதைக்கு அவ்வளவு மட்டுமே அவன் உணர்ச்சி யிருந்தது.

அத்தகைய நிலைக்குத் தன்னை ஈடுபடுத்தத் தன்மனம் இசைந்ததை நினைக்க நினைக்க அவனுக்கே விநோதமாக, விசித்திரமாகத் தோன்றியது. எண்ண எண்ண அதுவே பெரிய சாதனையாகவும் மாறலாம்—நாடக அரங்கத்தின் மீது ஒரு மகத்தான காட்சியை நடித்துக் காட்டுவது போன்ற உணர்ச்சி—என்பதையும் உணர்ந்தான்.

அவன் இதைப்பற்றியெல்லாம் அதிகம் சிந்திக்கவேயில்லை. ஆனால் அது மற்றவர்களை எல்லாம் திகைக்க வைக்கும் செயல் என்பதை மட்டும் உணர்ந்திருந்தான். இந்த நிகழ்ச்சியின் உருவத்தையும், நிறத்தையும் பற்றியுமே தன் சோர்வடைந்த மனம் எண்ணுகிறது என்று கருதினான். பயத்தின் மிகுதியால் கத்திகொண்டு வெட்டுவதைப் போன்று தன் உணர்ச்சி ஏன் துண்டிக்கப்படவில்லை என்று தன்னையே கேட்டுக் கொண்டான். இதை வியந்தான். ஏனெனில் பல நூற்றாண்டுகளாக மனிதன் சிலவற்றிற்கு அஞ்ச வேண்டும் எனக் கூறப்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட வகைகளில் உயிருக்காகப் பயப்படுவதும் ஒன்று. பயத்தை உணராத எல்லோருமே வியக்கத்தக்கவர்கள். ஒரு தனி இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தீரர்கள்.

அப்படியென்றால் அவனும் ஒரு தீரன். சரித்திரங்களிலும், பழங்கதைகளிலும் விவரிக்கப்படும் செயல் நாம் வியந்து பாராட்டும்போது அதே செயல்களை சாதாரண மனிதர்களாகிய நாம் கூடச் செய்ய முடியும் என்பதை உணர்ந்தான். இப்படி நினைத்ததும் சிறிது ஏமாற்றம் ஏற்பட்டது. அவ்வித உணர்ச்சியைக் கூட அவன் உணர்ந்தான். அப்பொழுது அவன் ஒரு வீரன்தான். வீரர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்க முடியாதே.

மறுபடியும் ஒரு சிந்தனை. இல்லை, அது உண்மையாக இருக்க முடியாது. அவன் வீரனில்லை. வீரர்கள் வாழ்க்கையில் வெட்கப்படவேண்டிய செயல் ஒன்றுமே யிருக்காது. அவனைப் பொறுத்த வரையில் ஒரு சமயம் தன் நண்பனிடம் மறு நாள் திருப்பித் தருவதாகப் பதினைந்து டாலர்கள் கடன்வாங்கிப் பத்து மாதங்கள் வரை அவனைப் பார்க்காமலே தலைமறைவாக இருந்ததை நினைத்துக் கொண்டான். வீட்டில் அவன் அம்மா இளமையிலேயே அவனைப் பண்ணை வேலை செய்யச் சொல்லும்பொழுது, அவன் எளிதில் கோபப் படுபவனாகவும், சிறுபிள்ளைத்தனமாகவும் முரட்டுத்தனமாகவும் நடந்துகொள்ளுவது அவன் வழக்கம். பல தடவை தாயார் மனம் நொந்திருக்கிறாள். கடைசியாக அவன் சண்டைக்குப் புறப்படும் பொழுது அவள் இறந்து விட்டிருந்தாள்.

இந்தக் கிணறு, குவளைகள், குண்டுகள், ஆகியவை விஷயத்தில்—தீரச் செயல்கள் புரிந்து நெறிமுறையில் வாழும் சிறு எண்ணிக்கை கொண்ட அந்த இனத்தவர்களிடையே தான் தலையிடுவது தகாது என்றே தோன்றியது.

அவனுடைய தோழர்களிடமிருந்து முப்பது அடி தூரத்தில் அவன் இப்போது இருந்தான். இப்பொழுதுதான் அணியின் பல முகங்களும் அவனை நோக்கின.

எதிரேயிருந்த அந்தக் காட்டிலிருந்து வந்த பயங்கரச் சப்தங்களையொட்டி இப்போது திடீரென்று ஒரு சிறிய ஒழுங்கற்ற அணியொன்று வெளிப்பட்டது. அவர்கள் விரைவாகவும், பயங்கரமாகவும், தூரத்திலிருந்த இலை, தழைகளின் மீது சுட்டனர்.



அங்கிருந்து வெண்புகை 'குப், குப்' என எழுந்தது, அங்கங்கே சிறு அளவில் சுட்ட சப்தத்துடன் மலையிலிருந்து இடியெனப் பொழிந்த பீரங்கிச் சப்தமும் சேர்ந்து கொண்டது. சிறு அணியிலிருந்தவர்கள் முன்னால் ஓடினர். பனிக்கட்டியில் சறுக்குவது போன்று அணியின் கொடியைத் தாங்கிச் சென்ற ஸார்ஜெண்ட் மல்லாந்து விழுந்தான். தூரத்திலிருந்து எல்லோரும் இதைக்கண்டு வெற்றிக்கோஷம் செய்தனர்.

திடீரென்று இரு பெருவிரல்கள் தன் இரு காதுகளுக்குள் திணிக்கப்படுவது போன்ற உணர்ச்சி காலின்ஸுக்கு ஏற்பட்டது. பறக்கும் செந்நிற அம்புகளைத் தவிர அவன் வேறொன்றையும் அங்கே காணமுடியவில்லை. ஒரு வெடிச் சப்தம் கேட்டதும் அவன் மிகவும் துன்பமுற்று எதிரேயிருந்த அந்தப் பாழடைந்த வீட்டை நோக்கித் தலை தெறிக்க ஓடினான். கொந்தளிக்கும் கடலில் கழுத்தளவு மூழ்கும் மனிதன் கரையைப் பார்ப்பது போல அந்தப் பாழடைந்த வீட்டைப் பார்த்துப் பார்த்து ஓடினான். குண்டுகளின் துண்டுகள் சிதறி வெடித்தன. பூமியைப் பிளப்பது போன்ற வெடிப்புகள். அவைகளின் சப்தத்தால் பயமுறுத்தி அவனைப் பித்துப் பிடித்தவனாக்கின. அவன் ஓடியபொழுது குவளைகள் ஒன்றோடொன்று மோதி கலகலவெனும் ஓசையை எழுப்பிற்று.

அவன் அந்த வீட்டை அடைந்தபொழுது கண்ட காட்சியின் ஒவ்வொரு அம்சமும் அவனுக்குத் தெளிவாகத் தெரிந்தது. உடைந்த புகைக்கூண்டின் சில செங்கற்கள் புல்வெளியில் சிதறிக் கிடந்ததைப் பார்த்தான். ஒற்றை நாதாங்கியில் தொங்கிக் கொண்டு ஒரு கதவு ஆடிக்கொண்டிருந்தது.

தூரத்திலிருந்த காட்டிற்கப்பாலிருந்து தொடர்ந்து அவர்கள் கைத்துப்பாக்கியால் ஒழுங்கற்றுச் சுட்டுக்கொண்டிருந்தனர். கூக்குரல்கள், உறுமல்கள், இரைச்சல்களால் வெளியெங்கும் நிறைந்து அவர்கள் குண்டுமாரியுடனும் குண்டுச் சிதறல்களின் ஓசையுடனும், இரண்டறக் கலந்து நின்றன. வானமெங்கும் துர்தேவதைகள் நிறைந்து அவர்களுடைய கடுங் கோபத்தையெல்லாம் அவன்மீது திருப்பிவிட்டனவோ எனத் தோன்றியது.

அவன் கிணற்றுக்கு வந்தபொழுது குப்புறப்படுத்துக்கொண்டு தண்ணீர் இருக்குமிடத்தை எட்டிப் பார்த்தான். மேற்பரப்பிலிருந்து சில அடி தூரத்திற்குக் கீழே வெள்ளி போன்று ஒளிர்ந்தது நீர்நிலை. குவளைகளில் ஒன்றை எடுத்து, அதன் குழாயைத் திறந்து, கயிற்றைக்கட்டி உள்ளே விட்டான். அது மெதுவாகக் குமிழ் சப்தத்துடன் தண்ணீரை வெகு மெதுவாகத்தான் மொண்டது.

அவன் கீழே குனிந்து பார்த்தபொழுது அவனைப் பயம் பிடித்துக் கொண்டது. பறவைகளின் நகங்கள் பற்றுவது போல் அது அவன் நெஞ்சினைப் பற்றிக்கொண்டது. அவனுடைய தசைநார்

களிலிருந்து பலமெல்லாம் போய்விட்டது அந்தச் சமயத்தில் அவன் செத்துப்போன மனிதனைப் போன்றிருந்தான்.

எல்லாக் குப்பிகளைப் போல, குவளையில் நீர் மிக மெதுவாகவே நிரம்பியது. அவனுக்கு வெறுப்பை உண்டாக்கியது. இழந்த பலத்தை மீண்டும் பெற்றவனாக குவளையைப் பார்த்து அவன் சபித்தான். தன் கைகளால் தண்ணீரையெடுத்து நிரப்பலாமா என்று கூட எண்ணினான். அவன் குனிந்து கிணற்றுக்குள் நோக்கிய பொழுது அவன் கண்கள் கூட இரண்டு உலோகங்களைப் போல நீர்ப்பரப்பில் பிரதிபலித்தன. ஆழ்ந்த வேண்டுகோளும், கடுமையான சாபமும், அந்தப் பார்வையில் தெரிந்தன. பொல்லாத நீர் அவனைக் கேலிசெய்வது போலிருந்தது.

பயங்கர இடியோசையுடன் ஒரு குண்டு அருகாமையில் விழுந்தது; வெடியிலிருந்து எழுந்த புகைத்திரளில் கருஞ்சிவப்பு நிற ஒளி வீசி கிணற்றின் ஒரு பகுதியை சிவக்கச் செய்தது. காலின்ஸ் கையிலிருந்து குவளையை விட்டுத் தாவினான். உலையிலிருந்து தலையை இழுத்துக் கொள்ளும் மனிதனுடைய செயலைப் போன்றிருந்தது அது.

நேராக நிமிர்ந்து நின்று சுற்றுமுற்றும் உற்றுப்பார்த்து சற்றே தயங்கி நின்றான். அவனுக்கருகில் அப்பழைய கிணற்றின் வாளியி லிருந்து அத்துடன் ஒரு துருப்பிடித்த ஒரு சங்கிலியும் இருந்தது. அதைச் சட்டென்று எடுத்துக் கிணற்றில் எறிந்தான். வாளி, நீரை மொண்டுக்கொண்டு தண்ணீரில் மூழ்கியது; நடுங்கும் கரங்கள் ஒன்றையொன்று தொட கிணற்றிலிருந்து வாளியை வெளியே இழுத்தான். அடிக்கடி கிணற்றுச் சுவரில் அது மோதியது. கொஞ்சம் நீர் சிந்திவிட்டது.

நிறைந்த வாளியுடன் ஓடும்பொழுது ஒருவன் ஒரே மாதிரிதான் நடக்கமுடியும். எனவே, சாவின் பிரத்தியட்ச தூதர்கள், அந்த பயங்கரக் களத்தில் சுற்றியலைந்தபொழுது ஒரு பண்ணையிலிருந்து மாடொன்றினால் துரத்தப்படும் உழவனைப் போன்று அவன் ஓடினான்.

அவன் முகம் எதையோ எதிர்நோக்கி வெளிறிப் போயிற்று. எந்த நிமிஷத்திலும் அவன் மீது ஒரு குண்டு விழுந்து அவனைக் கொல்லக்கூடும். இதைத்தான் அவன் அப்போது எதிர்பார்த்தான். மற்றவன் சுருண்டு விழுவதைப் பார்த்து பழகியிருந்தால் அவனும் அதுபோலத் தானே குப்புற விழுவான். அவர்கள் கணுக் கால்கள் தரையைத் தொடுமுன்னர் அவர்கள் தலைகள் நிலத்தைத் தொட்டுவிடும். உடனே உயிரும் அவர்களிடமிருந்து தட்டிச் செல்லப்படும். தூரத்தில் நீண்ட நீலவண்ணத்துடன் அவனுடைய படை அணி அவனுக்குத் தெரிந்தது; ஆனால் எட்டமுடியாத தொலைவிலிருக்கும் நட்சத்திரத்தின் கோடியிலிருந்து கொண்டு பார்ப்பதுபோல் அவன் தோழர்கள் அவனையே பார்த்துக் கொண்டிருந்தனர்.



அவன் அப்போதிருந்த இடத்திற்குப் பின்புறம் உள்ள புல்வெளியில் ஒரு குளமும், பின்சுவரும், வண்டிச் சக்கரங்களின் தடமும் இருந்ததை அவன் உணர்ந்தான்.

இந்தப் புல்வெளியில் விழுந்து கிடந்த பீரங்கிப் படையதிகாரி பற்களைக் கடித்த வண்ணம் பலத்த கூச்சலிட்டுக் கொண்டிருந்தான். அவனுடைய பெரு வருத்தத்தில் எழுந்தன மரண ஒலியை ஒத்த இந்த வீண் கூக்குரல்கள். அவை வெடிச் சப்தத்துடன் கலந்துதான் கேட்டன. வெறியோடு கூடிய பார்வையுடன் காலின்ஸ் கிணற்றிலிருந்து ஓடி வந்த பொழுது இந்த அதிகாரி மெல்ல எழுந்தான். அவன் முகம் வலி தாங்காமல் விகாரமுற்று வாடியிருந்தது. அவன் கெஞ்சும் கூக்குரலொன்றை எழுப்பவிருந்தான். ஆனால் திடீரென முகம் நிமிர்ந்தான்; அவன் கேட்டான்: "வீரனே, எனக்குக் கொஞ்சம் தாகத்திற்குத் தண்ணீர் கொடு, கொடுப்பாயா?"

காலின்ஸினுடைய உணர்ச்சிகளிடையே வியப்புக்கு இடமில்லை. சாவை எதிர்நோக்கியிருக்கும் அவனுக்குப் பயத்தின் மிகுதியால் பித்துப் பிடித்திருந்தது.

"முடியாது" என அவன் இரைந்தான். அந்த ஒரு வார்த்தைப் பதிலில் அவன் பயமெல்லாம் வெளிப்பட்டது. நடுக்கம் கூடத் தெரிந்தது. அவன் குல்லாய் எங்கேயோ போய் விட்டது. அவன் தலைமயிரெல்லாம் காற்றில் பறந்து கொண்டிருந்தது. தரையில் விழுந்து இழுத்துவரப்பட்டவனது உடைகள் போல அவன் உடைகள் கசங்கிப் புழுதி படிந்திருந்தது. அவன் அங்கே தயங்க நேரமில்லை. அங்கிருந்து தன் அணியை நோக்கி ஓடினான். அந்த அதிகாரியின் தலை மறுபடியும் கவிழ்ந்து கொண்டது. வளைந்து முழங்கையில் தள்ளிக் கொண்டு உந்தினான். அவனுடைய கால் இன்னும் குதிரையின் பாதம் வைக்கும் வளையத்தில் இருந்தது. மற்றொரு கால் குதிரையின் அடியிலிருந்தது.

முன்னால் ஓடிச் சென்ற காலின்ஸ் திரும்பிப் பார்த்தான். அவன் விரைவாகத் திரும்பி ஓடிவந்தான். அவனுடைய முகம் சாம்பல் நிறமாக மாறிவிட்டிருந்தது. கண்களில் ஒரே பீதி! "இதோ தண்ணீர், இதோ தண்ணீர்" என்று இரைந்தான்.

இந்த அதிகாரி குடிபோதையிலிருப்பன் போல் இருந்தான். அவனுடைய கை சுள்ளியைப்போல் வளைந்திருந்தது. அவனுடைய தலை நாணலைப்போல் நாணித் தொங்கியது. முகம் கீழே நோக்க, அவன் தரையில் விழுந்து கொண்டிருந்தான்.

காலின்ஸ் அவன் தோளைப் பற்றித் தூக்கினான். "இதோ இருக்கிறது தண்ணீர். இதோ நீங்கள் கேட்ட தண்ணீர். இப்படித் திரும்புங்கள், தண்ணீர் குடியுங்கள். கடவுளுக்காகத் திரும்புங்கள்" என்று இறைஞ்சினான்.

காலின்ஸ் அவன் தோளைத் தாங்க, அந்த அதிகாரி உடம்பை முறுக்கிக் கொண்டு அம்புகளும், ஈட்டிகளும் சுழன்று வரும் அந்தப்

பகுதியைப் பார்த்தான். அப்படியே அவன் தலை கீழே சாய்ந்தது. அவன் காலின்ஸைப் பார்க்கையில் அவனுடைய உதடுகளில் புன்முறுவலின் லேசான நிழல் தெரிந்தது. குழந்தையினிடமிருந்து வருவதைப் போன்ற பெருமூச்சொன்றை விட்டான்.

வாளியை அவன் வாய்க்கு நேராகத் தூக்கிப் பிடிக்க காலின்ஸ் முயன்றான். ஆனால் அவனுடைய நடுங்கும் கைகள் செத்துக் கொண்டிருக்கும் அந்த மனிதனுடைய முகமெங்கும் நீரைத் தெளித்து விட்டன. பிறகு வாளியை அப்புறப்படுத்தியெடுத்துக் கொண்டு ஓட ஆரம்பித்தான். தன் அணியைச் சேர்ந்து விட்டான். வாளியுடன் தான்.

அணி அவனை ஆரவாரத்துடன் வரவேற்றது. கடுகடுப்பாயிருந்த முகங்களில் சிரிப்பு தாண்டவமாடியது.

காப்டன் வாளியை ஆட்டினான். "அதை அவர்களிடம் கொடு."

அன்பும், நட்பும் மிகுந்த அந்த இரண்டு இளம் லெப்டினன்டுகளுக்கு முதலில் நீர் கிடைத்தது. அவர்கள் வழக்கப்படி அதை வைத்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

ஒருவன் குடிக்க முயற்சிக்கையில், மற்றொருவன் அவனை முழங்கையால் தட்டுவான். "சும்மாயிரு பில்லி! அதைக் கொட்டுமாறு செய்கிறாயே" என்பான் ஒருவன்; மற்றவன் சிரித்தான்.

திடீரென்று ஒரு சூறாவளி. நிலத்தில் "தொப்" என்று ஏதோ விழும் சப்தம். படையினர் திகைப்புடன் முணுமுணுத்துக் கொண்டனர். இரண்டு லெப்டினன்டுகளும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். வெற்று வாளி தரையில் உருண்டது.

முற்றிற்று

TAMIL NADU ARCHIVES LIBRARY
110862

## எமது
## இதர வெளியீடுகள்

- ★ இரும்புப் பெட்டி
- ★ அரசியல் கட்டுரைகள்—தாமஸ் பெய்ன்
- ★ போரே, நீ போ
- ★ சமாதானத்தின் புதிய பரிணாமங்கள்
- ★ சுதந்திரப் பாலம்
- ★ மகத்தான மாறுதல்
- ★ பிலிப்பைன்ஸ் தேசத்து நிலச் சீர்திருத்தங்கள்
- ★ என் சரிதை
- ★ அழிவற்ற காதல்
- ★ இந்தியா என் வீடே
- ★ சந்நியாசியும் சர்வாதிகாரியும்
- ★ வீதியில் ஒரு விடுதி
- ★ பிரபஞ்சமும் டாக்டர் ஐன்ஸ்டினும்
- ★ கடல் முத்து
- ★ சுதந்திரமும் பண்பாடும்

*வெளியிடுவோர்கள் :*
பெர்ல் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிட்., பம்பாய்-1.

*பூரண விநியோகஸ்தர்கள் :*
இந்தியா புக் ஹௌஸ்
புருஷோத்தம் பில்டிங், 193, மவுண்ட் ரோட், மதராஸ்-2.